திருவிடைமருதூர்

திருமுறைக் கருத்தரங்கம்

1971

கருத்தரங்க ஆய்வுரைகள்

தொகுதி – 1

திருவாவடுதுறை ஆதீனம்
திருவிடைமருதூர்
ஸ்ரீ மகாலிங்கப் பெருமான் திருக்கோயில்
வெளியீடு

1973

திருவிடைமருதூர்

திருமுறைக் கருத்தரங்கம்

1971

★

கருத்தரங்க ஆய்வுரைகள்

தொகுதி — 1



திருவாவடுதுறை ஆதீனம்

திருவிடைமருதூர்

ஸ்ரீ மகாலிங்கப் பெருமான் திருக்கோயில்

வெளியீடு

1973

குறிப்பு

பக்கத் தலைப்புகளில் அச்சிடப்பட்டுள்ள 1973ஐ 1971 ஆக ஆக்கிக்கொள்க.

முன்னுரை

திருநெறிய தெய்வத் தமிழை ஓதுவதோடு அமையாது அதன் செம்பொருட் செம்மையினை எத்தரத்தினரும் எளிதில் அறிந்து உணர்தற்கு ஏதுவானதோர் அமைப்பினை நிறுவ வேண்டும் என்று இத்திருக்கோயிலின் பரம்பரை அறங்காவல ராகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருவுள்ளம் கொண்டார்கள். அவர்களது இப்பெரு விருப்பம் திருமுறைக் கருத்தரங்கம் என்ற பேரமைப்பாக வடிவெடுத்துள்ளது.

இக்கருத்தரங்கத்தின் முதல்விழா 1971 பிப்ரவரித் திங்கள் 12, 13, 14–ஆம் தேதிகளில் சீரும் சிறப்புமாக நடந்தேறிய செய்தி நாடறிந்த ஒன்றும். "திருவிடைமருதூரில் நடைபெற்ற கருத்தரங்கத்தைக் கண்ட ஒவ்வொருவரும் இப்படி ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு நாளிலும் நடைபெருதா?" என்று கருதுவ தாக ஒரு வார ஏடு எழுதியது. அத்துணைச் சிறப்பாக நடந்தது அம்முதல் விழா.

அறநிலையத்துறை ஆணையர் திரு. K. S. நரசிம்மன் அவர்களது தலைமையில் டாக்டர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் அவர்கள் அம்முதல் விழாவைத் தொடங்கி வைத்துப் பேருரை ஆற்றினுர்கள். மூன்று நாள் தொடர்ந்து நடந்த அப்பெரு விழாவில் தமிழகத்தின் தலையாய திருமுறை அறிஞர்கள் கலந்து கொண்டு ஆய்வுரை ஆற்றினுர்கள்.

தலைமை தாங்கிய அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் தமது தொடக்கவுரையில் திருமுறைக் கருத்தரங்கின் ஆராய்ச்சி உரைகள் பதிவு செய்யப்படல் வேண்டும் என்றும், எல்லா மக்களுக்கும் பயன்படும் வகையில் கருத்தரங்கத்தில் பேசப்படும் அறிஞர்களின் ஆய்வுரைகள் எல்லாம் அவ்வப்போது தொகுக்கப் பட்டு நூல்வடிவில் வரல் வேண்டும் என்றும் தாம் கொண்ட

விருப்பத்தினைத் தெரிவித்தார்கள். அப்பெருவிழாவிலே பேசிய பேச்சுக்கள் எல்லாம் முத்துக்கள் என்றும், அவை செப்பம் செய்யப்பெற்று நூல்வடிவில் வந்தால் சிறந்த பயன் தரும் என்றும் மேற்சொன்ன வார ஏடு தொடர்ந்து எழுதியிருந்தது. இவ்வகையிலேயே திருவுள்ளம் கொண்ட ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களும் ஒவ்வோர் ஆண்டும் கருத்தரங்க ஆய்வுரைகள் அனைத்தையும் தொகுத்து வெளியிடல் வேண்டும் என்று பணித்தார்கள்.

1971-ஆம் ஆண்டு நடைபெற்ற விழாவின் ஆய்வுரைகளின் தொகுப்பான இந்நூல், இந்த மூன்றாவது கருத்தரங்க விழாவில் வெளியிடப்பெறுகின்றது. இந்நூல் வெளியீட்டிற்கு திரு. நா. இராசு, M.A., B.T., திரு. R இராமசேஷன், M.A., B.Ed., ஆகியோர் மூலப்பிரதிகளைப் பரிசீலித்து உதவி புரிந்தார்கள். அவர்களுக்கும், இதனை நல்ல முறையில் செப்பம்செய்து அச்சிட்டு உதவியுள்ள ஜெமினி அச்சகத்தார்க்கும் இந்தத் தேவஸ்தானத்தின் நன்றி உரியது.

இந்நூல் நல்ல முறையில் வெளிவரத் துணைநின்ற திருவருளையும் குருவருளையும் வழுத்துகிறோம்.


திருவிடைமருதூர்,
11—9—1973.

T. N. அருணாசலம் பிள்ளை,
கண்காணிப்பாளர்
ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம்.

உ

உள்ளுறை

பக்கம்



திருவாவடுதுறை ஆதீனம் 22-வது குருமகா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

திருமுறைக் கருத்தரங்க விழா
அருள் ஆசியுரை

★

ஸ்ரீலஸ்ரீ
அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்
திருவாவடுதுறை ஆதீனம்

★

[திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர் **ஸ்ரீ மாகாலிங்க சுவாமி** *திருக்கோயிலின் சார்பில், இந்து சமய அறநிலைய ஆணையர்* **திரு. கே. எஸ். நரசிம்மன்** B. A , B. L., I. A. S. *அவர்கள் தலைமையில் தொடங்கப்பெற்றுத் தொடர்ந்து 1971 பிப்ரவரி மாதம் 12, 13, 14 தேதிகளாகிய வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று கிழமைகளில், நடைபெற்ற திருமுறைக் கருத்தரங்க விழாவிற்குத் திருவாவடுதுறை ஆதீனம்* **ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம்** *அவர்கள் எழுந்தருளியிருந்து வழங்கிச் சிறப்பித்த அருளாசியுரை, இங்கு வெளியிடப் பெறுகின்றது. —ஆசிரியர்.]*

" மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்ப்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே."

சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் மிகச் சிறந்த தெய்வ இலக்கியங்கள். அவை பரம்பொருளை அனுபவித்துணர்ந்த ஆசாரியர்களால், திருவருள்வழி நின்று, உலக மக்களின்

நன்மையின் பொருட்டு அருளிச் செய்யப்பெற்றவை. அவற்றில், இறைவன் பொருள்சேர் புகழ் விளக்கும் தோத்திரமும், முப்பொருள் இயல்பும் ஞானயோக ஒழுக்க நெறி முறைகளும் தெரிவிக்கும் சாத்திரமும், அவைகளைத் தெளிந்துணர்ந்து பக்தி வைராக்கியங்களில் நின்று அருள்பெற்ற உண்மை நாயன்மார் வரலாறுகளும் அடங்கியுள்ளன. அவற்றை ஓதி உணரும் மனிதன் நிலவுலகில் தெய்வ வாழ்க்கை வாழலாம்.

இத்தகைய திருமுறைகளின் ஆழ்ந்த மேலான கருத்துக்களைத் தக்கவர்கள் சிந்தித்து வெளியிடவும், பலர் கேட்டுப் பயன்பெறவும் வாய்ப்பாக இங்கு இன்றுமுதல் மூன்று நாட்களில், திருமுறைக் கருத்தரங்க விழா ஸ்ரீ மகாலிங்கப்பெருமான் திருவருளால் அமைந்து நடைபெறுகின்றது.

இதில் தக்க அறிஞர்கள் வந்து பங்குபற்றுவது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை விளைவிக்கின்றது. பங்குபற்றும் தலைவர் பார்வையாளர் முதலிய பலரும், கேட்டுப் பயன்பெறும் அனைவரும் இம்மை மறுமை நலன்களும் சிவஞானமும் நிரம்பப்பெற்று உய்ய ஸ்ரீ ஞானமா நடராசப் பெருமான் திருவடிகளைச் சிந்திக்கின்றோம்.

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்ப்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

—சிவஞான சுவாமிகள்

திருமுறைக் கருத்தரங்கத் துவக்கவுரை

★

திரு. கே. எஸ். நரசிம்மன், B. A., B. L., I. A. S.
ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை

★

பெருமதிப்புக்குரிய ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுக்கும், என் அருகில் வீற்றிருக்கும் பெரியார் டாக்டர் அவர்களுக்கும், திருமுறைப் பொருள்களை எடுத்து விளக்க வந்திருக்கும் பெரியோர்களுக்கும், இங்குக்குழுமியுள்ள பெரியவர்களுக்கும், தாய்மார்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நல்ல பெரிய புனிதமான விழாவிலே எனக்கும் ஒரு பங்கு நல்கி இந்த நல்ல பொருள்களைப் பற்றிக் கேட்கும் ஒரு வாய்ப்பும், அதன் பயனை அடையும் வாய்ப்பும் கொடுத்ததற்கு, நம்முடைய குருமகா சந்நிதானம் அவர்களுக்கு நான் பலமுறை வணக்கம் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கருத்தரங்கு உண்மையிலேயே சரித்திரப்புகழ் பெற்றது என்று சொல்லவேண்டும். ஏனென்றால் இதைப்போன்ற ஒரு பெரிய கருத்தரங்கை ஆரம்பிப்பதில் இதுவே முதலாவது என்று நினைக்கிறேன். சாதாரணமாக, பன்னிரு திருமுறைகளைச் சொல்லித் திருமுறை விழாக்கள் நடைபெறும். திருமுறைகளைப் பூசிப்பது, நல்லவிதமாக ஓதுவது போன்ற காரியங்களைச் செய்கிறார்களே தவிர, இதைப்போன்று சாராம்சங்களை எடுத்துக் காட்டும் முயற்சி நடைபெறவில்லை நாம் எப்படி பாலைத் தயிராக்கிக் கடைந்து, அதிலுள்ள வெண்ணெயைத் தனியாக எடுக்கிறோமோ, அதைப்போல இந்தத் திருமுறைகளைப் பற்பல கோணங்களில் இருந்தும் — சாத்திர நோக்கத்தோடும், இலக்கிய நோக்கத்தோடும், சித்தாந்த நோக்கத்தோடும் ஆராயும் வாய்ப்புடன்

நடைபெறுவதில், இதுவே முதலாவது கருத்தரங்கு என்று நினைக்கிறேன். இவ்வளவு பெரிய பணியை, இந்த வாய்ப்பை அளித்த நம்முடைய குருமகா சந்நிதானம் அவர்களுக்கு, நாம் எல்லோருமே மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

பன்னிரு திருமுறைகளின் தத்துவங்களை, அவற்றின் சாராம்சங்களை ஆராய்ந்து, மற்றவர்களுக்கு விளக்கியாக வேண்டும். பொருள் எல்லாவற்றிலுமே நிறையப் பொதிந்திருக் கிறது. அந்தப் பொருள் இன்னது என்று எடுத்து எல்லா மக்களுக்கும் தெரிவிப்பது பெரிய பணியாகும். இவற்றில் உள்ள இலக்கிய நயங்களைச் சாதாரணமாகப் பலர் சொல்வார்கள். ஆனால் சாத்திர நோக்கோடு இவற்றின் தத்துவங்களை விரிவாக எடுத்துச்சொல்லக் கூடியவர்கள் இப்போது நம்மிடையே ஒரு சிலர்தான் இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே தலைசிறந்தவர்கள் என்று போற்றப்படுகிறவர்கள் எல்லாரும் இதிலே பங்குகொள்ள இருப்பதைப் பார்த்தால், நாம் மிகமிகப் பெரியபயனை அடையப் போகிறோம் என்பது தெரிகிறது. இவ்வளவு பெரிய வாய்ப்பை நம்முடைய குருமகா சந்நிதானம் அவர்கள் நமக்கு வழங்கி யிருப்பது அவர்களுடைய அற உள்ளத்தையும், அவர்களுடைய சமயத்தொண்டையும் நமக்கு விளக்குகின்றது. அவர்கள் உண்மையிலேயே மிகவும் போற்றப்பட வேண்டியவர்கள். நம்முடைய திருமுறைகளிலே உள்ள சாராம்சங்களை எடுத்து விளக்க வேண்டுமென்று, அவர்கள் அருள்கூர்ந்து செய்யும் இந்தத் திருப்பணி மிகவும் போற்றத்தக்கது.

சாத்திரம் என்றால் நாம் ஏதோ எங்கிருந்தோ வெளியில் இருந்து வந்துவிட்டது, என்பதாக அதைப்பற்றிக் கொஞ்சம் சந்தேகக் கண்ணோடு பார்க்கிறோம். ஆனால் நாம் எல்லாம் போற்றுகின்ற தலைமுறைகளிலேயே சாத்திரங்கள் சொல்லப் பெற்றிருக்கின்றன என்பதைக் காணும்போது, சாத்திரங்கள் எல்லாம் நம்முடையன போலத்தான் இருக்கின்றன. எங்கேயோ வெளியில் இருந்து வரவில்லை. ஆகவே அவற்றை நாமும் கொஞ்சம் கவனித்துப்பார்க்க வேண்டும் என்று தெரிகிறது. உண்மையிலேயே "Great minds always think together" என்று சொல்வார்கள். அதைப்போலத் தென்னாட்டிலே இருந் தாலும், அல்லது மற்ற வேறு எந்த நாட்டிலே இருந்தாலும்கூட, எல்லா இடங்களிலுமுள்ள பெரியவர்கள் அனைவரும், ஒரே மாதிரியாகத்தான் நினைப்பார்கள். நாம்கூடப் பார்க்கிறோம், பைபிளிலே, குரானிலே, நம்முடைய கீதையிலே சொல்லப் பட்டிருக்கிற பொருள்கள் எல்லாம், நம்முடைய திருமுறைகளைப்

பார்க்கிறபோது உண்மையாகவே தோன்றும். இரண்டும் இரண்டும் என்ன? எல்லா நாட்டவர்களும் நான்கு என்றுதான் சொல்வார்கள். ஐந்து என்று சொல்கிறவனை, நாம் பெரியவன் என்று சொல்வோமா? அப்படி உலகத்துப் பெரியவர்கள் எல்லாரும் எந்த இடத்தில் இருந்து, எந்தப் பகுதியில் இருந்து, எந்தக் கோணத்தில் இருந்து சொன்னாலும், உண்மையைத்தான் சொல் வார்கள். ஆகையால் சாத்திர நோக்கத்தோடு. நம்முடைய திரு முறைகளைப் பார்த்தால், எது வெளியில் இருந்துவந்த சாத்திரம் என்று நினைக்கிறோமோ, அது உண்மையில் நம்முடையதுதான் என்பது தெரிகிறது. மேலும் மேலும் அந்தப் பேருண்மையை அழமாக, அழுத்தமாக நம்முடைய பெரியவர்கள் மக்களுக்கு எடுத்துக்காட்ட முற்படுவார்களானால், இந்த சாத்திரங்களைப்பற்றி நாம் பயப்பட வேண்டியதில்லை. நம்முடைய திருமுறைகளிலே சொல்லப்பட்டிருக்கிற சாத்திரங்கள் இவை என்பதை உணர்ந்து, நாம் எல்லோரும் அவற்றில் மிகுந்த நம்பிக்கையோடு ஈடுபட வாய்ப்புண்டு. நமக்கு வேண்டியது எல்லாம் இங்கேயே இருக் கிறது. ஆகவே சாத்திரம் பொய் அல்ல, வெளியில் இருந்துவந்த சரக்கும் அல்ல. நம்முடையனவே இந்தச் சித்தாந்தங்கள் என்ற உண்மை தெரியும்.

நாம் எல்லாம் தமிழைப்பற்றி மிக மிகச் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். தமிழ் உயிர், தமிழ் மூச்சு என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். தமிழிலேதான், நம்முடைய நாட்டுப் பெரியவர்கள் செய்த சாத்திரங்கள் இருக்கின்றன. தமிழுக்கு மதிப்புக் கொடுக்கிற நாம், நம்முடைய பெரியவர்கள் செய்து வைத்திருக்கிற இந்தச் சாத்திர நூல்களுக்கும் மதிப்பு அளிக்க வேண்டாவா? நம்முடைய திருமுறைகளில் பொதிந்து கிடக்கும் சாராம்சங்களை, இலக்கிய நுட்பங்களை, சாத்திர உண்மைகளை இங்கே மூன்று நாட்கள் எடுத்துப் பேசப்போகிறார்கள். அவற்றை நல்லவிதமாகத் தெளிவுபடச் சொல்வார்களானால், நமக்கு அதைவிடப் பயன்தரக்கூடியது வேறு ஒன்றும் இல்லை. அதை நாம் எல்லோருமே ஒத்துக்கொள்ள வேண்டிவரும். ஆகவே அத்தகைய நிலையில், அறிஞர் பெருமக்கள் நம்முடைய திருமுறைகளை ஆராய்ந்து அருளவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். இந்தத் திருமுறைக் கருத்தரங்கின் ஆராய்ச்சி உரைகள் பதிவு செய்யப்படவேண்டும். பேசிப்போவதனால் இங்குவந்து கேட்பவர்கள் மட்டும் பயன்பெறக்கூடும். அப்படி இன்றி இவற்றின் சாராம்சத்தை எல்லாம் விடாமல் திருமுறை களில் பொதிந்துகிடக்கும் தத்துவநோக்கு என்ன, என்பன வற்றை எல்லாம் தொகுத்து வெளியிடுவது எல்லாக் காலத்தும்,

எல்லா இடங்களிலும் உள்ள மக்களுக்கும் பயன்படும். நம்முடைய பெரிய மடங்கள் எல்லாம் அதற்காகத்தானே இருக்கின்றன.

பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அங்கு மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள் — தொழிலுக்காக. வேலைசெய்து பிழைப்பதற்காக, வயிற்றுக்கு வேண்டிய சோற்றைப் பெறுவதற்காகப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். வைத்தியக் கல்லூரி இருக்கிறது. அங்கு உடம்புக்கு வருகிற நோயை எப்படித் தீர்த்துக் கொள்வது என்பது பற்றிய பாடங்களைச் சொல்லிக்கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

"பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கேஇரை யாகிக் கழிவரே"

என்று நமது திருநாவுக்கரசர் பாடுவது போல,

காக்கைக்கு இரையாகக்கூடிய இந்த யாக்கைக்குச் சோற்றைத் தேடி அலைந்தால் போதுமா? நாம் எல்லாம் ஆண்டவனுடைய அடிமைகள். மனிதப் பிறவி எடுத்ததன் பயனே இறைவனுடைய திருவடியை அடைவதுதான். உண்மையிலேயே நாம் ஆண்டவனைத் துதித்து, போற்றி வாழ்ந்தால் "தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா மனம் தரும்" என்று பாடுகிறார்களே, அதுபோல இந்த உலகில் வாழ்கிறபோதே இத்தகைய பலவிதமான இன்பங்களைப் பெறுவதோடு, இறவாத இன்ப அன்பு பெறுவதற்கும் நமக்கு வழிகாட்டும். அவற்றை எல்லாம் நமக்கு எடுத்துச் சொல்வனதான் இந்தத் திருமுறைகள். இவற்றில் உள்ள உட்பொருள்களை, சாத்திரக் கருத்துக்களை, தத்துவக் கருத்துக்களை நமக்கு எல்லாம் எடுத்துப் போதிக்கிற பல்கலைக் கழகங்கள்தாம் இந்தத் திருமடங்கள். திருவாவடுதுறை ஆதீன மடம், அத்தகைய பல ஞானச்செல்வர்களை உண்டாக்கி இருக்கிறது. காக்கைக்கு இரையாகும் யாக்கைக்குச் சோறு தேடி மாளாது, இறவாத இன்ப அன்பை அடைவதற்கு வழிகாட்டும் பல்கலைக் கழகங்களாகிய இந்தத் திருமடங்களின் துணைவேந்தர் தாம் குருமகா சந்நிதானங்கள். சாதாரண பல்கலைக் கழகங்கள் எல்லாம் உடம்பின் பசியைத்தான் போக்க உதவும். மற்றவற்றை தாரா. இவையோ நமக்கு வேண்டிய தனம் தரும், கல்வி தரும், இறவாத இன்ப அன்பைத் தரும், எல்லாவற்றையும்

தருகிற பல்கலைக்கழகங்கள் இவை. இந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆகிய திருவாவடுதுறை ஆதீனத்தின் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம், இப்போது நமக்கு இந்தப் பெரிய வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் தொண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழவேண்டும். இது போன்று சைவ சமயத்திற்கு மேலும் பற்பல அரிய தொண்டுகளைச் செய்ய வேண்டும். நாம் எல்லோருமே மனிதப்பிறவி பெற்றுப் பிறந்ததன் பயனை அடைவதற்கு, ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் அருள்கூர்ந்து நம் எல்லோருக்கும் ஆசி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பை அளித்ததற்காக எல்லோருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொன்ன மாதிரி, நம்முடைய திருமுறைகளிலே உள்ள கருத்துக்களை எல்லோருக்கும் தெளிவு படும்படி விளக்குமாறு, அறிஞர் பெருமக்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய திருமுறைக் கருத்தரங்கத்தைத் துவக்கி வைப்பதற்கு, நான் மிக மிகச் சந்தோஷப்படுகிறேன் என்று சொல்லிக்கொண்டு, இத்துடன் என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திருமுறைக் கருத்தரங்கச் சிறப்புரை


★

டாக்டர் திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர்,
M. A., B. L., M. O. L., D. Litt.,
முன்னுள் துணைவேந்தர், மதுரைப் பல்கலைக்கழகம்

★

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுடைய பொன்னுர் திருவடிகளுக்கு என்னுடைய நன்றிகலந்த, அன்புகலந்த வணக்கம். கருத்தரங்கைத் தொடங்கி வைத்த இந்து சமயப் பாதுகாப்பு ஆணையர் அவர்களே, பெரியோர்களே வணக்கம்.

நம்முடைய ஆணையர் அவர்கள் தெரிவித்தபடி, இன்று ஒரு நல்லநாள். ஒரு புதிய யுகத்தைத் தொடங்கிவைக்கின்ற நாளாக, இது ஆண்டவன் திருவருளால் ஓங்குதல் வேண்டும். அவர்கள் நம்முடைய நாட்டுப் பல்கலைக்கழகங்களைப் பற்றிச் சொன்னுர்கள். இந்தப் பல்கலைக்கழகங்கள் எல்லாம் எங்ஙனம் நடைபெறு கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். குறைகள் பல்கலைக் கழகத்தில் இல்லை. அங்கே இருக்கிற ஆசிரியர்களிடத்தில் இல்லை. மாணவர்களிடத்தில் நிச்சயமாக இல்லை. (பலத்த சிரிப்பு). ஏதோ நான் வஞ்சகப் புகழ்ச்சியாகச் சொன்னேன் என்று நீங்கள் கைதட்டினீர்கள் போலத் தெரிகிறது உண் மையில் நம்முடைய சமுதாயம் எப்படி இருக்கிறது? அந்தச் சமுதாயத்திற்கு மாருக மாணவர்கள் என்ன செய்துவிடுகிருர்கள்? பெரியவர்கள் கருப்புச் சந்தையிலே கொள்ளைலாபம் அடிக்கலாம். அதில் ஒரு சிறு பகுதியை ஆண்டவனுக்கு லஞ்சம் கொடுப்பது போலக் கொடுத்துவிட்டுப் பேரும் புகழும் பெறலாம். எல்லாம் அறிந்தவர்கள், பெரியவர்கள் அரசியல் தலைவர்கள்தாம், அவர்கள் தாம் ஆண்டவனையும்விட உயர்ந்தவர்கள் என்று நாம் கருதலாம். சினிமா மேடைக்குப்போய்க் கோடிக்கணக்கான பணத்தைப் பறிகொடுப்பது ஒருபுறம் இருக்கட்டும். கண்டு



ஸ்ரீ-ல-ஸ்ரீ குரு மகா சந்நிதானம் திருமுன்னர் டாக்டர் மீனாக்ஷிசுந்தரனார் கருத்தரங்கச் சிறப்புரையாற்றுகின்றார்.
நடுவில் அமர்ந்திருப்பவர் அன்று தொடக்கவுரை ஆற்றிய
அறநிலையத்துறை ஆணையர் திரு. K. S. நரசிம்மன் I. A. S., அவர்கள் (12–2–'71)

கண்டு கண்ணும், மனமும் கெட்டு நாம் வரலாம். ஆனால் மாணவர்கள் மட்டும் நல்லவர்களாய், உண்மை பேசுகின்றவர்களாய், கடவுளிடத்தில் அன்புஉடையவர்களாய் இருக்கவேண்டுமென்று இந்தச் சமுதாயம் விரும்பினால் அது நடைபெறுமா? ஆகையால், வயல் எப்படி இருக்கிறதோ அதுபோலத்தான் அதிலே போட்ட விதையும் விளையும். எனவே யார் யாரையோ குறை சொல்வதைவிட்டு, அந்தக் குறை நம்மேல் இருப்பதை, ஒவ்வொருவரும் உணர்கின்ற நாளில்தான் இந்தச் சமுதாயம் முன்னேறக் கூடும். இன்றைய உலகில் யாருக்குப் பெருமை? கூட்டத்தைப் பார்த்தாலே தெரியவில்லையா? இன்று மாலையில் எங்கேனும் அரசியல் கூட்டம் நடக்கட்டும். அங்கு இப்படியா கூட்டம் இருக்கும்? இன்று மிகப் பெரியவர்களாக இருப்பவர்கள் அரசியல் தலைவர்கள். இல்லையானால், வெள்ளித்திரை நட்சத்திரங்கள். அவர்கள் வருவார்களானால் என்ன கூட்டம்? அவர்களே சமுதாயம். நாம் ஒவ்வொருவரும் நம்முடைய நெஞ்சிலே கைவைத்துக் கேட்கவேண்டும் இந்தக் கேள்வியை. இன்றைய உலகம் விஞ்ஞானத்திலே மேலேறியிருக்கிறது. அதனால் கேடு ஒன்றுமில்லை. விஞ்ஞானிகளில் பலர் தங்களுடைய விஞ்ஞான சாதனைகளையும், காட்சிகளையும் கண்டு வியந்து நிற்கும்போது அதற்கப்பாலும் ஓர் உண்மையிருக்கிறது என்றுணர்ந்து தம்மை மறந்து ஏதோ ஒன்றிலே லயித்துவிடுகிறார்கள் ஒருசில நிமிஷ நேரம். நீங்கள் படித்திருக்கலாம், தினசரிகளில், இன்றைக்கு அப்போலோ 14-இல் வெற்றி பெற்றுத் திரும்பிய வானவெளி வீரர்கள் வருகிறபோது இந்த உலகம் அமைதியாக இருக்க வேண்டும். போராட்டமே இருக்கக்கூடாது என்ற எண்ணம் தோன்றுகிறது. எனவே விஞ்ஞானத்தின் முடிவு மெய்ஞ்ஞானத்திற்கு இடையூறாக இல்லை. இன்று மனிதன் இயற்கையின் ஆழத்தை எல்லாம் அறிந்திருக்கிறான். அதில் லயித்திருக்கிறான். நான் பலப்பல விஞ்ஞானிகளைக் கண்டிருக்கிறேன். அவர்கள் இந்த விஞ்ஞானக் காட்சியிலே ஈடுபட்டுச் சோதனைக்களத்தில் இருக்கும்போது, சமாதி கைகூடிய நிலைமையில் இருப்பதுபோல இருக்கிறார்கள். நம் நாட்டில் இருந்து மறைந்துபோன சர். சி. வி. இராமனைப் பற்றிக் கேட்டிருக்கலாம். சோற்றைக்கூட மறந்து விடுவார். அவர்களுடைய மனைவியார் இருந்து வற்புறுத்தி ஊட்டவேண்டும். ஞானிகளைப் பற்றிப் படித்திருக்கிறோம். அவர்கள் சமாதி கூடுவார்களானால் பல நாளாகிவிடும் கண் விழிக்க. சீடர்களே அங்கிருந்து அவர்களது உடம்பைக் காப்பாற்றியாகவேண்டும். அப்படிப்பட்ட நிலையைத்தான் நம்முடைய விஞ்ஞானிகளிடத்தில் காணலாம். தங்களுடைய ஆழ்ந்த அனுபவத்தை இந்த இயற்கையினூடே கண்டு கண்டு

அவர்கள் மகிழ்கிறார்கள். பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் அவர்கள் கடவுளைப்பற்றிக் கவலைப்படாதவர். அதற்காகக் கடவுள் இல்லை என்று தள்ளவில்லை. 'அதைப்பற்றி எனக்குத் தெரியாது, சொல்ல முடியாது' என்று சொல்வார்கள். "என்னுடைய உள்ளத்தில் ஒரு போராட்டம், இந்த உலகத்திற்கு அப்பாற் பட்டதாக எல்லாம் வல்ல ஒரு சக்தி ஒரு ஆற்றல் இருக்கிறது என்று நம்ப விருப்புகிறது என் உள்ளம். ஆனால் என்னுடைய ஆராய்ச்சியோ, என்னுடைய அறிவோ அதற்கு இடம் கொடுக்க வில்லை. ஆயினும் இந்தப் போராட்டம் என் உள்ளே நிகழ்கிறது" என்றார். ஆங்கே உண்மையைச் சொல்கிறார். உலகத்தில் வாழும்போது, பலவற்றை ஆராயும்போது, விஞ்ஞானத்தில் ஈடுபடும்போது, கண்ணுக்குத் தெரியாத ஒன்றை எல்லாம் பரீட்சித்துப் பார்க்க முயல்கிறார்கள். அந்த ஆராய்ச்சிக்குள் எல்லாம் முடிவதில்லை. ஏதோ ஒன்று இதற்கு அப்பாலும், அப்பாலும் மறைந்து நின்று ஒளிர்கிறது என்பதைக் காண் கிறார்கள். ஆனால் அதனை விளக்கத், தாமே சோதனைக் களத்தில் எல்லோருக்கும் முன்னாக நிற்க முடியவில்லையே என்பதுதான் அவருடைய பெரிய வருத்தம். எனவே இந்த உலகத்தில் இன்று நடைபெறுவது என்ன? அணுவைப் பிளக் கிறார்கள். அணுவுக்குள் இருக்கிற ஆற்றல்களை எல்லாம் அளந்து அறிகிறார்கள். வெறும் பேச்சா? அக்டோபர் மாதத்தில் ஜப்பானில் இருந்தேன். சென்ற உலக மகாயுத்தத்தினால் அணுகுண்டு தாக்குதலினால் அழிந்த ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களைப் பார்த்தேன். அணுகுண்டு ஒன்று விழுந்ததனாலே நகரமே பாழாய்ப்போய் இருப்பதை அங்கே பார்க்கிறோம். அங்கு 25-ஆம் ஆண்டுவிழா கொண்டாடினார்கள். இயற்கையின் ஆற்றல் நமக்குத் தெரிகிறது. இந்த உலகத்தோடு நாம் இப் போது அமைதி அடையவில்லை. வானத்தை எட்டிப் பிடிக் கிறோம். சந்திரனில் நடக்கிறார்கள் நம் மனிதர்கள். வெள்ளிக்குப் போகிறார்கள். செவ்வாய்க்குப்போக முயல்கிறார்கள். வான வெளியில் சூரபன்மன் முதலியவர்கள் பலபல கோளங்களில் இருந்து போராடினார்கள். என்று புராணத்தில் படிக்கிறோம். சில ஆண்டுகளிலே அது புராணமாக இல்லாமல் உண்மை வரலாறு ஆகக்கூட மாறலாம். இப்படி இயற்கையை வென்று அடக்கி ஆள முயன்று ஒவ்வொரு சிறந்த வெற்றியையும் அடைகிற மனிதன், ஏன் தோல்வி அடைகிறான்? பெரிய இரண்டு வல்லரசுகள் இருபக்கம். அமெரிக்கா ஒரு பக்கம், ருஷ்யா ஒரு பக்கம். இந்த விஞ்ஞான சோதனைகளிலே வெற்றி— வானவெளிப் பயணங்களிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆனால் அந்த நாட்டிலேபோய் இருந்தபோது பார்த்தேன்.

அமைதியில்லை. ஒரே ஓட்டம். நிற்கக்கூட நேரம் இல்லாமல் ஓடுகிறார்கள். காலை 6-மணியில் இருந்து இரவு 10 மணிவரை, ஏன் வயிற்றுப் பிழைப்புக்காக என்று சொல்லலாம். அவர்களுடைய வயிற்றுப் பிழைப்புக்கு நிறையத் தொழில் வாய்ப்புக்கள் இருக்கின்றன. நிறையச் செல்வம் இருக்கிறது. இருந்தும் அங்கு இருக்கிற மக்களுக்கு ஓர் அமைதி யேற்படக் காணோம். செல்வத்தினாலே, விஞ்ஞான வெற்றிகளினாலே இன்பம் இருக்குமானால் அதை அவர்கள் கண்டிருக்கவேண்டும். இன்பம் இருப்பதாகத் தெரியவில்லை. பெரிய பணக்காரர்கள். செல்வர்கள் அமைதியில்லாமல் அலைகிறார்கள். கல்விமான்கள் நிறையக்கற்றவர்கள் இவர்களுக்கு எல்லாம் அடிக்கடி மூளைக் கோளாறு வருகிறது அந்தநாட்டிலே.

இந்த உலகத்திலே குடிமக்களுக்கு வேண்டியதை எல்லாம் செய்து வைக்கின்ற ஓர் அரசு ஸ்வீடனில் இருக்கிறது. நாம் 'சமுதாய நல அரசு' (Welfare state) என்று சொல்கிறோம். ஸ்வீடனில் நடைமுறையில் வெற்றியோடு அது நடைபெறுகிறது. குறையில்லை. ஆனால் என்ன பயன்? பைத்தியக்கார ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. அதிலேதான் ஆட்கள் அதிகம். நம் நாடு இன்னும் அந்த நிலைக்கு வரவில்லை என்று மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் சென்னைக்குப் போகும் போது அங்கேயுள்ள மனக்கோளாறு சிகிச்சை நிலையங்களைப் பார்த்தால், முன் இருந்தவர்களைவிட மக்கள் எண்ணிக்கை இப்போது மிகுந்து கொண்டு வருகிறது. ஆகவே இதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஏதோ நான் இன்று இங்கிருக்கிறேன் என்று நினைக்கலாம். நான் கல்லூரி ஆசிரியனாக இருந்தேன். பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்தேன். அவற்றில் கண்டதென்ன? நம்முடைய மாணவர்கள் ஒருவகை உள்ளக்கோளாறினால் வாடுகிறார்கள்; வெளியே சமுதாயத்தில் காணப்படுகிற குறைபாடுகள் எல்லாம்தான், உள்ளே மாணவர்களிடத்தில் காணப்படுகிறது. வெளியே நாம் எல்லாம் பைத்தியக்காரர்களாக இருக்கிறோம். இந்த உண்மையை நாம் உணரவேண்டும். ஏதோ நமக்கு வருகிறது கோபம். ஒருவன் ரொம்ப ஏழையாக இருக்கலாம். ஆனால் அவன் தன் பெண்டாட்டியிடத்தில் காட்டும் கோபத்தைப் பார்த்தால், பெரிய நெப்போலியன் போன்றவர்கள் எல்லாம்கூட இணையாக மாட்டார்கள். அப்படி என்ன நேருகிறது? இன்று இதற்கு மனோதத்துவ சாஸ்திரி என்ன சொல்கிறான்? இதுவரை அமைதிபெறாத நெஞ்சத்திலே பிறக்கிற ஒரு பெரிய கேடு இது என்கிறான். இளமையில் உடம்பில் இரத்தம் இருக்கிறது. பொறுமையை இழந்துவிடாமல் இருக்கிறான். நாளாக ஆக

இரத்தம் குறையச் சினம்தான் பொங்குகிறது. "நாற்பதுக்கு மேலே நாய்க்குணம்" என்பார்கள். இந்தக் கேட்டுக்கு அகப் படாதவர்கள் யார்? "எனக்குக் கோபம் வருவதில்லை. நான் பொறுமை இழந்ததே இல்லை. எனக்குக் காமம் என்பதே இல்லை" என்று வெளியில் சொல்லிக்கொள்கிறவர்கள்கூட, தமக்குள் எண்ணிப்பார்க்கவேண்டும். இராவணனைப்பற்றிச் சொல்வார்கள். தம்முடைய உள்எண்ணங்களைக் கனவுகளை எல்லாம் எண்ணிப் பார்ப்போமானால், நாம் எல்லாம் இராவண னுக்கு அண்ணனாக இருப்போம். ஆகவே, நாம் ஏதோ நல்ல வர்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. இந்த உலகமே ஒரு பெரிய பைத்தியக்கார ஆஸ்பத்திரி. ஆனால் இதை யாரும் நினைக்கிறவர்கள் இல்லை. இந்த நிலைமை இருப்பதனாலேதான் அமெரிக்கா ருஷ்யாவைப்பற்றி அஞ்சுகிறது. ருஷ்யா அமெரிக்காவைக்கண்டு அஞ்சுகிறது. லாவோஸ், கம்போடியா, வியட்நாம் போன்ற இடங்களில் என்ன நடக்கிறது என்று பாருங்கள்; புறத்தையே ஆராய்ந்துகொண்டு போகி றோம். அகத்தை அடக்க – வெற்றி கொள்ளக் கற்கவில்லை. மனிதன் புறத்தைத் தான் ஆராய்கிறான். புறத்தை வெல்கிறான். அகத்தையும் புறக்கோலமாகத்தான் காண்கிறான். ஆனால் அதனை அறியவில்லை. இயற்கையை எல்லாம் வெற்றிகண்டு அடக்கி ஆளத்தெரிந்த மனிதனுக்குத் தன்னை அடக்கிக் கொள்ளக் கற்காமைதான் பெரிய சாபக்கேடு. மனிதன் தன்னை இன்னான் என்று இதுவரை அறிந்தான் இல்லை. மனிதனையும் யாரும் இது வரை ஆராயவில்லை. "நான்தான் இருக்கிறேனே. என்பெயர் தெரியாதா? என்னுடைய பட்டம் எல்லாம் தெரியாதா?" என்று கேட்கலாம். உண்மையிலேயே மனிதன் என்பவன் யார்? இது என்னடா, பெரிய வேதாந்தமாக ஆரம்பித்துவிட்டார் என்று தோன்றும். நான் யார் என்பதை அறியாதவரையில், புறத்தை அறிந்து என்ன பயன்? நம்மை நாமே அறியாத நிலை ஒரு புதிராகவே இருக்கிறது. இத்தனை ஆற்றலும் எங்கே இருந்து வருகிறது. மனிதன் சூரியனைக்கூட எடைபோடுவான் என்று ஒரு சங்கப்புலவன் சொன்னான். இன்றைக்குப் பார்க்கிறோமே, வான வெளியை எல்லாம் ஆராய்கிறார்கள். இத்தகைய பேராற்றல் பொங்கிவழிகிற மனிதன் தன்னைத்தான் அறியவில்லை. எல்லா வற்றையும் ஆராய்கிற மனிதன் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் வித்தை உணரவில்லை. அதனால்தான் பலவிதமான கேடுகள். விஞ்ஞானிகள் எல்லாம் ஒப்புக்கொள்கிறார்கள். எல்லாப் புறக் கோலத்தையும் நாம் நன்றாக அறிந்து இருந்தும், நம்முடைய உள்ளத்தை நம் உள்ளத்தில் பொங்குகிற போராட்டங்களை நாம் அறிந்தோமில்லை. அவற்றைத் தீர்க்க வழி அறிந்தோமில்லை,

யுனஸ்கோ என்று சொல்கிறோமே அனைத்துலக நிறுவனம். அது என்ன சொல்கிறது போரே வேண்டா; அதை ஒழிப்பது எப்படி? என்கிறது. போரை ஒழிப்பதற்கு வித்து நமமுடைய உள்ளத்தில் இடவேண்டும். அமைதி என்பதை மனித உள்ளங்கள் ஒவ்வொன்றிலும் நாட்டி விடுவோமானால், போரையே தடுத்துவிட முடியும். அது வெறும் சொற்பொழிவினால் முடியாது. பல பல நிறுவனங்கள் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிடுவதானாலும், இந்த அமைதியை — உலக இன்பத்தை நிலைநாட்ட முடியாது. இன்று அவர்களே ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு என்ன வழி?

அந்த வழியைத்தான் நம்முடைய நால்வர்கள் நமக்குக் காட்டிச்சென்றிருக்கிறார்கள். அதனாலேதான் இந்தத் திருமுறை களுக்கு இன்றைய உலகத்தில் ஒரு பெரிய இடம் உண்டு. அவர்கள் வாழ்ந்த காலத்திலே தமிழ்நாடு சிறிது வாடிக்கிடந்தது. சோற்றுக்கும் திண்டாடிய காலம். இன்றும் நம நாடு சோற்றுக்குத் திண்டாடுகிறது. பிறரிடத்தில் கையேந்துகிறோம். நமக்கு ஒன்று தெரியும். பொலபொல என்று புற்றீசல்போலப் பிள்ளைகளைப் பெறுவதற்குச் சிறந்த ஞானம் இந்த நாட்டில் கைவந்திருக்கிறது. ஆனால் அதில் வருகிற கேடுகளை நினைத்துப்பார்த்தால், நெஞ்சம் பகீர் என்கிறது. இத்தனை வாய்க்கும் சோறு எங்கே தேடுவது என்கிற நினைப்பு, அரசியலாருக்குச் சிலநேரமேனும் உதிக்கிறது. அப்படி வாடி வதங்கிய காலத்தில் மூவர் முதலிகள் தோன்றினார்கள். இல்லையென்றால் சோறும் கூறையும் தருவான் என்று ஏன பாட வேண்டும்? அது பெருந் தலைவலியாக இருந்தது. "புறத்தைப் பற்றிக் கவலைப்படாதே. உழைப்பது உன் கடமை. ஆனால் வெற்று உழைப்பினால் ஒன்றும் தீர்க்க முடியாது. ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும், ஒனறை நோக்கி நீ போதல் வேண்டும். ஏன் எனக்குப் பணம் வேண்டும்? ஏன் எனக்குக் கூறை? ஏன் எனக்கு வீடு? ஏன் எனக்கு இந்த உழைப்பு? ஏன் இந்தத் தொழில்? என்று கேட்டிருப்போமானால், இந்த உலகம் இந்த நிலையில் இராது. "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்று சொல்கின்றார் அப்பர் அடிகள்.

அவர் எல்லாம் படித்தவர். அந்த நாளிலே எத்தனை சாத்திரங்கள் இருந்தனவோ அத்தனையையும் கற்றவர். வாதிலே பலரை எல்லாம் வென்றார். பலவித உபவாசங்கள் இருந்தார். ஆனால் வயிற்றுப் புண்தான் வந்தது. உள்ளே எல்லாவற்றையும் அடக்கி வைக்கின்ற ஒருவன் இதனை எல்லாம் செய்கின்றான் என்ற எண்ணம் இல்லாமையினால் அவதிப்பட்டார். அப்போது தான்

தம்முடைய தமக்கை – ஒரு பெண் – அந்த அம்மையாரின் நினைவு வந்தது. அந்த அம்மையார் எந்த நிலையில் இருந்தார்கள்? இந்தத் தம்பிக்காகவே உயிர் வாழவேண்டுமென்று இருந்தார்கள். அவருக்கு யார் உறுதி? தந்தை போயினர். தாயாரும் போயினர். தமக்கென விதித்த கணவனும் மறைந்தார். இனி, தம்பியார் உளராகவே அவர் உயிர் தரித்து இருந்தார். அந்தத் தம்பியும் அவரை விட்டுப்போனர். கலங்கினர்களா அந்த அம்மையார்? உள்ளத்துள்ளே ஓர் உறுதி இருந்தது. ஆண்டவனுடைய திருவருளை உள்ளத்திலே தேக்கி வைத்திருந்ததனல் அவர்களது உள்ளத்திலே ஓர் திண்ணம். அந்த அம்மையாரின் தம்பி நிலை என்ன? எல்லாவற்றையும் கற்று, எல்லோரையும் வென்று மிகப் பெரியவனுக ஓங்கியிருக்கிற எனக்கு இந்த வயிற்று நோயைத் தாங்கிக்கொள்ள, போக்கிக்கொள்ள முடியவில்லையே, அமைதியைக் காணேமே, இந்தச் சிறு துன்பத்தைக் கூட என்னுல் பொறுத்துக்கொள்ள முடியவில்லையே? வாழ்வில் எல்லா இன்பங்களையும் இழந்து நிற்கிற என் தமக்கையார், என்ன செய்து கொண்டிருப்பார்கள் என்ற நினைவு அடிக்கடி வந்து உறுத்திற்று. இந்தக் காலத்திலாவது பெண்களுக்கு ஒரு வழியுண்டு. நமது இந்தியப் பிரதமரைப் போலக்கூட ஆகலாம். ஆனல் அந்தக் காலத்திலே அந்த அம்மையார் வாழ்வு கைத்துப்போகாதிருக்க என்ன செய்தார்கள்? கோயிலையே நம்பி மனத்தை அந்த நிலையில் வைத்துக்கொண்டிருந்தார்கள். இவர் அந்த அம்மையாரின் பக்கம் திரும்பினர். அவர்களைத் தேடி ஓடினர். அந்த அம்மையார் கோயிலை அலம்பி, மெழுகி, கோலம் போட்டுக்கொண்டிருந்தார்கள். அவருக்குப் புரிந்து விட்டது உலகம். ஆண்டவன் பெயரால் மக்களுக்குத் தொண்டு செய்வதுதான் இந்த உலகத்தில் மன அமைதியைத் தரக்கூடியது என்று அறிந்தார். புறப்பட்டார். அந்த அம்மையாரின் அருளைப்பெற்று உழவாரப் படையை எடுத்தார். தொண்டர் கூட்டத்துடனே ஊர் ஊராகச் சென்று திருக்கோயில்களை எல்லாம் சுத்தம் செய்து, இறைவனை வழிபட்டுப் பாடி, பெரிய வீதிகளை எல்லாம் அமைத்தார். அப்படித்தானே ஞானசம்பந்தப் பெருமானும்!

“ மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் ”

என்பதாக, வாழமுடியாது அலைந்து கிடந்தவர்களைப் பார்த்துச் சொல்கிருர். ஆண்டவன் அம்மையப்பனுக எழுந்தருளி இருக்கிருன்.

“ பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே ”

ஆகவே இந்த மண்ணில் நீங்கள் மணந்து வாழ வேண்டுமா? வாழுங்கள். ஆனால் அடிப்படையாக எல்லாவற்றுக்கும் வேராக இருக்கிற தாயும் தகப்பனுமாய், அப்பாலுக்கப்பாலாய் இருக்கிற ஒன்றை, நீங்கள் நம்புதல் வேண்டும். அந்த நம்பிக்கை வந்து விடுமானால், நீங்கள் எந்தத் தொழிலைச் செய்தாலும், ஏது அவத்தைப்பட்டாலும் உங்களுக்கு ஒரு கேடும் இல்லை என்ற உண்மையைவற்புறுத்தினார்கள். சூரியனைப் பார்க்கின்றோம். அது ஆண்டவனுடைய அருள். சந்திரனைப் பார்க்கின்றோம். அதுவும் அவனுடைய அருள். நம்முடைய மண்தரை நம்மைத் தாங்கிக் கொண்டுள்ளது. நாம் எத்தனைதான் அதைத் தோண்டினாலும் அது நம்மைத் தாங்குகிற நிலை இறைவனது அருள். உடம்பெல்லாம் நீராக இருக்கிற நீர்ப்பிண்டமாக அதற்கு மேலும் உயிர்கொடுத்து வாழ்விக்கிற தண்ணீர்–இனிய உணவுகளை எல்லாம் ஆக்கித் தருவதற்குப் பயன்படும் தீ, (நம் உடம்புள்ளும் தீ இருக்கிறது. இல்லையானால் எப்படி சீரணிக்க முடியும்?) இந்தத் தீ - மூச்சுவிடுகிற காற்று - வெட்டவெளிப்பயணம் செய்கிறோமே இதற்கெல்லாம் இடம்கொடுக்கிற ஆகாயம்-ஆண்டவன் அருள் இல்லையா? அதற்கும் மேலாக ஒன்றைக் கண்டார்கள். உலகத்தில் இருக்கிற அத்தனை உயிர்களிடத்திலும் ஆண்டவன் நடனம் புரிகின்றார். அப்படி உயிருக்கு உயிராக இருக்கிற ஒன்றை நாம் அறிதல் வேண்டும். இதனை,

“இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமான னாய்எறியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்முருவும் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே”

என்று எடுத்துக்காட்டினார்கள். அவர்கள் சொன்னார்கள் உலகத்தில் உனக்கு என்ன வேண்டும்? பாடு ..பாடு என்றார்கள். ரொம்ப வருத்தமாக இருந்தால் என்ன பண்ணுவது என்பதாக, மனோதத்துவ சாஸ்திரியிடம் கேட்டால், அவர் “பாடு, பாடத் தெரியவில்லையென்றால் விசில் அடித்துக்கொண்டாவது இரு” என்கிறார். பாடுவதனால் துக்கம் மறைந்து இன்பம் உண்டாகும். இது பைத்தியக்காரன் சொல்வது இல்லை. மனோதத்துவ நிபுணர்கள் சொல்வது. அதைத்தான் ஆண்டவனே சொன்னான்.

"அருச்சனை பாட்டே ஆகும்"

ஆண்டவனை வழிபட ரூபாய் இல்லையே என்றால், எதற்காக ரூபாய் வேண்டும்? உன் வாயார அவனைப் பாடு அப்பா போதும். பாடுவது என்றால் எனக்கு ராகம் இல்லையே?

"கோழை மிடறாகக் கவிகோளும் இலவாக
இசை கூடும் வகையால்
ஏழை அடியார்கள் யாவை சொன சொல்
மகிழும் ஈசன் இடமாம்"

என்று திருஞானசம்பந்தர் பாடியருளியிருப்பது போல, கோழை மிடராகவும் கவிகோள் இலவாகவும், நீங்கள் பாடினாலும் சரி... உங்கள் உள்ளத்தைத்தான் அவன் கவனிக்கிறானே தவிர ராகம் நன்றாக இருக்கிறதா? சுருதி பிழையாது பாடுகிறாரா என்றெல்லாம் அவன் கவனிப்பது இல்லை. ஆகவே — பாடு பாடு அதுவே அவனுக்கொரு வழிபாடு என்கிறார்கள்.

பெரிபுராணம் முதலியவை எல்லாம், இந்த அடிப்படையிலே பிறந்தன. இன்று கன்னட தேசத்திலும், ஆந்திர தேசத்திலும், பெரியபுராணக் கதையில் ஈடுபடுகிறவர்கள் மிகுதி என்று நினைக்கிறேன். எனக்குத் தோன்றுகிறது, அங்கெல்லாம் மக்களுக்குத் தொண்டு செய்வது ஆண்டவனுக்குத் தொண்டு செய்வது என்று நினைக்கிறார்கள். ஞானசம்பந்தர், சுந்தரர், அப்பர் முதலியவர்கள் அதனைத்தான் நமக்குச் செய்து காட்டினார்கள். அந்த உண்மையை ஒவ்வொருவரும் தம்தம் உள்ளத்திற்குள்ளே பார்க்கவேண்டும். பெரிய பெரிய முடியாத காரியங்களை எல்லாம் செய்கிற ஆற்றல் இருக்கிறதே — அவை அவை அனைத்துக்கும் வேர், உள்ளத்திற்குள்ளே கூத்தாடுகிற கூத்தப் பெருமானுடைய அருள்தான் என்ற உணர்ச்சி ஏற்பட வேண்டும். அதனையே செய்து காட்டினார்கள். பாட்டாகப் பாடினார்கள்.

இன்றைக்குத் தமிழிசை இயக்கம் நடைபெறுகிறது. அன்றைக்கு நடந்தது என்ன? மூவர் முதலிகள் ஒருவித பண்ணமைப்புக்குள்ளே பாடிய அற்புதப் பாடல்கள் எல்லாம் என்ன? அவற்றை வெறும் இலக்கியமாகப் படிப்பதில் சிலசமயம் ஒன்றும் புரியாது பண்ணோடு பாடுவதைக் கேட்டோமானால், உள்ளம் கட்டுவிட்டு நெகிழ்ந்து உருகும். அதனால் ஏற்படுகிற இன்பம் எல்லையற்றது. அவர்கள் எப்படிப் பாடினார்கள் என்பது

இப்போது மறைந்து வருகிறது. ஏதோ சில ஓதுவா மூர்த்திகளிடம்தான், இப்போது அந்தச் செல்வம் இருந்து வருகிறது. அவர்களும் பண்ணாராய்ச்சி பண்ணி வருகிறார்கள். ஓதுவா மூர்த்திகள் வாழவேண்டும். தேவாரம் வாழ வேண்டுமென்றால், திருமுறைகள் வாழவேண்டுமானால், திருப்புகழ் வாழவேண்டுமானால், என்ன செய்ய வேண்டும்! இதைப் பாடுகின்றவர்கள் வளத்தோடு வாழ வழிவகுக்க வேண்டும். அவர்களைச் சங்கீதப் புலவர்கள் ஆக ஆக்கவேண்டும். "உங்களுடைய பழைய சங்கீதத்தை வளர்த்துக் காட்டுங்கள்" என்று வேண்டவேண்டும். அதிலே மக்களுடைய உள்ளம் ஈடுபடும். ஈடுபடாமல் இல்லை. ஈடுபடக்கூடும். ஆனால் அதை நீங்கள் அலட்சியப்படுத்தி விடுவீர்களானால், மெல்லிசைதான் சிறப்பு, மெல்லிசையைத் தான் உலகத்தில் பலரும் விரும்புகிறார்கள் என்று தோன்றும்; ரேடியோ இசையை நம்புவதால் நாம் ஏமாந்தவர்களாவோம்.

இன்று அப்படி ஒன்றும் உண்மையில் காணோம், சங்கீதக் கச்சேரியில் கூட முதலாவதாக ஆண்டவனைப் பற்றித்தான் பாடுகிறார்கள். தேவாரம், திருவாசகம், திருப்புகழ் இவற்றை எல்லாம் பாடுகிறார்கள். மக்கள் இன்புறுகிறார்கள். ஏழிசையால் அருட்பாக்களை எழுப்பினால் காம, குரோத மோக லோப மத மாற்சர்யங்கள் எல்லாம் அடங்கி — உள்ளம் அடங்குகிற நிலை உண்டாகும். உள்ளத்திலே ஒரு புண்டரிகம் — ஒரு வெண் தாமரை தோன்றுகிறது. அங்கே ஆண்டவன் எல்லோருக்கும் அருள் செய்கின்றான் என்று பாடுகிறார் ஞானசம்பந்தப்பெருமான். இந்தத் திருமுறைகளின் உண்மையைக் காணவேண்டுமானால் பண்ணோடுபாடி அனுபவிக்க வேண்டும். பேச்சாக அனுபவிப்பது வேறு. அதை நாங்கள் செய்ய முயல்கிறோம். ஆனால் பாட்டாக அனுபவிக்க வேண்டும். பாட்டாக அனுபவிக்கவே அவர்கள் அந்த வகையில் பாடினார்கள். "எப்படிப் பாடினரோ?" என்பார்களே அப்படிப் பாடினால் அந்தப் பெரும்பயன் இன்று நமக்குக் கிடைக்கும். எப்படி இன்று அரசியல் தலைவர்களிடத்தில், வெள்ளித்திரை நட்சத்திரங்களிடத்தில் நாம் நம்பிக்கை வைத்து இருக்கிறோமோ, அப்படி நம்பிக்கையைத் திருமுறைகளிடத்தில் நாம் வைக்கவேண்டும்.

71 ஆண்டு உலகத்தில் நான் வாழ்ந்தவன். தமிழ்நாடு முழுவதையும் சுற்றிப் பார்த்தவன். கோயிலுக்குப் போய்க்கொண்டு இருக்கிறவர்களில் ஒருவன். இன்றுபோல் மக்கள் திரள் திரளாகக் கோயிலுக்கு முன்பு போனார்கள் என்று எண்ணுவதற்கு இல்லை. நிறையப் பேர்கள் கோயிலுக்குப் போகிறார்கள். ஆனால்

கடவுளை ஏமாற்றலாம் என்று நினைக்கிறார்கள். பெரியவர்களுக்குப் போய் மாலை போடுவது போல, ஆண்டவனுக்கு மாலைப்போட்டு மகிழ்வித்துவிடலாம் என்று சிலர் நினைகிறார்கள். இறைவனோ உள்ளே நின்று சிரிக்கிறான். "பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே" — என்று சொல்வார்களே, அதுபோல அத்தகையவர்களைக் கண்டு இறைவன் சிரிக்கிறான்.

இறைவனை எங்கே கண்டார்கள்? 'தேடிக்கண்டுகொண்டேன் என் உள்ளத்தே' என்பதாக உள்முகமாகத் தேடி இறைவனைக் கண்டுகொண்டார்கள். தாம் உள்முகமாகப் பெற்ற பேரின்பத்தினாலே ஆண்டவனை மக்களிடத்தெல்லாம் கண்டார்கள். அப்பர் சுவாமிகள் கயிலாயம் முதல் கன்னியாகுமரி வரை பார்த்தவர். கயிலாயக் காட்சியைத் திருவையாற்றில் வந்து கண்டுகொள் என்றான் இறைவன். திருவையாற்றிலே கயிலாயக் காட்சியைக் கண்டு பாடுகிறார்.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயாறு அடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்

என்று பாடுகிறார். ஒரு பெண் யானையைப் பார்த்தேன், ஓர் ஆண் யானையைப் பார்த்தேன் என்கிறாரே-அது என்ன ஜூவா? (Zoo) ஆண்யானையும், பெண்யானையும் மறைய அவற்றையே அம்மையப்பனாகக் காண்கின்றார். யானையை யானையாக, மாட்டை மாடாகப் பார்த்த காட்சி மறைய, எல்லாவற்றின் ஊடேயும், இறைவனைக் காண்கின்ற அற்புதக் காட்சியைக் காண்கிறார். எல்லாவற்றையும் கூத்தாடவைக்கின்ற கூத்தாட்டப்பெருமானை உள்ளத்தே காண்கிறார். இந்த உலகம் எல்லாம் எப்போது நமக்கு அம்மையப்பனாகத் தோன்றுகிறதோ, அன்றுதான் நாம் வெற்றி அடைந்தோம். நம்மை அறிந்தோம். நம் உள்ளே இருக்கிறவனை அறிந்தோம்.

நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்? அப்படிக் காண்பதற்குத் தடை என்ன? ஆணவம்தான். கோயிலுக்கு உற்சவம் பண்ணுகிற வர்களைப் பார்த்திருக்கின்றேன். சென்னைப்பட்டணததுல், இன்று ஒருவர் உற்சவம் செய்கிறார். திட்டம் என்ன ஐந்தாயிரம், அப்படியானல் நாளைக்கு நம் திட்டம் ஆருயிரம். இன்னெருவர் அடுத்த நாளைக்கு ஏழாயிரம் என்பதாக இப்படி அடுத்தவனைவிடத் தான் உயர்ந்தவன் என்பதைக் காட்டத் திட்டம் போடுகிருர்கள். ஆண்டவனுக்குரிய வாகனத்தை அகற்றிவிட்டுத் தமமுடைய ஆணவமாகிய வாகனத்தை வைக்கின்ற தன்மையிருக்கிறதே, இதைப்பற்றி என்ன சொல்வது? இப்படி இருக்கிற நிலை மாறவேண்டுமானல் உள்ளம் உருகவேண்டும். வெளியிலே பலபல வெற்றிகளை அடைந்து என்ன பயன்? உள்ளததை வெற்றிகொள்ள வேண்டும். காமக் குரோத மோக மத லோப மாற்சரியங்களை வெற்றி கொள்ளவேண்டும். பக்திமார்க்கம், கர்ம மார்க்கம் என்றெல்லாம் எத்தனையோ மார்க்கங்களைச் சொல் கிருர்கள்.

ஆனல் ஞானசம்பந்தர் இரண்டு நெறி சொல்கிருர் — ஆடல் நெறி, பாடல் நெறி என்பனவாக. பாடு ஆண்டவனை அடை வதற்கு—உன்னை மறந்து ஆடு இறைவனை அடைவதற்கு—என கிருர். எத்தனைபேர் நாட்டியத்தை அறிந்து ரசிக்கிருர்கள் என்று தெரியாது. ஆபரணங்களையும், ஆடைகளையும ரசிக் கிருர்கள். ஆனல் அதனை உள்ளபடி ரசிக்கத் தெரிந்தால், ஆடல் நெறியிலே நாம் ஆண்டவனைக் காண முடியும்; இபபடித் உணர்ந்து, தம்மை அறிவார், உலகத்தை அறிவார். இவை இரண்டையும் அறியும்போது உள்ளே இருக்கிற ஆண் டவனை உணர்வார். இதை எல்லாம் தேவாரததிலே உள்ள சாத்திரப் பகுதிகளைச் சுட்டிக்காட்ட இருப்பவர்கள் சொல் வார்கள். திருமுறைகளில் எவ்வளவோ இலக்கிய நயம் இருக் கிறது? அப்பா உனக்கு முத்து வேண்டுமா? பவழம் வேண் டுமா? என்ன வேண்டும். இயற்கை அன்னை எங்கே பார்த் தாலும் அவற்றைக் குவித்து வைத்திருக்கிருள். இதோ பார்—ஒரு பாக்குமரம். பாளையில் தோன்றி உள்ள வித்துக்கள் முத்துப போல இருக்கின்றன. அதிலே இருக்கிற காய் மரகதம்போல இருக்கிறது. பினனே நன்ருகப் பழுத்திருக்கிறபோது பவழம் போல இருக்கிறது. இப்படி முத்து மரகதப் பவழங்களை எல்லாம் பாக்கு மரத்திலே காட்டுகிருர். இறைவனுடைய பேராற்றலை உணர்கிற போதுதான் உலகம் எல்லாவற்றையும் அவன் அருளாகக் காணமுடியும். உண்மையான மணி எது? உண்மையான பவழக் குன்று எது? மாணிக்கக் குன்று எது?

எல்லாவற்றுக்கும் மூலமாக இருக்கிற அம்மையப்பனே என்பதைக் காணமுடியும். அவர்கள் இயற்கையைப் புறக்கணிக்க வில்லை. இயற்கையின் அழகை எல்லாம் அம்மையப்பனின் அழகாகக் கண்டார்கள். ஒவ்வோர் ஊருக்குச் சென்றபோதும் அங்கேயுள்ள இயற்கை அழகை எல்லாம் வேறு எந்தப் பாவாணரும் பாடாத நெறியில் பாடிக்காட்டி மக்களது உள்ளத்தை இறைவன் திருவடியிலே பிணைத்திருக்கிறார்கள்.

அதற்குமேலே திருவீழிமிழலைக் கோயில், வானத்தில் இருந்து இறங்கியது என்பது புராணம். அந்த ஊரில் குறமகள் பாடுகிறாள். தன் குழந்தைக்குத் தாலாட்டு. 'க்ளாசிகல்' (Classical) சங்கீதம் இல்லை. அன்போடு தன்னை மறந்து பாடுகிறாள். அதைக் கேட்டு அந்தக் கோயில் வானத்தில் இருந்து இறங்கிற்றாம். வானத்தில் இருந்து இழிந்து இறங்க வேண்டுமானால் எவ்வளவு உள்ளம் உருகி, அன்பு பொங்கி யிருக்கவேண்டும். இதுதான் பாடல் நெறி — குறத்தி பாடினால் என்ன ? அந்தத் தாயின் உள்ளத்தில் பொங்கிய அன்பிற்கு உருகி இறைவனே இறங்கிவிட்டான் என்றார். இதைப்போல எந்தப் புலவன் பாடினான் ? எவ்வளவுதூரம் சங்கீதத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

அப்பா சுவாமிகள் 'கள்ளக் கம்பனைக் கண்டுகொண்டேன்' என்பார். 'வாராதே வருவானை' என்பார். என்ன பொருள் ? நம் உள்ளத்துள்ளேயே இருக்கிறான். நாம் அவனைக் காணாது அலைகிறோம். பக்குவ நிலை வரும்போது அவன் தன்னைக் காட்டுகிறான். 'காட்டுவித்தால் யார் ஒருவர் காணாதாரே'. அடக்குகிறான். 'அடக்குவித்தால் யார் ஒருவர் அடங்காதாரே'. மாணிக்கவாசகர் எம்பெருமானின் திருக்காட்சியைக் காணும் நிலையைப் பாடுகிறபோது, நமக்காகத்தான் பாடினார்போலத் தோன்றுகிறது. அந்தப் பாடல்கள் எல்லாம், இன்று நம்முடைய மாணவர்களுடைய உள்ளத்தில் பதியுமானால், எத்தனைக் குறைகள் அகன்றுவிடும் ? இறைவனே நமக்குத் தோன்றாத் துணையாக இருக்கிறான்.

ஞானசம்பந்தப் பெருமான் இறைவனை " என் உள்ளம் கவர் கள்வன் " என்பார். நம்முடைய மற்றமற்ற பொருள்களை எல்லாம் திருடுகிற கள்வர்கள் இருக்கிறார்கள். ஆனால் யாராலும் உள்ளத்தைக் கவர்ந்துசென்றுவிட முடியாது. அவன் என் உள்ளத்தையே கவர்ந்துசென்றுவிட்டான் என்கிறபோது, அவன் எத்தகைய கள்வனாக இருக்கவேண்டும். இந்தப் பாடலை அகப் பொருள் துறையில் அமைத்திருக்கிறார். வேதத்திலே,

" தஸ்கரஸ்ய தஸ்கர "

என்ற வாக்கியம் வருகிறது. ' திருடனுக்குத் திருடன் ' என்ருல் நமக்கே பொருள் விளங்காது. மாக்சுமில்லர் இதை மொழி பெயர்க்கிறபோது " இது திருடர்களால் எழுதப்பட்டது " (This might have been Written by a thief) என்கிருர். திருடர்களுக்கு எல்லாம் திருடர் என்ருல் என்ன பொருள்? ஞானசம்பந்தர் சொன்னுரே — ' என் உள்ளம் கவர் கள்வன் ' என்பதாக அதைப் பார்த்தால் புரியும். மற்ற மற்ற திருடர்களுக்கு எல்லாம் கைவரப் பெருத கலை மனத்தையே திருடிச்செல்லும் முறை. இதைப் பார்த்தவுடன் 'தஸ்கரஸ்ய தஸ்கர' என்பது புதுமையாகத் தோன்றவில்லை. பழமையானவர்கள் சொல்லிய ஆழ்ந்த பொருள் களை எல்லாம் திருமுறைகளிலே தெளிவாகக் கண்டுவிட முடியும். வேதாந்த தேசிகர் வடமொழிச் சாத்திரங்கள் எல்லாம் படித்தவர். ஆனுல் நாலாயிரத்தைப் படித்தவுடனே " தெளியாத மறை நிலங்கள் தெளிந்தேன் " என்கிருர். வைணவப் பெருமக்கள் அந்தப் பாடல்களுக்கு எல்லாம் எழுதிவைத்துள்ள உரைகளைப் பார்க்கும்போது திருமுறைகள் நன்கு விளங்கும்.

இந்தத் திருமுறைகளைப் பண்டைப் பண்முறையில் பாடிப் பரப்புவதற்கு நாம் வகைசெய்தாகவேண்டும். இன்றைக்கு எம்.ஏ. தத்துவ சாத்திரம் படிக்கிறவர்கள் இருக்கிருர்கள். அது வாழ்வுக்கு என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. படிப்பாகவே இருக்கிறது. பெரியவர்கள் என்ன செய்திருக்கிருர்கள்? விளையாட்டு நெறி முறைக்கல்வி' (Play way method of education) என்பார்கள். விளையாட்டு முறைகளினுலேயே எல்லாவற்றையும் போதிக்க முடியும் என்கிருர்கள். மாணிக்கவாசகர் பாடல்களைப் பாருங்கள். உந்தியார், ஊசல், சாழல் போன்றவைகள் எல்லாப் பெண் குழந்தைகள் பாடுகிறபாடல். திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்கள் எல்லாம் என்ன? இவை எல்லாம் கடல்கடந்து போயிருக்கின்றன. நான் பாங்காக் போயிருந்தபோது அவர் களுடைய தேசியத் திருவிழாவுக்கு-நம்முடைய திருவிழாவுக்கு இல்லை — திருப்பாவை, திருவெம்பாவை விழா என்றே சொன் னுர்கள். அந்த வார்த்தை அவர்கள் பேசுகிற மொழியிலில்லை. நம் தமிழ்ப்பெயர் அதற்கு அமைந்திருக்கிறது. இப்படி எவ்வளவு தூரம் நம்முடைய சமயக்கலாசாரம் ஊடுருவியிருக்கிறது என்பதைப் பார்க்கலாம்.

இவற்றை எல்லாம் பாடவேண்டியவர்கள் ஒரு சிலர்தான் என்ற எண்ணம் போகவேண்டும். இவை எல்லோருக்கும் உரியவை. எல்லா மக்களும் உணர்ந்து கொள்ளும் வண்ணம்

இவற்றைப் பரப்பவேண்டும். மக்களுக்கு இவற்றை விளக்கக் காலத்திற்கேற்ற உவமைகளை மேற்கொள்ளவேண்டும். உலகம் இவற்றை ஏற்றுக்கொள்ளக் காத்துக்கொண்டிருக்கிறது. இந்தப் பெரிய திருவாவடுதுறை ஆதீன மடாலயம் திருமூலரோடு தொடர்புடையது. பெருமக்கள் பலரோடு தொடர்புடையது. சிவ யோகிகள் பலர் வாழ்ந்த இடம். தலைவர் சொன்னார்கள், பல்கலைக் கழகம் என்று. "ஆக்ஸ்போர்டு யுனிவர்ஸிடி" போன்ற பெரிய பல்கலைக் கழகமாக மிளிர்வது இது. ஆனால் உலகம் இருக்கிற சூழ்நிலை கண்டு குருமார்கள் கொஞ்சம் ஒதுங்கினார்கள். இது ஒதுங்கியிருக்கிற காலம் இல்லை. பண்டைய காலம் போல ஸ்ரீ - ல - ஸ்ரீ மகாசந்நிதானம் சமுதாயத்தின் தலைமையை ஏற்றுக் கொண்டாக வேண்டும். அஞ்சவேண்டா, உறுதி வேண்டும். அரசியலுக்கு அஞ்சியும், நட்சத்திரங்களுக்கு அஞ்சியும் ஒதுங்கி நிற்காது, எதிர்த்து நிற்கவேண்டும், ஆண்டவன் இருக்கின்றான். சக்தி நமக்குத் துணை. சிவன் நமக்குத் துணை. அந்த உறுதி வந்துவிடுமானால், எதற்காக நாம் ஒதுங்க வேண்டும்? தேவாரத்தைக்கற்ற பின்னர், திருவாசகத்தைக் கற்ற பின்னர், பெரியபுராணத்தைக் கற்ற பின்னர், அந்த உறுதி நமக்கு வரவில்லையானால் யார் நம்மைக் காக்கக்கூடியவர்கள் என்று கேட்கிறேன்.

இந்தத் திருமுறைக் கருத்தரங்க மகாநாடு ஒரு நிலையாக ஆகி, இந்தப்பாடல்கள் எல்லாம் அங்கங்கே சிறுவர்கள், சிறுமியர்கள், யாவருடைய நாவிலும் ஒலிக்கும்படியாகச் செய்தாக வேண்டும். அப்படிப்பட்ட ஓர் உறுதியான தொண்டினைச் செய்ய, நம் குருமகாசந்நிதானம் முன்னின்று நடத்தியாக வேண்டும் இவை நம் நாட்டுக்கு மட்டுமல்ல. இவை சிவனோடு தொடர்பு உடையன என்று நினைக்கிறோம். சிவனோடு தொடர்பில்லாதது உலகத்தில் எது இருக்கிறது? சிவம் எல்லோருக்கும் உரியது. எல்லா உலகங்களுக்கும் உரியது.

நான் ஜப்பானுக்குச் சென்றேன் என்றேனே, அங்கே கூடிய அகில உலக மகாநாட்டில், அமைதியை நிலைநாட்டச் சமயங்கள் எப்படித் துணை புரிய முடியும் என்பதை ஆராயச் சமயத் தொண்டர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள்? நாம் இன பேதம் பாராட்டுவதை விட்டுவிட வேண்டும். எல்லோரையும் ஆண்டவனுடைய குழந்தைகளாகக் காணவேண்டும். செல்வர்கள் ஏழைகளுக்கு உதவ, செல்வ நாடுகள் ஏழ்மை நிலையில் உள்ள நாடுகளுக்கு உதவ முன்வர வேண்டும், என்பன போன்ற 'வளர்ச்சித் திட்டங்கள்' முதற்படி,

மனிதனை மனிதனுகக் காண்கின்ற கண், இந்த உலகத்தில் இன்று இல்லை. அவன் கறுப்பன், இவன் வெளுப்பன், இது போன்ற எண்ணங்கள் இருக்கின்றனவே, இவை எல்லாவற்றையும் ஒழித்தாகவேண்டும். இன்றைச்கு அன்பே சிவம் என்பது நம் சைவம். இதை எங்கே காணமுடிம்? அன்பே சிவம் என்று வாழவேண்டும். நாம் அப்படி வாழ்ந்தால் நம்மவர்கள் அப்படி வாழ்வார்கள்.

இந்தத் திருமுறைகளின் உண்மைக் கருத்துக்களை நான் முன்பாக உணரவில்லை. ஒரு குருநாதன்-மகாத்மா காந்தியடிகள்-அவர் வாழ்ந்த அடிச்சுவட்டிலே நான் பின்பற்றிச் செல்கிறபோது, இந்தத் திருமுறைகளின் உட்கருத்தெல்லாம் உணர முடிந்தது. ஒரு எறும்பைப்போல ஒரு அணிலைப்போல அவரைப்பின்பற்றிச் செல்கிறபோது, பலப்பல உண்மைகளைக் காணமுடிந்தது. பெரிய இந்தியாவிலே தனி ஒரு மனிதன் செய்துகாட்டிய அற்புதங்கள் எத்தனை ?

நமக்கு நால்வர் இருக்கிறுர்கள், அவர்கள் போன வழியிலே போவோம். இனி எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் திருமுறைகள் ஒன்றையே நிலைநாட்டக் குருமகாசந்நிதானம் அவர்கள் முன் வந்துவிடவேண்டும். எங்களுக்கு எல்லாம் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தமேண்டும். அவர்களுடைய பெருங் கருணையினுல் நாம் உய்வோம். நாடு உய்யும். உலகம் உய்யும், நமது திருமடங்களின் பழைய பெருமை ஓங்கும். எத்தனையோ திருமுறை மகாநாடுகளில் பேசிப் பேசி, அலுத்து அயர்ந்து புளித்துப்போன உள்ளத்தோடு பேசுகின்றேன். குருமகா சந்நிதானம் அப்படித் தொண்டாற்ற முன்வருகிறபோதுதான், ஒரு புதிய யுகத்தைத் தொடங்கியவர்கள் ஆவோம். அன்றைக்கு இடையூறுகள் ஏது ?

“ முன்னவனே முன்னின்ருல் முடியாதது ஒன்றுண்டோ ?”

வணக்கம்

திருஞானசம்பந்தர் இலக்கிய நோக்கு

★

செஞ்சொற்கொண்டல்
புலவர் சொ. சிங்காரவேலன், M. A., Dip. Ling.,
(அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.)

★

கவிதைப் பொதுப்பண்பும் பாலருவாயரும்

கவிதை என்பது மனித உள்ளத்தின் விழுமிய படைப்பு என்று கூறுவர். மனித உள்ளத்தின் சீரிய படைப்புக்கள் பல வற்றினுள்ளும் முடிமணியாகத் தக்கது கவிதை என்றே கூறலாம். எப்படி மனித இதயம் அழிவில்லாததோ அப்படியே கவிதையும் இறவாத நிலை பெற்றது என்பர். "Poetry is the first and last of all knowledge. It is as immortal as the heart of man." என்பர் எச். ஜே. சி. இரியர்சன் என்ற திறனாய்வாளர். இத்தகு விழுமிய கவிதை ஆய்வதற்கும், விளக்குதற்கும் உரிய திறன் வாய்ந்ததாகும். எண்ணம், கற்பனை, உணர்வு ஆகிய மூன்றற்கும் உரம் அளிப்பதாக உயர்கவிதை இருத்தல் கண்கூடு. கவிதைத் திறனாய்வோர்கள் மேலும்மேலும் கவிதையை ஆய்ந்து தெளி தற்கும் திறன் தெளிந்து பாராட்டுதற்கும் உரியவர்கள். ஆதலின் கவிதையை ஆராய்வதென்பது உணர்வுகளைத் தெளியும் பயிற்சி என்றும், அவ்வாறு வாழ்வினைத் தெளியும் பயிற்சி என்றும் கூறுவர் அறிஞர். "கவிஞர் உலகம்" என்றும் கவிதைத் தொகுப்பின் நான்முகத்தில் சேம்சுரீவீசு என்றும் பேரறிஞர் கருத்துரை இது. "Most Good poetry demands study and interpretation; it casts its marks much effort of thought, imagination and feeling, and it is worthy of corresponding efforts by its readers. It is in making these efforts that young readers enlarge, not only their appreciation of poetry; but also their capacity for thought, imagination and feeling. The study of poetry is a training of the emotions-that is, a training

for life. " இந்தக் கருத்துக்கள் திருஞானசம்பந்தருடைய கவிதை களைத் திறன் தெளிந்தின்புறுதற்கு முன் நம்முள்ளத்தே தோன்று கின்றன. பக்தி என்னும் அநுபவ மலர்ச்சியாகப் பெருக்கெடுத்த இவ்வருட் புலவருடைய அரும் பாடல்கள் சீரிய இலக்கிய நலம் சான்று திகழ்கின்றன.

நடைநலம்

இறைவனது விழுமிய நலம் விரிந்துரைக்கும் இவ்வுயர் பாடல்கள் கவிதையழகு சான்று விளங்குகின்றன. திருஞான சம்பந்தரது பக்திப்பாடல் நடையினை நாம் நன்கு உணர்தற்கு அவர்தம் எண்ணற்ற நலம்சான்ற கவிதைகள் துணைபுரிகின்றன. புதுவை அரவிந்த அடிகள் பொதுவாகக் கவிதை நடையினை நான்குவகையாகப் பிரிக்கின்றனர். (1) இயைந்த நடை (2) வன்மை சான்ற நடை (3) விளக்க நடை (4) உள்ளுணர்வு நடை என்பன அவை. நான்காவதாக அவர் பகுத்துரைக்கும் உள்ளுணர்வு நடை (Inspired Style) யின்கண் நம் பிள்ளையார் திருப்பாட்டுக்கள் வருகின்றன என்று கூறலாம்.

உள்ளுணர்வு நடை எழில்

அவரது உள்ளுணர்வு கவிப்பெருக்கெடுக்கின்றது. அப் பெருக்கு அழகிய வடிவங்களில் வந்து பொருந்துகின்றது. எண்ணற்ற புதிய வடிவங்கள் — யாப்பமைதிகள் அங்கே வந்து அமைகின்றன. புதிய பல வடிவங்கள் படைக்கப்படுகின்ற இயற்கை ஆற்றல் அங்கு உருவெடுக்கின்றது. ' விழுமிய கவிஞன் தன் உள்ளுணர்வுக்கேற்ப வடிவம் தேடி அலையமாட்டான்; அந்த உள்ளுணர்வு இனியதொரு வடிவத்திற் பொருந்தும் வண்ணத்தை நாம் காணலாம். இல்லையேல் அவன் படைப்போனும் இருத்தல் கூடாது ' என்று மல்லம் என்ற பேரறிஞர் மொழிவது இங்கே நினைக்கத்தக்கது! பிள்ளையாரது கவிதைப் படைப்பு இத்தகு விழுமிய நிலையில் அமைந்து பண்பட்டிருப்பதாலேயே இதனை உள்ளுணர்வு நடையின்கண் உள்ளதெனக் கூறினோம்;

பிள்ளையாருடைய திருப்பாட்டுக்கள் உயர்ந்த கவிதை என்பதற்கு இலக்கியங்களாகத் திகழ்கின்றன என்பது மிகை அன்று.

உள்ளத்தை உயர்த்தும் நலம்

கவிதையின் பொதுவியல்புகளைப்பற்றி விரிவாகக்கூறும் சூபர்கிராம்பி என்னும் பேரறிஞர், தமது, "கவிதைக் கொள்கை" ("The theory of Poetry") என்ற நூலில், 'ஒரு சீரிய கவிதை–ஏன்? ஒவ்வொரு கவிதையும் சிறிதாயினும் — பெரிதாயினும், நம்மிடத்திலிருந்து மதிக்கப் பெறுதலை உடையதாயின் அது நம் உள்ளுணர்வைத் தூண்டுவதாக இருத்தல் வேண்டும்' என்று முடிப்பார். அவரது அத்தகவுரை இது:- "every poem, big or little, if it is to have the slightest value for us., must have been, if we say, "inspired." பிள்ளையாரது பெருங்கவிதை ஒவ்வொன்றும் பாடும் உள்ளத்தினை உயர்ந்த பொருளைப்பற்றிக் கலந்து இன்புறத் தூண்டும் பேராற்றல் படைத்தது எனல் புதுமைமையன்று. "எனதுரை தனதுரையாக" என்பதன்றோ இப்பெருமானுர் பேச்சு! இறைவடிவாக இருந்து அவ்வகக் காட்சியைப் புறவுலகிற்கு வெளிப்படுக்கும் மாபெரும் செயலன்றோ அம்மாண்புறுங் கவிதைகள்! இன்று இலக்கியச் செவ்விசளாக நாம் காணும் அனைத்திற்கும் இடம் இவ்வருட் கவிதைசளில் உண்டு.

உவமைச் சிறப்பு

சிவபிரானது திருவுருவ அழகில் ஈடுபட்டு வியக்கின்றது இவ்வருட் புலவரது திருவுள்ளம், அதனைப் பல உவமைகள் வழியே விளக்க முற்படுகின்றது. பண்பாட்டின் நிறைந்த திருவுள்ளமன்றோ? அதனின்றும் வெளிவரும் உவமைகள் பெரிதும் பொருத்தமும் பொலிவும் உடையவையாக ஒளிர் கின்றன. சிவந்த திருமேனி; சிவபிரான் திருமேனி எம்மான்; "சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான்" என்பர் அப்பரடிகள். திருவள்ளுவரும் இறைவனைச் "செம்பொருள்" என்றே உரைப்பர்; "செம்பொருள் துணீவு" என்றே பின்னும் வழங்குவர் மணிவாசகர். சிவந்தமேனியைத் "தீ" யின் செம்மைக்கு உவமை செய்வர் பிள்ளையார், அம்மட்டு மன்றி, "பவளநன்மணி "பவளம்," "பால்" "பொன்" மின்னல்; "பவளத்திரள்" என்றெல்லாம் பலபடப் பாராட்டுவர் பாலரு வாயர். செஞ்சடை அழகினைச் செந்தமிழ்த் தொடர்களாற் பின்னும் அழகுபடுத்துவர் பிள்ளையார். பொன்னும் மின்னும் எரியுமாகவே சடாமகுடத்தைச் சாற்றுவர். இறைவனின் தோள்களோ குன்றுகள் போன்றும் மலைகள் போன்றும் காட்சி யளிக்கின்றன. கரு நீலகண்டமாகக் கவினும் திருக்கழத்தோ, காயாமலராகவும், மேகமாகவும், கருமணியாகவும், அவர்க்குத்

தோன்றுகின்றது. பெருமானின் திருவடிகளோ 'தாமரைகள்' என்பார்; 'நுண்துகில்' என்பார்; 'பஞ்சி' என்பார்; பொதுப் படப் 'பூ' என்றும் கூறிப்பூரிப்பார், அந்திச் செவ்வானம், சங்கின் வெண்மை, தழலின் செம்மை, வெள்ளிமால் வரையின் தூய்மை அனைத்து உடலழகின் ஒளிக்குப் பிள்ளையார் பேசும் உவமைகள்; இவையனைத்தும் தொல்காப்பியர் கூறும் வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கு வகைக்கண் அடங்குவன வாதல் தெளிவு.

இவ்வுவமைகள் பலவற்றுலும் சிவபிரானின் அருளியல்புகள் அனைத்தையும் எழுதிக்காட்டும் உயிரோவியங்களாக இப்பாடல்கள் விளங்குகின்றன. பேய்களின் கண்களைப் "பறை" என்பார்; பேரிகையின் முழக்கை "இடி" என்பார்; வாழைக்குலைகளை "யானையின் துதிக்கை" என்பார்; மரக்கலங்களை "மலை" என்று வியப்பார்; நெற்கதிர்களை "வெண்தாமரை" என்று வியப்பார்; தாமரைகளைக் "கிண்ணத்தோடு" உவமை செய்வார்; பெண்களின் பேரழகைப் பலவாருக உவமைகள் பிணைத்து விளக்குவது இவர் பாடலழகுகளுள் ஒன்றும்.

'பஞ்சு' போன்றன பாதங்கள்; 'பையராப்' போன்றது அல்குல்; 'கொம்பு', 'துடி', 'மின்னல்', 'கொடி', அனையது இடை; 'அம்பும்', 'கயலும்' 'கருநீலமும்', 'காவி'யும், 'குவளை'யுப், 'சேலு'ம், 'மானு'ம், 'வண்டு'ம், 'வாளு'ம், 'வேலு'ம், கண்களுக்கு வரும் உவமைகள். குழலுக்கு 'மேகம்', நிறத்துக்குக் 'காயா', கொங்கைக்கு, 'அரும்பு' 'கலசம்', 'கோங்கு', 'சூதாடுகருவி', 'செப்பு'; தோளழகைப், 'பசுமூங்கிற்கு' ஒப்பிடுவார். நடையை 'அன்னம்', 'பிடி', 'மயில்' ஆகிய மூன்றினுடன் இணைப்பார்; மொழி இனிமைக்குப் பண்களுள் ஒன்ருன 'இளி', 'கற்கண்டு', 'கரும்பு', 'கிளி', 'குயில்', 'செந்து', 'தேன்', 'பாகு', 'பால்', 'யாழ்', என்பன உவமை கூறப்பெறுகின்றன. பொதுவாகப் 'பண் போன்ற மொழி' எனப் பகருவதும் உண்டு.

உருவக மாண்புகள்

உவமையின் முக்கிய வடிவமாகிய உருவக அமைப்புப் பல இடங்களிற் காணப்பெறுகின்றன. தலைசிறந்தவையாகக் கருதப் பெறும் சில சிந்தனையில் இருத்துதற்குரியன. சீர்காழியில் தழைத் தோங்கி நிற்கும் கமுக மரங்கள் இவ்வருட் கவிஞர் கண்ணுக்குப் படுகின்றன. அவற்றிலுள்ள சிறிய பிஞ்சுகள் முத்துக்களாக — காய்கள் மரகதமாக — பழங்கள் பவளமாக இக்கவிஞர் பெருந் தகையின் அழகுக்காட்சிக்குத் தோற்றம் அளிக்கின்றன. பாடுகின்ருர்;

"எண்ணூர் முத்தம் ஈண்டு மரசதம் போற் காய்த்துக்
கண்ணூர் கமுகு பவளம் பழுக்கும் கடற்காழிப்
பெண்ணோர் பாகா பித்தாபிரானே யென்பார்க்கு
நண்ணா வினைகள் நாள்தோறும் இன்பம் நணுகுமே."

சிவபிரான் கனியாகவே காட்சி தருவது உண்டு இவர்க்கு;

"கண்ணார் திகழ் கோயிற் கனி"

மழை வெள்ளம் வந்து அடிவருடத் தழைத்த கரும்பு அப்படியே மெல்ல மெல்லக் கண்ணயர்கின்றதாம்; கரும்பு பெண்ணணங்காக மாறுகின்ற வியப்பு இங்கே சொல்வடிவம் பெறுகின்றது.

"மழையார் சாரற் செம்புனல் வந்தங் கடிவருடக்
கழையார் கரும்பு கண்வளர் சோலை"

பொய்கையை யடுத்த வயல்கள்; மலர்ந்த தாமரைகளே பீடங்கள்; இலைகளே குடைகள்; செந்நெற் கதிர்களே வெண்சாமரங்கள்; இள அன்னம் ஆகிய இளவரசு நாளோலக்கம் தருவது இப்படி;

"செறியிதழ் தாமரைத் தவிசில் திகழ்ந்தோங்கும்
இலைக் குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல்
வெறிகதிர்ச் சாமரையிரட்ட இள அன்னம்
வீற்றிருக்கும் மிழலை"

முத்துக்கள் பல் காட்டும்; தாமரைகள் முகம் காட்டும்; குதித்து நீர்மேல் விழந்த கயல் விழிகாட்டும் நுட்டம் இக்கவிஞர்க்கு மிக இனிய கவிக் காட்சியாகும்;

"கொழுந்தரளம் நகைகாட்டக் கோகநதம்
முகம் காட்டக் குறித்து நீர்மேல்
விழந்தகயல் விழிகாட்ட விற்பவளம்
வாய்காட்டும் மிழிலையாமே"

பன்றிகள் மண்ணைத் தம் கொம்புகளாற் குத்திடக் கீழருந்து மணிகள் வருகின்றனவாம்; அவை மேழிதாங்கி உழும் மேன்மக்கள் போன்றிருந்தனவாம்.

இயற்கை இறந்த அபூதக் கற்பனைகள்

கவிதையின் பேரழகுகளுள் மற்றொன்று இயற்கை இறந்த கற்பனைகள் அமைப்பு. உள்ளது புனைதல், இல்லது புனைதல் என்ற இருவகைப் புனைதல்களுள் முதல வகையைச் சேர்வது இது. உள்ளது புனையுங்கால் உலக இயற்கையைக் கடந்து உயர்வு நவிற்சி என்று உரைத்திடுமாறு பாடுதல் ஓர் அழகேயாகும். "அபூதக் கற்பனை" என்று அவற்றை வெறுத்தொதுக்கிடாதவாறு, பேரழகு தோன்ற உரைப்பதும் ஒரு திறனே யாகும். உலகியற்கையை ஒட்டிய பல கற்பனைகட்கிடையில், இத்தகு கற்பனைகள் மணி குயிற்றியது போன்ற மாண்புடன் ஒளிர்கின்றன.

கச்சிமா நகரில் உயர்ந்த மாடமாளிகைகள் பல உள்ளன. குன்றுகள் போன்றன அவை. அவற்றின் உச்சிகளில் வெண் துகிற் கொடிகள் பல பறக்கின்றன. மின்னல்களோடு கூடிய முகிற் கூட்டத்திடை அவை சென்று தோய்கின்றன. அவ்வளவு உயரம் அம்மாளிகைகள் என்கின்றது ஒரு நறுங்கவிதை.

"குன்றேய்க்கு நெடுவெண் கொடிகூட்டிப்போய்
மின்றேய்க்கு முகிலினம் தோயும் வியன்கச்சி"

திருவீழிமலை தமிழ்நாட்டுத் திருத்தலம். இங்கு அழகிய பல பெண்கள் தம் குழந்தையரைப் பாராட்டி மகிழ்கின்றனர்கள். பாராட்டி மகிழ்கின்றபோது, இனிய பண் போன்ற மெல்லிய தம் சுவை பொருந்திய மொழிகளால், அழகொழுகுந் தமிழில் தாலாட்டுப் பாடி மகிழ்கின்றனர்கள். அவ்வழகிய தமிழ்த் தாலாட்டின் இனிய ஓசை விண்ணளவும் சென்று எட்டுகின்றது. இன்பத் தமிழின் இனிய சுவையொடு, பண் அனைய அப் பாவையரது குரலினிமையும் குழைந்திட்ட அவ்வோசை, இமையா நாட்டத்தவரை மேலும் வியப்பால் இமையா நாட்டத்தவராக ஆக்குகின்றது. வியந்து தேவ உலகத்துக்கும் கேட்டற்கரிய அவ்விழுமிய தமிழ் இசைக்கு உள்ளம் குழைத்து விமானத்தின் மீது இவர்ந்து வீழிமிழலைக்கே விரைந்து இறங்கி வருகின்றனர்கள் தேவர்கள். ஆம்; இவ்வாறு செம்மாந்து பாடும் சிவஞானப் பிள்ளையாரது தமிழ்க்கனிவு குழையும் எழில் நறுங் கவிதையின் உணர்வுகள் இவை.

"பண்ணமரும் மென்மொழியார் பாலகரைப்
பாராட்டும் ஓசைகேட்டு
விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோடு
இழியும் மிழலையாமே"

அவ்வுலக மக்களையும், இவ்வுலகிற்கு ஈர்க்கும் இனிமைக் கவர்ச்சி உடையது தமிழ்ப் பெண்டிர் குரலும் அதற்கு மேலும் இனிமை கூட்டும் தமிழ் இசையும் என்பதை விளக்குவதற்காகவே இக்கற்பனை எழுந்ததோ என்று எண்ணத் தோன்றுகின்ற தன்றோ ?

திருவேட்டக்குடி என்னும் ஊரில் அலைகள் எறிகின்றன. அக்கடலலைகள் பவளத்தை வாரி வீசுகின்றன. அவை அங்குறையும் சிவபிரானின் திருவடிகளைத் தொழுது வழிபடுவதற் கென்றே அவ்வாறு நீரும் பவளமுமாக எறிந்தன என்று குறிப்பர் இவ்வருட்கவிஞர்.

"கபாலிகனைக் கழல்கள் தொண்டிரைத்துத் தொழுதிறைஞ்சத்
துளங்கொளி நீர்ச் சுடர்ப்பவளம் தெண்டிரைக்கள்
கொணர்ந் தெறியும் திருவேட்டக்குடி."

பொய்கையிலே பூத்த புதிய தாமரைப் பூக்கள் நெஞ்சை அள்ளும் அழகுடன் நிமிர்ந்து நிற்கின்றன. மருங்கிலே சங்குகள் நின்றன. புன்க மரங்கள் காற்றில் ஆடிப் பொரி போன்ற தம்மலர்களைப் பொல பொலவென்று தாமரை மலர்களிற் சொரிகின்றன. கொழுந்து விட்டெரியும் தீப்போன்ற தாமரைகளே ஓமகுண்டம்; அவற்றில் சொரியும் புன்கமலர்களே பொரிகள்; மருங்கு உலவும் சங்குகளே மணமக்கள்; இப்படி இயற்கை சில திருமணங்களைச் செய்கின்றது என்கின்றார் இவ்வருட்புலவர் :

"தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குள வர்க்கம்
திகழசல சத்தீயுள்
மிகவுடைய புன்குமலர் பொரியட்ட மணஞ் செய்யும்
மிழலை யாமே."

இவ்வாறு இயற்கையில் "மணநிகழ்ச்சியை" வியந்து பாடிய நம் பிள்ளையார், உலகியலுக்கேற்பத் தாமும் திருமணம் கொள்ள இசைந்ததும், ஆனால் அத்திருமணத்தின் இறுதியில் தம் உயிர்துணைவனை பரம்பொருளுடன் 'அத்துவிதத் திருமணம்' கூடி இன்புற்றதும் இங்குக் குறிப்பான் நிலையத்தக்க வரலாற்று நிகழ்ச்சியாகும்.

திருவீழிமிழலையிற் கொடிகள் ஆடுகின்றன. அக்கொடிகள், விண்ணோரைநோக்கி எல்லாம் உலகங்களும் நிலைபெறு கொள்ளுமாறு செய்தவனும், மேலான உண்மை வடிவினனும், நல்லவனும் ஆய்நின்ற இறைவனை வணங்குவீராக என்று

விளித்துக் கூறுவன போன்று அறைகூவல் விடுத்தன என்று கற்பனை செய்யும் அழகு எண்ணி இன்புறத் தக்கது.

"தாணுவாய் நின்றபர தத்துவனை உத்தமனை
இறைஞ்சீர்என்று
பேணுவார் கொடிவிண்ணோர் தமைவிளிப்ப
போலோங்கு மிழலையாமே."

இவ்வாறே,

"விரியும் கொடிவான் விளிசெய் விடைவாய்"

என்று மற்றோரிடத்தும் பாடுவார்.

வண்மை விளக்கும் கவிப்பண்பு

சிறந்த கவிதையில் உண்மை விளக்கும் தொடர்கள், பழமொழிகள் ஆங்காங்கு அமைதல் இயற்கை. ஆளுடைய பிள்ளையார் கவிதைகளிலும் இதற்குத் தொடர்கள்சில வருகின்றன.

'கனலிடைச் செதிள்' என்னுந்தொடர் அழகு படுத்தப் பெறும் இடம் இது.

'அடியவர் மேல்வினை கனலிடைச் செதிளன்றே' 'அவ்வினைக்கு இவ்வினை', 'ஆடுபோல நரைகளாய்', 'உழுந்துருளும் அளவை', 'சேற்றிற்காலிடுதல்', 'பேய்த்தேர்பின் குடம் கொண்டு நீர்க்குச் செல்வார்' முதலியனனவும் இவ்வாறே தக்க இடங்களில் வந்து கவின் செய்கின்றன. உலகமாந்தர் பேச்சு வழக்கிலும், நம் அருட்கவிஞர் திருவுள்ளம் சென்று பயன் பெருக்கிற்று என்றறிதற்கு இவை சான்றாகும், 'முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்' என்ற முதுமொழியே 'அவ்வினைக் கிவ்வினை' என்று வருவது. கண்ணாடியில் உழுந்து உருளும் அளவை சிறுநேரம் என்பதைக் குறிக்கவருகிறது. சேற்றுக்குள் காலைவிட்டு இடர்ப்படுவது துன்பத்திற் சிக்கி மீளவியலாத நிலையை விளக்கிட வருவது. கானல்நீரைத் தொடர்ந்து குடம்கொண்டு போவது, பொய்த்தோற்றத்தை மெய்யென்று கருதிப் பின்தொடர்ந்து பயன் பெருமையை விளக்க வருவது. இன்னோரன்ன பிற, உலக மாந்தர் பேச்சிற் பண்டுதொட்டு வழங்கிவருவன.

ஒலிநயம் அமைக்கும் உயர் பண்பு

ஒலிநயம் சிறந்து விளங்குவதே உயிர்ப் பண்பாக ஓதப் பெறும் கவிதைச் சிறப்பாகும்.

கவிதை என்பது இசைபோன்று கேட்கத் தகுந்த பெற்றி உடையது ஆகும். செவிகட்குத் தக்க விருந்தளிப்பதாக அஃது இருத்தல் வேண்டும். ஆதலின் கவிதையை மதிப்பிடும்போது, செவிகட்கு இன்றியமையாமை தருதல் வேண்டும். அவ்வாறு படிக்கப் பெறுங்கால் இனிய உணர்வினை நெஞ்சில் விளைப்பது எதுவோ அதுவே உயர் கவிதை என்பர் அறிஞர்.

"Poetry, like music, and almost to thc same degree as music, depends for ifs first impression upon the appeal it makes to the ear. No poetry should be judged by any other source before that of hearing, and therefore all poetry should be read aloud, even if it be only that thing of "reading aloud" which means that silent shaping of sound in the mind of a solitary reader." — என்று பி. எச். பி. லயான் (P. H. B. Lyon) கருத்துக்கள் அவை.

ஆளுடைய பிள்ளையார் அமுகப்பாடல்கள், பண்கலந்து, நயம் செறிந்து, தாள சுருதிக்கேற்ற யாப்பு அமைந்து சிறக்கும் பாடல்கள் ஆதலின், இவற்றது ஒலிமய ஒழுங்கு உலகத்தாரான் உணரப்பட்ட வொன்றுகும். பல்வேறு வகையான சந்த அமைப்புடன் கூடிய கலிவிருத்தங்கள் இப்பாடல்கள். அச் சந்தங்களைக் கொண்ட இச்செந்தமிழ்க் கவிதைகள் "பண்பொலிந்த அமைப்பு" (Musical thought) உடையவை. பொது நோக்காகக் காணுங்கால் 23 பண் வேறுபாடுகள் பாலறுவாயர் கவிதைகளிற் காணப்பெறுகின்றன. அவை பின்வருமாறு: (1) அந்தாளிக் குறிஞ்சி, (2) இந்தளம் (3) காந்தாரபஞ்சமம், (4) காந்தாரம் (5) குறிஞ்சி (6) கொல்லி (7) கொல்லிக் கௌவாணம் (8) கௌசிகம் (9) சாதாரி (10) சீகாமரம் (11) செவ்வழி (12) தக்கராகம் (13) தக்கேசி (14) நட்டபாடை (15) நட்டராகம் (16) பஞ்சமம் (17) பழந் தக்கராகம், (18) பழம் பஞ்சுரம் (19) பியந்தைக் காந்தாரம் (20) புறநீர்மை (21) மேகராகக் குறிஞ்சி (22) யாழ்முரி (23) வியாழக் குறிஞ்சி. இப்பண் வேறுபாடுகளில், "இந்தளம" என்ற பண்ணே பிள்ளையார் திருவுள்ளத்திற்குப் பெரிதும் இசைந்தது போலும்; ஏனெனில் இப்பண் பொருந்த இவ் வருளாளர் பாடியன 39 பதிகங்கள். அடுத்த இடத்தைக் 'சாதாரிப்பண்' பெறும். இவற்றில் அமைந்தன 33 பதிகங்கள், அடுத்த இடத்தைக் 'குறிஞ்சி', காந்தாரம் ஆகியவை பெறுகின்றன; அவை ஒவ்வொன்றும் 29 பதிகங்கள். 'கொல்லிக் கௌவாணம்' என்ற பண்ணிலும்; 'யாழ்முரி' அமைப்பிலும்

உள்ளன ஒவ்வொரு பதிகங்கள். இவ்வாறு பண்தொகைக் குறிப்பின் வழி ஆயப்புகின் 'இந்தளம்' எனும் பண்ணே இவ் வருட்புலவர்க்குப் பெரிதும் பயின்றதாதல் காணலாம்.

ஆசிரியரின் நடை சிறப்பது எதனுல்?

ஓர் ஆசிரியரின் நடை அவரது எழுத்தில் இனிது விளங்குவதாகும். திருஞானசம்பந்தரது உயரிய தமிழ்க் கவிதைகள் தமக்கென்று நடைச்சிறப்புப் பெற்றவையாக விளங்குகின்றன. கவிதை, அமைப்பு வடிவம், சொற்களின் ஆட்சி, மோனை, எதுகை முதலிய அமைப்புகள், அடைமொழிகள் வழங்குகை, ஆகிய அனைத்து வகையானும் ஓர் ஆசிரியரின் நடை கணிக்கப்பெறும்.

'ஓர் ஆசிரியனின் மாப்புகழ் அவனுடைய வரலாற்ருலோ, கொள்கையாலோ, மட்டும் நிலைபெறுவதன்று: கவிதை அல்லது அவன் தனக்கென்று வகுத்துக்கொண்ட தனிச் சிறப்புடைய நடையொன்ருலேயே அவன் நிலைபெறுகின்ருன்.' சர். வாட்டர் அலெக்ஸாண்டர் என்னும் பேரறிஞர், ஆங்கிலப் பெருங்கவிஞராகிய மில்டன் என்பாரது தனிச்சிறப்பு நடை குறித்து எழுதும் இக்கருத்துடைய வரிகள் ஈண்டு நினைக்கத் தக்கன.

In truth, since Milton died, his name is become the mark, not of a bigraphy, nor of a theme, but of a style, the most distinguished in our poetry.

சொல்லாட்சித்திறன்

திருஞானசம்பந்தர் என்ற இவ்வருட்புலவரின் கவிதைகள் தனிச்சிறப்புடையன; "உள்ளுணர்வு நடை" யின்கண் அமைந்தவை என்பது முன்னும் கூறப்பட்டது. இவருடைய சொற்கள் தேர்ந்து தெளியப்பட்ட திறத்தனவாய் உள்ளன. சிறப்பான சில சொல்லாட்சிகளும் காணப்பெறுகின்றன. "கவிதை சொற்களால் ஆயது; ஆதலின் தக்க சொற்களைத் தேர்ந்து கவிஞன் பெய்கின்ருன்; ஒரு வகையில் நோக்கினுல் கவிதைக் கலையின் சிறப்பே அதுவன்ருே?" என்ற எம். பௌல்டனின் மொழிகள் கருதத் தக்கவை:—

"Poetry is made of words, and obviously the choice of words is important in poetry; indeed in a sense it is the whole art of writing poetry."

அருஞ்சொற்கள்

அநாயம், அயம், ஆய்த்து, ஆயோ, இசங்கும், இழக்கோ, உகவை, உறைப்பு, ஊனிகள், ஓவுளார், கயன், கல்லவடம், கில்லா, குந்தளம், குருண்டவார் குழல், கோகிலம், சரக்கு, சாவம், சும்மை, செடிச்சியர், செதுமதி, தவந்த, துவனி, தெல்லி, நயங்கு, படுதம், புரோதாயம், மறுக்கு, முட்டிக்கை, மேதகம், வேள்வி முதலிய சொற்கள் பாலறுவாயர் பாட்டிற் காணப்பெறும் சில அரிய சொற்கள்.

முடிவுரை

திருஞானசம்பந்தரின் தேவாரப் பாக்களை இலக்கிய நோக்கில் ஆராய்ந்தால் இவைபோன்ற கருத்து விளக்கங்கள் பலவற்றைக் காணலாம். அதறகு ஒரு முன்னோடியாகவே இந்த சிந்தனை அமைந்திடும் என்ற உறுதி எனக்குண்டு. திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி திருக்கோயில் பன்னிரு திருமுறைக் கருத்தரங்கில் இச்சிந்தனையை வெளியிடத் துணைபுரிந்த திருவருளுக்கும், குருவருளுக்கும் நன்றி செலுத்தி என் பேச்சினை முடித்துக் கொள்கிறேன். இதனைத் தொடர்ந்து ஆராய்ச்சியுலகம் மேலும் சிந்தனை செய்தால் புதுநலம் பெறும் என்பது உறுதி.

திருஞானசம்பந்தர் திருவடிகள் வாழ்க!

திருஞானசம்பந்தர் இலக்கிய நோக்கு

★

பெருஞ்சொற்கொண்டல்
திரு. பாலூர் கண்ணப்ப முதலியார், எம். ஏ., பி. ஓ. எல்.

★

இப்பொழுது நாம் வழிபடும் தெய்வமாக விளங்கிக்கொண்டு இருக்கின்ற குருமஹா சன்னிதானம் அவர்கள் இந்தத் திருமுறை கருத்தரங்கைத் தோற்றுவித்திருக்கின்ருர்கள். ஆகையினுலே இவர்கள் திருமுறை குருமஹா சன்னிதானம் என்று நாம் இவர்களைப் பாராட்டவேண்டும், போற்றவேண்டும், பணியவேண்டும் என்று நான் முதற்கண் அறிவித்துக் கொள்ளுகிறேன். இக்காலத்திலே சமயச் சார்புடைய இடங்களெல்லாம் பட்டிமன்றங்களை நடத்துவதற்கு முன்வந்திருக்கின்றன. பட்டிமன்றங்களுடைய போக்கு உங்களுக்குத் தெரியும். அவற்றில் ஒருவருக்கொருவர் பகை உணர்ச்சிதான் ஏற்படுகின்றதேயொழிய எனக்குத் தெரிந்தவரையில் பண்பு உணர்ச்சி இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்ருல் நான் சில பட்டிமன்றங்களுக்குத் தலைமை வகித்திருக்கின்றேன். ஆனுல் நம் குருமஹா சன்னிதானம் அவர்கள் அப்படி இதைப் பட்டிமன்றமாக ஆக்காமல் கருத்தரங்காக அமைத்திருக்கிருர்களே அது நாம் பெற்ற பேறு என்று நாம் அறிந்துகொள்ளவேண்டும். அதிலே அவர்கள் ஏதோ திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் என்ற பூடகமாக தலைப்புத் தந்து பேசுமாறு ஆணையிடாமல் அதற்குள்ளே இறங்கி அதற்குள்ளே இருக்கின்ற நுண் பொருள்களை எல்லாம் ஆராய்ந்த முறையிலே இந்த ஆண்டு இலக்கியம், சாத்திரம் என்று அந்த இருபெரும் பொருளைப்பற்றிப் பேசுமாறு ஆணைதந்து இருக்கிருர்கள். அது மிகமிகச் சிறப்பு உடையது. ஏனென்று கேட்டால் நமது அருளாளர்களுடைய திருவாக்கிலே எல்லோரும் என்ன நினைக்கிருர்கள் ? அது ஏதோ தெய்வத்தின் முன்னே தாளமிட்டுப் பாடக்கூடிய பஜனைப்பாட்டு என்று எண்ணிக்கொண்டிருக்கிருர்கள். இந்த எண்ணத்தைப் போக்கு

வதற்காகக் குருமஹா சன்னிதானம் அவர்கள் முதற்கண் இலக்கிய நோக்கு என்று அமைத்திருக்கிறார்கள். சாத்திர நோக்கு அதிலே இருப்பதை எல்லோரும் அறிவார்கள். தோத்திரம் என்றால் அதில் சாத்திரம் இருக்கும். ஒரு வைணவனோ கிறித்தவனோ, இஸ்லா மியனோ திரு ஞானசம்பந்தருடைய பாடல் திருமுறைகள் என்று சொன்னால் அவற்றில் சாத்திர கருத்துக்கள் இருக்கும், இந்துக் களுடைய கருத்துக்கள் இருக்கும் என்று கருதிவிடுவான். ஆனால் அவனுக்கே அவற்றில் இலக்கிய கருத்துக்களும் உண்டு என்று இத்தகைய கருத்தரங்குகள் தான் அறிவிக்கும்.

அப்பொழுது இதனைச் சமய நூலாக அறியாமல் இது பேரிலக்கிய நூல் என்று கருதுவான் என்பதில் எள்ளளவும் ஐய மில்லை. அப்படி எல்லோரும் படிக்கவேண்டும். சைவ சமயத்தினர் மட்டுமன்றிப் பிற சமயத்தவர்களும் இதைப் படிக்கவேண்டும் என்ற பெருங்கருணையினாலே அருள் உள்ளத்தினாலே தான் குரு மஹாசன்னிதானம் அவர்கள் இந்தக் கருத்தரங்கிலே இலக் கியத்தை முதற்கண் வைத்து அதைப் பேசுமாறு அன்போடு அவர்கள் எங்களையெல்லாம் பணித்திருக்கிறார்கள். இந்த முறை யிலே நான் எனக்கென்று அமைந்திருக்கின்ற திருஞானசம்பந்தர் இலக்கிய நோக்கு என்பது பற்றி இரண்டொரு கருத்துக்களைக் கூறிவிட முற்படுகிறேன். தமிழ் என்று சொன்னால் இந்தத் தமிழ் யாதாக இருக்கும்? நாம் தமிழ் இலக்கியத்திலே பார்க்கிறபொழுது பண்டைய சங்க நூல்களைப் பார்த்தோம். முதற்கண் அந்தச் சங்க நூல்களைப் பார்க்கிறபொழுது அவற்றை நான்குகூறாக ஆக்கினால் அந்த நான்கு கூறுகளிலே மூன்று கூறுகள் இன்பப்பகுதியாகவே காணப்படும். கால்கூறு தான் புறமாகக் காணப்படும், ஆனால் அதற்கு நேர்மாறானவர் திருவள்ளுவர். அவர் என்ன செய்திருக் கின்றார்? புறத்தை முக்காலாக்கி அகத்தைக் காலாக அமைத் திருக்கிறார். அதற்குக் காரணங்களை நான் இப்பொழுது சொல்ல முன்வரவில்லை. என்ன தெரிகிறது? சங்க காலம் முதற்கொண்டு தமிழிலே அகத்திற்கு ஒரு சிறப்புக் கொடுத்திருக்கிறார்கள், அகம் என்றால் இன்பம், இன்பப் பொருள் — அகப்பொருள், இதை ஒருவன் உணரவில்லை என்றால் அவன் தமிழ் உணர்ந்தவன் ஆகான் என்று அறுதியிட்டு உறுதியாகச் சங்கநூலே குறிக்கிறது. பரிபாடல் என்பது ஒருநூல். அந்த நூலிலே சொல்கிறார், "தள்ளாப் பொருளியல்பின் தண்டமிழ் ஆய்வந்திலார் — கொள்ளார் இக்குன்று பயன்" யார் அவர்கள்? "கையிலே பொருள் எய்தித் தந்தமிழ் உணராதார் அந்தத் தமிழை ஆய்வந் திலார்." அந்தத் தமிழ் என்பதற்கு ஆசிரியர் உரை

சொல்கிறபோது அந்தத் தமிழ் என்பது அகப்பொருள் என்ருர். ஆகையினலே அகத்திற்கு முதன்மை கொடுத்திருக்கிருர்கள் என்றும் நாம் நம்முடைய தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பார்க்கிறபோது அதற்கு ஒரு சிறப்பு இருக்கிறது என்றும் உணர்கிருேம்.

அந்த முறையிலே திருஞானசப்பந்தப் பிள்ளையார் ஆண்டு பதினறு என்ற முறையிலே வாழ்ந்த அவர்கள் அந்த அகத்திற்குக் கொடுத்திருக்கிற ஒரு தனியிடம் மிகச் சிறந்தது. அதிலேயும் அந்த அகப்பொருள் பாடல்களைப் பாடுகிற பொழுது சிறந்த உட்பொருள்களை அவர்கள் அமைத்தும் பாடியிருக்கிருர்கள் என்று நாம் உணரமுடியாதிருக்கிருேம். அந்த முறையிலே தூது என்பதுபற்றி நான் கூறவிருப்பு கின்றேன். தூது என்ருல் ஒரு 'மெஸஞ்ஜரை' அனுப்புவது. யார்? இங்கே தூது அனுப்புபவர் என்ருல் இறைவனுகிய தலைவன் இடத்திலே மோகங்கொண்ட ஆன்மாவாகிய தலைவி இருக்கின்ருளே அவள் தூது அனுப்புகிருள். அப்படித் தூது அனுப்புதற்குரிய பொருள்கள் பல உண்டு. அவற்றிலே பறவைகளும் இடம் பெறும். அப்படிப்பட்ட பறவைகளுக்குள்ளே 'அன்றில் பறவை' என்பது ஒன்று. அந்த அன்றில் பறவையைப் பார்த்துத் தன் காதலால் அந்தப்பயலை என்று சொல்லப்படுகின்ற ஆசைத் தேமல் இருக்கிறதே, பசலை தனக்கு உற்றதைக் கூறும்படி சொல்கிருள். இங்கே ஒருவினு எழக்கூடும். அதாவது இக்காலக்கண் கொண்டு நம்முடைய தலைவர் அவர்கள் இக்காலத்து மாணவர்களுக்கு உகந்த முறையிலே இத்தகைய கருத்துக்களை எல்லாம் சொல்லவேண்டும் என்ற தொனிப் பொருளிலே அவர்கள் தம்முடைய கருத்துக்களை இடையிடையே சொல்லிக் கொண்டு வருகிருர்கள். அப்படிப்பட்ட மாணவர்கள் வினு எழுப்பாத வகையிலே தொல்காப்பியர்விடை கூறுகிருர். அதாவது தூது அனுப்புகிறவள் உயர்திணை. ஆனல் யாரைத் தூது அனுப்புகிருள்? அஃறிணையை அனுப்புகிருள். அஃறிணையை நமக்குத் தெரியும். பறவை, விலங்கு முதலியவைகள். அவைகள் பேசுமா? அவைகள் சென்று உரைக்குமா தம் கருத்துக்களை? என்று மாணவன் கேட்கக்கூடும். அந்தக் கேள்வி எழக்கூடும் என்பதை அறிந்துதான் தொல்காப்பியர் அழகாகச் சொல்கிருர். உறுப்பு உடையனபோலவும், உணர்வுடையன போலவும், மறுப்பனபோலவும் நெஞ்சொடு புணர்த்தலும் என்ற அருமையான நூற்பாவை — இந்த 20-வது நூற்ருண்டின் கண்கொண்டு அக்காலத்திலேயே பிரித்துத் தரப்படுத்தும் கல்வியைப் —பல நூற்ருண்டுகளுக்கு முன்பே விடையாகத் தந்திருக்கின்ருர்.

நமக்கு ஏற்பட்ட இன்பமோ நமக்கு ஏற்பட்ட துன்பமோ நம் அளவில் நாம் துய்த்துக்கொண்டு இருந்தால் இன்பம் அவ்வளவு மகிழ்ச்சியைத்தாராது. நம்முடைய துன்பமும்போகாது நம்முடைய துன்பத்தையும் இன்பத்தையும் நாம் பிறரிடத்திலே சொல்லிக்கொள்கிறபொழுது தான் அவை நிறைவுபெறும். அந்த முறையிலே தன் நெஞ்சோடு சொல்லிக்கொள்கிருள் என்ருலும், அஃறிணைப் பொருள்கள் உணர்வுடையவை போன்று இருப்பனவாக ஒரு பாவனை — கற்பனை செய்துகொண்டு அவள் அனுப்புகிருள். எந்த எந்தத் தொல்காப்பியக் கருத்தை ஞானசம்பந்தப் பெருந்தகையார் தம்முடைய நாவால் இலக்கியக் கண்கொண்டு பார்த்துப் பாடியிருக்கிருர் என்று பார்க்கிற பொழுது அந்த ஞானசம்பந்தருடைய பாடல் இலக்கியத்துக்கு எவ்வளவு கருவூலமாக இருக்குமென்பதை நாம் மறுத்தல் முடியாது. அன்றிலைப் பார்த்துச் சொல்கிருள்: " முன்றில்வாய் மடற் பெண்ணைக் குரம்பை வாழ் முயங்கு சிறை அன்றில்காள் பிரிவுறுநோயறியாதீர் மிகவல்லீர் " என்று அந்தப் பறவையைப் பார்த்து விளிக்கின்ருள், எவ்வளவு இலக்கிய நயம் அதிலே சொட்டுகிறது. பாருங்கள். அன்றில்காள் என்று விளித்ததனுடைய நோக்கம் என்ன? அன்றில் என்பது ஒரு பறவை இனம். அந்த அன்றில் எப்பொழுதுமே இணைபிரியாமல் இருக்க வல்லது.

ஆகையினுலே அன்றில்காள் என்று அழைத்தாள். அழைத்த போது என்னுடைய துன்பத்தைச் சென்று இறைவனிடத்திலே சொல்லுங்கள் என்று அந்த அளவிலே நிற்கவில்லை அவள். பிரிவு நோய் அறிவீர் உணர்வீர் என்று சொன்னுள். எவ்வளவு சிந்திக்கிருர் பாருங்கள். எவ்வளவு இலக்கண இலக்கிய நுட்பங்களை ஆராய்ந்திருக்கிருர் பாருங்கள்.

இந்தத் தலைவி தலைவன் விட்டுப்பிரிந்து சென்ற பிரிவுத் துன்பத்தினுலே வாடுகிருள். இவளுக்குத் தெரியும். பிரிவுத் துன்பம். அன்றிலுக்குத் தெரியாது அந்தப் பிரிவுத்துன்பம். ஆகவே நீங்கள் அறியீர். அதைவிட மிகவல்லீர். அதனுல் என்ன செய்யவேண்டும் நீங்கள். " தென்றலார் புகுந்து உலவும் திருத்தோணிபுரத்துறையும் கொன்றைவார் சடையார்க்கு என் கூர்பயலைக் கூறீரே." மிக்க பயலை — பசலை — தேமல். தேமல் என்ருல் காதல் தேமல். இதெல்லாம் படரும். உடம்பெல்லாம் காணப்படுகிறது. காரணம் என்ன? தலைவர் என்னைக் கூடி இன்புற்று என்னை விட்டுப் பிரிந்து இருக்கிருர். அவர் வாராத காரணத்தினுல் இந்தப் பசலையினுல் வாடுகிறேன், இந்த முழுப்

பாட்டிலே அந்த இறைவனுக்கு அடையாளம் சொல்கிருர் தூதனுப்பப்படுவனுக்கு திருத்தோணிபுரமாகிய சீர்காழியிலே இருக்கிறவன் என்ற இடத்தையும் அடையாளத்தையும் கூறினுள் என்பது அங்கே அந்த தெய்வப் பகுதிக்கு உரிய ஒரு கருத்திலே பார்த்தால் புலப்படும்.

இந்த இலக்கிய பொக்கிஷமாக—கருவூலமாக விளங்குகின்ற ஞானசம்பந்தருடைய பாடல்களிலே பொருள் கொள்ள வகை சில உண்டு அவையும் தொல்காப்பியத்திலே காணப்பட்டவை. தொல் காப்பியத்திலே நான்குவகைப்பொருள்கோள்கள் இருக்கின்றன. அவை அடிமறி மாற்றுப் பொருள்கோள், நிரல்நிறைப் பொருள் கோள், மொழிமாற்றுப் பொருள்கோள், சுண்ணப் பொருள்கோள் என்று நான்குவகைப்படும்.

அந்தப் பொருள்கோள் வகையை நம்முடைய ஞானசம்பந்த ருடைய பாடல்களிலே பார்க்கிரேம். மொழி மாற்றுப் பொருள் கோளின் இலக்கணமாவது: "சொல் நிலே மாற்றிப் பொருள் எதிர் 'இயைய' முன்னும் பின்னும் கொள்வது கொளல்" என்பது. அந்த நூற்பாவை வைத்துக்கொண்டு நம் கூறப்போகின்ற திருஞானசம்பந்தருடைய மொழி மாற்றுத் தேவாரத்தை பார்க்கிறபொழுது இந்தப் பிள்ளேயார் 16 ஆண்டு தான் உலகத்திலே வாழ்ந்த பிள்ளேயார் இவ்வளவு நுட்பமான செய்திகளெல்லாம் எப்படி அறிந்தார்கள் என்பது வியப்புக்குரியது.

"உரித்தது பாம்பையுடல் மிசையிட்ட தோரொண் களிற்றை
எரித்ததொராமையை யின்புறப்பூண்டது முப்புரத்தைச்
செருத்தது சூலத்தையேந்திற்றுத் தக்கனே வேள்வி பன்னூல்
வரித்தவர் வாழ்தருவெங்குருவில் வீற்றிருந்தனரே"

இந்தப் பாட்டை எப்படிப் பாடுவது என்று கேட்டால் "பாம்பை உடல்மிசை இட்டது" என்பது ஒலி. கருத்து இந்த மொழி ஒலியை மாற்றுகிறது. "முன்னும் பின்னும் கொள்வது கொளல்" இது சூத்திரம். சொல்லும் அந்த மாந்தர் நிலே இருக்கிறதே அதை மாற்றிப் பொருள் எதிர் இயைய அந்த எதிர்ப்பொருளே எல்லாம் பொருந்தும்படி பாம்பு உடல் இடை இட்டது என்பது முதலடியின் கடைசியில் இருக்கிறது. பிறகு எரித்து முப்புரத்தை என்பது வரவேண்டும். இதற்கு இடையிலே அமையும் "செருத்தது சூலத்தை" என்பது. செருத்தது தக்கனே வேள்வி என்று மொழிமாற்றிப் பொருள்கொள்ள வேண்டும், இவைபோன்ற நயங்கள் பல ஞானசம்பந்தர் பாடலில் மிளிர்கின்றன.

சம்பந்தர் தமிழில் சாத்திர நோக்கு

★

(திருவாவடுதுறை ஆதீனவித்துவான்,
சித்தாந்தக் கலைச்செல்வர்)

திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T.,

★

சாத்திரம் என்பது சமய அனுபவங்களின் அடிப்படைக் கருத்தொழுங்கை கூறும் நூல். அஃது இலக்கியத்திற்கு இலக்கணம் போல்வது. சமய நெறியில் முதன்மையான இலக்கியமாகப் போற்றப்படுபவை முதல்வனைத் தலைப்பட்டுணர்ந்த பெருமக்களுடைய வாய்மொழிகளே ஆகும். அவையே மறைகள் எனவும், மந்திரங்கள் எனவும் போற்றப்படுவன. செய்யுள்களில் தலைசிறந்தவை மெய்யுணர்வு பெற்ற பெருமக்கள் பாடியனவே ஆகும். அவர்கள் கடவுள் அனுபவமாகிய இன்ப வெள்ளத்தில் மூழ்கிப் பேரின்ப அனுபவம் பெறும்போது அவ்வனுபவப் பயனாக வெளிவருவனவே அச்செய்யுள்கள். அவை நூல்களுக்குள் தலைசிறந்தனவாய் விளங்கி, தம்மை உணர்ந்து பயில்வோர்க்கு, உயர்வற உயர் நலம் பயப்பனவாய் அமைதலின், திருமுறைகள் எனப் போற்றப்பெறும். முறை — நூல். திருமுறை — திருவைப் பயக்கும் உயர் நூல்.

பின்னே வருகின்ற சிவானுபூதிச் செல்வர்கள் அத்திருமுறைகளில் இலைமறை கனிகள் போலுள்ள உயர்ந்த கருத்தொழுங்குகளைக் கண்டுணர்ந்து, பொதுமக்கள் நன்னெறியை உணர்ந்து உய்தற்பொருட்டு ஒழுங்குபடுத்தி நூல்களாகவும் தோத்திரங்களாகவும் இயற்றுவர்; இயற்றி அவற்றைத் தம் மாணக்கர்க்கு உணர்த்தி வருவர். இங்ஙனம் சிவானுபூதிச் செல்வர்கள், ஆசிரியர் மாணவர் என்னும் வழிமுறையில் இடையறவுபடாது உணர்த்தி வருவனவே சாத்திரங்கள் எனப்பெறும். அவற்றுள் உயர்ந்த சமய அனுபவங்களையும் கருத்தொழுங்குகளையும் ஐயத்திற்கு இடமின்றித் தெளிவுபடுத்தி உணர்த்துவனவே மெய்கண்ட நூல்கள் ஆகும்.

இவை, சைவ சித்தாந்த சாத்திரங்சள் என வழங்கப்பெறும்; இவை பதினுன்கு என்னும் எண்ணிச்சையினை உடையவை.

அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கந்தரும் விண்மீன்களை மேடம், இடபம் முதலாகப் பன்னிரண்டு தொகுப்பில் வைத்து உணர்வது வான நூலின் இயல்பு. அதுபோல, தமிழ் மொழியில் எழுந்துள்ள தலைசிறந்த உயர் மறைகளை நம் முன்னோர்கள் பன்னிரண்டு திருமுறைகள் என வகுத்தருளினர். பன்னிரண்டு வான வீடுகளில் குறிக்கப்பெறும் விண்மீன்கள் இருபத்தேழு; அவையாவும் தன்னொளியுடையவை. அதுபோல, திருமுறைகளைத் தம் அகக்கண்களால் கண்டு வெளிப்படுத்திய சுதந்திர ஞானம் பெற்ற திருமுறை ஆசிரியர்களும் இருபத்தெழுவர் ஆவர். அவர்களுள் முதலாமவராக குறிக்கப்பெறும் அருளாசிரியர் திருஞானசம்பந்தர். அவர்தம் வாய்மொழியில் சாத்திரக் கருத்துக்கள் பல ஐயத்திற்கு இடமின்றி எழுந்துள்ளன. அவற்றுள் சிலவற்றைச் சிந்தித்து உணர்வும் இன்பமும் பெறுவோமாக.

பின்வரும் திருப்பாட்டு, அவர் திருமுது குன்றத்தில் அருளிச் செய்த, நட்டப்பாடைப் பண் அமைந்த, திருப்பதிகத்தில் மூன்றுவதாக வருவது.

விளையாததோர் பரிசில் வரு
 பசுபாசவே தனை ஒண்
தளை யாயின தவிரவ்வருள்
 தலை வன்னது சார்பாம்
களையார் தரு கதிராயிரம்
 உடை யவ்வவ னேடு
முளைமாமதி தவமும் உயர்
 முது குன்றடை வோமே

என்பது பாட்டு.

எல்லா உலகங்களுக்கும் உயிர்களுக்கும் தலைவனுகிய சிவபிரான், இவ்வுலகத்து அணுக்கமாக விளங்கிநின்று அருள் புரிவதற்கு இடமாக உள்ள திருமுதுகுன்றம் என்னும் திருத் தலத்தை அடைந்து அவனை வழிபடுவோம் என்பது இதன் முதன்மையான கருத்து. இதில் தலைவனுக்குக் கூறும் அடைமொழியும், முதுகுன்றத்துக்குக் கூறும் அடைமொழியும் உண்மையின் இணைப்பு நிலையை, சித்தாந்த சைவத்தின் அடிப்படை உண்மைகளை நன்கு இனிது விளக்குபவை.

இறைவனைத் தலைவன் எனக் குறித்த ஆசிரியர் உயிர்களைப் பசு என்னும் சொல்லால் குறிக்கின்றார். பசு என்னும் சொல் கட்டுற்றது என்னும் பொருளைத் தரும்; தருதலின். உயிர்கள் தய்வயம் இல்லாதனவாய், தடுக்கப்பட்ட அறிவு செயல்களை உடையவை என்பதும், அங்ஙனம் அவற்றைத் தடுக்கும் பொருள்கள் உள்ளன என்பதும் குறிப்பிக்கப்பட்டன. உயிர்களுக்குத் தடையாய் உள்ள பொருள்களைப் பாசம், வேதனை, ஒண்தனை என்னும் பெயர்களாற் குறிக்கின்றார் சம்பந்தர். பசுக்கள் இவற்றைத் தவிர்ந்து உய்யும்படி அருள்பவன் தலைவன் என்பார், "பசுபாச வேதனை ஒண்தனை ஆயின தவிர அருள் தலைவன்" எனக் கூறியருளினர்.

பாசம் என்னும் சொல், கட்டுவது என்னும் பொருளைத் தரும். அஃது உயிர்களின் அறிவு செயல்களை மறைத்துத் தடை செய்யும் ஆணவத்தைக் குறிக்கும் நெல்லிற்கு உமியும் செம்பிற்குக் களிம்பும் போல, உயிர்க்கு உள்ள இயற்கைக் குற்றமாகிய பகைப் பொருளே ஆணவம் என்பது. அஃது இருள் — மலம் — மாசு — சகசமலம் முதலிய பெயர்களால் குறிக்கப்படும்; இங்குப் பாசம் எனப்பட்டது.

வேதனை என்பது உயிர்களுக்கு உண்டாகும் நுகர்ச்சிகளாகிய இன்பத்துன்ப மயக்கங்களைக் குறிக்கும். அஃது இங்கு ஆகு பெயராய் நின்று, இன்பத் துன்ப மயக்கங்களுக்குக் காரணமாகிய இருவினைகளைக் குறிக்கின்றது. இருவினைகளைக் கன்மம் எனவும் வழங்கும் நூல்கள். இன்பத்துன்ப நுகர்ச்சியைத் தன்வேதனை என்பர் அளவை நூலோர்.

இனி, ஒண்தனை என்றது உயிர்களுக்கு அறிவு செயல்களை விளக்குவவாயும், தடை செய்வவாயும் உள்ள உலகப்பொருள் களையும், அவற்றின் முதற் காரணமாகிய மாயையினையும் குறித்து நிற்கின்றது. நாம் வாழும் உலகத்தை உடம்பு எனவும் அதன் சூழ்நிலை எனவும் இண்டாக வகைப்படுத்தி உணரலாம்; மேலும் கூர்ந்து நோக்கி, உடம்பும், அதன்கண் உள்ள மெய் வாய் கை கால் முதலிய புறக் கருவிகள், மனம் முதலிய அகக் கருவிகள் ஆகிய கரணங்களும், உடம்பு நிலவுதற்கு இடமாக உள்ள உலகும், உடம்பிற்கு ஊட்டமும் தேய்வுமாகியவற்றைக் கொடுக்கும் நுகர்ச்சிப் பொருள்களும் என நான்காகவும் பகுத்து அறியலாம். இவற்றை முறையே தனு, கரணம், புவனம், போகம் என மெய்ந்நூல்கள் குறிக்கின்றன. இவை நமக்குப் புலப்படும் உருவுடையவை; இவற்றின் முதற் காரணமாய்ப்

புலப்படாத அருநிலையில், யாண்டும் நிறைந்து உள்ளதாய் இருக்கும் அறிவில் ஆற்றலை (சடசக்தியை) மாயை என்பர். அதன் காரியமாய்ப் புலப்படும் உருவுடைப் பொருள்களை மாயேயம் என்பர் நூலோர். உடம்பு, கருவி, உலகு, நுகர்ச்சிப் பொருள்கள் என்பவை மாயேயம்; இவற்றின் முதற்காரணம் மாயை.

நமக்கு உடம்பு இன்றி, உலகத்துப் பொருள்களின் தொடர்பு இன்றி, அறிவு விளங்காது என்பது கண்கூடு. நமக்கு மாறி மாறி வந்து கொண்டிருக்கும் நனவு கனவு உறக்கம் என்னும் உணர்வு நிலைகளை, தன்நோக்கு உணர்வால் சிறிது உணர்ந்து பார்த்தால், உடம்போடும், மனத்தோடும், நம் அறிவிற்குத் தொடர்பு உள்ள வரையில், அறிவு விளக்கம் உள்ளது; அத்தொடர்பு நீங்க, நீங்க, அறியாமையாகிய உணர்வு —இழப்பு உண்டாகின்றது — என்பதை எளிதின் உணர்வோம். இவ்வுண்மையை, கலை ஞானத்தைப் பன்னிரு சூத்திரங்களில் அடக்கிக் கூறித் தமிழகத்தைத் தெளிவித்த மெய்கண்டமுதல்வர் "மாயா தனு விளக்கா மற்றுள்ளம் காணுதேல் — ஆயாதாம் ஒன்றை" என விளக்கி அருளினர். "மாயையின் காரியமாகிய உடம்பு, கண்களுக்கு விளக்கு உதவியாதல் போல, துணையாக நிற்க, அதனைக் கொண்டு அறிந்தால் அன்றி, உயிர் ஒன்றையும் அறியாது — என்பது அவர் வாய்மொழியின் பொருள். இதற்கு மூல மறையாக உள்ள தொடரே திருஞானசம்பந்தர் திருவாக்கில் எழுந்த "ஒண்தளை" என்பது. ஒண்தளை — ஒட்பத்தைத் தரும் தளை, அறிவை விளக்கும் பிணிப்பு, அஃதாவது மாயை.

இனி, பசுவும், பாசவேதனை ஒண்தளை ஆயினவும், பசு இவற்றைத் தவிர்த்து இன்புறும்படி அருளும் தலைவனும் என்றும் உள்ள தோற்றமில் பொருள்கள் (அநாதிநித்திய பதார்த்தங்கள்). இவ்வுண்மையை, உணர்த்துதற் பொருட்டு, "விளையாததோர் பரிசில் வரு" என்னும் பெயரெச்சத் தொடரை முதற்கண் அமைத்தனர் ஆசிரியர்; அஃது அம் மூன்றனோடும் தனித்தனிக் கூட்டி உரைக்கப்படும். ஒரு காலத்தில் தோன்றியது எனப்படாத தன்மையில், தோற்றமில் காலமாக உடம்பொடு கூடிப் பிறந்தும் அதனைப் பிறிந்து மறைந்தும் வருவது பசு எனப்படும் உயிர்.

பாசம் என்பது அவ்வுயிர்களைத் தோற்றமில் காலமாகப் பிணித்து வருவது. இஃது ஆணவம் எனப்பெறும். உயிர்கள் ஆணவத்தில் அழுங்கி இருக்கும் தனிநிலை (கேவல அவத்தை), ஏனைய தளைகளோடும் கூடிநிற்கும் கூட்டுநிலை (சகல அவத்தை)

என இரு நிலைகளை உடையன. பாசம் எனப்பட்ட ஆணவம் தனிநிலையில் உயிர்களின் அறிவு இச்சைச் செயல்களை விளங்காதபடி மறைத்து நிற்கும்; அவ்வுயிர்கள் ஏனைய தளைகளோடு கூடித் தம் அறிவு விழைவு செயல்கள் ஓரளவு விளக்கம் பெற்று நிற்கும் கூட்டுநிலையில் அப்பாசம் அவற்றின் ஆற்றல்களை, தம்மையும் தலைவனையும் நோக்காதபடி, புறப்பொருள்களில் வீழ்த்திநிற்கும். ஆணவத்தின் மறைக்கும் ஆற்றலை ஆவாரக சத்தி எனவும், வீழ்க்கும் ஆற்றலை அதோநியாமிகா சத்தி எனவும் மெய்ந்நூல்கள் குறிக்கும். வேதனை எனப்பட்ட இருவினை தோற்றமில் காலமாக உயிர்களுக்கு இன்பத் துன்ப மயக்க துகர்ச்சியைக் கொடுத்து வரும். ஒண்தளை எனப்பட்ட மாயையும் அதன் ஆக்கப்பொருள்களும் உயிர்களுக்கு இன்பத் துன்ப மயக்க நுகர்ச்சிக்கு வேண்டிய அளவு அவற்றின் அறிவு விழைவு செயல்களை விளக்குவதோடு, அவற்றைத் தம் எல்லையிலேயே அடக்கி வைப்பதாகிய மயக்கத்தையும் செய்து தளைந்துநிற்கும். இனி, தலைவன் எனப்பட்ட முதல்வன் இவற்றை இங்ஙனம் தொழிற்படுமாறு செய்து உயிர்களின் ஆற்றல்களை நுணுகி வளரும்படி செய்வான். இச்செயல் மறைத்தல், திரோபவம், பந்தமுறப் பிணித்தல் எனப் பலவகையாக நூல்களுள் குறிக்கப்பெறும். இம்மறைத்தல் தொழிலில் ஆக்கல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று தொழிலும் அடங்கும். இச்செயலின் அடையாளமாகவே இறைவன் திருக்கையில் மூவிலைவேல் உள்ளது.

"மூன்று மூர்த்தியுள் நின்றியலுந் தொழில் மூன்றுமாயின மூவிலைச் சூலத்தன்", என்பது அப்பர் அருள்மொழி. உயிர்கள், இறைவன் நியமிக்கும் இவ்வொழுங்கு கட்டுப்பாட்டினுல், தம்முணர்வு நுணுகி மலர்ந்துவிரியப்பெறும். அப்பக்குவ நிலையில் முதல்வன் அவற்றிற்குத் தன்னேடு உள்ள தொடர்பை விளக்கி ஆட்கொள்வன். அந்நிலையில் அவ்வுயிர்கள் மூவகைத் தளைகளினின்றும் முற்றிலும் நீங்கி, வியாபாக உணர்வுபெற்று முதல்வனைத் தலைப்பட்டு உணரும்; உணர்ந்து அவனது பேரின்ப அருள் ஒளியில் திளைத்து இன்புறும். இவ்வின்புறு நிலையே, **பாசவேதனை ஒண்தளை ஆயின தவிர அருள் தலைவன்** என்னும் தொடரில், அருளுதல் என்பதனுல் குறிக்கப்பெற்றது.

முதல்வனைத் தலைவன் என்றமையால் பசுக்கள் அவனுக்கு அடிமை என்பதும், ஒண்தளை எனப்பட்ட மாயை அவனது உடைமை என்பதும் பெறப்படும்,

மேலே எடுத்துக்கொண்ட பாட்டின் முதல் இரண்டு அடிகளில் மேற்காட்டியவாறு சைவ சித்தாந்த நுண்பொருள் அனைத்தும் கோவைப்பட்டுச் செறிந்து நிற்றல் தலையாய அறிவினர் எவர்க்கும் இன்பமும் வியப்பும் தருதற்குரியது.

இனி, பின்னிரண்டு அடிகளைச் சிறிது உற்றுநோக்குவோம். அவை திருமுதுகுன்றத்தின் இயற்கை வனப்பை எடுத்து நவில்கின்றன. சைவ சித்தாந்தத்தில் உலகை, கயிற்றில் அரவுபோல வெறும் தோற்றமாகிய இல்பொருள் எனக்கொள்வதில்லை; அது காரண காரிய நியதிக்கு உட்பட்டு மாற்றம் எய்திவரும் உள் பொருள் என்பதே சித்தாந்தம். இவ்வுண்மை விளங்குதற் பொருட்டு, சம்பந்தர் செய்யுள்களில் இரண்டடிகளில் முதல்வன் இயல்பும் ஏனை இரண்டு அடிகளில் அவன் படைப்பாகிய உலகின் இயற்கை வனப்பும் குறிக்கப்பெறும். திருமுதுகுன்றத்தில், அளவில் பேரொளியை உடைய கதிரவனும் தவழ்கின்றான்; அக்கதிரவனால் ஒளிபெற்றுக் கலைவளரப்பெறும் முழுமா மதியும் தவழ்கின்றது.

இங்ஙனம் கூறினமையின், உலகம் காரண காரிய நியதிக்கு உட்பட்டு மாறிவரும் உள்பொருளே என்பது குறிக்கப்பெற்றது. மேலும் சைதன்னியம் எனப்படும் அறிவுடைப் பொருள்கள் இருவகைப்படுவன என்பதையும் இவ்வடிகள் குறிக்கின்றன. இயற்கை முற்றுணர்வுடைய முதல்வனது இருப்பைக் கதிரவன் என்றது குறிப்பால் உணர்த்துகின்றது; அம்முதல்வனால் விளக்கம்பெற்று முறையாக வளரும் செயற்கைச் சிற்றறிவுடைய உயிர்களின் இருப்பு முழுமாமதி என்பதனால் குறிப்பிக்கப் பெறுகின்றது. முதல்வன் தானே தனித்துநின்று அறிந்து அறிவிப்பவன்; உயிர்கள் அறிவிக்க அறிவனவாய், சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறிவன. இவ்வுண்மைகள் எடுத்துக் கொண்ட பாட்டில் தெளிவு பிறக்கும்படி கூறப்படுதல் ஓர்ந்து உணரத்தக்கது. இன்னும் பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அணைவதே வீடுபேறு என்னும் உண்மையும் குறிப்பிக்கப்பட்டது; தலைவன் எனப்பட்ட முதல்வன் உயிர்களுக்கு அருள்பவன் என்பதும், உயிர்கள் என்றும் முதல்வன் அருளைப் பெற்று வாழ்தற்கு உரியன என்பதும் உணர்த்தப்படுதல் காண்க.

இன்னும் ஒரு சிறந்த செய்யுளில் திருஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ள பரம சித்தாந்தமாகிய உண்மை முடிபைக் காண்போம். வேத முடிவிலும் ஆகம முடிவிலும் பயிலும் அறிஞர்களுக்கு உண்டாகும் கருத்து வேறுபாடு ஒன்று உண்டு.

அது முதல்வனும் உயிரும் வேறோ ஒன்றோ என்னும் வினவைப் பற்றியது. சிலர் முதல்வனே உயிர் என்பர்; வேறு சிலர் முதல்வனும் உயிரும் வேறு வேறே என்பர்; மற்றும் சிலர் முதல்வனும் உயிரும் குணியும் குணமும் போல ஒன்றே வேறே என்னும் இரண்டிற்கும் பொது என்பர். இந் நிலையில் சித்தாந்த சைவர்கள் முதல்வனும் உயிர்களும் வேறு வேறு பொருள்களே; ஆயினும் முதல்வன் உயிர்களில் கலந்து, தான் என வேறு காணப்படாது ஒன்றேயாய் நிற்றலும் உரியன்; மேலும், உயிர்களுக்கு அறிவை விளக்கி அவற்றைச் செலுத்துதலால் உடனாதலும் உரியன் என்பர். உயிர்களுக்கும் முதல்வனுக்கும் உள்ள பிரிவில்லாத இச்சம்பந்தத்தை மெய்கண்டதேவர் "அவையே தானே ஆய்" என இரண்டாம் சூத்திரத்துள் குறித்தருளினார். அத்தொடரின் பொருளை, "இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாய் நிற்கும்" என விளக்கமும் உரைத்தருளினர். அருள் நந்திசிவம் சிவஞானபோதத்தின் வழிநூலாகச் செய்தருளிய சிவஞானசித்தியாரில், "உலகெலாமாகி வேறாய், உடனுமாய், ஒளியாய் ஓங்கி" என அச்சம்பந்தத்தை விளக்கிஅருளுகின்றார். மேலும், இங்கு ஒன்றாய் வேறாய் உடனுமாய் இறைவன் உயிர்களில் நிற்கின்றான் என்பது வேதங்களில் அத்வைதம் எனவும் அத்வீதியம் எனவும் வந்துள்ள சொல்லின் பொருளே என்பதையும் மெய்கண்ட தேவர் நிரூபித்து அருளினர். இவை எல்லாவற்றிருக்கும் மூல மறையாக எழுந்த ஞானமொழி பின்வருவது.

ஈறாய் முதலொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய் வருபூதம்மவை ஐந்தாய்
ஆறார் சுவையே ழோசை யொடெட்டுத்திசைதானாய்
வேறாயுடனானானிடம் வீழும் மிழலையே.

இது திருஞான சம்பந்தர் வாய்மொழியாகும். திருவுந்தியாரில் இங்குக் கூறிவரும் பொருண்மை பற்றிய பரம சித்தாந்தத்தைப் பின்வரும் தாழிசை தெரிவிக்கின்றது:—

அது இது என்ன அனைத்து அறிவாகும்
அது இது என்றறிந்து உந்தீ பற!
அவிழ்ந்த சடையா ரென்றுந்தீ பற!!

எனவரும்.

"அவிழ்ந்த சடையார் அறிவு, அது இது என்று அறிந்து, அது இது என்ன(த) அனைத்து ஆகும்" என்பது பாட்டின் உரை

நடை. இங்கு அது என்றது பரம்பொருள்; இது என்றது சீவான்மா எனப்படும் உயிர்.

கல்லால் நிழலின்கண் மோன முத்திரை அத்தனுய் இருந்து உணர்த்தும் சிவபிரானது ஞானமாவது பரமான்மாவையும் சீவான்மாவையும் ஒன்றன் இலக்கணம் மற்ருென்றன் இலக்கணத்தோடு மயங்காதபடி பிரித்து உணர்ந்து, பரமான்மாவைத் தலைப்பட்டுணரும் இன்புறு நிலையில் உணரப்படுவது உணர்வது உணர்வு என்னும் பகுப்புணர்வு தோன்ருதபடி ஒன்றி அடங்கி நிற்றலே ஆகும் — என்பது இப்பாட்டின் பொருள். இப்பாட்டின் பொருளை மகா வாக்கியப் பொருளோடு இணைத்து உணர்த்தும் திருக்களிற்றுப் படியார் என்னும் வழிநூல் மேற்காட்டிய சம்பந்தர் வாய்மொழியினையே எடுத்துக்காட்டி முடிபு கூறுகின்றது: அம் முடிந்த முடிபு வருமாறு:—

ஈருகி யங்கே முதலொன்ரு யீங்கிரண்டாய்
மாருத வெண்வகையாய் மற்றிவற்றின் — வேருய்
உடனு யிருக்கும் உருவுடைமை யென்றுங்
கடனு யிருக்கின்ருன் காண். — எனவரும்.

இங்ஙனம் மேலான பொருள்கள் பற்றிய உண்மை முடிபுகள் சம்பந்தர் திருவாக்கில் ஐயத்திற் கிடன்இன்றித் தெளிவுபட வருவன பல உள. அவற்றை ஓர்ந்து உறுதியை உணர்ந்து ஒழுகுதல் தலையாய அறிவினர் கடன்.

மிக உயர்ந்த நிலையில் இத்திருமுறைக் கருத்தரங்கை ஏற்பாடு செய்து இதில் கலந்துகொள்ளும் அனைவர்க்கும் செவிச் செல்வத்தையும் அவிச்சுவையினையும் தமது பரந்துவிரிந்த பெருங் கருணையோடு அளித்தருளும் திருவாவடுதுறை ஆதீனம் இருபத்திரண்டாவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் திருவடிகளைப்போற்றி வாழ்த்தி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திருச்சிற்றம்பலம்

திருமுறை கருத்தரங்கம்

[12—2—71]

✶

தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

தொண்டைமண்டல ஆதீனத் தலைவர், காஞ்சிபுரம்.

✶

பார்வையாளர் — தொடக்கவுரை

அன்பர்களே, நாம் இப்போது திருவருளகத்தில் இருக்கும் பேறு உடையவர்களாக இருக்கிறோம். திருவருள் என்றால் என்றும் இடைவிடாமல் நிறைந்திருக்கின்ற மெய்யுணர்வு என்பதாகும். அஃது இல்லாத இடம் இல்லை, இல்லாத காலம் இல்லை, இல்லாத பொருள் இல்லை என்று கால பரிச்சேதம், தேச பரிச்சேதம், வஸ்து பரிச்சேதம் என்ற மூன்றும் அகன்று இருக்கிற நிலைமைக்குத்தான் திருவருள் என்று பெயர். காலத்தாலும், இடத்தாலும், பொருளாலும் வேறுபடாமலும், மாறுபடாமலும் விளங்குகிற பொருள் எதுவோ அதைத்தான் திருவருள் என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது. அந்தத் திருவருளும் எந்தப் பொருளை சைவசித்தாந்தம் தலைமையாகக் கொண்டிருக்கிறதோ அதற்கு வடிவம் ஆகும். அந்த வடிவமும் விட்டு நீங்கும் வடிவம், எப்பொழுதும் கொண்டு இடைவிடாமல் இருக்கும் வடிவம் என்று இரண்டு வகைப்படும். அதற்கு வடமொழியில் தடஸ்தம், ஸ்வரூபம் என்று சொல்வார்கள். சொரூபம் என்று சொல்வதுதான் சைவ சித்தாந்தத்திலே சொல்லப்படுகிற பரம்பொருளுக்குரியது அந்த ஸ்வரூபம் ஆன்மாவால் உணரப்பட்டால் அந்தக் காலம் முதலாக ஆத்மாவுக்கு பிறப்பு, இறப்பு இல்லை என்று நிச்சயப்படுத்திப் பெரியவர்கள் எழுதியிருக்கிறார்கள். அதை அநுபவத்திலும் காணலாம். ஆற்றல் சிறிது பெற்றாலும் அறியலாம். அந்தத் திருவருளைப் பெற்றவர்கள் பெருதவர்களுக்கு உணர்த்தும் பெருங் கருணையினாலே அமைந்த கருவிகள் பல இருக்கின்றன; இன்றும் உள்ளன; என்றும் இருக்கும். அவற்றுள் சிறந்த கருவிகளாக

மொழியை வடிவமாகக் கொண்டு மொழியின் இலக்கணத்திற்கு உட்பட்ட இலக்கியங்களாக விளங்குகின்றன திருமுறைகள். அவற்றைப்பற்றிய கருத்தரங்கம் காலை முதலாக இங்கு நடைபெறுகிறது. இந்தக் கருத்தரங்கம் மிக இன்றியமையாதது. கருத்தரங்கம் என்ற தொடருக்குப் பலபொருள் கூறலாம். எனினும் இரண்டு பொருளை நிச்சயமாகச் சொல்லலாம். தரங்கம் என்றால் அலை என்று பொருள். அதுவும் இந்த மாவட்டத்தில் இருப்பவர்கள் தரங்கம்பாடியைநினைத்துக்கொண்டால் விரைவில் உணர்வார்கள். கரு என்றால் பிறப்பு.

"பிறவி அலையாற்றில் உழலாதே"

என்பர் அருணகிரியார். பிறவி அலை = கருத்தரங்கம். அதனைத் தொலைக்கவேண்டுமென்றால் இஃது இன்றியமையாதது. அதற்காகத்தான் நம்முடைய மெய்கண்டார் ஆதீனத்து குரு முதல்வர் நமசிவாய மூர்த்திகள் இந்தக் கருத்தரங்கை ஏவி நடாத்துவித்து அருளுகிறார்கள்.

அன்பர்களே, திருமுறைகளிலே நம்முடைய சிந்தை எவ்வளவு தூரம் செல்லுமோ அவ்வளவுக்குப் பயன் உண்டு. எவ்வாறு சிந்தையைச் செலுத்தி உள்ளிருக்கும் நன்மையை தேடிக் கொள்ளவேண்டுமோ அவ்வாறு செய்தால் அது தவறாது பயன் தரும். எல்லோரும்

"வந்தவணம் ஏத்துமவர் வானம் அடைவாரே"

என்று ஞானசம்பந்தர் ஏத்தியபடி எப்படியும் பயன்படலாம். காலையில் திருஞானசம்பந்தருடைய திருமுறைகளிலே நம்முடைய சிந்தை சென்றது: சிறிதேனும் பயன் அடைந்திருக்கும். சொல்பவர்களுக்குப் பெரும் பயன். கேட்பவர்களுக்கு அதைக்காட்டிலும் பெரும் பயன் உண்டென்று நாம் அறிவோம்.

திருஞானசம்பந்தருடைய திருமுறைகளிலே மூல இலக்கியங்களாக இவை உள்ளன என்று சேக்கிழார் பெருமானால் உணர்த்தப்பட்டன. அவ்வாறே திருநாவுக்கரசருடைய திருமுறைகளிலும் மூல இலக்கியங்கள் உள்ளன. ஆனால் சேக்கிழார் சுவாமிகள் சொல்லவில்லை. வேறு எந்தத் திருமுறைகளிலேயும் இல்லாத திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் ஆகியவை நான்கும் திருநாவுக்கரசருடைய திருமுறைகளில் இருக்கின்றன. இவை எல்லாம் இவற்றுக்கு முன்னே இருந்து அவற்றைப் போல அருளியவை அல்ல. மூல இலக்கியங்கள்,

4

வேற்றுத் திருமுறைகளிலே காணக்கிடையாதன. இவற்றுக்கு முந்தியும் வேறு ஒருவராலும் பாடப்பெறுதவை. அப்படி இருந் தால் மூலம் அல்லவா? அவற்றைச் சிந்தித்து வந்து இங்கே விரிவுரையாற்ற அன்பர்கள் பலர் வந்திருக்கிறுர்கள். இங்கே பார்வையாளர் என்ற தலைப்பில்தான் எங்களை இருத்தியிருக் கிறுர்கள்.

இன்று இலக்கியம், சாத்திரம் என்ற இரண்டு நோக்கால் நோக்கப்படும் திருமுறைகள். நோக்கு என்பது சொல் நோக்கு, தொடை நோக்கு, பொருள் நோக்கு என்று பல வகைப்படும். இதைப்பற்றி நமக்கு முன்னே இருந்த ஆசிரியர்கள் எழுதியிருக் கிறுர்கள். தொல்காப்பியர் செய்யுள் உறுப்புக்களாக உள்ளவற் றுள் நோக்கு என்ற உறுப்பும் ஒன்று என்று குறித்திருக்கிறுர். அதற்கு இலக்கியமாவன நக்கீரதேவ நாயனுர் பாடல்கள். அவர் அருளிய பாக்களைக் கொண்டு நோக்கு இன்னது என்று தெரி வித்து அதற்கு அவர் பாக்களே உரியன என்றும் வரையறை செய்திருக்கிறுர்கள்.

"வாக்குக்கு அருணகிரி, வாதவூ ரார்கனிவில்
தாக்கில் திருஞான சம்பந்தர், — நோக்குக்கு
நக்கீரதேவர், நயத்திற்குச் சுந்தரர்தாம்
சொற்குறுதிக்கு அப்பர்எனச் சொல்"

என்கிற தனிப்பாட்டு அதனை விளக்குகிறது.

அன்பர்களே, இப்படி நோக்குக் கொண்டு நம்முடைய நோக் கத்தை இங்கே சொற்பொழிவாற்ற இருக்கிறவர்கள் எடுத்துப் பயன்படுத்தி, நமக்கும் பெரும் பயன் விளைவிப்பார்கள் என்று நம்புகிறேம். அவர்களும் அவ்வாறு செய்வார்கள்.

★

தவத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

தொண்டைமண்டல ஆதீனத் தலைவர், காஞ்சிபுரம்.

★

பார்வையாளர் – முடிவுரை*

பார்வையாளர் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் முடிவில் தம் கருத்துரையை வழங்கினர்கள். அப்போது அவர் குறிப்பிட்டார் :

மெய்யன்பர்களே, திருநாவுக்கரசர் இலக்கிய நோக்கும், சாத்திர நோக்கும் என்பது பற்றி திரு. கு. நடேச கவுண்டர் பேசினர்கள். பின்னர் திருநாவுக்கரசர் இலக்கிய நோக்கு என்பது பற்றி திருமதி சாரதா நம்பியாரூரன் பேசினர்கள். அப்பர் தேவாரத்துள் சித்தாந்தம் என்பதுபற்றி திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார் பேசினர்கள்.

பாண்டிய நாட்டில் அம்மையார் ஒருவர்தாம் சைவத்தை நிலைநிறுத்தினர்கள். மங்கையர்க்கரசியார் சைவ சமயத்தையே வளர்த்தார்கள். அதுபோல அம்மையார் பலர் தோன்றிச் சமயத்தை வளர்க்கவேண்டும். அது இப்போது மிக அத்தியாவசியமாக இருக்கிறது. தெய்வங்களை இழிவுபடுத்தும் செயலால் நம்பிக்கை உள்ளவர்களுக்கும் வெறுப்பைத் தூண்டும் செயல்கள் நடைபெறுகின்றன. திருமதி சாரதா நம்பியாரூரனைப் போன்ற அம்மையார்கள் மிகுதியாக வேண்டும். அவர்கள் மேடைகளில் பேசி, தாங்களும் பேசியவாறு நடந்து, கேட்பவர்களையும் நடத்த வேண்டிய கடமை உள்ளவர்களாக இருக்கிறர்கள்.

அடுத்ததாக அப்பர் தேவாரத்துள் சித்தாந்தம் என்பதுபற்றி திரு ரா. சண்முகசுந்தரம் செட்டியார் பேசினர்கள். மிக உயர்ந்த பேச்சு. பேசியவர்கள் கருத்துக்களை எல்லாம் முதலில் பேசியவர், அடுத்துப் பேசியவர், அதற்கடுத்துப் பேசியவர் என்ற முறைப்படித்தான் சொல்லவேண்டும் என்பது இல்லை. இராமன் கை வலிமையைத் தாடகையினிடத்தில் காட்டினன். கால் வண்மையை அகலிகையிடத்தில் காட்டினன் தோள் வன்மையை வில்லை எடுத்து நாணேற்றுவதிலே காட்டினன். முறையாகச் சொல்வது என்றுல் கை வன்மையைச் சொல்லி, கால் வண்மையைச் சொல்லி,

---

* இதனை அடுத்த மூன்று சொற்பொழிவுகளின் பின்நோக்குதல் தெளிவுதரும்.

தோள் வலிமையைச் சொல்ல வேண்டும். அங்கே "தோள் கண்டார் தோளே கண்டார்" என்பதாகச் சொல்கிறார் கம்பர்.

அப்படிச் செட்டியார் அவர்களுடைய பேச்சை முதலாவதாகக் கவனித்தோம் என்பதற்காக இதைச் சொல்கிறோம். அவர்கள் எடுக்கும்போதே,

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணுமை உணராதேன்

என்பதாகச் சேக்கிழார்பெருமானின் வாக்கையே எடுத்துக் கொண்டு சொன்னார். சேக்கிழார்பெருமான் பெருமைகளை யாராலும் அளவிட்டு உரைக்க முடியாது. அவர் பாடியபடி பெரிய புராணத்தை மற்றொருவர் பாடத்தொடங்கி அவருக்குப் புண்ணியம் வாய்த்திருந்தாலும் அவரைப்போல பாடியிருக்கும் பாக்கியம் வாய்த்திராது. உமாபதிசிவம் அவர்கள் சொல்லும் போது,

சேக்கிழார்க்கு எளிதல்லது தேவர்க்கும் அரிதே

என்று சொன்னார். அந்தச் சேக்கிழார் பெருமானே திருநாவுக் கரசரின் பெருமையை

ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணுமை உணராதேன்

என்றார். "ஒரு நாக்கினாலே திருநாவுக்கரசரின் பெருமையைச் சொல்ல முடியாது என்பதையும் நான் உணராமல் இருக்கிறேன்" என்று சொல்கிறார் சேக்கிழார் பெருமான். அப்படி இருக்கும் போது நாம் எப்படி சொல்லமுடியும்? எந்த நோக்கத்தை அறிய முடியும்? ஒரு நோக்கமுமே இல்லாமல் இருக்கிற நாம் எப்படி அந்த இரு நோக்கத்தை அறியமுடியும்? அதனாலேயே நம் செட்டியார் அவர்கள் ஓர் அரிய திருவிருத்தத்தை எடுத்துக் காட்டினார்கள்.

இருள்தரு துன்பப் படல மறைப்பமெய்ஞ் ஞானமென்னும்
பொருள்தரு கண்ணிழந்து உண்பொருள் நாடிப் புகலிழந்த
குருடரும் தம்மைப்பரவக் கொடுநர கக்குழிநின்று
அருள்தரு கைகொடுத் தேற்றும்ஐ யாறன் அடித்தலமே

என்பர் நாவுக்கரசர்.

நமக்கு நோக்கமே இல்லை என்பதற்குக் கண்ணிழந்து என்றார். நோக்கங்களே இல்லை. கண்ணே இல்லை. கண்ணிழந்த நிலையில் நோக்கம் எங்கே இருக்கிறது? உண்பொருள் நாடி, புகலிழந்த நிலையில் இருக்கிறோம். நம்மைத் தேற்றுவது எது? ஐயாறன் அடித்தலமே என்கிறார்.

அடித்தலம் என்பது இன்னது என்று முன்பே தெரிவித்தோம். இறைவனுடைய திருவடிகள்தம்மையே புகலாகக் கொள்ள வேண்டும். இந்தத் திருவிருத்தத்தில் உள்ள திருப்பதிகங்களும் திருவடிப்பெருமையையே கூறுவன. முதல் திருவிருத்தத்தில்

சிந்திப் பரியன

என்று பன்மையாகச் சொன்னார். இறைவன் கழலைச் சொல்லும்போது பன்மையாகச் சொல்லவேண்டும். சிந்திப்பரியன என்று சொல்லிவிட்டால் நமக்கு எப்படி கதி கிடைக்கும்? பிறந்த பிறவி வீண்தானா? அடுத்துச் சொல்கிறார்

சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன், முந்திப் பொழிவன

யார் சிந்திக்கிறார்களோ அவர்களுக்கு முந்திப்பொழியும். தேன் பொழியும். அது செந்தேன் என்கிறார். சிறந்து என்கிறார். அந்தத் தேன் என்ன ?

கருதுவார் இதய கமலத் தூறும் தேன்

என்று சொல்கிறார். சாதாரணத் தேனைக் குடித்தால் சுக்கிரீவனைப் போலக் கஷ்டப்பட வேண்டியதுதான்.

சித்தத்துள் தித்திக்கும் தேன்

என்று சொல்லுகிறார்.

இந்த இடத்தில் மற்றொரு திருவிருத்தத்தையும் செட்டியார் ஞாபகப் படுத்தினார்கள்.

புகலிழந்த குருடரும் தம்மைப் பரவ

என்கிறபோது புகல் என்பதன் பொருள் நன்கு விளங்கும்படியாக அந்தத் திருவிருத்தத்தைக் காட்டினார்கள்.

இந்தத் தேவாரத் திருவிருத்தங்களில் திருத்தப்படவேண்டிய பகுதிகள் பல இருக்கின்றன. நீங்களும் அறிந்துகொள்ளலாம்.

தொங்கலும் கமழ்சாந்தும் அகிற்புகையுந் தொண்டர் கொண்டங்கையால் தொழுதேத்த அருச்சுனற்கன்றருள் செய்தான்

என்பதாக ஓர் இடம். தொண்டர்கள் எல்லாம் பூசைக்கு வேண்டிய பொருள்களை எல்லாம் கொண்டுவந்து வழிபாடு செய்கிறார்கள். இறைவன் தொண்டர்களுக்கு அருள்செய்வானா?

அருச்சுனற்கன் றருள் செய்தான்

என்ற பதிப்பில் இருக்கிறது. அருச்சுனனுக்கு அருள் செய்தான் என்று பாடுவாரா? திருஞானசப்பந்தர் திருவாக்கில் அப்படி வந்ததாக இருக்கிறது. எத்தனையோ பதிப்புகளில் இப்படித்தான் இருக்கின்றது.

தொண்டர்கொண், டங்கையால் தொழுதேத்த
அருச்சனைகன் றருள்செய்தான்

என்று இருக்கவேண்டும். அப்படி

பற்றாய் நினைந்திடப் போதுநெஞ்சே இந்தப் பாரைமுற்றும்
சுற்றாய் அலைகடல் மூடினுங் கண்டேன் புகல் நமக்கு
உற்றான் உமையவட் கன்பன் திருப்பா திரிப்புலியூர்
முற்றா முளைமதிக் கண்ணி னான்றன் மொய்காலே

என்பது ஒரு திருப்பதிகம். இங்கே எப்படி இருக்கும்?

பற்றாய் நினைந்திடு எப்போதும்

என்றால் எப்படிப் பொருள் தெளிவுபடுகிறது பாருங்கள். இலக்கிய நோக்கிலே யாப்பு நோக்கம் இருக்கவேண்டும். கண்ணி னான்றன் மொய்காலே என்பதில் கண்ணியி னான்றன மொய்கழலே என்று இருக்கவேண்டும். சம்பந்தன தமிழ் வல்லார் என்பதுபோல வரும் இடம் அது.

கண்டேன் புகல்

என்கிறார். உயிர்களுக்குப் புகலாக இருக்கிற இடம் இறைவன் திருவடிதான். நாம் அடைக்கலம் அடைய வேண்டுமானால் இறைவன் திருவடியைத்தான் அடையவேண்டும். திருவடிக்கு அடைக்கலம் என்றே பெரியவர்கள் பாடினார்கள்.

உடையாய் அடியேன் உன் அடைக்கலமே.

மற்றவர்களுக்கு அடைக்கலமாக யாரும் இதுவரை சொல்லவில்லை. கண்டேன் புகல் என்கிறார். இந்தப் புகலை அடையாதவன் குருடன். முதல் பாட்டில்

புகலிழந்த குருடரும்

என்றார் அல்லரோ ? ஏன் புகலிழந்த என்றார் ? புகல் என்பது நமக்குக் கிடைக்க வேண்டுமானால் நம்முடைய நோக்கம் திருவருள் ஒன்றிலேயே இருக்கவேண்டும். அதற்குத் திருவருள் நாட்டம் என்று பெயர். அதற்குமாறாக எதிர்மறுதலையாக உள்ளது உலக நாட்டம். அது தன்னைப்பற்றியதாகத் தனக்கு வேண்டுவதாகத் தோற்றுகிற ஆசைகளுக்குரிய உலகநாட்டமாக இருக்கும். அந்த உலகநாட்டத்திற்குத் தன் நாட்டம் என்றே பெயர். அந்தத் தன் நாட்டத்திலே ஒரு பயனும் கிடையாது. அதனாலே வெறுந் தன் நாட்டம் என்று பெயர். அதைப் பட்டினத்தார் வெகு அழகாகப் பாடியிருக்கிறார் இந்தத் தல விருத்தத்திலேயே. ஆனால் அதை அச்சிட்டவர்கள் மூன்றுசுழி 'ண்' போட்டு "தண்ணாட்டம்" என்றே பதிப்பித்திருக்கிறார்கள். தண்ணாட்டம் என்றால் குளிர்ந்த ஆட்டமாகப் போய்விட்டது. இன்றைக்கும் அப்படித்தான் இருக்கிறது. அது பிழை. வெறும் தன் நாட்டம். அதற்கு மறுதலையாக இருப்பது திருவருள் நாட்டம். அதைத்தான் இந்தத் திருப்பாட்டில் திருநாவுக்கரசு சுவாமிகள் சொல்கிறார்.

உண்பொருள் நாடி

என்றால் தன்னாட்டம் — உலக நாட்டம். அதனாலே புகலிழந்து — திருவருள் நாட்டத்தை இழந்த குருடரும் — உண்பொருள் நாடிப் புகலிழந்த குருடரும்

தம்மைப் பரவ

பரவுதல் என்பதற்கு வாழ்த்துதல் என்று பொருள்.

பாழ்த்த பிறப் பறுத்திடுவான் யானும் உன்னைப் பரவுவனே என்று சொல்கிறார். பரவு — வாழ்த்து.

புகலிழந்த குருடரும் தம்மைப் பரவ

என்கிறபோது தம்மை என்பது திருவடிகளை. இறைவன் திருவடிகளை வாழ்த்த.

கொடுநரகக்குழிநின்று, அருள்தரு கைகொடுத் தேற்றும்

நரகக் குழியில் இருந்து அந்தக் குழிக்கு இரையாகாமல் கரை யேற்றும் திருவருள்.

இங்கே அருள் சொல்லப்படுகிறது. அந்த அருளால் கிடைக்கக்கூடிய புகல் சொல்லப்பட்டது. இந்த அருள் எங்கே இருக்கிறது? அதையும் திருநாவுக்கரசருடைய தேவாரத்தை வைத்தே பார்க்கவேண்டும். இறைவனிடத்தில் அருள் இருக்கிறது. இருள் நம்மிடத்தில் இருக்கிறது. எல்லா உயிர்களினிடத்திலும் இருந்தாலும் சிறப்பாக மக்களிடத்தில் மிகுதியாக இருக்கிறது. அப்பர் சுவாமிகளே சொல்கிறார்.

பொன்னுள் ளத்திரள் புன்சடை யின்புறம்
மின்னுள் ளத்திரள் வெண்பிறை யாயிறை
நின்னுள் ளத்தருள் கொண்டிருள் நீங்குதல்
என்னுள் ளத்துள தெந்தை பிரானிரே

என்கிறார். உன் உள்ளத்தில் அருள் இருக்கிறது. என் உள்ளத்தில் இருள் இருக்கிறது. அது நீங்காத அருள். இது நீங்கும் இயல்புடைய இருள். இது நீங்கினால் உன் அருள் ஓங்கும். நீங்காவிட்டால் உன் அருளை அணுகவும் முடியாது. அந்த அருளைக் கொண்டு இந்த இருளை நீங்குதல் என்னிடத்தில் இருக்கிறது.

நீங்குதல் என்னுள்ளத்துளது

என்னுள்ளத்து இருள் நீங்குதல் என்னிடத்தில் இருக்கிறது என்கிறார் சுவாமிகள். இதைச் செய்ய வேண்டும் மக்கள் இதைச் செய்தால்தான் மக்கள். செய்யாவிட்டால் என்ன என்று நாம் சொல்ல வேண்டுவதில்லை. என்ன காரணம் செய்யாமைக்கு?

இருள்தரு துன்பப் படலம் மறைப்ப

என்கிற இடத்தில் 'படலம்' என்றார்களே. அதுபோன்ற ஒன்று நம்மிடத்தில் இருக்கிறது. அதுதான் காரணம். இருள் கண்ணை மறைக்கும். ஒளியின் தன்மையைப் போக்கி, கண்ணுக்கு ஒளி யில்லாமல் செய்கின்றது படலம். அதைத்தான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கைக் கொண்டு

படலம் என்கண் மறைப்பித்தாய்

என்று காட்டினார்கள் செட்டியார் அவர்கள். அது என்ன செய்யும்? பொருள்களைப் பார்க்கவொட்டாமல் செய்யும். அதற்கு மாறுபட்ட

அருள் பொருளைக் காட்டும். அந்தப் பொருள் எது? இங்கே கோயில் கொண்டிருக்கும் பரம்பொருள்தான். அதனாலேயே

பொருள்தரு கண்ணிழந்த

அந்தக் கண்ணுக்கு என்ன பெயர்? ஞானம் எனும் கண்

ஞானக் கண்கொடுத்து அருளினாயே

என்று சித்தியார் சொல்கிறது. குறி என்றும் அதற்குப் பெயர். குறியது தாம் அறியும் நெறியின் சிவமேயாய் நின்றிடுவர். அதை ஞானக்குறி என்றே சொல்வார்கள்.

பொருள்தரு கண்ணிழந்து உண்பொருள் நாடி ஞானமென்னும்

கண் ஒளியை இழந்தோம். அதற்கு இருளாகிய அஞ்ஞானம்தான் காரணம். அது படலம் போல மறைக்கின்றது. அது மறைப்பதனால் நாம் கண் ஒளியை இழந்தோம். பெறவேண்டிய கண் ஒளியைப் பெற்றுப் பார்க்க வேண்டிய பொருளைப் பார்க்கவில்லை. அதனால் நம்முடைய நோக்கம் பார்க்காமைக்குச் சாதனமாக இருந்து பார்க்கத் தகாததைப் பார்க்கச் செய்கிறது. பார்க்க வேண்டியதைப் பார்க்கவொட்டாமல் தடுக்கின்றது. அதனால்

உண்பொருள் நாடி புகலிழந்த குருடர்

என்ற பட்டத்திற்கு ஆளாகிறோம். நாம் அந்தத் திருவடிகளைப் பரவினால் அவன் உள்ளத்தில் இருக்கிற அருளை நமக்குக் கொடுத்து, நம் உள்ளத்தில் இருக்கிற இருளை நீக்கி ஆட்கொள்வான். இதை வெளிப்படுத்துவதற்காகவே திருநாவுக்கரசு சுவாமிகள் எழுந்தருளினார்கள். அவர்களது அவதாரம் இதற்காகவே ஏற்பட்டது. அதனாலே அவருடைய நெறி இன்றைக்கும் வாழ்கிறது. அதைக் கேட்டுக்கொண்டு இருக்கிறோம். ஓரளவு உள்ளத்தினுள்ளே கொள்ளும்படி இருக்கிறது.

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர்

என்கிறார். திருநாவுக்கரசர் அவதாரம் பண்ணுவற்கு முன்னே அந்தத் திருத்தொண்டின் நெறி வாழ அவர் வருகின்றாராம். திருநாவுக்கரசர் அவதாரத்திற்கு முன்னேயே "திருநாவுக்கரசர்

வளர் திருத்தொண்டு'' இருக்கிறது. அது வாழவருஞானத் தவ முனிவர் இவர். அப்போது அந்த நெறி என்ன? வாகீசர் அவதாரம் பண்ணுவதற்கு முன்னேயே திருநாவுக்கரசர் வளர் திருத்தொண்டு இருக்கிறது. அந்த நெறி வாழவேண்டும். அதற்காக இந்த சுவாமி வருகிருர் என்று சேக்கிழார் பெருமான் நமக்குத் தெரிவிக்கிருர்.

இதுபோலவே திருஞானசம்பந்தர் அவதாரச் சிறப்பைச் சொல்ல வந்தபோது

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

என்பதாகப் பரவுகிருர். இப்படி இந்த இரண்டுபேரும் எதற்காக வந்தார்கள் என்று சுவாமி சொல்கிருர்.

திருநாவுக்கரசர் வளர் திருத்தொண்டு என்ருல் என்ன? பரமேசுவரனுடைய முடிந்த நிலை

நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே

என்ற திருவாசகத்தின்படி அதுதான் முடிந்த நிலை. அந்த நிலையை அடைந்தால்தான் பிறவி இல்லை. அதற்கு அடுத்த வேறு எந்த நிலையை அடைந்தாலும் பிறவியுண்டு. நள்ளும்...... எள்ளும் எண்ணெயும் போல நின்ற நிலையே பரமேசுவரனுடைய சர்வ வியாபக நிலை. அதை அடைந்தால் மோட்சம். அந்த நிலையை நாம் அடைய நமக்காக அவன் தன் பெருங்கருணையினுல் கொள்கிற திருமேனிகள் அத்தனையும் நாம் உய்யும்பொருட்டு நம்மால் வழிபடத்தக்கனவாக இருக்கின்றன. அவை அத்தனையும் சகளம் என்று சொல்லப்படும்.

அது ஒன்றுதான் அகளம். எங்கும் நிறைந்த நிலையைக் கொண்டது அகளம் என்று பெயர். மற்ற எந்த நிலைக்கும் சகளம் என்று பெயர்.

''அகளமாய் யாரும் அறிவரியது அப்பொருள்
சகளமாய் வந்த தென்று உந்தீ பற
தானுகத் தந்த தென்று உந்தீ பற''

என்பது ஞானசாஸ்திரம். சிறந்த சாத்திரம். அதில் முதலாவது பாட்டு இது.

"அகளமாய் யாரும் அறிவரியது"

யாராலும் காண்டற்கரியது. யாராலும் கண்டுகொள்ள முடியாதது.

"தானுகத் தந்ததென்று உந்தீ பற"

தானுக என்ருல் சிவன் தன்னுடைய பெருங் கருணையினுலே நம்மை ஆட்கொள்ளச் சகளமாய் வந்தான். அவன் வாராவிட்டால் நாம் அவனை அடைய முடியாது. அவனே தன்னைக் கொடுக்காவிட்டால் யாராலும் அவனை அடையவே முடியாது. அப்போது சகள ரூபத்தைக்கொண்டு அசள நிலையை நாம் அடையவேண்டுமானுல் அவன் காட்டிய வழியிலே நிலையாக இருக்கவேண்டும். அந்தவழிதான் வேதநெறி, ஆகமநெறி. இந்த இரண்டும் தழைத் தோங்க அவதாரம் செய்தார்கள் நால்வர் பெருமக்கள் எல்லோரும். அவர்கள் தழைத்தோங்கச்செய்ய வந்த நெறிதான் சிவநெறி என்பேன். அவன் நம்மை ஆட்கொள்ளச் சகளமாய் வந்தாலும் முதன்முதலாக நாதரூபமாய் வருகிருன். நாதத்திற்கு வடிவமாகிய எழுத்துக்கள், சொற்கள், பொருள்கள், மந்திரங்கள், வர்ணங்கள், பதங்கள், எல்லாம் அவன் வடிவம். எல்லாம் சகளம்தான். அம்போது வாக்குக்கு ஈஸ்வரன் வாகீச்வரன். வாகீச்வரன் என்ற சொல்லுக்குத் தமிழ்தான் திருநாவுக்கரசர். அப்போது சிவன் என்று அர்த்தம். இந்தச் சிவன் நெறி வளர திருநாவுக்கரசரே அவதாரம் செய்கிருர்.

"திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ"

என்பதற்குப் பொருள் சிவநெறி வாழ என்று அர்த்தம். அதற்காகத்தான் அவதாரம் செய்தார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

சாத்திர நோக்கத்திலே திருநாவுக்கரசரைப்போலச் சைவ சித்தாந்தத்தை உள்ளத்தில் படியும்படி பாடியவர் எவரும் இல்லை மிக ஆற்றல் வாய்ந்த திருப்பதிகங்களை அவர் அருள்செய்த முறையிலே மற்ற திருப்பதிகங்கள் இல்லை. இருக்கமுடியாது. மனிதன் – சைவனுகப் பிறந்தவன் சில நாளிலே சிவபெருமானை அடையவேண்டும். பிறப்பு, இறப்பு இல்லாமல் செய்யவேண்டும். முயன்ருல் அந்த முயற்சி விரைவில் வெற்றிபெறும். அந்த நிலை கிடைக்கும். இன்றே கிடைக்கும். உமாபதி சிவம் ஆணையிட்டுச் சொல்கிருர். உனக்குச் சைவ கதியிலே அன்பு இருக்குமானுல் – உறுதி இருக்குமானுல் அது இப்போதே கிடைக்கும்.

" என்னில் இனியென்றல் இன்று உண்டேல் என்றுண்டாம்
அன்பின் நிலையே அது "

என்கிறார். மோட்சத்திலே, பேரானந்தத்திலே உனக்கு ஆர்வம் இருக்குமானால் இப்போதே கிடைக்கும். அன்பின் நிலையே அது என்கிறார் அன்புதான் சிவம் – சிவம்தான் அன்பு. இதை அறிய வேண்டுமே! அதுதான் முடியாது.

" அன்பே சிவமாவது யாரும் அறிந்திலார்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே "

என்கிறார்கள். அதை அறிய வேண்டுமே? படியவேண்டுமே? அது கஷ்டம். போற்றிப்பஃறொடையிலே இதை நன்றாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆணும் பெண்ணும் அறிந்துகொள்ள லாம். சுகமாக இருந்துகொள்ளலாம். உள்ளே என்ன இருக்கிறது என்பதை உறுதியாகத் தெரிந்துகொள்ளலாம்.

இப்போது என்ன இருக்கிறது? ஆணவம். ஆணவம் என்றால் என்ன? அறியாமைக்குக் காரணமான ஒரு நிலை. — ஒரு மன நிலை.— அந்த அறியாமை என்பது என்ன?

என்னுள்ளத்துள் உள்ளது இருள். உன் உள்ளத்துள் உள் ளது அருள். இந்த இருளும், அருளும் வேறுபட்டன அல்ல. ஓரிடத்தில் இருப்பன. அருளை அருள் என்று அறியவேண்டும். இருளை இருள் என்று அறியவேண்டும். அருளைக்கொண்டு இரு ளைப்போக்கவேண்டும். இருள்தான் அறியாமை. அறியாமைதான் தன்னுட்டம். இதுதான் ஆணவம். வேறு ஒன்றும் இல்லை. இதைச் சிவானந்த மாலை என்ற திருநூலில் தெளிவாகச் சொல் கிறார். திருவைந்தெழுத்தின் " ய "கரத்திற்குப் பொருள் இன்னது என்று சொல்கின்றபோது இதுதான் யகரத்தின் பொருள் என்று சொல்கிறார். அப்படித் தெரிந்துகொண்டால் தெரிந்துகொண்ட அந்த வினாடி முதலாக உயிர் சிவமாகிறது. உயிர் இருக்கும் உடம்பு என்ன ஆகிறது? கோயிலாகிறது.

" காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப் போற்றினிக் காட்டி னோமே."

உள்ளம் பெருங்கோயில். பெருங்கோயில் என்றால் மூலஸ்தானம். ஊன் உடம்பு ஆலயம். வாய் கோபுரவாசல். வள்ளற்பிரானார்க்கு.

இவற்றைத் தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் வேறு சிவன் வேருகவா இருக்கும்? சீவன் சிவலிங்கம். அப்போது இந்திரியங்கள் எல்லாம் விரோதமாக வேண்டாதவற்றை எல்லாம் செய்துகொண்டா இருக்கும்? இரத்தின தீபம் போல உபகாரமாக இருக்கும். கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்காகும்.

திருவிசைப்பாவிலே பச்சை மண் — அதனுல் செய்யப்பட்ட பாத்திரம் — அதில் நீர் வைத்தால் பாத்திரமும் கெடும். நீரும் ஒழுகிப்போகும். பச்சைமண்பாத்திரத்தைச் சுட்டுவிட்டால் அதில் நீர் வைத்தால் நீரும் கெடாது. பாத்திரமும் கெடாது. நீர் பல நாட்களுக்குப் பிறகு கெட்டது என்ருலும் பாத்திரம் கெடாது.

"புனல்பட உருகி மண்டழல் வெதும்பிப்
பூம்புனல் பொதிந்(து) உயிர்அளிக்கும்
வினைபடு நிறைபோல் நிறைந்தவே தகத்துஎன்
மனம்நெக மகிழ்ந்தபே ரொளியே
முனைபடு மதில்மூன் றெரித்தநா யகனே
முகத்தலை அகத்தமர்ந்(து) அடியேன்
வினைபடும் உடல்நீ புகுந்துநின் றமையால்
விழுமிய விமானமா யினதே"

இந்தப்பாட்டில் 'வினைபடும்' என்பதாக இருக்கிறது. குயவன் குடத்தை வனைந்தான் என்போமே தவிர வினைந்தான் என்று சொல்வதில்லை. இங்கே "வினைபடு" என்று பதிப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்த உடம்புக்குள் இறைவன் புகுந்திருந்தால் இந்த உடம்பே பெரிய விமானமாகிவிடும். ஆகவேதான் இதை சாதாரண ஊன் உடம்பாக வைத்துக்கொள்ளாமல் சிவதேகமாக ஆக்கவேண்டும்.

நாள்தோறும் சிவபூசை செய்கிறவர்களுக்கு இதற்காக ஒரு பயிற்சி உண்டு. அவன் வாய் எதைச் சொன்னுலும் மனம் எதை நினைந்தாலும் அவன் சரீரம் அதைச் செய்யச் செய்யச் சிவன் கோயிலாகவே ஆகிவிடும். மந்திரத்திற்குச் சக்தி உண்டன்றே? அவன் சிவனுக இருப்பான்.

குருவே சிவம் என்று கூறினன் நந்தி

என்பதாகக் காரணம் இல்லாமல் சொல்லமாட்டார். முட்டாள் உலகம் அன்று. ஏமாந்த உலகம் அன்று. இதற்காக மூடஒழிப்பு

மாநாடு நடத்தவேண்டியதில்லை. அந்தக்காலத்தில் குருவை எப்படி வைத்தார்கள்? அந்த மதிப்பு பயன் அளித்துக்கொண்டு தான் வந்திருக்கிறது.

ஓங்குடலம் திருக்கோயில்

நாள்தோறும் பஞ்ச சுத்தி செய்து பூசை செய்துவந்தால் ஓங்கு உடலம் திருக்கோயில் தான்.

உள்ளிடம் உள்ளிடமாம்

உள்ளே இருக்கிற இடங்கள் எல்லாம் கோயிலுக்குள்ளே எத்தனை இடங்கள் இருக்கின்றனவோ அத்தனை இடங்களாகும். உள்ளிடம் என்பது இங்கே வினைத்தொகை. உள்ளும் இடம் என்று பொருள் கொள்ளவேண்டும்.

புட்ட.................. புறத்தொழிலும்

உள்ளே அகப்பரிசாரம், புறப்பரிசாரம் எல்லாம் யார் செய்வார்கள்? ப்ரும்மா, விஷ்ணு, ருத்திரன்......ஆகியவர்களே செய்கிறார்கள்.

தீங்கில் உயிர் சிவலிங்கம்

உள்ளே இருக்கிற உயிர் சிவலிங்கம். சிவன்தான் ஜீவன். உஜ்ஜீவனம் என்ன? யாதும் செயல் வேண்டா. ஒன்றையும் செய்யத் தேவையில்லை. என் செயலாவது யாதொன்றுமில்லை என்பதாகத் தன்னுட்டச் செயல் எதுவும் இல்லை. அது சிவஞானம் சிறந்த பாங்கது. நம் அன்பின் உபசரிப்பின் பரிசு அது. பூசைக்கு வேண்டிய சாமான்களை எல்லாம் அன்பே அமைக்கும் என்கிறார். உடம்பே கோயில், உயிரே சிவலிங்கம், அந்தச் சிவலிங்கத்தை நித்தியம் வழிபடுகிறவன் சிவபெருமான். அப்போது தரிசனம் யார் பண்ணுவது? ஒன்றும் செயல் இல்லாமல் உயிர்பரியாது அடங்குவது இருக்கிறதே அதுதான் தரிசனம்.

நற்பணி...... தூங்கிடல்

அதற்குமேலே மோட்சம். நம்மூர் தொன்மையது. அங்கேதான் ஆனந்தசோதியாக இருப்பது. அது பழமையான நிலைமை அழியாத நிலைமை. அநாதியான நிலைமை. அதைச் செய்து கொண்டிருந்தால் போதும். அதைத்தான் அந்தர்யாக பூஜை என்று சொல்வார்கள். ஞானத்தால் செய்கிற வழிபாடு. இப்படி ஞானத்தால் தொழுவார் சிவஞானிகளே என்று பாடுகிறார். இங்கே சிவஞானிகள் என்பதற்கு சில ஞானிகள் என்று அச்சிட்டு

இருக்கிறார்கள். பல ஞானிகளும் இப்படித்தான் தொழுகிறார்கள். சில ஞானிகள் தொழுகிறார்கள் என்றால் மற்ற ஞானிகளை ஞானிகள் என்று நாம் சொல்வோமா?

குறியோடு தாம் பணியும் நெறியதனல் சிவமேயாய் நின்றிடுவர்

என்பது சிவஞான சித்தியார். நம்முடைய சித்தாந்த நெறி நமக்கு எதைக் குறிக்கிறதோ அதை நாம் அடைந்தால் நாம் நாமாகவா இருக்க முடியும். நாம் ஒழிந்தொழியும்.

நாம் ஒழிந்து சிவமானவா பாடித் தெள்ளேனம் கொட்டாமோ

அன்பர்களே இலக்கிய நோக்கு என்பதற்கு ஒன்றே ஒன்று சொல்கிறேன்.

இலக்கியம் என்று சொன்னால் எழுத்துச் சிறப்பு, சொற் சிறப்பு, சொற்றொடர்ச் சிறப்பு, பொருள் சிறப்பு, அணிச் சிறப்பு, யாப்புச் சிறப்பு ஆகிய இத்தனையும் இருந்தால் அதை இலக்கியம் என்று பாராட்ட வேண்டும். (Literature) லிட்டரேச்சர் என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்களே அந்தக் கருத்தில் இலக்கியத்தைச் சொல்லவேண்டும். ஆனால் இலக்கியம் என்பது லட்சணம் என்ற சொல்லின் திரிபு. அதற்குப் பொருள் இது அன்று. எல்லா வகையிலும் லட்சணங்கள் இருக்கும். அந்த லட்சணங்களோடு விளங்குதல் லட்சியம் என்றுபெயர். அப்படிப் பார்த்தால் திருநாவுக்கரசருடைய தேவாரத்தில் எழுத்து இலக்கணத்திற்கு எழுத்து லட்சியம், சொல் இலக்கணத்திற்கு சொல் லட்சியும், சொற்றொடர் இலக்கணத்திற்கு அதுவே லட்சியம், பொருள் இலக்கணத்திற்கு இந்தத் தேவாரத்தினல் நாம் உணரப்படுகிற பொருள் எதுவோ அதுவே லட்சியம்.

ஒருகாலத்தில் வடமொழியிலும், தென்மொழியிலும் சிறப்பாகப் பொருளே மதிக்கப்பட்டது. சொல்லினும், சொல்லில் உள்ள எழுத்திலும் ஆக இரண்டிலும் மேற்பட்டதாக, சிறந்ததாக பொருள் மதிக்கப்பட்டது. அப்போது அர்த்தமே விசேஷமாக இருந்தது. மேலே அறிவு வளர வளர அலங்காரம் விசேஷ மாகத் தோன்றியது. மேலும் இப்போது வளர்ந்து என்ன ஆயிற்று? கடந்த நூறு ஆண்டுகளுக்குள்ளே அலங்காரத்தைக் காட்டிலும் தொனி பாராட்டப்படுகிறது. தொனி இல்லாத பாட்டு பாட்டே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். தொனி என்றால் — ஓசையினல் ஒருபொருள் தோன்றும். அந்த ஓசை சிறப்புடைய தாக இருந்தால் நல்லபாட்டு என்று இந்தக் காலத்தில் சாகித்திய

கர்த்தாக்கள், இலக்கியக்காரர்கள் கருதிவருகிருர்கள். உதாரண மாக ஒன்று சொல்கிறேன்.

குழலினிது யாழினிது என்ப தம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்

என்பது திருக்குறள். இந்தப் பாட்டிலே குழலிசை இனிது என்று சொல்வார்கள். யாழிசை இனிது என்று சொல்வார்கள். யார் என்று கேட்டால் தங்களுக்கு மக்கள் பிறக்க அந்த மக்களது மழலைச் சொல்லைக் கேட்டு இன்புருத நிலையில் இருப்பவர்கள் என்பது பொருள்.

இப்படிச் சொன்ன ஓசையினுலேயே ஒரு பொருள் தோன்றுகிறது. அந்தப்பொருள் இன்னது என்று பரிமேழகர் தெரிவிக்கிருர். ஊன்றிப் பார்த்தால் நமக்கும் தோன்றக் கூடியது தான். "கேட்டோர் மழலைச் சொல்லையே இனிது என்பர்" என்பதாகும். இது பாட்டில் இல்லை. அந்தப் பாட்டைச் சொன்னுல் கேட்பவர்களுக்குத் தோன்றும் பொருள் அது. இப்படி எட்டு இடத்தில் காட்டியிருக்கிருர் பரிமேலழகர்.

அப்படிப்பட்டதொனி சிறப்புடையது. அதற்குத் திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தில் ஓர் இலக்கியம் காட்டி நிறுத்திக் கொள்கிறேன்.

பெருவிரல் இறைதா ஞன்றப் பிறையெயி றிலங்க அங்காந்
தருவரை அனைய தோளான் அரக்கனன் றலறி வீழ்ந்தான்
இருவரும் ஒருவ ஞய உருவமங் குடைய வள்ளல்
திருவடி சுமந்து கொண்டு காண்க நான் திரியுமாறே.

இராவணன் திருக்கயிலை மலையை எடுத்தான். அதற்கு என்ன காரணம் என்று உங்களுக்கே தெரியும். அப்போது இறைவன் செய்த காரியம் ஒன்றே ஒன்றுதான். திருவடியில் உள்ள ஒரு விரல் பெருவிரல். அதிலே முனை. அதை அழுத்தினுன். அதைத் தாங்க முடியவில்லை அவனுல். பத்துத் தலையன், இருபது கையன், அரக்கன், வரை என்ருல் மலை, மலைபோன்ற தோளை உடையவன், அரக்கன். அரக்கன் என்ருலே எதையும் தாங்கும் தன்மை உடையவன். அன்று அலறி வீழ்ந்தான். அவ்வளவுக்கும் இறைவன் என்ன செய்தான்?

பெருவிரல் இறைதான் ஊன்ற

பெருவிரலின் நுனியால் சிறிது அழுத்தினர். அவ்வளவுதான். அவ்வளவு ஆற்றல் பெற்றவன் அலறிவீழ்ந்தான்.

இருவரும் ஒருவ னுய உருவமங் குடைய வள்ளல்
திருவடி சுமந்துகொண்டு காண்க நான் திரியுமாறே.

அம்மையினுடைய திருமேனி — அப்பனுடைய திருமேனி — இந்த இரண்டு திருமேனி ஒரு திருமேனியாகத் தோன்றுகின்றன. அது பெரும் சுமையாகத்தான் இருக்கும். பெருவிரல் முனையைத் தாங்க முடியாது அந்த அரக்கன் அலறி வீழ்ந்தான். நானே அந்தத் திருவடி இரண்டையும் தாங்கிக்கொண்டிருக்கிறேன். தாங்கிக் கொண்டிருப்பது மட்டுமன்று; திரிகின்றேன். காண்க—(You see) யு சீ — என்பது போல நான் திரியுமாறே காண்க என்கிருர்.

திருவடி சுமந்து கொண்டு காண்க நான் திரியுமாறே. இங்கே நான் என்ற பதத்திற்கு ஒரு நயம் இருக்கிறது. முதல் இரண்டடி என்ன சொல்கிறது ?

பிறையெயி றிலங்க அங்காந்
தருவரை அனைய தோளான் அரக்கன்

என்பதாக இராவணனது ஆற்றலைச் சொன்னுர். இங்கே "நான்" என்று மட்டும் சொன்னுர். நான் சரக்கில்லாத ஆள் — மலை போன்ற தோள்கள் இல்லை — பத்துத் தலை — இருபது கரங்கள் இல்லை, மிகச் சாதாரணமானவன் என்பதெல்லாம் தொனிக்கும்படி "நான்" என்றுர்.

மெய் அன்பர்களே, இன்று இப்படித் திருமுறைப்பொருள் உணர்வோடு நேரம் இனிது கழிந்தது. இப்படித்தான் கழிய வேண்டும். திருநாவுக்கரசு சுவாமிகள் வேண்டுகிருர்.

'சாம் அன்று உரை கண்டாய் எங்கள் சங்கரனே' உடம்பை விட்டு உயிர் போகிறபோது என் நா உன் நாமத்தையே சொல்ல வேண்டும். அந்தப் பாக்கியம் கொடுக்கவேண்டும் சங்கரனே என்கிருர். சங் கரோதிதி சங்கர: சுகத்தைச் செய்கிறவன் என்று அர்த்தம். எப்போதும் சுகத்தைச் செய்கிறவன், உயிர் இந்த உடம்பைவிட்டுப் போகிறபோதும் சுகத்தைச் செய்யவேண்டும் என்றுர்.

நமச்சிவாய ஐந்தும் அன்று உரைக்கத் தகுதி கண்டாய்; அன்று என்றுல் சாம் அன்று.

5

திருமுறைகளைப் படிக்கும்போதே பொருள் விளங்கப் படிக்கப் பயிலவேண்டும். நமச்சிவாய ஐந்தெழுத்தும் சாம் அன்று என்று படிக்கலாமா? கருவுற்ற நாள்முதலாக உருகிற்றென் உள்ளமும் நானும் என்று என்று சேர்த்துப் படிக்கலாமா? கருவுற்ற நாள் முதலாக உருகிற்று என்று என் உள்ளமும் நானும் என்று படிக்கவேண்டும்.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் மவனுக்கே பிச்சியானாள்

என்ற பதிகத்தில்

"பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்"

என்று சேர்த்துச் சொன்னால் என்ன பொருள்? முன் ஒரு முறை பிச்சியாக இருந்திருக்க வேண்டும் அன்றோ? அப்போதுதான் மீண்டும் பிச்சியானாள் என்பது பொருந்தும். ஆனால் இதுதான் முதல் முறையாக பிச்சியாகிற இடம். இப்படிப் பாடுவாரா, வாகீசர்? இங்கே என்ன செய்யவேண்டும்? பெயர்த்தும் என்பதை முன்னதுடன் சேர்க்கவேண்டும். பின்னை என்பதை முன்னதுடன் சேர்க்கவேண்டும். முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள், மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள் பின்னை, அவனுடைய ஆரூர் கேட்டாள் பெயர்த்தும், அவனுக்கே பிச்சியானாள் — இப்போது பொருள் தெளிவாகி விடும். இதை பஞ்சாட்சரத்தில் வைத்து விளக்கவேண்டும்.

தேவாரம் ஓதிப் பயனுறுவீர்களாக.

இடையறாப் பேரன்புப் பாடல்

★

கவியரசு வித்துவான்,
திரு. கு. நடேச கவுண்டர்,
முன்னாள் முதல்வர், சாந்தலிங்க அடிகள் தமிழ்க்கல்லூரி,
பேரூர், கோவை.

★

திருவருள் வடிவாய் வீற்றிருக்கும் பரமாசாரிய ஸ்வாமிகளே, இங்குக்கூடியிருக்கும் சிவநேயச் செல்வர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவான விண்ணப்பம். திருநாவுக்கரசு ஸ்வாமிகளுடைய திருப்பாடல்களிலே இலக்கிய நோக்கம், சாஸ்திர நோக்கம் என்னும் பொருள்பற்றிப்பேச வேண்டியது எனது கடமையாக இருக்கிறது. என்னுடைய தகுதிக்கு இது அரிதானதொரு பணி. ஆயினும் இங்கே பார்வையாளராக நம்முடைய ஸ்வாமிகள் எழுந்தருளியிருக்கிறார்கள். அவர் பார்வையாளர். எம்போன்றவர்களெல்லாம் அவருடைய பார்வையிலே அகப்பட்ட பசுக்கள். அவருடைய திருக்கடைக்கண் பார்வை என்மேல்படுவதனாலே ஓரளவு இப்பொருள் பற்றிப்பேசும் ஆற்றலைக் கலைமகள் எனக்குக் கொடுப்பாள் என்ற துணிவோடு நிற்கின்றேன். இலக்கிய நோக்கம், சாஸ்திர நோக்கம் என்ற போது காலையிலே பேசிய பெரியோர் பலர் இங்கே நமக்கு இலக்கியம் சாஸ்திரம் என்பவை என்ன என்று சொல்லியிருப்பார்கள். நம் ஸ்வாமிகளும் முன்னுரையிலே ஓரளவு இலக்கியம் என்றால் என்னவென்றும், சாஸ்திரம் என்றால் என்னவென்றும் சொல்லி முடித்துவிட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். ஆனாலும் பேச வேண்டிய கடமைக்கு இரண்டொரு வார்த்தைகள் சொல்லுகிறேன். இலக்கியம் என்பது "கற்பார் நெஞ்சம் கவரும் தகைத்தால்." சொல் நோக்கம், பொருள் நோக்கம், தொடை நோக்கம், நடை நோக்கம் ஆகிய நோக்கங்கள் அமைந்ததுதான் இலக்கியம். நோக்கு அல்லது நோக்கம் என்பதனைச் சந்நிதானம் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள்: நாம் அவர்கள் சொன்னதைப்

போல் படிக்கும்போது, சொல், பொருள், பாட்டின் தொடை இவை பல தடவை நாம் நோக்கி நோக்கி மகிழத் தக்கவாக அமைந்து இருந்தால் அது இலக்கியம் என்று சொல்லலாம். போதும், இலக்கியத்தைப்பற்றி அவ்வளவு. இறைவனும் இறைவன் அருள் பெற்ற பெரியோர்களும் ஆன்மாக்கள் உய்யவேண்டி ஆணையிட்டுக் கூறிய மெய்ப்பொருள்களும், கற்றவைகளும் சாஸ்திரம்.

சைவ சித்தாந்த நூல்களைச் சாத்திரம் என்று நாம் கொள்ளலாம். ஆனால் ஒன்று அடியேனுக்குத் தோன்றுகிறது. அப்பர் ஸ்வாமிகள் அருளிச்செய்த திருப்பாடல்கள் இலக்கியச் சீர்திருத்தம். அவையே சாத்திரம். ஏன் என்று சொன்னால் சிவானுபூதிப் பெருஞ்செல்வராகிய நம் நாயனர் தாம் அனுபவித்த உண்மைப்பொருளை – அனுபவத்தை – தம்முடைய அழய பாடல்களாலே பாடியிருக்கிறர். அவருடைய அருளிச்செயல்களை வைத்துக்கொண்டுதான் ஏனைய சாத்திரங்களுடைய தகுதி அளக்க வேண்டியதாக இருக்கிறது. நம் அப்பர் ஸ்வாமிகளுடைய பாடல் பிரமாணம். அதற்கு ஒத்த கருத்தாக மற்றைய சாஸ்திரங்கள் இருந்தால் அவை அந்தப் பிரமாணத்தால் அளக்கப்படும் பிரமேயம். எப்பொழுதும் பிரமேயத்தைவிடப் பிரமாணம் உயர்ந்தது. பெரும்பாலும் நாம் கற்கும் சாஸ்திரங்கள்கூட நம் அப்பர் ஸ்வாமிகளுக்குப் பின்னே தோன்றியவையாகத்தான் நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. ஆகவே சாத்திரங்கள் – நாம் படிக்கும் சாத்திரங்கள் – அப்பருடைய அனுபவ உரைக்கு ஒத்தனவாக இருந்தால் அவற்றை நாம் இவை உண்மைப் பொருள்கள் என்று துணியலாம். நான் அப்பருடைய இலக்கியங்களைப்பற்றிச் சொல்கிறபோது, அல்லது சாத்திரங்களைப் பற்றிச் சொல்லும்போது சாத்திரத்திலே தோத்திரமும் கலந்து வரும். அன்பர்களே, அப்படிப்பட்டவற்றுள் முதலிலே இலக்கியத்தைப்பற்றி, இலக்கிய நோக்கத்தைப்பற்றி நோக்குவோம். அதற்கு வேறு திருமுறை எல்லாம் நான் விவரிப்பதற்கில்லை. இந்தத் தலத்துத் தேவாரம் ஒன்றையே எண்ணிப் பார்க்கலாம் என்றே தோன்றுகிறது அதிலே சாத்திரமும் இருக்கும். இலக்கியமும் இருக்கும். குறிப்பு நான் காட்டாவிட்டாலும் நீங்கள் அதை உணர்ந்து கொள்வீர்கள் என்று நான் நினைக்கின்றேன். பிரித்து நான் விவரித்துச்சொன்னல் அதற்கு நேரம் போதாது.

ஆகையினலே,

"ஏற தேறும் இடைமரு தீசனர்
கூறு வார்வினை தீர்க்கும் குழகனர்

ஆறு செஞ்சடை வைத்த அழகனுர்க்கு
ஊறி யூறி உருகுமென் உள்ளமே.''

இந்தப் பாட்டிலே அமைந்துள்ள இலக்கியச் செம்மையைச் சற்றே எண்ணிப் பார்ப்போம். "ஏறதேறும்" அதிலே நான்கு சொற்ருெடர்கள் இருக்கின்றன. மிக அழகான சொற்ருெடர்கள்.

ஏற தேறும் இடைமருது ஈசனுர் ஒன்று. கூறு வார்வினை தீர்க்கும் குழகனுர் இரண்டாவது. ஆறு செஞ்சடை வைத்த அழகனுர்க்கு மூன்ருவது. ஊறி யூறி உருகும் என் உள்ளமே நான்காவது. மூன்ருவது அடியிலே மட்டும் "ஆறு செஞ்சடை வைத்த அழகனுர்க்கு என்று 'கு' உருபு சேர்த்து ஸ்வாமியே சொல்லியிருக்கிருர்கள். அந்த உருபை ஏனைய பெயர்களோடும் சேர்த்துக்கொள்ளுங்கள். ஏற தேறும் இடை மருது ஈசனுர்க்கு, கூறுவார்வினை தீர்க்கும் குழகனுர்க்கு, ஆறு செஞ்சடை வைத்த அழகனுர்க்கு, ஊறி யூறி உருகுமென் உள்ளமே" என்பது. ஊறி யூறி உருகும் என் உள்ளம் என்ற அந்த சொற்ருெடர்தான் மிக முக்கியமான பொருள். சாதாரணமாகக் கீர்த்தனைகள் பாடுகிருர்களே, தியாகராஜர், முத்துசாமி தீக்ஷிதர் போன்றவர்கள் எல்லாம் அவர்கள் பாட்டின் முக்கியப் பொருளை முதலிலே வைப்பார்கள். அதற்குப் பல்லவி என்பது பெயர். இங்கு அதனை ஊறி யூறி உருகும் என் உள்ளமே என்று ஈற்றடியிலே வைத்திருக்கிருர். அதுதான் முக்கியமான பொருள். ஊறி யூறி உருகுமாம். எது உருகும்? உள்ளம் உருகும். யாருடைய உள்ளம் உருகும்? என் உள்ளமே உருகும். அங்கு ஏகாரம் இழிவுச் சிறப்புப்பொருளாக வைத்துச்சொல்லி அடியேனுடைய சிந்தையே உருகும் என்று சொல்வதால் பெரியாருடைய சிந்தை எவ்வளவு உருகாது என்றும் பொருள் கொள்ளலாம். என் உள்ளமே ஊறி யூறி உருகும். பிரிநிலையாக வைத்துக் கொண்டால் எத்தனை பாவிகள் உள்ளம் உருகாமல் வீணுகப் போகிருர்கள், என்பதும் நமக்கு விளங்கும். ஏன் உள்ளம் ஊறி யூறி உருகும்? யாரிடத்தில் உருகும்? என்று கேட்டால், ஏற தேறும் இடைமருது ஈசனுர்க்கு ஊறி யூறி உருகும் என் உள்ளமே. முதல் அடியே மிக அழகாக இருக்கிறது. பாட்டினுடைய தன்மையைப் பார்க்கிறபோது ஏற தேறும் இடைமருது ஈசனுர் என்ற தொடை நோக்கு அழகாக இருக்கிறதைப் பர்ர்க்கலாம். என்ன? ஏற தேறும் இடைமருது ஈசனுர். நாலு சீரிலும் அழகான மோனை இருக்கிறது. மோனைத் தொடை என்பது இருக்கிறது. அதனேடு ஏறது ஏறும் என்றபொழுது அது மடக்கியிருக்கிறது. அதிலேயும் ஓர் இடத்தில் முதல் சொல்

பெயர்ச்சொல்; அடுத்தது வினைச்சொல். அது ஒரு சுவைதானே. கடைசி அடியில் பார்க்கிறபொழுதும் ஊறியூறி உருகும் என் உள்ளமே. நாலு சீரிலும் மோனை இருக்கிறது. ஆகவே முதல் வரியிலும் ஈற்று வரியிலும் முற்று மோனை என்ற அழகான ஒரு தொடைநயம் அமைந்திருப்பதைக் காணலாம். பாட்டு சொல்கிறபொழுதே அப்படியே வாழைப்பழத்தை விழுங்கினது போல, திராட்சைப் பழத்தை விழுங்கினதுபோல நாவிலே தங்கு தடையில்லாமல் இனிதாக நடக்கின்றது. 'ஸ்டைல்' என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். அந்தப் பாட்டினுடைய ஸ்டைல் அது. தொடை அழகு இருந்தால் நடை அழகு இருக்குமன்றோ? ஆகவே முதலடியும் ஈற்று அடியும் தொடை அழகு உடையனவாக இருக்கின்றன. இடையைப் பற்றி சொல்லவேண்டுமா? ஆகவே இந்தப் பாட்டு தொடை, நடை அழகு ஒருங்கே அமைந்திருப்பதை நாம் கண்டோம். இனி, சொல்லழகைச் சற்றுக் காண்போம். ஏற தேறும் இடைமருது ஈசனுர். சாதாரனமாக மற்ற புலவர்கள் பாடிய பாட்டில் ஏறு. அது–என்று வருகிறபோது அந்த அதுவைப் பகுதிப் பொருள் விகுதியாகக் கழித்துவிடலாம். ஆனுல் இங்கே அப்படி அமையவில்லை. ஏற தேறும் என்பதை அப்பாலைக்கு அப்பாலைக்கு அப்பாலானை என்று கூறுகின்ற தொடர்களிலே அந்த 'அ' என்ற சுட்டுப்போல ஏறு அது என்று சுட்டுச்சொல்லாக வைத்துக்கொள்ளவேண்டும். அந்த 'அ' எதை உணர்த்துகிறது. அப்பாலைக்கு அப்பாலைக்கு அப்பாலான அந்த அகரச்சுட்டு உயர்திணையைக் காட்டுகிறது. அதேபோல ஏறு அது என்று சொன்னுல் மிக உயர்வு உடையதாகிய ஏறு என்று நமக்குப் பொருள் தருகிறது. எத்தனையோ ஏறுகள் உள. அந்த ஏறுகளிலே இதுவும் ஒன்ருக வைத்து எண்ணத்தக்கதன்று; மிக உயர்ந்ததாகிய ஏறு.

சாதாரணமாக ஓர் இனத்தில் சிறந்தவர்களைக் குறிக்கின்றபோது அந்த இனப்பெயரோடு இந்த ஏறு என்பதையும் சேர்த்துச் சொல்வது வழக்கம். "மன்னர் ஏறு" என்று சொன்னுல் அரசர்களிலே அவன் மிகச் சிறந்தவன். "ஆவடுதண் துறையுறையும் அமரர் ஏறே" என்று நம் அப்பரே (திருவாவடுதுறைத் தாண்டகம்) அருளியுள்ளார். ஆவடுதண் துறையுறையும் அமரர் ஏறே என்ருல் அமரர்களிலே சிறந்தவன். இவனுக்கு சமமானவர்களும் உயர்ந்தவர்களும் இல்லை. தேவன் என்ருல் இவன்தான் என்ற கருத்துப்பட நாயனர் அருளியுள்ளமை அறிவோம். ஆகையினுலே ஏறு என்று பெயர் பெற்றவை எத்தனையோ உயிர்கள் இருந்தாலும்கூட அவற்றிற்கெல்லாம் அடைமொழி கொடுத்துச் சொல்வார்கள். அடைமொழி கொடுக்கப்பெற்ற

பொழுதே ஒரு பொருளினுடைய சிறப்புக் குறைகிறது. அடைமொழி இல்லாதபொழுது அப்பொருள் சிறந்ததாக ஆகும். பூ என்றாலே தாமரைப்பூ. ஏனையவற்றை ரோஜாப்பூ என்றாற்போல முன்மொழி சிறப்புப்பெயராகிய அடைகொடுத்துச் சொல்ல வேண்டும். அதுபோல எத்தனையோ ஏறுகள் இருக்கின்றன. 'ஏறுமயில் ஏறிவிளை யாடுமிடம் ஒன்றே'– அந்த ஏறும் ஏறுதானே. தமிழில் இருப்பதுபோலவே வடமொழியிலும் சொல்வது உண்டு. முருகனைப் பார்த்து இவன் முனிபுங்கவன் என்று சொன்னால் முனிவர்கள் கூட்டத்திற்குத் தலைவன் என்று பொருள். அங்கே புங்கவன் என்பது ஏறு என்ற சொல்போல்வது. இப்படித் தமிழ் மொழியிலே இந்த ஏறு உயர்ந்த நிலையைப் பெற்றிருக்கிறது. ஏற தேறும் – அப்படிப்பட்ட ஏறு ஏறும் என்பது பொருள். " அப்படிப்பட்ட ஏறு" என்று சொன்னால் அது " நிர்வசனீயம்." அதன் பெருமை சொல்லுக்கு அடங்குவது அன்று என்பது நமக்குத் தெரிகிறது. ஏற தேறும் என்றதோடு விட்டுவிடவில்லை. இடைமருதிலே வாழ்கின்ற ஈசனார்க்கு என்ற தொடரும் உள்ளது. ஆகவே அவன் ஈசன் என்பதை எது உணர்த்துகிறது என்று சொன்னால் அவன் ஏறி வருகின்ற ஏறே உணர்த்துகின்றது. அதன்மேலே அவன் ஏறி வருவதனாலேயே அவன் ஈசன் என்று நமக்குத் தெரியவருகிறது.

ஆகவே பரமேஸ்வரருடைய பரமேஸ்வரத் தன்மையை உணர்த்துகிறது எது என்று சொன்னால் அவன் ஏறி வருகிற அந்த ஏறு. எந்த ஏறு? என்று எண்ணிப் பாருங்களேன். இப்படி ஒரு சொல் கிடந்து அது நமக்குப் பல சிந்தனையைத் தூண்டுவதுதான் சொல் நோக்கம் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏற தேறும் என்பது சிறந்த சொல் நோக்கம். அது எந்த ஏறு என்று கேட்டால் தரும விடை என்று சொல்கிறார். ஆகவே அவன் வருகின்ற ஏறு தரும விடை. தருமந்தான் அவனைக் காட்டுகிறது; தருமத்தினால்தான் அவன் உணரப்படுகின்றவன்; என்று நாம் நினைத்துப் பார்த்தால் அறவாழி அந்தணன் என்று வள்ளுவப் பெருமான் சொன்னதும் நமக்கு நினைவுக்கு வரும். தரும விடைமீது வருகின்றவன்; அற வழியிலே நிற்பார்க்கு அருள் செய்தவன்; அப்படிப்பட்ட இறைவனைக் காண விரும்பினால் அறம்தான் அவனை நமக்கு கொண்டு வந்து காட்டும். இறைவனே அறவடிவைக் கொண்டுவந்து காட்டுவதாகிய விடை ஏறும். அவ்வளவுதானா? ஏன் ஐயா இந்திரனுக்கு யானை வாகனம்; குபேரனுக்கு பல்லக்கு நடை வாகனம்; அந்தத் திருமாலுக்குக் கருட வாகனம்; இப்படி எத்தனையோ பேர் தேரிலே வருகிறார்கள். இந்த வாகனமெல்லாம்

இருக்க, இந்த ஸ்வாமிக்கு இந்த ஏறுதானு கிடைத்தது? இது என்ன? என்று கேட்டால், அதை மாணிக்கவாசக ஸ்வாமிகளையே கேட்டார்கள் பௌத்தர்கள். அதற்கு விடையும் திருவாசகத்திலே இருக்கிறது.

"கடகரியும் பரிமாவும் தேரும் உகந் தேருதே
இடபம் உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடி"

கடகரியும் பரிமாவும் தேரும் ஆகிய இன்னும் பலவற்றை உகந்து ஏருதே — அவற்றை எல்லாம் உகந்து இறைவன் ஏறவில்லை. அவற்றிலேயும் விருப்பினுல் ஏறுவான். முருகப்பெருமானைப் பற்றிச்சொல்கிற ஒரு பெரியவர், அவன் எல்லா வாசனங்களையும் உடையவனுகப் பாடியிருக்கின்ருர். பரமேஸ்வரனும் எல்லா இடத்திலேயும் வரக்கூடியவன் தான்.

ஆனுல், விருப்பினுல்தான் அவற்றில் ஏறுவான். அப்படிப் பட்டவன் இதில்தான் உகந்து ஏறினுன். கடகரியும் பரிமாவும் தேரும் ஏருது இடபமீது உகந்து ஏறியவாறு. இதன்மேல் அவனும் விரும்பியிருக்கிருன். ஆக அவனை இது விரும்பிற்று. இதனை அவன் விருப்பினுன். ஏறியவாறு எனக்கு அறிய இயம்பேடி. இயம்பு என்ருல் சொல். ஏன் என்ருல், எனக்குச் சொல் என்ருல், தடமதில்கள் அவை மூன்றும் தழலெரித்த அந்நாளில் இடபமதாய்த் தாங்கினுன் திருமால்காண் சாழலோ. என்று சுருக்கித்தான் நான் சொல்லவேண்டியிருக்கிறது. திருமாலே தாங்கினுராம். எப்பொழுது? தடமதில்கள் அவை மூன்றும் தழலெரித்த அந்நாளில் …………… ஏற தேறும் என்று சொன்னதாலே அந்த ஏறு பெருமான் முப்புரங்களையும் எரித்த செயலையே நமக்கு நினைவூட்டுகிறது. இதைச் சுருதி பதம் என்று சொல்வார்கள். வடமொழியிலே ஒன்றைச் சொன்னுல் அதற்கு இனமானதெல்லாம் வரும். பழமொழி ஒன்று சொல்வது உண்டு. ஆனுல் குறுகிய மனப்பான்மை என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். அதற்காகச் சொல்கிறேன். சடையைப் பிடித்து இழுத்தால் தன்னுலே தானே வருவாள் என்று சொல்கிருரே, அது போல, ஒரு சொல்லைப் பிடித்து இழுத்தால் பல கருத்துக்கள் நமக்குத் தொடர்ச்சியாக வரும் என்பது. ஏறது ஏறும் என்றதனுல் அது திரிபுர சம்ஹாரத்தையும் நமக்கு நினைவு ஊட்டுகிறது, அந்தத் திரிபுர சம்ஹாரம் செய்ததற்கு அடையாளமாக — வெற்றியாக — பரிசாக உள்ளது நமது சிவபெருமான் ஏறிவருகின்ற ஏறு. அந்த ஏற்றினை உடையவன். ஆகையினுலேதான் அவன் ஈசன் என அழைக்கத் தகுதி உடையவனுக ஆகிருன். இந்த

ஈசன் என்ற சொல்லுக்கு விளக்கம் ''பஞ்ச கிருத்திய சம்பன்னக: ஈச: பரமேஸ்வர:'' என்று வேதம் சொல்கிறது. ஐந்து தொழில் களையும் சுதந்திரமாகச் செய்யக்கூடியவன் எவனோ அவன்தான் பஞ்ச கிருத்திய சம்பன்னகன். அடுத்தது ஈச: என்பதற்கு எல்லா ஐசுவரியமும் உடையவன் என்பதோடுகூட அதிகாரமும் உடை யவன் என்பதுதான் முக்கியப் பொருள். பஞ்ச கிருத்திய சம்பன்னக: ஈச: பசுபதி: என்று உபநிஷதம் சொல்லுகிறது. அப்போது அந்த ஏறு என்ன செய்கிறது? அவனுக்கு வாகன மாக இருந்து அவனைத் தாங்கி வருவதனாலேதான் அவன் ஈசன் ஆனான்.

அவன் ஈசனாக இருப்பதனாலேதான் அந்தத் திரிபுர சம்ஹாரம் செய்தான் என்பதும் நமக்கு நினைவிற்கு வருகிறது. அப்பொழுது ஏறதேறும் ஈசன் என்று சொன்னபோது திரிபுர சம்ஹாரம் நினைவுக்கு வந்தால் பரமேஸ்வரருடைய சில செய்திகளும் நமக்குத் தெரிகின்றன. உங்களுக்கெல்லாம் தெரிந்த வரலாறு தான் திரிபுர சம்மாரம் செய்தது. திரிபுரத்து அசுரர்கள் சிவ பெருமான் அல்லாது வேறு ஒருவராலும் சாகாத அத்தனை ஆற்றல் உடையவர்களாக இருந்தார்கள்; அவர்களைப் பெருமான் அழித்தான். அழித்ததினாலே அவனுடைய பல ஈஸ்வரத் தன் மைகள் நமக்கு வெளியாகின்றன. தேவர்களெல்லாம் என்ன நினைத்தார்களாம்? சிவபெருமான் திரிபுர சம்ஹாரம் செய்யப் போகின்றானே இவனுக்கு நாமல்லவா உதவியாக இருக்கின்றோம் என்று நினைத்தார்களாம்.

" குன்றவார்சிலை நாணராவரி வாளிகூரெரி காற்றின் மும்மதில்
வென்றவா றெங்ஙனே விடையேறும் வேதியனே "

— (திருஞானசம்பந்தர்)

என்று பாடுவார்கள் நம் பெரியோர்கள். வளையாத மலையே வில் அன்றோ? பிடித்து இழுத்தால் அறுந்துபோகக்கூடிய பாம்பே நாண். கணை திருமால்; முனை எரி; அலகு காற்று; இப்படிப் பல சரக்குச் சேர்த்து அவன் வில் தயார் பண்ணினான். வெறும் வில் இருந்தால் போதுமா? என்றபோது தேவர்கள் எல்லாம் சேர்ந்து தேராக அமைந்தார்கள். தேருக்குப் பூட்டக்கூடிய குதிரை நாலும் நான்மறைகள். மறையவனே அதற்குச் சாரதி என்று அமைந்ததனாலே அந்தத் தேருக்கு வைதிகத்தேர் என்று பேர். திரிபுரங்களும் வானிலே தோன்றின. அந்த நொடிப் பொழுதிலே தான் அவற்றை அழிக்கவேண்டும். அந்தச்சமயம் தவறினால் அழிக்கமுடியாது.

எங்கள் நாட்டிலே சொல்கிற ஒரு பழமொழி ஒன்று. "கம்புக்கு களை வெட்டினாற் போலவும் ஆச்சு, தம்பிக்கு பெண் பார்த்தாற் போலவும் ஆச்சு." கம்புக்குக் களை வெட்ட வேண்டிய சமயத்திலே நல்லப் பெண்களாகப் பார்த்துக் களைக்கு விடுவது. அதிலேயே அப்படியே பார்த்துப் பெண் பொறுக்குவது. அதே போல இறைவன் ஒரே சமயத்திலே சில அருமையான காரியங்கள் செய்தான். திரிபுரமும் எரியவேண்டும். இந்தத் தேவர்களுடைய செருக்கும் அழியவேண்டும். அது என்ன வேலை? என்று கேட்டால் அவர் சிரித்துக்கொண்டே தேர்மேல் கால் வைத்தார். சிரித்தமாத்திரத்திலே அந்தப்புரங்கள் எரிந்து போயின. அவன் கால் வைத்த மாத்திரத்திலே தேர் அச்சு உடைந்து கழன்று போயிற்று. அதிலே தன் மகன் பிள்ளையாருக்குக்கூடப் பெருமை வாங்கிக் கொடுத்தான். இல்லையா! தேவர்கள் செய்த தேர் அச்சை "முப்புரம் எரி செய்த அச்சிவன் உறை ரதம் அச்சது பொடி செய்த அதி தீரா." என்றெல்லாம் பிள்ளையாரை நாமெல்லாம் புகழ்வதற்குக் காரணம் இவனுடைய சிரிப்புத்தான். சிரித்தான், முப்புரங்கள் எரிந்து போயின. அப்பொழுது தேவர்களுடைய செருக்கும் போயிற்று. இதில் இருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம்? பரமேஸ்வரன் எந்தத் தேரையும் தானே செய்ய வல்லவன். கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவன் என்பது அவனுக்குத்தான் பொருந்தும். ஆனால் கையில் வைத்திருக்கிறாரே வில், அம்பு, நாண் இவை பயன்பட்டனவா? ஈரப்பு கண்டிலம் ஏகம்பர் தன்கையில் ஓரம்பே முப்புரம் உந்தீபற, ஒன்றும் பெருமிகை உந்தீபற" என்ற இவற்றிற்கும் வேலையில்லாமல் போய்விட்டது. புஷ்ப கந்தர் என்றொரு பெரிய கந்தர்வ முனிவர் சிவ மகிமை சூத்திரத்திலே சொல்கிறபோது, "எல்லாம் இத்தனை பேர்களும் சேர்ந்து சிவபெருமானுக்குச் சகாயம் பண்ணினார்களே; அப்பொழுது அவருக்கு தனியே செய்யும் ஆற்றல் இல்லையோ? என்று கேட்டால், உண்டு. எஜமானன் தன்னுடைய பொருள்களை எப்பொழுது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் ஆளுவான் என்பதை அது காட்டுகிறது" என்று சொல்கிறார். இச்செயல் எதைக்கொண்டும் எக்காரியத்தையும் நிறைவேற்ற வல்ல சர்வ வல்லமை உடையவன் இறைவன் என்ற சிறப்பை நமக்குக் காட்டுகிறது.

அதற்குமேல் ஓர் ஆச்சரியம் என்னவென்று கேட்டால் அது புரத்திலே இருந்தவர்கள் மூவாயிரம் அரக்கர்கள் என்று வரலாறு சொல்லுகிறது. மூவாயிரம் பேர்களும் அந்த மூன்று மதில்களும் கற்பொடியாக அழிந்த காலத்திலும், மூன்றுபேர்

அங்கே பிழைத்தார்களாம் ஐயா. அது சாமார்த்தியம் அன்றோ? ஊரெல்லாம் தீப்பற்றி எரியும்பொழுது மூன்றுபேர்கள் நெருப்புக் குள்ளே இருந்தும் பிழைத்தார்கள். ஆனால் இந்த மூன்றுபேரும் எந்தவிதமான ஆபத்தும் இல்லாமல் இருந்தார்கள் என்று சொன்னல் பேராபத்து வருகின்ற காலத்திலே அவன் காப்பாற் றக்கூடியவன்; அவன் இருக்கிறபோழுது அச்சமே இல்லை. அந்த அரக்கர்கள் பரமேஸ்வரனை நம்பி இருந்தார்கள். அங்கே ஆபத்து அவர்களுக்கு வரவில்லை. அதனால் அவர்கள் பிழைத் தார்கள், நெருப்பின் மத்தியிலிருந்து. நம் சிவஞான ஸ்வாமிகள் காஞ்சிபுராணத்திலே அப்பர் ஸ்வாமிகள் நீற்ற றையிலே இருந்ததை அதற்கு உபமானமாகக் காட்டியிருக் கிறார்கள்.

"மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரிலிருவர் நின்திருக் கோயிலின் வாய்தல், காவலாளரென்றேவிய பின்னை ஒருவன் நீகரி காடரங்காக, மானைநோக்கியோர் மாநடம் மகிழமணி முழாமுழக்க வருள்செய்த, தேவதேவ நின்திரு வடிடைந்தேன் செழும் பொழிற்றிருப்புன் கூருளானே".

என்று சுந்தரர் இம்மூவர் திருத்தொண்டில் அமர்த்தப்பட்ட தனையும் சுட்டுகிறார். சிலசமயங்களிலே போரிலே சிறந்த பொருள்களைப் போர்ப்பரிசாகக் கொண்டு வந்து தமக்குப் பயன் படுத்திக்கொள்கிறார்களே ராஜாக்கள்; அதேபோல ராஜசேகரனாக இருக்கிற பரமேஸ்வரன் பகைவீரர்களைத் திரிபுர சம்ஹாரம் செய்த காலத்திலேயும் மூன்று சிறந்தப் பொருளைப் பிடித்துக்கொண்டு வந்து போரிலே கிடைத்த இரத்தினமாகப் பயன் படுத்தினான் போலும். அவர்களுக்கும் நன்மை.

"எண்ணுடை மூவர் இராக்கதர்கள் எரிபிழைத்துக்
கண்ணுதல் எந்தை கடைத்தலைமுன் நின்றதற்பின்
எண்ணிலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்ணிசை மால்பலர் மாண்டவர்காண் தோணோக்கம்"

என்று நம் மானிக்கவாசகஸ்வாமிகளும் அந்த இடத்தைப்பாராட்டு கிறார்கள், அன்பர்களே. ஆகவே. இத்தனைச் செய்திகளையும் காட்டுகிறது எது? ஏறு. ஆகவே, அந்த ஏறு என்பது ஏறது ஏறும் இடைமருது ஈசன் தன்மையை விளக்குகிறது. பெரியோர் களே, இன்னொன்றுகூட. சரி, இந்த திரிபுர சம்ஹாரம் செய்த வெற்றி ஒன்றே பரமேஸ்வரனுடைய பரத்துவத்திற்கும் எல்லோருக்கும் மேலாளர் என்பதற்கும் சிறந்த சான்று; வேறு

தேடவேண்டியதில்லை. திரிபுர சம்ஹார வரலாறு கேட்டிருந்தும் கூட ஒருவற்கு அந்தப் பரமேஸ்வரனிடத்தில் பக்தி வாராவிட்டால் அப்பாவியை எதைக்கொண்டுதான் திருத்துவது? நம்முடைய சம்பந்தமூர்த்தி ஸ்வாமிகளே சொல்கிறார்கள்:

"கொலைவரை யாத கொள்கையர் தங்கள் மதில்மூன்றும்
சிலைவரை யாகச் செற்றன ரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரை நாளுந் தலைமையல் லாமை யுரைப்பீர்காள்
நிலவரை நீல மூண்டதும் வெள்ளை நிறமாமே"

இது ஒரு அருமையான சொற்றொடர். வேற்றுப்பொருள் வைப்பணி. இத்தனை சொல்லியும் அவர்களுக்கு ஏறவில்லை என்றால் அவரை என்ன செய்வது இந்த உலகத்திலே? நீலச் சாயம் ஏற்றிய துணி மறுபடியும் வெள்ளையாகுமா? இந்த ஜன்மத்தை விட்டுத் தொலைய வேண்டியதுதான் என்கிறார்.

"பூவார் மலர் கொண்டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்க ளெரித்த அன்று மூவர்க்கருள் செய்தார்"

தேவாரம் பாடுகிற பெரியோர்கள் ஏதேதோ வார்த்தைகளைப் பிரித்து படிக்கிறார்கள். ஆனால் முக்கியமானதை விட்டு விடுகின்றார்கள்.

"மூவார்புரங்கள் எரித்த அன்று"

அங்கே உம்மை சந்தியில் மறைந்துள்ளது. சொற்களைப் பிரித்துப் பிரித்துத் திருமுறைகளை அச்சுப்போட்டு இருப்பதில் பெரிய ஆபத்து இருக்கிறது. பிழைத் தொகுப்பையே ஒரு தனிப்புத்தகமாகப் போடலாம் போலிருக்கிறது. அது அத்தனை விரும்புவதற்கில்லை. "ஆதிக்கண் ணான்முகத்தில் ஒன்று சென்று அங்கு அல்லாத சொல் உரைப்ப......சேதித்தத் திருவடியை" என்றுஒரு அப்பர் தேவாரம் வருகிறது. அதைப்பிரித்து அச்சிட்ட பல புத்தகங்களைப் பார்த்தேன். ஆதிக்கண் நான்முகத்தில் ஒன்று சென்று அல்லாத சொல் உரைக்க இறைவன் அந்தத் தலையைக் கிள்ளினான். அவன் நான்முகத்தினன் அல்லனோ? மும்முகத்தான் தானே ஆவான். எப்படி? தங்களுக்குத் தெரியாவிட்டாலும் சும்மாப் போட்டால் ஏதோ தெரிந்தவன் பார்த்துக் கொள்கிறான் என்று போட்டுத் தவறாக வழிகாட்டுதல் கூடாது. அதை என்ன செய்வது? ஆதிக்கண்ணான் முகத்தில் ஒன்று

சென்று என்று பிரிக்கத் தெரிந்தால் பிரித்துப் போட்டுக் கொள்ளுங்களேன். இல்லை சும்மாப் போட்டால் யாராவது ஸ்வாமியைக்கேட்டு நாம்தெரிந்துக்கொள்ளலாம். 'தொடங்கற்கண் தோன்றிய முதியவன்' என்று கலித்தொகையிலே நான்முகனைப் பற்றி சொல்கிறார்கள். தொடங்குதல் தோன்றி உலக சிருஷ்டியின் ஆரம்பக்காலத்திலேயே தோன்றியவனாகிய முதியவன். பிதாமகன் ஆகையினாலே ஆதிக்கண்ணான் முகத்தில் ஒன்று என்றுதான் பிரிக்கவேண்டும்.

ஏற தேறும் இடைமருது ஈசனார் என்ற சொற்றொடருக்கு ஒருவாறு பொருள் சொன்னதாகக் கருதிக்கொள்ளுங்கள்.

கூறுவார் வினை தீர்க்கும் குழகனார். சொல்லுவார் வினை தீர்க்கும் குழகனார் என்று சொன்னால் என்ன சொல்லுவார்? சொல்லுவார் என்று சொன்னால் சொல்வது எல்லாம், பரமேஸ்வரன் சொல். அவனைப் பேசுவதுதான் பேச்சு. அவனை அல்லாது மற்றவர்களைப் பேசினாலும் அவனைப் பேசாது இருப்பதனாலே அங்ஙனம் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

"கற்றவர் பரவும் நாகைக் காரோணம்
காதல் செய்யப் பெற்றவர் பிறந்தார்
மற்றுப் பிறந்தவர் பிறந்தி லாரே"

என்பதுபோன்ற சொற்றொடர்களாலே பரமேஸ்வரன் புகழைச் சொன்ன பேச்சுத்தான் பேச்சு. மற்றது பேச்சாக இல்லை. அவனை பேசாத நாளெல்லாம் பேசாத நாளே. அவனைக் காணாத கண் எல்லாம் காணாக் கண் என்றபடி.

அப்பொழுது அவன் புகழ் பேசுவார், கூறுவார், வினை தீர்க்கும் குழகனார் யார்? "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்று திருக்குறளைக்கொண்டு இதை அளக்கிறதா? இதைக்கொண்டு திருக்குறளை அளக்கிறதா? இரண்டும் சமமாக இருக்கின்றன. கூறுவார் வினை தீர்க்கும் குழகனார். புகழ் பேச வேண்டும். எப்படி ஐயா பேசுவது என்றால்,

"அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி"

இத்தனை வீரச்செயல்களையும் சொல்லி, அவன் கருணையை நினைந்து,

"ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடி நின்றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்து நாமே" – திருவாசகம்.

என்று கூறுவார் வினை தீர்க்கும் குழகனார். அவன்புகழைக் கூறுவதனாலே கிடைக்கக்கூடிய பயனை – அவன் வினை தீர்ப்பதைப் பற்றிப் பல தேவாரங்களிலும் காணலாம். இன்னொன்று, இரண்டையும் சேர்த்து பார்க்கின்றபோது இங்கேயும் சாத்திர நயம் என்றுகூட ஞாபகம் வருகிறது. என்ன என்று சொன்னால் ஜபாலி உபநிடதம் என்று ஒரு உபநிடதம் இருக்கிறது. அதிலே ஒரு அழகான கருத்துச் சொல்கிறார்.

"யதாத்ருண்ணுசின: விவேகஹீன:
பரப்ரேஷ்யா: க்ருஷீயாதிகர்மஸு
வியுக்தாதுக்க: ஸஸ்வாமிபத்யமானு:
ஜயிதய: பஸவ: யதாஸ்வாமிஇவ
ஸர்வக்ஞ: ஈச: பசுபதி:"

பசு என்பதற்குக் காரணம் என்ன? யதாத்ருண்ணு சிதோ — பசுக்கள் எதை உண்கின்றன? புல்லை உண்கின்றன. நாமும் புல் — இன்பம் — ஐம்புல இன்பங்களை — புல்லிய இன்பங்களை அனுபவிக்கின்றோம்.

த்ருணுசின: விவேகஹீன: பரமேஸ்வரன் வாலறிவன்; நமக்கோ அந்த அறிவு இல்லை. குற்றம்பட்ட அறிவுடையோம். நாம் விவேகஹீனு:– விவேகம் இல்லாதவர்களாக இருக்கின்றோம். பரப்ரேஷ்யா: நாம் பிறர் பேச்சைக் கேட்கவேண்டித்தான் இருக்கும். பிறரால் தூண்டப்படுகிறவர்கள் நாம். பரமேஸ்வரன் ஒருவன்தான் சுதந்திரம் உடையவன். நாம் சுதந்திரம் இல்லாதவர்கள். க்ருஷ்யாதிகர்மஸு: உழவு முதலிய தொழில்களிலே நாம் தூண்டப்படுகின்றவர்கள். சகல துக்க: நமக்கு இல்லாத துக்கங்கள் என்ன? எல்லாத் துக்கமும் கொண்டவர் தாம். நாம். சகல துக்க சஹாய: எல்லா துக்கத்தையும் தாங்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். சஸ்வாமி பத்யமானு: தங்கள் எஜமானனுக்குக் கட்டுப்பட்டவர்கள் இது ஜயிதய:– ஜயி – பசுக்கள் எல்லாம், அதே நிலைதான் நமக்கும். ஆகவே பசுக்களுக்கு எஜமானன் எப்படியோ, பரமேஸ்வரன் ஸர்வனுகிய

பசுபதி நமக்கு இருக்கின்றுன். அப்பொழுது இறைவன் ஒன்றின்மேல் ஏறிவருகின்றுன் என்பது என்ன காட்டுகிறது? அவன் சர்வ ஆன்மாக்களுக்கும் பதியாக இருக்கிறுன். அவன் தான் பசுபதி என்பதையும் உணர்த்துகின்றபடியினுலே ஏற தேறும் இடைமருது ஈசனுர் என்ருர். கூறுவார் வினை தீர்க்கும் குழகனுர் பொற்பாதம் வாயால் பாடியாடி, பணிந்து எழுந்து குறைந்தடைவார் பாவம் தீர்ப்பார். அந்தக் கூறுவார் வினை எப்படித் தீர்ப்பார்? விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல் உண்ணிய புகின் அவை ஒன்றும் இல்லையால் என்பதுபோலத் தீர்ப்பார். இந்தக் கருத்தை வெகு அழகாக நமது சந்தான ஆச்சாரிய மூர்த்திகளுள் ஒருவரான அருள்நந்தி சிவாச்சாரிய சுவாமிகள் இருபா இருபஃது என்ற மிக அருமையான சாத்திரத்தில் சொல்லியிருக்கின்றுர்கள்.

அந்த சாத்திரத்திலே அருள்நந்தி சுவாமிகள் மெய்கண்ட தேவரை நோக்கிக் கேட்பதாக ஒரு கேள்வி இருக்கிறது. இறைவனே நீ உடனுய் இருக்கின்றுய். என்று சொல்கிருர்களே, அவன் அன்றி ஒன்றும் அசைவதில்லை என்று சொல்கிருர்களே, அப்படி இருந்தால் என் அனுபவத்திலே நான் காண்கின்றேனே. சில சமயங்களில் ஓர் ஐயம் வருகிறது. இறைவனே நீ என்னை விட்டு பிரிதலும் உண்டோ? என்று கேட்டதற்கு மெய்கண்ட தேவர் 'நீ என்னை நினைத்தால் நான் உன்கூட இருப்பேன் இல்லாவிட்டால் விலகுவேன்' என்று விடை கூறினுர். இந்த அருமையான சொற்றெடர் ஏன் இங்கே வந்தது? கிடைத்தது என்று சொன்னுல் நமது அப்பர் சுவாமிகள் பாடிய தேவாரம் தான். என்ன சொல்கிருர்.

"பன்னி னூறும் பழத்திலும் இன்சுவை
என்னிலும் ஊறி எனக்கே சுவைதரும்
உன்னில் நிற்கும் உன்னுவிடில் விட்டிடும்
என்உள் ஈசன் இருந்த இயற்கையே

அது செய்யுளின் கடைசியிலேயே இரண்டாவது வேற்றுமை உருபு சேர்த்து என்னுள் ஈசன் இருந்த இயற்கையைச் சொல்லுங்கால் அது ஊறும் பழத்திலும் இன்சுவை என்பது பன்னினூரும் பழத்திலும் இன்சுவை என்னிலும் ஊறி எனக்கே சுவை தரும் என்று சொன்னுல் தங்களைப் போன்ற பெரியோர் களுக்குச் சுவை தருவதற்கு சொல்லவாவேண்டும்? எனக்கே சுவை தரும். ஆனுல் ஒன்று; உன்னில் நிற்கும் உன்னுவிடில் விட்டிடும் என் உள் ஈசன் இருந்தஇயற்கையே. இந்தச் சொற்றெடரைத்

தாயுமானவ சுவாமிகளும் கொண்டு எல்லாச் சுவைகளையும் எடுத்தாண்டிருக்கின்றார்கள். ஆனால் இந்தத் திருப்பாட்டுத் தேவாரம் பதிப்பிலே பலவற்றிலே காணவில்லை. இது சிறந்த அப்பர் சுவாமிகளுடைய வாக்கு. இது சிறந்த சாத்திரமும் உடையதாக இருக்கின்றது என்று தெரிகிறது.

இன்னும் சாத்திரங்களையும் பல சொல்லலாம். "நரியைக் குதிரை செய்வானும் நரகரைத் தேவு செய்வானும் விரதங் கொள்......" பீஜாங்குர நியாயம் என்று சொல்வது உண்டு. மரத்திலிருந்து விதையா விதையிலிருந்து மரமா என்று சொன்னால் இது ஒன்றுக்கொன்று அடங்காது. திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கவேண்டும். ஆனால் நேரே மாயையில் இருந்து பரமேசுவரன்தான் முதலில் சிருஷ்டி செய்தான். "விச்சின்றி நாறு செய்வானும்...... ஐயஞ்சின் அப்புறத்தான் ஆரூரமர்ந்த அம்மானே. ஐயஞ்சின் அப்புறத்தான் என்று சொல்லுகிறபோது சுருக்கமாகச் சொல்லுவோம். 24 தத்துவங்கள் பிரகிருதித் தத்துவங்கள். அதற்கு மேலே உள்ளவன் திருமால். இருபத்தைந்தாவது தத்துவமாக ஐயஞ்சின் அப்புறத்தான் என்றால் அசுத்தமாயா தத்துவம், சுத்தமாயா தத்துவம் எல்லாம் நீங்கி ஆறுறு தத்துவங்களுக்கு அப்பால் நிற்கின்றவன் என்பதை அது சுருக்கி உணர்த்திற்று அப்பர் சுவாமிகள் காலத்திலேயே சைவ சமய சாத்திரங்கள் தமிழ்நாட்டில் பரவி இருந்தன என்பதைப் பல்லவர் சரித்திரத்தினாலேயும் நாம் அறிகின்றோம். ஆகவே, அப்பர் சுவாமிகள் மனமுகிழ்த்த சுருள் நீக்கி மலர்விக்கும் கலைபயிலத் தொடங்கினர் என்று சேக்கிழார் சுவாமிகள் சொல்லுவதினாலே நம் காலத்திலே இயல்பாக நாமெல்லாம் படிக்கிறது போல நன்றாக நிறைய படித்தவராகவும் இருந்தார். பிறகு திருவருள் பெருமையினாலே சிறந்த மெய்யுணர்வைப் பெற்றார் அப்பர் சுவாமிகள். அவருடைய பாட்டிலே சிறந்த இலக்கியத்தன்மையும் இருக்கின்றது. சிறந்த சாத்திரத் தன்மையும் இருக்கின்றது.

எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்குக் குருமகா சந்நிதானம் அவர்களுக்கும், இந்தக் கழகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கிய நோக்கு

★

திருமதி சாரதா நம்பியாரூரன், M. A.,
தமிழ்த் துணைப்பேராசிரியை.

★

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய தவத்திரு பரமாச்சாரிய ஸ்வாமிகள் அவர்களுக்கும், ஈண்டுக் குழுமியுள்ள ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்க்கும் என் பணிவன்பான வணக்கங்கள்.

அன்பு நெறியே தமிழர் நெறி

பிறவிப் பெருங்கடலை நீந்தி, அந்தமில் இன்பத்து வீடு என்னும் கரைசேர்ந்து உய்தற்கென ஆன்றோரால் வகுக்கப்பட்டு உள்ள பெரு நெறிகளாவன கருமம், ஞானம், பக்தி எனும் மூன்றே. அவற்றில் பக்தி நெறியே ஏனையவற்றினும் மிக எளிதானதும், மக்களில் பெரும்பாலோர்க்கு ஏற்றதுமாகும். இப்பக்தி நெறியைப் பரப்பியபெருமை நாயன்மார்களைச் சார்ந்தது ஆகும். இவர்களனைவரும் இறைவனது அருள் வெள்ளத்தை முகந்த மேகங்களாகி, வையம் வாழுமாறு பக்தி மழை பொழிந்து மக்களின் நெஞ்சங்களில் அன்புப் பயிரைத் தழைக்கச் செய்தனர். தமது தூய்மையான வாழ்க்கைமுறையாலும், தம் உள்ளத்தே பொங்கி வழிந்த பேரன்பு வெள்ளத்தைத் தேக்கி வைத்ததற்கு உதவிய அருட்பாடல்களாலும் தென்னாட்டையெல்லாம் பக்தி வளமாக்கினர். சொல் எளிய செவிக்கு இனிய இவர்தம் பாடல்களால் கடவுட் பற்றற்ற புறச் சமயங்கள் மக்கள் ஆதரவை இழக்கலாயின. அன்பு நெறியே தமிழர் நெறியாயிற்று.

"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் இணையடிக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனுர் வேண்டுவது"

என்பதை மக்கள் அறியக் காரணமாக இருந்தவர்கள் சைவசமயக் குரவர்களே. இவர்களுள் காலத்தால் மூத்தவர் 'வாகீசர்' என இறைவனுல் பேரன்புடன் அழைக்கப்பட்ட திருநாவுக்கரசர் ஆவார்.

வாகீசர் வரலாறு

கி. பி. ஏழாம் நூற்ருண்டின் இலக்கிய வரலாற்றில் சீர்த்த இடம் பெறுவோருள் தலை சிறந்தவர். புகழனுர்க்கும் மாதினியார்க்கும் மகவாய்ப் பிறந்த இவரது இயற்பெயர் மருள்நீக்கியார் என்பது. சமணராக இருந்தபோது தருமசேனர் என்ற பட்டம் பெற்ருர். அப்பர் என்ற பெயர் சம்பந்தரால் ஏற்பட்டது.

திருமுறை தொகுப்பு

நம்பியாண்டார் நம்பியால் இராசராசசோழன் காலத்தில் தொகுக்கப்பட்ட பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் சம்பந்தர் அருளியவை. 4, 5, 6-ஆம் திருமுறைகள் நாவுக்கரசரால் அருளப்பட்டவை. இவைகள் சைவசமயத்தின் மாண்பை எடுத்து விளக்குவதோடு அமைந்துவிடாது, சிறந்த வரலாற்று இலக்கியமாகவும், பக்தி இலக்கியமாகவும், அணி நலன்களோடு ஒன்பான் சுவைகளும் பொருந்த அமைந்துள்ளன.

வரலாற்று இலக்கியம்

இலக்கிய நோக்குக்கொண்டு பார்க்கும்போது இவருடைய தேவாரப்பாடல்களைப் பல கோணங்களில் காணமுடியும். முதலில் இது ஒரு வரலாற்று இலக்கியம் என்ற கண்கொண்டு நோக்குவோம். இவர் சமண சமயத்தில் இருந்தவர்; பின்னர் சூலை நோயால் இறைவன் இவரைத் தடுத்தாட்கொண்டான் என்பது இவரது வரலாற்றில் முக்கியமான நிகழ்ச்சியாகும். சூலை நோயுற்றுத் திருவதிகை வீரட்டானேசுவரரைப் பாடி, நோயினின்றும் நீங்கி சிவத்தொண்டரானதை,

"கூற்றாயின வாறு விலக்ககலீர் கொடுமைபல செய்தன
நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன்
எப்பொழுதும்;
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு
துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேன்அதி கைக்கெடில வீரட்டா
னத்துறை அம்மானே"

என்ற பாடல் உறுதிப்படுத்தும்.

இவர் சைவ மதத்தைத் தழுவியதைக் கண்ட மன்னன் கொதித்துப் பலவாறு இவரைத் துன்புறுத்தினன். சமணர் இவரை நீற்றறையில் சிறையிட்டதை, "வெஞ்சொற் சமண் சிறையில் என்னை மீட்டார்" (265 : 8) என்ற அடிகளும், நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்பித்ததை "வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா அமணர் தந்த நஞ்சமு தாக்குவித்தார்" என்ற அடிகளும் வலியுறுத்துகின்றன.

"கல்லி னோடெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந் தேனன்றே" 186 : 7)

என்ற பாடல் கல்லைப் புணையாகக் கொண்டு இறையருளால் கடலில் மிதந்து போந்து கரையேறிய வரலாற்றை உணர்த்து கிறது

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே"

என்ற பாடலும் இக்கருத்தை வலியுறுத்தும்.

மேலும் திங்களூர் அப்பூதியார் மகன் அரவு கடித்து இறந்தானை உயிர்ப்பித்ததையும், திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றதையும், திருமறைக்காட்டில் கதவு திறந்ததையும், திருப் பைஞ்ஞீலியில் பொதிசோறு பெற்றதையும் தாமே, தமது திருப்பதிகங்களில் குறித்துள்ளார். இவை இவரது வரலாற்றின் வாய்மையை நன்கு வெளிப்படுத்துகின்றன.

சமய இலக்கியம்

இவருடைய திருப்பதிகங்கள் இறைவன் இயல்பு, உயிர்களின் இயல்பு, இறைவன் உயிர்களுக்கு அருள் செய்யும் திறம், கற்றவர்களும், ஞானிகளும், பிறரும் இறைவனுக்கு அடியார்களாய் அன்பு செய்யும் முறை, இறைவன் அவர்தம் மனத்தின்கண் எழுந்தருளி இன்புறுத்துவது போன்ற பல பொருள்களை விரித்துக் கூறுகின்றன.

"பொறிப்பு லன்களைப் போக்கறுத்து உள்ளத்தை
நெறிப்ப டுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப் புறும்அமு தாயவன்"

என ஒருபாடலில் கூறுகிறார்.

'பொறிப்புலன்களைப் போக்கறுத்து உள்ளத்தை நெறிப்படுத்து நினைந்தவர்' என்ற அடிகள் ஞானிகளும் பிறரும் அடிமையுற்று அன்பு செய்து வழிபடும் முறையினை விளக்குகின்றன. 'சிந்தையுள் அறிப்புறும் அமுதாயவன்' என்பது இறைவன் அன்பர் மனத்தின்கண் தோன்றி இன்புறுத்தும் திறத்தை விளக்கும். வேறொரு பாட்டில்

"சிந்தையுள் சிவமாய் நின்ற தன்மையோடு
அந்தியாய் அனலாய் புனல் வானமாய்
புந்தியாய்ப் புகுந்து உள்ளம் நிறைந்த எம் எந்தை"

என்று கூறுவது, இறைவனது நீக்கமற நிறைந்துள்ள இயல்பை — வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி, உண்மையும் இன்மையுமாய் இருக்கின்ற இயல்பை — உணர்த்துகின்றது.

இவர் காலத்தில் யோக நெறியும், ஞான நெறியும் இறைவழிபாட்டில் சீர்த்த இடம் பெற்றிருந்தன. யோகநெறி நின்றோர், பொறிபுலன்களை ஒடுக்கி, அகக்கண்ணால் உள்ளத்தே உணர்வு வடிவாய் எழுந்தருளும் இறைவனைக் கண்டு வழிபடுவர். இறைவனும் அவர்களுக்கு அங்கே வெளிப்படுந் தேனாய் இன்னமுதாய்ச் சிவானந்தத்தை நல்குவான். இவ்வழிபாட்டு முறையை.

"உயிராவணம் இருந்து உற்று நோக்கி உள்ளக்கிழியின்
உருவெழுதி
உயிராவணம் செய்திட்டு உன்கைத் தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி" (239:1)

என்ற திருப்பாட்டில் எடுத்துரைக்கின்ருர்.

"ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேன்உனை நானல்லேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தால்உனை நானும் தொழு வனே"

என்ற பாட்டால் ஞானநெறியின் நயத்தை உரைக்கின்ருர்.

சீர்திருத்த இலக்கியம்

வாகீசர் வாழ்ந்த காலத்தில் குலம், கோத்திரம் முதலியவற்றின் பெயரால் மக்களிடையே வேற்றுமைகள் தோன்றின. இறைவனது திருவருட் பேற்றில் நாட்டமுடையோர்க்கு இவ்வேற்றுமைகள் கூடா என எண்ணி இவ்வேற்றுமைகளைக் களையப் பெரிதும் முயன்ருர்.

"சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்திர மும்குல முங்கொண்டு என்செய்வீர்
பாத்தி ரம்சிவ மென்று பணிதிரேல்
மாத்திரைக் குள் அரு ளும்மாற் பேறரே" (174:3)

என்ற பாட்டால் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதை வலியுறுத்துகிருர்.

உண்மையன்பும், அருளறமும் இல்லாதார் சமயநெறிகளை மட்டும் பின்பற்றுவதால் யாதொரு பயனுமில்லை என்பதை இவர் தமது பாபநாசக் குறுந்தொகையில் விளக்குகிருர். (213 : 1-10)

இசைத்தமிழ் இலக்கியம்

இவர் இசையில் வல்ல செந்தமிழ்ப் பெருநாவலராதலால், அதற்கேற்ப எண்ணும் எழுத்துமாகிய இரண்டொடு இசையையும் கூட்டி,

"எண்ணவன் காண் எழுத்தவன் காண்
இன்பக் கேள்வி இசையவன் காண்"

என்று பாராட்டி மகிழ்கின்ருர்.

இறைவனின் இணையடி நிழலுக்கு உவமையாக முதலில் வீணையொலியை வைத்து,

" மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கின வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்கிறார். எனவே இசையின்பால் இவருக்குள்ள ஈடுபாட்டை யுணரலாம்.

'பிறவாமை வேண்டும்' என்றார் காரைக்கால் அம்மையார். ஆனால் வாகீசரோ பிறப்பை வேண்டிநிற்கின்றார். எதற்காக? இறைவனது வில்போல் வளைந்த புருவத்தையும் கொவ்வைக் கனி இதழின் சிரிப்பையும், கங்கையைத் தரித்த செஞ்சடை யழகையும், மேனியெங்கும் பூசிய வெண்ணீற்றையும், கால் தூக்கியபடி நின்ற அழகையும் காண்பதற்காக மனிதப் பிறவியை வேண்டுகிறார்.

" குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே"

என்கிறார். எடுத்த பொற்பாதம் காண்பதற்கு மனிதப் பிறவியை வேண்டி நிற்பதிலிருந்து இசையோடமையாது நாட்டியக் கலையிலும் இவருக்குள்ள ஈடுபாட்டை உணரலாம்.

அகப்பொருள் இலக்கியம்

இவருடைய பாடல்களில் அகத்துறைகள் சிறப்புற அமைந்து உள்ளன. தலைமகள் ஒருத்தி ஒருவன்பால் காதல் கொண்டாள்; பின்னர் அவனது அழகையும், ஊரையும் பற்றி அறிந்தாள். பெற்றோரையும் துறக்குமளவு பித்தாகி நின்றாள்; தன்னை மறந்து, நினைவும் செயலும் முழுதுமாக இறைவனது திருவடிகளில் பதித்ததை,

" முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்

அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"

என்ற திருப்பாட்டால் இனிதுரைக்கின்றார்.

இந்நங்கை குயிலினங்களையும், ஏனைக் குருகினங்களையும், வண்டுகளையும் நோக்கிக் காதல் கைம்மிகுதலால் கையற்றுப் புலம்புகின்றாள்.

"மனைக்காஞ்சி இளங்குருகே மறந்தாயோ மதமுகத்த
பனைக்கைம்மா உரிபோர்த்தான் பலர்பாடும் பழனத்தான்
நினைக்கின்ற நினைப்பெல்லாம் உரையாயோ நிகழ்வண்டே
சுனைக்குவளை மலர்க்கண்ணாள் சொல்தூதாய்ச் சோர்வாளோ

என்று கூறி வருந்துகின்றாள்.

இவளது செயலைக் கண்டோருள் சிலர், இவளுக்கு இம் மயக்கமுண்டாவதற்குக் காரணமான இறைவனைக் குறை கூறுகின்றனர்.

"பண்ணி னேர்மொழி யாள்பலி யிட்ட இப்
பெண்ணை மால்கொடு பெய்வளை கொள்வது
சுண்ண மாடிய தோணி புரத்துறை
அண்ண லாருக்குச் சால அழகிதே" (159 : 5)

என்கின்றனர்.

முதுபெண்டிர் சிலர் போந்து 'நங்காய்! நின்னால் காதலிக்கப் படுபவன் நின்மலனாகிய இன்றவன். அவனைக் கூடல் இயலாத தொன்று' என்று கூறியும் தலைவி திருந்தாததால்,

"உறவு பேய்க்கணம் உண்பது வெண்டலை
உறைவது ஈமம் உடலில்ஓர் பெண்கொடி
துறைக ளார்கடல் தோணி புரத்துறை
இறைவனார்க்கு அவள் என்கண்டுஅன் பாவதே?"

என இறைவனைப் பலவாறு பழிக்கின்றனராம்! இங்ஙனம் அகத்துறைகள் அமைந்த அழகுக் கருவூலமாகவும் இவருடைய பாடல்கள் விளங்குகின்றன.

நாற்பொருள் பயத்தல்

இலக்கியம் என்ற சொல் நோக்கம் அல்லது குறிக்கோள் எனப் பொருள்படும். ‘அறம், பொருள், இன்பம், வீடு பயத்தல் நூற்பயன்’ என்கிறது நன்னூல். இவ் விலக்கிய நோக்கும் அப்பருமடைய பாடல்களுக்குப் பொருத்தமாகவே உள்ளது.

இறைவன் திருமுடியில் கங்கையும், பிறைத் திங்களும் பாம்பும் உண்டு என்பது உலகறிந்த செய்தி. கங்கையை இறைவன் தனது சடையில் மறைத்து வைத்துள்ளதை உமையம்மை அறியின் பெருந் தொல்லை விளையுமே என வருந்துகிறார்.

“எங்கள் பெருமான் ஓர்விண்ணப்பம் உண்டுஅது கேட்டருளீர்!
கங்கை சடையுட் கரந்தாய் அக்கள்ளத்தை மெள்ளஉமை
நங்கை அறியின் பொல்லாது கண்டாய் எங்கள்நாயகனே”

என்கிறார். (104:8)

இறைவனது மேனியில் கிடக்கும் பாம்புகளைக் கண்டு உமை அஞ்ச, உமையை மயிலென எண்ணிப் பாம்பஞ்ச, பாம்புகளைக் கண்டு பிறைத்திங்களஞ்ச இவற்றைக்கண்டு, இறைவனது தலையிலுள்ள தலைமாலைகள் நகுகின்றனவாம்!

“கிடந்தபாம்பு அருகுகண்டு அரிவை பேதுறக்
கிடந்தபாம்பு அவளைஓர் மயிலென்று ஐயுறக்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையும் ஏங்கவே
கிடந்துதான் நகுதலைக் கெடில வாணரே”

என்ற பாடலில் சொற்பொருள் பின் வரு நிலையணி அமைந்துள்ள பாங்கு இன்பம் பயப்பது.

“மாடு தானது இல்லெனின் மானுடர்
மாடு தான்செல்வா ரில்லை;பன் மாலையால்
கூட நீர்சென்று கொண்டீச் சுரவனைப்
பாடு மின்பர லோகத் திருத்துமே”

என்ற பாட்டால் பொருளிலாரும் இறைவனருள் குறித்துப் பாடுவாராயின் இம்மையேயன்றி மறுமையிலும் இன்பமடைவர் என்பதை உணர்த்துகின்றார். இங்ஙனம் இது நாற் பொருள் பயக்கும் இலக்கியமாகவும் விளங்குகிறது.

காலக்கண்ணுடி

'இலக்கியம் காலக்கண்ணுடி' (Literature is the Mirror of Life) என்றும், 'இலக்கியம் வாழ்வின் விளக்கம்' (Literature is the Criticism of Life) என்றும் கூறுவர். அக்காலச் சமயநெறி பற்றிய வழக்கங்களை நாமறிய இவர் பாடல்கள் உதவுகின்றன. சிவனடியார்களை ஆட்கொள்ளுமிடத்து அவர்கள் தலையில் பால் தெளித்துத் தீர்த்த நீராட்டுவதும், சென்னியைத் திருவடியால் தீண்டுவதும் வழக்கிலிருந்ததை,

"குண்டனுய்த் தலைபறித்துக் குவிமுலையார்
நகைநாணுது உழிதரு வேனைப்
பண்டமாப் படுத்துஎன்னைப் பால்தலையில்
தெளித்துத்தன் பாதம் காட்டி"

என்ற வாக்கினுல் அறியலாம்.

சைவ அடியார்கள்பால் மக்கள் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டிருந்ததை அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் பெயரால் தண்ணீர்ப்பந்தலும், சத்திரமும் அமைத்துத் தொண்டாற்றியதாலும், பாம்பு கடித்து இறந்த மகனை ஒளித்து விருந்தோம்ப முற்பட்டதாலும் உணரலாம்.

இவரது காலத்தில் சமயப் பொறை இல்லை. சமயக் காழ்ப்பே மிகுந்திருந்தது என்பதை, மன்னன் இவரைத் துன்புறுத்தியதில் இருந்தும், இவர் இறைவனருளால் பதிகம் பாடி மீண்டதில் இருந்தும் அறியலாம்.

முந்துநூல் வழக்கு

"முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றுவம்" என்ற கொள்கைக் கிணங்க, இவர் பதிகங்களிடையே இவர் கற்றனவும் கேட்டனவுமாகிய முந்துநூற் கருத்துக்களும், சொற்களும் வெளிப்படக்காணலாம்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்ற குறள் கருத்தை,

"ஆனத்து முன்னெழுத்தாய் நின்ருர் போலும்"

என்கிருர்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்பதன் கருத்தை,

"ஆரூரரைக் கையினுல் தொழாதொழிந்து
கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே"

என்கிருர்.

"சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவில்
பிறப்புப்பிறி தாகுவது ஆயின்
மறக்குவன் கொல்என் காதலன் எனவே"

எனும் நற்றிணைப் பாடலின் கருத்தை நயத்துடன் எடுத்தாள்கிருர் நாவுக்கரசர்.

துறக்கப் படாத உடலைத்
துறந்துவெந் தூதுவரோடு
இறப்பன்; இறந்தால் இருவிசும்பு
ஏறுவன், ஏறிவந்து
பிறப்பன் பிறந்தால் பிறையணி
வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோஎன்று
என்உள்ளம் கிடந்து மறுகிடுமே (114:8)

சமரச நோக்கு

இறைவன் ஒரு நாமம், ஒருருவம் இல்லாதவன். அவன் அறிவாய் யாண்டும் நீக்கமற நிற்பவன். "இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று எழுதியுங் காட்டவொண்ணுதே" என்கிருர்.

"வாது செய்து மயங்கு மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்
யாதோர் தேவர் எனப்படு வார்க்கெலாம்
மாதே வனலால் தேவர்மற் றில்லையே"

என்ற நாவுக்கரசர் பாடல் இவரது சமரச உணர்விற்குத் தக்கதோர் சான்ருகும்.

முடிவுரை

எனவே திருநாவுக்கரசர் தேவாரம் வெறும் சமய இலக்கியம் மட்டுமன்று, ஒரு வரலாற்று இலக்கியமாகவும், பக்தி இலக்கிய மாகவும், அகத்துறை இலக்கியமாகவும், அறம் பொருளின்பம் வீடு பயக்கும் இலக்கியமாகவும், சீர்திருத்த இலக்கியமாகவும் விளங்கிப் பலவித இலக்கிய நோக்குகளைத் தன்னகத்தே கொண்டு, 'நவில்தொறும் நூல் நயம் போலும்' என்பதற்கோர் எடுத்துக்காட்டாய் இலங்குகிறது என்று கூறி, இவ்வரியதொரு வாய்ப்பளித்தோருக்கும், சொற்பொழிவைச் செவிமடுத்த சான்றோருக்கும் நன்றியும் வணக்கமும் கூறி அமைகின்றேன்.

அப்பர் தேவாரத்துள் சித்தாந்தம்

★

திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார்,
தலைவர், அப்பர் இல்லம், திருவதிகை.

★

தவத்திரு குருமஹா சந்நிதானம் அவர்களுடைய திருவடிகளில் என் அன்பார்ந்த வணக்கங்களை முன்னே செலுத்தி, எழுந்தருளியுள்ள சிறந்த தமிழ் அறிஞர்கள் சிவநேயச் செல்வர்கள் அனைவருக்கும் என்னுடைய தாழ்மையான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு இத்தகைய பெரிய மகாநாட்டில் "அப்பர் தேவாரத்துள் சித்தாந்தம்" என்கிற ஒரு தலைப்பினை வைத்துப் பேசும்படியாகப் பணித்த நமது ஸ்ரீலஸ்ரீ மஹா சந்நிதானம் அவர்களுக்கு நான் நன்றிகலந்த வணக்கத்தை முன்னர் அறிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் இந்த மகாநாடு இத்தகைய பெரிய நிலையிலே சிறந்த சிவநேயச் செல்வர்கள் குழுமியிருந்து திருமுறைகளுடைய சுவைகளெல்லாம் அறிந்த பேற்றிலே இருக்கின்றது எனக்கு ஒரு பெருமகிழ்ச்சியை அளிக்கின்றது. அந்தப் பெருமகிழ்ச்சியிலேயிருக்கின்ற யான், இன்றைய தினத்தில் அப்பர் தேவாரத்தின்கண்ணே காணப்படுகின்ற சித்தாந்தம் என்கின்ற ஒருபொருளைப் பற்றிப் பேசுகிறபொழுது என்னுடைய உள்ளத்திலே சிறந்த மகிழ்ச்சி எழுகின்றது. என்றுதான் சொல்லவேண்டும். சித்தாந்தம் என்கிற வகையிலே பார்த்தோமானுல் சிறந்தமுடிவு, முடிந்த முடிவு என்கின்ற வரையிலேதான் பொருள்கண்டு வருகிறோம். ஆனுல் முடிந்த முடிவு என்பதனுல் அப்பர் ஸ்வாமிகள் தம்முடைய வாக்கிலே, வாழ்க்கையிலே என்ன வகையாக உருகி அதன்கண் நிலைத்த ஒரு கொள்கை இருக்கிறதே, அந்தக் கொள்கைதான் சிறந்த முடிந்த முடிவாக நாம் மேற்கொள்ளவேண்டும். அவரைப் பற்றிக் கூறுகின்ற நம்முடைய சிவஞான ஸ்வாமிகள் நால்வர் தோத்திரற்களுக்குள்ளே ஞானத்தில் வல்லவர் என்ற குறிப்பை இவருக்குச் செய்த தோத்திரப் பாடலில்தான் குறித்திருக்கின்றுர்கள்.

முதலில் பேசிய நம் கவுண்டர் அவர்கள் 'இடையருப் பேரன்பும் மழைவாரும் இணை விழியும் ஞானப்பாடல் தொடையருச் செவ்வாயும் உடையவர்' என்று சொன்னார். ஞானப்பாடல் என்கின்ற ஒரு சொற்றொடர் மற்ற மூவர் ஆச்சாரி யர்களுக்கு நம் சிவஞான ஸ்வாமிகள் வைத்தாரில்லை. ஆகவே திருநாவுக்கரசர் ஸ்வாமிகளுடைய பாடலிலே ஞான மானது, சிவஞானமானது தொக்கு இருக்கின்றது என்பது புலனாகும்.

அவருடைய நிலையை வரலாற்றிலே காண்கின்றபோது ஏறக்குறைய ஒன்பது ஆண்டிலேயே தம்முடைய தாய் தந்தை யர்களை இழந்து தமைக்கையாரோடு உடனாகியிருந்து அவர்கள் படுகின்ற ஒரு துக்கத்திலே தாமும் ஈடுபட்டவராக இருந்திருக் கின்றார். படித்தார். அந்தப் படிப்பும் வளர்ச்சியோடு கூடிய நிலையிலே வந்தது. நமது சேக்கிழார் பெருமான் மனம் முகிழ்த்த சுருள் நீக்கி மலர்விக்கும் கலைப் பயிலத் தொடங்கிவிட்டார் என்று குறிக்கின்றார். அவருடைய படியின்முறை ஞானம் பெற்ற நிலையைக் காண்கிறபோது கூட ஒரு சிறந்த நிலையை நாம் காண்கின்றோம். வயது வந்தபின் தம்முடைய சொத்து எல்லாம் அவர் மக்கள்பால் வைத்த அன்பு நிலையிலே செல விட்டார் என்று காண்கின்றோம். சேக்கிழார்பெருமான் காவளர்த்தார் குளம்தொட்டார் வேதியர்களுக்கெல்லாம் விருந் தளித்தார். பொருள் கொடுத்தார். சிறந்த மெய்ஞ்ஞானிகள் வந்தபோதெல்லம் அவர்களுக்கெல்லாம் கொடுத்தார் என்று குறிக்கின்றார். மக்கள் அன்பு என்ற வகையிலே பார்த்தோ மானால் அவர் தன்னிலை கெட்டவராய்ச் சுயநலத்தை அறவே மறந்தவராய்த் தமக்குப் பின்னர் வேண்டும் பொருள் என்ற நினைப்பில்லாமல் சிறந்த நிலையிலே வளர்ந்தார் என்று காண்கின்றோம். ஆனால், தன்னலம் கெட்டவராக இருந்தாலும் கூடப் பின்னர் அவருக்கு எவ்வாறு ஞானம் வந்தது என்று சொன்னால் துன்பம் மேலிட மேலிட, இதற்கு என்ன காரணம்? பெரியோர்கள் செய்த நூல்களை எல்லாம் நன்கு கவனித்து ஊன்றிப் படிப்போம் என்று படித்தார். நில்லாத உலகு என்று கண்டு நிலையா வாழ்க்கை அல்லேன் என்று அறத்துறந்து சமயங்கள் ஆனவற்றின் நல்லாறு தெரிந்துணர நூல்களை யெல்லாம் படித்தார்.

நம் திருவள்ளுவர் துறவறத்திலே ஞானத்திலே காணப் படுகின்ற நான்கு அதிகாரங்களை எவ்வாறு பாகுபாடு முறைமைக்காக வைத்தாரோ, அந்த முறையிலே நம்

திருநாவுக்கரசு ஸ்வாமிகள் விளங்கினர்கள் என்று காண்கிறேம். நிலையாமை என்பது முன்னுள்ள அதிகாரம். இரண்டாவது துறவு. மூன்ருவது மெய்யுணர்வு. நான்காவது அவாவின்மை. அன்பர்களே நீங்கள் நன்கு கவனிக்க வேண்டும். சேக்கிழார் பெருமான் நில்லாத உலகு என்று கண்டு நிலையா வாழ்க்கையைத் துறந்தார் என்ருர். பிறகு சமயங்கள் ஆனவற்றின் நல்லாறு தெரிந்துணரக் கற்ருர் சொல்கிருர். மெய் உணர்ந்து அவா வின்மையை முன்னமே விட்டவர், ஆக இந்த அவாவின்மை கூர்ந்தபோதே அவருக்கு ஞானம் உதிக்கின்ற நிலை வந்தது. ஆனல் சிறந்த படிப்பு அவருக்கு இருந்ததினலே நம்பருடைய அருள் இல்லை. சாத்திரம் பல பேசும் சழக்கராக அவர் விளங்கினர். வருவாரைக் கேள்வி கேட்பது, வாதம் செய்வது, செருக்குக்கொள்வது, தருக்குக் கொள்வது, அவர்களை அடக்குவது இந்த முறையிலேயே தம்முடைய காலத்தைப் போக்கினர். போக்கிய வகையிலே உண்மை கூடவில்லை. ஆனல் திலகவதியார் செய்த தொண்டின் சிறப்பினலே ஆண்டவன் திருவுள்ளம்கொண்டு இவரைத் தன்பால் ஈர்த்துக்கொள்ள ஈசன் அருள் கூடுதலால் இந்தத் துயராண்டு ஒழியாத காரணத்தினலே " செவ்வாறு சேர் திலகவதியார்தாள் சேர்வன் என்று எழுந்தார் " என்று சேக்கிழார் பெருமான் சொல்கிருர். அன்பர்களே இரண்டாவதாகப் பேசப்பட்ட நிலை இருக்கிறதே, ஆன்மீகத்துறையிலே வைத்த ஓர் அன்பு. இப்பொழுது இறைவனது திருவருள்கூடிய காரணத்தினலே நேர்ந்த ஒரு அன்பு இருக்கிறதே, தெய்விக அன்பு அதுதான் பக்தி என்று சொல்லவேண்டும். பக்திக்கு ஒரு இலக்கண விளக்கம் நம்முடைய திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஒரு திருக்குறுந்தொகையில் கூறுகின்ருர்

" பித்த னைப்பெருந் தேவர் தொழப்படும்
அத்த னைஅணி ஆமாத்தூர் மேவிய
முத்தி னைஅடி யேன்உள் முயறலும்
பத்தி வெள்ளம் பரந்தது காண்மினே "

பக்தி வெள்ளம் பரந்தது. ஆகையினலே அன்பர்களே இந்த மூன்று நிலை காண்கின்றபோது நம்முடைய முதல்நிலை மக்கள் அன்பு. இரண்டாவது நிலை அந்த ஆன்மிக அன்பு. மூன்ருவது நிலை தெய்விக அன்பு—பக்தி என்று சொல்லவேண்டும்.

இதனை விளக்கமாக நமது அரவிந்துகோஷ் அவர்களும் முதல் மக்கள் அன்பு என்பது ஹ்யூமன் லவ் (Human Love)

இரண்டாவது ஆன்மீக அன்பு என்பது 'சைக்கிக் லவ்' (Psychic Love) மூன்ருவது ஆக சொல்லப்படுவது 'டிவைன் லவ்' (Divine Love) ஆக பக்தி என்று எழுதியிருக்கின்ருர், அன்பர்களே! ஆகையினுலே, இந்தப் பாகுபாடு அப்பருடைய வரலாற்றிலே காண்கின்றபோது அருள் கூடிய காரணத்திஞலேதான் அவருக்கு சிறந்த நிலே கூடிற்று என்று காணுகிருேம். அவருடைய வாக்கிலேயே அது காண்கிறது. 'பந்தமறுத்து என்னே ஆளாக்கிப் பணிகொண்டாங்கே பன்னிய தமிழ்மாலே பாடுவித்து என் சிந்தை மயக்கம் அறுத்தாள்வது' என்ற தொடரை நோக்குக. திருவதிகை வந்து பெருமானே வணங்கிய காலத்திலேயே அவருக்குப் பாடுகின்ற உணர்ச்சி கூடிற்று. ஆனுல், சூலே காரணமாக அவர் பாடினுர் என்பதன்று. சேக்கிழார் அதற்கு ஒரு சிறந்த தன்மையைக் காட்டுகிருர்கள்: "பிணி மாயை அறுத்திடுவான் கூற்ருயின வாறு விலக்ககிலீர் என்று நீடிய கோதில் திருப்பதிகம் போற்ருலுல கேழின் வருந்துயரம் போமாறு எதிர் நின்று புகன்றனரால்" என்று சொல்லுகிருர். அவர் பாடியது சூலேநோய் போக்குவதற்கு ஆக இல்லே. உலகத்திலே உயிர்களேப் பிரித்த மாயையைப் போக்கும் பொருட்டுக் கூற்ருயினவாறு என்று பாடினுர் என்று குறிக்கின்ருர்கள். ஆகையினுலே அன்பர்களே, சூலே நோய் என்பது சாதாரணமாக ஒரு காரணமே ஆகும். ஆனுல் அவர் பாடியது, பந்தம் அறுத்து ஆளாக்கி ஆங்கே பன்னிய செந்தமிழ் மாலே பாடுவித்து என் சிந்தை மயக்கு அறுத்த திருவருளினுலே" என்று சொல்லுகின்ருர். எனவே பாடியதினுலேயே பந்தத்தை அறுத்துவிடலாம் என்று அவர் காட்டிய வழி அவர் பாட்டின் முடிந்த முடிவு என்று தான் சொல்லவேண்டும். அவர் கொடுக்கின்ற ஓர் ஆணே பாருங்கள்! "பரந்து பணிமின் பணிவாரோடு இருமின், பரவாதாரை விடுமின்" இதைவிட வேறு என்ன நமக்கு உபதேசம் அவர் சொல்லவேண்டும். அது தான் நமக்கு லட்சியமாக இருக்கவேண்டும், அதுதான் நமது மெய்ப்பொருள்.

நம்முடைய திருநாவுக்கரசு சுவாமிகள்தான் நமக்கு வழி காட்ட வேண்டும். நமது நிலேயைச் சிறிது சிறிதாகப் பக்குவ படுத்த அவர் காட்டிய நிலேயிலே தான் முன்னேற வேண்டும். அந்தக் கூற்ருயினவாறு என்ற பதிகத்திலே ஈற்று பாட்டிலே நான்கு சொற்களே உங்களுடைய கவனத்திற்கு கொண்டுவர நினேக்கின்றேன்.

"வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என் வேதனேயான விலக்கியிடாய்"

என்ன அழகு பாருங்கள். இந்த நான்கு சொற்களும் நான்கு நிலைகளைக் குறிக்கின்றன. முதலிலே என்ன தோன்றுகிறது? பிறவியினாலே வந்தது துன்பந்தானே. வெறுத்தும் என்று – குறிக்கின்றார். குறித்தார். வெறுத்ததனாலேயே துன்பத்தைப் போக்கவேண்டும் என்ற உணர்ச்சி வந்து வேண்டும் போது இழிந்த நிலையிலே இருந்து மாறவேண்டும் அன்றோ? மாறினார். சமண சமயத்தில் இருந்து சைவ சமயத்திற்கு மாறினார். சுந்தரர் திருவாவடுதுறையில் பாடிய ஒரு திருப்பாடல் இதற்கு விளக்கம் சொல்கிறதுபோல இருக்கிறது.

"தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்திரப்பந்தர் சிக்கன இயற்றச்
சுருண்ட செஞ்சடையாய் அதுதன்னை சோழனாக்கிய
தொடர்ச்சி கண்டு அடியேன்
புரண்டு வீழ்ந்து நின் பொன்மலர்ப் பாதம்
போற்றிபோற்றி என்று அன்போடுபுலம்பி,
அருண்டென் மேல் வினைக்கு அஞ்சி வந்தடைந்தேன்
ஆவடுதுறை ஆதி எம்மானே"

என்று குறிக்கின்றார். புரண்டாராம். அவரும் ஒரு மயக்கத்தில் இருந்து புரண்டு ஆண்டவனைப் போற்றுகின்ற அன்போடு புலம்பி, அந்த உயர்ந்த நிலையை அடைந்தார். அதுபோல அந்தப் புரண்டு என்கிற சொல்லானது ஒரு மயக்க நிலையில் இருந்த தன்மையினாலே மயக்கம் அறுபட்டு நிலைகூடியபோது மாறிச் சிவன் அடிக்குப் பாத்திரமாக நிற்கின்ற நிலையைச் சுட்டும். அங்கேயும் கூட நான் புரண்டு விட்டேன். வேறொரு சமயத்திற்கு வந்துவிட்டேன். விபூதி அணிந்தேன். நான் அதற்கு வேண்டிய முறைகளைக் கைக்கொண்டேன் என்று சொன்னால் பயன் இல்லை. என்ன செய்யவேண்டும்? அவன் திருவடிகளிலே அடைக்கலமாகப்புகவேண்டும் என்ற கருத்தை அறிவுறுத்துவார், விழுந்து என்று சொன்னார். புரண்டும் விழுந்தும் அதற்கு மேலே சொல்கிறார். எழுந்தால், தெளிவு கிடைத்தால், அந்த தெளிவு வேண்டும்போதுதான் ஆண்டவன் இவருக்குள்ள வேதனையை அகற்றுவான். அது இன்னும் போகவில்லை என்று விண்ணப்பம் செய்கிறார். ஆகையினாலே அங்கே என்ன காண்கிறோம்? ஆண்டவனுடைய திருவடிகளிலே பற்று வைத்து அவனுக்கு அன்போடு வணக்கத்தைச் செய்கின்ற முறையிலே அவனைத் தொழுகின்ற முறையிலே அப்பர் ஸ்வாமிகள் காட்டிய நிலையிலே நாம் செல்லவேண்டும். பின்னர்ச் சித்தாந்தம் என்று சொல்லிய

வகையில் ஒரு சிறந்த கருத்தைச்சொல்ல அவருடைய திருப்பாட்டிலே ஒன்றை எடுத்துக்காட்டாக விளக்க வேண்டும். மக்களாய்ப் பிறந்தோம். மக்களாய்ப் பிறந்தவர்களுக்கு என்ன என்ன குறைபாடு இருக்கவேண்டும்? நாம்தான் பிறந்தோம், அறிவு உடையோம் என்ற முறையிலே இருக்கலாமே என்று சொன்னால் நமக்கு ஆண்டவன் "மால்கொடுத்து ஆவி வைத்தார் மாமறைக்காடனுரே" என்று குறித்தார். மால் என்பது மயக்கம் தான். இந்தச் சிந்தை மயக்கத்தை அறுத்துவிடலாம் என்று முன்னே சொன்ன கருத்தைத் தெரிவித்தேன். ஆனால் சாதாரணமாக நம் போன்ற மக்களுக்கு எல்லாம் இந்த மயக்கம் இருந்தபடியே இருக்கின்றது. அந்த மயக்கத்தை ஒழித்துக்கொள்ள வேண்டும். இவர் மயக்கம் என்ன செய்தது. இவர் என்ன செய்தார், அதனுடைய தன்மை என்ன என்று விளக்குகின்றது ஒரு பாட்டு.

"இருள்தரு துன்பப் படல மறைப்பமெய் ஞானமென்னும்
பொருள்தரு கண்ணிழந் துள்பொருள் நாடிப் புகலிழந்த
குருடருந் தம்மைப் பரவக் கொடுநர கக்குழிநின்
றருள்தரு கைகொடுத் தேற்றும் ஐயாறன் அடித்தலமே"

இருள்தரு துன்பப்படலம் மறைப்ப, துன்பம் தரும் இருள்படலம் மறைப்ப என்று பிரித்துக்கொள்ள வேண்டும். ஒருவன் கண் உடையவன்தான். அவனை ஓர் அறையிலே வைத்து நன்றாக இருள் படியும்படியாக வைத்து எல்லாம் மூடிவிட்டால் அவன் அதற்குள் இருக்கின்றபொழுது ஐயோ, நமக்கு அறிவு இருந்தும் பயன் இல்லையே என்று துன்பப்பட்டு அங்கேயே கிடக்கின்ற நிலை காண்பாருக்கு இரக்கமூட்டும். அதுபோல நமக்கு ஓர் இருள் இருக்கின்றது. அந்த இருள், ஆணவம் என்பது. உயிர்களுக்கு மூன்று அழுக்குகள் இருக்கின்றன என்று பெரியோர்கள் பேசினார்கள் அல்லரோ? ஆணவம் என்பது ஒன்று. இரண்டாவது மாயை மூன்றாவது கன்மம். அநம் பேசுவதாய் இருக்கின்ற மலத்தைச் சகசமலம் என்று நமது சைவ சித்தாந்த சாத்திரங்கள் கூறும். கன்மம் மாயை என்ற இரண்டு மலங்களையும் ஆகந்துக மலம் என்று பேசும். ஆனால் இந்த இரண்டு மலங்களுடைய நிலையைப்பற்றிச் சிறிது உணர்ந்துகொள்ள வேண்டும். இந்தச் சகசமலம் என்பது உயிர்களை மறைத்துக்கொண்டிருக்கின்ற நிலையை உடையது. சகசம் என்பதற்கு உயிர்களை எப்பொழுதும் விட்டு நீங்காததாய் ஒன்றாக இருப்பது என்பது பொருளாகும். ஒன்றாய் இருந்து எப்பொழுதும் மறைத்துக்கொண்டு இருக்கின்ற தன்மையை உடையது அது. அதனால் அந்த உயிருக்கு அறிவு இல்லையா என்று கேட்டால் அறிவு உண்டு. உயிருக்கு அறிவு

இருக்கிறது. ஆனுல் ஒரு திரைபோட்டு மூடிய காரணத்தினுலே அந்த அறிவு வெளியே செல்லமாட்டாமல் தன்னிடத்திலே இருந்துகொண்டு துக்கத்தை விளைவித்துக்கொண்டு இருக்கின்றது என்று சொல்கின்ருர்கள். அதனைச் சிவஞான முனிவர் விளக்கமாக "ஞான திரோதகமாய் மறைத்துக் கொடு நிற்றலாம்" என்று சொல்கிருர். திரோதகம் என்பதற்கு மறைப்பது என்பது பொருள். ஆனுல் இந்தத் திரோதகம் மறைத்துக்கொண்டு நிற்றலாகிய அந்தத் தமிழ்மொழியிலே ஒரு விளக்கத்தை சொல்கிருர். அந்த உயிருக்கு அறிவு உண்டு. முதல்வனுக்கும் அறிவு உண்டு. முதல்வன் எத்தகைய அறிவு உடையவனே அந்த உயிரும் அத்தகைய அறிவு உடையது தான். ஆனுல் முதல்வனை மறைக்கின்ற ஒரு சக்தி கிடையாது. ஆணவம் இல்லை. ஆனுல் மறைத்துக்கொண்டு இருக்கின்றதாகிய சக்தி ஒன்று இருக்கிறது. அறிவு கெடவில்லை. என்ருலும் மறைக்கின்ற காரணத்தினுலே முதல்வனைக் காணவில்லை. மாயை, கன்மம் என்பன ஆகந்துக மலம். அவை ஆண்டவனுல் இந்த உயிர்களோடு பொறுத்தப்படுகின்றன. அந்த மாயையைக் கொண்டு அறிகின்ற ஆற்றல் உயிருக்கு வருகிறது. உயிர், உயிருக்கு மாயை என்ற ஒரு விளக்கம் போன்று இருந்துகொண்டு பொருளை கேட்கின்றவகையினுலே கண்டு அதை அனுபவிக்கின்ற முறையிலே அனுபவித்துக்கொண்டே இருக்கின்றது. அந்த முறையைத்தான் நமக்குக் காட்டுவார் போல "மறைப்ப" என்ற சொல்லினுலே ஞான திரோதகமாய் மறைத்துக்கொண்டு நிற்ற லாகியிருக்கின்ற தன்மை இந்த ஆணவமாக நிற்கின்ற ஒன்று செய்கிறது என்ற குறிப்பைக் காட்டுகின்ருர் நம்முடைய அப்பர் மூர்த்திகள். அப்பருடைய திருவாக்கிலே இருந்துதான் அவர்கள் கண்டார்களோ அல்லது தமக்கு உதித்ததோ என்ற முறையிலே இந்தப் பொருள் காணப்படுகின்ற தன்மை காணக் கூடும். "இருள்தரு துன்பப்படலம் மறைப்ப" இந்த இருள் என்பது ஆணவம் என்கின்ற பொருள் ஆகும். அதை ஒழித்தால் தான் மெய்ஞானம் காண நமக்குக்கூடும். "ஆனவமான படலம் கிழித்துக்காணரிய மெய்ஞ்ஞானக்கண் காட்டி" என்பதனைத்தான் 'பொருள்தரு மெய்ஞ்ஞானம் என்னும்' என்ருர். கண் இழந்து மெய்ஞ்ஞானம் என்னும் கண்தான் ஆண்டவனைக் காண்பதற்குக் கருவியாக இருந்தது. அது என்ன ஆயிற்று? அந்தப் பொருள் என்பது பரம்பொருள். அந்தப் பரம்பொருளைக்காட்டுவிக்கக்கூடிய தாக இருக்கின்ற மெய்ஞ்ஞானக்கண் ஆனது இழந்துவிட்டார்.

இழத்தல் என்பதனைப்பற்றி சற்று அறிந்துகொள்ளலாம். பொருள் உண்டு. நம் கைக்கு எட்டவில்லை. ஆண்டவன்

இருப்பான். ஆனால் பற்றுவைத்த இந்த உயிர் ஆண்டவனை அடையவில்லை. அடையாத காரணத்தினாலே இழந்தது என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த உயிரானது ஆணவம், கன்மமாகிய அறிவுகொண்டு மாயா மலம் முதலியவற்றைத் தானும், தன்னை சேர்ந்து இருந்த மாயையும் கன்மமும் தன்னை சார்ந்திருந்த போதிலும் ஆண்டவனிடத்திலே செலுத்தாமல் அது மாயை சம்பந்தமான பொருளிலேயே அனுபவிக்கின்ற தன்மையைநாடிச் சென்றது என்பதை பொருளாக வைத்து ஊன்பொருள் நாடி அனுபவிக்கின்றதாக நிற்கின்ற அந்த மயக்கத்திலே இருக்கின்ற பொருளிலே தான் கலந்துகொண்டு அங்கேயே அழிந்து போகின்ற நிலைமையிலே இருக்கின்றதே தவிர, இறைவனை நாடு கின்ற செயல்களில் எட்டவில்லை. இந்த இரண்டு வரிகளுடைய கருத்தாக ஆணவமானது மறைக்கின்ற காரணத்தினாலே ஆண்டவனை அறிகின்ற மெய் ஞானக்கண்ணைத் தான் பெறாமல் பின்பு உலக நிலையிலே சூழ்ந்துகொண்டு தன்னைக் கெடுத்துக் கொண்டே போகின்றது. ஆகவே, இறைவனை அடைகின்ற புகலாக அடைக்கலம் புகுதற்கு இருக்கின்ற நிலையையே ஒழித்தது என்பது பொருள் ஆயிற்று. ஆண்டவன்தான் புகல். திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பாதிரிப்புலியூரிலே அங்கே அவர் கடலிலே மிதந்து வந்து பாடுகின்றபோது அழகாகச் சொல்கின்றார். மனத்துக்கு அறிவுறுத்துகிறார்.

"பற்றாய் நினைந்திடப்போது நெஞ்சே யிந்தப்பாரைமுற்றும்
சுற்றாய் அலைகடல் மூடினுங்கண்டேன் புகல் நமக்கு
உற்றான் உமைய வட்கன்பன் திருப்பாதிரிப்புலியூர்
முற்றா முளைமதிக் கண்ணியி னான்றன் மொய்கழலே."

திருப்பாதிரிப்புலியூரிலே இருக்கின்ற பிறைச்சந்திரனை அணிந்து இருக்கின்ற பெருமானுடைய திருவடியே, மொய் கழலே, எல்லோரும் போய் மொய்த்துக்கொண்டிருக்கின்ற திரு அடி, அது உயிர்களை எல்லாம் அடைகின்றதாக நிற்கின்ற திரு அடி, அந்தத் திருவடியைப்போய்ப் பற்றிக்கொள். அதுதான் புகல். இந்தப் புகல் என்ற ஒருசொல் அங்கே இருக்கின்ற காரணத்தினாலே ஆண்டவன் முன்னமே புகுந்துவிட்டான் போல இருக்கின்றது. திருநாவுக்கரசு சுவாமிகளுக்குப் திருப்புகலூரிலே ஒரு தன்மையும் காணப்படுகிறது. 'திருப்புகலூர் என்ற ஒருஸ்தலம் இருக்கின்றது அங்கேதான் நீ புகவேண்டும்' என்ற தன்மையை முன்னே விளக்குவது போல அவருடைய திருவாக்கிலே வந்துவிட்டது அன்பர்களே,

"பற்றுய் நினைந்திடப்போது நெஞ்சே யிந்தப் பாரைமுற்றும்
சுற்றுய் அலைகடல் மூடினுங் கண்டேன் புகலைநமக்கு
உற்றுன் உமையவட் கண்பன் திருப்பா திரிப்புலியூர்
முற்று முளைமதிக் கண்ணியி னுன்றன் மொய்கழலே"

அன்பர்களே இப்படிப்பட்டப் புகல் பெறுத நிலை வந்து விடுகிறது. ஆனுல் அடுத்து சொல்லுகிருர். அவருக்கு ஆர்வம் பொங்குகிறது. இப்படி ஆண்டவனை விட்டுவிடலாமா? ஆனுலும், விடாமல் அவனைப் பற்றுதற்கு ஆண்டவனை வேண்டிக்கொள்ளவேண்டும். "பிழையுள்ளன பொறுத்திடுவீர் என்றடியேன் பிழைத்தக்கால் பழியதனைப் பாராதே படலம் என் கண் மறைத்திட்டாய் என்று சுந்தார் சொல்கிருர் அல்லரோ? புகலை நான் என்ன செய்வேன்? அதை நீக்குவதற்கு வேண்டித்தான "பிழைத்தவைகள் அத்தனையும் பொறுத்தாயன்றே" என்று சொல்கிருர். அப்பர் மூர்த்திகளும், பிழையெல்லாம் நீக்கி ஆள்வான் என்று சொல்கிருர்கள். பரம காருண்யவானுக நிற்கின்ற நிலையைப் பரம மூர்த்திக்குச் சொல்லிவிட்டு இவ்வாறு மாறுபட்ட நிலையில் கைவிட்டு விடுவானே? கைவிட்டு விடமாட்டான். அந்தக் கருத்தை நன்கு விளக்குவதுபோல அடுத்த இரண்டு அடிகளிலே அதைச் சொல்கிருர். ஒருவன் ஆண்டவனை அறியாமல் இருக்கிற ஒரு காரணத்தினுலேயும் காணுத காரணத்தினுலேயும் அவன் குருடனுய் இருக்கின்றுன். உண்மை நிலையைக் குறிக்கின்ற ஒரு துயரம் காரணமாக ஆண்டவனைத் தான் பற்றி நிற்கவேண்டும் என்று வந்தபோது அவன் என்ன செய்வான்? ஆண்டவனே என்றுதான் கூறுவான்.

ஆனுல் வந்த துக்கங்கள் இருக்கின்றனவே அவை ஆண்டவனை நாடும்படி செய்கின்றன. தம்மைப் பரவக் கொடு நரகக் குழியினின்றும் அருள்தரு கை கொடுத்து ஏற்றும் ஐயாறன் அடித்தலமே. எவ்வளவு மிகுந்த மோசமாக நிற்கின்ற தன்மையிலே இருக்கின்ற ஒருவனைக்கூடக் கைவிடாமல் அவன் இருக்கின்ற ஆழ்ந்த கொடு நரகத்தில் இருந்து அவனை மேல் தூக்கி விடுகின்ற அருளை உடையவன் பெருமாள் என்று சொல்கின்றுர். இந்தக் கருத்து ஆண்டவனிடத்திலே ஒப்படைக்கின்ற ஒரு தன்மை உயிர்களுக்கு இருக்கின்றதனுலே அந்த உயிர்களுக்கு உண்டாகின்ற அறிவு எல்லாம் பின் ஆண்டவனுடைய அறிவாகவே திகழ்கிறது. அதில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் இருந்த நிலையிலே திருநொடித்தான் மலைக்குச் சென்றபொழுது "ஊண் உயிர் வேறு செய்தான் நொடித்தான் மலை உத்தமனே"

என்று குறிக்கின்றார். அதற்குப் பலவகையாகப் பொருள் சொல்கிறார். ஊனிலிருந்து உயிர் பிரிந்தது என்று அதைச்சொன்னால் பிணம் என்றுதானே நினைப்பர். ஆனால் அவர் அந்த முறையிலே சென்றார் இல்லை. சில பேர் சூட்சம சரீரத்தில் சென்றுவிட்டார்கள் என்றும் சொல்வார்கள். நம்பியாண்டான் நம்பிகள் ஞான ஆரூரடியும் சேரரடியும் அவருடைய மானவ ஆக்கையோடு தான் கைலாயத்திற்கு வந்தனர் என்று பாடுகிறார்கள். அந்தக் கருத்தோடு அவர் குறிக்கவில்லை. இந்த ஊன் என்ன செய்கிறது? அதைக்கூடச் சொல்கிறார். "மண்ணிடைக்குரம்பை தன்னை மதித்திடீர் மையல் எய்தின் விண்ணிடைத் தருமராசர் வேண்டிடல் விலக்குவார் யார்? நாம் ஏதோ இருக்கிறோம். இந்த உடம்பின் காரணமாகப் பலவகையான தீவினை செய்கின்றோம். தீவினை செய்கின்ற காரணத்தினாலே நாம் குறுக்கு வழி போகிறோம். நமக்குச் சிறிதும் பயமில்லை. இறக்கவே மாட்டோம் என்று சொன்னால் தர்மராஜன் வருகிறான். பாசத்தை வீசுகிறான். கொண்டுபோகின்றான் என்று நாம் காண்கின்றோம். ஆகையினாலே இந்த உடல் சம்பந்தமாக நின்று உடலுள்ளாக நிற்கின்ற பல வகையான அனுபவங்களைப் பெறலாம். இன்பங்களை நுகரலாம் என்று சொல்லிக்கொண்டே, நாம் வேலைசெய்து கொண்டே இருந்தால் அதனால் வருகின்ற துக்கங்களை நாம் பொருட்படுத்தாமல் இருப்போமானால் என்ன ஆகும்? பிறவி வந்துகொண்டே இருக்கும். ஆனால் இந்த உடலும் ஊனில் இருந்து தன்னைப்பிரித்துக்கொண்டு ஆண்டவனையே நினைப்பது என்ற ஒருநிலையில் இருப்போமானால் இந்த மாயா சம்பந்தமான பொருள்களை எல்லாம் ஆண்டவனுடைய தனுவாக – உடலாக – மாற்றும்படியாக அமைத்துக்கொள்ள வேண்டும். உள்ளே இருக்கின்ற உயிரையும் சிவமாக மாற்றிக்கொள்ள வேண்டும். அதனை வற்புறுத்திச்சொல்கிறார் நம் மாணிக்கவாசகனார். "இது அவன் திரு உரு இவன் அவன் எனவே எங்களை ஆண்டு கொண்டு இங்கெழுந்தருளும்" — இதுதான் உண்மைக் கதை. அந்த முறையிலே செல்வதுதான் நம்முடைய திருநாவுக்கரசருடைய கருத்து என்று சொல்லிக்கொண்டு எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

பார்வையாளர் – முன்னுரை

12—2—71 வெள்ளிக்கிழமை இரவு

★

டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., எம். லிட்., பி. எச். டி.

சென்னை பல்கலைக்கழகம்.

★

தெய்வத் திருவாடுதுறை குருமகாசந்நிதானத்தின் பொன்னார் திருவடிகளுக்கும், திருவிடைமருதூரில் நடைபெறும் திருமுறை கருத்தரங்கைக் கண்டு அருள, கேட்டருள வந்திருக்கும் தாய்மார் களுக்கும், பெரியோர்களுக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கங்களை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் ஞானப்பிரகாச தேசிய பரமாச்சரிய சுவாமிகள் இங்கே எழுந்தருளியிருக்கிறார்கள். என்னையும் இங்கே இருக்கும்படி செய்திருக்கிறார்கள். சிவபெருமான் கொன்றை மலரை எப்படி விரும்புகிறாரோ அந்த அளவு எருக்கம்பூவையும் விரும்புவதுபோல இது இருக்கிறது. புறநானூற்றுப் புலவனின் சங்கப்பாவினை உணர்ந்தவாறு இது இருக்கிறது என்று உள்ள படியே உணர்ந்துதான் குறிப்பிடுகிறேன்.

என்னுடைய ஆசிரியவாழ்க்கை, தமிழ்த்தொண்டு வாழ்க்கை இருபது ஆண்டுகளுக்கு முன்பு காஞ்சிபுரத்தில் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் வீட்டில் தொடங்கியது. அவர்களும் அருணைவடிவேல் முதலியார் அவர்களும் என்பால் வைத்திருந்த அன்பின் பயனாகத்தான் நான் இன்று இந்த நிலைமைக்கு வந்துள்ளேன். அவர்கள் தான் இந்தப் பணியை என்மேல் சுமத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கும், இந்தக் கருத்தரங்கைத் தாய் அன்போடும், தந்தையின் செயல் திறத் தோடும் நடத்தி வருகிற ஆணையர் அருணாசலம் பிள்ளை அவர் களுக்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தநிலையில் இப்போது நடைபெறவிருக்கிறது மூன்றாவது கருத்தரங்கு. எங்கள் தமிழ்த்துறைக்கும் சுந்தரருடைய தேவாரம்

பற்றிய தேவார ஆராய்ச்சிக்கும் இடையே மிக நெருங்கிய மிக உயர்ந்த தொடர்பு உள்ளது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு பேராசிரியர் டாக்டர் சேதுப்பிள்ளை தலைமையில் இயங்கிய தமிழ்த்துறை ஓர் ஆராய்ச்சித் திட்டம் வகுத்தபோது துணைத் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர்கள் டாக்டர் துரை அரங்கசாமி அவர்கள், விரிவாகச் சுந்தரர் தேவாரத்தை ஆராய்ந்து ஆங்கிலத்தில் ஏறத்தாழ ஆயிரம் பக்கங்களில் எழுத வேண்டுமென்று ஒரு ஏற்பாடு செய்ய. அதன்படி அவர்தம் வாழ்நாள் பணியாக மேற்கொண்ட சுந்தரர் தேவாரம் பற்றிய ஆராய்ச்சி நூல் சென்னைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது. அது மிகப்பெரிய நூல். மிக உயர்ந்த நூல். இதை நான் சுந்தரரைப் பற்றிய திருமுறை கருத்தரங்கத்தில் குறிப்பிடவேண்டியது தலையாய கடமையன்றோ? ஆகவேதான் அந்தப் பல்கலைக்கழக நினைப்போடும் இங்கே அதைக் குறிப்பிடுகிறேன்.

காலையில் பல்கலைக்கழகச் செல்வர் அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். இந்த உலகத்திலே சிறப்பாக ஐச்வர்யம் அமெரிக்காவிலே இருக்கிறது. அந்தக் கோடீஸ்வரர் நாட்டிலே தான் மனக்கோளாறு மிகுதிப்பட்டு வருகிறது. பைத்தியங்கள் மிகுந்து வருகின்றன. சென்னையில் கீழ்ப்பாக்கத்தில் இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கருத்தைக் கேட்டபோது எனக்கு இளம் வயதில் என்னை அளவுக்கு உயர்த்திய நூல் ஒன்று படித்தது நினைவுக்கு வந்தது. விவேகானந்தர் அவர்களுடைய "இன்ஸ்பயர்டு டாக் ஆப் அமெரிக்கா" என்ற நூலாகும் அது. அவர்கள் அதில் ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த உலகம் ஒரு பைத்தியக் கார உலகமாக ஆகவேண்டும் என்று கூறுகிறார். பல்கலைக்கழகச் செல்வர் சொன்னதற்கும், சுவாமி விவேகானந்தர் சொல்லிய தற்கும் முரண்பாடு ஒன்றும் இல்லை. பொன், பெண், மண், பதவி இவற்றில் இருக்கிற பைத்தியம் போய் கடவுள் பைத்தியங்கள் நிறைந்த உலகமாக இது ஆகவேண்டுமென்று விவேகானந்தர் சொல்லியிருக்கிறார். இதைக்கூடக் கருத்தரங்கில் சொல்வதற்குக் காரணம் "பித்தா" என்று இறைவனையே சுட்டிப்பாடிய பெருமானைப்பற்றிய கருத்தரங்கு அன்றோ இது. ஆகவே இந்த உலகம் கடவுள் பைத்தியங்கள் நிறைந்த உலகமாக ஆகவேண்டுமென்பதில் இருக்கின்ற இன்றியமையாமையை புலப்படுத்துவதற்குத்தான் குறிப்பிட்டேன்.

அடுத்து நான் சொல்லவேண்டிய ஒரு கருத்து முறைப்படி இது மூன்றாவதாக அமைந்திருக்கிற கருத்தரங்கு. சுந்தரமூர்த்தி

களுடைய வரலாற்றைப் பார்க்கும்போது முன்னே எந்த இரு பெரியவர்களுடைய திருமுறைகளை அறிந்தோமோ அவர்கள் இடத்தில் சுந்தரமூர்த்திகளுக்கு இருந்த எல்லையில்லாப் பக்தியை நினைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் வாழ்ந்த இடத்தைக் கூட மிதிக்கக் கூசினார் என்பது மெய்சிலிர்க்கச் செய்கிறது. சுந்தரருடைய தனிச்சிறப்பே தடுத்தாட்கொள்ளப்பட்ட தகைமைதான். அவர் வன்தொண்டர் என்று பெயர் எடுத்தார் இன்றைக்கு உலகமே தடுத்தாட்கொள்ளப்படவேண்டிய ஒரு நிலைமையில் தான் இருக்கிறது. நாம் எல்லாம் தொண்டர்களானாலும் அறிவியலின் தாக்குதலினாலும், அரசியலின் கொடுமைகளாலும் வன்தொண்டர்களாகக்கூடிய நிலைமையில்தான் இருக்கிறோம். ஆகவே இந்தத் திருமுறைக் கருத்து அரங்கு முறையாக நம்மிடம் நெருங்கி வருகிறது என்ற நினைப்பில்தான் இதைச் சொல்கிறேன்.

மற்றொன்று. சுந்தரருடைய தனிச்சிறப்பு அவரது திருத்தொண்டத்தொகை தோன்றவில்லை என்றால் திருத்தொண்டர் புராணம் தோன்றியிருக்குமா என்று எண்ணிப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. தொண்டர்களைத் தொகைப்படுத்திய ஒரு பெரியவர் அவர். எம்பெருமானால் ''சொற்றமிழ் பாடு'' என்று சொல்லப்பட்ட பெரியவர் அவர். அவருடைய தேவாரத்தை இலக்கிய நோக்கோடு, சாத்திர நோக்கோடு பலர் ஆராய்ந்து பேச இருக்கிறார்கள். எந்த ஒரு இலக்கியத்திற்கும் அடிப்படைகள் இரண்டே இரண்டுதான். இரு கண்கள் போன்றவை. ஒரு கண் சுவை, இன்னொரு கண் பயன். இலக்கியம் என்பது சுவை. சாத்திரம் என்பது பயன். உடனடியான பயன். எந்த நாட்டிலும் எந்த மொழியிலும் எந்த இலக்கியத்திற்கும் சுவையும், பயனுந் தான் இரண்டு கண்கள். சுவை இலக்கியம் - பயன் சாத்திரம். சிறப்பாக நம்முடைய கண்கொண்டு பார்க்கும்போது சைவ சித்தாந்தம் பயன்.

முதலாவதாக திரு. கு. நம்பியாரூரன் பேசுவார்........

சுந்தரர் இலக்கிய நோக்கும் சாத்திர நோக்கும்

★

கு. நம்பி ஆரூரன், எம். ஏ., எம். லிட்.,
வரலாற்று இணைப்பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை.

★

இலக்கியமென்றால் என்ன ?

மனிதன் தன் வாழ்வுக்காகப் படைத்துக்கொண்ட நாகரிகக் கருவிகளுள் மிகச் சிறந்தது மொழியாகும். அறிந்த கருத்துக்களையும், உணர்ந்த உணர்ச்சிகளையும் எடுத்துரைப்பதற்குப் பயன்படும் கருவியாக மொழி அமைந்துள்ளது. அத்தகைய மொழியை ஊடுப் பொருளாகக்கொண்டு அமைவதே இலக்கியம். ஒரு நாட்டு மக்களின் விருப்பு வெறுப்பு நம்பிக்கை முதலியவற்றை வளர்த்துப் பண்படுத்துவது அந்நாட்டின் இலக்கியமே. எனவே அதுவே மனித வாழ்வைப் பெரிதும் மாற்றியமைப்பது என்பர். இலக்கியங்கள் நிலைத்த வாழ்வு பெற்றன. காலத்தை வென்று மாறாமல் அழியாமல் வாழ்வு பெற்று விளங்குகின்றன. தமிழ்போன்ற தொன்மொழிகளில் ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பாட்டுக்களும் நிலையான வாழ்வு வாழ்கின்றன. தமிழ் இலக்கியங்களுள், இடைக்காலத்து இலக்கியங்களில் பெரும்பான்மையானவை சமயத்தொடர்பு உடையவை. காரணம் அக்காலத்துத் தமிழ்நாட்டில் நிலவிவந்த சமயச் சூழ்நிலையாகும்.

சமய இலக்கியம்

பாண்டிய மன்னன் கடுங்கோனின் எழுச்சியாலும், பல்லவர்களின் படையெடுப்பாலும், தமிழகத்தில் களப்பிரர்கள் ஆட்சி அடிச்சுவடு தெரியாது மறைந்தது. களப்பிரர்கள் ஆட்சிக் காலத்தில் தென்னகம் முழுவதும் புறச் சமயங்களான பௌத்தமும், சமணமும் செல்வாக்குடன் பரவியிருந்தன. சைவ

வைணவ சமயங்கள் குன்றியிருந்தன. ஆனால் களப்பிரர் காலத்திற்குப் பிறகு சைவமும் வைணமும் புத்துயிர் பெற்றெழலாயின. நாயன்மார்களும், ஆழ்வார்களும் அரும்பாடுபட்டுச் சைவசமயத்தையும், வைணவ சமயத்தையும் மீண்டும் உயர் நிலைக்கு உயர்த்தினர். இச்சமயங்களின் எழுச்சியால் நாடு முழுவதும் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்தோடிற்று. பாமர மக்களிடையே பரவிய பக்தி இயக்கம் பாராண்ட மன்னர்களையும் பற்றியது. மக்கள் கூட்டத்தோடு மன்னர்களும் சமயம் மாறினர். சம்பந்தரின் நன்முயற்சியால் பாண்டிய அரசன் நின்றசீர் நெடுமாறனும், அப்பரின் உறுதிப்பாட்டில் பல்லவ மன்னர் மகேந்திரவர்மனும் மீண்டும் சைவசமயத்தைச் சார்ந்தனர். பக்தி வெள்ளத்தில் மூழ்கிய மக்கள் பரவசமுற்று ஆலயம், ஆலயமாகச் சென்று இறைவனை வழிப்பட்டுப் பேரின்பம் பெற்றனர். இப்பக்தி இயக்கத்தால் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் புதுப்பொலிவுற்றன. பக்திப் பாடல்கள் பண்ணோடு இயைந்து எங்கும் இசைமணம் பரப்பின. இப்பக்தி இயக்கத்தின் பயனாகத் தோன்றியவை பக்தி இலக்கியங்களாகும்.

பன்னிரு திருமுறைகள்

பௌத்தமும் சமணமும் சரிந்து சைவசமயம் தழைத்து வளர்வதற்குத் துணையாக எழுந்தவை சைவ இலக்கியங்கள். தமிழ் மக்களது தவப்பயனாகத் தமிழ்நாட்டிலே அவதரித்து எல்லாம் வல்ல இறைவனது திருவருளால் சைவ இலக்கியங்களாகிய பன்னிரு திருமுறைகளைத் திருமூலர், காரைக்காலம்மையார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், சேரமான்பெருமாள், ஐயடிகள் காடவர்கோன், திருவாதவூரடிகள், திருவெண்காட்டிகள், நம்பியாண்டார் நம்பி, திருமாளிகைத் தேவர் முதலிய திருவிசைப்பா ஆசிரியர்கள், சேக்கிழார் பெருமான் முதலிய பெருமக்கள் அருளிச் செய்தனர். இப்பெருமக்கள் எல்லாம்வல்ல சிவபெருமானது திருவருளின்பத்துள் திளைத்து மகிழும் நிலையில் தாம் துய்த்துணர்ந்த பெருநலங்களையெல்லாம் மக்களைவரும் பெற்று இன்புறும்படி தெளிவும், இனிமையும் பொருந்திய செந்தமிழ்ப் பாடல்களை நமக்களித்துள்ளனர். அருளாசிரியராகிய இவர்கள் திருவாய் மலர்ந்தருளிய தெய்வத் தமிழ்ப்பாடல்களே திருநெறித் தமிழ் எனவும் திருமுறையெனவும் வழங்கப்பெறுகின்றன. இப்பெருமக்கள் இயற்றிய சைவசமய இலக்கியங்கள் அனைத்தையும் கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சோழப் பேரரசன் இராசராசனின் வேண்டுகோளுக்கிணங்க, நம்பி

யாண்டார் நம்பி, பதினோரு திருமுறைகளாக வகுத்தருளினர். சைவத் திருமுறைகள் பன்னிரண்டு என்ற வழக்கு பன்னிரண்டாந் திருமுறையாகிய திருத்தொண்டர்புராணம் இயற்றப் பெற்ற பின்னரே ஏற்பட்டது. பன்னிரு திருமுறைகளும் தமிழ் உலகிற்குக் கிடைத்துள்ள உயர் கருவூலங்கள்; ஞான பண்டாரங்கள், சைவ சமயத்திற்கு வாய்த்த இம்மூல பண்டாரங்களை அவ்வப்போது அணுகுவதால் பெறும் பலன்கள், ஏட்டிலும் எழுத்திலும் அடங்காதன.

ஏழாந்திருமுறை

ஏழாந்திருமுறை என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்கள் அனைத்தையும் கொண்ட ஒரு தொகுதியாகும். இத்திருமுறையில் நூறு திருப்பதிகங்கள் உள்ளன. திருமுறை கண்ட புராணம், இவர் பாடிய திருப் பதிகங்கள் முப்பத்தெட்டாயிரம் என்றும், பண்முறையில் தொகுத்தபோது நூறு திருப்பதிகங்களே கிடைத்தன என்றும் குறிக்கின்றது. பத்துப்பாட்டுகள் கொண்டதனைப் பதிகம் என வழங்கும் முறையைகொண்டு நோக்கின், சுந்தரர் பாடியன மூன்று லட்சத்து எண்பத்தெட்டாயிரம் என்றும், பண் வகுக்கப்பெற்ற காலத்தில் ஆயிரம் திருப்பாட்டுகளே கிடைத்தன என்றும் காண்கிறோம். ஆனால் சில திருப்பதிகங்களில் பதினொரு திருப் பாட்டுக்களும், சிலவற்றில் பன்னிரண்டு திருப்பாட்டுக்களும் காணப்படுகின்றன. இவ்வகையில் சுந்தரர் பாடியன என 1026 திருப்பாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இப்பாட்டுக் களை இந்தளம் முதல் பஞ்சமம் ஈருகப் பதினேழு பண்களாக வகுத்துள்ளனர். சுந்தரர் பாடியருளிய திருப்பதிகங்கள் நூறனுள், பொதுவாக உள்ள ஐந்து திருப்பதிகங்கள் ஒழிய எஞ்சிய தொன்னூற்றைந்தும் திருவெண்ணெய் நல்லூர் முதல் திருநொடித்தான் மலை ஈருக எண்பத்து நான்கு திருப்பதிகளைக் குறித்துப் பாடப்பெற்றுள்ளன.

திருவெண்ணெய் நல்லூரில் அருட்டுறைப் பெருமானால் தடுத்தாட்கொள்ளப்பெற்ற சுந்தரர், அப்பெருமானது திருவருள் இன்பத்தில் திளைத்துப்போற்றிய 'பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா' என்ற திருப்பதிகத்தினை முதலாகக்கொண்டு தொடங்கிய இவ்வேழாந்திருமுறை, சேரமான் தோழராகிய சுந்தரர் இறைவனது அருளிப்பாட்டின் வண்ணம் திருவஞ்சைக் களத்திலிருந்து வெள்ளானையின் மீதமர்ந்து திருநொடித்தான் மலையாகிய திருக்கயிலாயத்தையடைந்து தாம் பெற்ற திருவருள் இன்பத்தை நிலவுலகத்தார்க்குப் புலப்படுத்தும் நிலையில் ஆழிக்

கடலரையணுகிய வருணனை நோக்கித் திருவஞ்சைக்களத்தப்பருக்கு அறிவிக்கும்படி பணித்த திருப்பாடலுடன் நிறைவு பெற்றிருத்தல் அறிந்து மகிழத்தக்கதாகும். நூறு திருப்பதிகங்களால் இயன்ற இத்திருமுறையில், 'தென்றமிழ்ப் பயனாய் வந்த திருத்தொண்டத் தொகை 'முப்பத்தொன்பதாம் திருப்பதிகமாகவும்' திருவைந் தெழுத்தின் சிறப்பினையுணர்த்தும் நமச்சிவாயத் திருப்பதிகம் நாற்பத்தெட்டாம் பதிகமாகவும் அமைந்துள்ளன.

மூல இலக்கியம்

சுந்தரர் தேவாரம் ஒரு வரலாற்றுக் கருவூலமாகத் திகழ் கின்றது என்று கூறினால் அது மிகையாகாது. திருத்தொண்டத் தொகை இல்லையாயின், சிவநெறிச்கண் நின்று சைவசமயத்தின் மாண்பைத் தம் வாழ்வால் விளக்கஞ்செய்து காட்டிய நாயன்மார் பலருடைய வரலாறுகள் மறைந்தே போயிருக்கும்; சைவசமயம் இன்றிருக்கும் நிலையையும் இழந்து மடிந்தே போயிருக்கும். இதனை நன்கறிந்தே திருத்தொண்டர் வரலாற்றை விரித்துரைத்த சேக்கிழார், "ஈசன் அடியார் பெருமையினை எல்லாவுயிரும் தொழ எடுத்துத் தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்," என்றும், "மாதவம் செய்த தென்றிசை வாழ்ந்திடத், தீதிலாத் திருத்தொண்டத் தொகைதரப் போது வார்" என்றும் சுந்தரரை மிகவும் நயந்து பாராட்டிக் கூறு கின்றார். இச்சிறப்பை இடைக்காலச் சான்றோர் தெளிய உணர்ந்து சுந்தரரைத் திருத்தொண்டத் தொகையான் என்றும் திருத்தொண்டத் தொகையார் என்றும் சிறப்பித்துப் பாராட்டிப் பரவினர். அதனால் சுந்தரர் பிறந்த திருநாவலூரில் உள்ள சிவன் கோயிலுக்கே திருத்தொண்டீச்சரம் என்று பெயரிட்டனர்; சிதம்பரத்தில் சிவகங்கையின் வடகரையில் சுந்தரர் திருப்பெயரால் நிறுவப்பெற்ற கோயிலைத் திருத்தொண்டத் தொகையீச்சுரம் என வழங்கினர். திருவொற்றியூர்க் கோயிலில் திருத்தொண்டத் தொகையை ஓதுதற்கென்றே நிவந்தங்கள் விடப்பட்டன. இத் திருத்தொண்டத் தொகையின் பெயரால் ஏற்பட்ட ஊர்களும் உண்டு; அவை திருத்தொண்டத்தொகை மங்கலம் எனப் பட்டன. திருப்புத்தூரில் திருத்தொண்டத்தொகையான் திருமடம் என்றொரு மடமும், திருவிடைவாயலில் திருத்தொண்டத் தொகையான் திருக்குகை எனக் குகையும் பிறவும் நாட்டில் பலவிடங்களிலும் ஏற்படுத்தினர்.

திருத்தொண்டத் தொகையே திருத்தொண்டர் திருவந்தாதி யாய் முளைத்துத் திருத்தொண்டர் புராணமாய் விளைந்தது. அப்

புராணம் ஒரு தனி உலகம். அது பெரிய புராணம் — பெரியார் வரலாறு கூறும் புராணம். அதனுள் சாதி, இனம், இடம், அரசன், துறவி, இல்லறத்தான் என்ற உலகியல் வேற்றுமைகளுக்கு எள்ளளவும் இடம் இல்லை. 'தொண்டர் குலம்' என்ற ஒரு பெருந்தரத்தில உயர்ந்து நிற்கும் பெரியோர் அவர் எல்லாரும. 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க, அருஞ்செயல் புரிந்த ஆன்ம வீரர்களின் அருள வரலாறு அது. சேக்கிழார் பெருமானும் இக்குறிப்பினை விளக்குவதைப் பெரிய புராணத்துட் காணலாம. தம்முடைய பேரறிவு திருவருளால் துலங்க, நாடிடையிட்டும் காடிடையிட்டும் நிகழ்ந்த அனைத்தையும் உணர்ந்து, மிகச்சுருங்கிய அளவில், அடைமொழிகள் தக்கன புணர்த்து, அருளப்பெற்றது திருத்தொண்டத்தொகை. இப்படித் திருத்தொண்டர் புராணத்திற்கு மூல வரலாறு எழுதிவைத்தவர் சுந்தரர் பெருமாள்.

திருத்தொண்டர் புராணத்தின் காப்பியத் தலைவராக எண்ணப்படுதற்குரியார் சுந்தரமூர்த்தி சுவாமிகளே. பெரிய புராணத்தின் முதலிலும், நடுவிலுங் கூறப்படுவது இப்பெருந்தகையார் வரலாறேயாதலால், இவர் வரலாற்றினுள்ளேயே இவர் குறித்த திருத்தொண்டர்களின் வரலாறும் அடங்கும். அறுபத்து மூவர் தனியடியார் பெருமையும், ஒன்பதின்மர் தொகை அடியார் பெருமையும் உலகமறியக் காரணமாக இருந்தவர் சுந்தரர். இவர் சைவ உலகத்திற்குச் செய்த பெருநன்மையின் சிறப்பையுணர்ந்தே சேக்கிழார் பெருமான் ஒவ்வொரு சருக்கத்தின் முடிவிலும் இவர்க்கு வாழ்த்துக் கூறியுள்ளார்.

திருத்தொண்டத் தொகை பாடுதல்

திருவாரூரில் சுந்தரர் பரவையாருடன் கூடி வாழும் நாளிலே ஒருநாள் தியாகேசரை வணங்கத் திருக்கோயிலை அடைந்தார். அப்போது தேவாசிரிய மண்டபத்திலே திருத்தொண்டர்கள் குழுமியிருந்தனர். அவர்களைக் கண்டவுடன் இவர்களுக்கு அடியனாகும் பேறு கிடைக்குமோ என்ற எண்ணத்துடன் திருக்கோயிலினுட் புகுந்தார். இதனைக் கண்ணுற்ற விறன்மிண்ட நாயனார்

"..........தேவாசிரியனிடைப் பொலிந்து
மருவா நின்ற சிவனடியார் தம்மைத் தொழுது வந்தணையா
தொருவாறொதுங்கும் வன்றொண்டன் புறகெ"ன்றும்............
பிறைசூடிப் பூணாரவம் புனைந்தார்க்கும் புறகெ"ன்றும்

சினந்து உரைத்தார். ஆனுல் சுந்தரர், தேவாசிரிய மண்டபத்தில் உள்ள அடியாரை வணங்கி அணையாவிடினும், அடியாரைப் பணிய வேண்டியே இறைவனைத் தொழ உட்சென்றனர். எனவே இவர் கருத்தும் அடியார் பணி என்ற ஒரு வழியிலே படிந்து இருந்தது. ஆயின் கருத்தினைப் பின்பற்றிய புறவழிபாடு நிகழாமையின் "புறகு" என்ற மொழியும் எழுந்தது. அம்மொழி கேட்ட சுந்தரர் அஞ்சி வீதி விடங்கரிடம் சென்று "அடியேன் அவர்களைப்பற்றி ஏதும் அறியேனே! என்று நடுக்கத்துடன் வணங்கினர். இறைவன் புன்முறுவல் செய்து தம் திருவாயால், "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று தொடங்கிப்பாடும்படி அருள்செய்து மறைந்தருளினர். சுந்தரர் அரனருள் பெற்று அடியார் இருக்குந் தேவாசிரிய மண்டபத்தை அணைந்து, பலமுறை வணங்கி, இறைவர் அடியெடுத்துக் கொடுத்தவாறே தில்லைவாழந்தணரை முதலகாக் கொண்டு, ஒவ்வொருவரையுந் தனித்தனி குறிப்பிட்டு, அவர்க்கடியேன் என்று திருத்தொண்டத் தொகையைப் பாடியருளினர்.

நாயன்மார்கள் வரிசைப்படுத்தப்பட்ட முறை

திருத்தொண்டத்தொகையில் அடியார்களைச் சுந்தரர் வரிசைப்படுத்திக் கூறியபடியே நம்பியாண்டார் நம்பி அந்தாதியிலும், சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்திலும் வரிசைப் படுத்தியுள்ளனர். இது எந்த அடிப்படையில் சுந்தரரால் வரிசைப் படுத்தப்பட்டது எனத் தெரியவில்லை. நாயன்மார்களது காலப் படியோ, பிறந்த இடப்படியோ அல்லது மரபுப்படியோ அமைய வில்லை. சுந்தரர் தேவாசிரியன் மண்டபத்தில் திருத்தொண்டத் தொகையை அருளிய பொழுது அன்று மரபு வழக்கில் இடம் பெற்றிருந்த அடியார்களையெல்லாம் நினைவில்கொண்டு பெரும் பாலும் செய்யுள் இலக்கண அமைப்பு கருதி வரிசைப்படுத்திப் பாடியதாகவே தெரிகின்றது. திருத்தொண்டத் தொகையில் கூறப்பெற்ற அடியார்களில் தனியடியார் 63 பேர், தொகையடியார் 9 பேர் – ஆக 72 அடியார்கள். 63 நாயன்மார்களில் (1) அப்பர் – சம்பந்தர் காலத்திற்கு முற்பட்டவர் 17 பேர், (2) அப்பர் – சம்பந்தர் காலத்தவர் 11 பேர், (3) அப்பர் – சம்பந்தர் காலத் திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்டவர் 22 பேர், (4) சுந்தரர் காலத்தவர் 13 பேர். ஒன்பது தொகையடியார்கள் காலவரம்பைக் கடந்தவர்.

சுந்தரர் காலத்து வாழ்ந்த அடியார்களைச் சுந்தரர் நேரிற் கண்டு பாடியிருக்கக்கூடும். ஏனைய அடியார்களை எங்ஙனம் கண்டு

பழகினர் என்று வினவக்கூடும்? அப்பர் – சம்பந்தர் காலத்துக்கு முற்பட்ட அடியார் பலரைப் பற்றியும், அவ்விருவர் காலத்து வாழ்ந்த அடியார்களைப் பற்றியும் குறிப்புக்கள் அவ்விருவர் திருமுறைகளிலுங் காணப்படுகின்றன. அவற்றின் துணைகொண்டும் இவ்விருவருக்கும் சுந்தரருக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த அடியார்களைப்பற்றிக் கல்வெட்டுக்கள் கொண்டும், அடியார்கள் பற்றி மரபு வழிவந்த வரலாற்றுச்செய்திகள் கொண்டும், அடியார்கள் அவதரித்த தலங்களுக்குச் சென்று அடியார்களுடைய வரலாற்றுச் சிறப்புக்களையெல்லாம் உசாவியறிந்தும், சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடியிருக்கக்கூடும்.

ஏழாந்திருமுறையில் நாயன்மார்பற்றிய குறிப்புக்கள்

நாயன்மார்கள் வரலாற்றை உணர்த்தும் பதிகமாகத் திருத்தொண்டத் தொகை அமைந்துள்ளது. பதினெட்டு நாயன்மார்களின் ஊர்பற்றியும், பதிமூன்று நாயன்மார்கள் பற்றியகுலம், மரபு குடி பற்றியும், முப்பத்தோரு நாயன்மார்கள் ஆற்றிய தொண்டினைரெத்தினச் சுருக்கமாகவும் சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் கூறியுள்ளார். மற்றும் சுந்தரர் தமது தேவாரத்தில் பல்வேறு பதிகங்களில் பத்தொன்பது நாயன்மார்களைப் பற்றிய பிறபல செய்திகளை நமக்களித்துள்ளார். அவரது வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகள் பலவற்றையும் அவருடையபதிகங்களில் குறிப்பிட்டுள்ளார். இவற்றையெல்லாம் ஆதாரமாகக்கொண்டே பின்னர் நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியினையும், சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தினையும் அருளிச் செய்தனர். திருத்தொண்டர் புராணம் தொடக்கம் முதல் முடிவுவரை சுந்தரர் வரலாற்றைத் தொடர்பாக விரித்துரைக்கும் முறையில் அழகுற அமைந்துள்ளது. தடுத்தாட்கொண்ட புராணம், ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம், கழறிற்றறிவார் புராணம், வெள்ளானைச் சருக்கம் ஆகியவற்றில் சுந்தரருடைய வரலாற்றினைக் கூறிப் போந்த சேக்கிழார் ஏழாந் திருமுறையினை அடிப்படையாக வைத்தே பாடியுள்ளமை நன்கு புலனாகின்றது. அதனல்தான் சுந்தரரது வரலாற்றினுள் ஏனைய திருத்தொண்டர்கள் வரலாறும் அடங்குமென முன்சொல்லப் பட்டது. இப்படிச் சுந்தரரது ஏழாந் திருமுறை தமிழகத்தின் சைவ சமய வரலாற்று இலக்கியமாகத் திகழ்கின்றது.

சாத்திர நோக்கு

சுந்தரருடைய திருப்பதிகங்களில் இறைவன் இயல்பும், உயிர்களின் இயல்பும், உயிர் வாழ்க்கையின் இயல்பும், உயிர்கள் இறைவன் திருவருளைப் பெறுதலின் இயல்பும் இனிய தமிழ் நடையில் கூறப்படுகின்றன.

செயல்முறைச் சித்தாந்தம்

இவர் இறைவனுக்கு அணுக்கத்தொண்டராக இருந்தவர். பலகாலம் தொண்டுசெய்து, பழுத்த மனம் உடையவர். அவருக்கு 'மாதர்மேல் மனம் வைத்தனை; தென் புவிமீது தோன்றி அம் மெல்லியலாருடன் காதல் இன்பம் கலந்து அணைவாய்' என அருள் கிடைத்தது. தீதிலாத் திருத்தொண்டத்தொகை தர தென் திசைப் போந்தார்; பிறந்தார்; வளர்ந்தார்; தக்க சமயத்தில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டுப் பாட்டையே அருச்சனையாகப் பாடினார். இந் நிகழ்ச்சி 'குருவே சிவனெனக் கூறினான் நந்தி' எனத் திருமந்திரமும், 'மன்னும் அருட்குருவாகி வந்து அவரின் நீக்கி மலம் அகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்' என்ற சித்தித் திருவாக்கும் கூறுகின்ற செயல்முறைச் சித்தாந்தமாக வருவதைக் காணலாம். அன்றியும் "வன்தொண்டன் என்னும் நாமம் பெற்றனை' என்றது, சிவதீக்கை முறையில் பெயரளிக்கின்ற வழக்கத்தைக் குறிக்கிறது. பழைய பெயர் மலம் நீக்கப்பெறுவதற்கு முன்னிருந்தது. அது பின்னர் பொருந்தாதாகலின் புதுப்பெயர் புனைந்தார். இதனையே சுந்தரரும், "வன்தொண்டன் என்பதோர் வாழ்வு தந்தாய்" என்று பாடுகிறார். இவ் வடியில் செயல்முறைச் சித்தாந்தத்தைக் காண்கிறோம்.

மற்றொன்று, தடுத்தாட்கொண்ட தம்பிரான் ஆணையின் வண்ணம் தமிழ் பாடுகின்றவர் "மனத்துன்னை வைத்தாய் மறவாதே நினைக்கின்றேன்" என்கிறார். இஃது உயிர்களுக்கு இறைவனை நினைப்பதற்குக்கூட உரிமையில்லை. அதற்கும் இறைவன் அருள் தேவை என்பதை உணர்த்துகின்றது. 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்ற வாதவூரரின் வாக்கும் இதனையே வலியுறுத்தும்.

தவநெறி வேண்டல்

அருளாணை பெற்ற ஆரூரர் அடியார்களோடு பல தலங்களையும் வழிபடச் செல்கின்றார். இஃது இறைவனை எங்குமாய்

எல்லாமாய்க் கண்டின்புறுகிற தன்மையைத் தெரிவிக்கின்றது. திருத்துறையூர்க்கு எழுந்தருளியவர்,

"மத்தம் மதயா னையின்வெண் மருப்புந்தி
முத்தம் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
பத்தர் பயின்றேத்திப் பரவும் துறையூர்
அத்தா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே"

— என வேண்டுகிறார். இறைவனும் புலனென்றும்படி தவநெறி கொடுத்தருளினான். "தான் தேடாப் பொன்னுக்கு உரையுமில்லை மாற்றுமில்லை" என்பதுபோல, திருவருள் வயத்தான் ஞானத்தை பெற்றாராயினும் அந்த ஞானம் ஏதோ மலைக்கல்லின் பெய்த மழைபோல வழிந்தோடி விடாமல் பள்ளம் புகுபுனல் போல் தங்க வேண்டுமானல் நெறி நிற்றலாகிய தவம் வேண்டப் பெறுவதாகும். தவமாகிய படி முறையில் வாராத ஞானம் பயனளியாது என்பதைத் திருவுள்ளத் தெண்ணியும். தம் சிறுமையையும் இறைவனரின் பெருமையையும் எண்ணியும் தவநெறியை வேண்டினார்.

இறைவன் ஆசானாக வந்து ஆட்கொள்ளல்

திருவதிகை உழவாரப் படையாளி உடைய அரசு கைத் தொண்டு செய்த தலமாதலின் மிதிக்கலாகாது என முடிவுசெய்து வீரட்டானப் பெருமானைத் திருவுள்ளத்தெண்ணிச் சித்தவட மடத்தில் துயில்கொண்டார். அப்போது இறைவர் கிழ அந்தணராய்ச் சுந்தரரது திருமுடிமேல் தம் திருவடியை வைத்தார். வன்தொண்டர் விழித்து வினவ அந்தணர் "திசை யறியா வகை செய்தது என்னுடைய மூப்புக்காண்" என்று கூறினார். சுந்தரர் வேறொரு திசையில் முடியைவைத்துத் துயில, அங்கும் அவரது முடிமேல் தம் திருவடியை இறைவர் வைக்க, சுந்தரர் சினந்து 'நீர் யார்?' என்றார். அந்தணர் அறிந்திலையோ என மறைந்தார். வன்தொண்டர் இறைவனருள் என உணர்ந்து, 'தம்மானை யறியாத சாதியாருளரே' என்ற திருப்பதிகம் பாடினார். இப்பதிகம் சிறந்த தத்துவப் பொருளொன்றை விளக்கி நிற்கின்றது. இறைவனே ஆசானாக வந்து ஆட்கொள்ளப் பெற்றாலும், மலமாயா கன்மங்களின் வாசனை சிறிது தாக்கும். அதனையும் அகற்றி ஆட்கொள்ள இறைவனே பழைய ஆசானாக வந்து சாதி என்ற தருக்கையும் ஒழித்துத் தூய்மையுறுத்துவன் என்று மலமகற்றித் தானாக வைக்கும் குறிப்பினை விளக்குவது.

அங்ஙனமே ஆரூரடைந்தபோது, தொண்டர்கள் எதிர் கொண்டழைக்க "எந்தையிருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்" என்று பாடுவது உயிர்களின் இழிந்த குணங்களையும், இறைவனுடைய உயர்ந்த அருள் திறத்தையும் உணர்த்தி ஆன்ம இலக்கணமும் பதி இலக்கணமும் அமைய விளங்குகின்றது.

கயிலை அடைதல்

இறுதியாக "வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட்டொழிந் தேன்" என்று அஞ்சைக் களத்தப்பர் முன்னே விண்ணப்பிக் கின்றார். வேண்ட முழுதும் தருவோனாகிய இறைவன் ஆணையின் வண்ணம் வெள்ளானை வந்தது. அதில் அமர்ந்து திருவஞ்சைக் களம் சென்றார். சேரர்பெருமான் பரிமுன் செல்ல, யானைபின் செல்ல, 'தான் எனை முன் படைத்தான்' என்னும் தமிழ் மாலையைப் பாடிக்கொண்டே திருக்கயிலைக்கு எழுந்தருளினார். இந்நிகழ்ச்சி வெள்ளானையென யோக நூல்களால் குறிக்கப்படும் குண்டலினி சக்தியை ஊர்தியாகக்கொண்டு வாசியோகம் வழிகாட்டத் திருக் கயிலையை உயிர் அடைந்து சிவத்திருமேனி தாங்கி ஒத்த உருப் பெறும் என்பதை உணர்த்துகின்றது.

"ஆரிவ னென்ன அரன்நாம் இவன் என்ன
ஏருறு தேவர்களெல்லாம் எதிர் கொள்ள
காருறு கண்டனை மெய்கண்டவா"

— என்று திருமந்திரம் கூறுகின்ற யோக சித்திக்குரிய அனுபவமாக இது விளங்குகின்றது.

ஏழு பிறப்பு

எழுமை என்றும் எழுபிறப்பு என்றும் ஆளப்படும் சொல்லாட்சி வள்ளுவரிடத்தே உண்டு. 'எழுபிறப்பும் தீயவை தீண்டா' 'எழுமையும் ஏமாப்புடைத்து' என்று கூறுகிறார். ஆரூரரும் சிவபரத்துவத்தைப்பற்றிப் பல இடங்களில் உயர்த்திச் சொல்கிறார் இவரிடத்தே காணப்படும் முன்னைய முனைப்புக் குணம் இது வொன்றே! செஞ்சடை வானவனின் திருவடித் தொண்டிற்கே தாம் ஆட்பட்டமையைத் தெளிவாக விளக்குவார்.

"வைத்தனன் தனக்கே தலையுமென் நாவும்
நெஞ்சமும் வஞ்ச மொன்றின்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை"

— என்கிறார். மேலும்,

"ஒருமையே அல்லேன் எழுமையும் அடியேன்"

என்று கூறி எழுபிறப்புண்டென்பதை உறுதிபடுத்துகிறார்.

பிறவி அறுக்கும் பெருமான்

நமது கற்பனைக்கு எட்டாத வடிவமும் குணங்களும் உடையவன் இறைவன். இப்பரம்பொருளைப் பழவினை போக்கும் பரமனாகவும், செய்வினை அறுத்திடும் செம்பொன்னாகவும், பிறவி வேரறுக்கும் பெருமானாகவும் பாடுகிறார்.

"கல் இயல் மனத்தைக் கசிவித்துக் கழலடி
காட்டி யென் களைகளை அறுக்கும்" (7–67-7) எனவும்,

"பந்தித்த வல்வினைப் பற்றறப் பிறவிப்
படுகடல் பரப்புத் தவிர்ப் பானை" (7–67–7) எனவும்

"பறியா வினைகள் அவைதீர்க்கும் பரமா" எனவும் (7-89-4)

"மலந் தாங்கிய பாசப் பிறப்பறுப்பீர்" (7–82–6) எனவும்

வினை தீர்க்கும் விமலனைப் போற்றுகிறார்.

"ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கு மானந்தமா கடலே"

என்று வாகீசரும் பந்தம் அறுக்கும் பரம்பொருளின் பெருமையைப் பேசுகிறார்.

நிலையாமை

சுந்தரர் உடம்பு முதலியவற்றின் நிலையாமை உணர்ந்து, நிலைத்த இன்பநிலையாக இருக்கும் இறைவன் திருவடியை அடைதல் வேண்டும் என்ற அருள் உள்ளத்தால் பிறவித்துன்பம், உடல் நிலையாமை, செல்வ நிலையாமை முதலியவற்றைப் பற்றிப் பாடி அறிவுறுத்துகிறார்.

"தோற்ற முண்டேல் மரணமுண்டு"

"இன்பம் உண்டேல் துன்பம் உண்டு"

"வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்"

"பதியும் சுற்றமும் பெற்ற மக்களும் பண்டையாரவர் பெண்டிரும்
நிதியும் இம்மனைவாழும் வாழ்க்கையும் நினைப்பொழி மடநெஞ்சமே"

என்று அருளிச் செய்கின்றார்.

உலக வாழ்வு நிலையற்றது, துன்பம் நிறைந்தது என்பதை,

"உடல் தளர்ந்து அருமா நிதி இயற்றி என்றும்
வாழலாம் எமக்கெனப் பேசுமிதுவும்
பொய்யெனவே நினை" என்கிறார்.

"பொய்த் தன்மைத்தாய மாயப் போர்வையை
மெய்யென்றுன்னும் வித்தகத்தாய வாழ்வு
வேண்டி நான் விரும்பகில்லேன்" என்கிறார்.

பரம் பொருளியல்பு

இனி இறைவன் யாண்டும் நீக்கமற நிறைந்தவன்; ஊரும் பேரும் அற்றவன்; அன்பால் அவனை அடையலாம் என்பது சைவ சமய சித்தாந்தமாகும். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று திருமந்திரமும் இக்கருத்தை வலியுறுத்தும். இறைவன் வானாகவும், மண்ணாகவும், வளியாகவும், ஒளியாகவும் இருந்து விளக்கம் செய்யும் அழகைச் சுந்தரர் பல இடங்களில் எடுத்து ஓதுகின்றார்.

"ஊனாய் உயிரானாய் உடலானாய் உலகானாய்
வானாய் நிலனானாய் கடலானாய் மலையானாய்" (7–1–7)

"நிலங்கிளர் நீர் நெருப்போடு காற்றாகாச மாகி" (7-16–7)

உருவாக, அருவாக, உளதாக, இலதாக, மருவாக, மலராக, மணியாக, ஒளியாக, கருவாக, உயிராக, கதியாக, விதியாக வரும் ஈறிலா இறைவனை எளிமை பொங்கும் பாடல்களால் இங்ஙனம் அர்ச்சிக்கின்றார்.

இறையும் உயிரும்

இறைவன் எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் முதலாகிய அகர எழுத்தைப்போல உலகிற்கு முதல்வனாக உள்ளான். உலகிடை வாழும் உயிர்களின் உடம்பின் கூறாகவும் இறைவன் ஒன்றுபட்டிருக்கின்றான் என்பதை "ஊனாய் உயிரானாய் உடலானாய்"

என்பதால் குறிக்கின்றார். இனி இவ்வுலகினையும், உலகில் நிலவும் உயிர்களுக்குரிய உடம்பினையும் படைத்து அளிப்பதும் இறைவன் செயல்; அவ்விறைவனுக்கும் உயிர்களுக்குமுள்ள தொடர்பு விளங்க "தாயும் தந்தை பல்லுயிர்க்கும் தாமேயாய தலைவனார்" என்றும் "தந்தை தாய் உலகுக்கு" என்றும் கூறுகின்றார்.

எண்வகை யோக நிலை

திருப்பாட்டு என்னும் தகுதிபெற்ற சுந்தரர் செந்தமிழ்க் கவிதைகளை அகத்தியனார் எட்டுவகையால் ஆய்ந்தனர். அவை: 1) குருவருள், 2) வெண்ணீறு, 3) அஞ்செழுத்து, 4) கோயில், 5) சிவன் உருவம், 6) திருவடி, 7) அருச்சனை, 8) அடிமை. இப்பொருளைப் பின்வரும் பழைய பாடலும் அழகுற தொகுத்து உள்ளது.

"குருவருளும் வெண்ணீ றெழுத்தஞ்சும் கோயில்
அரனுருவும் என்தலைமே லாக்கும் — திருவடியும்
சிட்டான அருச்சனையும் தொண்டும் சிவாலயர்க்கென்று
இட்டார் அகத்தியனார் எட்டு"

இவ்வெட்டு நிலைகளும் சீவன் முக்தர்களின் நிலையாகும். இவ்வெட்டு நிலைகளும் சுந்தரர் தேவாரத்தில் பெரிதும் பொருந்தி வருதலைக் காணலாம்.

குருவருளைப் "பித்தா பிறைசூடி" என்ற பாடலிலும்,
அஞ்செழுத்தை "மற்றுப் பற்றெனக்கு" என்ற பாடலிலும்,
கோயில் திறத்தைக் "காட்டூர்க் கடலே" என்ற பாடலிலும்,
திருவடித் திறத்தை "அந்தணாளன்" என்ற பாடலிலும்,
அருச்சனையைக் "கொன்று செய்த" என்ற பாடலிலும்,
தொண்டு நிலையைத் "தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்ற பாடலிலும் காணலாம்.

குருவருள் விளக்கம்

சைவ சித்தாந்தத்தில் குருவருள் விளக்கம் பெரிதும் போற்றப் பெறுவதாகும். தளைப்பட்டுக் கிடக்கும் உயிர் தளையறுத்து இறைவன் திருவருளை எய்துதல் வேண்டும். அதற்கு ஞானாசிரியன் அருள் வேண்டும். நம் சமயப் பெருந்தலைவர்களாகிய தேவார ஆசிரியர் மூவரும் குருவருள் பெற்றுப் பாடியருளிய

முதல் திருப்பதிகங்களைக் குருவருள் என்னும் தலைப்பில் காண லாம். திருஞான சம்பந்தருக்கு உலகெலாம் ஈன்ற அன்னையே ஆசிரியத் திருக்கோலம் கொண்டருளினர். நாவுக்கரசருக்கு உடன் பிறந்த தமக்கையாராகிய திலகவதியாரே ஆசிரிய நிலை யில் நின்று அறிவுறுத்தினர். சுந்தரருக்கோ இறைவனே ஞானா-சிரியனாக எழுந்தருளி நல்லருள் வழக்கியதை,

" மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவே உன் குற்றேவல் செய்வேன்
நெறியே நின்னடியார் நினைக்கும் திருக்காள்ததியுள்
அறிவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே " —

எனப் பாடுகின்றார். இதனுள் என்னுடைய குருவே! உன் குற் றேவல் செய்வேன் " என்ற அடி உணரத்தக்கது.

பரையின் வரலாறு

குருவருள் பெற்ற உயிர் முதல்வனது பராசக்தியின் விளக் கத்தை அடைந்து சிவயோக நிட்டையில் அழுந்தி நிற்கும் நிலையை பரையின் வரலாறு என்பர். இறைவனது நினைவில் அழுந்தி, பஞ்சாட்சரத்தை முறைப்படி ஓதுதல் அஞ்செழுத் துண்மையாகும். பழம்பஞ்சுரத்தில் அமைந்த திருப்பாண்டிக் கொடுமுடித் திருப்பதிகம் இப்பொருள் அமைதி உடையது. " நான் மறக்கினும் என் நா பஞ்சாக்கரமே சொல்லும் " எனத் தம் உறுதி உரைக்கின்றார். " நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே " என்கிறார். இப்பதிகத்தில், " நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்...... இனிப் பிறவாத தன்மை வந்து எய்தினேன் " என வரும் பகுதி சிவோகம் பாவனையாகிய அநுபூதி நிலையை விளக்குதல் காணலாம். இரு வினை ஒப்பு எய்திய சிறப்பை, " விரும்பி நின் மலர்ப்பாதமே நினைத்தேன்; வினைகளும் விண்டனன் " எனப் புலப்படுத்து கின்றார் சுந்தரர்.

கோயில் திறம்

இவ்வாறு அநுபூதி நிலைபெற்ற உயிர் சில சமயங்களில் அறிவு புறத்தே சென்றால் அதனை வயப்படுத்தத் திருக்கோயில் கள் தோறும் சென்று இறைவனை வழிபடல் கோயில் திறம் எனப் படும். 'காட்டூர்க் கடலே' எனத் தொடங்கும் பதிகம் இப் பொருளை விளக்குகின்றது. "அருந்தித்து உன்னை அடைந்தார்

வினைகள் அகல அருளாயே'' — என இப்பதிகத்துள் வேண்டுகிறார்.

பொய்யான உடல்மீது கொண்டுள்ளபற்றை விட்டு, மெய்ப் பொருளாம் இறைவனைப் பற்றுபவரே உண்மையை உணர்ந்தோர் என்பது சுந்தரர் கருத்து. "ஊனைக் காவல் கைவிட்டுன்னை உகப்பார் உணர்வாரே''—என்று பாடுகின்றார்.

திருவடிப்பேறு

அடுத்து சிவபெருமானை வழிபடும் உயிர், அவனது திருவடிகளில் தலைப்பட்டுப் பேரின்பப் பெருவெள்ளத்தில் மூழ்கும். நான் என்ற உணர்வழிந்து தான் என்ற நிலை எய்தும். இதுவே திருவடிப்பேறு எனப்படும். "மலமகற்றித் தான் ஆக்கி மலரடிக் கீழ் வைப்பன்'' என்கிறார் மெய்கண்டார். "உன் திருவடி அடைந்தேன்'' என்று இதைப் போற்றுகின்றார் அடிகள்.

வழிபாட்டு முறை

அருச்சனைப் பாட்டேயாகுமாதலால் இறைவனைச் சொற்றமிழால் பாடி மகிழ்ந்த சுந்தரர் இறைவன் அடியார்க்கும் அடியாராக விளங்கியதைத் "தில்லை வாழந்தணர்'' பாடல் விளக்கும். அடியார்க்கு அடிமை செய்தலே சிறந்த வழிபாட்டு முறை என்பது இவரது கருத்து. அதனாற்றான்

"அடியார் அடியார்கட்கெல்லாம் தொண்டே
பூண்டொழிந்தேன் தொடராமை துரிசறுத்தேன்''

என்று பாடுகின்றார். அடியார்க்கு ஆட்செய்தல் பிறப்பறுக்கும் என்று உறுதியாக நம்பினர் நம்பியாரூரர். இறைவனிடம் அன்பு கொண்டு உருக வேண்டும். இல்லாவிடில் அவனருளை அடைய முடியாது என்பதை

"அன்பரல்லார் அணிகொள் கொன்றை அடிகள்
அடிசேரார்'',

"நினைந்திட்டு அழுமவர்க்கல்லால் அறிவரிது அவன்
திருவடியிணை யிரண்டும்''

என்கிறார். அதுமட்டுமன்று. வழிபாட்டு முறையிலும் கற்பு நெறியை வலியுறுத்துகிறார்.

"விரும்பேன் உன்னையல்லால் ஒரு தெய்வம் என் மனத்தால்"
"நினையன்றி மற்றுக் கூறேன் நாவதனுல்"

என்று பாடுகிருர்.

முடிவுரை

சுந்தரர் தேவாரத்தினை இவ்வாறு பல நிலைகளில் ஆராய்ந்தால் பெறும் பலன்கள் பல. அந்நெறி நின்ருல் பல உண்மைகளைத் தெளிந்து கொள்ளலாம். சரியை, கிரியை, யோக, ஞான நெறிகளில் இவருடைய நெறி யோக நெறி. இந்நெறி நின்று, இறைவனுல் ஆட்கொள்ளப்பட்டபின் "ஆளான பிறகு இனி அல்லேன் எனல் ஆகுமோ" – என்று பாடிய அடிகள் வாக்கு சிந்திப்பதற்குரியது. இத்திருமுறைகளைக் கற்றுத் தெளிதல் நம் வாழ்விற்குப் பக்தி வளத்தையும், அன்புச் செல்வத்தையும் அளிக்கும் என்று கூறி அமைகின்றேன்.

சுந்தரர் தேவாரத்தில் இலக்கிய நோக்கு

★

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர்
முதல்வர், தருமையாதீனத் தமிழ்க்கல்லூரி.

★

" சைவத்தின்மேல் சமயம்வேறில்லை அதிற்சார்சிவமாம்
தெய்வத்தின்மேற் தெய்வம்இல்லெனும் நான்மறைச்—
செம்பொருளாம்
மெய்வைத்தசீர்திருத் தேவாரமும் திருவாசகமும்
உய்வைத்தரச்செய்த நால்வர்பொற்றுளெம்—
உயிர்த்துணையே "

" திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை "

" உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் – பன்னிருகை
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில்வாழ் வே "

பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் பெருமான் அவர்களே பெரியோர்களே, தாய்மார்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்புகலந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அடியேனை இந்த அருட்பணியிலே ஈடுபடுத்தி ஆட்கொண்டருளுகின்ற திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடைய திருவடிகளைத் திசைநோக்கி வணங்குகின்றேன்,

திருவருளையும் குருஅருளையும் துணைக்கொண்டு மகாலிங்கப் பெருமானுடைய திருக்கோயிலில் திருமுறைக் கருத்தரங்கில் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பணியினைச் செய்ய முற்படுகின்றேன். திருமுறைகளிலே ஞானசம்பந்தர் பாடிய பாடல்களுக்குப் பழமையான பெயர் திருக்கடைக் காப்பு. நாவுக்கரசர் பாடிய பாடல்களுக்குத் தேவாரம் என்பது பழமையான பெயர்· சுந்தரர் பாட்டுக்குத் திருப்பாட்டு என்பது பழமையான ஒரு பெயர். இந்த மரபை அப்படியே வைத்து வள்ளல்பெருமான் அவர்கள் சுந்தரருடைய செந்தமிழிலே தம்முடைய சிந்தையை ஈடுபடுத்தி ஒரு பாடல் வடிக்கின்றார். சுந்தரருடைய இலக்கியச் சுவை, இலக்கிய நோக்கு இராமலிங்கருடைய பார்வையிலே எவ்வாறு அமைந்திருந்தது என்பதை முதலிலே உங்களுக்குக் காட்டுவதற்காக அந்தப் பாட்டைச் சொல்கின்றேன்.

"தேன்படிக்கும் அமுதாம்நின் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதுஎன்னை நான்அறியேன் நாவொன்றோ"

சுந்தரருடைய செந்தமிழை நா ஒன்றோ, என்னுடைய ஊன் படிக்கும், உளம் படிக்கும், உயிர் படிக்கும் என்று சுந்தரருடைய செந்தமிழை இராமலிங்கர் படிக்கின்றபொழுது ஏற்பட்ட அனுபவத்தை அப்படியே வடித்துத் தருகின்றார். அவருடைய செந்தமிழிலே இலக்கியச்சுவை காண்கின்ற நோக்கினை நாம் எந்த அனுபவத்தில் பெறவேண்டும் என்பதைத்தான் நான் என்னுடைய சிந்தனைக்காக எடுத்துக்கொள்கின்றேன். சுந்தரர் பாடிய பதிகங்களைப் பற்றியும், இலக்கிய நோக்கைப் பற்றியும், சாத்திர நோக்கைப்பற்றியும் எனக்குமுன் பேசிய திருவாளர் நம்பியாரூரன் அவர்கள் மிக அழகான ஒரு சித்திரத்தை நமக்கு வரைந்து தந்திருக்கின்றார். அந்தப்போக்கிலே இலக்கியச் சுவை காண முற்படுகின்றேன்.

இலக்கியச் சுவைக்குப் பேராசிரியர் அவர்கள் சொன்னது போல இரண்டு கண்கள். ஒன்று சுவையென்று சொல்லுகின்ற ஒரு கண். அதை முதலில் பார்ப்போம். ஆகையினாலே எனக்கு ஒரு கண்தான் தரப்பட்டிருக்கிறது. அந்த ஒரு கண்ணினாலேயே சுந்தரர் செந்தமிழைக் காண முற்படுகின்றேன். இலக்கியத்துக்கு உயிராக இருப்பது அணி. அணிதான் பாடலுக்கு அழகு தருவது. ஏனைய திருமுறைகளுக்கு இல்லாத ஒரு தனிச் சிறப்பு சுந்தரருடைய செந்தமிழுக்கு உண்டு. சுந்தரர் பெருமானோடு நெருங்கிய தோழமை உரிமையோடு பழகியவர். மிக நெருங்கிய அவர், பெருமானிடத்திலே நகையாடுகின்ற உரிமைபெற்றவர்.

வேடிக்கையர்ச, அதனோடு வினையமாக, அழகாக அசதியாடுகின்ற அவருடைய பாடல்களையெல்லாம் சிந்திப்பதற்கு நேரம் இல்லை. ஒன்றிரண்டு சொல்ல விரும்புகின்றேன். திருவோணகாந்தன் தளி என்ற ஸ்தலத்திற்குச் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் வருகின்றார். அங்கே, "பெருமானே, உன்னைச்சேர்ந்த அடியவர்கள் எல்லாம் இன்றுமுதல் உனக்கு ஆட்செய்ய மாட்டோம்'' என்று கூறுகின்றார். 'ஏனப்பா இப்படிச் சொல்கின்றாய்' என்று பெருமானே முன் வந்து கேட்பதுபோல ஒரு கேள்வி வருகின்றது. பாடுகின்றார் :

"திங்கள் தங்கு சடைக்கண் மேலோர் திரைகள் வந்து
புரள வீசும்
கங்கையாளேல் வாய்த்திறவாள் கணபதியேல் வயிறு
தாரி!"

பெருமானே அடியார்கள் எல்லாம் என்னுடைய முன்வந்து நின்று கூக்குரல் இடுகின்றார்கள். அழுகின்றார்கள், ஏன் என்று வாய்திறந்து கேட்கமாட்டேன் என்கின்றாயே.

நீர் வடிவமாகப் பெருமானுடைய தலையிலே விளங்குகின்ற கங்கை பேச முடியுமா? முடியாது. கணபதியாவது பேசலாம் இல்லையா? அவரும் பேசவில்லையாம். கணபதியேல் வயிறு தாரி! முருகன் சிறு பிள்ளை. அங்கை வேலோன் குமரன் பிள்ளை. உன்னுடைய தேவியாராவது பேசலாமே. தேவியார் கோற்றட்டி ஆளார். இப்படி இருக்கின்ற உங்களுடைய குடும்பத்திற்கு அடிமையாக அடியார்கள் எல்லாம் விரும்பவில்லை. ஆகவே, உங்களுக்கு ஆட்செய்யமாட்டோம். ஓணகாந்தன் தளியுளீரே'' என்ற ஒரு பாட்டு புகழாப் புகழ்ச்சி என்ற அணியைச் சேர்ந்தது. அலங்காரத்திலே பழிப்பதுபோலப் புகழ்தல்

"பழிப்பதுபோலும் பான்மையின் மேன்மை
புலப்பட மொழிதல் புகழாப் புகழ்ச்சி"

என்பது தண்டியலங்காரம். பழிப்பதுபோல இறைவனைப் புகழ்கின்ற பான்மையாலே எண்ணற்ற பாடல்கள் இப்படி உண்டு. இந்தப்பாட்டிலே நம்முடைய சிந்தனைக்கு விருந்தாக, அறிவுடைய பெரியோர்களுக்கு எல்லாம், சிறிது வேலை கொடுக்கின்ற சொற்றொடராக இருப்பது இந்தக் கோற்றட்டி ஆளார். இதுவரை அந்தச் சொற்றொடருக்கு நான்கு உரைகள் வெளி வந்துள்ளன. இன்னொரு முறை பாடலைச் சொல்கின்றேன் :

“ திங்கள் தங்கு சடைக்கண் மேலோர் திரைகள் வந்து புரள வீசும்
கங்கையாளேல் வாய் திறவாள் கணபதியேல் வயிறு தாரி!
அங்கைவேலோன் குமரன் பிள்ளை தேவியார் கோற்றட்டி ஆளார் ”

என்று சொல்லியிருக்கின்றார். இந்தக் கோற்றட்டி என்ற பாடத்தையே ஒருவர் மாற்றிவிட்டார்.

கொற்றட்டி என்பது ஏட்டிலே சின்னக்கொம்பிற்கும் பெரிய கொம்பிற்கும் வித்தியாசம் தெரியாமல் வரையப்படவே கொற்றட்டி என்று பதிப்பிக்கப்பட்டுவிட்டது. கோற்றட்டி என்பது உணவு கொண்டுவந்து தருகின்றவள் அமுது ஊட்டுகின்றவள் என்கின்ற பொருளிலே இருக்கின்றது. இஃது ஓர் உரை. கோல்தட்டி என்பதற்கு வீணை மீட்டுகின்றவள் என்று ஒரு பொருள். இன்னொரு பொருள் மூன்றாவதாகக் கோல்தட்டி ஆளார் என்பதற்குச் சிவபெருமானுடைய பேச்சுக்கு மறுபேச்சுப் பேசாதவர்; கோலைத் தட்டி ஆளார். சிவபெருமான் சொன்னால் தான் ஆட்கொள்வாரே தவிர, கோன்தட்டி ஆட்கொள்ள மாட்டார். இன்னொரு பொருள்கள் இரண்டு குழந்தைகளையுமே கோலினாலே தட்டி நன்கு வளர்க்காத ஒரு தாய் அவள். கோலாலே தட்டி ஆளார். இந்த மாதிரி நான்கு பொருள்கள் இதுவரை வெளிவந்துள்ளன. அந்தக் கருத்தை மட்டும் நான் சொல்லுகின்றேன். இவற்றுள் எது சிறப்போ அதை எடுத்துக் கொள்வது உங்களுடைய பொறுப்பு. இப்படி ஓர் அழகான திருப்பாட்டு. அசதியாடுகின்ற முறையிலே புகழாப் புகழ்ச்சி என்கின்ற அணி அமைய நகைச்சுவையாக ஆண்டவனைப் புகழ்ந்து பாடுகின்ற உரிமை தம்பிரான் தோழர் ஆகிய சுந்தரர் ஒருவருக்குத் தான் இருக்கிறது. அதே திருப்பதிகத்தில் திருமுறைகளிலேயே “வாரமாகித் திருவடிக்குப் பணி, செய் தொண்டர் பெறுவதென்னே ” உம்மிடத்திலே நாங்கள் என்ன ஐயா பயன்பெற முடியும்? என்று சிவபெருமானைப் பார்த்து கேட்கின்றார். அப்படிக் கோபமாகக் கேட்கின்றபொழுது கூட, இரண்டு கண்களையும் பறித்துக் கொண்டபோது கூடச் சுந்தரர் இறைவனை நோக்கி, அந்த ‘நீர்’ என்ற மரியாதை குறையாமல் பேசுவார். அதுதான் ஒரு தனிச் சிறப்பு. “ வாரமாகித் திருவடிக்குப் பணிசெய் தொண்டர் பெறுவதென்னே ” — என்ன, சிவபெருமானிடத்திலே ஒன்றும் பெறமுடியாதா? ஏன் பெறமுடியாது ? ஆரம்பாம்பு — அவர் அணிந்திருக்கின்ற மாலையைப் பரிசாக வாங்கலாம் என்றாலோ அவர் பாம்பை அணிந்திருக்கின்றார். அந்தப் பரிசை யார் விரும்புவார்கள் ?

ஆரம்பாம்பு, வாழ்வது ஆரூர். ஆரூர் வாழ்வது யாரது ஊர்? என்று கேள்வியிலே இருக்கின்றது. இன்னும் யார் ஊர் என்றே தெரியவில்லை. "ஒற்றியூரே உமது அன்று; ஒற்றியூர் சிலேடை. ஒற்றியூர் எனற பெயரே அது அவருக்குச் சொந்த மானதன்று என்று காட்டுகின்றது. ஒற்றிவைத்தல் என்று சொன்னால் அடகு வைத்தல் என்று பொருள். சிவபெருமானுக்குச் சொந்தமான ஊர் அன்று அது. ஆகவே ஒற்றியூர் என்ற பெயரினாலாயே அது உம்மது அன்று என்று ஆகிவிட்டது. இப்படி இருக்கின்றபொழுது நாங்கள் எப்படி ஐயா, உமக்கு அடிமை செய்வது? எனறு கேட்கிறார். "தாரமாகக் கங்கை யாளைத் தலையில் வைத்த அடிகேள் உந்தம் ஊரும் காடு, உடையும் தோலே, ஓணகாந்தன் தளியுளீரே" என்று அசதி ஆடுகின்ற முறையிலே மிக அழகான பாட்டுக்கள். பிறிது ஓர் அணி ஒட்டு அணி. இரண்டு அணிகள் எடுத்துக்கொள் கின்றேன். புகழாப் புகழ்ச்சி ஒன்று, ஒட்டு அணி ஒன்று. மற்றும் பல கோணங்களில் இலக்கிய நோக்கைக் காணவேண்டும். ஒட்டு அணி – கருதிய பொருள் தொகுத்து அது புலப்படுத்து தற்கு, ஒத்தது ஒன்று உரைத்தல் ஆகும். ஓர் அழகான பாட்டு. எல்லோருக்கும் தெரிந்த பாட்டுத்தான் அது.

"அழுக்கு மெய் கொடு உன் திருவடி அடைந்தேன் அதுவும் நான் படப் பாலதொன்றுனால் பிழுக்கை, வாரியும் பால் கொள்வர் அடிகேள் பிழைப்பனாகிலும் திருவடி பிழையேன்" பெருமானே! இங்கு நான் ஒன்றை நினைவு படுத்துகின்றேன் பெருமானுக்கு. பிழுக்கை வாரியும் பால் கொள்வர். பசு வளர்க்கின்றவர்களுக்கு அது போடுகின்ற சாணம் முதலிய வற்றை அகற்றித் தூய்மை செய்கின்ற பொறுப்பு உண்டு.

பால் என்ற பயனைப் பெறுகின்றவர்கள் பசு கட்டுகின்ற இடத்தைத் தூய்மை செய்கின்ற பொறுப்பையும் உடையவர்கள் அல்லரோ? இதற்கு முன்பு சொல்லப்பட்டுவந்த உரை கறக்கின்ற பாலிலே பிழுக்கை விழுந்துவிடுமானால் அதை வாரி எடுத்து விட்டும் கூடப் பாலைக்கொள்வர். அதுபோல என்னிடத்திலும் குற்றம் இருந்தாலும் நீக்கிவிட்டு, என்னிடத்திலே இருக்கின்ற குணத்தைக் காணவேண்டும் என்று சொல்கின்ற உரை. இந்த உரை அத்துணைப் பொருத்தம் உடையது அன்று. இப்படி ஒட்டணி என்ற அமைப்பிலே ஓர் அழகான பாட்டை நமக்குத் தருகின்றார்கள். இயற்கை வருணனைப் பகுதியாக சுந்தரர் என்ன எல்லாம் சொல்கின்றார்? "வாக்கிற்கு அருணகிரி வாதவூரர்கனிவில் நயத்துக்குச் சுந்தரனார்" அல்லரோ. இயற்கை வருணனையில் ஒன்று இரண்டு பாட்டுக்கள். திருவாஞ்சியம்

என்ற ஸ்தலத்தைப்பற்றிப் பாடுகின்றார். அது நன்னிலத்திற்கு அருகேயுள்ள ஸ்தலம். அங்கே திருவாஞ்சியம் நல்ல மருத வளங்கள் சூழ்ந்துள்ள ஒரு பகுதி. நல்ல பொய்கைகள், நீர் நிலைகள் அத்தலத்தைச் சூழ்ந்திருக்கின்றன. பொய்கையிலே செந்தாமரைகளும் முளைத்திருக்கின்றன. வெண்மையான தாமரை மலர்களும் பூத்திருக்கின்றன. அந்தக்குளத்திலே நிறைய மீன்கள் இருக்கின்றன. அவற்றுள் சின்ன மீன்கள் முதிராத, அறிவு முதிராத, பக்குவம் பெருத, இளமையான நிலையிலேயுள்ள சிறு மீன்கள் நீர்நிலைக்கு மேலே வந்து மேய்கின்றன. வெண்தாமரை மலரைக் கண்டவுடனே அவற்றிற்கு ஓர் அச்சம். அந்த வெண்மையான தாமரை மலரைக் கொக்கு என்று எண்ணிக் கொண்டு எப்படியாவது தப்பவேண்டும் என்று ஒரு துள்ளுத் துள்ளிக் குதிக்கின்றன. அப்போது அந்த நீர் நிலையிலேயே ஒரு பெரிய மீன் வாயைத்திறந்துகொண்டு இருக்கின்றது. அதற்குள்ளே போய் விழுந்தன. ஏதோ ஒரு பழமொழி நாட்டில் வழங்குவது உண்டு. நரிஊருக்குப் பயந்து புலி ஊரிலே குடியேறியது போல என்று சொல்வார்கள். நரி ஊருக்குப் பயந்து ஒருவன் வேறு எங்காவது குடியேற வேண்டும் என்று எண்ணிக்கொண்டு புலி ஊருக்குச்சென்று குடியேறினுன். அதுபோலச் சின்னமீன்கள் வாளைமீன் வாயிலே சென்று விழுந்தன. வெறும் இயற்கை வருணனையாக மட்டும் காணுமல் சாத்திரக் கண்கொண்டு இந்த அடைகளை எல்லாம் கருத்துடைய அடைமொழியாக நாம் கருத வேண்டும்.

இறைவன் திருவாரூரிலேயிருந்த அடியார்களுக்கு எல்லாம் சுந்தரரை வரவேற்குமாறு ஆணையிடுகின்றுன். அடியார்கள் எல்லாம் சென்று சுந்தரரை வரவேற்கின்றுர்கள். சுந்தரர் சில நாட்கள் திருவாரூரிலே தங்கியிருக்கின்றுர். பரவையார் திருமணம் நடைபெறுகின்றது அதன்பிறகு உடனே பாடப் படுகின்றது திருத்தொண்டத் தொகை. திருத்தொண்டத் தொகையிலே சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் எப்படி பின்னுலே அவருடைய வரலாற்றிலே தொடர்பு பெறப்போகின்ற ஏயர்கோன் கலிகாமரையும் சேரமான் பெருமானையும் அதற்குள் எப்படி சேர்த்திருக்க முடியும்? என்ற ஒரு சிந்தனையைச் சமய உலகம் எண்ணிப்பார்க்க வேண்டும். பரவையார், சங்கிலியார் திருமணத்திற்குப் பிறகு சுந்தரரிடத்திலே பகைமை கொண்டு, இறைவனையே தூதாக அனுப்பிய காரணத்தால் இவரைக் காணுதல் கூடாது என்று கருதிய, ஏயர்கோன் கலிகாமரைப் பெருமான் நட்புக்கொள்ள செய்தது, சங்கிலியாருடைய திருமணத்திற்குப் பிறகுதான்.

மீண்டும் பரவையாரோடு வாழ்கின்ற காலத்தில் சேரமான் பெருமாள் வருகின்ருர், சுந்தரருடைய நட்பைப் பெறுவதற்கு. இப்படி ஒரு போக்கு அமைந்திருக்கின்றபொழுது என்ன நினைவிற்கு வருகின்றது? இப்படி ஒரு சந்தேகம். இதற்கு எப்படி நாம் தீர்வு காண வேண்டும்? நம்பியாண்டார் நம்பிகள் கூறுகின்ருர். சேக்கிழார் பெருமான் இந்த சிந்தனையில்லாமல் எப்படிக் கூறியிருப்பார்? திருத்தொண்டத் தொகையிலே சுந்தர மூர்த்தி ஸ்வாமிகள் "ஏயர்கோன் கலிகாமன் அடியார்க்கும் அடியேன்" என்று மட்டும்தான் குறிக்கின்ருர். அதற்கு மேலே தமக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு எல்லாம் சொல்லவில்லை. சேரமான்பெருமான் நாயனுரைக் குறிப்பிடுகின்ற பொழுது 'கார்கொண்ட கொடை கழறிற்றறிவார்க்கும் அடியேன்' என்கிருர். ஆகவே சுந்தரர் திருவாரூரிலே இருவரையும் பாடுகின்றபொழுது, திருவாரூர்ப் பூங்கோயிலின் உள்ளே தேவாசிரிய மண்டபம் என்று அடியார்கள் கூடியிருக்கின்ற ஒரு மன்றம் விளங்கியிருக்க வேண்டும். அந்தக் காலத்திலே — சுந்தரருடைய காலத்திலே வாழ்ந்த நாயன்மார்களுடைய வரலாறுகளை எல்லாம் நாயன்மார்களுடைய பெயர் வரிசைகளையெல்லாம் தேவாசிரிய மண்டபத்திலே அடியார்கள் கூடுகின்ற அந்தச் சங்கத்திலே அவர்கள் தொகுத்து வைத்திருக்க அதை அறிந்துதான் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன், கார்கொண்ட கொடை கழறிற்று அறிவார்க்கும் அடியேன் என்று பாடியிருக்க வேண்டும். பின்னுலே அவர்கள் இரண்டுபேரும் தம்மோடு தொடர்புபடப் போகின்ருர்களே என்பதை முன்னரே உணர்ந்து பாடியிருத்தல் என்பது வரலாற்றுப் போக்குக்கு ஒவ்வாதது. இஃது இடைப்பிறவரல்.

சொல்லாட்சியிலே எத்தனையோ மிக அழகான பழமொழிகளை எல்லாம் எடுத்தாள்கின்ருர். இலக்கிய மேற்கோளாகப் பல கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்று விரும்பினேன். சுந்தரருடைய தேவாரத்திலே கலைய நல்லூர்த் திருப்பதிகம் மிக அழகான திருப்பதிகம். சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடத் தான் மாதவம் செய்தது தென்திசை. தீதிலாத் திருத்தொண்டர்த் தொகை தர வந்தவர் சுந்தரர் என்ருலும்கூட, புராணக் கருத்துக்களை எல்லாம் இலக்கியமாகத் தொகுத்து ஒவ்வொரு பாட்டிலேயும் ஒவ்வொருவர் புராணத்தையும் மிக அருமையாகத் திருக் குறுந்தொகையில் அப்பர் சுவாமிகள் பாடியிருந்தாலும் கூட அவை யாவும் சுருக்கமாகவே உள்ளன. சுந்தரர் பாடிய கலைய நல்லூர்ப் பதிகம் ஒவ்வொரு பாட்டும் அதற்கு முன் வழங்கிய

புராணக்கருத்துக்களை எல்லாம் மிக விரிவாக சொல்லுகின்றது. தலைச்சிறப்புடைய திருப்பதிகம் அது.

அடுத்து, 'தானெனை முன்படைத்தான்' என்ற பதிகம் பஞ்சமம் என்ற பண். மிக உருக்கமான பண். அந்தப் பண்ணிலே 'தானெனை முன் படைத்தான்' என்று பதிகத்தைச் சுந்தரர் பாடியிருப்பது போற்றுதற்குரியது என்று சொன்னார்கள். இதற்கு முன்பு மாலையிலே பேசிய கருத்தரங்கிலே ஊன் உயிர் என்ற சொல்லைப்பற்றிச் சண்முகசுந்தரம் செட்டியார் அவர்கள் பேசும் பொழுது மிக அழகாக விளக்கம் சொன்னார்கள். பசுகரணம் ஆக இருக்கின்றவர் ஒன்றைப் பதிகரணம் ஆகச்செய்தல், ஏகதேசமாக இருக்கின்ற ஒன்றை வியாபரமாக ஆக்குகின்ற ஒரு நிலை என்றெல்லாம் அதற்கு அவர் அழகான பொருள் விளக்கம் சொன்னார்கள். இந்த அளவிலே இலக்கிய நோக்கு என்ற தலைப்பிலே சில கருத்துக்களைத் தங்கள் முன் சிந்திக்க வாய்ப்பு அளித்த பெரியோர்களுக்கு நன்றி சொல்லி இத்துடன் அமர்கின்றேன்.

ஏழாம் திருமுறையில் சாத்திரநோக்கு

★

பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ. திருப்பனந்தாள்.

★

அறனறிந்து மூத்த அறிவுடைத் தலைவர் அவர்களே! நாயன்மார் தூய சொன்மலர் பொதி நலன் நுகர்தரு புனிதப் பேரவையினர்களே! வணக்கம்.

தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தரும் மகாலிங்கப் பெருமானின் திருவருளும், சிவராசதானியாக விளங்கும் துறைசை ஆதீனத்து எழுந்தருளியிருக்கும் திருப்பெருந்திரு குருமகா சந்நிதானம் அவர்களின் பேரருட் பெருங்கருணையும் முன்னிற்க இப்பேரவையில் கலந்து கொள்ளும் வாய்ப்புப் பெற்றமைக்கு மிகவும் மகிழ்கின்றேன். திருவருளுக்கும் குருவருளுக்கும் எளியேனது வணக்கத்தைச் செலுத்திக்கொள்கிறேன்.

இன்று இப்பேரவையின் முன் சிந்திக்குமாறு தந்தருளிய தலைப்பு "ஏழாந் திருமுறையில் சாத்திர நோக்கு" என்பதாகும். சாத்திரம் என்றவுடனேயே ஏதோ வயது முதிர்ந்தவர்களுக்கு மட்டுமே, அதுவும் வீடுபேறு அடையும் விருப்பமுடையவர்களுக்கு மட்டுமே அஃது உரியதாக எண்ணும் உணர்வு எப்படியோ பிறந்துவிட்டது. ஆனால் சாத்திரங்கள் — வாழவேண்டுமென்று விரும்பும் இளைஞர் உலகுக்கும், இம்மைப்பயன் ஒன்றுமே போதும் என்பவர்கட்கும் கூட வழிகாட்ட வல்லனவாகும். சாத்திர நூல்கள் தொகையாக உருப்பெற்றமை இடைக்காலத்தே என்றாலும் அவற்றில் கூறப்பட்டுள்ள உண்மைகளும் அடிப்படை அமைப்புக் களும் சங்க காலம் தொட்டே நின்று நிலவி வருவனவாகும். சாத்திரத்தில் கூறப்பெறும் உண்மைகள் மூன்று. அவை இறை, உயிர், வினை யென்பன. இவற்றைப் பதி, பசு, பாசம் என்பர்.

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" (தொ. புற. 33)

" வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ" (தொ. செய். 110)

" நீல மணிமிடற்று ஒருவன் போல மன்னுக பெரும"

என வருவனவற்றால் இறையுண்மை வலியுறுத்தப் பட்டமை தெளியலாம்.

" ஒன்றே வேறே யென்றிரு பால்வயின்
ஒன்றி யுயர்ந்த பால தாணையி
னொத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை யின்றே" (தொ. கள. 2)

" மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தனம்" (புற. நா. 192)

" தீதும் நன்றும் பிறர்தர வாரா" (புற. நா. 192)

" வகுத்தான் வகுத்த வகையல்லால்" (திருக். ஊழ்.)

என வருவனவற்றால் வினையுண்மை வலியுறுத்தப்பட்டமை தெளியலாம். 'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப' என்பதனால் வழிபடுதற்கும், பழிதீர் செல்வமொடுவழிவழி சிறந்து விளங்குதற்கும் உரிமையுடைய உயிர் உண்மை தெளியப்படும். இவ்வாற்றான் மிகத் தொன்மையான காலத்திலிருந்தே பண்டைச் சான்றோர் இம்முப்பொருள் உண்மையை உணர்ந்து தெளிந்திருந்தனர் என்பது புலப்படும்.

சங்க காலத்தோடு ஒத்தும் அதை யடுத்தும் எழுந்த திருமுறைகள் இம்முப்பொருள் உண்மையை இன்னும் சற்று விரிவாக எடுத்துரைக்கத் தலைப்பட்டன.

எள்ளினின்று எண்ணெய் எடுப்பதுபோல இத்திருமுறைகள் ஆகமங்கள் ஆகியவற்றினின்றும் தோன்றியவையே ஞான சாத்திரங்களாகும்.

சாத்திரமும் தோத்திரமும் ஆக விளங்குபவன் இறைவன். அப்பெருமானை அடைவிக்கும் திருமுறைகளும் அவ்விரண்டிற்கும் இலக்காக இருப்பதில் வியப்பில்லை. ஏழாந் திருமுறையாதலின் ஏழு குறிப்புக்களைக்கூற விரும்புகின்றேன். திருவருள் முன்னிற்க! ஏழாந் திருமுறையை அருளியவர் சுந்தரர். இவர்தம் வரலாற்றில் சில அருட் செயல்களை எடுத்துரைக்கும் சாத்திரப் பாடல்கள் உள. இவரருளிய திருமுறையில் சாத்திர நோக்கமைய அமைந்த பாடல்கள் பல. இவற்றை முறையே வரலாற்றில் சாத்திர நோக்கு, திருமுறையில் சாத்திர நோக்கு எனப்பகுத்துப் பேசுவது முறையாகும்.

வரலாற்றில் சாத்திர நோக்கு

இவர் வரலாற்றில் நிகழ்ந்த அருட்செயல்கள் பல. அவற்றில் இரு நிகழ்ச்சிகளைச் சாத்திர நூல்கள் முகந்துள்ளன.

'முதலையுண்ட பாலனை யழைத்தது' — இதனை,

"பாலைநெய்தல் பாடியதும் பாம்புஒழியப் பாடியதும்
காலனையன்(று) ஏவிக் கராங்கொண்ட-பாலன்
மரணம் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம்போல் அல்லாமை காண்"

எனவரும் திருக்களிற்றுப் படியார் எடுத்துரைக்கின்றது.

'இறைவன் தூது போயது' — இதனை,

"மோகம் அறுத்திடின்நாம் முத்திகொ டுப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத்-தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்தொண்டன் தொண்டுதனை
ஏதாகச் சொல்வே னியான்"

எனவரும் திருக்களிற்றுப்படியார் எடுத்துரைக்கின்றது.

திருமுறையில் சாத்திர நோக்கு

பன்னிரண்டு திருமுறைகளும் சிவஞான போதத்திலமைந்த பன்னிரண்டு நூற்பாக்களோடும் ஒத்து எண்ணுதற்குரியன. அந்நிலையில் இவ்வேழாந்திருமுறை சிவஞான போத ஏழாம் நூற்பாவோடு ஒத்துக் காண்டற்கு உரிமையுடையதாகும். சுந்தரர் இத்தலத்திற்கு எழுந்தருளி அருளிய பாடலொன்று:

"ஐவகை அரையர் அவர்ஆகி
ஆட்சி கொண்டு அவர் நீங்கார்
அவ்வகை அவர் வேண்டுவதானல்
அவரவர் வழிஒழுகி நான்வந்து
செய்வகை அறியேன் சிவலோகா
தீவண எரியாடி
எவ்வகை எனக்கு உய்வகை யருளாய்
இடைமருதுறை எந்தை பிரானே."

சுந்தரர் வலிவலத்தில் எழுந்தருளி அருளிய பாடல் ஒன்று:

"பந்தித்தவ் வல்வினைப் பற்றறப் பிறவிப்
படுகடற் பரப்புத் தவிர்ப்பானைச்
சந்தித்த திறலால் பணிபூட்டித்
தவத்தை ஈட்டிய தன்னடியார்க்குச்
சிந்தித்தற் கெளியதாய்த் திருப்பாதம்
சிவலோகம் திறந்து ஏற்றவல்லானை
வந்திப்பார்தம் மனத்தில் உளானை
வலிவலம் நகர் கண்டு கொண்டேனே."

இவ்விரு பாடல்களும் உயிரது இயல்பை விளக்கி நிற்கின்றன. முன்னைய பாடலில் என்னுயிர் ஐம்பொறிகளின் வயப்பட்டு அவற்றின் ஆணைவழி நின்றதால் செய்வகை அறியாது திகைத்தேன் எனப் புலப்படுத்துகிறார். அடுத்த பாடலில் அத்தகைய உயிரே இறைவனை யணுகி வழிபட்டவாற்றல் இறைவனது திருவடியைச் சிந்திப்பதற்கு எளிதாயும் சிவலோகம் சேருதற்கு உரிமையுடையதாயும் இருக்கும் திறம் பெற்றதெனக் குறித்துள்ளார். இவ்வாற்றான் உயிர் சார்ந்ததன் வண்ணமாம் தன்மையுடையதென அறியலாம். இவ்வுண்மையையே,

"யாவையும் சூனியம் சத்து எதிர் ஆதலின்
சத்தே அறியாது அசத்து இலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா"

என வரும் சிவஞானபோத நூற்பாவும் விளக்கி நிற்கின்றது. உயிர் சத்தோடு கூடிச் சத்தாயும், அசத்தோடு கூடி அசத்தாயும் இருக்குந் திறமுடைமையால் 'இருதிறன் அறிவுளது' என்றார். எனினும் அவ்வுயிர் அவ்விரண்டுமன்றித் தனியாகத் தனக்கொரு

பெயர் பெற்றும் நிற்கும். அதுவே ஆன்மா (அ) உயிர் என்பதாகு மென்பார் 'இரண்டலா ஆன்மா' என்றார். இவ்வாற்றான் இந் நூற்பாவின் பொருண்மையும் மேற்காட்டிய இரு பாடல்களின் பொருண்மையும் ஒத்து நிற்பதை யறியலாம்.

நெறி வகையில்

அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரும் முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளையும் விளக்க வந்தவர்கள் என்றல் மரபு. இந் நெறியில் சுந்தரர் யோகநெறியை விளக்கவந்தவராவர். யோகம் – கூடுதல். உயிர், மூலாதாரம் முதலாகிய அறுவகை ஆதாரங்களின் வாயிலாக அகமார்க்கத்தில் நின்று அதன் வழியே இறைவனைக் கூடுதல் யோகமாகும். இதனைத்

"தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாள்தொறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே
ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூர்எம் மடிகளே"

என வரும் பாடலால் சுந்தரர் விளக்குகின்றார். இந் நெறியைச் 'சகமார்க்கம்' என்றும் கூறுவர்.

"சகமார்க்கம் புலன் ஒடுக்கித் தடுத்து வளியிரண்டு
சலிப்பற்று முச்சதுர முதல் ஆதாரங்கள்
அகமார்க்கம் அறிந்து அவற்றின் அரும்
பொருள்கள் உணர்ந்து அங்கு
அணைந்து போய் மேலேறி அலர்மதி மண்டிலத்தின்
முகமார்க்க அமுதுடலம் முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள்
உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்
உழத்தல் உழந்தவர் சிவன்தன் உருவத்தைப் பெறுவர்"

என வரும் சித்தியார் பாடல் இதனை விளக்கி நிற்றல் காணலாம். சேக்கிழார் பெருமானும் இதனை யுளங்கொண்டு

"மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
....
பொன்னணி மணியார் யோகப் புரவிமேல் கொண்டு
போந்தார்"

எனக் கூறியுள்ளமையும் ஈண்டு நினைவு கொள்ளுதற்குரியதாகும்.

குருவருள்

சாத்திரங்களை எத்துணைதான் ஓதினும் குருவருளால் அன்றி உயிர் வீடுபேறடைதல் இயலாது. இவ்வுண்மை சுந்தரரை இறைவன் தடுத்தாண்டு கொண்டருளியவாற்ருல் அறியலாம். ஆசில் அந்தணர்கள் வேருேர் அந்தணர்க்கு அடிமையாதல் யாண்டுமில்லையென்று பேசிய சுந்தரர், இறைவன் தம்மைத் தடுத்தாட்கொண்டமையைத் தலைக்கீடாகக் கொண்டு உணர்வு தந்து உய்யக்கொண்டான் எனப்பின்னர்ப் பேசுவதைப் பெரிய புராணத்தால் அறியலாம். இதனையே வெளிப்படையாக,

‘ மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவே உன் குற்றேவல் செய்வேன்
நெறியே நின்னடியார் நினைக்கும் திருக்காளத்தியுள்
அறிவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே ’

எனவரும் பாடலால் குறிக்கின்ருர். இங்குக் குருவே எனப் போற்றி யுரைத்தமை காண்க. இத்தகைய குருவருளையே,

“ சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்ந்தநலம் வாய்க்குறுமோ — ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாய்இதனைச் செப்பு ”

எனவரும் பாடல் குறிக்கின்றது.

வினையும் பயனும்

வினையில் இருதிறன் உண்டு. ஒன்று இம்மைச் செய்வினை இம்மையிலேயே பயன்தருவது. பிறிதொன்று இம்மைச்செய்தது மறுமையில் பயன்தருவது. இத்தகைய வினை கொடியது. நம்மை அறியாமலேயே நம்மைப்பற்றி நிற்பது. இதனை,

“ முன்னைச் செய்வினை இம்மையில் வந்துமூடும் ”

‘ வெய்தாகிய வினை, ’ ‘ வஞ்ச வல்வினை ’ — எனச் சுந்தரர் குறிக்குமாற்ருன் உணரலாம். தீவினைகளுள் மிகக்கொடியது கொலையாகும். இத்தீமை செய்பவன் அதன் பயனை அப் பிறவிலேயே பெறுபவன். இதனைக் “ குற்றெருவரைக் கூறை கொண்டு கொலைகள் சூழ்ந்த களவெலாம்; சொற்றெரு வரைச்

செய்த தீமைகள் இம்மையே வரும் திண்ணமே'' என்றருளுகின்றூர் சுந்தரர். இங்ஙனமே நல்லறங்களுள் இறைவனை வழிபட்டு உய்யுவதே தலைமையான அறமாகும். இதனையும் எப்பிறவியில் ஒருவன் செய்கின்றானோ அப்பிறவியிலேயே அப்பயனை அடைவான் என்றருளுகின்றார். சுந்தரர் இதனைத்

"தம்மையே புகழ்ந்(து) இச்சை பேசினுஞ் சார்வினுந்
தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை புகலூர்
பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறுங் கூறையும் ஏத்தலாம்
இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்(கு) யாதும்
ஐயுற வில்லையே"

எனவரும் பாடலால் அறியலாம்.

இதனையுளங்கொண்டே பரிமேலழகரும் 'மிகப்பெரிய அறஞ் செய்தாரும், மிகப்பெரிய பாவஞ்செய்தாரும் முறையானன்றி இம்மைதன்னுள்ளே அவற்றின் பயன் அனுபவிப்பரென்னும் அறநூற்றுணிபு பற்றி, இப்பேரறஞ்செய்தான்றானுங் கொல்லப் படான்; படானாகவே, அடியிற்கட்டிய வாழ்நாள் இடையூறின்றி யெய்துமென்பார், 'வாழ்நாண்மேற் கூற்றுச் செல்லா' தென்றார் செல்லாததாகவே, கால நீட்டிக்கும்; நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர்வீடுபெறுமென்பது கருத்து. இதனால் அவர்க்கு வரு நன்மை கூறப்பட்டது'' எனக்கூறுகின்றார். வினைகளுள் பழவினை யும் (சஞ்சிதம்) வருவினையும் (ஆகாமியம்) இறைவழிபாட்டால் நீங்கும். நுகர்வினை (பிராரத்துவம்) உடல் முடியுங்கால் ஒழியும். இதனை,

'பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார்'

எனச் சுந்தரர் குறிக்கின்றார். ஈட்டும் வினை — வருவினை அஃதாவது ஏறும் வினை. ஞானசாத்திர நூல்களில் ஒன்றாகிய திருவருட்பயனும் 'ஏன்றவினை' என்ற பாடலில் இக்கருத்தை அழகாக விளக்குதல் காணலாம்.

ஒறுப்பதும் அருளே

இறைவன் உயிர்களை ஒறுப்பதும் அத்தீமையினின்று அவ்வுயிர்களைப் போக்குவதற்கேயாகும். இதனை 'ஒறுத்தாய்

நின்னருளில் அடியேன் பிழைத்தனகள் பொறுத்தாய்' என்ற அடியால் சுந்தரர் குறிப்பிடுகின்றார். இதனையே பின்வந்த அருள் நந்தி சிவாச்சாரியாரும்,

" நிக்கிரகங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வது "

எனக் குறித்துச் செல்வர்.

அடியார் வழிபாடு

சுந்தரர் அடியார் வழிபாட்டில் தலைநின்றவர். திருத் தொண்டத்தொகை ஒன்றே இதன் உண்மையை விளக்கும்.

'தெய்வத்தினை வழிபாடு செய்தெழுவார் அடிதொழுவார்,
அவ்வத்திசைக் கரசாகுவார் அலராள் பிரியாளே'
'அடியார் அடியார்க்கெல்லாம் தொண்டே பூண்டொழிந்தேன்'

எனப் பிறவிடத்தும் சுந்தரர் கூறியருளுகின்றார். இக்கருத்துச் சிவஞான போதப் பன்னிரண்டாம் நூற்பாவோடு ஒத்து நோக்கி மகிழ்வதற்குரியதாகும். 'நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே'

'மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை — அறப்பித்துப்
பத்தர் இனத்தராய் பரனுணர்வி னுலுணரும்
மெய்த்தவரை மேவா வினை '

என வரும் சாத்திரக் குறிப்புக்களை காண்க.

ஏழாந் திருமுறை இத்தகைய அரிய பல தத்துவக் குறிப்புக்களை உடையது. ஆதலால்தான் சுந்தரர் பெருமானே

'தொண்டன் ஊரன் பிதற்றிவை
தத்துவ ஞானிக ளாயினுர்தடு மாற்றிலார்
எத்தவத் தோர்களும் ஏத்து வார்க்கிட ரில்லையே '

என அருளினர். எனவே பக்குவ முதிர்ச்சியுடையார் அஃதில்லாதவர் ஆகிய அனைவரும் ஓதி உய்ய வேண்டுவது இவ்வேழாந் திருமுறை என்பது விளங்கும்.

கருவி நூல்களில் கட்டுண்டு நிற்கும் எளியேனை, இத்தகைய ஞானப்பனுவல்களில் கருத்தூன்றச் செய்தருளும் குருவருளையும் கேட்டு மகிழ்ந்த பேரவையினரையும் வாழ்த்தி வணங்கி விடை பெறுகின்றேன். வணக்கம்.

பார்வையாளர் — முடிவுரை

டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., எம். லிட். பி. எச். டி.
சென்னை பல்கலைக்கழகம்.

★

தம் முடிவுரையில் காட்டிய குறிப்புக்களாவன :

பெரியோர்களே, இங்கே பேசியவர்களுடைய அருமை பெருமைகளை நான் விரிவாகச் சொல்லவேண்டியதில்லை. நாம் எல்லாம் காலத்தை வென்ற கடவுளை, காலனை வென்ற கடவுளை வழிபடுகிறவர்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பெருங்கொடை எது என்று கேட்டால், அவருக்கு முன்னே இருந்த இரு பெரியவர்களும் பகை போக்கினார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தொகை ஆக்கினார்கள். ஒரு நல்ல வாழ்வுக்கு இன்றியமையாமை பகை போக்குதலும், தொகை ஆக்குதலும். சிவஞானபோதம் 12ஆவது சூத்திரம் இதைக் குறிப்பிடுவதாக நான் நினைக்கிறேன். தீமையிலிருந்து விலக வேண்டும். நன்மையோடு மருவ வேண்டும். அதுதான் இந்த மூன்று பெரியவர்களும் நமக்குக் காட்டிய வழி. அவற்றுள்ளும் ஒரு நயம் இருப்பது போல இருக்கிறது. பகை முடிக்க இருவர் தேவை. தொகை முடிக்க ஒருவர் போதும். இதற்குமேல் இந்தக் குறிப்பை விளக்க வேண்டியதில்லை என்று நினைக்கிறேன்.

அடுத்து இறைவனைப் பார்த்துச் சுந்தரர் சொல்கின்றார்.

எல்லாம் அறிவீர் ஈது அறியீர்

எவ்வளவு எளிய தமிழ் — எவ்வளவு முரண் அணி அமைய அந்தக் கருத்தை அமைத்திருக்கிறார் என்று நோக்கினால் தெரியும்.

இன்னொன்று சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய வாக்கைப் பார்க்கிறபோது சைவ சித்தாந்தத்திற்கே உட்கருத்தாய் இருக்கிற திருக்குறள் கருத்துக்களை எவ்வளவு அழகாக இனிய தமிழில் சொல்லியிருக்கிறார்கள் என்று காணலாம்.

ஓடுபுனல்......

உறங்க விழித்தல் ஒக்கும் இப்பிறவி

என்கிருர். இந்தக் கருத்துடைய திருக்குறள் நமக்கு நினைவுக்கு வரும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் செந்தமிழில் எப்படி எல்லாம் ஈடுபட்டிருந்தார்கள் என்பது நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்று.

கண்ணுய் ஏழுலகுங் கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணுர் இன்றமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே

என்கிறபோது இறைவனையே இன்தமிழாய்க் காண்கின்ற வட்டாரப் பற்றுப் புலனுகிறது.

இன்னும் இறைவனைக் 'கற்ருேர் இடர் தீர்க்கும் கடவுள்' என்று பாடுகிருர். கயிலையில் தொடங்குகிறது அவரது வாழ்வு. கயிலையில் முடிகிறது. திருவாரூரில் அவருடைய திருவடி படுகிறது. இந்திய நாட்டு மேற்கு கடற்கரையோரத்தில் திருவஞ்சைக்களத்தில் படுகிறது. இப்படி தெற்கு வடக்கு — கிழக்கு மேற்கு — என்பதாக இந்திய ஒருமைப்பாட்டுக்குச் சுந்தரருடைய வாழ்வு அடையாளமாய் இருப்பதை என்னுல் காணமுடிகிறது. சுந்தரருடைய வாக்கு - சித்தாந்தம் எல்லாம் என்ன சொல்கிறது? பாலுணர்ச்சிக்கு மடைமாற்றம் தேவை - பெண்களை எல்லாம் தாயாய்ப் பார்க்கிற ஒரு மன நிலை - இறைவனும் இறைவியுமாக இருக்கிற ஒரு நிலை வழிபாடு. கொங்கைகளையே சிவலிங்கம் என்று காளிதாசன் பூசை செய்தான் — பாரதி வாக்கு. ஸ்ரீ இராமகிருஷ்ணன் சாரதாமணி தேவியையே வைத்து வழி பட்டார் — வரலாறு. சுந்தரர் பாடுகிருர், அம்மையப்பனுக: அம்மையப்பனுக இறைவனை வழிபடுவதெல்லாம், சைவசமயம் வழிபடுவதெல்லாம் மகஞ்சோதரா, ஹரப்பா நாகரிகத்தில் இருந்து வழிபடுவதெல்லாம் யாராலும் வெல்லமுடியாத பால் உணர்ச்சியை மாற்றுவதற்காகத்தான் என்று சொல்லி உங்களிடம் இருந்து விடைபெறுகிறேன்.

பார்வையாளர் — முன்னுரை

13—2—1971 காலை

★

திரு. சா. கணேசன்

★

பெரியோர்களே, தாய்மார்களே - இன்றைய தினம் இந்தச் சிவத்தலத்திலே திருமுறை மகாநாட்டில் இரண்டாவது நாள் நிகழ்ச்சி தொடங்குகிறது. என்னைச் சிறப்புரையாற்றப் பெரியோர்கள் பணித்திருக்கின்றார்கள். எவ்வகையாலும் தகுதி நிரம்பாத சிறியேனை இப் பணியிலே ஊக்குவித்த மகாசந்நிதானம் அவர்களுக்கும், அதற்கெல்லாம் மூலகாரணமாகிய ஆண்டவனுக்கும் என்னுடைய வணக்கங்கள். திருமுறை என்று சொல்லும் தொகை நூல்களைப்பற்றி நமக்குள்ளே பல்வேறு கருத்துக்கள் இருக்கலாம். அவற்றை மாறுபட்ட கருத்துக்கள் என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. திருமுறை என்பது பற்றிப் பேதங்கள் ஏற்படலாம். எத்துணையாயினும் சரி; தொகுக்கப்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றி எல்லாம் நமக்குள்ளே இப்பொழுது பிரச்சனை இல்லை. நமது சமயம் வைதிக சமயம். வேதத்தை முழுக்க முழுக்க ஏற்று அவ்வழியிலேயே செயல்பட நம்மை எல்லாம் ஊக்குவிக்கின்ற சமயங்கள் வைதிக சமயங்கள் எனப்படும். அந்த நெறியில் உள்ளவை அல்லாதன பற்றிப் பேச்சு இல்லை. இப்போது அங்ஙனம் உள்ளவற்றை மட்டும் நாம் பேசுகின்றோம்.

நம்முடைய மூவர் முதலிகள் அருளிய பாசுரங்கள் பின்னே அருளாளர்களால் தொகுக்கப்பட்டன. இடையே அவை பல காலம் மூடி மறைக்கப்பட்டுக் கிடந்தன. தமிழையும் சைவத்தையும் கலைகளையும் காக்கவே அவதரித்தானோ என்று எண்ணப்படுகின்ற ராஜராஜன் காலத்தில் அவை வெளிப்பட்டு, புலப்படுத்தப்பட்டு, பிரசாரம் செய்யப்பட்டு இன்று நாட்டிலே நிலவுகின்றன. அவனுக்குப் பின்னே வந்த பெரியவர்கள் இன்று காணப்படுகிற 12 என்ற எண்ணிக்கையோடு கூடிய திருமுறை நூல்கள் முழுதையும் தொகுத்து, இணைத்து நாம் எல்லாம் நல்வாழ்வுபெற, நற்கதி பெற அருளியிருக்கின்றார்கள்.

அவற்றிலே இன்றைய தினத்தில் முக்கிய பேச்சுக்குரிய நூலாக விளங்குவது உலகமே இதுவரையில் பெற்ற தோத்திர நூல்களுக்குள்ளே தலைசிறந்தது என ஒப்புக்கொள்ளத்தக்க, ஒப்புக்கொள்ளப்பட்ட திருவாசகம் ஆகும். திருவாசகம் மகோன்னதமான நூல். பாடல்கள் யாவும் அரிய தாமரை மலர்கள். தண்ணீர்ப் பொய்கையில் மலர்ந்தவை அல்ல. கண்ணீர்ப் பொய்கையில் மலர்ந்த கமலங்கள். அவை அத்தனையும் அன்பின் முதிர்ச்சியிலே வெளிப்பட்ட அரிய அன்பு மெய்ப்பாடுகளாகிய பாடல்கள். யாப்புக்கும் அணிக்கும் கட்டுப்பட்டு, வெளிப்பட்ட உற்பத்திகள் அல்ல அவைகள். மகோன்னதமான மெய்யறிவு பெற்று, ஆண்டவனின் அடிமலர் நிழலிலே அருள் உபதேசம் பெற்று, அந்தப் பேரறிவினாலே மாணிக்கவாசகப் பெருமான் இந்த அற்புதப் பாக்களை, தெய்விகப் பாசுரங்களை நமக்குப் படைத்துத் தந்தருளியிருக்கின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கையையும் இந்தத் திருமுறை ஏற்பட்டதற்கு மூலமோ என்று எண்ணக்கூடிய, சொல்லக்கூடிய கதைகளையும் பார்த்தால், நமக்கு ஏதோ சிறிது வேடிக்கையாகத் தோன்றினாலும் வருத்தம் ஏற்படாமல் இராது பாண்டிய நாட்டுப் பிரதமராக விளங்கிய அவர்கள் அரசுக் கருவூலத்தில் இருந்து ஏராளமான பொருள்களை ஏற்று வந்து அவற்றை எல்லாம் ஏதோ ஆலயப் பணிக்காகச் செலவிட்டுவிட்டதாகப் பின்னாலே கதைகள் பேசப்பட்டன. என்னைப் பொறுத்தவரையில் அதை நம்ப நான் தயாராக யில்லை. அதுமாத்திரமன்று. அதற்கு அகச்சான்று வேறு எதுவும் இருப்பதாக என்னுடைய சிற்றறிவுக்குத் தோன்றவில்லை. அதையும்விட இவ்வளவு பேரறிஞர், உலக அனுபவம் நிரம்பியவர், தன்னலம் அற்றவர், என்னதான் நல்ல நெறியானாலும் தவறான முறையிலே செயல்பட்டிருப்பார் என்று எண்ண என் மனம் இடம் கொடுக்கவில்லை. எவ்வளவுதான் நல்ல காரியமானாலும் கூட, திருடலாம் என்ற மனோபாவத்தைக் கொண்டால் அது அந்த நல்ல காரியத்தை முழுமையும் பயனற்ற தீமையாக்கிவிடும். நம்மைப்போலத்தான் வைணவர்களிடையேயும் திருமங்கை மன்னனைக் கொள்ளைக்காரனாகக் காட்டுகிற மரபு தோன்றத் தொடங்கியது. இன்னும் உள்ளே நுழைந்து பார்த்தால் மணிவாசகப் பெருமான் கட்டியதாகச் சொல்லப்படும் கோயிலுக்கே சென்று பார்த்தால் இந்த உண்மை தெற்றெனப் புலப்படும். அதுவும் 'மெய்தான் அரும்பி, விதிர் விதித்து, உன் விரை ஆர் கழற்கு, என் கைதான் தலை வைத்து, கண்ணீர் ததும்பி, வெதும்பி, உள்ளம் — வாய் அல்ல — பொய்தான் தவிர்த்து, உன்னை "போற்றி, சயசய போற்றி," என்றும்

கைதான் நெகிழவிடேன் ' என்றெல்லாம் பேசியவர் அவர். கை வெறும் கை அல்ல என்பது பெரியோர்களுக்குத் தெரியும்.

அந்த ஒழுக்க உறுதிப்பாடு — கட்டுப்பாடு — அதிலே துளியும் நழுவாதிருந்து பேசிய மாணிக்கவாசகப்பெருமான் பாண்டியன் கருவூலப் பொருள்களை எல்லாம் குதிரை வாங்க என்று எடுத்துச் சென்று ஆலயம் கட்டினர் என்று சொல்லத் தொடங்கினல் சமய நெறியிலும் சரி, வரலாற்று நெறியிலும் சரி முறையாகச் சென்றவர்கள் ஆகமாட்டோம். முழுக்க முழுக்கக் கற்பனைக் கதையாகின்ற ஒன்றை நாம் நம்பி நிற்கவேண்டிய நிலையில் உள்ளோம். அன்றியும் அவர் கட்டியதாகச் சொல்லப் படுகிற கோயில் ஆவுடையார் கோயில். அதற்குக் கோயில் என்று பெயரே தவிர அங்கே மூர்த்தியே இல்லை. "மாடக்குச் சித்திரமும்......" என்பது போல ஒரு கோயிலுக்குச் சித்திரம் — மூர்த்தி — இன்றியமையாதது என்று மூர்த்திகள் வைத்து இருக்கிருர்கள். என்ன ? எம்பெருமான் மாணிக்கவாசகப் பெருமானுக்கு அருள் சுரக்க எழுந்தருளினன், மறைந்தருளினன் ஆகவே அவன் இருந்த ஆசனம்தான் இப்போது இருக்கிறது. ஆவுடையார்தான் இருக்கிருர். லிங்கம் இல்லை. ஆகவேதான் மக்கள் ஆவுடையார் கோயில் என்று சொல்கிருர்கள். அந்த ஆவுடையாரைச் சுற்றி வேலைப்பாடு எதுவும் இல்லாத வெறும் சாதாரணமான சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. சுவரில் பிளாஸ்டர் என்னும் ஒட்டுத்தூண் கூடக் கிடையாது. மாணிக்க வாசகரே கட்டியது என்ருலும் அதைக் கட்டுவதற்கு எவ்வளவு செலவழித்திருக்கக் கூடும்? இவற்றை எல்லாம் மனத்தில் வாங்கிக் கொண்டால் ஏதோ ஒரு கதை கட்டப்பட்டிருப்பதை நாம் காணலாம்.

இந்தக் கதையை எடுத்துக்கொண்டு இலங்கைக்குச் சென்ருல் அங்கே ஓர் இடத்தில் குதிரை வாங்குவதற்காகக் கொண்டுவந்த பணத்தைக் கொண்டு மணிவாசகர் கட்டிய கோயில் என்று ஒரு கோயிலைக் காட்டுகிருர்கள். நன்ருக அப்படிச் சொல்லிக்கொண்டு அவர்கள் இருக்கட்டும்; ஆட்சேபணை இல்லை. அற்புதமான பாடல் இருக்கிறது அந்த இடத்திற்கு. அந்தப் பாடலிலே வருகிற தோற்றம் அமைதி எல்லாம், பாலாழி என்ற குளம் உள்பட — அங்கே காணப்படுகின்றன. அங்கேதான் குதிரை வாங்க வந்தார் என்று சொல்கிருர்கள். அதுவும் வேடிக்கை யாகத்தான் இருக்கிறது. பணத்தை எடுத்துக்கொண்டு பாண்டியநாட்டுக்கடற்கரையில் குதிரை வாங்காது, இலங்கைக்குச் சென்று குதிரை வாங்கிப் படகில் இங்கே கொண்டுவரலாம் என்று

ஒருவர் எண்ணியிருக்க முடியுமா? அதைப்பற்றி நமக்கு அக்கறை இல்லை. இந்த மாதிரி வரலாற்றில் எத்தனை இடக்கர்களை நாம் ஒவ்வொருவரும் பண்ணிக்கொண்டு வருகிறோம் என்பதற்கு ஒரு சிறிய சான்றாக இதனைச் சொல்கிறேன். இந்தக் கதைக்கு வரலாற்று நெறியில் இம்மியும் இடம் இல்லை என்பதை அறிஞர் உலகம் ஏற்றுக்கொள்ளும் — ஏற்றுக்கொள்கிறது. இதோடு இந்த ஒவ்வாத வரலாற்றுக் கதையை மறந்துவிட்டு மணிவாசகப் பெருமானை எங்கே சந்திக்கமுடியும்? முழுக்க முழுக்கத் திருவாசகத்தில்தான். அதுதான் அவருடைய சிறப்பை, பெருமையை நமக்குப் புலப்படுத்தும். முன்னோர்கள் சொல்லாத நெறிக்கெல்லாம் சென்று வந்து பல அருமைகளை எல்லாம் காட்டுகிறார்; திணைகளில் கூட அற்புதமான மாற்றத்தை உண்டாக்கினார்.

நடப்பன நடாஅய், நிற்பன நிறீஇ—கிடப்பன கிடாஅய் என்பதாக மூன்று திணைகளைக் காட்டுவார். நடப்பன என்கிற போது எறும்பு முதல் யானை ஈறாக இயங்கக்கூடியவை. நிற்பன மரம், மலை போன்றவை. கிடப்பன—இந்த மேசை போன்றவை. மரம் என்கிறபோது கூட அவை ஓரிடத்தில் நின்று வளர்வன. ஆனால் அந்த மரத்தில் இருந்து துண்டிக்கப்பட்ட சிறிய கூறு இவற்றை எல்லாம் அடக்கக்கிடப்பன என்கிறார். இப்படி எல்லாம் எத்தனை எத்தனையோ அரிய விஷயங்கள்; அவற்றை எல்லாம் நாம் அதில் காணவேண்டும். அதற்காகத்தான் அந்த நூல் என்று சொல்லவில்லை; முழுக்க முழுக்கத் தம்மை மறந்து அவனை நினைந்து, கடமை உணர்ந்து, திமிர் அற்று, எதற்காக வந்தோம் என்பதை உணர்ந்து, அடைய வேண்டியதை அடைவதற்கு வழி காட்டுகின்ற ஒரு பொக்கிஷமேயன்றி வெறும் மொழி ஆராய்ச்சிக்கு மட்டும் அதை நான் படிக்கச் சொல்லவில்லை. அத்தகைய நிலையிலும் மொழி ஆராய்ச்சிக்கும் பல அற்புதமான இடங்களைக் காணலாம். இன்னும் பெரியவர்கள் இந்த எட்டாம் திருமுறை நடுவில் அமைந்திருப்பது என்பதாக எல்லாம் சொல்வார்கள். அதிலே காணப்படுகிற பாடல்களை எல்லாம் ஆராய்ந்து தத்துவநோக்கோடு, இலக்கிய நோக்கோடு பேச அறிஞர் பெருமக்கள் பலர் வந்திருக்கிறார்கள். காலம் மிகக் குறுகியது—தொடங்கிய நேரம் குறிப்பிட்டதற்கு அதிகமானது. ஆகவே நீளப் பேசத் தொடங்கவில்லை.

திருமுறைகளைப் பிரச்சாரம் செய்வதற்காக மட்டும் அமைந்துவிடாது திருமுறைகளின் லட்சியம் என்னவோ அந்த

லட்சியத்தை நோக்கி நம்மை இட்டுச்செல்வதற்குப் பேருதவியாகக் குருமகா சந்நிதானம் வழிகாட்டவேண்டும். இந்த மகாநாடு ஏப்ரல் மே மாதங்களில் அமைவதுபோல இருந்தால் பலரும் பங்குகொள்ள முடியும். டெலிகேட்டுகளுக்கு 5 ரூ. என்பதாகக் கூட வசூலித்து வருகிறவர்களுக்குத் தங்க, இருந்து எல்லா வற்றையும் கேட்க, கேட்டுத் தம் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளத்தக்க முறைகளில் அமையவேண்டும் என்கிற வேண்டுகோளை விடுக்கிறேன்.

மணிவாசகர் பிறந்தது திருவாதவூர் என்பார்கள். நான் கூறுவேன், அவர் பிறந்தது ஆவுடையார் கோயில் என்று, ஆவுடையார் கோவிலில் பிறந்தவர் பெயர், முன் என்னவோ தெரியாது. வாதவூரர் என்பர்; அதுவும் இட்டபெயரன்று. ஆனால் சைவசமயாசாரியராகிய மணிவாசகப்பெருமான் பிறந்த இடம் திருப்பெருந்துறைதான் என்பேன். ஊனுடம்பு பிறந்த இடம் வாதவூராகலாம். ஆனால் ஒப்பற்ற அழியாத திருமேனி பிறந்த இடம் திருப்பெருந்துறையாம் ஆவுடையார்கோயிலே. அந்த க்ஷேத்திர ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்ற இந்த ஆதீனத் தார்க்கு இந்தத் திருமுறையைப் பரப்புவதிலே ஒரு பெரும் பங்கு உண்டு. அந்த நெறியிலே அவர்கள் செயல்படுவது பாராட்டத் தக்கதாகும். பயனுள்ள இந்தப் பணி எல்லா இடங்களுக்கும்—எல்லா இடங்களில் உள்ளவர்களுக்கும் பயன் அளிக்குமாறு கருணை பாலிக்கவேண்டும். இதற்குச் சந்நிதானம் துணைபுரிய வேண்டும் — ஆண்டவன் அருள்புரிய வேண்டும். வணக்கம்.



பார்வையாளர்

அருள்திரு. அழகரடிகள் முன்னுரை

(13—2—71)

★

எல்லோருக்கும் அன்பும் நன்றியும் தெரிவித்துக்கொண்டு பேசுகையில் குறிப்பிட்டதாவது :-

" இங்கே நடப்பது திருமுறை கருத்து அரங்கு. இந்தப்பெயர் எமக்கு மிகவும் பிடித்திருக்கிறது. திருமுறை மகாநாடு பொது மக்கள் உள்ள நிலையைக் குறிக்கும். கருத்தரங்கு அறிவு ஆராய்ச்சியின் உள்நிலையைக் குறிக்கும். திருமுறைகளிலே ஆழ்ந்த அறிவுகொண்டு பாடுபட்டு உழைத்துத் தாம் பெற்ற கருத்துக்களை இங்கே பரிமாறிக்கொண்டு, அவற்றை மற்றவர் களுக்கும் தெரிவிக்கின்றநிலை உவகை தருவது.

நம்பிக்கை, தெளிவு, விருப்பம் என்பவை எல்லாம் ஒரே பொருளுடையன. நம்புதல் என்றால் விரும்புதல் என்று பொருள். நம்புதல் என்றால் தெளிதல் என்று பொருள். நம்புதல் என்றால் உறுதிகொள்ளுதல் என்றும் பொருள். இந்த ஒரு சொல்லில் மக்களுக்கு நம்பிக்கை வருவதானால், அப்போது தெளிவு, உறுதி எல்லாம் உண்டாவதற்கேற்ற நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவார்கள். இவைகள் இல்லாமற்போனால் யாரோ எங்கோ என்னவோ செய்தார்கள் என்பதைவைத்து நம்பிக்கை இல்லாமல் போய்விடுவார்கள். என்ன என்ன நடப்பதாக இருந் தாலும் அவை எல்லாம் மறந்து நல்ல தெளிவுபெற வேண்டும்.

திருமுறைகள் ஆண்டவனைப் பற்றிய விளக்கங்களைக் கொடுப்பன. கோயில்களில் இந்தக் கருத்தரங்கு நடைபெறு வதும், அதுவும் ஆதீனம் நடத்துவதும் மிகவும் சிறப்பு. அருள் குரவர்களுக்குத்தான் அந்தக் கடமை மிகுதி. கோயில்களைப்பற்றி மக்களுக்கு நல்ல தெளிவு உண்டாக்க வேண்டும். தெளிவு இல்லாமையினால் கோயில்களைப் பயன்படுத்த முடியவில்லை. ஏராளமான பொருள் செலவில், ஏராளமான மக்கள் உழைப்பில் உருவானவை தாம் கோயில்கள்.

பன்னிரு திருமுறைகள் என்கிறோம். இவற்றில் பஞ்ச புராணங்கள் என்று சிலவற்றைப் பிரித்தும் சொல்கிறோம். இந்த அடிப்படைகளில் கோயில்களில் வழிபாடு நடைபெறுவதுண்டு. பன்னிரு திருமுறைகள் முழுமையும், பஞ்ச புராணங்கள் என்னும் தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரிய புராணம் என்பவற்றில் அடங்கிவிடும். தேவாரம் என்றால் ஆண்டவனுக்கு அன்போடு இடுகிற ஆரம்; அன்பினால் ஆரம் இடுவது. ஒருவருக்கு மாலையிட்டால் அவர் ஏதாவது சொல்லக் கூடும். அப்படி ஆண்டவனுக்கு மாலையிட்டதனால் அவர் பேசுகிற பேச்சுத்தான் திருவாசகம். ஆண்டவன் வாக்கே திருவாசகம். திரு என்னும் அடைமொழியோடு திருப்பதிகம் என்று சொல்லப்படுவன பல. திருவாசகம் என்பது ஒரே நூல்.

ஆண்டவன் நல்ல வாக்குக்களைக் கொடுக்கின்றபோது அவற்றை நுகர்வோர் புகழ்வது இயல்பு. அதுதான் திருவிசைப் பா. அப்படிப் புகழ்வோர் நீண்டநாள் வாழவேண்டுமென்று வாழ்த்துவதும் இயல்பு. அதுதான் திருப்பல்லாண்டு. ஆண்டவன் அருளைப்பெற்ற அடியார்கள் நமக்கு வழிகாட்டிகள். அவர் களுடைய வாழ்க்கை வரலாறுகளை எடுத்துச் சொல்வது பெரிய புராணம். இப்படிப் பஞ்சபுராணங்களும் இன்றியமையாதன; ஒன்றுக்கொன்று தொடர்பும் சிறப்பும் உடையன. வேறு பல காரணங்கள் இருந்தாலும் இந்தக் காரணங்களை எண்ணுவது நமக்குப் பொருந்தும்.

அப்படிப்பட்ட பஞ்சபுராணம் – பன்னிரு திருமுறைகள் – இவற்றில் ஏதாவது ஒன்றைத் தலைமையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், திருவாசகத்தை எடுப்பார்கள். இப்படிப் பன்னிரு திருமுறைகளிலும் திருவாசகம் சிறந்ததாய் இருப்பதற்கு, அது தெய்வவாக்காக இருப்பதே காரணம். வாக்கு, வாக்கியம், வாசகம் எல்லாம் ஒன்றுதான். வாசகமாக இருந்தாலும், அது வாக்கியமாக இருந்தாலும் ஒன்றுதான். இன்றையகருத்தரங்குக்குத் திருவாசகம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. முன்னர்க் கூறியபடி அது தலைசிறந்த நூல். அது ஆண்டவனுடைய வாக்கு. கருத்தரங்கு என்று சொன்னால் திருவாசகத்தின் கருத்துக்களை யார் எடுத்துத் தெரிவிக்கமுடியும்!

திருமணம் எல்லோருக்கும் நடக்கிறது. ஆனால் நாயன்மார் களைப் போல இல்வாழ்க்கை நடத்த எல்லோராலும் முடியுமா? அதற்காக அந்த இல்வாழ்க்கையே மேற்கொள்ளமுடியாது என்று தான் சொல்லமுடியுமா? அவரவர்களுக்கேற்றபடி ஏதோ வாழ்க்கை நடத்துகிறார்கள். அதே மாதிரி ஆண்டவனுடைய

வாக்காக இருந்தாலும் அவரவர்களுடைய அறிவுக்கும், நிலைமைக்கும் ஏற்றபடி கருத்துக்களைக்கொண்டு கொடுப்பதற்கு ஒரு தடையும் இல்லை.

அதுவும் ஆதீனம் இந்தக் கருத்தரங்கினை ஆலயத்திலேயே ஏற்படுத்தியிருக்கிறது. அது ஒரு சிறப்பு. ஆலயங்களுக்குச் சாத்திர முறையிலும், உண்மையான உருக்க வகையிலும் பலர் வருவதற்கு தக்க விளக்கங்கள் எல்லாம் அளிக்கப்பட வேண்டும். கோயிலுக்கு வருகிறவர்கள் எல்லோரும் அப்படி வருகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. சிலருடைய எண்ணங்களில் என்ன என்னவோ தோன்றுகின்றன...... அவற்றைத் தெளிய வைக்க வேண்டும்.

பன்னிரு திருமுறைகளை நாம் மேற்கொள்கிறோம் என்று சொன்னால் நமக்குச் சில முறைமைகள் வேண்டும். நான் சைவ சமயத்தைச் சார்ந்தவன் என்கிற தெளிவுடன் புகுந்தால், பன்னிரு திருமுறைகள் நன்றாகப் பயன்படும். எல்லாம் ஒன்று என்ற பொதுமைக்கு இது தடையில்லை. தாயுமானவ அடிகளைப் போன்ற பொதுமையாளரின் வாக்குச் சைவ சமயமே சமயம் என்று வலியுறுத்தியிருப்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

சைவ சமயமே சமயம் என்பதைத் திருஞானசம்பந்தப் பெருமான் நன்றாக நிலைநிறுத்தினார். சைவ சமயத்தை நிலை நிறுத்தவே வந்த பெரியவர் அவர்.

அடுத்து, மற்றோர் உண்மையை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்:

"தாழ்வெனும் தன்மை தோடு சைவமாம் சமயம் சாரும்
ஊழ் பெறல் அரிது."

என்பது சித்தியார். தாழ்வு எனப்படும் அடக்கம் வேண்டும். உடம்பு, உள்ளம், உணர்வு முதலிய எல்லாம் அடங்க நடந்து கொள்ள வேண்டும். அடக்கம் இல்லாதவர்கள் சைவ சமயத்திற்கு உரியவர்களாக மாட்டார்கள். அறிவுப் பெருக்கம் இருப்பதால் உடம்பு அடக்கம் இல்லாமல் இருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இவை எல்லாம் அடங்கியிருந்தால் இன்னும் அறிவு சிறப்பாக நடக்கும். அதனை நன்றாகத் தம் வாழ்க்கையில் நிறுவிக் காட்டியவர் அப்பர். அவர் அடக்கமே உருவானவர்.

இன்னொன்று. சைவர்களுக்கு உறுதி வேண்டும். எதில்? நேற்று, டாக்டர் தெ. பொ. மீ. அவர்கள் 'பாடல் நெறி — ஆடல்

நெறி ' என்றார்கள்; நம் பன்னிரு திருமுறைகளும் ஆராய்ச்சிக் காகவோ, படிப்புக்காகவோ ஏற்பட்டவை அல்ல. அவை பாடி நுகர்வதற்கே ஏற்பட்டவை. அவர்களும் பாடிப் பாடியே நுகர்ந் தார்கள். அதனாலே பாடுதல் முக்கியமானது. அதனோடு 'அருச்சனை பாட்டேயாகும்' என்று சுந்தரர் வாழ்க்கையில் ஒரு குறிப்பு இருப்பதனாலும் பாடிப் பரவுதலே சிறந்தது. பாடுவதாக இருந்தால் இசை வேண்டாவா என்று எண்ணித் தயங்குவோருக்கு,

" கோழைமிட றாககவி கோளுமில வாகஇசை கூடும்அதனால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொல்மகிழும் ஈசன் "

என்பார் ஞானசம்பந்தப்பெருமான். கோழை மிடறாகட்டும், இலக்கணம் தெரியாதவர்களாக இருக்கட்டும், இசை சிறிது கூடத் தெரியாதவர்களாக இருக்கட்டும். அவர்கள் அவர்களுக் கேற்ற ஒரு குரலிலே பாடினாலும், இறைவன் அதனைக் கேட்டு மகிழ்கிறான். ஆகவே பாடிப்பாடி நன்றாகப் பரவவேண்டும். இந்தச் சிறப்பை உண்டாக்குவதற்கு ஓதுவார்மூர்த்திகளால்தான் முடியும். அதனால் ஓதுவார் மூர்த்திகளின் நிலை உயரவேண்டு மென்று டாக்டர் தெ. பொ மீ. தெரிவித்ததுபோல் அது உயர வேண்டும். இப்போது பாடி, நாடகம் ஆடிப் பல காரியங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள் அரசியலார் கூட. அதுபோலப் பாடி நாம் ஆடி ஆண்டவனுடைய அருளிலே திளைக்க எல்லோரையும் கட்சி சேர்க்கவேண்டும்.

இந்த உறுதிக்கு மேல் இன்னும் ஓர் உறுதி வேண்டும்; சைவ சமயத்தினருக்குக் கடவுள் ஒருவன். அந்த நம்பிக்கையில் மற்ற மூர்த்திகளை எல்லாம் பார்க்கிறபோது அந்த ஒருவருடைய கிளைதான் என்று எண்ணவேண்டும். மற்று உயிர் உள்ளன உயிர் இல்லாதன எவற்றைப் பார்த்தாலும் அவ்வற்றினுள் அந்த ஒருவனே பிணைந்து இருக்கிறான் என்று உணரவேண்டும். யாரைப் பார்த்து வணங்கினாலும் ஆண்டவனை வணங்குகிறோம் என்று எண்ணவேண்டும். இது, அவரவர்களுடைய அன்றாடப் பழக்கத்தில் ஊறிவிடவேண்டும். எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் முழுமுதற் கடவுளை மறந்துவிடக்கூடாது. பன்னிரு திருமுறைகளைப் பார்த்தால் சிவபெருமானையே முழுமுதற் கடவுளாக வைத்துப் பாடியிருப்பது தெரியும்.

விநாயகனைப் பாடுவதாக இருந்தால் தேவார ஆசிரியர், கணபதி வர அருளினன்

என்று சிவபெருமானிடத்தில் முடிப்பார். முருகக் கடவுளைப் பாடுவதாக இருந்தாலும், அம்பிகையைப் பாடுவதாக இருந்தாலும்

‘ நம்கடம்பனை பெற்றவன் பங்கினன் ’

எனச் சிவபெருமானிடத்தேதான் கொண்டுபோய் முடிப்பார்கள்.

இன்னும் இறைவனுடைய இயல்புகளை எண்ணிப் பார்க்கும் போது அந்த இயல்புகளையே நாமும் கொண்டவர்களாக ஆக வேண்டும். ஆக முயலவேண்டும். ஒருவனோடு பழகுவதற்கு அவனுடைய இயல்புகள் நம்மிடத்திலும் சில இருக்கவேண்டும் அன்றோ ! இறைவன் நம்மிடம் வந்து அருளவேண்டுமானால் அவனை ஈர்க்கத்தக்க தெய்வ இயல்புகள் உடையவர்களாகவும் நாம் மாறவேண்டும். அவன் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன் என்றால் நம்மிடத்திலும் வேண்டுதல், வேண்டாமை இல்லாமை வேண்டும். இறைவனிடம் வழிபடுகிறபோது இம்மை நலங்களையும், மறுமை நலங்களையும் வேண்டிக்கொள்வார் பலர் உண்டு. வேண்டுதல் வேண்டாமை இலான் இறைவன் என்பதற்கு ஏற்றபடி நாமும் ஆகவேண்டும் என்றால் அவன் குறிப்பில் விட்டுவிடவேண்டும் நம் வாழ்க்கையை. நேற்றுகூடச் சொல்லப் பட்டன அல்லவா ? ஒருத்தி ஒரு தலைவனிடத்தில் எப்படித் தன்னையே ஒப்படைத்துவிடுகிறாளோ அதுபோல நாம் நம்மையே இறைவனிடத்தில் ஒப்படைத்துவிடவேண்டும். இவை எல்லாம் திருவாசகத்தில் பார்க்கலாம். நம்மை அவனுடைய அடிமையாக்கி விட வேண்டும். அதுபோல் ஆண்டவனுடைய புகழை ஓதுதல் எப்போதும் நம்மிடத்தில் சிறப்பாக இருக்கவேண்டும். கண்டவர்கள் புகழை எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறோம். என்ன பயன் ? இறைவன் புகழையே பேசவேண்டும்.

பார்வையாளர்

அருள்திரு. அழகரடிகள் முடிவுரை*

★

"இங்கே பேசிய பெருமக்கள் பரவலாக நல்ல பல கருத்துக்களை உதிர்த்திருக்கிறார்கள். அவற்றில் நாம் அறிந்து கொண்டவை நமக்குப் பயன் தரும். கருத்தரங்குக்குப் பொதுவாக ஓதி உணர்ந்த கருத்துக்களை அறிவிப்பது தான் ஏற்றது. பொதுவான கருத்துக்களைப் பேசுவது முன்னுரையில் இருக்கலாம். முடிவுரையிலும் இருக்கலாம். ஆனாலும் சுருங்கவே இருக்க வேண்டும். மூவர் தமிழும், மணிவாசகரும் என்றால் மூவர் தேவாரத்தில் உள்ளவை இதிலும் உள்ளன என்று தெரிவிக்கலாம். அதுமட்டுமே போதாது. மணிவாசகருடைய வாக்குகள் மற்ற தேவாரங்கள் ஒன்றுக்கொன்று ஒத்து உள்ளனவாகத்தான் இருக்கும். பன்னிரு திருமுறைகளும் அப்படித்தான் இருக்கும். ஆனால் வேறுபாடுகளும் உள்ளன. அவற்றை எடுத்துக் காட்டுவது மணிவாசகப் பெருமான் கருத்தரங்குக்கு ஏற்றதாக—சிறப்பாக இருக்கும்.

பலருடைய முகங்கள்—மனித முக அமைப்பில் ஒற்றுமையாக இருந்தாலும் ஒருவர் முகம்கூட இன்னொருவர் முகம் மாதிரி இராது. அதே போலத்தான் கவி வார்த்தைகள். மூவர் தமிழுக்கும், மணிவாசகத்திற்கும் வேறுபாடு இல்லை என்றால் ஒரே நூலாய் இருந்திருக்கும்,

திருஞானசம்பந்தருடைய வாக்கைத் திருக் கடைக்காப்பு என்பர். அப்பருடைய வாக்குகளே தேவாரம் என்பதற்குச் சிறப்புடையன. சுந்தரமூர்த்திகளுடைய வாக்கு காப்பு எனப்படும். மணிவாசகரது வார்த்தை வாசகம் எனப்படும்.

இந்த வாக்குகளுடைய வேறுபாடுகளை நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டும். சைவ சமயத்திலே அருள் நலங்கள் எல்லாம் ஒன்று. விருப்புகிறவர்களுக்குத் தக்கபடி என்பது ஞானசம்பந்தர் வாக்கு, சமயத்தை நிலை நிறுத்த வந்தவர் ஆனதினாலே அப்பால்

---

* இதனை வெள்ளைவாரணனார் முதலிய மூவர் பேச்சின் பின்னர் நோக்குக.

ஆரம் இடுதல் என்பது அப்பருக்கே உரித்து. மற்றவைகள் எல்லாம் அதனுடைய திளைப்பிலே பார்த்துக்கொள்ள வேண்டும். வழிபாடு பாட்டே என்பதை நிலைநிறுத்துவது சுந்தரருடைய நிலை. இந்த மூவருக்கும் சரியை, கிரியை, யோகம் சிறப்பு என்று சொல்லப்படும். அப்படியானதனுல் மூன்றுக்கும் தவம் என்ற பெயர் உண்டு. தவத்தின் பயனுக வருவது ஞானம். ஆதலின் இந்த மூவரின் பயனுக மணிவாசகர் வருகிருர். மூவர் தமிழின் பயனுக, முடிவாகவே அவற்றுக்கும் அப்பாற்பட்டதாகவே மணிவாசகருடைய வாக்கு இருக்கிறது. அந்த வேறுபாடுகளுக்கு ஏற்ற வகையில் வாக்குகளை எடுத்துக்காட்டி விளக்கம் செய்தால் அப்போது ஒவ்வொன்றின் சிறப்பும் மேன்மையும் புலப்படும்.

ஞான நிலையில் உள்ளவர்களுக்கு மற்ற மூவர் நிலைகள் எல்லாம் உண்டு. அதாவது, ஞானத்தில் உள்ளவர்களுக்கு சரிகை, கிரியை, யோகம் உண்டு. ஆனுலும் மூன்றுக்கும் அப்பாற் பட்டதாகவே ஞானம் என்பதற்கே சிறப்புடையதாகத் திருவாசகம் இருக்கிறது. அதனுலே 'வாசகம்' என்ற பெயரை அது பெற்றது. 'வார்த்தை' என்றும் பெயர் பெற்றது. மந்திரங்கள் என்பவை கட்டுப்பாடுகள், கண்ணியங்கள் உள்ளவை. ஆனுல் வாசகம் என்பது இயல்பான மொழி. அதனுல் திருவாசகம் என்பது கட்டுப்பாட்டுக்கடங்காத ஞானத்தில் தோன்றிய இயல்பான தன்மையில் அமைந்த நுகர்வு ஆகும்.

ஒவ்வொரு வகையில் ஒவ்வொன்றுக்குச் சிறப்பு. சரியையிடத்துப் பாடல் சிறப்புண்டு. கிரியையில் பாவனைச் சிறப்புண்டு. யோகத்திற்கு மந்திரச் சிறப்புண்டு. அதனுலேயே தவம் என்று அதனை சொல்லலாம். அதில் ஞானமும் உண்டு. ஞான நிலையில் இல்லாதவர் அதிகமாதலினுலேயே நம்முடைய ஆலயங்கள் எல்லாம் பெரும்பாலானவர்களைக் கருதிச் சரியை கிரியைச் சிறப் புடையனவாக இருக்கின்றன. இந்த இரண்டுமே கூட அறம் என்று கூறப்படும். சரியை, கிரியை பலரையும் ஒட்டியன. பரார்த்தம் என்னும் வகையில் உலகத்தை ஒட்டியது அறநிலை என்னும் கோயிலானதனுல், கோயிலிலே சரியை கிரியைகள் வேண்டப்படுகின்றன. அதனுல் அபிஷகம், அலங்காரம், புறப்பாடு முதலிய ஆரவாரம் மிகுதி. அதனுலேயே அடைய வேண்டிய தவநிலையை மக்கள் அடைய முடியாமல் இருக்கிறது என்று சொல்லுகிறவர்களும் உண்டு. அது ஓரளவு மெய்தான். தவநிலைத் தன்மை அடைந்த மிகச் சிலராக இருக்கிறவர் களுக்கும் அங்கே இடம் இருக்கிறது.

அம்பலவாணர் மும்முரம் கொண்ட மூர்த்தி; கருவறை யிலிருக்கும் சிவலிங்கத்தை வணங்குவோர்க்கு எதிரிலேயே தோற்றம் அளிப்பவர். அமைதியாக இருக்கும் கடவுள் தென்முகக் கடவுள். ஆடும் கடவுள் அம்பலவாணர். அப்படிப் பட்ட ஆட்டமும் எப்போதும் இறைவனுடைய இயக்கமாக இருப்பதால் அந்த இயக்கம் உச்சத்தன்மை வாய்ந்தது. அதனாலேயே அம்பலவாணருக்குத் தனித் திருமுன்னிலே சுற்றி டத்தில் விடப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மூர்த்திக்கும் தனித் தனித் திருமுன்னிலே அமைந்த கோயில் திருக்கழுக்குன்றம். மற்ற இடங்களில் காணப்படாத இந்தத் தனிச்சிறப்பை அங்கே காணலாம். மணிவாசகப்பெருமான் நால்வரில் ஒருவராக இருந்தாலும் அம்பலவாணருடைய பீடத்தில் அம்மையாரைப்போலவே இறைவனுடன் இருக்கின்ற தகுதியைப் பெற்றவர். அம்பிகைக்கு எந்த இடமோ அந்தமாதிரியான இடம் மணிவாசகருக்கு.

அதேபோல அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் அம்பல வாணரைக் குறிக்கும் ஐந்தெழுத்தின் விரிவாக இருப்பதைப் பார்க்கலாம். அதில் முதல் திருவைந்தெழுத்து நமசிவாய. அதனின் வேறுபட்டதாக திருவைந்தெழுத்துக்களையும் அவரது பாடலிலே காணலாம். நம்சிவாய என்பதைப் பிறர் கேட்க உரைக்கலாம். சிவாய நம: என்பது பிறர் கேட்க உரைக்கக் கூடாது. தமக்குள்ளே நா அசைப்பில் உள்ளது. சிவாய சிவ என்பதைப் பாடலிலே வைத்துக்காட்டியிருக்கிறார். அதற்கும் மேலே ஓம் சிவசிவ என்பதும், ஓம் சிவம் என்று சொல்வதும் அமைந்த திருவெழுத்துக்கள். அவற்றையெல்லாம் உணர்வு எய்துகிறபோது நம் நிலைமைகள் ஓங்கி வரவேண்டும். அவற்றைக் குருமுகமாகப் பெற்று அவரவரும் திருவருளைப் பெற வேண்டும். நால்வரில் மணிவாசகருக்கு நேர் குருமுகமாகவே அதைப்பெற்ற பேறு உண்டு. அந்தக் குருபரம்பரை மிகச் சிறப்பு உடையது. திருஞானசம்பந்தர் ஆதீனம் என்று இருப்பதுபோல மணிவாசகர் ஆதீனம் என்று இல்லையாயினும் திருப்பெருந் துறையிலோ – திருக்கழுக்குன்றத்திலோ அப்படி ஒன்று அமையப் பெறுவது சாலப் பொருத்தமுடையது.

சிறிது நேரத்திற்கு முன்னால் திரு சஞ்சீவி அவர்கள் ஒரு குறிப்புச் சொன்னார்கள். திருவாசகத் தத்துவத்தைப்பற்றி ஏதாவது சொல்லுங்கள் என்பதாக. இங்கே தத்துவம் என்பது பற்றியும், சாத்திரம் என்பது பற்றியும் பேசினார்கள். அதைப்

பார்க்கிறபோது தத்துவம் என்ருல் என்ன, சாத்திரம் என்ருல் என்ன என்றபோது பொதுவாக உண்மைகளை எல்லாம் தெரிவித்திருக்கிருர்கள். தத்துவம் என்று எடுத்துக்கொள்கிற போது திருவாசகத்தைத் திருவைந்தெழுத்தின் தத்துவமாகவே விளக்கவேண்டும்.

திருவாசகத்தைப் பெண் நூல் என்றும், தேவாரத்தை ஆண் நூல் என்றும்கூடச் சொல்வார்கள்.

திருவாசகம், திருக்கோவையார் இரண்டையும் பெண் நூல் என்று சொல்லமுடியாது. திருக்கோவையாரை எடுத்துக் கொண்டால் அம்பிகையைக் காதலிக்கிற முறையில் அந்த நிலை அமைந்திருக்கிறது. அன்பன் ஒருவன் சிவசக்தியைக் காதலிக்கிற நிலையைக் காட்டுவது – ஆகவே அதை ஆண் நூல் என்று சொல்லவேண்டும்.

திருவாசகத்தில் பெண்களைப்பற்றிய விளையாட்டுகள், குறிப்பு கள் எல்லாம் நிறைய இருக்கின்றன. அதற்குப் பாவை என்றே பெயர். பாவையைப் பாடிய வாயால் கோவையைப் பாடு என்று ஆண்டவனே சொன்னன் என்று ஒரு குறிப்பு உண்டு. ஞானமே திருவாசகம். ஆதலின் திருவைந்தெழுத்தின் விளக்கம்தான் பாவையாக இருக்கவேண்டும். ஆகையால் 'பாவை' 'திருவைந் தெழுந்து' இரண்டையும் விளக்கிப் பார்த்தால் எல்லா உண்மை களும் விளங்கும்.

மற்றென்று. அது தனி ஞான நூல் ஆனதனுலே கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகொள்ளல் என்பதற்கான பாகு பாடுகள் உள்ளது ஆகும். திருவைந்தெழுத்தே சிவம். அதனுடைய பெயராக அது இருக்கிறது.

சிவம் என்ருல் நிலை, நன்மை, மங்களம். இப்படிப்பட்ட கருத்துக்கள் எல்லாம் நிலை(உண்மை)என்பதைக் காட்டுவவாகும். அந்த நிலை இருப்பதனுல் மங்களம் அமைகிறது. மங்களம் என்பது மங்கும் தன்மையற்றது. சைவர்கள் மங்கமாட்டார்கள். மங்காதவர்கள் சைவர்கள்.

மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம் என்று சொல்வார்களே, மங்காத நிலை பேரா இயற்கை.

அசைகின்ற நிலை — அசையா நிலை என்ற இரண்டு நிலை களைப் பார்க்கிறேம் அல்லமோ? பரம்பொருள் அசையாத நிலையில் இருந்து கொண்டு மற்றவற்றை அசைக்கின்றது.

அசைவு என்பது அறிவுள்ள ஒருவனால் அசைக்கப்படுகின்ற ஒன்று. இயற்கையின் அசைவுகளைப் பார்க்கும்போது இறைவன் நினைவு தானாகவே உறுதிப்படும். அதைப்பற்றித் தெளிவு வேண்டும். சைவர்கள் மங்கமாட்டார்கள் என்றால் மறைய மாட்டார்கள் என்பது பொருளன்று. முன்பு இருந்த ஞானிகள் — திருமூலர் போன்றவர்கள் இப்போது இல்லை. ஆனாலும் அவர்கள் இறக்கவில்லை. இந்தப் புன்புலால் உடம்பை அவர்கள் விரும்பமாட்டார்கள். இந்த உடம்பைத் தாமே எளிதாக விடுத்துச் சாக்காடு என்பது அற்ற இறவாப் புகழை எய்துகிறார்கள். எது மங்காத நெறியோ அதுவே சைவநெறி. அதுதான் நலன் தரும் என்று கண்டவர்கள் தமிழர்கள்.

சிவம் என்பது நிலையாய் இருப்பதோடு எல்லார்க்கும் பொதுமையானது. பொதுமையைப் பற்றியே பேசுகின்ற வடலூர் வள்ளலார்,

" கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே "

என்றார் இறைவனை. அடுத்துக்

" காணார்க்கும் கண்டவர்க்கும் கண் அளிக்கும் கண்ணே "

என்றார். அதுபோலச் சொல்வது என்றால் கடைசியில் என்ன சொல்லியிருப்பார்?

" எல்லார்க்கும் பொதுவில் நட மிடுகின்ற நடமே "

என்று சொல்லியிருக்க வேண்டும். அப்படிச்சொன்னால் கவிதையின் அமைதிக்கோ, யாப்புக்கோ, ஓசைக்கோ ஒன்றும் தடை வராது. ஆனால்

" எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே "

என்றார். அவர் சமரசப் பெரியவர். சிவம் என்னும் சிறப்புப் பெயரைச் சமரசத்திற்காக விட்டுவிட அவருக்கு முடியவில்லை. அப்படியிருக்க நாம் ஏன் விடவேண்டும்?

தென்னாடுடைய சிவனே என்கிறார் மணிவாசகர். இது இடப்பற்றினால் மொழிப்பற்றினால் சொல்வது அன்று. பற்று வேறு-அன்பு வேறு. அதுவும் தென்னாடு என்பது இமயமலைக்குத் தெற்கில் உள்ள பகுதி எல்லாமே ஒரு காலத்தில் தென்னாடுதான். இமயத்திற்கு அப்பாற்பட்டது தான் வடநாடு. கயிலையிலேதான்

சிவக்கொடி பறந்தது. அதிலிருந்தே தென்னுடுதான். அது அறிஞர்கள் ஆராய்ச்சிக்கு உரியது. தென்னுடுடைய சிவன் என்பது சிறப்பு. எந்நாட்டவர்க்கும் இறைவன் என்பது பொது. தென்னுடுடைய சிவன் — என்றும் உண்மை. மற்றவர்களுக்கு புரியும்படி சொல்லவேண்டும். எந்நாட்டவர்க்கும் இறைவன் என்பது உலகோர் அனைவர்க்கும் நாம் ஒன்றைப் பயன் படுத்திக்கொள்வதோடு உலகம் எல்லாம் அதனைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதனுல் விளைந்தது.

திருவாசகத்தை உலக நூலாக ஆக்க வேண்டுமென்ற கருத்தை, விரிவுரையாளராகிய அம்மையார் சொன்னுர்கள். அது மிகவும் சிறப்புடையது. தென்னுட்டின் சிறப்பையும் விட்டுவிடக் கூடாது.

சிலர் சொல்கிருர்கள்,–எதற்காகச் சைவ சமயத்தில் இத்தனைக் கடவுள்கள், இத்தனைக் கிளைகள் என்பதாக. இயற்கையை நோக்கினுல் அது சரியாகத் தோன்றும். ஒரு மரம் இருக்கிறது, அதற்குப் பல கிளைகள். கிளைகள் எத்தனை இருந்தாலும் அவற்றை எல்லாம் சேர்த்துத்தான், ஒரு மரம் என்பது வழக்கம். அது போல் சைவ சமயத்தில் கடவுட் பிரிவுகள் அனைத்தும் சேர்த்தே ஒரு கடவுளாக வந்திக்கப்படும். உண்மையில் கிளைகள் இல்லாத மரம் கிடையாது. கிளை இல்லாதன தென்னை, பனை என்ருல் அவை தன் உச்சியில் கிளை உள்ளனவே, அதன் காய்ப்பு எத்தனை? நிரம்பக் கிளையுள்ள மரங்களைப் பாருங்கள். கொத்துக் கொத்தாக எத்தனைக் காய்கள்? பயன் அதிகப்பட வேண்டுமானுல் அதிலே பல கிளைகளாகிய இவ்வேற்றுமை இருக்கவேண்டும். வேற்றுமை கூடாது என்பது இயற்கை அன்று. வேற்றுமையிலே ஒற்றுமைக் காண்பது தக்கது. ஒன்றில் வேற்றுமையிருப்பது மிகுபயன் விளைவிப்பது. உலகத்தில் உள்ள கருத்துக்கள் எல்லாம் சைவ சமயத்திலே இருக்கின்றன.

சைவ சமயத்திலே உள்ள சில கருத்துக்கள் மற்ற மற்ற மதத்தார்களிடத்தில் இல்லாமல் இருப்பதை அறிஞர் காண்பிக்க வேண்டும். சைவம் மிக உயர்ந்தது.

சிவ என்ற சொல் தன் இரண்டு எழுத்துக்களால் அருமையையும், எளிமையையும் காட்டுவது. அருமை இருந்தாலும் எளிமை இல்லாவிட்டால் பயன் இல்லை. இரண்டு கருத்துக்களையும் உடைய ஒரு சொல் கடவுட் பெயருக்கு — அவர் தகுதியை உணர்த்தத் தேவை. இதைத்தான் அம்மையப்பன் என்று சொல்லிக்கொண்டிருக்கிருர்கள்.

மற்ற நாடுகள் எல்லாம் கடவுள் எனப் பகுப்பற்ற ஒரு பொருளாகக் காண்கிறபோது இந்தநாடுதான் முழுமுதற்கடவுளை அம்மையப்பராக முதலிற் கண்டது. வாழ்க்கையில் எல்லோரும் அறிவுடையவர்கள். பிறப்பிலே எல்லோரும் அறிவுடையவர்கள். எல்லோரும் ஆணும் பெண்ணுமாகவே இருக்கின்றனர். சிற்றுயிர்கள் உள்பட உலகம் ஆண் பெண் தோற்றம்தான். தாவரங்களிலும் அப்படியே. இந்த அழகைக் கண்டுபிடித்து இவற்றை ஆக்கிய முழுமுதற்கடவுள் ஒருவன்; அவன் அப்பனுய், அம்மையாய் இந்த உலகத்தை அருள்பாலித்து இயக்குவிக்கிறுன் என்று கண்ட நாடு நம் நாடு. அதனுலேயே சைவம் என்பது மங்காத ஒன்ருய், 'சிவ' என்னும் இரண்டு எழுத்து மங்கலப்பெயருடன் இருக்கிறது. இது, வேறு மதங்களில் காணப்படாதது. சைவ சமயத்தின் மூலமந்திரமாகிய திருவைந்தெழுத்திலேயே விளங்குவது. அதாவது, திருவாசகத்தின் அடிப்படையாய் இருப்பது. மணிவாசப்பெருமான் 'அருமையில் எளிய அழகே போற்றி' என்று இதனை ஆண்டவன் பெயராகவே அருளிச் செய்வார். நிலைப்பேருனது,

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே இங்கே வா! அப்படி நிலையாய் இருக்க ஒன்று சொல்கிறேன். நிலைக்க வேண்டாமென்று எண்ணினுல் நீ போ-உலகத்தில் அலையலாம்" என்று கூறுமாறுபோல அப்பர் அடிகள் கூறுவார்கள்.

அதனுலேயே நிலைபேறு சிவம் என்றும், மங்கல இன்பம் என்றும் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனுல் இன்பம் என்னும் சொல்லுக்குப் பொருள் வரையறை உண்டு. பண்டங்களைச் சார்ந்தது இன்பம் எனப்படும். பண்டங்களைச் சாராமல் நுகர்கிற பேரின்பமும் இருக்கின்றது. அதை இன்பம் என்னும் பெயரால் சொல்வது பொருத்தமன்று; ஒப்புக்கு முகமனுக்குப் பேரின்பம் என்று சொல்கிருேம்.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

என்பது அப்பர் வாக்கு. பண்டங்களைச் சார்ந்த இன்பம் என்று சொன்னுல் அதிலே துன்பம் இருக்கிறது. பண்டம் அற்ற சிவ வெளியில் துன்பமே இல்லை.

'மக்கள்' என்ருல் மனம் படைத்தவர்கள். மக்கள் கருவிகளால் வேலை செய்கிருர்கள். கருவிகளால் வேலைசெய்கிறவரை அவர்கள் மாக்கள் ஆகிருர்கள். மனத்தினுல் இயக்கப்படுகிற மக்கள் கருவிகளால் செயல்படுகிறபோது பலப்பல கருவிகளைக்

கண்டுபிடித்துக்கொண்டே இருக்கிறார்கள். கருவிகள் வளரவளர மனித நிலை உயரும் என்று சொல்லமுடியாது அதற்காக அவை வேண்டா என்றே சொல்லவில்லை. அளவோடு வாழ்ந்தால் களவுக்கு இடம் இல்லை. அடிப்படை உண்மைகளை மறந்து விடுகிற காரணத்தினாலேதான் பலவகையான துன்பங்களுக்கு ஆளாகிறோம். திருவாசகம் மக்களை மக்களாகவும், தேவராகவும், அடியாராகவும் வாழ வழி வகுக்கிறது. அதன் அடிப்படை நலமாகிய திருவைந்தெழுத்து திருமந்திரம், இதற்குப் பேருதவி யாக இருக்கிறது.

திருவைந்தெழுத்தை, திருவாசகத்தை வைத்து விளக்க வேண்டும். வேறு ஒரு முறை பார்க்கலாம்.

கடவுள் நினைவுக்கு யாரோ எவரோ இழுக்கை உண்டாக்கு கிறார்கள் என்றால் அவற்றை உடல்பால் எதிர்க்கவோ, மனத்தால் எதிர்க்கவோ கூடாது. நம் அறிவாலும் எதிர்ப்பது கூடாது. அருளால் எதிர்க்கவேண்டும். அருளால் எதிர்ப்பதற்கு நம் நிலை உயரவேண்டும். அருளல்லாத முறையில் எதிர்ப்பது சைவர் களுக்கு அழகன்று. அதன் காரணமாகத்தான் பல நிகழ்ச்சிகள் அப்படி அப்படியே புதைந்துவிடுகின்றன. சைவர்கள் அருளால் உயர்தல் மிகச் சிறப்பு. சிற்றுயிர்கள் கருவிகளுக்கே உரியவை. மனிதர்கள் நினைவு, அழிவு, அருள், வளர்ச்சி இவைகளுக்கு உரியவர்கள். அப்பர் சுவாமிகள் போராட்டம் எப்படி, ஞான சம்பந்தப் பெருமான் போராட்டம் எப்படி? அவர்கள் எல்லாம் அருளாளர்கள். அருளால் பணிபுரிந்தார்கள். அருளால் வேலை செய்கிற நிலை நமக்கு வரவேண்டும்.

"கனியினும் கட்டிபட்ட கரும்பினும் இனியன்"

என்றால் கனியைக்காட்டிலும், கரும்பைக்காட்டிலும் இனியன் என்று சொல்லலாம். அது மட்டுமே சிறப்பன்று. கனியிலும் இனிமை இருக்கிறது, கரும்பிலும் இனிமை இருக்கிறது. ஆண்டவன் படைப்புகள் எல்லாமே இனியன. அந்த உண்மைக்கு இருக்கிற ஆற்றலைவிட ஒன்றுக்கொன்று மேல் என்பது சிறப்பு; இறை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளலாம்.

ஒரு குச்சி, ஓர் எழுதுகோல் – இவற்றில் எது சிறந்தது என்பது அன்று நோக்கம். இரண்டும் தேவை; இரண்டும் பயன் உடையவை. ஆனால் அவற்றை வைக்கவேண்டிய இடத்தில் வைக்கவேண்டும். வேறுபாடுகளே இல்லை என்பது பெருமை இல்லை. வேறுபாட்டினால் இருக்கக்கூடிய நன்மைகளை எடுத்துக்

கொண்டால் அவற்றுக்கே மதிப்பு உண்டாகும். அந்த மதிப்பை நாமே மங்கவைத்துவிடக் கூடாது.

திருவாசகத்தை உலக நூலாக அவரவர்களே ஆக்கிக் கொண்டார்கள். திருக்குறளை எப்படி உலக நூலாக அவர்களே ஆக்கிக்கொண்டார்களோ அதுபோல் இதுவும் ஒன்று. திருவாசகத்திற்கும் அத்தகைய ஆற்றல் இருக்கிறது.

அன்பும், அருளும் பரவச்செய்தல் வேண்டும் என்கிறோம். அன்பு என்பது ஆன்மாவின் தன்மை. அருள் என்பதோ ஆண்டவனின் தன்மை. இந்த இரண்டின் இயைபைத் திருவாசகம் விளக்குகிறது.

திருவாசகத்தை மாலையில் ஒவ்வொரு சைவரும் ஓதவேண்டும். எல்லாத் தத்துவ உண்மைகளும், அதில் அடங்கி விடுகின்றன. அல்லல் பிறப்பை அறுக்கும் முயற்சி வேண்டும். சிவன் கழல் ஏத்துவதே அல்லல் தீர்க்கும் வழி.

"செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே."

சிவபுராணத்தை மாலையில் ஒவ்வொருவரும் கட்டாயமாக ஓத வேண்டுமென்று தோற்றுகிறது.

திருவாசகத்தால் தெளியவேண்டியவை மற்றும் சில உள்ளன. அவற்றில் மணிமந்திர ஔடதமும் ஒன்று. மணி என்பது விந்து; மந்திரம் என்பது அதை மேல் ஏற்றுகிற செயல்குறிப்பு. மேல் ஏறி நாதத்தோடு கலக்கிறபோது அது ஔடதம் (அ) அமிர்தம். இவை பெருகுகின்றன; அருளே அங்கு அமிர்தமாக உதவுகிறது. எல்லாம் குருமுகமாகத் தெளிந்து நுகர்வு பெற வேண்டும். திருவாசகத்தின் திருவண்டப்பகுதி முதலியவை நினைவுகூர்வதற்குரியன.

(அதைப்பற்றி விளக்கித் தம் உரையை முடித்துக்கொண்டனர்)

மணிவாசகமும் மூவர் தமிழும்

★

க. வெள்ளைவாரணன்,
தமிழ்த் துணைப்பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

★

மாணிக்கவாசகராகிய திருவாதவூரடிகளால் திருவாய்மலர்ந்தருளப்பெற்று அழகிய திருச்சிற்றம்பலமுடையனாகிய கூத்தப் பெருமானது திருக்கையினாற் செவ்விதின் எழுதிக்கொள்ளப்பெற்ற சிறப்புடையன திருவாசகமும் திருச்சிற்றம்பலக்கோவையும் ஆகிய அருள் நூல்களாகும். திருப்பெருந்துறையிற் சிவபெருமானே அருட்குருவாக வந்து உபதேசிக்கப்பெற்ற திருவாதவூரடிகள், தம் பொருட்டு மதுரையிற் குதிரைச் சேவகனாக எழுந்தருளிய சிவபெருமான் வழங்கிய பேரானந்தமாகிய திருவருளின்பத்தைத் தூய செந்தாமரை போலும் தமது திருவாயிலிருந்து வெளிப்படும் அழகிய சொற்களால் திருவாசகப் பனுவலாக அருளிச்செய்து, வஞ்சனையைத்தரும் பிறவித்துன்பத்தை உலக மக்களாகிய நாம் அறியாதவண்ணம் நம்மனோர்க்கு நன்னெறிகாட்டியருளினார் என்பது வரலாறு. இவ்வுண்மையினை,

> பாய்பரியோன் றந்த பரமானந் தப்பயனைத்
> தூயதிரு வாய்மலராற் சொற்செய்து — மாயக்
> கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டீர்
> திருவாத வூராளுந் தேன்.

எனவரும் பாடலில் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் விரித்துக் கூறியுள்ளார். மணிவாசகப் பெருமான் அருளிய திருப்பாடல்கள் திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவை என இருவேறு தலைப்பில் வைத்து எண்ணப்படினும் இவ்விரு நூல்களும் 'மாசில் மணியின் மணிவார்த்தை' யாகவே விளங்குதலால் திருவாசகம் என ஒரு பெயராலும் வழங்கப்பெறுதலுண்டு. கோவைத்

திருவாசகம் எனத் திருக்கோவையார்க்கு வழங்கும் பழம்பெயர் இவ்வழக்கின் தொன்மையைக் குறிப்பதாகும். முத்தியாகிய பேரின்பத்தை அடைதற்குச் சாதனமாகிய பத்தி நெறியின் இலக்கியமாகத் திகழ்வது திருவாசகம். உலகியல் வாழ்வுக்கு இன்றியமையாத அன்பினை விளக்கும் அகப்பொருளொழுக லாற்றை விரித்துரைக்குமுகமாகப் பத்திநெறியின் பயனாகிய பேரின்பவாழ்வின் அனுபவ நிலையை விளக்குவது திருச்சிற்றம்பலக்கோவை. எனவே திருவாசகமும் திருச்சிற்றம்பலக் கோவையும் பொருளால் ஒன்றே என்பது நன்கு துணியப்படும். திருவாதவூரடிகள் அருளிய திருவாசகம் திருச்சிற்றம்பலக்கோவை என்னும் இவ்விரு நூல்களையும் எட்டாந்திருமுறை என ஒரே திருமுறையாக நம்முன்னுள்ளோர் தொகுத்துள்ளார்கள். மாணிக்கவாசகர் அருளிய இவ்விரு நூல்களையும் மணிவாசகம் என ஒரு திருமுறையாகக்கொள்வது மிகவும் பொருத்தமுடையதே ஆகும்.

மூவர்தமிழ் என்பது, தமிழ் மக்களது தவப்பயனாகத் தமிழ் நாட்டிலே தோன்றி எல்லாம் வல்ல இறைவனது திருவருள் பெற்ற திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர் ஆகிய அருளாசிரியர் மூவரும் இறைவனது பொருள்சேர் புகழ்த் திறங்களைப் பரவிப் போற்றிய இயலிசைத் தமிழ்ப் பாடல்களாகிய தேவாரத் திருமுறைகளாகும். திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும் திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்கள் நான்கு, ஐந்து, ஆறுந் திருமுறைகளாகவும் நம்பியாரூரர் அருளிய திருப்பதிகங்கள் ஏழாந்திருமுறையாகவும் வகுக்கப்பெற்றுள்ளன. தேவார ஆசிரியர் மூவருள் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் இருவரும் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலும் நம்பியாரூரர் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மாணிக்கவாசகர் எட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் வாழ்ந்தவர்களாவர். இந் நாட்டில் இடைக்காலத்தில் புறச்சமயத்தார் நுழைவால் தளர்வுற்ற சைவசமயத்தை மீளவும் நிலைநிறுத்தி வளர்த்த அருளாசிரியர்கள் இந்நால்வருமேயாதலின் இந்நால்வரையும் சைவசமயக் குரவர் எனச் சிறப்பாகப் போற்றிப் பரவும் வழக்கம் நெடுங்காலமாக நிலைபெற்று வருகின்றது. சைவசமய குரவர் நால்வருள் மாணிக்கவாசக சுவாமிகளை நான்காமவராக வைத்துப் போற்றும் முறை உலகவழக்கும் செய்யுள் வழக்குமாகிய இருவகை வழக்கிலும் நிலைபெற்று வருவதாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர், மாணிக்கவாசகர் என நூல்களில் எண்ணப்படும் முறை, அவ்வாசிரியர் நால்வரும் ஒருவர்பின் ஒருவராக இறைவன்

திருவடி நீழலிற் கலந்து இன்புற்ற கால அடைவினை ஒட்டி அமைந்ததாகும். இக்கால முறையினை யுளங்கொண்டே மூவர் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள் முதலேழு திருமுறைகளாகவும் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் திருக்கோவை என்பன எட்டாந் திருமுறையாகவும் வகைப்படுத்தப் பெற்றன எனக் கருத வேண்டியுளது. பட்டினத்தடிகள் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில்

"வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்
திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையும்"

எனச் சைவசமயக் குரவர் நால்வரையும் முறையே குறிப்பிட்டுப் போற்றியுள்ளமை இக்கருத்தினை வலியுறுத்துவதாகும்.

சைவசமயக் குரவர் நால்வரும் அருளிச் செய்த தேவார திருவாசகம் ஆகிய திருமுறைகளில் மூவர்தமிழ் எனப்படும் தேவாரத் திருப்பதிகங்கள் யாவும் இறைவனது பொருள்சேர் புகழ்த்திறங்களை உலக மக்களுக்குத் தெளிய அறிவுறுத்தி அன்னோரை ஒவ்வாத புறச்சமயக் சூழலினின்றும் விலக்கிச் சிவநெறியில் ஒழுகச் செய்யும் நோக்கத்துடன் அருளிச் செய்யப் பெற்ற இன்னிசைச் செழும்பாடல்களாகும். உலகத்தோரை நோக்காமல் பரமே பார்த்திருக்கும் சிவாநுபவ நிலையினராகிய திருவாதவூரடிகள் அருளிச் செய்த திருவாசகச் செழும்பாடல்கள் அடிகள் தமக்குக் குருபரனாகி எளிவந்தருளிய சிவபெருமானது அளவிலாச் சீர்த்தியையும் தம்முடைய சிறுமையினையும் அம் முதல்வனது பெருங்கருணைத் திறத்தையும் இடைவிடாது நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்துருகும் நிலையில் வெளிவந்த அன்பின் வெளிப்பாடாகும். மணிவாசகப் பெருந்தகையார் தமக்கு முன் வாழ்ந்த அருளாசியர்களாகிய சிவனடியார்களையும் அப்பெருமக்களது அன்பின் பெற்றியையும் அன்னோர்க்கு இறைவன் அருள் சுரந்த திறத்தினையும் தம்முடைய பாடல்களில் அங்கங்கே பொதுப்படக் குறித்துப் போற்றியுள்ளார். அடிகள் தம் காலத்துக்கு முன்னிருந்த பெருமக்களாகிய தேவார ஆசிரியர் மூவரும் திருவாய் மலர்ந்தருளிய இயலிசைத் தமிழ்மாலைகளாகிய தேவாரத் திருப்பதிகங்களைப் 'பண் சுமந்த பாடல்' எனப் பாராட்டிப் போற்றியுள்ளமை இங்குக் கூர்ந்துணரத்தகுவதாகும்.

'கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்' (கீர்த்தித்திரு—88)

எனவரும் திருவாசகத்தொடர் கழுமலமாகிய சீகாழிப் பதியிலே கவுணியப் பிள்ளையார்க்கு அம்மையப்பராக விடைமேற்றோன்றிக்

காட்சி தந்த ஞானப்பால் அருளிய அற்புத நிகழ்ச்சியையும்,

"பூவணமதனிற் பொலிந்தினி தருளித்
தூவணமேனி காட்டிய தொன்மையும்"
(கீர்த்தித்திரு — 301)

எனவரும் திருவாசகத் தொடர் திருப்பூவணத்தை வழிபடச் சென்ற திருநாவுக்கரசர்க்குப் பூவணத்திறைவர் நேரே தோன்றிக் காட்சி கொடுத்தருளிய அற்புத நிகழ்ச்சியையும்,

"தேனமர் சோலைத் திருவா ரூரின்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்"
(கீர்த்தித்திரு – 73, 4)

எனவரும் திருவாசகத்தொடர், திருவாரூர்ப்பெருமான் நம்பியாரூரர்க்குத் தென்றமிழ்ப் பயனுய்வந்த திருத்தொண்டத் தொகையாகிய ஞானப்பனுவலைப் பாடுதற்குத் 'தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என அடியெடுத்துக்கொடுத்தருளிய அற்புத நிகழ்ச்சியையும் குறிப்பிற் புலப்படுத்தும் முறையில் அமைந்துள்ளமை காணலாம்.

இனி, மணிவாசகமாகிய திருவாசகத்திலும் மூவர் தமிழாகிய தேவார திருப்பதிகங்களிலும் காணப்பெறும் சொற்பொருள் அமைப்பினை ஒப்புநோக்கியுணர்தல் சைவத்திருமுறைகள் பன்னிரண்டிற்குமிடையேயுள்ள பொருள் தொடர்பினை அறிதற்குப் பெரிதும் துணைபுரிவதாகும்.

உலகிற்கு நிமித்தகாரணனுகிய சிவபெருமான் திருவைந் தெழுத்தாகிய மந்திரப்பொருளாக விளங்கி உயிர்களின் நெஞ்சத் தாமரையிலே நீங்காதெழுந்தருளியிருந்து உள்நின்று உபகரித் தருள்வதோடு புறத்தேயும் ஆசிரியத் திருமேனிகொண்டு எழுந்தருளிவந்து தமக்கு மெய்பொருளை உபதேசித்தருளிய அருட்செய்தியினை,

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க" (1 – 3)

எனச் சிவபுராணத்தின் முதற்கண் சிவபரம்பொருளின் திருவடிகளை மணிவாசகப் பெருமான் வாழ்த்திப் போற்றியுள்ளார். நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தின் மந்திரப்பொருளாகவும்

அம்மந்திரத்திற்குரிய நாத தத்துவமாகவும் விளங்குவோன் இறைவன் என்பதனை விளக்கும் முறையில் அமைந்தது,

'நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க'

என்னும் இத்திருவாசகத் தொடராகும். இது 'நாதன் நாமம் நமச்சி வாயவே' (3-4-9-1) எனவரும் ஆளுடையபிள்ளையார் தேவாரத்தொடரை அடியொற்றி யமைந்ததாகும்.

சிவபெருமான் திருவுள்ளத்திலே உயிர்களைக் காக்க வேண்டும் என்னும் நினைவு எழுந்த நிலை இச்சையெனவும் அதன்கண் அறிவெழுந்த நிலை ஞானம் எனவும் செயலெழுந்த நிலை கிரியை எனவும். இம்மூவகைச் சத்திகளும் சிவத்தொடு பிரிவின்றியியைந்த நிலைச் சத்தியே திருவருள்எனவும் கூறுவர் பெரியோர். உயிர்கள் இறைவனையுணர்ந்து வழிபடுதற்கு அவனது திருவருளின் துணைவேண்டும் என்பது,

'அவனரு ளாலே அவன்தாள் வணங்கி' (சிவபுராணம்-18) எனவரும் திருவாசகத் தொடரால் இனிது விளங்கும். இவ் வுண்மை 'மைப்படிந்த கண்ணாளும்' என்னும் திருத்தாண்டகத்தில்,

"அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே" (6-97-10)

எனத் தெளிவாக உணர்த்தப் பெற்றுள்ளமை அறியத் தகுவதாகும்.

இறைவன் திருவைந்தெழுத்தின் நுண்ணிய நிலையாகிய பிரணவத்தின் பொருளாக உயிர்களின் உள்ளத்திலே நிலை பெற்று அவ்வுயிர்களை உய்வித்தருளுந் திறத்தினை விளக்குவது,

"உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா" (சிவபுராணம்—33, 4)

எனவரும் திருவாசகத் தொடராகும். இத்தொடர்,

'ஒன்றவே யுணர்திராகில் ஓங்காரத் தொருவனாகும்'

எனவரும் அப்பர் தேவாரத்தினை அடியொற்றியமைந்துள்ளமை காணலாம்.

இறைவன் உயிர்களுக்கு ஈன்றதாயைக் காட்டிலும் நீங்காத பேரின்பினனுகிக் காத்தருளும் பேரருளாளன் என்பதனை,

'தாயிற் சிறந்த தயாவான தத்துவனே' (சிவபுராணம்-61)

என மணிவாசகப்பெருமான் உளமுருகிப் போற்றுகின்றார். இத்திருவாசகத் தொடர்,

'பெற்றிருந்த தாயவளின் நல்லாய் நீயே' (6-29-6) என வரும் திருத்தாண்டகத் தொடரைச் சொற்பொருள் அமைப்பில் ஒத்துள்ளமை காணலாம்.

வேண்டுதல் வேண்டாமையில்லாதவனுகிய இறைவன் அவை காரணமாகவுளவாம் இருவினைப் பயன்களாகிய இன்ப துன்பங்கள் இல்லாதவனுயினும் தன் திருவடியினைப் புகலடைந்த அடியார்க்கு உலகத்தாலும் உலகத்துப் பொருள்களாலும் பிற உயிர்களாலும் வரும் இன்பதுன்பங்களையெல்லாம் தானே ஏன்று கொண்டு அவர்களுக்கு நலஞ் செய்கின்றுன் என்பதனை,

"இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே" (சிவபுராணம் – 70, 71)

என வரும் தொடர்களில் அடிகள் குறித்துப் போற்றியுள்ளார். இத் தொடர்,

"இன்பன்காண் துன்பங்கள் இல்லா தான்காண்"

என வரும் திருத்தாண்டகத் தொடரை அடியொற்றி யமைந்த தாகும்.

இறைவன் திருவடிக்கீழ் நின்று சொல்லிய செய்யுட்பொருளை உள்ளுணர்ந்து சொல்லவல்லவர்கள் பலரும் போற்றப் பணிவு உடையராய்ச் சிவபிரான் திருவடிக்கீழ் இன்புற்றிருப்பர் என்பதனை அறிவுறுத்துவது,

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து"

என வரும் சிவபுராணப் பகுதியாகும். இறைவனது புகழ்ப் பாடல்களைப் பொருளுணர்ந்து தியானிப்போரே மனவிருள்

நீங்கத் தெளிவுடையராய்ச் சிவனடிக்கீழின்புறுவர் என்றும் பொருளுணர்ந்து தியானிக்கமாட்டாதாருள்ளத்து அறியாமை நீங்குதல் அரிதென்றும் அறிவுறுத்துவது,

“சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்கா தானை” (6-67-2)

என வரும் திருத்தாண்டகமாகும்.

மீளவும் இப்பிறவியில் திரும்பி வாராமைக்கு ஏதுவாகிய பிறப்பற்ற நிலையே வீட்டுலகமாம் என்பதனை,

“மீண்டு வாரா வழியருள் புரிபவன்” (கீர்த்தி - 117)

எனவும்,

“புகுவ தாவதும் போதர வில்லதும் பொன்னகர்”
(திருச்சதகம் – 36)

எனவும்,

“பேரா வுலகம் புக்கா ரடியார்” (ஷை 87)

எனவும் வரும் தொடர்களால் அடிகள் விளக்கியுள்ளார். இத்தொடர்கள் ‘வாராவுலகருள வல்லான்’ எனவரும் திருத்தாண்டகத் தொடரையும் ‘மற்றீண்டு வாரா நெறி’ (356) என்ற திருக்குறள் தொடரையும் அடியெற்றியமைந்திருத்தல் அறியத்தகுவ வாகும்.

‘தென்னாடுடைய சிவனே போற்றி’ என்னுந் திருவாசகத் தொடர்,

‘தென்னவன் எனையாளுஞ் சிவனவன்’ (5–21–5) எனவரும் திருக்குறுந்தொகை தொடரையும்,

‘அருமையிலெளிய அழகே போற்றி’ என்னும் திருவாசகத் தொடர்,

‘அருமையில் எளிமையானுர் அவர் வலம்புரவ னூரே’ என வரும் திருநேரிசைத் தொடரையும்,

‘காவாய் கனகத் திரளே போற்றி’ என்னும் திருவாசகத் தொடர், அவ்வாறேயமைந்த (6–55–9) திருத்தாண்டகத் தொடரையும் அவ்வாறே அடியொற்றியுள்ளமை காணலாம்.

'எங்கள் உத்தமனே! எனது குடிக்கு இறுதி வந்தாலும் இந்திரன் திருமால் பிரமன் முதலிய பதவிகளைப் பொருளாகக் கொள்ளமாட்டேன். உன்னையல்லாது வேறு கடவுளரை மனத்தாலும் நினைக்கமாட்டேன்' எனத் திருவாதவூரடிகள் தமது உள்ளத்துறுதியைப் புலப்படுத்துவதாக அமைந்தது,

"கொள்ளேன் புரந்தரன்மா லயன்வாழ்வு குடிகெடினும்
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள்
உத்தமனே"

எனவரும் திருச்சதகப் பாடலாகும். இது,

"சென்றுநாம் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்."

எனவரும் திருத்தாண்டகப் பகுதியை அடியொற்றியதாகும்.

மேலோர்க்கும் மேலோனாகிய பெருமானே! அடியேனுக்கு நின்னுடைய திருவடிக்கு அடிமைசெய்கின்ற பிறவியையே தந்தருளல் வேண்டும்' என வாதவூரடிகள் இறைவனை நோக்கி வேண்டுவதாக அமைந்தது,

"நின் திருவடிக் காம்பவமே யருளுகண்டாய் அடியேற்கெம்
பரம்பரனே" (திருச்சத. – 5)

என வருந் திருவாசகத் தொடராகும். இவ் வேண்டுகோள்,

"இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே"

எனவும்,

"வாய்த்தது நந்தமக் கீதோர்பிறவி மதித்திடுமின் தில்லை
யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்ப தன்றோ நந்தங் கூழைமையே."

எனவும் வரும் அப்பர் அருண்மொழிகளை ஒத்தமைந்துள்ளமை காணலாம்.

வாழ்க்கையில் நிலைத்த பயனை விளைக்கும் சிவப்பணியில் ஈடுபடாது காலத்தை வீணே கழிக்கும் தம் நிலையினையெண்ணித் திருவாதவூரடிகள் இறைவனை நோக்கி முறையிடுவதாக அமைந்தது;

" ஆமாறுன் திருவடிக்கே யகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான் நின் திருக்கோயில் தூகேன்மெழுகேன்
கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே."

என வரும் திருச்சதகப் பாடலாகும். இது,

" நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா வென்றென்றே அலறு நில்லே"

எனத் திருநாவுக்கரசர் தம் நெஞ்சினை நோக்கி நிலையுடைய வாழ்வுபெற அறிவுறுத்திய திருப்பாடலின் சொற்பொருள் நலங்களைத் தன்னகத்தேகொண்டு விளங்குதல் காணலாம்.

தம்மைப் பிறவிக்கடலினின்று கரையேற்றும் புணையாகத் திருவைந்தெழுத்து துணைசெய்த திறத்தை,

" இனியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே"

எனவரும் திருவாசகத்தில் திருவாதவூரடிகள் எடுத்துக் கூறியுள்ளார். இத்திருவாசகம்

" கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே"

எனவரும் அப்பர் அருள்மொழியை நினைப்பித்தல் காண்க.

எல்லாவுலகத்திற்கும் தலைவனாகிய இறைவன் திருவடியை அரணாகக் கொண்டோர் உலகில் நேரும் எத்தகைய மாற்றங்களையும் கண்டு அச்சமுறாது அமைதியாக வாழ்வார்கள்

என்பதனைத் திருவாதவூரடிகள் தமது அநுபவத்தில் வைத்து உரைப்பதாக அமைந்தது,

"தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பய்ந்து காத்தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்
மேவினோம் அவனடியார் அடியா ரோடும்
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே"

எனவரும் திருச்சதகத் திருப்பாடலாகும். இது,

'நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்' (6-98-1)

என்த் திருநாவுக்கரசர் அருளிய மறுமாற்றத் திருத்தாண்டகத்தை அடியொற்றியமைந்திருத்தல் அறியத்தக்கதாகும்.

"மானிலாவிய நோக்கியர் படிறிடை மத்திடு தயிராகித்
தேனிலாவிய திருவருள் புரிந்த என் சிவநகர்
புகப்போகேன்"

எனவரும் திருவாசகத் தொடர்,

'மத்துறு தயிரே போல மறுகுமென் னுள்ளத் தானும்' (4-52-9)

எனவும்,

'தேனிலாவிய சிற்றம்பலவனார்' (5-1-5) எனவும் வரும் அப்பர் அருள்மொழிகளை அடியொற்றியுள்ளமை காணலாம்.

இறைவனை நினைந்து காத்தருள்க என வேண்டியும் ஆற்றுமையால் நிலத்துப்புரண்டும் அவனது பொருள்சேர் புகழை எடுத்துரைத்தும் சிறந்த பேரன்பினால் அழைத்து வழிபடுதல் அன்புடைய அடியார்களின் செம்மை நெறியாகவும் அவனது திருவருள் நெறிக்கு ஒத்துச்செல்லாது மாறுபட ஒழுகும் தமது கொள்கை மார்க்கண்டேயர்க்கு அடைக்கலமருளிய இறைவன் திருக்குறிப்புக்கு மாறாக எதிர்த்து வந்து அவனுடைய தாமரை போலும் திருவடியினால் ஒறுத்துத் திருத்தப்பட்ட கூற்றுவனது கொள்கை போன்றது என்பார்,

" போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்தும்நின்
ருற்றல்மிக்க அன்பா லழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறும்
கூற்ற மன்னதோர் கொள்கையென் கொள்கையே "
(திருச்சதகம் — 45)

எனத் திருவாதவூரடிகள் இறைவனை முன்னிலைபடுத்துப் போற்றி உள்ளார். இறைவனெடு முரண்பட்ட நெறியிலொழுகுவோர்க்கும் இறைவனது திருவருள் மறக்கருணையாய் நின்று உதவுகின்றது என்னும் இவ்வுண்மையினை யறிவுறுத்தும் திருவாசகம்,

" மேலும் அறிந்திலன் நான்முகன் மேற்சென்று, கீழிடந்து
மாலும் அறிந்திலன் மாலுற்றதே வழிபாடு செய்யும்
பாலன் மிசைச்சென்று பாசம் விசிறி மறிந்த சிந்தைக்
காலன் அறிந்தான் அரிதற்கரியான் கழலடியே "
(4—113—11)

எனத் திருநாவுக்கரசர் அருளிய திருவிருத்தத்தின் பொருளை விளக்கி நிற்றல் காண்க.

'பிழைத்தவர் பொறுக்கையெல்லாம் பெரியவர் கடமை போற்றி' எனவரும் திருவாசகம்,

'பிழைத்தனகள் அத்தனையும் பொறுத்தா யன்றே'
எனவரும் திருத்தாண்டகத் தொடரையும், (6—95—8)

'பாணே பேசி யென்றன்னைப் படுத்ததென்ன பரஞ்சோதி'
எனவரும் திருவாசகத்தொடர்,

'பாண்பேசிப் படுதலையிற் பலிகொள்கை தவிரீர்' (7–46–3)
எனவரும் சுந்தரர் தேவாரத்தையும் அடியொற்றியதாகும்.

திருவாசகம் நீத்தல் விண்ணப்பத்தில்,

" ஒறுத்தெனை யாண்டுகொள் உத்தரகோச மங்கைக்கரசே
பொறுப்பரன்றே பெரியோர் சிறுநாய்கள்தம்
பொய்யினையே "

எனவரும் தொடர்,

" நின்பணி பிழைக்கிற் புளியம் வளாரால் மோதுவிப்பாய் "
(4–99–1)

எனவரும் அப்பர் தேவாரத்தையும்,

" ஒறுத்தாய் நின்னருளில் அடியேன் பிழைத்தனகள்
பொறுத்தா யத்தனையும் நாயனைப் பொருட்படுத்தி "
(7–23–3)

எனவரும் சுந்தரர் தேவாரத்தையும் பின்பற்றியதாகும்.

இருபுறமுந் தீப்பற்றி எரிகின்ற கொள்ளிக்கட்டையின் உள்ளிடத்தே அகப்பட்டுக்கொண்ட எறும்பானது ஒரு பக்கமும் வெளிவரமுடியாது திகைத்து அலமருதல்போல உலக பாசத்தில் அகப்பட்டு அதன்கண் தோய்ந்திருக்கவும் அதன் துன்பங்கருதி விட்டுவிலகவுமுடியாது திகைப்புறும் தமது நிலையை,

" இருதலைக்கொள்ளியின் உள்ளெறும்பொத்து நினைப் பிரிந்த
விரிதலையேனை விடுதி கண்டாய் "

என மணிவாசகர் இருதலைக்கொள்ளியினுள்ளேயகப்பட்ட எறும்பினை உவமைகாட்டி விளக்கியுள்ளார். இவ்வுவமை,

" இருதலை மின்னுகின்ற
கொள்ளிமேலெறும் பென்னுள்ளம் எங்ஙனம் கூடுமாறே "
(4–75–6)

என அப்பரடிகள் கூறிய உவமையின் விளக்கமாகும்.

" இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை என்னினல்லால்
விருந்தினனேனை விடுதி கண்டாய் "

எனத் திருவாதவூரடிகள் தம்மையாட்கொண்டருளிய இறைவனை நோக்கிக் கூறும் முறையீடு,

" விற்றுக்கொள்வீர் ஒற்றியல்லேன் விரும்பியாட்பட்டேன் "
(7–95–2)

என நம்பியாரூரார் தம்மையாட்கொண்ட பெருமானை நோக்கி முறையிடும் முறையீட்டினை ஒத்தமைந்திருத்தல் அறியத்தகுவதாகும்.

" சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத்தாட் கொண்டு "

எனவரும் திருவாசகத்தொடர்,

"நாசமாய குலநலஞ் சுற்றங்கள்
பாசமற்றுப் பராபர ஆனந்த
ஆசையுற்றிடும்"

எனவரும் ஆளுடைய பிள்ளையார் தேவாரத்தையும்,

"சாத்திரம் பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்திர்"

எனவரும் ஆளுடையவரசர் தேவாரத்தையும் அடியொற்றியமைந்ததாகும்.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியை"
"சோதியே சுடரே சூழொளி விளக்கே"

எனவரும் திருவாசகத் தொடர்கள்,

"சுடர் விட்டுளன் எங்கள் சோதி" (3–54–5)

"ஆதியந்த மாயினுய் ஆலவாயி லண்ணலே
சோதியந்த மாயினுய் சோதியுள்ளோர் சோதியாய்"
(3-52-7)

"ஒருவர்க்கு மறிவொணுச்
சோதியைச் சுடர்ச்செம்பொனி னம்பலத் தாதியை" (5–2–6)

எனவரும் தேவாரத் தொடர்களை ஒத்தமைந்திருத்தல் காணலாம்.

இறைவனது திருவருள் கிடைக்கப்பெற்ற மெய்யடியார்கள் உலகில் ஞாயிறு முதலிய இயற்கைப் பொருள்கள் நிலைமாறினும் மாருத உள்ளமுடையராய் இறைவனை வழிபடுதலில் உறுதியுடையராய் நிற்பர் என்பதனை,

"இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்"

எனவரும் திருவெம்பாவைத் தொடரால் வாதவூரடிகள் இனிது புலப்படுத்தியுள்ளார். இத்திருவெம்பாவைத் தொடர்,

"எம்பரிவு தீர்ந்தோம் இடுக்கண் இல்லோம்
எங்கெழிலென் ஞாயி றெளியோ மல்லோம்" (6–95–2)

எனவரும் திருநாவுக்கரசர் அருளுரையைத் தன்னகத்துக் கொண்டு திகழ்வதாகும்.

இறைவனது திருவருளின்றி அம்முதல்வனுடைய புகழ்த் திறங்களையுணர்ந்து பாடுதல் எத்தகைய புலமையாளர்க்கும் இயலாத செயல் என்பதும் அவனருளாலே அவனைப் பாடுதல் இயலுமென்பதும் அங்ஙனம் தன்னையுணர்ந்து பாடச்செய்பவனும் அம் முதல்வனே என்பதும் இறைவனருள்பெற்று அவனைப் பாமாலைகளாற் பரவிப்போற்றிய அருளாசிரியர்கள் துணிபாகும். இவ் வுண்மையினை,

"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை"

என வருந் திருவாசகத்தில் அடிகள் தெளிவாகக் குறித்துள்ளார்.

"பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே" (6-95-3)

எனவும்,

"பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித் தானை" (6-54-3)

எனவும் வரும் அப்பரருள்மொழிகளில் இக் குறிப்பு இயம்பப் பெற்றுள்ளமை காணலாம்.

ஞாயிற்றின் ஒளி துணையாக உலகப்பொருளைப் பற்றிநின்ற கண்ணானது அந்த உருவங்களை விட்டு அவ்வொளிக்கு முதலாயுள்ள கதிரவனைக்கண்டு பிரிவற நின்றாற்போல, உயிர்களும் இறைவனது அருளிடமாகக் கூடிநின்று உலகப்பொருள்களை நுகர்ந்து நிற்கும் நிலையிலேயே அவற்றையும் விட்டு அவற்றிற் செல்லும் மனத்தின் வேகமும் அடங்கி உலக நுகர்ச்சிக்குத் துணை புரியும் அருளே துணையாக அவ்வருளுக்கு முதலாயுள்ள சிவத்துடனுங்கூடித் தற்போதங் கெட்டுச் சிவமாய்ப் பிரிவற நிற்கும் என்பது சைவசித்தாந்த சமயத்தினர் கூறும் வீடுபேற்றின் இயல்பாகும். இவ்வியல்பினை விளக்கும் அனுபவமொழியாக அமைந்தது,

"அவமாய தேவர் அவகதியி லழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாமொழிந்து
சிவமான வா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ"

என வரும் திருவாசகமாகும்,

"எந்தையெம்பிரா னேயென்றென்றுள்கு வாருள்ளத் தென்றுஞ்
சிந்தையுஞ் சிவமுமாவார் திருப்பயற்றூர னூரே"

எனவும்,

"சிந்தையுந் தெளிவுமாகித் தெளிவினுட் சிவமுமாகி"

எனவும் வரும் அப்பர் அருள்மொழிகள் இங்கு நோக்குதற்கு உரியதாகும்.

பௌத்தம் முதலாக அவ்வச் சமயத்தவர்களால் தெய்வமென மதித்து வணங்கப்படும் எல்லாத் தெய்வங்களும் எல்லாம்வல்ல சிவபரம்பொருளையே முழுமுதற் கடவுளாக வழிபட்டுப் போற்று கின்ற செய்தியை,

"புத்தன் புரந்தராதி யயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேய பிரான்"

எனவரும் திருப்பாடலில் மணிவாசகப்பெருமான் குறித்துள்ளார், இக்குறிப்பு,

"மூடிய சீவரத்தர் முதிர் பிண்டிய ரென்றிவர்கள்
தேடிய தேவர் தம்மால் இறைஞ்சப்படுந் தேவர் பிரான்"
(3-60-10)

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இடம்பெற்றுள்ளமை அறியத்தகுவதாகும்.

எல்லாம் வல்ல இறைவன் ஞானத்திரளாய் விளங்கும் தன்னைத் தாழ்ந்து வணங்குதற்குத் தலையாகிய சிறந்த உறுப்பினைக் கொடுத்துத் தன்னுடைய நீண்ட கழலணிந்த திருவடிகளை வாழ்த்துதற்கு ஏற்பப் பேசுந்திறமுடைய வாயினை யமைத்து அன்பினல் இணங்கித் திருத்தொண்டு புரிதற்குரிய சிறப்பு வாய்ந்த அடியார் திருக்கூட்டத்தினையும் அமைத்துக் கொடுத்து உமையம்மையார்காண அழகிய தில்லைச் சிற்றம் பலத்திலே உயிர்கள் உய்திபெற ஆனந்தக்கூத்தியற்றியருளும் அருட்பண்பினைப் பரவிப் போற்றுவது,

"வணங்கத்தலை வைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லையம் பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ"

எனவரும் திருவாசகமாகும். இது,

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சுந்
தாழ்த்த சென்னியுந் தந்த தலைவனை" (5-90-7)

எனவரும் அப்பர் அருள்மொழியை அடியொற்றியமைந்ததாகும்.

மண்ணினை யகழ்ந்து சென்றும் விண்ணிற் பறந்தும் மாலும் அயனும் தேடிக் காணுதற்கரிய சிவபரம்பொருள் அன்பினால் நெகிழ்ந்துருகும் தன்னையொத்த அடியார்களின் உள்ளத்திலே நிலைபெற எழுந்தருளியிருக்கும் அருமையின் எளிமையினை நினைந்து தலைவியொருத்தி வியந்து போற்றும் முறையில் அமைந்தது,

உன்னற் கரியசீர் உத்தர மங்கையர்
மன்னுவ தென்னெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவ தென்னெஞ்சில் மாலயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும்

எனவரும் மணிவாசகமாகும். இது,

நாடி நாரணன் நான்முக னென்றிவர்
தேடியுந் திரிந்தும் காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதம்என் னெஞ்சுள் இருக்கவே (5—1—10)

எனவரும் திருக்குறுந்தொகைப் பொருளைத் தழுவியமைந்திருத்தல் காணலாம்.

உயிர்கள் இறைவனையடைதற்கு அன்பு நெறியே சிறந்த சாதனம் என்பதால் எவ்வுயிர்க்குந் தாயுந் தந்தையுமாகிய இறைவன் தன்பால் அன்புடையார்க்குப் பழவினைகள் அற்றொழியும் வண்ணம் பத்திநெறியினை அறிவுறுத்தி மனமாசகற்றிச் சிவமயமாக்கி ஆட்கொண்டு அருள்கின்றான் என்பதனைத் திருவாதவூரடிகள் தாம் பெற்ற சிவாநுபவத்தில் வைத்து வியந்து போற்றுவதாக அமைந்தது,

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளிய வாறார்பெறுவா ரச்சோவே

எனவரும் திருவாசகம். இது,

'சித்தந் தெளிவீர்காள் அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே' (1—91—1)

எனவரும் திருஞானசம்பந்தர் திருப்பாடலின் சொற்பொருள் அமைப்பினை அடியொற்றியமைந்ததாகும்.

இவ்வாறு திருவாசகத்தையும் தேவாரத் திருப்பதிகங்களையும் ஒருங்கு பயிலுங்காற் புலனும் ஒப்புமைப்பகுதிகள் நிரம்பவுள்ளன. தேவாரத்திற்கும் திருக்கோவையார்க்கும் உள்ள சொற்பொருள் தொடர்பினை அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தார் வெளியிட்ட 'பன்னிரு திருமுறை வரலாறு' இரண்டாம் பகுதியில் 'தேவாரமும் திருக்கோவையும்' என்ற தலைப்பிற்காணலாம். அருளிலக்கியங் களாகிய திருமுறைகளில் அமைந்துள்ள இக்குறிப்புக்கள் சைவ சமய வரலாற்றினையும் தத்துவ உண்மைகளையும் கால முறைப்படி ஆராய்வார்க்குப் பெரிதும் பயன்தருவனவாகும். மணிவாசகத் திலும் மூவர் தமிழிலும் அமைந்தனவாக இங்கெடுத்துக்காட்டிய ஒப்புமைப் பகுதிகளைக் கூர்ந்து நோக்குங்கால் 'மூவர் தமிழும் முனிமொழியுங் கோவை திருவாசகமும்......... ஒருவாசகமென் றுணர்' என நல்வழியில் ஔவையார் ஆராய்ந்துணர்த்திய பொருள் முடிபு உறுதியாதல் நன்கு தெளியப்படும்.

திருவாசகமும் தத்துவமும்

The Fundamental Principles underlying Tiruvacagam

Ratna Navaratnam, *Ceylon.*

✶

"மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச் சிவபெருமான் என்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமாறு
அருள்எனக்கிங்கு இடைமருதே இடங்கொண்ட அம்மானே."
— திருவேசறவு 9.

Tiruvacagam is a song of divine utterance. It reveals the sovereign sway of the Grace of Siva, illuminating the universe and the existance of man. This beauteous Testament of Love penetrates into the profound mysteries of the Lord's Grace and its impact on St. Manicavasagar. It embodies the experiences os a Jivan Mukta in a much more intimate manner, than any other recorded psalm by realised seers, down the ages.

"Born in grace and nurtured in grace,
In grace dissolved and poised, veiled in grace,
Blissful grace offered its sweet nectar to taste;
Thus my Lord Nandi entered my inner core in grace":

"அருளில் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்டு
அருளில் அழிந்து இளைப்பாறி மறைந்திட்டு
அருளான ஆனந்தத்து ஆரமுது ஊட்டி
அருளால் என் நந்தி அகம் புகுந்தானே". —திருமந்திரம்

Thus He energises the world and man, by the all pervading light of Grace. Tiruvacagam can be acclaimed as a grand poem wherein is revealed the experience of Grace. The soul realises the Feet of God – the imprint of Siva's grace. In other words, His energy, the principle of grace, bears the form of gracious Feet in the songs of Tiruvacagam.

This song of St. Manicavacagar in Tirucadagam brings out fundamental principles underlying the whole of Tiruvacagam :

"Though bidden to see with the *eye of Grace*,
I strove with *other eyes* to see ;
Darkness was all I saw, thick gloom
Nor saw I the *Seeing One* –
Then Lo ! the *light of grace* spreads its vastness,
Its radiance in unending bliss ;
My darkness afar was *dispelled* –
I saw His *Beauty*, only *His*."

Under the sway of the unreal and the false, the soul has forgotten its true stature and its true relation to the Lord and the world.

"அனைத்துல குமாய நின்னை ஐம்புலன்கள் காண்கிலா"

It is Grace alone that can disperse the gloom of darkness in man and make him experience the truth of his being, when he finds answers to his queries :

"நான் யார்? என் உள்ளம் யார்? ஞானங்கள் யார்?
என்னை யாரறிவார்?"

"யாமார், எமதார், பாசமார், என்ன மாயம்!"

We are fine targets for the birds of prey to feed upon, till they begin to be starved by the all embracing protection afforded by His Grace. These vultures (mystically, they are the sense avenues of experience that

cause so much confusion and misery in life) swiftly take to their flight else where when they no longer can enjoy their plenitude. The benevolent searchlight of Grace has driven them away.

உரைமாண்ட உள்ளொளி உத்தமன்வந் துளம் புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணோக்கம் ஆடாமோ.

"That moment, He became my inner light
That moment, I crossed the sea of desire.
That moment I starved my preying senses ;
That moment those birds of prey fled helpless,
Ego-less, *I am*—Thus play we Tonnokkam".

உயிர் இறை என்னும் இவ்விரண்டின் அருளாட்சிகளையும் குருவின் மெய்த் தத்துவத்தால் விளங்க வைப்பதே சிவஞான போத எட்டாஞ் சூத்திரத்தின் பொருளும், அருள்மொழியான திருவாசகத்தின் தெளி பொருளுமாம்.

How does Manicavacagar show the path way, the way to the establishment of the reign of Grace in the core of our hearts and in the phenomena of the material universe ? By absolute, complete surrender, singing and chanting his name, the saint reveals the ocean of Grace, the Mount of Grace, the expansive groves of Grace, and the heart of Grace.

My gift of thought is offered to thy domain of thought.

சிந்தனை நின் தனக்காக்கி நாயி னேன்தன் கண்இணை
நின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி......

Thy luminous gracious form, I see in everything.
My eyes take lustre from Thine.

My acts blossom as worship at thy beauteous Feet.
The spoken word, hallowed it be, as the
precious pledge of Thy word.

Enfeebled are the senses five at the onset of
Thy irresistible love, Oh Ocean of Grace !
Rock of Ages ! Thou filled the interstices of my
inner core
Whence Thy spark eternal dazzled aloft
Like a dense forest of flaming red lotuses—
Bereft of the sense of duallty, this bared self
Finds its repose in thy radiant Presencc.

— Tirucadagam 26.

This is the essence of the eighth and ninth sutras of Sivajnana Botham. With the coming of the Guru who chases the gloom of fear, falsehood, frets and groans of man, the soul realises its pristine purity and wisdom and the bewildering chaos caused by the grip of the opposites and entanglement of duality ; this vacant soul in serene submission to His effulgence sees His radiance shining everywhere.

உரையாட உள்ளொளியாட ஒண்மாமலர்க்
கண்களில் நீர்த்
திரையாடு மாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ.
(திருத்தெள்ளேணம் 6)

" My words faltering, my inner flame quivering,
The deluge of tears stream from the tender
eye blooms. "

What an experience of the Poet's surging love and the torrential down pour of His Grace ! " The vibration of grace was so dynamic that the stage of my heart which had enacted many a frantic sensual drama before, witnessed the melting dance of grace blossoming into dance of immaculate wisdom and bliss. "

என்னை இன்னிதா ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா........ (திருச்சதகம் 95)

The coming of Grace is marked by a sense of abhorrence for all material pleasures which were consumed in the fire of his love. Such is the potency of Grace Divine.

In *Tirucadagam,* the Cento of Divine Beatitude, he traces the pilgrimage of the soul from the citadels of bondage to the towering heights of the mount of grace. It is the fettered state when the soul just learns to lift itself and pine for his grace. List to the still sad music of humanity.

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோ நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி.
(திருச்சதகம் 62)

He takes his last stride to the submit of grace and sings in the freedom of his Being the song of victory, and of liberation :

நானேயோ தவஞ் செய்தேன். சிவாயநம எனப் பெற்றேன்,

In these hundred songs are brought out the phases of complete renunciation abandonment of attachments, progressive culmination of a devout seeker's love and the everlasting pledge of submission to the Lord's Will and the fulfilment of the goal of illumined servitude in the company of the legion of Siva's servitors. This is the symphony of Tiruvacagam too. It is also the concord on which depends the purport of human existence.

In Tirucadagam, St. Manivacagar unveils the secret recesses of the heart, the impalpable suggestions, the silent

mutations, the mental labyrinth of motives and pretexts: In this sublime ascent up the hill of grace, the experiences of the soul have been depicted in ten marked stages.

The first significant stage is the dawn of Truth, மெய்யுணர்தல். This leads to the impartation of divine knowledge by the guru as enjoined in the eighth sutram of Sivajnana Botham.

"தம் முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்திவிட்டு
அன்னிய மின்மையில் அரன்கழல் செலுமே."

The cognition of the truth of reality of god's grace is brought out touchingly in the first psalm:

"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப்போற்றி சயசய போற்றி யென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே"

This is followed by the imparting of Divine knowledge அறிவுறுத்தல் which leads to the eradication of the play of the senses and the ego-self சுட்டறுத்தல் and to the purification of the soul ஆத்தும சுத்தி. The soul is purged of all dross with the body and mind cleaned of grossness and baseness. In the fifth stage கைம்மாறு கொடுத்தல் is beautifully delineated the act of surrender at the Feet of the Guru. The sixth avenue reveals the loneliness of the pilgrim, who has given up the ephemeral things of the world அனுபோக சுத்தி. The mystic ascent in the seventh step finds the pilgrim exhausted and praying for the balm of divine love காருண்யத்திரங்கல். In the eighth station, his reviving spirits buoy up as the veil of darkness recedes ஆனந்தத் தழுந்தல். This is the stage delineated in the ninth sutram of Sivajnana Botham.

"ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
ஊராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழ லாம்பதி விதியெண்ணும் அஞ்செழுத்தே."

The ninth step sees the pilgrim stepping up with holy servitors of Siva in high jubilation. ஆனந்த பரவசம். Finally he is in sight of the goal of the highest wisdom. ஆனந்தாதீதம் and is filled with rapturous peace.

"Let me be one with Thee, inseparable in thy Being.
Freed from the burden of fleeting joys,
To seek thy bliss divine
Oh acme of Truth to thy devotees true!"

" கூடவேண்டும் நான்போற்றி வீடுதந் தருளுபோற்றி
நின் மெய்யர் மெய்யனே."

In despondency many a doubt will flit across the capricious mind of man, for so embedded is he in the wallowing mesh of sense gratifications. We hear his lament in many a song in Tiruvacagam.

"சீலமின்றி, நோன்பின்றி, செறிவேயின்றி, அறிவின்றித்
தோலின்பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து
கிடப்பேனை
மாலுங்காட்டி, வழிகாட்டி, வாரா உலக நெறிஏறக்
கோலங்காட்டி ஆண்டானைக் கொடியேன் என்றோ
கூடுவதே."

Manicavacagar's answer is an affirmation of faith on the certitude of grace. This experience of *Oneness*, this inseparable union with the gracious feet of Sivam must be fully grasped and made real in our experience, if we are to penetrate the veils of the mystery of Tiruvacagam's Testament of Grace.

A seeker of Truth having made the ascent up the Mount of sublime grace sees That alone, hears That alone, speaks That alone and thinks of That alone, in the white light of Eternal Truth. The infinite articulations of love and surrender takes us out of our narrow limitations into the vast expanse of His Beatific Grace. The quintessence of the eleventh sutram of Sivajnana Botham is the significant principle of not only Tiruvacagam, but also of Saivam:

காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போற் காண
உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன் கழல் செலுமே.

In that ectstatic Ode on *Attainment* திருப்படையாட்சி Manicavacagaperuman dwells lingeringly on the luminous Grace Divine, casting its spell on the devout aspirants and penetrating their power of *seeing*, as they wend their way and reach the journey's end—the refuge of his victorious Feet.

"The many off-shoots that spring from desire shall
wither away, shall it not be?

In the purified consciousness shall enter my
beloved, shall it not be?

The endless and the indivisible one shall be
encompassed within us, shall it not be?

.........The pangs of existence that shadow mortals
shall no more sting, shall it not be?

When my dearly beloved Lord encounters me"!

"என்னுடைய நாயக னாகியஈசன் எதிர்ப்படும் ஆயிடிலே"

This *Encounter* can only take place in the ego-less, purified soul and Manivacagar delineates this beatific state of the soul in one of his Tellenum songs.

" The ether, the sky, fire, water and earth
May perish, but He remains everlasting.
Unto Him, I've lost body, mind and heart,
My ego dissolved too ! Shall we not sing
And dance Tellenum, Ho !"

" வான்கெட்டு மாருத மாய்ந்தழல்நீர் மண்கெடினும்
தான் கெட்டலின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டென் உள்ளமும் போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ"

We shall now briefly survey Sivapuranam, the first utterance in Tiruvacagam, to re-inforce what we have already stated about the beneficent Grace of the Lord, as being the pre-eminent principle in Tiruvacagam. The contemplation of Panchakshram is an essential sadhana to remind the soul of the need to give up the evanescent ways of the world and intensely concentrate on the beauteous form of Grace, the roseate Feet so gracious, and take abiding shelter there. Sivapuranam therefore begins on the chord of adoration of the Lord's name—Namasivaya. The mystic formula of the letters five is the sound symbol of Lord Siva. The ceaseless chanting of this mantra proves efficacious to vanquish the false barriers that separate us from the light of Sivam. The poet reiterates the potency of the letters five in many a gem of purest ray serene. " The raft of the Five Letters is the constant guide in the voyage of life and leads me to spiritual emancipation."

" That He may not leave me for a split second,
That I may not forget His indwelling even for a moment,
This is my prayer to Thee – All Hail !"

" இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க "

This constant remembrance and ceaseless incantation of the Name of the Lord has been reverberated by all the Saiva Seers and Nayanmars. The mystic name as transmitted by the Guru conveys the energising *principle* of *Arulsakti* who alone can reveal to man the power of *sight through insight.*

Sivapur anam thus begins with the grand symphony of praise to the sacrosanct Feet of the Lord. This is his dynamic grace. How beautifully the poet has brought out the force of the idea of God's wisdom and activity through Grace, by means of the concept 'Tiruvadi'. Throughout the poem the symbollic terms of Sevadi, Enthaiadi, Pungalal, Peygalal, Arulgalal, Nathan thal, Sivan thal .... are applied with equal felicity to reveal the greatest truth of Saiva Siddhanta, which is the doctrine of the Grace of God. The concept of the Gracious Feet of the Lord is rich with the promise of all that is most blessed.

"புவனியிற் சேவடி தீண்டினன் காண்க" – 361

"His roseate Feet, this earth hath trod"

"பூவா ரடிச்சுவ டென்றலைமேல் பொறித்தலுமே
தேவான வாபாடி" – 241

"When His flowery Feet were placed on my head
Such divine bliss was mine – sing me"

"கவலை கெடுத்துக் கழலிணைகள் தந்தருளும்
செயலைப் பரவி ...." – 251

"He gave His Feet as refuge and banished my care –
His gracious acts, we praise".

Thus the symbol unfolds the beauty of absolute submission of the soul, in which state, it remains safe and happy; freed from the affliction of the evil of birth.

"பாவநாச உன்பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்" – 28-456

Manicavasagar knows of no other attachment but that of His sacred Feet. The poet's love soars on intense feeling when he says that having quaffed to choking point, the ambrosial waters of Grace, he is not able to attain the Feet of the Flawless Gem in mystic union.

"வழங்குகின்ருய் நின் அருளார் அமுதத்தை".

The concept of the "Feet of God", is the nearest we can get, to the reality of the intimate relationship of God with man. It makes us concentrate on the one eternal Truth, of God's Transcendency and Immanence. Through His five-fold acts He energises the world and the heart of man.

"............நின் ஆதியாம் பாதமலர்
............நின் அந்தமாம் செந்தளிர்கள்
............எல்லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
............உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
............உயிர்க்கும் ஈரும் இணையடிகள்
............மால்நான் முகனும் காணுத புண்டரிகம்
............உய்யஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம்"

"Hail to the feet's flower, Thou Transcendant One
Hail to the roseate Feet, Thou Immanent One
Hail to the Golden Feet, the source of life
Hail to the flowery Feet, the joy of Life
Hail to the twain Feet, the end of Life
Hail to the lotus flower, unseen by Mal Brahma
Hail to the golden flowers that made us His in
Grace".

When Vathavooradigal gives himself wholly to the supremacy of divine Grace, and wants in advaitic contact

with God, having nothing to know or do, save under the guidance of God's Grace, he carries out in absolute surrender:

" தருக நின் பாதம் போற்றி தமியனேன் தனிமைதீர்த்தே"

" That my lonely self may cease to feel forlorn,
Grant me Thy Feet": 5-7-72

The feet of God *Tiruvadi* therefore represent the over-ruling wisdom, love and activity of the Lord, to which the soul submits its knowledge and action. Such submission is allued to as taking shelter under the *gracious feet of God.* When the soul becomes immersed in the light of God's love and grace, he is said to have *attained the feet of God.* This is the reason why in Sivapuranam, the poet revels in saluting the Feet of God. The Lord's manifold relationships with the soul and the diverse ways by which the grace of the Lord can blossom in the heart of man are revealed in the melodious terms used to describe the Feet of Siva as malaradi, sevadi, Iraivanadi, Entaiadi, thevanadi, ponnadi and tiruvadi.

It is by absolute submission unto His Feet, that St. Manivacagar proclaims to the world that the God-Guru came into his life. He communicates to all others that the highest goal of man is to extol the praise of the Lord in thought, word and deed.

Sivapuranam is the revelation par excellence of the event of the consecration under the Kuruntha tree, re-collected in tranquility.

"The immutable gleaming Feet truly
This day I saw and gained release."

" மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்,"

Abide forever within me as the music of om. ......
Thou breath of purity who fills me with grace
So that all false and fleeting joys may flee.
Light of wisdom, irradiating
Luminous sparks of radiant Truth.
To me who gropes in utter ignorance
Void of understanding – Bliss art Thou!

"பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே"

Manicavacagaperuman treasures this realisation of the true inheritance of wisdom as the priceless award from his priceless Jnana Guru. Such indeed is the *testament of grace* that perfumes the hole of Thiruvacagam, and in a concentrated form constitutes the distilled sweetness of Sivapuranam.

"His midmost Eye *illumining*,
He came down, He who transcends thought
To turn his benign grace on me
Thus consecrated I stand before Thy sacred Feet"

"கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி.........

Every utterance in Sivapuranam proclaims the supermacy of the Grace of Siva as it moves to the grand finale of attainment on the wingless melody of exalted adoration :

"Lord who doth dance
In the midst of dense darkness cosmic,
Mystic dancer at Thillai!
Sovereign of the southern land of Pandi!

Thou who wipest the the bonds of birth
They implore Thee,
Whom words declare not —
Beneath Thy beauteous Feet,
They commune with Thee
Who art the incantation of their song.
Blessed art they, who in obeisance meek,
Realise the fulness of attainment,
Beneath Siva's Feet".

"சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து."

This emotional realisation is an apprehension of the Truth mediated by the perfect symbol of Tiruvadi — the Feet of Siva. Manivacagar having apprehended directly the reality of the One supreme who is both transcendent as well as immanent blends his experience into a single flame of consciousness and his poetry glows with the undying truth of the power of Grace, and evokes universal appeal.

Let us now consider another significant and fascinating symbol of Grace in the form of the feminine principle of Arulsakti, which is the essential energy that subsists in Siva. It sends forth the energy of love, the energy of wisdom and the energy of action. The supreme Pathi manifests himself and operates in the universe through his Sakti. Siva and Sakti are as the sun and its radiancc.

"அவளும் தானும் உடனே காண்க.

"Thou and Thy Grace which blooms from thy form
Pervade this world and make us feel thy impact."

"நின்அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்

"How far have we, – my intellect and I strayed
from Thee?
What would be our plight, if he and his Lady –
grace had not saved us?

"நானும் என்சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்
தானும்தன் தையலுமாய்த் தாழ்சடையோன்
ஆண்டிலனேல்".

Sakti is like a ray of light that quickens, illumines and purifies all things. It is fitting that this luminous energy of Siva is represented as Siva's consort.

"பந்தணை விரலியும் நீயும் நின்அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே"

This Sakti works in and through the Guru who is regarded in Thiruvacagam as Siva himself.

"நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி"

In Tiruvandappahuti, the Seer describes his first encounter with the Guru. "He beheld Him — the *grandeur of grace* he saw in him. *His holy Feet* moved in this world, and *he saw Him as Siva*.

"கண்ணால் யானும் கண்டேன் காண்க.
கருணையின் பெருமை கண்டேன் காண்க.
சிவனென யானும் தேறினன் காண்க."

He it was who made him his own. No mystic poet has described the significant role of the Guru and the profound transformation of the Sishya as has been done by the author of Tiruvacagam.

"ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்" — The inconceivable Siva who eludes all knowledge – the hidding player has been accosted as his Guru.

" மறையோர் கோலம் காட்டி அருளலும்........
சொல்லுவதறியேன்......... பருகியும் ஆறேன் "

" A sage he came and showed himself to me. He fed me with nectar of Grace. I cannot fathom the measure of his grace – tasting it, I am not full; quaffing it chokes me. My heart bubbles with the felicity of his grace. My whole mortal frame from head to foot has become one heart, palpitating with his love ".

In wondrous ways, Manivacagar conveys this one *idea*, this *one significant principle of grace, acting and reacting upon him in the role of the Guru.* The guru dwells in the heart of a devout bondsman as a healing balm, a divine physician, a wise seer – Antanam and an intimate friend.

மணிவாசகர் - ஒரு சிந்தனை

★

திரு. அருள்தியாகராஜா
(நிலைய நிகழ்ச்சி உதவியாளர், இலங்கை வானொலி)

★

திருச்சிற்றம்பலம்

கனியி னும்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழல் பாவை நல்லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே —தேவாரம்

உடையாள் உன்றன் நடுவிற்கும் உடையாள்
நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப
தானால் அடியேனுள்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரி
யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும்
வண்ணம் முன்னின்றே. —திருவாசகம்

கயிலாய பரம்பரையில் சிவஞானபோத நெறிகாட்டும்
வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானுவாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாயதேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு நீடூழி தழைகமாதோ.

திருச்சிற்றம்பலம்

இந்தச் சிறப்பான கருத்தரங்கத்தைத் தமது திருவருளா ணையால் சிறப்பிக்கும் ஸ்ரீ-லஸ்ரீ குருமகாசன்னிதானம் அவர் களைத் திசைநோக்கி வணங்குகின்றேன் — இந்தத்திருவிடை மருதூரைச் சிவலோகமாக்குகின்ற எல்லோரையும் வணங்கு கின்றேன். திருவருள் காட்டுவிக்க இங்கு உங்கள் முன் நிற்கிறேன்.

எங்கள் ஈழநாட்டிற்கும் திருவாவடுதுறை யாதீனத்திற்கும் நெருங்கியத் தொடர்பு உண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தத் திருவாவடுதுறை யாதீனம் அரும்பெரு நூல்களையும் சங்கநூல்களையும் ஞானநூல்களையும் சமயநூல்களையும் அச்சு வாகன மேற்றுவதற்குச் செய்துள்ள தொண்டினை அனைவரும் அறிவர்.

நாவலர் — நல்லூர் ஆறுமுகநாவலர் பெருமான் தோன்றி யிராவிட்டால் நான் இங்கு அருள் தியாகராசாவாக வந்திருக்க முடியாது. John Peter என்ற பெயரோடு அங்கேயே இருந் திருப்பேன். திருவாவடுதுறை ஆதீனத்தைப்பற்றி அறியவே முடியாது. மாணிக்கத் தீங்கனியை — திருவிடைமருதரசை அறியமுடியாத நிலைமையிலிருந்திருப்பேன். அந்த நாவலர் பெருமானை அழைத்து — அவருக்கு நாவலர் என்ற பட்டத்தைக் கொடுத்து — தம் சரஸ்வதிமகாலில் உள்ள உயர்ந்த நூல்களை எல்லாம்காட்டி, அவர்மூலம் இவ்வாதீனத்தார் திருக்குறள், திருக்கோவையார், தொல்காப்பியம் முதலிய நூல்களை வெளி யிடச் செய்தார்கள். நாவலர் 56 ஆண்டுகளே வாழ்ந்தார்கள். ஆனால் அதற்கும் அதிகமான காலத்தில் செய்யவேண்டிய வற்றை எல்லாம் அதற்குள் செய்திருக்கிறார்கள். நாவலர் திருக்குறளைத்தான் முதலில் பதிப்பித்தார்கள். அவர் மாணவர் பரம்பரையில் வந்த சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் தொல்காப்பியத்தைப் பதிப்பித்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

இன்று இப்பேரவையிலே திருவாசகத்தை நன்றாக ஆராய்ந் தவர்கள் Critical Research செய்தவர்கள் இருக்கிறார்கள். இந்த ஆதீனத்திற்கு இன்னுமொரு பெருமைஉண்டு. அது தான் சிவஞான சுவாமிகளைத் தோற்றுவித்த பெருமை. சங்க நூல் அறிவோடு சித்தாந்த சாத்திரப் பயிற்சியும் இருக்க வேண்டும். தொல்காப்பியம் முதலான இலக்கண அறிவும் பெற்றிருக்கவேண்டும். இவ்வாறு இருப்பதற்கு ஒரு இலக்கிய மாகவே சிவஞானசுவாமிகள் விளங்கினார்கள். சிவஞான முனிவர் வடநூற்கடலாக — செந்தமிழ்க் கடலாக விளங்கினார்,

சிவஞானமுனிவர் சிவஞானமா பாடியத்தை அருளியுள்ளார். அதில் முதல்நூலுக்குச் சிவஞான நிகண்டு என்று பெயர். சங்கரரும், இராமானுஜரும் மத்துவரும் சேர்ந்து ஒருருவாக விளங்கிச் சிவஞானமுனிவர் சைவத்திற்கு மாபாடியத்தைத் தந்தார்கள் எனில் அந்தப் பெருமை திருவாவடுதுறை ஆதீனத் திற்கே உரியது.

இனித்திருவாசகத்தின் பெருமையைக் காண்போம். கள் என்று அறிந்தாலும் அறியாவிட்டாலும் குடித்தவுடன் போதை தரும். அதுபோலத் திருவாசகத்தை அன்பில்லாமல் படித்தாலும் பெரும்பயன் விளைவிக்கும். 'மானிடத்தவரும் ... உணராரன்றே' என்று சிவஞான சித்தியாரில் அழகாகச் சொல்கிறார்.

திரு. ஜி. யு. போப் திருவாசகத்தை ஏன் மொழிபெயர்த்தார் என்றால்

“நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க”

என்ற பகுதி அவரது உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்ததாம். அதனாலேயே அவர் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்கள் என்று ஒரு வரலாறு உண்டு. திருவாசகம் ஒரு ஞான நூல். ஒரு சக்தியைக் கொடுக்கின்ற நூல். பக்திச்சுவை ஊட்டுகின்ற நூல்களில் முதலிடம் பெறுவது திருவாசகம்.

சிந்தனை நின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்க ளார
வந்தனை ஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே.

என்று மணிவாசகர் அழகாகக் கூறுகின்றார். எங்கள் நாட்டில் விளங்கும் யோகசுவாமிகள் என்ற பெரிய மகான், திருவாசகத்தைப் படிக்க வேண்டும் அல்லது சிவபுராணத்தை யாவது முழுவதும் படிக்கவேண்டும் என்று சொல்வார்கள்.

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

என்று தொடங்கும் அந்தக்காப்புச் செய்யுளோடு சிவபுராணம் முழுதும் படிக்கவேண்டும் என்பார்கள். சிரசாசனம் செய்யும் போது ஐந்து நிமிஷத்தில் சிவபுராணத்தை ஒருதரம் சொல்லி விடலாம் என்று ஒருமுறை அவர் கூறினர்கள். எங்கள் ஈழநாட்டிலே மணிவாசகரையும் சிதம்பரத்தையும் மறக்கவே மாட்டார்கள்.

"அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்" என்று திருக்களிற்றுப்படியார் பேசும். "அம்மையே அப்பா" என்று மணிவாசகர் போற்றுகின்றார். மூவர் காலத்திற்கும் முற்பட்டவர் மாணிக்கவாசகர் என்ற ஆராய்ச்சியில் நாம் இறங்கவேண்டா. மருந்து இருக்கிறது என்றால் அதிலே என்னென்ன சேர்ந்து உள்ளன என்று நாம் ஆராயத் தேவையில்லை. நமக்கு நோய் நீங்கவேண்டும். அதுபோலத் திருவாசகத்தில் அழுந்தி அதன் பயனை அறிய விரும்புவோர் மற்றவற்றைக் கவனிக்கமாட்டார்கள். மணிவாசகர் ஓரிடத்தில் கூறுவார்:

"உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"

அகச்சுவைப் பகுதிகளும் திருவாசகத்தில் உள்ளன.

"அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவும் நாமத் தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே"

என்று என்ன அழகாகச் சொல்லுகின்றார் பாருங்கள்.

நாங்கள் வணங்கும் தெய்வம் சிவபெருமானே என்பதை

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே"

என்று மணிவாகசப்பெருமான் அழகாகக் கூறுகின்றார்.

மாணிக்கவாசகரது தவநிலை நமக்கு வரவேண்டும்.

"வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம் வேண்டார்தமை நாளும்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன்புறம் போகேன் இனிப்புறம் போகலொட்டேனே"

என்ற அந்த அருநிலை நமக்கு வரவேண்டும். அப்பர் சுவாமிகள் சொல்வார் :

"சிவனெனும் நாமந் தனக்கே யுடையசெம் மேனிஎம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு மாகி லவன்றனையான்
பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தால்
இவனெனைப் பன்னாள் அழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே"

என்றபடி நாம் சிவபெருமானிடத்தில் விடாக்கண்டனாக இருந்து அவனைப் பற்றவேண்டும்.

சைவம் வளரவேண்டும் என்றால் நாம் நமது வாழ்வில் தினமும் ஒருசில நிமிஷங்களாவது நம் சைவசமயம் வாழ வேண்டுமென்று சிந்திக்கவேண்டும். சிந்தனையில் பெரிய சக்தி இருக்கிறது. Power generates Power என்று சொல்வார்கள். போர் மனிதனது மனத்திலேதான் முதலில் தோன்றுகின்றது என்பர். அதுபோல எந்தப் பெரியநிலைக்கும் சிந்தனையே

முக்கியமானது. சிந்திக்கவேண்டும்; பிறகு பேசவேண்டும், பிறகு செயலில் காட்டவேண்டும். மலேயா போன்ற நாடுகளிலெல்லாம் சைவம் பரவியிருந்தது. பாலித் தீவிலெல்லாம் திருவெம்பாவை படிக்கின்றூர்கள் என்று சொன்னூர்கள். இப்பொழுது நாம் என்ன செய்கிறோம் என்று சிந்திக்க வேண்டும், சிந்தித்துச் சமயம் வளர வழிவிடவேண்டும். வாளாவிருக்கக்கூடாது. முயற்சி திருவினை ஆக்கும் என்றூர் வள்ளுவர்.

" உழப்பின் வாரா உறுதிகள் உளவோ
கழப்பின் வாராக் கையறவு உளவோ "

என்று திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் வருகின்றது. கையறவு நீங்க நாம் என்ன செய்ய முடியும். சமயத்தைக் காக்கத் துணிவு வேண்டும். சிந்தனை வேண்டும். சிந்தனையால்தான் பல காரியங்கள் சாதிக்கப்படுகின்றன.

கருவினுள் அழிவ தாயும்
கழித்துநாள் அழிவ தாயும்
பரிணமித்து அழிவ தாயும்
பாலனாய் அழிவ தாயும்
தருணனாய் அழிவ தாயும்
தானுடைந்து அழிவ தாயும்
உருவமே அழிவே யானால்
உள்ளபோது உய்ய வேண்டும்

உலகெலாமாகி வேறாய் என்று வரும் சித்தாந்த சாத்திரக் கருத்தை நினைப்பில் கொள்ளவேண்டும். ஆனால் மறப்பெனும் பகைவன் வாரிக்கொண்டனன் என்றூர் ஒரு பெரியவர். மறவாமை பொருளைக் கடிதிற்காண்டல். மறவாமையால் அமைத்த மனக் கோயில் உள்ளிருத்தி என்றூர் சேக்கிழார் சுவாமிகளும். இறைவனைப் பிரியாத நிலை ஏற்பட வேண்டும்.

" என் தலைவனை நனி காணேன், தீயில் வீழ்கிலேன், தரையில் உருள்கிலேன், செழுங்கடல் புகுகிலேனே " – என்றபடி நாம் இறைவனிடத்தில் பிரியா நிலை கொள்ள வேண்டும். அப்பர் பெருமான் கூறியபடி தன் நாமம் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே " என்ற நிலை நமக்கு வரவேண்டும்.

திருநீற்றைப்பற்றி மணிவாசகர் கூறும்போது " பூசித்தான் திருநீறே நிறையப் பூசி " என்று மிகச் சிறப்பாகக் கூறுகிருர். வில்லிபாரதத்தில் அருச்சுனன் தவச்சருக்கத்தில் அருச்சுனன் திருநீறு பூசிய முறையை வெகு அழகாகக் காட்டுகிருர் வில்லிப் புத்தூரார்.

" ஆசின் நான்மறைப் படியும் எண்ணில்கோடி ஆகமப்படியும்
எழுத்தைந்தும்கூறிப் பூசிஞன் வடிவமெல்லாம் "

என்றிவ்வாறு மணிவாசகரது திருவாசகம் பல்லாற்ருனும் சிறப்புடையது. அதன் பெருமையை உணர்ந்து ஓதி உய்வடைவோமாக.

திருக்கோவைப் புரட்சி

★

டாக்டர் வ. சுப. மாணிக்கம்
தமிழ்ப் பேராசிரியர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

★

திருமுறைக் கருத்தரங்கு என்பது சமயத்துறையில் காலத்திற்கு ஏற்ற புதிய அரங்காகும். திருமுறைகளை அன்போடு மட்டுமன்றி ஆராய்ச்சியோடும் படிப்பதற்கும் கலந்து உரையாடுவதற்கும் இக்கருத்தரங்கு வழிகோலுகின்றது. நம் பெரியோர்கள் இயற்றிய தெய்வப் பாசுரங்களைப் பல்வகையில் ஆராய்வது அன்புக்கு முரணாகாது; ஊன்றுகோல் ஆகும். திருப்பாவை திருவெம்பாவைகளை மார்கழித் திங்களில் பரப்புவதுபோல ஒவ்வொரு திருமுறையையும் பரப்புவதற்கு ஒவ்வொரு மாதத்தை வகுத்துக் கொள்ளலாம். கணக்காகப் பன்னிரு திருமுறைச் செல்வங்கள் நமக்கு உள.

மணிவாசகரின் பாடல் எட்டாம் திருமுறையாக இருந்தாலும் காலையில் திருவாசகக் கருத்தரங்கு நிகழ்ந்தது, இப்போது மாலையில் கோவைக் கருத்தரங்கு நடைபெறுகின்றது. இவ்வாறு ஒரு திருமுறைக்குள் அடங்கிய ஒருவரின் இருநூல்களுக்குத் தனித்தனி கருத்தரங்கு வகுத்திருப்பது திருவாசகம் போலத் திருக்கோவையும் சிறப்புடையது என்பதனைப் பகரும்.

> " தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
> திருவா சகமும் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகமென் றுணர் "

என்ற நல்வழிப் பாடலில் மணிவாசகரின் இரு நூல்களும் தனித்தனியாகச் சுட்டப்படுகின்றன. கோவையை முன்சுட்டித் திருவாசகம் பின் சுட்டப்படும் வரன்முறையும் நோக்கத் தகும்.

முதற்கண் பாடப்பெற்றது திருக்கோவையா, திருவாசகமா? இருநூல்களின் ஆராய்ச்சிக்கும் மணிவாசகரின் மனநிலை வரலாற்றை அறிதற்கும் இதன் முடிபு இன்றியமையாதது. திருவாசகம் பல்கால் பலதலங்களிற் பாடப்பெற்ற பாடல்களின் தொகைநூல். ஒருசிலவற்றைத் தவிரப் பெரும்பாலானவை இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற பின்னர்ச் செய்யப்பெற்றவை. பெரியோனாக வந்து இறைவன் கழல்காட்டி மறைந்துவிட்டான். பிரிவு பொறுதும் தனிமை பொறுதும் மணிவாசகர் புலம்பிய ஏக்கப் பாடல்களே திருவாசகம். "எல்லையில் கழல்கண்டும் பிரிந்தவன்" எனவும் 'இன்னருள் புரிந்த தலைவனை நனிகாணேன்' எனவும் 'கண்டுங் கண்டிலேன் என்ன கண் மாயமே' எனவும், 'காணுமாறு காணேன் உன்னை அந்நாட் கண்டேனும் பாணேபேசி என்தன்னைப் படுத்ததென்ன பரஞ் சோதி' எனவும், 'எத்தனையானும் யான் தொடர்ந்து உன்னை இனிப்பிரிந்தாற்றேன்' எனவும் அடிகள் பாடல்தோறும் புலம்புவதை உணர்கின்றோம். அகத்துறைக்கண் பாலைப் பாடல்போலச் சமயத்துறையில் திருவாசகம் பாலைப்பாடல் என்பது என் கருத்து.

"கயல்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக்கலந் தாண்டலுமே
அயல்மாண்டு அருவினைச் சுற்றமுமாண்டு அவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகமாண்டு என்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ,"

என்ற திருத்தெள்ளேணத்தில் 'மற்றுள்ள வாசகம் மாண்டு' என்ற தொடரின் உணர்ச்சி நினையத்தகும். இவ்வேக வுணர்வுக்குப் பின், தொல்காப்பியத்தையும் சங்க அகப் பாடல்களையும், அகவிலக்கணங்களையும் தொகுத்து ஆராய்ந்து துறைகளை நிரல்பட வகுத்துத் தொடர்நிலைச் செய்யுள் எனத் தகும் நானூறு பாடல் யாத்து ஒரு கோவைப்பட எழுதும் உலக மனவியல் அடிகளாருக்கு வாராது சட்டெனப் பிரிந்து மறைந்த பெரியோன் கழலைக் காணுமதே துடிப்பாகக் கொண்ட மணிவாசகர் அலறி உலறி எவ்விடத்தான் சிவன் எவர்கண்டனர் என்று ஓடிப்பாடித் திரிந்த அடியவரேயன்றி அதன் பின்னர் ஓரிடத்து அமர்ந்து ஒரு தொடர்நூல் எழுதிய புலவர் அல்லர். ஆதலின் இறையுணர்வு அரும்பி வளரும் நிலையில் கோவை இயற்றப்பட்டது எனவும், திருவாசகப் பகுதிகள் இறைவன் தன்னைக்காட்டிப் பிரிந்தபின், தேறுதல் ஒழிந்த அன்பின் மிகுதிறத்தாலும், மிக்க அன்பின் மிடலாலும் மணிவாசகப் பெண்ணுயிரால் புலம்பிப் பாடப்பெற்றவை எனவும் உறுதியாகக்

கொள்ளலாம். எனினும் திருவெம்பாவை போன்ற ஒரு சில திருவாசகப் பகுதிகள் கோவைக்கு முன்னும் பாடப்பட்டிருக்கலாம் என்று கொள்வதிற் குற்றமில்லை.

திருக்கோவையை மணிவாசகர் பாடியிருத்தல் இயலாது என்பது ஒரு சாரார் எண்ணம். திருவள்ளுவர் காமத்துப்பாலைப் பாடவில்லை என்பது போன்ற கருத்துக்கு ஒப்பானது இது. நம் சான்றோர் பாடியது கற்புடைக் காமம் ஆதலானும் அன்புடைக் காமம் தமிழ் இலக்கியத்தின் உரிப்பொருள் ஆதலானும், காமம் பாடுவது எப்புலவர்க்கும் நிறைவாகுமேயன்றிக் குறைவாகாது. அகத்தினைப் பாடாமை குறைவாகக் கருதப்பட்ட காலமும் ஒன்று உண்டு என்பதனை நினைய வேண்டும். வள்ளுவரும் மனிவாசகரும் அன்புடைக் காமத்தைப் பாடினர் எனின் மதிப்புக் குறைவாகும் என்று சொல்லுவமேல், பரணர் கபிலர் நக்கீரர் இறையனர் ஔவையார் முதலான சங்கச் சான்றோர்கள் மதிப்புக் குறைவுடையரோ ? நம் தெய்வ இலக்கியங்கள் எல்லார் தம் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளுவதற்கு ஒரு பெருங்காரணம் அகவிலக்கியத்தின் காதற் போக்குக்களை அள்ளிக்கொண்டமையே யாகும். அகத்தமிழ் கலந்தமையால் தெய்வத் தமிழ் மக்களிலக்கியம் ஆயிற்று கற்புடைக்காமம் என்னும் அகம் பாடுவது குற்றம் எனின் அகநடையைத் தழுவிப்பாடுவது குணமாகுமா ? “ காமமுறு காதலன் தன் கலவியினைக் கருது கின்ற, ஏமமுறு கற்புடையாள் இன்பினும் இன்பெய்துவதே ” என்று இராமலிங்க வள்ளல் கடவுட் புணர்ச்சிக்குப் கற்புப் புணர்ச்சியை உவமிப்பர். ‘ உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை ’ என்ற தொல்காப்பியத்தின்படி ஆகும் உவமை சிறப்புடையதாகக் கருதப்படும்.

மோகம் அறுத்திடினும் முத்தி கொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் – தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்தொண்டன் தொண்டுதனை
ஏதாகச் சொல்லுவேன் யான்.

என்ற திருக்களிற்றுப்படியாரால் காமம் நுதலுதலும் காமநடை ஆளுதலும் தமிழ்ச் சமயங்களுக்கு இயற்கை என்பது பெறப் படும்.

இனி சிற்றப்பலக் கோவையின் பொருளும் நடையும் பற்றிச் சங்க இலக்கியத்தோடு சில கூறுகளில் ஒப்பிட்டுக் காண்போம். ‘ மக்கள் நுதலிய அகன் ஐந்திணை ’ என்று தொல்காப்பியம்

கூறுதலின், அகப்பாடலில் முதல் கருவுரி மூன்றிலும் மக்களே இடம் பெறுவர். தலைவன் தலைவி தோழி அன்னை முதலான கிளவிப் பாத்திரங்கள் இயற்பெயர் பெறுவதில்லை என்பது தெரிந்த மரபு. பிற்காலக்கோவைகளிலும் இம்மரபு மாறவில்லை. ஆனால் முதல் கருப்பகுதிகளிலும் பேரும் பிறவும் மக்கள் தொடர்புடையனவே இடம்பெறுவது சங்க வழக்கு

“பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய அற்றால் அன்பின் பாலே” (குறுந். 196)

“ஒளிறுவாட் டானைக் கொற்றச் செழியன்
பிண்ட நெல்லின் அள்ளூ ரன்னவென்
ஒண்டொடி நெகிழினும் நெகிழ்க.” (அகம். 46)

இக்குறுந்தொகைப் பாடல்களில் வேள்பாரியும் அவன் பறம்பும் கொற்றச்செழியனும் அவன் அள்ளூரும் கருப்பொருட் பகுதியில் காணலாம். திருக்கோவையிலோ இவ்வுலகத்தின் தில்லை பேசப்பட்டாலும், பாட்டுடைத் தலைவனாக வருபவன் மாந்தனல்லன், இறைவன்.

“வருங்குன்றம் ஒன்றுரித் தோன்தில்லை யம்பல
வன்மலயத்து
இருங்குன்ற வாணர் இளங்கொடியே (15)

“ஆவா இருவர் அறியா அடிதில்லை யம்பலத்து
மூவா யிரவர் வணங்க நின்றோனை” (72)

பாட்டுடைத் தலைவன் தில்லைக்கூத்தபிரான் என்பது மட்டுமன்று, ‘வருங்குன்றம் ஒன்றுரித்தவனது தில்லை’, ‘ஆலத்தினால் அமிர்தாக்கிய கோன்தில்லை’, ‘பல்லிலனாகப் பகலை வென்றோன் தில்லை’, ‘மாயவன் வரங்கிடந்தான் தில்லை’ என்று கூத்தப்பிரானின் திருவிளையாடல்களோடு இணைத்துப் பேசப்படும் தில்லை என்று அறியவேண்டும். பாட்டுடைத் தலைவன் செயல்கள் பெரும்பாலும் தில்லைக்கு அடையாக வருகின்றன. சங்கப் பாடல்களிற்போல் இயற்கையடை இல்லை என்னும் அளவுக்குக் குறைவு. எனவே கோவையின் கருப்பகுதி அல்லது செம்பாகம் இடைக்காலத்து வளர்ந்த சமயநிலைக்கு ஏற்ப, தெய்வப்பான்மையாகவும் உரிப்பகுதி முன்போல் மனிதப்பான்மையாகவும் அமைந்தன என்று

அறியவேண்டும். இது காலமாற்றத்தால் விளைந்த இலக்கிய மாற்றம்.

இம்மாற்றம் இதனெடு அமையவில்லை. சமயப்புயல் மெய்யான அகப்பகுதியையும் தாக்கியது. தலைவன் தலைவி தோழி முதலான அகமாந்தர்கள் இன்னதிணையினர் இன்னநாட்டினர் என்ற அளவிலே சுட்டப்படுதல் சங்க வழக்கு. திணைப்பாங்கே சங்கப் பாங்கு, இடைக்காலத்து இப்பாங்கு சமயநிலைக்கு முன்னிற்க இயலவில்லை. கருப்பொருளில் வரும் மக்கட்கும் உரிப்பொருளில் வரும் மாந்தர்கட்கும் உறவே இராது சங்கப்பாடல்களில். முதற் கோவையான திருக்கோவையில் இவ்வகையிலும் ஒரு மாற்றம் காண்கின்றோம். பாட்டுடைத் தலைவனை இறைவனைக்கொண்டது மட்டுமன்றி அத்தலைவனுக்கும் ஏனை அகமாந்தர்க்கும் நீங்கா உறவு வலியுறுத்தப்படுகிறது.

" ஈசற்கு யான்வைத்த அன்பி னகன்றவன் வாங்கியவென்
பாசத்திற் காரென்ற வன்தில்லை யி னெளிபோன் றவன்தோள்
பூசத் திருநீறென வெளுத்தாங் கவன்பூங் கழல்யாம்
பேசத் திருவார்த்தை யிற்பெரு நீளம் பெருங்கண்களே " (109)

" சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்தும் என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண் தீந் தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ (20) "

கோவைத் தலைவன் பாட்டுடைத் தலைவனாகிய சிவனைத் தொழுது பாராட்டும் அடியவன் ஆகின்ருன்; அவ்வாறே பாங்கனும் தில்லைக்கூத்தனை நெஞ்சத்தில் வைத்த அடியான் ஆகின்ருன். தலைவியது உடன்போக்கில் வருந்தித் தேடியலையும் செவிலி சுரத்திடை எதிர் வருவாரை நோக்கித் தன்மகள் ஒருவனேடு சென்றதுபற்றி வினவுகின்ருள். ஒருகாலில் கழல் இருந்தது. ஒரு காலில் சிலம்பு இருந்தது; ஒருபக்கம் வெண்பட்டாடை; ஒரு பக்கம் செம்பட்டாடை; இவ்வாறு இணைபிரியா உருவத்தைப் பார்த்தோம்; பார்த்து உமையொரு பாகன் என்றே அந்த எழிற்காட்சியைத் தொழுதோம்; தொழும் நற்பேறு பெற்ரேம் என்று எதிர்வருவார் மறு மாற்றம் மொழிகின்றனர்.

மின்தொத் திடுகழல் நூபுரம் வெள்ளை செம்பட்டுமின்ன
ஒன்ருெத் திடவுடை யாளொடொன் ருப்புலி யூரனென்றே
நன்ருெத் தெழிலைத் தொழவுற்றன மென்னதோர் நன்மைதான்
குன்றத் திடைக்கண் டனமன்னை நீசொன்ன கொள்கையரே.

இங்கு களவித் தலைவனும் தலைவியும் பாட்டுடைத் தலைவன் தலைவியாகவே பார்க்கப்பெறுவது அகவிலக்கணத்தில் ஒரு பெரிய புரட்சியாகும்.

இளங்கோ காப்பியமரபில் புரட்சி செய்தவர் என்பதுபோல மணிவாசகரும் அகத்திணை மரபில் அடிப்படைப் புரட்சி செய்தவர். இளங்கோ புரட்சி செய்தவர் என்று கூறினலும், செய்த புரட்சிகள் என்ன என்று உராய்ந்து பார்ப்பதற்கு அவருக்கு முந்திய காப்பியங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் நாம்பெற்றிருப்பதால் திருக்கோவையில் மணிவாசகர் செய்த மாறுபாடுகளை ஒத்திட்டுத் தெளிகின்ருேம். அகத்துறைகள் பல என்பதும், அவற்றைத் தனித்தனி நிகழ்ச்சியாகவே கருத வேண்டும் என்பதும், காதல் நிகழ்ச்சிகளை வரிசையாகக் கோவைப்படுத்தக்கூடாது என்பதும் தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் காட்டும் அகமரபு. கபிலர் அகப்பாடல் பல பாடிய போதும், நிகழ்ச்சிகளை வரிசை செய்திலர். ஐங்குறுநூறு, கலித்தொகை இவற்றில் புலவர் ஒருவரே தொடர்ந்து பலசெய்யுட்களைத் தொடுத்த காலையும் துறைக்கோவையாகத் தொடுக்கவில்லை. முதற் பாட்டு ஒரு கைகோளாக ஒரு துறையாக, அடுத்த பாட்டு வேருெரு கைகோளாக வேருெரு துறையாக இங்ஙன் தொடர்பு இன்றியே செல்லுவதை அறிகின்ருேம். துறைத்தனிமை சங்கப் பாங்கு, துறைக்கோவை சங்கப் பாங்கன்று.

மணிவாசகர் தமிழ் அகத்திணையில் பெரிதும் ஈடுபாட்டினர். அதனைப் பரப்பும் ஆர்வத்தினர். 'உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ' என்று பாங்கனை வினவச்செய்யும் முகத்தால், அகத்தமிழில் தாம் செய்த ஆராய்ச்சியைப் புலப்படுத்தியவர். அகத்தமிழை மாணவர்களுக்கு ஒழுங்குபடக் கற்பிக்கும் நோக்கங்கொண்டும், சைவமும் தமிழும் இணைந்து தழைத்து இனிது பரவவேண்டும் என்ற வேட்கை கொண்டும் பாடநூல் என்று சொல்லத்தக்க திருக்கோவை இயற்றினர். கோவை என்ற நூற்பெயரே தொல்காப்பியத் தனி முறைக்கு மாறுபாடு என்பதனை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

திருவெம்பாவைப் பெண்கள் சிவன்பால் வேண்டுவன பல. பாவை பாடுவோர் சைவக்குமரியர் ஆதலால், தங்கள் பருவத்துக்கு ஏற்ற ஒரு வேண்டுகோளினையும் ஈசனிடம் அறிவிக்கின்றனர்.

"உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்"

காதலர்கள் ஒரு மதத்தைச் சார்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்ற பிற்காலக் கருத்துவளர்ச்சியை இப்பாடல் காட்டுகின்றது. (ஒரு மதத்தைச் சார்ந்தும் அம்மதத்திற்கு உட்பட்ட ஒரு சாதியைச் சார்ந்தும் இருத்தல் வேண்டும் என்ற கருத்து மணிவாசகர் காலத்து வரவில்லை போலும்). இவ்வாறு மதவூற்றம் இருப்பினும், களவித்தலைவி சிவனைப் பணிந்தாளாகத் திருக்கோவை பாடவில்லை. குலமகட்குத் தெய்வம் கொழுநனே என்பதும், தெய்வம் தொழாள் கொழுநனைத் தொழுதெழுவாள் என்பதும் தமிழ்ச் சமுதாயத்தின் பொதுமுறையாதலின், மணிவாசகர் தலைவியைச் சைவச்சியாகக்காட்டினாலும், கணவனைத் தொழுபவளாக, அவனையன்றிப் பிற தெய்வம் தொழாதவளாகவே காட்டுவர்.

"தெய்வம் பணிகழ லோன்தில்லைச் சிற்றம் பலமனையாள்
தெய்வம் பணிந்தறியா ளென்றும்" (304)

"தென்னவன் ஏத்துசிற் றம்பலத்தான் மற்றைத்தே
வர்க்கெல்லாம்
முன்னவன் மூவலன் னாளும் மற் றோர்தெய்வ
முன்னலளே" (307)

சிற்றம்பலம் போன்ற சிறப்புடைய தன் மனைவி தன்னைத் தவிர வேறொரு தெய்வத்தைப் பணிவது தெரியாதவள் என்று தனது இல்லற வாழ்வில் கணவன் பாராட்டுகின்றான். தன் மகளின் இல்வாழ்க்கையைக் காணச் சென்ற செவிலியும் மற்றோர் தெய்வத்தை மனத்தாலும் நினையாதவள் என்று புலப்படுத்துகின்றாள். கோவைப் புரட்சிக்கும் ஓர் எல்லையுண்டு போலும்.

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை

என்ற தொல்காப்பியத்தின் படி அகப்பாடல் முதல் கரு உரி என்ற முக்கூறுடையது என்பது பெறப்படும். முதலும் கருவும் இயற்கை பற்றியன. உரி என்பது மக்களின் காதல் நிகழ்ச்சிபற்றியது. சமய எழுச்சிக்குப்பின்னர்த் தோன்றிய அகத்துறைச் செய்யுட்களில் முதல் கரு என்ற இரண்டின் இடத்தைச் சமயம் கைப்பற்றிக் கொண்டது. இப்பகுதியில் சமய மெய்ம்மைகளும் புராணக் கதைகளும் புகலாயின. இவற்றின் அடிம்படையில் கற்பனைகளும் சொல்நயங்களும் புனையப்பட்டன. மேலும் தலைவன் தலைவி முதலான அகமாந்தர்களும் ஒருசமயம் தழுவிய மக்களாகக் கொண்டமையின், உரிப்பொருளினும் சமயம் கலப்பதாயிற்று. எனவே சங்கத்துப்பின் எழுந்த அகச்செய்யுட்கள் அகம் என்ற இலக்கணப் பெயரைப் பெற்றிருந்தாலும் சமய முதன்மைப் பாடல்களாயின. சமயம் முதற்பொருளாயிற்று. அதனைச் சொல்லிப் பரப்புதற்கு உரிப்பொருள் சார்புப் பொருளாயிற்று. இவ்வகைப் பொருள் மாற்றத்திற்கு முன்னோடியாகத் திகழ்பவர் மணிவாசகர். சமயத்துறையில் அன்புப் புரட்சிகண்ட அடிகளார் இலக்கியத்துறையிலும் நீடிய பொருட்புரட்சி செய்தார். அப் புரட்சி பின்னைப்புலவர் எல்லாரும் மேற்கொள்ளத்தக்க மரபு ஆயிற்று. கோவைமரபு மணிவாசகர்கண்ட புதிய இலக்கிய மரபு.

திருக்கோவையார்

★

சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர்

திரு. ஔவை. சு. துரைசாமி பிள்ளை

மதுரை.

★

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் பொன்னூர் திருவடிகளுக்கும், அவையோர்க்கும் வணக்கம் தெரிவித்துக் கொண்டு அவர் பேசியதாவது.

"பெரியோர்களே, இந்தத் திருமுறைக் கருத்தரங்கத்திலே திருக்கோவையாரைப் பற்றிப் பேசுவதற்கு உரிய வாய்ப்பினை அளித்த உங்களுக்கு என் மனம் கனிந்த வணக்கத்தை மறுபடியும் தெரிவித்துக்கொள்கிறேன். "இந்த திருக்கோவையாரை எந்த முறையிலே இருந்து காண்பது? எந்த முறையில் பொருள் காண்பது? என்றெல்லாம் திணராதபடி, மயங்காதபடி ஒரு குறிப்பையும் பார்வையாளர்கள் தெரிவித்தார்கள். சங்க இலக்கியக்காரருக்கும், திருக்கோவையாருக்கும் உள்ள ஒற்றுமை நயங்களை எடுத்துக் காட்டுகின்ற வகையில் என்னுடைய திருக் கோவையார் பேச்சு அகப்பொருள் நோக்கமாக இருக்கவேண்டும் என்று முடித்துவிட்டார்கள். ஏனென்றால் அதில் பல பொருளைக் காணலாம். திருவாசகத்தை நினைக்கிறபோதும், மணிவாசகப் பெருமானை நினைக்கிறபோதும், திருக்கோவையாரை நினைக்காமல் இருக்க முடியவில்லை. திருக்கோவையாரைப் படிக்கின்றபோது மணிவாசகப் பெருமானையும். திருவாசகத்தையும் நம் நெஞ்சில் கொள்ளாமல் இருப்பதில்லை, அந்த வகையில் திருக்கோவையார் நம் உள்ளத்தில் பின்னி பிணைந்துகொண்டு கிடக்கிறது. இந்த இந்த வகையிலே இன்று நான் பொருள் காண்பதற்குரிய பகுதி லேசான முறையில் அகப்பொருள் நோக்கினுல் சொன்னுல் போதும், வேறு பொருளைப் பற்றி பேச வேறு பெருமக்கள் இருக்கிருர்கள். 'அகப்பொருளோடு நின்று விடுவது நல்லது.' என்ற குறிப்பைப் பார்வையாளர் அவர்கள் கொடுத்தார்கள்.

இந்தக் கோவையார் அகப்பொருள் நூல்; இதற்கும் சங்க இலக்கியங்களுக்குமுள்ள இணைப்பைப் பேசுதல் வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். சங்க இலக்கியங்கள் எழுந்த காலத்தில் இருந்த அகப்பொருள் நிலை வேறு. இரண்டுக்கும் இடையே ஓராயிரம் ஆண்டுகள் எழுந்துவிட்டன என்று சொல்லலாம். இந்த ஆயிரம் ஆண்டுகளுக்கிடையே மக்கள் வாழ்விலே எத்தனையோ மாறுதல்கள் தோன்றிவிட்டன. அவர்களுடைய எண்ணத்திலே மாறுதல், சொல்லிலே மாறுதல், செயலிலே மாறுதல், சமுதாய அமைப்பிலே மாறுதல் தோன்றிவிட்டன. சுருங்கச் சொல்வோமானால் சாதி இன வேறுபாடுகள் கூட இந்த ஆயிரம் ஆண்டுகளுக்குள்ளாக நம் நாட்டிலே தோன்றிவிட்டன. இந்தச் சாதி இன வேறுபாடுகள் தோன்றிய பின்பு நம்முடைய இலக்கிய அகப்பொருள் நெறியிலே கூட மாறுதல்கள் தோன்றி விட்டன.

சங்கநூல் காலத்தில் இருந்த அகப்பொருள் பொதுவாக பார்வையாளர் சொன்னபடி மக்கள் வாழ்க்கை அமைப்புக்குத் துணைசெய்கிற வகையில் அமைந்திருந்தது. ஒருவனும் ஒருத்தியும் வெவ்வேறு சூழ்நிலையில் பிறப்பார்கள். வெவ்வேறு சூழ்நிலையில் வளர்வார்கள். ஒருவரை ஒருவர் காண்பார்கள். பிறகு காதல் கொள்வார்கள். காதலராகிக் கணவன் மனைவி ஆவார்கள். இது சங்கநூல் காலநிலை ஆகையால் ஒருவனும் ஒருத்தியும் ஒருவரை யொருவர் பார்த்துக் காதல்கொள்வது ஒன்று. பிறகு இருவரும் காதல் வாழ்கை நடத்துவது ஒன்று. அதன்பிறகு கணவன் மனைவியாதல் ஒன்று. ஆண்மகன் ஒருவன் ஒருத்தியைக் கண்டு காதல்கொள்வது கைக்கிளை. அவர்கள் இருவரும் காதல்உறவு கொண்டால் அது களவு. கணவன் மனைவியாகிவிட்டால் கற்பு. இந்த முறையில் சங்ககால அகப்பொருள் நடந்து வந்தது. இன்றும் கூட சாதிஇன வேறுபாடு மிகுதியாக இல்லாத உலகநாடுகளிலே காதல் செய்வதும், கணவன் மனைவியாவதும் ஆகிய இரண்டு நிலையும் இருக்கின்றன. கற்புமுறை என்பது உலகநாடுகளில் இப்போதும் கூட ஓரளவு இருந்துகொண்டிருக்கிறது. இதேநிலை தான் நம்நாட்டிலும் முன்பு இருந்தது. அப்போதிருந்த சமுதாயத்திலே இந்தச் சாதியின் வேறுபாடுகள் இல்லை. வட நாட்டினராகவோ தென்னாட்டினராகவோ இருந்தாலும் ஒருவன் ஒருத்தியைப் பார்ப்பதும், இருவரும் காதல்கொள்வதும், காதல ராகிப் பின்னர்க் கணவன் மனைவியாவதும் சங்ககால வாழ்க்கையாக நடந்துகொண்டிருந்தது. அஃது உலகியல் வாழ்க்கை யோடு ஒத்திருந்தது. தொல்காப்பியம் மாத்திரம் அன்று—

உலக வாழ்க்கைக்கு வேண்டிய அறங்களைக் கூறியதோடு திருவள்ளுவப் பெருந்தகையாரும் களவு, கற்பு ஆகிய இரண்டு ஒழுக்கங்களும் வாழ்க்கை அமைவதற்கேற்ற நல்லொழுக்கங்கள் என்று கண்டு களவு ஒழுக்கத்திற்கு வேண்டிய அறங்களையும், கற்பு ஒழுக்கத்திற்கு வேண்டிய அறங்களையும் வகுத்துச் சொன்னார். இப்படிச் சங்ககால மக்கட்கு வாழ்க்கைத் துணைமைக்கு அடிப்படை உண்மையாக இருந்த அகப்பொருளுக்குத் தொல்காப்பியர் நெறி வகுத்துத் தந்ததை அறிந்து திருவள்ளுவப் பெருமானும் இலக்கணம் வகுத்திருக்கிறார். ஆகவே திருவள்ளுவர் அப்போது அந்த ஒழுக்கத்தை மேற்கொண்டாரோ அது அப்போதிருந்த இல்வாழ்க்கைக்கு ஒத்ததாக இருந்தமை நன்றாக விளங்கிவிடுகிறது. கற்பனைக் கதைசொல்ல வந்தவர் அல்லர் திருவள்ளுவர். வேறு சிறு கதை எழுத வந்தவரும் அல்லர். மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத கருத்துக்களை எடுத்துரைக்க வந்த பெருமானாராதலின், ஒருவனும் ஒருத்தியும் கணவன் மனைவியராக இருக்கின்ற நிலையை எடுத்துக் காட்டுகிறார். அறத்துப் பாலில் நுழையும்போதே — பாயிரம் ஆகிய நான்கு கதவுகளைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தால் இல்வாழ்க்கையைத் தான் நாம் அங்கே காண்கிறோம். ஞானியார் சுவாமிகள் கூடச் சிறு குழந்தைகளுக்கு இதைச் சொல்லிக் கொடுக்கக் கூடாது, ஒருவனும் ஒருத்தியும் திருமணம் செய்து கொள்கிற நிலையில் உள்ளவர்களுக்கே சொல்லிக்கொடுக்க வேண்டும் என்று வேடிக்கையாகச் சொன்னார்கள். அந்த முறையில் எடுத்த எடுப்பில் இல்வாழ்க்கையில் தொடங்குவதைக் காண்கிறோம்.

இல்வாழ்க்கை என்கிறபோது ஒருவனும் ஒருத்தியும், கணவனும் மனைவியுமாக இருக்கிறார்கள். அவ்விருவரையும் ஒருவருக்கொருவர் வாழ்க்கைத்துணை என்கிறார்.

இவன் எங்கே பிறந்தான்? இவனுடைய வாழ்க்கைத் துணைவியாகிய பெண் எங்கே பிறந்தாள்? எப்படி ஒருவரையொருவர் சந்தித்துக்கொண்டார்கள்? காதலர்கள் ஆனார்கள்? கணவன் மனைவியானார்கள் என்கிற கேள்விகளுக்கு எல்லாம் விடை சொல்கிறது காமத்துப்பால்.

இதை எண்ணாமல் பெரியவர்கள் சிலர்கூடத் திருவள்ளுவர் காமத்துப்பால் பாடிக் கீழ்நிலை யடைந்துவிட்டார் என்று தீய பிரசாரம் செய்தது உண்டு. அதற்கு, பிறகு விளக்கம் கேட்ட போது திரு. வினோபா பாவே அவர்கள் எமக்கு அப்படிச் சொல்லிக்கொடுத்தார்கள் என்று சொன்னார்.

எதற்காகச் சொல்கிறேன் என்ருல் திருவள்ளுவர் பெருமான் அறத்துப்பாலில் சொன்ன இல்வாழ்க்கைக்கு உரியரான ஆணும், பெண்ணும் எப்படிக் கணவன் மனைவியானர்கள் என்பதைக் காமத்துப்பாலில் விரிவாகச் சொல்கிருர். எனவே சங்ககாலத்திலே சொல்லப்படுகிற வாழ்க்கைக்குரிய அகப்பொருள் சங்க காலத்தோடன்றித் திருவள்ளுவப் பெருந்தகையார் காலத்தில் தொடர்ந்து இருந்திருக்கிறது. வாழ்க்கை அடிப்படையில் இருந்த அகப்பொருள் அது.

பிறகு என்ன ஆயிற்று? காலம் மாறிவிட்டது. சாதி இன வேறுபாடுகள் தோன்றின. அப்போது ஒருவனும் ஒருத்தியும் தாமே தம்மில் காதல்கொண்டு திருமணம் செய்துகொள்ளக்கூடிய நிலை மாறத் தலைப்பட்டது.

"குரவர்தாம் இயைந்து கொடுத்தில ராயின்
குமரவேள் அனையவ ரெனினும்
அருவரா நிற்பர் தந்தைதாய் தங்கள்
ஆணையி னெழுகுகன் னியர்தாம்
உருவிலா ரெனினும் குரவருள் மகிழ்ந்து
உதவுறின் அனையவர் தம்மைப்
பரவுவான் கடவு ளாகவே மதித்துப்
பண்பொடும் பயிலுவ ரன்றே".

என்று சொல்கின்ற முறையிலே அந்தக் காலம் வந்துவிட்டது. ஆகவே கோவையார் தோன்றிய காலத்தில் சங்ககால அகப்பொருள் நிலை மாறிவிட்டமையும், ஆயிரம் ஆண்டுகள் இடையில் கழிந்துவிட்டமையும், சமுதாயத்திலே பல வேறுபாடுகள் தோன்றிவிட்டன என்பதையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

இந்த முறையிலே திருக்கோவையாரில் சொல்லப்படுகிற அகப்பொருள் உண்மைப் பொருள் அன்று என்பதை நன்ருக நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். ஒருவனும் ஒருத்தியுமாக வெவ்வேறு இடங்களில் பிறந்து, வளர்ந்து, காதல்கொண்டு கணவன் மனைவியாகிய சங்ககால அகப்பொருள் நெறியை உண்மைக்கு மாருய இல்பொருளாக – வெறும் கற்பனையாகப் பிற்காலத்தார் ஆக்கிவிட்டார்கள். ஆகவே இப்போது கோவையாரில் வருகிற அகப்பொருள் வெறுங் கற்பனை என்பதை நாம் நினைவில் நிறுத்துதல் வேண்டும்.

தொல்காப்பியத்தில் கூறப்பட்ட சில கருத்துக்கள் இறையனூர் அகப்பொருளில் காணப்படுகின்றன. இறையனூர் அகப்பொருளோடு நோக்கினுல் திருக்கோவையார் ஒழுங்காக அமைந்திருப்பதைக் காணலாம். இறையனூர் அகப்பொருளின் இலக்கண மரபுக்கு இது ஒத்து வருகிறது. இதனை இறையனூர் அகப்பொருளிலே காண்கிருேம்.

இடைக்காலத்தில் அழிவுற்ற தென்னுடு நன்னுடாகிய போது அரசன் நூல் வல்லாரைக் கொணர்க என்று ஆட்போக்க, எழுத்து, சொல், யாப்புக் கற்றவர்கள் கிடைத்தார்களே யன்றிப் பொருளதிகாரம் வல்லார் காணப்படவில்லை. அரசன் புடைபடக் கவன்று "என்னை, எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமே யெனின் இவை பெற்றும் பெற்றிலேம்" என வருந்தினுன் என்பதைப் பார்க்கிருேம். தொல்காப்பிய அகப் பொருள் இலக்கணம் மறைந்து விட்டதன் காரணமாகவே இறையனூர் அகப்பொருள் தோன்றியது என்பதைப் பார்க்கிருேம், அண்மையில் கால்ட்வெல் அவர்கள் தொல்காப்பியம் கிடைக்காமையினுல் நன்னூலை அடிப்படையாக வைத்து ஒப்பியல் மொழி இலக்கணம் எழுதினுர் என்பதை நாம் அறிவோம். இந்த வகையில் தான் இறையனூர் அகப்பொருள் தோன்றிய காலத்தில் தொல்காப்பியத்தின் மாண்பு சுருங்கியிருந்தது; பலருக்குத் தெரியாமலேயே இருந்தது என்ற உண்மை புலனுகிறது.

தொல்காப்பியர் காட்டிய அகப்பொருள் நெறி மறையத் தலைப்பட்டது; பின்னர்க் கற்பனை மிகுதியாகப் புகுந்தது. காதல் ஒழுக்கம், அகப்பொருள் ஒழுக்கம் — என்பது புலவர்களது கற்பனைக்குள்ளே ஒடுங்கி விட்டது. ஆகவே திருக்கோவையாரில் வருகிற இந்த அகப்பொருள் புலவர்களது இல்லதும் உள்ளது மாகிய புனைந்துரையாகும். நாட்டிலே இருந்த சில அடிப்படைக் கருத்துக்களை வைத்துக்கொண்டு இந்தத் திருக்கோவையார் எழுந்துள்ளது என்பதை மட்டும்—என்னுடைய அகப்பொருள் நோக்கத்திற்கு முன்னுரையாக நான் சொல்ல விரும்புகிறேன்.

இனி திருக்கோவையார் எழுதிய மணிவாசகப் பெருமான் உள்ளத்தை நோக்கினுல், அந்த நானூறு பாடல்களையும் பிடித்துக்கொண்டு உலுக்கினுல் இருநூறு, இருநூற்றைம்பது சங்கநூல் பாடல்களின் கருத்துக் கிடைக்கும். காரணம் என்ன வென்ருல் கோவையார் பாடிய பெருமகன் இந்தச் சங்க நூல்கள் அனைத்தையும் எழுத்தெண்ணி நன்ருகப் படித்திருக்கிருன்

என்பது தெரியும். அது எனக்கு எப்படித் தெரியும் என்று கேட்டால் பல ஆண்டுகளாகச் சங்க நூல்களிலேயே நான் ஈடுபட்டவன். அதனாலே கோவையாரைப் படிக்கிறபோதே இன்ன இன்னவை சங்க நூல் பாடல் என்பது நன்றாகத் தெரிகிறது.

இரண்டாவதாகத் திருக்கோவையாரில் கற்பனை புகுந்து விட்டதனாலே பார்க்கின்றவர்கள் எல்லாம் பல நோக்கங்களுடன் பார்க்கத் தலைப்பட்டார்கள். உண்மை நிகழ்ச்சியாக இருந்தால் பல பொருளுக்கு இடம் தாராது. இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். உள்ளதும், இல்லதும் எடுத்துச்சொல்கிற போதுதான் பல கருத்துக்களுக்கு இடம் உண்டாகிறது.

ஜெர்மன் நாட்டு அறிஞர் ஷோபன் ஹோர், வெறும் மெய்யையே சொன்னால் மக்களுக்கு ஏராது. உள்ளதை மட்டும் எடுத்துச் சொல்வது உலகுக்குப் பயன் தாராது. அத்துடன் கொஞ்சம் இல்லதும் கலந்து சொன்னால் கேட்கிற உள்ளத்திற்கு இன்பம் அளிக்கும்'' என்றார். அதற்கு அவர் ஓர் உதாரணமும் காட்டுகிறார். நாம் உயிரோடு இருப்பதற்கு உயிர்க்காற்று தேவை. அதற்காகத் தூய நிலை யுயிர்க்காற்றை யுட்கொண்டால் மனிதன் இறந்துவிடுவான். ஆகவேதான் உட்கொள்ளுகிற உயிர்க் காற்றிலே வேறு பல காற்றுகளும் கலந்திருக்கின்றன. பல காற்றுகள் கலந்திருப்பதனால் தான் நாம் உயிர்வாழ முடிகிறது என்றார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். ஆகவே இல்லதைப் புனைந்து சொல்ல வேண்டியிருக்கிறது. இப்போதோ புனைந்துரை இல்லாத நூல் நல்லநூல் அன்று என்றே சொல்லும் நிலைமைக்கு எழுத்தியல் வந்து சேர்ந்துவிட்டது. நம் நாட்டில், கற்பனைமிக்க புராண இதிகாசங்கள் செல்வாக்குற்றமை நாட்டவரின் அரசியல் உண்மை வரலாறு அறவே மறைந் தமைக்குக் காரணம். கற்றவரிடையேயும் ஐரோப்பியர்க்கு முன் நம் நாட்டையாண்டவரின் அரசியல் வரலாறு தெரிந்தவர் இல்லை.

ஆகவே திருக்கோவையாரின் ஆசிரியர் இல்லதும் உள்ளது மாகிய கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு இந்த நூலை எழுதுகிறார். நான் முன்பே சொன்னேன். உண்மையான நூல் என்றால் ஒரே பொருள்தான் சொல்லமுடியும். இல்லது கலந்து விடுவதனால் பல பொருளைச் சொல்கிறோம். ஆகவேதான் திருக் கோவையாரைப்பற்றி ஒரு பாடல்,

“ ஆரணம் காண் என்பர் அந்தணர் ; யோகியர்
ஆகமத்தின்
காரணம் காண் என்பர் ; காமுகர் காமநல்
நூலதென்பர் ;
ஏரணம் காண் என்பர் எண்ணர் ; எழுத்தென்பர்
இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச்
செப்பிடினே ”

என வருகிறது. இதிலிருந்து இக்கோவையார் கருத்தைப் பல பேர்கள் பல்வேறு வகையில் சொல்கிருர்கள் என்பதை நாம் சிந்தனையில் வைத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். காரணம் என்ன? இல்லதும், உள்ளதும் கலந்த கற்பனைப் பொருளாதலின் அவரவர்கள் அவரவர்களின் நிலையில் இருந்து பொருள் காண முடிகிறது என்று முன்னமே சொன்னேன்.

ஒன்றுக்கு விளக்கம் அளிக்கவந்தால் திட்டவட்டமாகச் சொல்லவேண்டும். திருக்கோவையாரை எடுத்துக்கொண்டால் இன்ன வகையில் சமய நூல், இன்ன வகையில் ஆகம நூல், இன்ன வகையில் இது தத்துவ நூல், என்றெல்லாம் அதன் அமைப்புக்களை எடுத்துக்காட்டினுலொழிய நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. கற்பனை கலந்த நூல்களுக்கெல்லாம் இப்படித் தான் பலர் பல்வேறு கோணங்களில் இருந்து பொருள் சொல்வதைப் பார்க்கிறோம்.

அடுத்து, திருக்கோவையார் பாடிய ஆசிரியர் சங்க நூலுள் மூழ்கி எழுந்தவர் என்பதைக் குறிப்பாகச் சொன்னேன். அவர் பாடிய பாட்டே வருகிறது. ஆடவன் ஒருவன் ஒரு சோலைக்குள் நுழைகிருன். ஒரு பெண்ணைப் பார்க்கிருன். அவள் போனவுடன் ஏமாந்து திரும்பி வருகிருன். அவனை அவனுடைய நண்பன் பார்த்து ஏன் உன் முகம் வாட்டமாக இருக்கிறது என்று கேட்கிருன்.

அந்தக் காலத்தில், திருக்கோவையார் ஆசிரியர் இருக்கிருரே அவர் வாழ்ந்த காலத்தில், இருந்த இளைஞர்களுடைய உள்ளம் பண்பட்ட உள்ளம். ஆகவே அந்த இளைஞன் தன்னுடைய நண்பன் முகத்தில் காணப்படுகிற சோர்வுக்கு, மயக்கத்திற்குக் காரணம் எதுவாக இருக்கும் என்று கேட்கிருன்.

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின்
ஆய்ந்த வொண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி
யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கு என்கொ
லாய்புகுந் தெய்தியதே".

என்பது அவன் கேட்பது; உன் முகத்தில் மெலிவு தட்டுகிறது. சோர்வு தோன்றுகிறது. அதற்குக் காரணம் உன் போன்றவர் களுக்கு இரண்டு உண்டு. ஒன்று – சங்கத் தொகைநூல்கள் உளவே! அவற்றின் அகப்பொருள் துறையிலே நுழைந்து நுட்பத்தைக் காணவேண்டுமென்ற வேட்கையிலே ஆராய்ந்து கொண்டே போனாயோ?

"உயர்மதிற் கூடலின்
ஆய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ?"

அல்லது இசை பாடுகிறவர்கள் அப்படி இப்படி ஆலாபனை பண்ணுகிறார்களே, அப்படி மேலும் கீழும் சஞ்சாரம் செய்து பாடக் கேட்பதில் ஏற்படுகிற தாபமோ என்று வினவுகிறான். ஆடுகிற மனத்தை, ஓடுகிற மனத்தை, சுழல்கின்ற மனத்தை இப்படி மேன்மேலும் பலபல நிலைகளில் சுழற்றினால் அது ஓய்ந்து போகிற நிலையில் ஒருமை ஏற்படும் என்பார்கள். மென்மையான அந்த ஏழிசையின் சூழலில் நீ சிக்கித் தவித்ததனால் இந்தச் சோர்வு ஏற்பட்டதோ?

"ஏழிசைச் சூழல் புக்கோ"

என்கிறான். உனக்குத் தளர்ச்சி எதனால் ஏற்பட்டது? என்று கேட்கிறான். கேட்கிற அந்தக் கேள்வியிலேயே ஒரு நயம் பாருங்கள்! ஆய்ந்த ஒண் தீந் தமிழின் துறைக்கு முதன்மை தந்து ஏழிசைச் சூழலுக்கு முன்னே வைத்துச் சொல்கிறார். ஏழிசையைக் கேட்டலிலும் அகத்துறைக்குள் புகுந்து அறிவு வேலை செய்யத் தலைப்பட்டால் சோர்வு வந்துவிடும் என்பதைக் காட்டுகிறார். கூடலில் ஆய்ந்த ஒண் டீந்தமிழ் என்கிறபோது தமிழ்த்துறை மதுரையில் ஆயப்பட்டது என்பது ஒன்று. சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான் என்கிறபோது

இறைவனே வந்து அகப்பொருள் ஆய்ந்துகொடுத்தான் என்பது விளங்குகிறது அன்றோ? சங்க இலக்கியத்திலே இந்த ஆசிரியருக்கு எவ்வளவு ஈடுபாடு இருந்திருத்தல் வேண்டும்?

அடுத்து அகநானூற்றில் ஒரு பாட்டு. இதிலே வேடிக்கை ஆன கருத்து வருகிறது. ஓர் ஆணும், ஓர் பெண்ணும் இருக்கிறார்கள். தலைவன், தலைவி என்று சொல்வார்கள் இரண்டு பேரையும். தலைவன் என்கிறபோது தலைமைக் குணங்கள் நிரம்பியவனைத்தான் தலைவன் என்று சொல்வது அது போலவே தலைமைக் குணங்கள் நிரம்பியவளைத்தான் தலைவி என்று சொல்வது. மக்கள் குணம், குற்றம் ஆகிய இரண்டும் உடையவர்கள். தலைவன் குணமே வடிவானவன். உலகியலைத் தலைமை தாங்கி நடத்தும் தக்கோனவன்.

தலைவன் ஒருத்தியைப் பார்க்கிறான். தன்னுடைய கருத்தை அவளிடம் நேர்முகமாகச் சொல்வதற்கு வழியில்லை. அவளுடைய தோழியிடத்தில் சென்று தன் கருத்தைத் தலைவிக்குத் தெரிவிப்பாயாக என்கிறான். அவள் போய்த் தலைவியினிடத்தில் இவன் கருத்தைச் சொல்ல வருகிறாள்.

அம்மா, ஒரு கதை. நீ பார்த்தால் சங்கடப்பட்டு விடுவாய். உயிரோடு வாழக்கூட மாட்டாய். அவன் அந்தக் குளத்தங் கரையில் நின்றிருந்தான். ஒரு நாவல் பழம் மரத்திலிருந்து விழுந்தது. ஓர் ஆண் நண்டு மெள்ள அதனிடத்தில் வந்து, அதைக் கவ்விக்கொண்டு போய்த் தன் பெண் நண்டினிடத்திலே கொடுத்தது. அதைப் பார்த்தானோ இல்லையோ—தான் அப்படிக் கொண்டுபோய்க் கொடுக்கத் தனக்கு ஒரு துணைவி இல்லையே என்று நினைந்தானோ என்னவோ; பேய்க் கோட்பட்டவன் போன்று மயங்கி விழுந்து விட்டான் என்பாளாய்,

“ நீகண் டனையெனின் வாழலை நேரிழை யம்பலத்தான்
சேய்கண் டனையன்சென் றாங்கோ ரலவன்றன் சீர்ப்பெடையின்
வாய்வண் டனையதோர் நாவற் கனிநனி நல்கக்கண்டு
பேய்கண் டனையதொன் றாகிநின் றானப் பெருந்தகையே”

என்று கூறுகிறாள் எனப் பாட்டு உரைக்கின்றது. அம்பலத்தானைச் சுட்டி, அவன் சேய் ஆகிய முருகனைப்போல இருக்கிறான் என்கிறாள், அழகொழுக. அப்போது தான் ஓர் அலவன் தன் பெட்டை நண்டின் வாயில் கொண்டு போய் ஒரு நாவற் கனியைக்

கொடுக்கிறது. அதற்கு அமைந்திருக்கிற இல்வாழ்க்கைபோலத் தனக்கு அமையவில்லையே என்று நினைக்கிறான். அப்படியே ஏமாந்து நின்று போனான் என்கிறாள்.

இதே கருத்து அகநானூற்றுப் பாடலிலே,

“ அகல்இலை நாவல் உண்டுறை உதிர்த்த
கனி கவின் சிதைய வாங்கிக் கொண்டுதன்
தாழை வேர் அளை, வீழ் துணைக்கு இடூஉம்
அலவற் காட்டி ‘ நற்பாற்று இது ’ என
நினைந்த நெஞ்சமொடு, நெடிதுபெயர்ந் தோனே—”

என்பதாக வருகிறது. களவுக் காதலராகிய இருவரிடையே கடிமணம் நிகழ்தற்கு முன் கடமை காரணமாகக் காதலன் காதலியின் நீங்கிச் செல்ல வேண்டியவனானான். பிரிந்த காதலன் விரைந்து மீளாமையால் காதலி மனநோய்மிக்கு ஆற்றாளாயினாள். அவளுடைய வருத்தம் கண்ட தோழி, கடமை யாற்றப் பிரிந்தமை கருதி வருந்துவது காதலன்புடைய உனக்குப் பொருந்தாது என்று ஆற்றுவிக்கின்றாள். அவளுக்கு விடை கூறும் காதற்றலைமகள், குன்ற நாடனாகிய காதலனது கேண்மையை மறந்து ஆற்றியிருக்க வல்லவர்க்கு எப்போதும் மிகவும் இனிதாம், ஆற்றியிருக்க மாட்டாத எனக்கு வேதனை தருகிறது என்ற கருத்தில்,

“ குன்றநாடன் கேண்மை என்றும்
நன்றுமன் வாழி தோழி உண்கண்
நீரோடு ஒராங்குத் தணப்ப
உள்ளாது ஆற்றல் வல்லு வோர்க்கே.”

என்று சொல்லுவதாகக் குறுந்தொகையில் பாட்டொன்று காணப் படுகிறது. இங்கே காதலன் பிரிவால் தனது தனிமையும் தன் மெலிவு காண்பவர் தம்முள் அலர் கூறி நகைப்பதும் தன் ஆற்றாமைக்குக் காரணம் என்பதை இயற்கை நிகழ்ச்சியொன்றைக் கூறுமுகத்தால் குறிப்பாய் உரைக்கின்றாள். குன்றின்கண் ஒருபால் மயில் இட்ட முட்டைகளில் ஒன்று தனித்துப் பாறை மேல் கிடக்க, அதனைக் கருங்குரங்கின் குட்டி உருட்டி விளையாடுகிறது என்பாளாய்,

“ கான மஞ்ஞை அறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்
குன்ற நாடன் கேண்மை ”

என்று மொழிகின்ருள். இப்பாட்டிற் காணப்படும் வெளிப்படை மொழியையும் குறிப்புரையையும் கண்ட திருவாதவூரடிகள் தமது திருக்கோவையாரில்,

" வந்தாய் பவரை யில்லா மயில்முட்டை
இளையமந்தி
பந்தா டிரும்பொழில் பல்வரை நாடன்
பண்போ இனிதே
கொந்தார் நறுங்கொன்றைக் கூத்தன்தென் தில்லை
தொழார்குழுப்போல்
சிந்தா குலமுற்றுப் பற்றின்றி நையும்
திருவினர்க்கே.

என அப்படியே வைத்துப் பாடுகின்ருர். வெயில்காயும் கருங் குரங்கின் குட்டி 'உருட்டும்' என்று குறுந்தொகை கூறுவதை 'மயில் முட்டை இளைய மந்தி பந்தாடும்' என்றும், காதலன் பிரிவைக் 'குன்ற நாடன் கேண்மை' என்று குறுந்தொகை குறிப்பதைத் திருக்கோவையார், 'பல்வரை நாடன் பண்பு' என்றும், 'உள்ளாது ஆற்றல் வல்லுவோர்க்கு நன்றுமன்' என்ற குறுந்தொகையை, 'சிந்தா குலமுற்றுப் பற்றின்றிநையும் திருவினர்க்கு எளிது' என்றும் மாற்றியிருப்பதுதான் வேறுபாடு. இப்படிச் சங்க இலக்கியத்திற்கும் திருக்கோவையாருக்கும் உள்ள தொடர்பைப் பலவிடங்களில் காட்டலாம். இதுபோலக் கருத்து மட்டுமன்று, சொற்களையும் சொற்ருெடர்களையும் பின்னே வருகிற நூல்களின் ஆசிரியர்கள் எடுத்துக்கொள்வது வழக்கம் தான். அதேமுறையில் இங்கே சொல்கிருர்.

அகப்பொருள் கருத்துக்களைத் தொல்காப்பியத்தில் இருந்தும், சங்க இலக்கியங்களிலிருந்தும் வாங்கிக்கொண்ட தோடு தாம் பாடுவதற்கு இலக்கணமாக இறையனுர் அகப் பொருளைக் கொண்டு திருக்கோவையாரை அழகுபெற அமைத் திருக்கிருர், வாதவூரடிகள்.

இவற்றின் ஒற்றுமை வேற்றுமை நயங்களையும் பொருள் நலங்களையும் விரியக் கூறுவதாயின் எனக்குப் பின்தொடரும் நிகழ்ச்சிகள் போதிய காலம் பெருது இடர்ப்படுமாதலால் இம்மட்டில் எனது உரையை நிறுத்துகின்றேன். இந்த அளவில் ஒருசில கருத்துக்களை இவ்விடத்து வழங்கும் வாய்ப்பினை அளித்ததற்கு எல்லோருக்கும் என்மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோவையார் — மெய்ப்பொருள் நோக்கு

★

(வ. ஆ. தேவசேனாபதி)

★

பன்னிரு திருமுறைகளுள் எட்டாவதைச் சேர்ந்த திருக்கோவையார் பேரின்பச்சார்பான நூல்; அகப்பொருள் துறையில் பாடப்பெற்றது. உரையாலும் உணர்வாலும் அளவிட்டுக் கூற முடியாத பேரின்பத்தை, அநுபூதியை – மெய்ப்பொருள் நோக்கால் வரையறை செய்து காண முடியுமா?

மெய்ப்பொருள் அண்மைக்காலம் வரையில்மேல்நாட்டில் முப்பிரிவுகளில் வளர்ந்து வந்தது. இப்பிரிவுகள் முழுமுதற்கொள்கை (Absolutism), கடவுட்கொள்கை (Theism), மக்கண்மைக் கொள்கை (Humanism) எனப்பெறும். தற்காலத்தில் இருப்புநிலைக் கொள்கை (Existentialism) மொழிவழிப் பகுப்பியல் (linguistic analysis) என்பவை பெருவழக்கில் உள்ளன. மேலைநாட்டு முழுமுதற்கொள்கையை ஒத்துளது சங்கரரின் அத்வைதம்; கடவுட்கொள்கையைப் போன்றது சைவசித்தாந்தம். (விசிஷ்டாத்வைதத்தையும் சேர்த்துக்கொள்ளலாம்). மனிதனுக்கு அப்பாற்பட்டதாக முழுமுதல் அல்லது கடவுள் என எதையும் ஏற்காத மக்கண்மைக் கொள்கையில் அநுபூதிக்கு இடமில்லை. இயற்கை பற்றிய அநுபூதி நிலையும் (Nature mysticism) இக்கொள்கையில் இடம்பெற முடியாது. எனவே முழுமுதற்கொள்கை, கடவுட்கொள்கையாகியவற்றில் பேரின்பம் எவ்வாறு கருதப்பெறுகின்றது என்பதைப் பார்ப்போம்.

இருவர் ஒன்றுசேரும்போதுதான் இன்பம் பிறக்கிறது. ஒருவரே உள்ள இடத்தில் இன்பம் இல்லையென்பது கடவுட்கொள்கை. இறைவனும் உயிரும் சேரும்போது உண்டாகிற இன்பமே பேரின்பம். இறைவன் மட்டுமோ உயிர் மட்டுமோ

இருப்பதனால் அங்கே புணர்ச்சியால் உண்டாகும் இன்பம் எழாது என்று கடவுட்கொள்கையினர் கருதுகின்றனர். முழுமுதற் கொள்கையினர் இதனை மறுத்து இருவர் – அல்லது இருமை உள்ளவரை நிறைவு அல்லது முழுமை கிடையாது இருமையைக் கடந்த நிலையே நிறைவான இன்ப நிலை. ஆற்று நீர் கடல் நீருடன் கலந்து விட்டால் பிரித்தறிய முடியாதது போல உயிர் இறைவனுடன் ஒன்றிவிட்டால் உயிர் எனவும் இறைவன் எனவும் பேசுவதற்கில்லை. முடிவான உண்மை உள்பொருள் ஒன்றே என்பதுதான். அவ்வொன்றினை ஒன்று எனவும் கணக்கிடுவதற் கில்லை. அப்பொருளே இயல்உண்மை அறிவு இன்பமாய் (சச்சிதானந்தமாய்) நிலைத்திருப்பது. எனவே அநுபூதி அல்லது பேரின்பத்தின் முடிந்த நிலை இந்த ஒன்றே நான் என உணர்ந் திருப்பது. கலத்தல், புணர்ச்சி என்றெல்லாம் பேசுவது முழு உண்மையை உணர்வதற்கு உதவியாகத்தான். முழு உண்மையை உணர்ந்தால் கலத்தற்கோ, புணர்ச்சிக்கோ இருபொருளில்லை என்பது தெளிவாகும் என்பர்.

அநுபூதி அல்லது பேரின்ப நுகர்ச்சியை வரையறுத்துத் திட்டமாக அமைப்பது முறையாகாது. ஆனால் இவ்வாறு அமைப்பதும் தவிர்க்கமுடியாததாகிறது. எனவே அவரவர் தத்தம் கருத்துக்களுக்கேற்ப அதனை விளக்குவதையும் வரவேற்கலாம். இக் கருத்தரங்கு நடைபெறும் திருவிடைமருதூர் பற்றிய திருப்புகழில் பின்வருமாறு காண்கிறோம் :

“ இருவினையு மலமுமற இறவியொடு பிறவியற
ஏகபோகமாய் நீயும் நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையருள் இடைமருதில்
ஏகநாயகா லோகநாயகா—இமையவர் பெருமாளே.”

இங்கே ‘ஏகபோகமாய், நீயும் நானுமாய்’ என வரும் சொற்களை, ‘நீயும் நானும் ஏகம் என்பதே போகம்’ எனப் பொருள் கொள்வது முழுமுதற் கொள்கைக்கு ஒத்தது. ‘நீயுமாய் நானுமாய் (இருப்பு நிலையில் தனித்தே இருக்க) ஏகபோகமாய் (புணர்ச்சி வகையில் பிரியாதிருக்க – பிரிந்தால் இருப்புக்கே கேடு என்றிருக்க)’ – எனப் பொருள்கொள்வது கடவுட்கொள்கைக்கு உகந்தது. இவ்வாறே சுவாமிமலைத் திருப்புகழில்,

“ நீவே றெனாதிருக்க நான்வே றெனாதிருக்க
நேராக வாழ்வதற்கு உன் அருள்கூர ”

என வரும் சொற்களை இருவகையிலும் பொருள் கொள்ளலாம். 'வேறு என்பதே இல்லாமல், நீ, நான் என இரண்டு இல்லாமல் இருப்பதே நேரான வாழ்வு' – இது முழுமுதற் கொள்கை. 'நீ இருக்க, நான் இருக்க – ஆனால் வேறு என்னுமல் இருப்பதே நேரான வாழ்வு. இதற்கு நீ அருள்செய்ய வேண்டும்' – இது கடவுட் கொள்கை அருளைத் தருபவன், அருளைப் பெறுபவன் – 'அருளும் சித்து, அருளிற்படியும் சித்து' – என இருப்பு நிலை வேற்றுமை, புணர்ச்சி நிலை வேறின்மை கொள்ளப்படுகிறது.

அருள்பெறுவதற்கு முந்திய நிலைகள் இருளும் மருளும். (இறைவனருளால் 'இருளும் மருளும் மாய்ந்தோமே என்பார் நம்மாழ்வார்.) இருள், மருள் நிலைகளை இறையருளால் அகற்றி மலரும் மணமுமென இருப்பதைப் பின்வரும் திருப்புகழ் வரிகளில் காண்கின்றோம்.

இருவினை புனைந்து ஞானவழி முனைதிறந்து நோயி
 னிருவினையிடைந்து போக மலமூடே
இருளற விளங்கியாறு முகமொடு கலந்துபேத
 மிலையென இரண்டுபேரு மழகான
பரிமள சுகந்தவீத மயமென மகிழ்ந்து,

[இரண்டுபேரும் — அழகான; பரிமள சுகந்த வீதமயமென
 மகிழ்ந்து — திருப்புகழ்.
 நான் இவளாம் பொறப்பு சொற்பால் அமுதிவள்
 யான் சுவை — திருக்கோவையார்.
சொல்லிலும் கருத்திலும் இவை இணைந்து நிற்கின்றன]

"சொற்பாலமுதிவள்யான் சுவைஎனத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று நான்இவ ளாம்பகுதிப்
பொற்பா ரறிவார் புலியூர்ப் புனிதன் பொதியில்வெற்பில்
கற்பா வியவரை வாய்க்கடி தோட்ட களவகத்தே'

— திருக்கோவையார்

சுவைக்கும் அதனுடைய பொருளுக்கும் வேறுபாடில்லை· அங்ஙனே எனக்கும் இவளுக்கும் வேறுபாடில்லை. எனினும் புணர்ச்சியான் வரும் இன்பம் துய்த்தற்பொருட்டாக இன்று யானென்றும் இவள்என்றும் வேறுபாட்டோடு கூடிய அழகை யாரறிவார் இதனை யனுபவிக்கின்ற நானே அறியினல்லது.

இங்கே முழுமுதற் கொள்கையின்படி நான், இவள் (உயிர், இறைவன்) என்னும் பகுதி இல்லாத ஒன்று, புணர்ச்சிக்காக இருப்பது போலத் தோன்றுவது. கடவுட் கொள்கையின்படி நான் இவளாம் பொற்பே — அழகே, தனித்த இருவர், பிரிய ஒண்ணுதபடி கூடுவதால் ஏற்படுவது. ஏற்படுவது பகுதியன்று, அழகேயாம். இவ்வழகு வளர்வதொன்று. இதனை வற்புறுத்தும் வகையில் 'உணர்ந்தார்க்கு உணர்வரியோன்' என்னும் பிறிதொரு செய்யுளை நினைவு கொள்ளலாம். நுகரப்படும் பொருள் அகல நீளம் என்று அளவு கூறரும் பொருள். எனவே நுகர, நுகர— புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய் வளர்கின்றதே.'

முழு முதற்பொருளை எல்லையற்றது என்று சொல்லும்பொழுது அதனுடன் வேறொரு பொருள் உண்டென்பது அதற்கு எல்லை ஏற்படுத்துவதாகும் என்பது முழுமுதற் கொள்கை. ஆனல் எல்லையில்லாத ஒன்றனுக்கு எல்லையில்லதோர் அடிமை (அன்பு) பூண்டேன் என்பது கடவுட் கொள்கை.

இவ்வாறு மரபுவழி மெய்யுணர்வு நோக்கில் திருக்கோவை யாருக்கு இருவகையாகப் பொருள் கொள்ளலாம், இனி, இன்றைய மேல்நாட்டு மெய்யுணர்வு நோக்கில்—மொழிவழிப் பகுப்பியல்படி பார்த்தால், சமய இயல், அறஇயல், அடிப்படை மெய்யுணர்வியல் ஆயவற்றில் வரும் சொற்களும் சொற்றொடர் களும் பொருளற்றவை. கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் வரும் கூற்றுக்களே வெறும் அறிவு முறைப்படியோ செய்காட்சிப் படியோ சரிபார்க்கக் கூடியவை ஆதலின், பொருளுடையவை. சமய இயல் அடிப்படை மெய்ப்பொருளியல், அறஇயல். இவற்றில் வருபவை அறிவாலோ செய்காட்சியாலோ சரிபார்க்கக் கூடியவை யல்ல. 'நான் இவளாம் பொற்பு'—என்பது பொருளற்ற சொற் கோவை. உணர்ச்சிக்கு உகந்ததாக இருக்கலாம். அறிவுக்குப் புறம்பானது — என்பர் மொழிவழிப் பகுப்பியல் கொள்கையினர்.

கடவுட் கொள்கையில் சிறப்பு வகையில் சைவ சித்தாந்தக் கண்கொண்டு பார்ப்போர், திருக்கோவையாரில்வரும் நாயகி – பரம்பொருள் ; நாயகன் – பக்குவான்மா ; தோழி – திருவருள் ;

தோழன் – ஆன்மபோதம்; நற்றாய் – பரை; திரோதாயி – செவிலித்தாய் என்பர்.

அவரவருடைய மெய்யுணர்வுக் கொள்கைக்கு ஏற்பவும், நூலுணர்வோடு நுழைவும் வாய்ப்பதாயின் அந்நுழைவுக் கேற்பவும் திருக்கோவையாரைப் பலவகையாகப் படித்து இன்புறலாம்.

" நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. "

திருக்கோவையாரின் சிறப்பு நவிலவும் பயிலவும் படுமே !



திருக்கோவையாரும் திருவாசகமும்

★

வித்துவான் சு. சாமிஐயா, எம். ஒ. எல்.,
தமிழ் விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

★

"பெருந்துறையிற் சிவபெருமா னருளுதலும் பெருங்கருணைப்
பெற்றி நோக்கிக்
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத் துரியநிலை
கடந்து போந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல் வாய்மடுத்துத்
தேக்கிச் செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ ரடிகளடி யிணைகள்
போற்றி"

"மாசில் மணியின் மணிவார்த்தை பேசிப் பெருந்துறையே யென்று பிறப்பறுத்த" பெம்மான் உளங்கனிந்து உரைத்த நூல்கள் கோவை திருவாசகமாகும். எட்டாந் திருமுறையாக முறைப்படுத்தப்பெற்ற இவை, பயில்வார் உள்ளத்தைக் கனிவிக்க வல்லன. ஒருமுறை ஓதுவாரும் உள்ளம் நெக்குருகித் திருமுறையில் நாட்டங்கொளப் பெருமுறை வகுத்த பாக்களே திருவாசகமெனுந் தேனுகும். மற்று ஒருவாசகமாய்த் தித்திக்கும் தீந்தமிழாய், அகப்பொருள் எனும் அமிழ்து அளவியதாய்ப் பிறப்பறுக்கும் பெருமருந்தாய், அருமருந்தாய், வேட்டார் வேட்டவண்ணம் கோட்டமில் பொருள் தரும் கருவூலமாய், ஞானப் பனுவலாய் மிளிர்வது திருக்கோவையார் எனும் செந்தமிழ்ப் பனுவலாம். இத்தகு அருள் நூல்கள் இரண்டினையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற பெரும் பேற்றினுக்குத் திருவருளை இறைஞ்சுகின்றேன்.

அருள் நூல்கள் இரண்டினையும் ஒருவரே செய்தனரோ அல்லது இருவர் செய்தனரோ என்ற ஐயமும் அறிஞரிடை நிலவு

கின்றது. ஐயம் தோன்றக் காரணமாய செய்திகளை முதலில் காணுதல் வேண்டும்.

1) பேரின்பப் பொருள் உரைக்கும் பெருவார்த்தை பேசுகின்ற வாதவூராளியார் இத்தகு சிற்றின்பம் குறித்ததொரு நூலை யாத்தனரா ? என்ற ஐயமும்,

2) திருமுறை கண்ட புராணத்துள், "அருள் திருவாசகம் ஒன்று" என்ற குறிப்பும்,

3) "திருவாதவூரர் முறை ஒன்று" என வரும் திருத்தொண்டர் புராண வரலாற்றுக் குறிப்பும், இவ் ஐயத்திற்குக் காரணம் ஆகலாம்.

திருக்கோவையார் சிற்றின்பம் மட்டுமே குறித்ததொரு நூலன்று. பேரின்பப் பொருளும் அகழ்ந்து பார்ப்போர்க்குத் தோன்றும். யாக்கை நிலையாமையை, இளமை நில்லாமையை வைத்து விளக்குவது போன்று ; சிந்தையுமொழியும், சிற்றறிவுடை நம்மனோர்க்குச் செல்லா நிலைமைத்தாகிய பேரின்பப் பொருளை அடிகளார் சிற்றின்பத்தை வைத்து விளக்கியுள்ளார். இது ஞான நூல் என்பதனை உரையாசிரியர்கள் பலபடச் சுட்டி உள்ளனர். இதன் உரையாசிரியராகிய பேராசிரியர்,

"அறிவன் நூற் பொருளும் உலகநூல் வழக்கும்என
இருபொருளும் நுதலி யெடுத்துத் கொண்டனர்
ஆங்குஅவ் விரண்டனுள்,
ஆகமநூல் வழியின் நுதலிய ஞான
யோக நுண்பொருளை யுணர்த்துதற் கரிது"

எனக் கூறுகின்றார். இதனால், திருக்கோவையார் அறிவன் நூற் பொருள் உணர்த்தும் அரும் பெட்டகம் என்பது போதரும். இந் நூற்கு ஞானபரமான கொளு ஒன்று உண்மையும் இதனை வலியுறுத்துகின்றது. "திருக்கோவையார் உண்மை விளக்கம்" என்னும் நூல் ஒன்று திருவாவடுதுறை ஆதீனத்தின்கண் வெளிப்போந்துள்ளமையும் ஈண்டு நினைக்கத்தக்கது.

"பல்காற் பழகினுந் தெரியா வுளவேல்
தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்"

என்ற இலக்கணக் கொத்து நூலாசிரியர் சுவாமிநாத தேசிகர் வாக்கும் இதன் உட்கிடையை நன்கு புலப்படுத்துகின்றது.

"பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்
ஐந்திணை யுறுப்பில் நாற்பொருள் பயக்கும்
காமஞ் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருளெனக் காட்டிய ஒருபெருஞ் செல்வ"

என்ற செழுந்தமிழ்க் கவிஞராம் குமரகுருபர சுவாமிகளின் மும் மணிக்கோவைச் செய்யுளும் இக் கருத்தை அரண் செய்தலைக் காணலாம். எனவே, இக் காட்டுக்களால் திருக்கோவையார் காமம் ஒன்றே பொருளாகக் கொண்டது அன்று என்பது இனிது விளங்கும்.

"திருச்சதக முதலாகச் சிறந்ததமிழ் அறுநூறும்
விரித்தகலப் பொருட்கோவை விளங்கவொரு நானூறும்
உரைத்தனன்"

என்ற கடவுண் மாமுனிவர் கூற்றினுல் திருவாசகமும் திருக் கோவையாரும் அடிகளே செய்தனர் என்பது விளங்குகின்றது. இக் கருத்தினை அரண்செய்யும் பிற ஆசிரியர்தம் கருத்துக்களையும் காண்போம்.

"முழுதும்வளர் திருப்பணிசெய் திலகுதிரு வாசகமு
மொழிந்து பாரோர்
தொழுதுசிர மேற்கொண்டு துதிப்பநிறை கோவையார்த்
துறைகள் யாவும்
பழுதுபடா தெடுத்துரைத்த வாதவூ ரன்பர்பதம் பணிதல்
செய்வாம்"

என வடுகநாதரும்,

"முந்துதிரு வாசகமா மணிக்கு லத்தை மூதுலகோ
ரின்புறமா முகத்தாற் றூவி
யந்தமிலைந் திணைதழுவு கோவைநின்று மகமகிழ வரும்
பொருளு மவனுக் கீந்து
வந்துபெருந் துறைபுகுந்து மலைபுகாத வாதவூர்த் தமிழ்க்
கடலை வணங்கல் செய்வாம்"

எனப் பரஞ்சோதி முனிவரும்,

"சித்திரக் கோவை பாடித் தில்லையம் பலத்து வாவென்
றத்தன்வா னத்து ரைப்பப் போந்தருந் தமிழ்கள்பாடி"

எனப் பெரும்பற்றப் புலியூர் நம்பியும்,

" தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை
நானூறும் அமுதுூற மொழிந்தருளு நாயகனை "

எனச் சைவ எல்லப்ப நாவலரும்,

" சிற்றம் பலக்கோவைத் தேன்சொரியும் செம்மலை
மற்றொப் பிலாததிரு வாசகத்தின் வாரிதியைக்
கற்றைச் சடையான் கருத்துருக்குங் காதலனை "

எனக் கலிங்கப் புலவரும்,

" வருவா சகத்தின் முற்றுணர்ந் தோனைவண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவை கண்டேயு மற்றப்பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே "

என நம்பியாண்டார் நம்பிகளும்,

The Tiruvasagam and the Tirukkovaiyar are the two great works written by the Saint. Of these, the first by itself is counted as the 'Eighth Tirumurai'. The second is exclusively a poem on aham. But there need be no doubt about the authorship, for it is ascribed to him under the name 'Sivapaddiyar' by Nambi-Andar Nambi in his Koil tiruppanniyar-viruttam (St. 58).

என வையாபுரிப்பிள்ளை அவர்களும்,

"பொருணயந் தழுவிப் புனிதநல் வாக்கால்
திருக்கோவை யுள்ளிடுந் தேவரும் பரவத்
திருக்கோவை யாரினைச் செப்பின ரஃதை
யிருக்கினுஞ் சிறந்ததா ஏற்றெம் பெருமான்
திருக்கரங் கொண்டு தீட்டிய தன்றியும் "

எனத் தாண்டவராய சுவாமிகளும் கூறியுள்ள சான்றுகளால் கோவையாரை யாத்தவர் மணிவாசகப் பெருந்தகையே என்பது விளங்கும்.

"மன்புருவ நடுவாக மன்னுதவ முனிவோர் என்புருவாய் நின்று ஏமாக்க இன்புருவமாய எழில் வாதவூரர் பொருட்டு, எண்

சுமந்த சேவகன் போலெய்தியதும், மண்சுமந்து நின்றதும், மாறன் பிரம்படியால் புண் சுமந்து கொண்டதும்" ஆய நிகழ்ச்சிகளை நிகழ்த்திய இறைவன், "கடையூழி வருந்தனிமை கழிக்க வன்றே திருவாசகத்தில் ஒரு பிரதி". எழுதிக் கொண்டான்.

"பாய்பரியோன் தந்த பரமானந் தப்பயனைத்
துயதிரு வாய்மலராற் சொற்செய்து–மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய் தான்கண்டாய்
திருவாத வூராளுந் தேன்"

என்ற திருக்கடவூர் உய்யவந்த தேவனார் கூற்றினால், விடையோனே பரியோனாய் வந்து எலும்பூடு தேன்பாயக் கொடுத்த அருள் இன்பினைத் தம் வாய்மலரால் சொற்செய்து கொடுத்துத் திருவாச்கமெனும் ஒருவாசகமாய்ச் செய்தனர் என்பதாம்.

நான்கு அகவல் உள்ளிட்ட ஐம்பத்தொரு பதிகங்கள் அருமணிகளெனக் கோக்கப் பெற்றுள்ளன. அகவல் நான்கும் கொண்டு 656 திருப்பாடல்கள் என்போரும் 658 திருப்பாடல்கள் என்போரும் உளர்.

"அருட் பெறும்அச் சோவொன்பான் நாற்பத்தேழ் பதிகம்
அகவலுடன் பாட்டறு நூற் றைம்பத் தாறே"

எனவும்,

"அருட்பெறுமச் சோவொன்ப தைம்பத் தொன்றும் பதிகம்
அகவலொடு செய்யுள்அறு நூற்றைம்பத் தெட்டே"

எனவும், கூறுகின்ற தனியன்களால் இருவேறு கருத்துக்களும் ஆதரவு பெறுகின்றன. திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் தம் இலக்கிய வரலாற்றில் நான்கு அகவல்களும் 654 பாடல்களும் எனக் குறித்துள்ளார். ஆதலால் 658 என்ற தொகையினையே கொள்கிறார். பெரும்பாலான பதிப்புக்கள் 656 பாடல்களையே கொண்டுள்ளன. சில புராணங்கள் அறுநூறு என முழுத் தொகையினை மட்டுமே சுட்டியுள்ளன. முடிபாகக் கருதுமிடத்து 656 என்ற தொகையே கொள்ளுதல் ஏற்புடைத்தாம்.

திருவாசகத்தின் யாப்பமைதியை நோக்குங்கால் அது, கலிவெண்பாட்டு, நிலைமண்டில ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியம், வெண்பா, கலிநிலைத்துறை, ஆசிரிய விருத்தம், கொச்சகக்

கலி, கட்டளைக்கலித்துறை ஆய பல்வகைப் பாடல்களால் அமைந்துளது மெய்யுணர்தல் 10 திருப்பாடல்கள், நீத்தல் விண்ணப்பம் 50 பாடல்கள், திருப்பாண்டிப் பதிகம் 10 பாடல்கள் கட்டளைக் கலித்துறையால் அமைந்துள்ளன. திருக்கோவையார் 400-ம் கட்டளைக் கலித்துறையால் அமைந்த நூலாகும். திருவாசகம் திருக்கோவை ஆய இரு பெருநூல்களில் பாடல்தொகை ஆயிரத்து ஐம்பத்தாருகும். இவற்றுள் நானூற்று எழுபது பாடல்கள் கட்டளைக் கலித்துறையாக அமைந்தவை. ஏறத்தாழப் பாதி அளவுக்குக் கட்டளைக் கலித்துறை இடம் பெறுவதை நோக்கும்பொழுது இப்பாடலில் அடிகட்கு ஈடுபாடு மிகுதியாக இருக்கலாமோ என எண்ணத் தோன்றுகின்றது.

கோவை என்பது பிற்காலத்து எழுந்த அகத்துறை நூலாகும். தனிநிலையிற் பாடப்பெற்ற நிலை சங்ககாலத்துடன் முடிந்தது. "கோவை என்பது சங்க இலக்கியங்களின் பாவை எனவும், கோவை என்பது சங்க இலக்கியம் என்னும் பெரிய மாளிகையைக் கண்டு படியெடுத்த ஒரு வரைபடமாகும், அம்மாளிகைக்குள் செல்லப்பயன்படும் வழிகாட்டியாகும்; இலக்கியம் தோற்றிய இலக்கியமாகும்" என்பர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள். கோவை நூல்கள் கற்றுக் கைவந்தவர்கள் சங்க அகப்பாடல்களை எளிதில் சுவைத்து இன்புறுதல் கூடும். அவ்வழகிய ஒப்புமையை முன்னர்ப் பேசிய ஔவை சு. அவர்கள் எடுத்தியம்பிய அழகினைச் சுவைத்து இன்புற்ளும். "துயில் எடைநிலை" பள்ளி எழுச்சிக்கு வித்தானுற்போல, "ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப" என்ற பாடாண் பாட்டின் கூறு உலாவிற்கு முதலானுற்போல, கோவைகள் தோன்றுதற்கும் சங்க இலக்கியங்களே தூண்டுகோலாக அமைந்தன.

400 பாடல்களுக்கும் 25 கிளவிக் கொத்துகள் காட்டப்படுகின்றன.

திருவாசகம் எனும் தேனினையும், தேனூறு செஞ்சொல் திருக்கோவை என்கின்ற நானூற்றினையும் ஒப்பிட்டுப் பார்ப்பதில் சுவை இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஒருவரேயாத்தார் என்பதற்குரிய அகச் சான்றுகளும் கிடைக்காமற்போகா.

ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதாகிய திருவாசகம் அருட்பாடல்களை அள்ளித் தெளித்தது. இதனுள் மணிவாசகப் பெருந்தகை தம்மை நாயகியாகவும் இறைவனை நாயகனுகவும் அமைத்துப் பாடிய பதிகங்கள் பலவாம். திருக்கோவையரோ இறைவனை நாயகியாகவும், தம்மை நாயகனுகவும்

அமைத்துப் பாடப் பெற்றது, இவ்வகையில் சிந்தித்தால் இருவேறு நிலைகளில் இறையருளில் அடிகள் ஈடுபட்டமை நன்கு புலனாகும்.

"வேறு வேறு உருவும் வேறு வேறு இயற்கையும் நூறு நூறுயிரம் இயல்பினது ஆக ஏறுடை ஈசன் இப்புவனியை உய்யக் கூறுடை மங்கையும் தானும் வந்தருளி"; ஊனந்தன்னை ஒருங்குடன் அறுத்து, ஆனந்தம்மே ஆறு அருளிய" சீர்களைக் கீர்த்தித் திருவகவலில் தொகுத்துரைத்தும், பதிகங்கள் தோறும் நேருமிடங்களில் சுட்டிச் செல்கின்றமை யாவரும் அறிந்ததே. இந்நினைவு அடிகள் திருவுள்ளத்தில் மாறுமல் நின்று திருக் கோவையாரிலும் புலப்படக் காண்கின்றோம். "திருப்பனையூரில் விருப்பன் ஆகியும்" (கீர்த்தித் திருவகவல் 87 அடி) என்ற அடிக்கு விளக்கம்போல "உம்பர் சென்றேத்தி நிற்கும் திருப் பனையூரனை" (திருக்கோவை 137) என்ற அடி விளங்குகின்றது. பனையூரில் விருப்பொடு பல்கால் தங்குதலான் உம்பரெலாம் ஆண்டுவந்த அன்பு செய்து இன்புறுகின்றனர். "குற்றாலத்துக் குறியாயிருந்தும்" (கீர்த்தித் திருவகல் 91) என்ற பகுதி, "குற்றாலத்துக் கோலப் பிண்டிப் பொழில்வாய்" (திருக் கோவையார் 94) என்று மலர்கின்றது. "ஏகம்பத்தின் இயல்பா யிருந்து" (கீ. 72) என்ற அடி "மன் தங்கு இடைமருது ஏகம்பம் வாஞ்சியம் அன்ன பொன்னை" (திருக்கோவை 268) எனப் பொன்வண்ணத்தானைப் "பொன்னை" என்று; இயல்பாய் இருக்கும் அவன் திறத்தினைக் கூறுகின்றார். "கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்" (கீர்த்தி 83 அடி) என்று குறிக்கப்பெற்ற கடம்பூர் "தன் கடம்பைத் தடம் போற் கடுங்கானகந் தண் ணெனவே" (திருக்கோ. 220) எனத் தண்மைக்கு எடுத்துக் காட்டாகக் கூறுகின்றார். பாண்டிய நாட்டினையும் மதுரையம் பதியினையும் அடிகள் பலவிடங்களில் சுட்டக் காண்கிறோம். பாண்டியநாட்டுத் தலைநகரை, "கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ" (திருக்கோவை யார் 20) எனவும், "திக்கின் இலங்கு திண்தோளிறை தில்லைச் சிற்றம்பலத்துக் கொக்கின் இறகு தணிந்து நின்றாடி தென் கூடலன்ன" (திருக்கோவை 376) எனவும் கூறுகின்ற இடங்கள் எண்ணி மகிழத்தக்கன. பெருந்துறை, பொதியில், ஈங்கோய் மலைபோன்ற பல தலங்களும் குறிக்கப் பெற்றுள்ளன.

ஒருகால் ஓதிலும் உருக்கும் இயல்பினைத் திருவாசகத்துக் காண்பது போலவே திருக்கோவையாரிலும் பலவிடத்துக் காண முடிகின்றது.

"மைத்தழை யா நின்ற மாமிடற்
றம்பல வன்கழற்கே
மெய்த்தழை யா நின்ற வன்பினர்
போல விதிர்விதிர்த்துக்
கைத்தழை யேந்திக் கடமா
விஞய்க் கையில் வில்லின்றியே
பித்தழை யா நிற்ப ராலென்ன
பாவம் பெரியவரே" (திருக்கோவையார் 102)

கையுறை கொண்டுவந்த தலைவனை நோக்கித் தோழி கூறியதாக அமைந்தது இப்பாடல். கையில் வில் இல்லை, ஆனால் அவனோ மதம்பட்ட யானை இவண் வந்ததோ என வினவினன். பித்தான சொற்களைக் கூறினன். கையிலே தழை வைத்துள்ளான். எனவே, இவன் கருமிடற்றான் கழற்கு அன்பு செய்து, பெருகிய அன்பினால் மெய் நடுங்கும் பத்தரைப்போலக் காட்சியளிக்கின்றான். பிச்சனாக்கினாய் என்றும், நாட்டார் நகைசெய்ய எனவும் தாம்பட்ட அனுபவங்களை நினைந்து "பித்தழையா நின்ற" என்ற தொடரினை இப்பாடலில் அமைத்துள்ளார். மெய்த்தழையா நின்று அன்பு செய்யும் இயல்பினைத் திருச்சதகப்பாடல் விளக்குகின்றது.

"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே" (திருவாசகம்-5)

மெய்தான் அரும்பி விதிர்விதிர்க்கின்ற மெய்யடியாரின் இயல்பினை இரண்டிடத்தும் காணலாம்.

அடிகளார், உலகில் மிக மதித்துப் போற்றியது தாய் அன்பினையே. அதனினும் மேலாகக் கருதுகின்ற பொருள் இவ்வுலகில் வேறொன்றும் இல்லை. "பால்நினைந்தூட்டுந் தாயினும்" எனவும், "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே", "அம்மையே அப்பா" என்றும் பல இடங்களிலும் குறிப்பர்.

மக்கள், நடைவழக்கில் உயிரே சிறந்தது என்பர். வள்ளுவரும் '' ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்பர். ''உயிரினும் சிறந்தன்றுநாணே நாணினும் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்ததன்று'' எனக் கற்பினை வலியுறுத்துகின்றார் தொல்காப்பியர். உயிரினும் சிறந்தது என்றமையால் உயிர் உயர்ந்தது என்பது புலப்படும். மணிவாசகப் பெருந்தகையோ உயிரினும் சிறந்ததாகத் தாயினையே குறிப்பிடுகின்றார்.

" தாயிற் சிறந்தன்று நாண்தைய
லாருக்கந் நாண்தகைசால்
வேயிற் சிறந்தமென் றோளிதிண்
கற்பின் விழுமிதன்று'' (திருக்கோவையார் 204)

நாணம் தாயினும் சிறந்தது, அதனினும் சிறந்தது கற்பு எனத் தொல்காப்பியர் தம் நெறியினைப் பின்பற்றி உரைப்பதும், அதில் ஒரு புதுமையைக் காட்டியிருப்பதும் எண்ணி மகிழுதற்குரியன.

சொற்களைக் கையாள்வதிலும் நூலாசிரியர் தம் இயல்பை உணரலாம். சில சொற்களை, 'தன்குறி வழக்கம் மிக எடுத்து உரைத்தல்' என்றபடி பயின்று ஆள்வர் சிலர். அவ்வகையில் அடிகளார் ''இறுமாக்க'' ''ஏமாக்க'' என்ற சொற்களை அழகுறப் பல இடங்களில் ஆண்டுள்ளார். அடிகளைப் பாராட்ட வந்த இராமலிங்க அடிகளார்,

'' மன்புருவ நடுமுதலா மனப்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வா ரெல்லாரு மேமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் னருளுருவ மடைந்துபின்னர்
இன்புருவ மாயினை நீ யெழில்வாத வூரிறையே ''

(ஆளுடைய அடிகள் அருள்மாலை 3)

என ''ஏமாக்க'' என்ற கிளவியால் இவரை அடையாளம் காட்டுகின்றார்.

'' பூமேல் அயனோடு மாலும் புகல்அரிதென்று
ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க
நாய்மேல் தவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ''

(திருக்கோத்தும்பி 234)

"ஏமாறிநிற்க", "இறுமாக்க" என்ற சொற்களைப் பலவிடங்களிலும் திருவாசகத்தில் பயன்படுத்திய அடிகள்,

" இறுமாப் பொழியுமன் றேதங்கை தோன்றினென்
எங்கையங்கைச்
சிறுமான் தரித்தசிற் றம்பலத் தான்றில்லை
யூரன்றிண்டோள்
பெறுமாத் தொடுத்தன்ன பேரணுக் குப்பெற்ற
பெற்றியினே
டிறுமாப் பொழிய இறுமாப் பொழிந்த இணைமுலையே"
(திருக்கோவையார் 373)

எனும் திருக்கோவையார் பாடலிலும் பயன்படுத்தியுள்ளார்.

அருள்வீழ்ச்சி எய்தியோர், சுற்றந்துறந்து, துணை துறந்து, ஊர்துறந்து, கூட்டத்திடைக் கல் எறியப்பட்டால் கூட்டம் கலைந்து ஓடுமாறுபோல உலகத்துழனியினின்றும் ஓடுவர்.

" வைத்தநிதி பெண்டிர் மக்கள்குலங் கல்வியென்னும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னுஞ்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பி "
(திருக்கோத்தும்பி 220)

" சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டு தடுமாறு
மாதமிலி நாயேனை யல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் றுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே "
(கண்டபத்து 477)

என்ற பாடல்களால் சத்திநிபாதம் பெற்றார் உறும் நிலை நன்கு கூறப்பட்டுள்ளது. இதனைத் திருக்கோவையாரில்,

" சுற்றம் பலமின்மை காட்டித்தன் தொல்கழல் தந்ததொல்லோன்
சிற்றம் பலமனை யாள் " (திருக்கோவையார் 346)

என்று சுட்டிச் செல்கின்றார்.

தம்மை ஒரு பெண்ணாக நினைந்து ஈசனிடத்துப் பேரன்பு செய்து, நினைவெல்லாம் அவனாக, நடையெல்லாம் அவனாக.

செயல் எல்லாம் அவனாக, எண்ணி யெண்ணி ஏங்குகின்ற நிலையினை,

" சூடுவேன் பூங்கொன்றை சூடிச்சிவன் திரள்தோள்
கூடுவேன் கூடிமுயங்கி மயங்கிநின்று
ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனல்ஏந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய் "

(திருவம்மானை 191)

எனப்பாடக் காண்கிறோம். கொன்றை மாலையினை பெற்றுச் சூடி, அவனோடு கூடுகின்ற, ஊடுகின்ற, செவ்வாய்க்கு உருகுகின்ற, தேடுகின்ற, வாடுகின்ற ஒரு பெண்ணையே பார்க்கின்றோம் அல்லால் அடிகளைப் பார்க்கவில்லை.

" நேயத்த தாய்நென்ன லென்னைப்
புணர்ந்து நெஞ்சம் நெகப்போய்
ஆயத்த தாயமிழ் தாயணங்
காயர னம்பலம் போல்
தேயத்த தாயென்றன் சிந்தைய
தாய்தெரி யிற்பெரிது
மாயத்த தாகி யிதோவந்து
நின்றதென் மன்னுயிரே. "

(திருக்கோவையார் 39)

இப்பாடலில் இறைவனை ஒரு பெண்ணாகவே காண்கின்றார் அடிகள்.

அடிகளை ஒரு பருவப் பெண்ணை நயக்கும் காளையாகக் காண்கின்றோம். " இன்ப மறியு மியல் பன்றெனினும் நெஞ்ச மணியெலா நின்றெடுத்துரைத்தது ", என்ற பேரின்பத் துறையில்,

" கயலுளவேகம லத்தலர் மீது கனிபவளத்
தயலுள வேமுத்த மொத்த நிரையரன் அம்பலத்தின்
இயலுள வேயிணைச் செப்புவெற் பாநின தீர்ங்கொடிமேற்
புயலுள வேமலர் சூழ்ந்திருள் தூங்கிப் புரள்வனவே "

(திருக்கோவையார் 35)

அமைந்த பாடலும் நினைக்கத்தக்கது.

இப்பாடல்,

" கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன்என் றதிசயித்தார்."

என்ற தடுத்தாட்கொண்ட புராணப் பாடலினை நினைப்பிக்கின்றது.

" நீங்கரும் பொற்கழற் சிற்றம்
பலவர் நெடுவிசும்பும்
வாங்கிருந் தெண்கடல் வையமு
மெய்தினும் யான்மறவேன்
தீங்கரும் பும்மமிழ் துஞ்செழுந்
தேனும் பொதிந்து செப்புங்
கோங்கரும் புந்தொலைத் தென்னையு
மாட்கொண்ட கொங்கைகளே "

(திருக்கோவையார் 46)

'சித்தியெவையுஞ் சேர்ந்திடு மாயினும், இத்தகை இன்பம் இகழேன் என்றது' என்பது இதன் பேரின்பப்பொருள்.

" கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினு
நள்ளே னினதடி யாரொடல்
லானர கம்புகினு
மெள்ளேன் றிருவரு ளாலே
யிருக்கப் பெறினிறைவா
வுள்ளேன் பிறதெய்வ முன்னையல்
லாதெங்க ளுத்தமனே (திருச்சதகம் 6)

என்ற பாடலுடன் இணைத்துச் சிந்திக்கத்தக்கது இப்பாடல்.

'திருவார்த்தை' என்ற பதிகம் அமைத்ததுடன், மணியின் மணிவார்த்தை எனவும், திருவார்த்தை எனவும் திருவடிகளைக் குறிக்கும் நிலையினைப் பலவிடங்களில் சுட்டுகின்றூர். அதனை (திருவார்த்தையினை) அழகியதொரு உவமையாக்கித் தருகின்றூர்.

கண்ணிணை பிறழ்கின்ற வண்ணம் உரைக்க வந்தவர் முற்றிலும் அவனிடத்துத் தாம் கொண்ட அன்பினைப் புலப்படுத்தும் நிலைகளையே உவமையாக்குகின்றார். அவனிடத்து இவர் கொண்ட அன்பு போல அகன்றும், அவன் வாங்கிய இவர் பாசம் போலக் கறுத்தும், அவன் தில்லையின் ஒளிபோல ஒளி தந்தும், அவன்பூசும் திருநீறு என வெளுத்தும், அவன் பூங்கழலைப் பேசும் திருவார்த்தைபோல நீண்டும் கிடக்கின்றனவாம் அவள் கண்கள், அதனை,

" ஈசற் கியான்வைத்த வன்பி
னகன்றவன் வாங்கியவென்
பாசத்திற் காரென் றவன்தில்லை
யின்னொளி போன்றவன்தோள்
பூசத் திருநீ றெனவெளுத்து
ஆங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யிற்பெரு
நீளம் பெருங்கண்களே "

(திருக்கோவையார் 109).

என்று கூறுகின்றார். கண்களைக் கூற வந்தவர், கண்களின் இயல்பைச் சுட்டுமுகத்தான் இறையிடுபாட்டை உவமை வகையால் கூறி அகப்பொருள் கருதாது அருளின் நலம் தோய்ந்து கூறும் அழகு வியந்து வியந்து போற்றத் தக்கது.

அகநூல்களுள் இருவரும் ஒத்த அன்பினராய திறத்தைப் 'ஓர்ஆவிற் கிருகோடு முளைத்தாற் போல' எனக் கூறுவர். அடிகள் ஈருடல் ஒருயிராய்க் கலந்த நிலையினைக் காகத்தின் இரு கண்களுக்கும் மணி ஒன்றே ஆனாற்போல ஒருயிரே கண்டனம் எனக்கூறுகின்றார்.

" காகத் திருகண்ணிற் கொன்றே
மணிகலந் தாங்கிருவர்
ஆகத்து ளோருயிர் கண்டனம்
யாமின்றி யாவையுமாம்
ஏகத் தொருவ னிரும்பொழி
லம்பல வன்மலையில்
தோகைக்குந் தோன்றற்கு மொன்றாய்
வருமின்பத் துன்பங்களே "

(திருக்கோவையார் 71)

இவ்வாறு உவமைகளைக் கையாள்வதில் ஒரு புதுமையும் பொலிவும் இருப்பதனைப் பலவிடங்களில் காண்கின்றோம். இரு பக்கமும் துன்பம் சூழ்ந்து தப்பிக்க முடியாத நிலையினை, இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்தி, என அகநானூறு உவமிச்கின்றது. இதனை அப்பரும், 'இருதலை மின்னுகின்ற கொள்ளிமேல் எறும்பென் உள்ளம் எங்ஙனம் கூடுமாறே' என ஒரு நிலையில் நில்லாத மனத்தினுக்கு உவமையாக எடுத்தாள்கின்றார். ஒரு மூங்கிலோ அல்லது கயிறோ தொங்குகின்றது. அதன் இருபக்கங்களிலும் தீப்பிடிக்கின்றது. ஓடமுடியாது தத்தளிக்கும் எறும்பு எவ்வாறேனும் தப்பிக்கவேண்டும் என்னும் முயற்சியால், நடுவிடத்திலுள்ள பற்றுக் கோட்டினைத் தாவிப்பற்ற முயலும். இல்லையேல் நிலத்தில் குதித்து தப்பிக்கவும் கூடும். ஆதலால், 'இருதலைக் கொள்ளியினுள்ளெறும்பொத்து நினைப் பிரிந்த விரிதலையேனை விடுதிகண்டாய்' என மணிவாசகப் பெருந்தகை நயப்படுத்தி உரைக்கின்றார். மூங்கிலின் உள் துளையிற் சென்ற எறும்பு மீண்டுவர எண்ணும்பொழுது இரு வாயில்களிலும் தீப்பற்றி எரிகின்ற நிலையினை உவமை ஆக்குகின்றார். அதனால் அன்றோ 'அறிவாற் சிவனே' என்று பாராட்டப்பெற்றார்.

இரவின்கண் ஊர்புறத்துச் சென்று பரத்தையர் இன்பத்தில் தோய்ந்து, பகலில் இல்லின்கண் உறைகின்ற தலைவன், திசை திசைதொறும் பறந்து சென்று பழுமரம் பார்த்துத் துய்த்துப் பகற்காலத்தில் ஒரு மரத்தின்கண் தொங்கும் வாவற் பறவை போல் இருக்கின்றான் என்பதனை, 'பறவியல் வாவல் பகலுறை மாமரம் போலு மன்னே' (திருக்கோவையார் – 375) என்று உவமிக்கின்றார். பகற்காலத்து அடங்கியும், இரவுக் காலத்து ஊக்கத்துடனும், திரியும் பறவையைப் பரத்தைதேரும் தலைவனுக்கு உவமையாக்கியது, அருமையினும் அருமையாகும்.

கல்லா மனம், கருங்கல்லாகிய மனம் ஆதலால் அதனை எளிதில் உருக்க இயலாது. ஆகவே முன்பே ஒரு பயிற்சி இறைவனுக்கு உண்டு எனக் கூறுவார் போன்று, 'தெவ்வரை மெய்யெரிகாய்சிலை யாண்டென்னையாண்டு கொண்ட, செவ்வரை மேனியன் சிற்றம்பலவன் (திருக்கோவையார் – 114) என்ற பகுதி கல்லை மென்கனியாக்கும் விச்சைகொண்டு என்னை நின்கழற் அன்பனுக்கினாய்' (திருச்சதகம் – 98) என்ற அடிகளுடன் ஒப்பிட்டு இன்புறத் தக்கது.

பல்கதிரோன் பல்தகர்த்தது, தக்கன் வேள்வியை அழித்தது, சந்திரனை தேய்த்தருளியது, இந்திரனைத் தோள் நெரித்திட்டது, எச்சன் தலையரிந்தது, திசை திசையே தேவர்களை ஓட்டுகந்தது, போன்ற நிகழ்ச்சிகள் இருபெரு நூல்களிலும் சுட்டப்பட்டுள்ளன.

நெஞ்சம் நெக்குருக வைக்கும் திருவாசகமும், கோவைத் திருவாசகமும் கருத்து வகையால் பொருந்தியும், அழகில் ஒத்தும், உவமை அமைப்பில் சிறந்தும், புராண வரலாற்றுக் குறிப்புகளில் நிறைந்தும் தலங்களைக் குறிப்பிடும்வகையில் ஒன்றியும், இருபெரு நூல்களும் ஒரு பெருநூலாகவே அமைந்திலங்கக் கண்டோம். அறிவாற் சிவனே எனப்படும் மணிவாசகர்தம்மை, வாழ்த்தி வணங்குவோம்.

“ தானே முத்தி தருகுவன் சிவனவன்
அடியன் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே”

என்ற சிவப்பிரகாசர்தம் கூற்றுக்கு நன்றி செலுத்துவோமாக. நன்றி வணக்கம்.

ஒன்பதாம் திருமுறை

★

பார்வையாளர் :

திரு. மு. அருணசலம், எம். ஏ.,

காந்தி வித்யாலயம், திருச்சிற்றம்பலம்.

★

யாவருக்கும் தம் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு அவர் பேசியதாவது :—" தமிழில் 3 தமிழ் – இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றை முத்தமிழ் என்று முழங்குகிறோம். ஆனால் முத் தமிழிலும் இன்றைக்கு நூல்கள் இல்லை. பெயரளவில்தான் இற்றைக்கு முத்தமிழ் என்று சொல்லப்படுகிறதேயொழிய முத்தமிழ் நூல்களே இல்லை. ஆயினும் சிலப்பதிகார உரையிலே அரும்பத உரையாசிரியரும், அடியார்க்கு நல்லார் முதலியவர்களும் முத் தமிழைப்பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இசைக்கு, இலக்கண-இலக்கிய நூல்கள் இவை ; நாடகத்திற்கு, இலக்கண-இலக்கிய நூல்கள் இவை என்பதாக விரிவாகச் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதை நாம் பார்க்கும்போது கடல்போலப் பரந்து கிடந்திருக்கவேண்டும், இசை நூல்கள் என்பது தெரிகிறது. அவைகள் எல்லாம் போய்விட்டன. எப்படிப் போயின ?

தமிழ்நாட்டிலேதான் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நாகரிகம் இடையறாது இருந்து வருகிறது. உலகத்தில் இரண்டு நாடுகள் – ஒன்று இந்தியா, மற்றொன்று சைனா ஆகிய இரண்டில்தான் பழங்கால நாகரிகம் அழியாதிருப்பது. சைனாவிலேகூட மாசேதுங் ஆட்சி ஏற்பட்டபிறகு அந்த நாகரிகம் சிதைந்தது. ஆக இந்திய நாட்டில்தான் அழியாமல் வைத்திருக் கிறோம் கிரேக்க நாகரிகம் அழிந்துவிட்டது. ரோமன் நாகரிகம் அழிந்துவிட்டது. பாபிலோனிய நாகரிகம் அழிந்துவிட்டது. ஆனால் இந்திய நாட்டில் – அதுவும் தமிழ்நாட்டில் அழியாமல் இன்னமும் இருக்கின்றது. அப்படியானால் இசை நூல்கள் எங்கே போயின ? நாடக நூல்கள் எல்லாம் எங்கே போயின ?

நேற்றுத் திருஞானசம்பந்தரைப் பற்றிப் பேசிய பேச்சைக் கேட்டபோது ஒரு கருத்துத் தோன்றிற்று. திருஞானசம்பந்தருக்கு நம்முடைய இலக்கிய வரலாற்றில் என்ன இடம்?

தமிழ்நாட்டைச் சேர, சோழ பாண்டியமன்னர்கள் ஆண்டார்கள் என்பது தெரியும். காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பல்லவர்கள் ஆண்ட காலத்தில் சோழவம்சம் குன்றியிருந்தது. பாண்டியராஜ்யமும், பல்லவ ராஜ்யமும்தான் இருந்தன.

அப்போது கன்னடநாட்டுப் பகுதியிலிருந்து படையெடுத்து வந்த கூட்டம் பாண்டிய நாட்டுள் பிரவேசித்தது. 3-ஆம் நூற்றுண்டின் மத்தியில் பாண்டியனைத் தோற்கடித்து, மதுரையைப் பிடித்து அவர்கள் அரசாண்டார்கள். அவர்கள் ஜைனர்கள். மொழி கன்னட மொழி. ஜைனர்களுடைய ஒரு முக்கியமான கொள்கை என்னவென்ருல், ஸ்திரீகளுக்கு இந்த ஜன்மாவிலேயே மோட்சம் இல்லை; மீட்டும் ஆணுகப் பிறந்துதான் மோட்சம் அடையமுடியும் என்பதாகும். அவர்கள் பாண்டிய நாட்டில் புகுந்தவுடன் நம்முடைய சமயத்தை ஒடுக்கினுர்கள். கோயில்களைப் பூட்டினுர்கள். பூஜைகளை நிறுத்தினுர்கள்.

ஜைனர்களுக்கு இன்னெரு கருத்துண்டு. பெண்கள் கூடாது, இசை கூடாது. பெண்களினுலும், இசையினுலும்தான் மனிதன் கெட்டுப்போகிருன் என்ற கொள்கை கொண்டவர்கள். அதை விளக்கவே யசோதர காவியம் எழுதியிருக்கிருர்கள். ஆகவே இசையை ஒடுக்கினுர்கள். அதுவரை தமிழ்நாட்டில் சிறப்பாக இருந்த இசை நூல்கள், நாடக நூல்கள் ஆகியவற்றை அவர்கள் அழித்தார்கள்.

திரு. ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்கள் பேசியபோது சொன்னுர்கள்: தொல்காப்பிய நெறி வேறு, துறைகள் தனித் தனியாகச் சொல்லப்பட்டிருந்தன. இறையனுர் அகப்பொருள் வேறு, இதிலே துறைகள் தொடர்பாக உண்டுபண்ணப்பட்டன என்ருர்கள்.

தொல்காப்பிய அகப்பொருள் இருந்திருந்தால் இறையனுர் அகப்பொருள் ஏன் வரவேண்டும்?

பாண்டிய மன்னன் எழுத்தும், சொல்லும், யாப்பும் இருக்கின்றன. பொருள்நூல் கிடைக்கவில்லையே என்று வருந்தினுன் என்பதாக இறையனுர் அகப்பொருள் உரையிலேயே வருகின்றது. என்ருல் அகப்பொருள் எங்கே போயிற்று?

ஒருவனும், ஒருத்தியும் சந்தித்து, காதலராகி, மணந்து வாழ்கிற நெறியைச் சொல்வது அகப்பொருள். அப்போதிருந்த களப்பிரர்களாகிய ஜைனர்களுக்குப் பெண்கள்தாம் கூடாதே, தொல்காப்பிய - அகப்பொருள் ஒழிக்கப்பட்டது. இது உங்களுக்கு எப்படித் தெரியும் என்று கேட்கலாம். சாம்பலைப் பார்த்தவுடன் இங்கே நெருப்பு இருந்திருக்கவேண்டும் என்பது தெரியும் அன்ருே? இவர்களால் தொல்காப்பிய அகப்பொருள் ஒளிக்கப் பட்டதால்தான் இறையனர் அகப்பொருள் தோன்றியது. இதை மனத்தில் கொள்ளவேண்டும்.

ஞானசம்பந்தர் வந்தார். மதுரையில் களப்பிரர் ஆட்சியை ஒழித்துப் பாண்டியன் அரசவையில் இருந்தான் என்ருலும் அரசன் உட்பட அந்த நாட்டில் இருந்தவர்கள் ஜைனர்களாக இருந்தார்கள். அப்போது குலச்சிறையார் என்ற அமைச் சரும், பாண்டியன்மாதேவி மங்கையர்க்கரசியாரும்தாம் சைவர்கள். சோழநாட்டில் இருந்து ஞானசம்பந்தரை அவர்கள் வரவழைத் தார்கள். வாதிலே வென்று சமணரை ஞானசம்பந்தர் அழித்தார் என்பது எல்லாம் வரலாறு. ஞானசம்பந்தர் கையிலே தாளம் கொண்டு தேவார இன்னிசைப் பண்ணுல் சைவத்தையே உயிர்ப் பித்தார்கள் என்று காண்கிருேம்.

இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன் என்றே பல விடங்களில் சொல்லிக்கொள்வார்கள். வேறு திருமுறை ஆசிரி யர்கள் அப்படிச் சொல்லிக்கொண்டதில்லை. ஆகவே திருஞான சம்பந்தருடைய அவதாரமே இசைத்தமிழுக்கு உயிர் ஊட்டு வதற்காகவே ஏற்பட்டதோ என்றுதான் கருதுகிறேன்.

இளங்கோஅடிகள் ஜைனர் என்பார்கள். ஆனுல் அவர் பாடியுள்ள சிலப்பதிகாரம் இசைப்பாடல்கள் நிறைந்திருக்கிறது. மேலும் கண்ணகியின் சிறப்பை அது கூறுகின்றமையினுல் எப்படி ஜைனராக இருக்கக் கூடியவர் அதைச் செய்வார்? திருமாலையும், அம்பிகையையும், மற்ற தெய்வங்களையும் அவர்கள் கூறுகிற சிறப்பு, நூல்அமைப்பு ஆகியவற்றைக் கொண்டு அவர் சைவராகத்தான் இருக்கவேண்டும் என்கிற கருத்து எழுகிறது. அதைப்பற்றியும் அறிஞர் பெருமக்கள் ஆராய வேண்டும்.

முதல் மூன்று திருமுறைகளைப் பாடியவர் ஞானசம்பந்தர். அடுத்த மூன்று திருமுறைகளைப் பாடியவர் திருநாவுக்கரசர். 7-ஆவது திருமுறையாகச் சுந்தரர் தேவாரம் இருக்கிறது.

மணிவாசகரது திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் 8-ஆம் திருமுறையாக வைத்திருக்கிறார்கள்.

9-ஆம் திருமுறையாகிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகிய இரண்டையும் பாடியவர்கள் 9 பேர். பாடிய பதிகங்கள் 29. அவற்றில் உள்ள பாடல்கள் 301. இன்னும் அந்த 29 பதிகங்களிலே 16 பதிகம் சிதம்பரத்திற்கு மட்டும். 13 பதிகங்கள் தாம் வேறு 13 தலங்களுக்கு. சிதம்பரத்திற்கு மட்டும் அப்படி ஏன் 16 பதிகங்கள் பாட நேர்ந்தது? ஒன்பதாம் திருமுறையைப் பாடிய ஆசிரியர்கள் 9 பேர் என்று சொன்னேன். அந்த 9 ஆசிரியர்களும் சிதம்பரத்தைப் பாடியிருக்கிறார்கள். ஆசிரியர் ஒருவர் சிதம்பரத்தோடு திருவாவடுதுறையைப் பாடினார். ஆசிரியர் மற்றொருவர் சிதம்பரத்தோடு திருவிடைக்கழி, திருவாவடுதுறை இவற்றைப் பாடினார். மற்றொருவர் திருவீழிமிழலையைச் சேர்த்துப் பாடினார். இன்னும் ஆசிரியர் ஒருவர் தில்லையோடு பிற 9 தலங்களைச் சேர்த்துப்பாடினார். ஆனால் எல்லோரும் சிதம்பரத்தைப் பாடினார்கள்? ஏன்?

இந்த வரலாற்றுச் செய்தியைத்தான் நான் தரவேண்டுமென்று நினைத்தேன். நேரம் குறைவு. தமிழ்ச் சக்கரவர்த்தி, முதல் குலோத்துங்கன் கருணாகரத் தொண்டமானைக் கலிங்கத்துப் போருக்கு அனுப்புகிறான். அந்தப் போரை வருணிக்கும்படி கேட்க அதற்கு ஜயங்கொண்டார் கூளிவாயிலாகச் சொல்கிறார்.

“ மாவாயிரமும் படக்கலிங்கர்
மடிந்த களப்போர் உரைப்போர்க்கு
நாவா யிரமுங் கேட்போர்க்கு
நாளா யிரமும் வேண்டுமால் ”

என்கிறார். நாக்கு மாத்திரம் ஆயிரம் இருந்தால் போதாது. ஆயிரம் நாட்களாவது வேண்டும் என்கிறார். எனக்கு இருப்பது அரைமணி. ஒன்பதாம் திருமுறையின் வரலாற்றை—சரித்திர நிகழ்ச்சியோடு முழுசச் சொல்ல முடியுமா?

ஆயினும் இங்கே திருவிசைப்பாப் பாடிய காலம் எது? பாடியவர் யார் என்பனவற்றைச் சிறிது பார்க்க வேண்டும்.

திருவிசைப்பாவில் சோழச் சக்ரவர்த்தி கண்டராதித்தர் பாடியிருக்கிறார். சிதம்பரத்திற்கே ஒரு பதிகம் பாடியிருக்கிறார்.

"வெங்கோல் வேந்தன் தென்னன் நாடும் ஈழமும்
கொண்டதிறல்
செங்கோற் சோழன் கோழிவேந்தன் செம்பியன்
பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடியாடு மணிதில்லையம்பலத்துள்
எங்கோனீச னெம்மிறையையென்றுகொ லெய்துவதே."

என்கிற பதிகத்தில் தில்லைக்குப் பொன்வேய்ந்த சம்பவம் சொல்லப் படுகிறது. முதலாம் பராந்தகசோழர் சிதம்பரத்திற்குப் பொன் வேய்ந்தார். முதலாம் பராந்தக சோழர் மகனுர் தாம் கண்ட ராதித்தர். இந்தப் பதிகத்தில் தம் தகப்பனுர் பொன்வேய்ந்த செய்தியைச் சொல்கிருர். தந்தை தஞ்சையிலே இருந்து அரசாண்டார். அவருடைய மூத்த மகன் தந்தையாரோடு தலைநகரில் இருந்தார். சிதம்பரத்தில் பொன் வேய்கிற முக்கிய மான வேலை நடந்த காரணத்தினுல் கண்டராதித்தரைச் சிதம்பரத்தில் தங்க வைத்திருந்தார். அப்படி இவர் சிதம்பரத்தில் தங்கிகியிருந்த காலத்தில் தான் அங்கே வந்த புலவர்களை அந்தத் தில்லைப்பதிக்குப் பதிகம் பாடச் சொல்வார். அப்படிப் பாடிய பதிகங்கள் தாம் அவை.

கண்டராதித்தருடைய அண்ணன் மகாவீரன். போர்க் களத்தில் அவன் இறந்துபட்டதனுல் தந்தைக்குப் பிறகு இவர் பட்டத்தை ஏற்றுத் தஞ்சைக்கு வந்தார். அப்படி இவர் தஞ்சைக்கு வந்த பிறகுதான் சிதம்பரம் போய் எப்படித் தில்லைநாதனைக் காண்பேன் என்பதாக இவரே பாடிய பாட்டுகள் அதில் இருக்கின்றன.

"என்னுரமுதை யெங்கள்கோவை யென்றுகொ லெய்துவதே"

என்கிற பாடல்களில் உள்ள ஏக்கத்தைப் பார்த்தாலே அது தெரியும்.

இவர் பட்டத்திற்கு வருவதற்குமுன் தில்லையில் இருந்த போது ஒரு சம்பவம் நடந்தது. தில்லையில் சேந்தன் என்பான் ஒருவன் தினந்தோறும் விறகு வெட்டி அதை விற்று வருகிற பணத்தைக்கொண்டு தானியம் வாங்கி யாவராவது சிவனடியார்கள் வந்தால் அவர்களுக்குப் படைத்துவிட்டு உண்பான். இவன் பெருமையை இறைவன் உலகறியச் செய்ய நினைத்தான். ஒருநாள் சேந்தன் வீட்டிற்கே பசிக்கிறது என்பதுபோலச் சென்ருன். சேந்தன் அன்றைக்குக் கேழ்வரகுக்கூழ் காய்ச்சியிருந்தான். அதை இறைவன் உண்டு சென்ருனும்.

அன்றைக்குக் கண்டராதித்தர் பூசை செய்கிறபோது மணிஓசை கேட்கவில்லை. 'இறைவனே நான் செய்த தவறு என்ன?' என்று வருந்தி உண்ணாது படுக்க, 'அன்ப, நான் சேந்தன் வீட்டுக் கூழ் சாப்பிடச் சென்றேன். வேறு ஒன்றும் இல்லை' எனக் கனவில் சொன்னாணும். கண்டாதித்தருக்கு ஒன்றும் புரியவில்லை. மறுநாள் கோவில் தீட்சிதர்கள் வந்து நடராசப்பெருமான் பேரில் ஒரே கூழாக இருக்கிறது என்றார்கள். அப்போதுதான் கனவுக்கும் இதற்கும் உள்ள தொடர்பை உணர்ந்து சேந்தனாரைத் தேடச் செய்கிறார். சேந்தனார் யார் என்று தெரியவில்லை.

மறுநாள் தேர் உத்சவம். சுவாமி தேரில் ஏறிவிட்டார், தேர் நகரவில்லை. எல்லோரும் வருந்தி நிற்க, 'சேந்தா! பல்லாண்டு பாடு' என்று ஆண்டவன் சொல்லத் தேர் இழுக்கும் கூட்டத்தோடு சேந்தனார்இருப்பதைக் கண்டராதித்தர்கண்டு அவருக்குமரியாதை செய்தார் என்பது எல்லாம் வரலாறு. அப்போது பாடியது சேந்தனார் திருப்பல்லாண்டு. கண்டராதித்தர் பதவியில் இருந்த காலம் நான்காண்டுகள்தான். அவர் காலத்திலேயே நான்கு பேர்கள் பாடினார்கள்.

கண்டராதித்தர் இறந்த பின்னாலே அவர் மனைவியார் செம்பியன் மாதேவியார் பல கோயில்திருப்பணிகள் செய்து இருக்கிறார்கள். பத்துக்கோயில்களைக் கட்டியிருக்கிறார்கள். கல்வெட்டுச் சான்றுகள் இருக்கின்றன. எஞ்சிய பாடல்கள் இவர் காலத்தில் பாடப்பட்டவை. ஆக, திருவிசைப்பா திருப் பல்லாண்டு எழுந்த காலம் பத்தாம் நூற்றாண்டின் நடுப்பாதியில் இருந்து அடுத்த நூற்றாண்டின் நடுப்பாதி வரை என்று சொல்லலாம். இதற்குள் பாடப்பட்டவை இத்த 301 பாடல்களும்.

திருவிசை என்றாலே புகழ். இவை இசையிலே அமைந்த பாடல். நம்பியாண்டார் நம்பி இதைத் தொகுத்தமைக்கும் ஒரு காரணம் உண்டு. முதல் எட்டுத் திருமுறையும் இசைப்பாடல்கள். பிறகு கிடைத்த தனிப் பாடல்களில் ஒன்பதாம் திருமுறையாக இசைப்பாக்களைச் சேர்த்தார். பத்தாம், பதினோராம் திருமுறைகளாக மற்ற இயற்பாக்களை வைத்தார். இவை எல்லாம் வரலாற்று ஆராய்ச்சிகள். நான் நூலுக்குள் செல்லவில்லை என்றார்.

திருவிசைப்பா – சாத்திரநோக்கு

★

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

★

முன்னுரை

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்பதாவதாகத் தொகுக்கப்பட்டுத் திகழ்வது, திருவிசைப்பா எனப்பெறும். சேந்தனர் இயற்றிய திருப்பல்லாண்டு என்பதும், இதனைச்சேர்ந்த ஒரு தனித் திருப்பதிகம் ஆகும். திருவிசைப்பா ஒன்பதாம் திரு முறையாகத் தொகுக்கப்பட்டிருப்பதற்கு ஏற்ப, அதனைப் பாடிய ஆசிரியர்களும் ஒன்பதின்மராக உள்ளனர். அவர்கள் முறையே திருமாளிகைத் தேவர், சேந்தனர், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலி யமுதனர், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்போராவர். இவர்கள் ஒன்பதின்மரும் பாடியுள்ள திருப்பதிகங்கள் 29; பாடல்கள் 301 ஆகும். இசைநலம் செறிந்த எழிலுடையனவாதல் பற்றியும், இறைவனது 'பொருள்சேர் புகழ்' ஆகிய இசையினை எடுத்து விளக்குவனவாதல் பற்றியும், கவிதைநலம் சான்ற இத் திருப்பதிகங்களுக்குத் திருவிசைப்பா என்னும் சிறப்பியற்பெயர் வழங்குவதாயிற்று.

கவிதையும் தத்துவமும்

கவிதைக்கும் தத்துவத்திற்கும், மிகமிக நெருங்கிய தொடர்பு உண்டு. "கவிதையானது, வாழ்க்கையின் அனுபவங்களிலிருந்து தோன்றுகின்றது; வாழ்க்கைக்கு உரியதாக விளங்குகின்றது; வாழ்க்கையை வளப்படுத்தும் குறிக்கோள் கொண்டது;

வாழ்க்கையின் குறைநிறைகளை ஆராய்ந்து உணர்த்தித் திருத்திச் செம்மைப்படுத்துகின்றது'' [1].

தத்துவம் என்பதும் இத்தகைய ஒன்றேயாகும். தத்துவமும் வாழ்க்கையின் அனுபவங்களிலிருந்தே உருவாகித் தோன்றுகின்றது; வாழ்க்கையைப் பற்றியதாக, வாழ்க்கை உணர்வுகளின் பிழிவாக, வாழ்க்கையை வளப்படுத்தும் குறிக்கோள் உடையதாக, விளங்குகின்றது. வாழ்வின் குறைநிறைகளை உணர்ந்து திருந்தி உய்யமுயலும் சீரிய நல்லுணர்வே, சிறப்பாகத் தத்துவஞானம் என்று திறந்தெரிந்து பாராட்டப்பெறுகின்றது. இவ்வாற்றால் தெய்விகநலம் சான்ற கவிதைக்கும், மெய்யுணர்வாகிய தத்துவ ஞானத்திற்கும் இடையேயுள்ள, இயைபு ஒற்றுமைகளை யாவரும் இனிது உணரலாம்.

"சிறந்த தத்துவஞானியல்லாத எவரும், ஒரு பெருஞ் சீர்த்தி மிக்க கவிஞராக விளங்கியதில்லை'' [2] என்று, கோல்ரிட்ஜ் என்னும் அறிஞர் கூறுவர். "ஓர் உயர்ந்த உண்மைத் தத்துவத்தினை, எவ்வாற்றாலேனும் விளக்காத கவிதையினை இயற்றும் ஆசிரியர் எவரையும், யான் மதிப்பதில்லை'' [3] என்று ஜேம்ஸ் லோவல் என்னும் அறிஞர் இயம்புவர். "தத்துவத்திற்கே முதல் இடம், அதனை அடுத்தே அதன் உயர்ந்த விளைவாகிய கவிதைக்கு இடம்'' [4] என்று இராபர்ட் ப்ரவுனிங் என்னும் கவிஞர் குறிப்பிடுவர். "தம்முடைய கவிதைகளைக் கற்பவர்பால் தத்துவ மனப்பான்மையைத் தூண்டித் தோற்றுவிக்கும் அளவைப் பொறுத்தே, கவிஞர்களின் சிறப்பும் பெருமையும் அமைகின்றன'' [5] என்று எமர்சன் என்னும் பேரறிஞர் மொழிவர். இங்ஙனம் கவிதைக்

---

1. "Poetry is made out of life, belongs to life, exists for life. It is important, therefore, to hold fast to this that poetry is at bottom a criticism of life; that the greatness of a poet lies in his powerful and beautiful application of ideas to life - to the question : How to live?" —Matthew Arnold

2. "No man was ever yet a great poet without being at the same time a profound philosopher". —S. T. Coleridge

3. "No poem ever makes me respect its author which does not in some way convey a truth of philosophy". —James Lowell

4. "Philosophy first, and Poetry which is its highest outcome afterwards". —Robert Browning

5. "The great poets are judged by the frame of mind they inducc". —Ralph Waldo Emerson

கலைக்கும் தத்துவக்கலைக்கும் இடையே உள்ள மிக நெருங்கிய தொடர்பினை, அறிஞர்கள் பலரும் வலியுறுத்திக் கூறுதல் காணலாம்.

உபநிடதக் கதை

இவ்வாறு கவிதைக்கும் தத்துவத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு எனினும், அவைகளுள் ஒன்றினின்று மற்றொன்றைத் தனியே பிரித்தெடுத்துக் காட்டுதல் அரிது. ஆதலின் திருவிசைப்பாப் பாடற்றொகுதியினின்று, 'இதோ! தத்துவக் கருத்துக்களைக் காண்மின்கள்' என்று தனியே பிரித்தெடுத்துக் காட்டுதல் என்பது, எளிதின் இயலாத கடினமான செயலேயாகும்.

தத்துவம் என்பது, தனி ஒரு பொருளாய், உருவொடுகூடி ஒளிர்வதொன்றன்று. "குடத்துள் விளக்கும், தடற்றுள் வாளும் போல, ஈது காண்மின்"! என்று காட்டலாகாத பொருள், தத்துவம்! எல்லாம்வல்ல இறைவனைப்போல, அது கருதுவார் கருதும் உருவமும் இயல்பும் பெற்றுத் திகழ்வது. ஆதலின் திருவிசைப்பாப் பாடல்களில், தத்துவ நுட்பங்களைத் தனி ஒரு தொகுப்பாக அல்லாமல், அவரவர் தத்தம் மனப்பான்மைக்கும், சிந்தனைப் போக்கிற்கும் ஏற்பக் காண்டல் கூடும்.

இவ்வுண்மையினைக் குறிப்பிடுங்கால், உபநிடதத்திற் கூறப்படும் கதை ஒன்று, நினைவுக்கு வருகின்றது. ஒரு சமயம் தேவரும் அசுரரும் மனிதரும், பிரமனிடம் அறிவுரைபெறச் சென்றனர். பிரமன் எல்லோருக்கும் பொதுப்படத் 'த' என்ற ஒரே எழுத்தைக் கூறினர். அதனைக்கேட்ட தேவர்கள், "நாம் காமம் மிக்கவர்கள். நமக்குச் சுகபோகங்களில் ஆசை மிகுதி ஆதலின் நமக்குத் தமம் (புலனடக்கம்) தேவை என்று அறிவுறுத்துகின்றார்" எனக் கருதிக்கொண்டனர். அசுரர்களோ, "நாம் கோபமும் கொடுமையும் உடையவர்கள். ஆதலின் நமக்குத் தயை (இரக்கம்) என்னும் பண்பு வேண்டும் என்று போதிக்கின்றார்" எனச் சிந்தித்துக் கொண்டனர். மனிதர்கள் "நாம் உலோபிகள். பணப்பித்து மிகுந்தவர்கள். ஆதலின் தானம் (அறச்செயல்) புரியுங்கள் என்று நமக்குப் பணித்தருள்கின்றார்" என்று உன்னித்து உணர்ந்து கொண்டனர் என்பது, அந்த உபநிடதக் கதை. 'த' என்னும் ஒரே எழுத்தொலிக்கு, அவரவர்கள் தத்தம் இயல்புக்கும் மன நிலைக்கும் ஏற்றபடி பொருள் செய்து கொண்டனர் அதுபோலவே நாமும் நம்முடைய இயல்பிற்கும் மன நிலைகளுக்கும் ஏற்றபடி, திருவிசைப்பாப்

பாடல்களில் தத்துவ நோக்குக்கொண்டு ஆராய்ந்து, பல நுட்பங்களை உணர்தல் கூடும். அம்முறையில், இங்கு ஒரு சில கருத்துக்களை மட்டும், இயன்ற அளவு முயன்று காண்போம்.

சோபான நெறி

(1) இறைவன் உயிர்களைப் படிப்படியாக, முறைமுறையே ஆட்கொண்டருளி முன்னேற்றுகின்ருன்; ஒரு தாய்க்குத் தன் குழந்தையின்மீது, எவ்வளவுதான் அன்பும் பரிவும் இருந்தாலும், அவள் அதற்குச் சிறிது சிறிதாகவே பாலூட்டியும், பொருந்தும் உணவு அருத்தியும், முறை அறிந்து அதனை வளர்த்து வருவாள். ஒரு சிறிய குழந்தையின் வாயில் ஒரு பெரிய இலட்டுருண்டையைத் திணிக்க முற்படாள். இருளிலேயே நெடுங்காலம் அழுந்திக்கிடந்தவனுடைய கண்கள், திடும் எனச் சூரியனது பேரொளியைக் காணநேரின், மிகக் கூசி இடர்ப்பட்டுப் பழுதடைந்துபோகும். ஆதலின் அவற்றிற்குச் சிறிது சிறிதாகவும், படிப்படியாகவுமே ஒளியைக்காட்டி யுணர்த்தி, நலப்படுத்துதல் வேண்டும். இம்முறைமை பற்றியே, இறைவனும் உயிர்களை அவற்றின் தகுதி நோக்கிப் படிப்படியாக ஆட்கொண்டருளுகின்ருன்.

இவ் உண்மையினையே " தையலார் மையலிலே தாழ்ந்து விழக்கடவேனைப், பையவே கொடுபோந்து பாசம் எனும் தாழ் உருவி உய்யும் நெறி காட்டுவித்திட்டு, ஓங்காரத்து உட்பொருளை ஐயன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே " என மணிவாசகரும் அருளிச் செய்தார்.

இறைவன் இங்ஙனம் தான் அடியார்களைப் பையப்பைய, மெல்லமெல்லப் படிமுறையின் ஆட்கொள்ளும் தன்மையினைச் 'சோபான நெறி' எனத் தத்துவ நூல்கள் சாற்றும். கண்ணப்பர் காளத்தி மலையின்மீது ஏறிக் குடுமித் தேவரை அடைந்தமையினை,

" நணனும் அன்பும் முன்பு
    நளிர்வரை ஏறத் தாமும்
பேணுதத் துவங்கள் என்னும்
    பெருகு சோபானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார
    அணைபவர் போல ஐயர்
நீள்நிலை மலையை ஏறி
    நேர்படச் செல்ல லுற்றார் "

எனச் சேக்கிழார் கூறியிருக்கும் திறனும், இங்கு நாம் சிந்திக் கற்பாலது. திருநாவுக்கரசர் பெருமானும் "பேணித் தொழுமவர் பொன்னுலகு ஆளப் பிறங்கு அருளால் ஏணிப்படிநெறி இட்டுக் கொடுக்கும் ஐயாறன் அடித்தலமே" எனத் திருவாய் மலர்ந்திருத்தல் காணலாம்.

இவ்வடிப்படையிலேயே, 'குணம் என்னும் குன்றே நின்றூர்' என்பதுபோலச், சித்தாந்த சைவம் என்னும் தத்துவச் சிகரத்தின் உச்சியிற் சென்று நிற்க விழைவோர், "புறச்சமய நெறி நின்றும், அகச்சமயம் புக்கும், புகல்மிருதி வழி உழன்றும், புகலும் ஆச்சிரம அறத்துறைகள் அவையடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும், அருங்கலைகள் பல தெரிந்தும், ஆரணங்கள் படித்தும், சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத சிரப்பொருளை மிகத் தெரிந்தும் சென்றால், சைவத் திறத்தடைவர்; இதிற் சரியை கிரியா யோகம் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" என்று, சிவஞான சித்தியார் என்னும் சைவச் சாத்திர நூல் சாற்றுகின்றது.

நமது திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த முனி புங்கவராகிய ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள், "மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்து, நன்னெறி யாகிய ஞானத்தைக் காட்டி அல்லது மோட்சத்தைக் கொடா" எனவரும் சிவஞானபோத ஏதுவினை விளக்கியருளுங்கால்,

"முதல்வன் வியாபகமாய் நின்றவாறே விளக்கினும், ஆன்மாக்களின் அறிவு தூல அறிவாதலின் அவ்வாறு விளங்க மாட்டாது, தத்தமக்கு ஏற்ற சோபான முறையே, சிறிது சிறிதாக ஏகதேசமாய் விளங்கிவிளங்கி மேம்பட்டு வந்தே, பின்னர் வியாபகமாய் விளங்கும்" என்றும்;

"செப்பொன் மேருமால் வரையைத் தலைப்படலுறுவார், தென்றிசையினின்றும் வழிவிணுய்க் கொண்டுசென்று, நாவலந் தீவிற் பாரதவருடம் எய்தி, அங்கிருந்து கிம்புருடவருடம் சென்று, அதன்பின் அரிவருடம் அடைந்து, அங்கிருந்து இளாவிருதம் சென்று, அதன்பின் இடையீடின்றி மேருமால் வரைக்கே சென்று சேர்தல்போல, வீடுபேறு விழைவோர் அனைவரும் அவ்வச் சமயந்தோறும் உள்ளன ஆகிய நூல்களைக் கற்றுணர்ந்தும், அவ்வந் நெறிகளில் நின்றொழுகியுமே, இறுதியில் ஞானம் கைவரப்பெற்று வீடுபேறு எய்துவர்" என்றும், தமது சிவஞானப் போதப் பேருரையில் விளக்குவர். அப்பகுதிக்குச் சான்றாக அவர்,

"பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவற்
படிவழி சென்றுசென்று ஏறிச்
சிந்தையும் தானும் கலந்ததோர் கலவி
தெரியினும் தெரிவுரு வண்ணம்,
எந்தையும் தாயும் யானுமென் றிருப்பன்
எண்ணில்பல் லூழிகள் உடனுய்,
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடம் திருவிடை மருதே"

என்னும் கருவூர்த் தேவரின் திருவிசைப்பாச் செய்யுளையே, மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார்.

திருவேடச்சிறப்பு :

(2) சிவபிரானது திருவருளைப் பெற விரும்புபவர் அனைவரும், சிவனடியார்களையும் சிவாலயத்தையும் சிவன் எனவே கொண்டு வழிபடுதல் வேண்டும் என்று, சிவஞானபோதம் சிவ ஞானசித்தியார் முதலிய நூல்கள் வலியுறுத்திக் கூறுகின்றன. சிவனடியார்களை வழிபடுவது மட்டும் அன்றி, அவர்களின் திருவேடத்தையும் கூடச் சிவன் எனவே கண்டு வழிபடுதல் இன்றியமையாததென்று அந்நூல்கள் வற்புறுத்தி அறிவுறுத்துகின்றன.

ஆனல் இந்நாளில் ஒருசிலர் "யாம் உண்மை அடியவர்களையே வணங்குவோம், போலிவேடம் பூண்ட பொய்யர்களை வணங்கோம்" என்று கூறுவர். ஒருவரைப் பொய்யரா, மெய்யரா என்று எங்ஙனம் ஆராய்வது? மெய்யரைப் பொய்யராகவும், பொய்யரை மெய்யராகவும், நாம் நம் அறியாமையால் மயங்கிப் பிறழ உணர்ந்துகொண்டால் என் செய்வது? மெய்யரா, பொய்யர என்று ஆராய்ந்து அறிதலிலேயே காலத்தைக் கழித்து விட்டால், நாம் வழிபாடு செய்வது எப்போது? எப்படி? இனி, பிறரைப் பொய்யரா மெய்யரா என ஆராய்தற்கு நாம் யார்? நமக்கு என்ன தகுதி உள்ளது? நம்மை நாமே மெய்யரா பொய்யரா என்று அறிந்துகொள்ள வாய்ப்பில்லையே, பிறரை ஆராய்ந்து அறிவது எங்ஙனம்?

எனவே, "அடியர் என வருவோர், மெய்யரே ஆயினும் ஆகுக! பொய்யரே ஆயினும் ஆகுக! நாம் நீதிபதிகள் அல்லோம். எனவே அவ் ஆராய்ச்சியில் நாம் தலைப்படுதல் வேண்டா. அவர்

தம் நிலையினை இறைவன் அறிந்துகொள்வான். அதற்கு ஏற்ற பயனை அவர்களுக்கு அவன் தருவான். அவர்கள் அணிந்துள்ள கல்லாடையும், உருத்திராக்கமும், திருநீறும் சிவ சின்னங்கள். ஆதலின் அவ்வேடத்தை நாம் வணங்கி வழிபடக் கடவோம்" என்று திருநாவுக்கரசர் நமக்குத் தெளிவுறுத்தி அருள்கின்றார்.

"எவரேனும் தாம் ஆக; இலாடத்து இட்ட திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி, உவராதே அவர் அவரைக் கண்டபோதே உகந்து அடிமைத்திறன் நினைந்து, அங்கு உவந்து நோக்கி, இவர் தேவர் அவர் தேவர் என்று இரண்டு ஆட்டாது ஒழிந்து, ஈசன் திறமே பேணிக் கவராதே தொழுமின்; நும் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியப்பரைக் காணலாம்" என்பது நாவுக்கரசர் நமக்குச் செய்யும் நல்லுபதேசம். (தொழுதல் வேறு. பழகுதல் வேறு. அன்பினாற் செய்யும் வெறும் தொழுகைக்கு, ஆராய்ச்சி வேண்டா! நெருங்கி பழகுதற்காயின், ஆராய்ச்சி தேவைப்படலாம்.)

சமயச் சின்னங்கள்

இதனால், திருவேடம் என்னும் சிவ சின்னங்களின் சிறப்பையும், இன்றியமையாமையையும் யாவரும் உணரலாம். 'நனிநாகரிகம்' பெருகிவரும் இந்நாளில், நம்மிற் பலர் சமயச் சின்னங்கள் அணிவதற்கு அஞ்சுகின்றனர்; அருவருக்கின்றனர். அவைகளை அணியச் சோம்பற்பட்டு எள்ளிப் புறக்கணிக் கின்றனர். சிவவேடம் பூண்டும் தீயராய் ஒழுகும் சிலரைக்கண்டு அருவருத்தே, அவர்கள் இங்ஙனம் செய்கின்றனர். வேடம் பூண்டோரது செயலின் புன்மையை, வேடத்தின் மீது ஏற்றி அதனை வெறுத்தல் முறையன்று. கற்றவர்கள் ஏதேனும் ஒரு குற்றம் புரியின், அதுபற்றிக் கல்வியையே இழித்துப் பழித்தல் ஒல்லுமோ? அது போல்வதே இதுவும்!

மெய்ப்பொருள் நாயனார், மைபொதி விளக்கேயென்ன மனத்தினுட் கறுப்புவைத்துப் பொய்தவ வேடம் கொண்டு புகுந்த முத்தநாதன் வஞ்சகமாகத் தம்மை வாளாற் குத்திக் கொன்ற போதும், "மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்" எனத்தொழுது வென்றார். இவ்வாற்றான் அவர் சிவவேடத்தின் சிறப்புடைமை உணர்ந்து போற்றியமை தெளியலாம்.

சமய வாழ்வில் மட்டுமேயன்றி, உலகியல் வாழ்விலும், வேடம் மிகமிக இன்றியமையாத தொன்றாக உள்ளது. 'ஒருவன் அணியும் ஆடை அவனை அறிவிக்கும்' (Apparel often proclaims

the man) என்பர் ஷேக்ஸ்பியர். உடையணியாத (mufty) காவலருக்கும், உடை அணிந்துள்ள (In the uniform) காவலருக்கும் இடையே, உணர்வும் மதிப்பும் வேறுபடுதலை, நாம் எளிதில் கண்டுணரலாம்.

இராவணன் கதை

வேடத்தின் முதன்மையினையும் இன்றியமையாமையினையும் வலியுறுத்தும் இராமாயண நிகழ்ச்சி ஒன்றினை, இங்குக் குறிப்பிடுதல் தகும். சீதையின் மீது பொருந்தாக் காமம் கொண்ட இராவணன், அப்பிராட்டியைத் தான் அடைவதற்கு ஏதேனும் வழிகளைக் கூறுமாறு, தனது துணைவர்களை வேண்டினான். பலர் பலவகையான யோசனைகளைக் கூறினர். எதுவும் அவனுக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. இறுதியில் ஒருவன் எழுந்தான், "இராமனைப் போலவே வடிவம் எடுத்துக்கொண்டு சென்றால், சீதையை அடையலாம்" என்றான். அதுகேட்ட இராவணன், "இதனையா பெரியதொரு யோசனையாக எனக்குக் கூறினாய்? வேறு ஏதோ புதிதாகச் சொல்லப்போகின்றனை என்றன்றோ யான் பெரிதும் எதிர்பார்த்தேன். நீ கூறிய இச்சூழ்ச்சி எனக்குத் தெரியாதோ? இச்சூழ்ச்சியினை இதுகாறும் நான் செய்யாமலும் இருப்பேனோ? சீதையை அடைய எண்ணி, யான் இராமனின் வடிவத்தைப் பலமுறை எடுத்துப் பார்த்திருக்கின்றேன். அவ்வடிவம் எடுத்த அளவிலேயே, இராமனுக்குத் தனிச்சிறப்பாக உரிய பிறன்மனைவிழையாமை என்னும் இயல்பு எனக்கும் அமைந்து விடுகின்றதே? அதன்பின்னர் யான் எங்ஙனம் சீதையைச் தேடிச்சென்று அடைதல் கூடும்?" என்று கூறிச் சலித்துக்கொண்டான் இராவணன் என்பது கதை.

இவ்வாறே இராபர்ட் ப்ரவுனிங் என்னும் கவிஞர், தாம் இயற்றிய கவிதை ஒன்றில் ஒரு செய்தியைக் குறிப்பிடுகின்றார். ஒரு மனிதன் போப்பாண்டவரிடம் சென்று "தாங்கள் ஏன் இவ்வளவு அலங்காரம் செய்து கொள்ளுகின்றீர்கள்? தங்களுக்கு இத்தனை ஆடை அணிகலன்கள் எற்றுக்கு? தாங்கள் இக்கோலம் பலவும் புனைவது ஏன்? தங்களுக்காகச் செய்யப்படும் இந்த ஆரவார ஆடம்பரங்கள் எல்லாம் எதன் பொருட்டு?" என்று வினவினான். அதற்கு அவர், நான் இதையெல்லாம் செய்து கொள்வதற்குக் காரணம் சொல்லுகின்றேன், கேள்! இவ் வேடத்தை அல்லது நாடகத்தின் நடிப்பைச் செய்துகொண்டே வருகையில், என்றேனும் ஒருநாள் எனக்குத் தெரியாமலேயே என்னுள் இறைவன்பால் உண்மைப் பக்தி உதித்துவிடக்

கூடுமன்றோ? ' என்று விடையிறுத்தார். என அக்கவிதை கூறுகின்றது. இவற்ருல் என்ன தெரிகின்றது? வேடத்திற்கும் பண்பிற்கும் மிக்க தொடர்பு உண்டு என்பதன்றோ?

ஆசிரியர் மாதவச் சிவஞானயோகிகள், தமது சிவஞான போதப் பேருரையில், திருவேடத்தின் இயல்பினையும், சிறப் பினையும் பின்வருமாறு விளக்கி அருள்கின்ருர்: "காமக் கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடை, சாந்து, அணிகலன் முதலியன, காமுகரை வசிகரித்து இன்பம் செய்யுமாறுபோல, திருநீறும், தாழ்வடமும் கல்லாடைபும் ஆகிய திருவேடம், மெய் யுணர்வுடையாரைக் காட்சி மாத்திரையானே வசிகரித்து இன்பம் செய்யும்". இதனை வலியுறுத்த அவர் எடுத்துக்காட்டும் மேற் கோள், பின்வரும் திருப்பல்லாண்டுச் செய்யுளாகும்.

"சேலும்கயலும் திளைக்கும் கண்ணார் இளம்
கொங்கையிற் செங் குங்குமம்
போலும் பொடியணி மார்புஇலங்கும் என்று
புண்ணியர் போற்றிசைப்ப,
மாலும் அயனும் அறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின் ருனுக்கே
பல்லாண்டு கூறுதுமே"

அறமும் மறமும்

(5) திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள், உலக இலக்கியங் களுள் தலைசிறந்த ஒன்ருக மதிக்கப்பெறுகின்றது. அற நூல்களுள் தனிப்பெருஞ் சிறப்பிடம்பெற்று அத்திருக்குறள் திகழ் கின்றது. "ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தி இன்றெனா அறம் பாடிற்றே ஆயிழை கணவ" என்னும் புறநானூற்றுப் பாடல் அடிகளில், திருக்குறளை "அறம்" என்றே போற்றிச் சிறப்பித்துள்ளார் ஆலத்தூர்கிழார் என்னும் சங்ககாலப் புலவர்! அத்தகைய சிறப்புமிக்க திருக்குறள் "மனத்துக்கண் மாசில ஞதல் அனைத்து அறன், ஆகுல நீர பிற" என்றும்; "அழுக்காறு அவாவெகுளி இன்ஞச்சொல் நான்கும், இழுக்கா இயன்றது அறம்" என்றும், அறத்திற்கு இலக்கணம் வகுக்கின்றது.

'மனத்துக்கண் மாசு இலன் ஆதல்' என்பது, நம்முடைய முயற்சியினுல் மட்டுமே நமக்கு எளிதில் கைகூடுவது அன்று. அழுக்காறு அவா வெகுளி இன்ஞச்சொல் என்னும் நான்கு தீய

குணங்களைப் போக்கிக் கொள்ளுவதும், நம்மால் இயலுவ தன்று. இவற்றிற்கு இறையருளின் துணையும் இன்றியமையாததாக உள்ளது. இறையருளின் துணை இருந்தாலன்றி, நாம் நம் மனத்தை அடக்கி ஆளவோ, தூய்மை செய்து கொள்ளவோ, ஒரு போதும் இயலாது என்பது திண்ணம்.

ஆதலின், நமது சைவசித்தாந்த சந்தான ஆசிரியர்கள், அறத்திற்குச் சிறப்பிலக்கணம் ஆராய்ந்து அருளிச் செய்திருக்கின்றனர். "இறைவனுடைய கட்டளையை நிறைவேற்றுதலே அறம் ஆகும். இறைவனது திருவருளின் வயப்பட்டு, அன்பு மேலிட்டுச் செயப்படுகின்ற செயல்கள் யாவும் அறச்செயல்கள்; இறைவனை மறந்து அல்லது புறக்கணித்துச் செய்யப்படுகின்ற செயல்கள் அனைத்தும் மறச்செயல்கள், அல்லது வீணான பயனில் செயல்களாகும்" என்பது, நமது சமயச் சான்றோர்களின் கருத்து.

"காண்பவன் சிவனே ஆனால்,
அவனடிக்கு அன்பு செய்கை
மாண்பு அறம்; அரன்றன் பாதம்
மறந்துசெய் அறங்கள் எல்லாம்
வீண்செயல்: இறைவன் சொன்ன
விதிஅறம்; விருப்பொன்றில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும்
பூசனை புரிந்து கொள்ளே"

என்று சிவஞான சித்தியார் கூறுதல் காணலாம்.

இதுமட்டுமன்று. அறம் அல்லது மறம் என்பதனை இதுதான் என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுதல் இயலாது. சில சமயங்களில் அறமே மறமாகவும், மறமே அறமாகவும் மாறுபட்டு முடிவதும் உண்டு. அரனடிக்கு அன்பு இல்லாதவர் செய்யும் புண்ணியமும் பாவமாக முடியும். அரனடிக்கண் அன்புடையவர்கள் செய்கின்ற பாவமும் புண்ணியமாகிவிடும். தக்கன் வேத வேள்வி செய்தும் பாவியானான். சேய்ஞலூர் விசாரசருமர், தாதையைத் தாள்தடிந்த பெருங்குற்றம் புரிந்தார் ஆயினும், தொண்டர்க்கு நாயகமாம் சண்டேசப் பெரும்பதம் அளிக்கப் பெற்றார்.

ஆதலின் "அரனடிக்கு அன்பு இலாதார் புண்ணியம் பாவமாகும்; பரன் அடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்;

வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி, நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மையாயிற்று'' என்று சிவஞான சித்தியார் கூறுகின்றது. இன்னோரனைய தத்துவ சாத்திர முடிவுகளுக்கெல்லாம், அடிப்படையும் சான்றுமாகப் பின்வரும் திருவிசைப்பாத் திருப்பல்லாண்டுப்பாடல் விளங்குதல் காணலாம்.

தாதையைத் தாள்அற வீசிய சண்டிக்கு
இவ்வண்டத்தொடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போகனமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

முத்தி வகைகள்

(4) வீடுபேற்றின் இயல்பு பற்றி வெவ்வேறு சமயநூல் வெவ்வேறு வகையாகக்கூறும். நமது சமய தத்துவ நூல்களுள் சிவஞான தீபம் என்பது ஒன்று. சீவன் முத்தர்கள் மூன்று வகைகளில் வீடுபேறு அடைவர் என அந்நூல் கூறுகின்றது. பாசத்தில் அழுந்திய ஏனைய மக்களைப்போல, உடம்பினைப் பிணமாகும்படி விட்டுச் செல்லாமலும், தங்கள் உடம்பினைச் சிவலோகத்திற்கு உடன்கொண்டு செல்லாமலும், தம் உடம்பு கற்பூரம்போற் கரைந்துவிட, இருந்த இடத்திற்றானே சிவ நிறைவிற் கலந்துவிடுவது ஒருவகை. இவ்வாறன்றி உடலுடனேயே சிவலோகத்திற்குச் சென்று சேருவது மற்றொரு வகை. இவ்விரு திறமும் இன்றி இம்மண்ணுலகதிற்றானே உடம்பினைவிட்டு நீங்கி, இறைவனின் திருவருளில் கலப்பது பிறிதொரு வகை.

இம்மூவகைகளுள் முதலதற்குத் திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும்; இரண்டாவதற்கு நம்பியாரூரரும் சேரமான் பெருமாளும்; மூன்றாவதற்கு மெய்ப்பொருள்நாயனர் ஏனாதி நாயனர் முதலியவர்களும், முறையே உரிய எடுத்துக்காட்டுகள் ஆவர் என்று, சிவஞான தீபம் (172) என்னும் சிறந்த சாத்திர நூல் சாற்றுகின்றது. அந்நூலின் கூற்றுக்கு அரண் செய்யும் வகையில்,

"களையா உடலோடு
சேரமான் ஆரூரன்
விளையா மதம்மாரு
வெள்ளானை மேற்கொள்ள,
முளையா மதிசூடி
மூவா யிரவரொடும்
அளையா விளையாடும்
அம்பலம்நின் ஆடரங்கே"

என்னும் திருவிசைப்பாப் பாடல், அமைந்திருத்தல் அறிந்து இன்புறுதற்குரியது.

காணும் உதவியும், காட்டும் உதவியும்

உயிர்களுக்கும் கடவுளுக்குமுள்ள உறவைக் குறித்து, வெவ்வேறு சமயங்கள் வெவ்வேறு வகைகளிற் கூறுகின்றன. கடவுளும் உயிர்களும் பொன்னும் பணியும்போல் அபேதம் என்றும், இருளும் ஒளியும்போல் பேதம் என்றும், சொல்லும் பொருளும் போல் பேதாபேதம் என்றும் தத்துவ நூலறிஞர்கள் பற்பல வகைகளில் கூறுவர்.

ஆனல் நமது சைவ சித்தாந்தமோ, கடவுள் உயிர்களுடன் ஒன்ருகவும், வேருகவும், உடனுகவும் இயைந்து நிற்கின்ருன் எனக்கூறும். கடவுள் கலப்பினுல் உடலின் உயிர்போல உயிர்களேயாய் ஒன்ருகவும், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன் போல உயிர்களின் வேருகவும், உயிற்கு உயிராதற் றன்மையாற் கண்ணொளியின் ஆன்ம போதம்போல உயிர்களோடு உடனுகவும் இயைந்து நின்று, அவற்றை இயக்கி வருகின்ருர் என்று நமது சிந்தாந்த நூல்கள் கூறுகின்றன. உயிர்கள் நிலைப்பதற்கு இறைவன் ஒன்ருய் நிற்கின்ருன்: உயிர்கள் பொருள்களை அறியும்படி அறிவித்ததற்கு இறைவன் அவற்றின் வேருய் நிற்கின்ருன்; பொருள்களை அறியினும் அறிந்தவாறே அனுபவிக்கும் சுதந்திரம் உயிர்களுக்கு இல்லாமையால், பொருள்களை அனுபவிக்கும் வண்ணம் செலுத்துதற்கு இறைவன் உயிர்களோடு உடனுய் நிற்கின்ருன். இல்லையேல், உயிர்கள் தாமே நிலைத்தலும், பொருள்களை அறிதலும், அனுபவித்தலும் இல்லையாய் முடியும்.

இறைவன் உயிர்களுக்குச் செய்யும் உதவியினைக் காட்டும் உதவி என்றும், காணும் உதவி என்றும், இரண்டாகப் பெரியோர்கள் கூறுவர். உயிர்கள் ஒரு பொருளைத் தாமே அறியும்

இயல்புடையன அல்ல. ஆதலின் இறைவனே உயிர்களுக்குப் பொருள்களைக் காட்டி அறிவிக்கின்றான். இது **காட்டும் உதவி** எனப்படும். இங்ஙனம் காட்டும் உதவி மட்டுமேயன்றிக், காணும் உதவி என்பதனையும் உயிர்களுக்கு இறைவன் செய்யவேண்டி இருக்கின்றது.

கண் ஒரு பொருளைக் காணவேண்டுமாயின், அக்கண்ணி னிடத்து இருக்கின்ற இருளை நீக்கி, விளக்கு அதற்கு ஒளி யைத் தருதல் வேண்டும். அதுமட்டுமேயன்றிக் காண்பதற் குரிய பொருளை மறைத்துள்ள இருளையும், அவ்விளக்கொளி நீக்குதல் வேண்டும். கண் விளக்கொளியோடு கூடினும், பொருள் இருளில் இருக்குமேயாயின் கண் அதனைக் காணுதல் இயலாது. விளக்கொளி கண்ணின் இருளை நீக்கிப் பொருள் களைக் காட்டுவதுபோல், இறைவன் உயிர்களின் அறியாமையை நீக்கிப் பொருள்களை அறியும் ஆற்றலை உயிர்களுக்குத் தருகின்றான். கண்ணுக்கு விளக்கொளியால் காணும்தன்மை ஏற்படினும், பொருள் இருளில் இருப்பின், கண் அதனைக் காணுதல் இயலாமையின், கண்ணிற் கலந்த விளக்கொளியே, காண்பதற்குரிய பொருளிலும் சென்று படிந்து கலத்தல் வேண்டும் அதுபோல இறைவன் உயிர்களுக்கு அறியும் திறன் அளிப்பதுடன், அறியப்படும் பொருள்களிலும் சென்று ஒன்றிக் கலந்து நின்று, அவற்றினை உயிர்கள் அறியச் செய்வித்தலும் வேண்டும். உயிர்கள் பொருள்களை அறிய, இறைவனும் அவ் வுயிர்களோடு உடனிருந்து அப்பொருள்களைத் தானும் கண்டு அறிதல் இன்றியமையாதது. மாணவன் ஒரு நூலைப் படிப் பதற்கு உதவியாக, அவனோடு உடனிருந்து ஆசிரியரும் அந்நூலைப் படித்தல் போல்வது இது! இதனைக் **காணும் உதவி** என நூல்கள் கூறும்.

இங்ஙனம் இறைவன் உயிர்களுக்குக் காட்டும் உதவியும், காணும் உதவியுமாகிய இரண்டையும் செய்துவரும் திறனையே, அத்துவித சம்பந்தம் எனத் தத்துவ நூல்கள் கூறுகின்றன. அத்துவிதமாவது, பேதப்பொருள் இரண்டும், தம்முள் அபேத மாதற்குரிய சம்பந்த விசேடம், இதனையே "அறிவொளிபோற் பிறிவரும் அத்துவிதமாகும் சிறப்பு" என உமாபதி சிவம் குறிப்பிடுவர்.

சிவஞானபோதத்தில் காட்டும் உதவி ஐந்தாம் சூத்திரத்தினும், காணும் உதவி பதினோராம் சூத்திரத்தினும் விளக்கப் பெற்றுள்ளது. காணும் உதவி காட்டும் உதவியின் பின்னர்த் தாய் நிகழும் என்னும் உண்மையினை, இவ்வமைப்பு உணர்த்தி நிற்கின்றது. இறைவன் உடனாக நின்று, பொருள்களைத் தானும் கண்டாலன்றி, உயிர்கள் அவற்றைக் காணுதல் இயலாது.

உயிர் ஒன்றினை அறிதல், இறைவன் உடனின்று அறிதலை அன்றி, அறிவித்தல் மாத்திரையான் உயிர்களுக்கு அமையாது என்னும் உண்மையை விளக்குவதற்கு, நமது திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள் திருவிசைப் பாவில் திருமாளிகைத் தேவர் "தொண்டனேன் விளம்புமா விளம்பே" தொண்டனேன் நினையுமா நினையே" "விரும்புமா விரும்பே" "தொடருமா தொடரே" "நுகருமா நுகரே" என்று அப்பதிகத்தின் பாடல் ஒவ்வொன்றின் ஈற்றிலும் அருளிச் செய்துள்ள தொடர்களை எடுத்து, மேற்கோள் காட்டியிருத்தல் காணலாம்.

"ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே"

இங்ஙனம் சைவ சித்தாந்தத்திற்கே தனிப் பெருஞ் சிறப்பாக உரிய, இவ்வரிய பெரிய தத்துவ உண்மையினை விளக்குகின்ற பகுதியில், சைவத் திருமுறைகளுள் ஒன்பதாவதாகச் சிறந்து திகழும் திருவிசைப்பாப் பாடல்களினின்றே, சிவஞான சுவாமிகள் மேற்கோள் காட்டியிருத்தல் ஒன்றே, திருவிசைப்பாவின் தனிப் பெருஞ் சிறப்பினை மலையிலக்கென விளக்கப் போதிய தகுந்த சான்றாகும்.

முடிவுரை

இதுகாறும் கூறியவற்ருல், திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்னும் ஒன்பதாம் திருமுறையினைச் சாத்திர நோக்குக் கொண்டு ஆராய்ந்து நோக்கினுற் புலனுகக்கூடிய ஒருசில கருத்துக்களை மட்டும் இங்குக் கண்டோம். இது 'விரிப்பிற் பெருகும்: தொகுப்பின் எஞ்சும்'. எனவே 'சமுத்திரகலசநியாயம்' பற்றியும்; 'தாலிபுலாக நியாயம்' பற்றியும், ஒரு சில கருத்துக்களை மட்டுமே இங்கு இயன்ற அளவு காணமுடிந்தது. "கடல் கண்டோம் என்பார் யாவரே முடிவுறக் கண்டார்?" "கரையற்ற தொன்றைக் கரை காணலாகுமோ?"

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வாழ்க!
திருமுறைகள் பரவுக!
வையகம் துயர்தீர்க!

— ஆசிரியர்.

பார்வையாளர் — உரை

14—2—71

★

T. M. நாராயணசாமி பிள்ளை,
அசோக் பவன், ஜங்ஷன் ரோடு, திருச்சி-1.

★

துன்ப மின்றித் துயரின்றி யென்றும்நீர்
இன்பம் வேண்டின் இராப்பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன் இறைவனென் றுள்குவார்க்
கன்ப னாயிடும் ஆனைக்கா அண்ணலே. — அப்பர்

அன்பர்களே ! வணக்கம்.

திருமுறைகள் பாரம்பரியமாய் நமக்குக் கிடைத்திருக்கிற போக்கிஷம். அவைகளின் மதிப்பைச் சொற்களால் எடுத்துச் சொல்ல வொண்ணாது. அவைகளை ஓதி ஓதி, கேட்டுக் கேட்டு, உணர்ந்து உணர்ந்து, நாம் உய்யவேண்டும். அப் படிச் செய்தால் அப்பர் வாக்கின்படி நமக்குத் துன்பமேது ? துயரமேது ? எல்லாம் இன்பந்தான்; எப்பொழுதும் இன்பம் தான்; அந்த இன்பமும் சொல்ல வொண்ணாதது. மக்கள் இந்த இன்பத்தை உணர்ந்து அனுபவிக்கத் தாங்கள் நடத்தும் கருத் தரங்கு உபயோகமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மக்கள் மனத்தில் திருமுறைகளை நன்ருகப் பதியவைக்க வேண்டியது மிக்க அவசியம். இப்பொழுது நாத்திகம் பரவி வருகிறது. நம்முடைய பண்பும் குறிக்கோளும் வாழ்வும் மங்கி வருகின்றன. விக்ஞானத்தைச் சாக்காகச் சொல்லி உண்மைச் சமயம் பாழாகி வருகின்றது. விக்ஞானத்திற்கும் சமயத்திற்கும் விரோதமே கிடையாது. பெரிய பெரிய விக்ஞானிகள் சமயத்தின் உண்மையையும் உயிருக்கு அது செய்யும் பயனையும் உணர்ந்து சொல்லியிருக்கிருர்கள். சமீபத்தில் விண்ணில் பறந்த வீரர் களும் (அவர்கள் பெரிய விக்ஞானிகள்) கஷ்டம் வந்துற்ற போது பரம்பொருளைத் தியானித்தார்கள்.

நம்முடைய திருமுறைகள் இலேசான வகையில், அன்பின் வழியில், சமய உணர்ச்சியை ஊட்டுகின்றன. உடலுக்கு உயிர் இருப்பதுபோல நம் உயிருக்கு உயிர் பரம்பொருள். உடல் வளர்ச்சிக்கு எவ்வாறு உணவு அவசியமோ, அப்படியே உயிர் வளர்வதற்குச் சமயம் அவசியம். திருமுறைகள் நமது உயிரைப் பரமனிடத்தில் லயப்படும்படி செய்கின்றன.

தனிமனிதன் வாழ்வில் முன்னேறுவதற்கும், துன்பம் துயரில்லாமல் இன்பமாக வாழ்வதற்கும் திருமுறைகளும கோயில் வழிபாடும் மிகவும் முக்கியமான சாதனங்கள். நம்முடைய மனத்தைத் திருமுறைகள் நையவைக்கின்றன; ஆணவத்தை அடக்குகின்றன. பரம்பொருளின் சொரூபத்தை நெஞ்சில் எழுப்புகின்றன. எல்லோரும் கையாளலாம்; யாரும் ஒதுக்கப்படவில்லை.

இறைவனுடைய பாதத்தை எல்லோருக்கும் கிட்டும்படி செய்கின்றன. மனச்சாந்தியும் நிறையக் கிடைக்கும். நம்முடைய பாவங்கள் போகவேண்டுமானால், முன்செய்த வினைகள் அறுந்து விழவேண்டுமானால், இடர்கள் தொலைய வேண்டுமானால் கடவுளைத் திருமுறைகள் மூலமாகத் துதிசெய்ய வேண்டும். இந்த வழியைத்தான் நம் திருமுறை அருளாளர்கள் வகுத்துக் காட்டியுள்ளனர். சித்தமலம் அறுபட்டுச் சிவகதியடையலாம். இந்தத் திருமுறைகளால் சிவனை நம் உள்ளத்தில் எழுப்பி, அவனை எங்கும் போகாமல் "சிக்கென"ப் பிடித்து வைத்துக்கொள்ளும் வகையைக் காட்டியிருக்கிறார்கள்.

எப்படித் தனிமனிதன் உயர்வுக்குத் திருமுறைகள் பயன்படுகின்றனவோ, அப்படியே சமுதாய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் நம்முடைய கோயில் வழிபாடும் திருமுறைகளும் அவசியமாகும். எந்தச் சமுதாயத்தால் கோவில்கள் நன்றாகப் பாதுகாக்கப்பட்டுப் பூஜைகள் சரியாக நடைபெற்று வருகின்றனவோ அந்தச் சமுதாயம் தீமைகளுக்கு உட்படாது. கோவில்கள் பூஜை முக்கியமாகத் தேச நன்மைக்காகவும் சமுதாய வளர்ச்சிக்காகவும் தான் ஏற்பட்டன. திருமுறைகள் ஓதப்படாமல் நம்முடைய கோவில்களில் பூஜைகள் நடத்தக்கூடாது. கோவில் வழிபாடும் பூஜைகளும் செம்மையாக நடக்குமானால் நாத்திகம் தானாகவே அகன்றுவிடும். நம்முடைய கோவில்களும் திருமுறைகளும் பகுத்தறிவுக்கு விரோதமல்ல. சந்தேகமே வேண்டா.

நம்முடைய கோவில்களும் திருமுறைகளும் ஓங்கி உயர்ந்து வளர்ந்து மக்களுக்கு நல்ல பயனை அருளும்படி மருதூர் இறைவனையும் இறைவியையும் வேண்டிக்கொள்கிறேன்.

தங்கள் தொண்டு, பெருந்தொண்டு. நன்றி.

வாழ்க திருவாவடுதுறை மடமும் மடத்துச் சன்னிதானமும்.

சம்பந்தர் பாட்டு ஒன்றைச் சொல்லி என் நல்லுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

"வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."



பத்தாந் திருமுறை — திருமந்திரம்

★

பார்வையாளர் :

திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராசப்பிள்ளை பி. ஏ.,

★

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசன்னிதானம் அவர்களின் பொன்னர் திருவடிகளுக்கு என்னுடைய, பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அறிஞர் பெருமக்களே, பெரியோர்களே, தாய்மார்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாதிரி இந்நிகழ்ச்சியிலே என்னை அழைத்துப் பங்கு கொள்ளுமாறு பணித்த குருமகாசன்னிதானம் அவர்கட்கும், இங்கு வீற்றிருக்குப்படியான மேலாளர் அவர்கட்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் மூன்றும்நாள் — திருமுறைக் கருத்தரங்கு ஆரம்பமாகின்றது. ஒன்பது திருமுறைகள், அவற்றின் கருத்துக்கள் எல்லாம் ஆராயப்பட்டன. இன்றைக்குக் காலை 10-ஆந்திருமுறை பற்றி அன்பர்கள் ஆராய இருக்கின்றார்கள். இந்த விழாவிலே என்னைப் பார்வையாளராக இருக்கும்படியாகப் பணித்திருக்கின்றார்கள். பார்வையாளர் என்றபோது, நான் இந்தக் கட்டத்தைப் பார்த்துக்கொண்டு இருக்கவேண்டிய ஒரு பொறுப்புத்தான் என்று எண்ணுகிறேன். ஏனென்றால் அறிஞர்கள் — புலவர்கள் மூவர் வந்திருக்கிறார்கள்.

ஒருவர் எங்கள் அ ச. ஞானசம்பந்தம் அவர்கள். அடுத்து முதுப்பெரும் புலவராகிய ப. இராமநாதன் பிள்ளை அவர்கள். அடுத்தப்படியாக மகாவித்துவான் அருணைவடிவேல் முதலியார் அவர்கள். இம்மூவர் பெருமக்களும் மூன்று பொருள்களைப்பற்றி சிந்திக்கப் போகின்றார்கள். முதலாவதாகத் திருவாளர்

அ. ச. ஞானசம்பந்தம் அவர் திருமந்திரத்திலே பொருள்நிலை என்பதைப் பற்றிப் பேசப் போகின்றார்கள். அடுத்துத் திருவாளர் அருணைவடிவேல் முதலியார் அவர்கள் உலகியலும்-மெய்நெறியும் என்ற பொருள்பற்றி பேசப் போகின்றார்கள். மூன்றாவதாக திருவாளர் இராமநாதம் பிள்ளை அவர்கள் "திருமந்திரமும் — திருத்தொண்டர் புராணமும்" என்பது பற்றிப் பேசப் போகின்றார்கள். இந்த மூன்று பேச்சுக்களையும் அறிஞர் பெருமக்களை முறையாகப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நான் இந்தக் கட்டத்திலே முன்னே தெரிவித்தது போலப் பார்வையாளன் என்ற முறையிலேதான் இருக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து. மேலும் மேலைநாட்டுக்குச் சென்ற பெருமக்கள் எல்லாம் வந்து இருக்கின்றார்கள். அந்த நாட்டிலே கூட்டம் என்று ஆரம்பித்தால் கூட்டத்திலே தலைவர் என்று ஒருவர் இருப்பார். அந்தத் தலைவர் பேச்சாளர்களைக் கூட்டத்தினர்க்கு அறிமுகப்படுத்திவிட்டு உட்கார்ந்து விடுவாராம். அதேபோலத் தலைவருக்கே அப்படி இருக்குமானால், பார்வையாளர் என்ற முறையிலே நான் திருமந்திரத்தைப் பற்றியோ திருமூலரைப் பற்றியோ முதலிலேயே அதிகமாகச் சிந்திக்காமல் பேசுபவர்களை நம்மோடு உடனாக இருந்து சிந்தித்துப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய கருத்துக்கள்—எவையேனும் இருக்குமானால், திருவருள் அந்நிலையில் உணர்த்தினால் — கடைசியிலே நான் சொல்கிறேன்.

பார்வையாளர் முடிவுரை*

★

திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராசப்பிள்ளை, பி.ஏ.,

★

திரு. ஜி. வரதராசப் பிள்ளை அவர்கள் தம்முடைய கருத் துரையில் — பின் உரையில் குறிப்பிட்டதாவது :

தாய்மார்களே, பெரியோர்களே, — இங்கே அரிய பொருளைப் பற்றி எல்லாம் சிந்தித்தார்கள். முதலிலே திரு. ஞானசம்பந்தம் அவர்கள் அழகாகப் பொருள் நிலைபற்றிப் பேசினார்கள். ஒரு பாட்டின் கருத்தை, அதாவது,

''உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே''.

என்ற பாடலின் கருத்தைச் சொன்னார்கள். உடம்பு நிலையானது அன்று. அஃது அழியக் கூடியது. ஆனால் அங்கே உறு பொருளை — சிவனைக் கண்டேன். அதனாலே அதைப் போற்று கிறேன் எனத் திருமூலர் கூறிய உயர்ந்த கருத்தை எடுத்துக் காட்டினார்கள். அதன் பின்பு அவர்கள் பல கோணத்தில் நின்று பொருள் நிலை பற்றிய ஆராய்ச்சியைச் செய்து திருமந்திரம் முழு வதிலுமுள்ள இயல்புகளை எடுத்துக் காட்டினார்கள்.

முதுபெரும் புலவர் மகாவித்துவான் அருணை வடிவேல் முதலியார் அவர்கள் உலகியலும் மெய்ப்பொருளும் என்பது பற்றிச் சிறப்பாகப் பேசினார்கள். திருமந்திரம் ஒரு முழு நூல் என்ற உண்மையைக் குறிப்பாக எடுத்துக் காட்டினார்கள். அதன் பின்பு வந்த முதுபெரும் புலவர் அவர்கள் திருமந்திரத்திற்கே உரை கண்டவர்கள்.

---

* திரு. அ. ச. ஞானசம்பந்தம் முதலிய மூவர் உரைக்குப் பின்னர் நோக்குக.

தமிழ்பற்றி விரிவாக எடுத்துச் சொல்லித் தமிழ் எவ்வளவு முக்கியத்துவம் உடையது என்பதை எடுத்துக் காட்டினார்கள்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே."

என்ற திருமூலர் வாக்கைச் சான்றாகக் காட்டினார்கள். அத்துடன் எளிமையான முறையில் அறத்தை எப்படி எல்லாம் செய்யலாம் என்பதை விளக்கினார்கள்.

"யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாப்பிறர்க் கின்னுரை தானே" —திருமந்திரம்

நீண்டநேரம் ஆகிவிட்டது. ஆயினும் நீங்கள் இரண்டு கருத்துக்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்டு நான் சொல்ல ஆசைப்படுறேன்.

அஃதாவது திருமந்திரம் என்ற நூல் வாழ்க்கை நூல். சாத்திரம் மட்டும் அன்று, தோத்திரம் மட்டும் அன்று — வாழ்க்கைக்குரிய நூல் என்ற உண்மையை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

திருமூலர் இங்கே வந்து ஆவடுதுறையில் தங்கிப் பல்லாண்டுகள் தவம் இருந்து மூவாயிரம் பாடல்களைப் பாடினார். இந்த மூவாயிரம் பாடல்களிலும் ஒரே கருத்து உயிரோட்டமாக ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நாம் எந்தத் துறையில் நின்றாலும் இறைவனை அடையவேண்டும் என்கிற லட்சியத்தைக் கொண்டு வாழ வேண்டுமென்பதைப் பலபடியாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

இல்லறத்தில் நின்றே இறைவனை மறக்காது செயலாற்றி இல்வாழ்க்கையில் சிறப்பு அடையமுடியும் என்று மகாவித்துவான் அவர்கள் சொன்னார்கள். அதைத்தான் திருமூலர் 3ஆம் தந்திரத்தில் பரியங்கயோகம் என்ற தலைப்பிலே சொல்கிறார். பரியங்கம் என்றால் கட்டில். இல்லற வாழ்வில் இருந்துகொண்டே பயிலுகின்ற யோகம் பரியங்கயோகம். அதில் முதல் பாட்டு,

"பூசு வனவெல்லாம் பூசிப் புலர்த்திய
வாச நறுங்குழல் மாலையுஞ் சாத்திக்
காயக் குழலி கலவி யொடுங்கலந்
தூசித் துலையுறத் தூங்காது போகமே."

பூச வேண்டிய சந்தனச் சாந்து முதலியன பூசி, வாசனை பொருந்திய மாலையும் சாத்தி, மனைவியோடு கூடி வாழும்போது சிரசின் உச்சியில் (சுழுமுனை நாடியில்) மனத்தை நிறுத்தினல் இன்பம் பெருகும். அவ்வாறு வாழ்வு அமையுமாயின் விந்து செயம் உண்டாகி ஒளிபெற்றுத் தலைவனாக வாழலாம்.

"அங்கப் புணர்ச்சியு மாகின்ற தத்துவ
மங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப் படாமற் பரிகரித் தும்மைத்
தங்கிக் கொடுக்கத் தலைவனு மாமே.

விந்துவே புருவநடுவில் ஒளி என்றும், சிரசுக்கு மேல் சிவம் என்றும் கூறுவர். விந்து செயத்தினல் சிவம் விளங்கும். ஆகவே இல்லறவாழ்வுக்கு இந்நூல் எத்துணைப் பயனுடையது என்பதை அறியலாம்.

இன்னும், திருமூலருடைய கருத்தை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். திருமூலர் பிரணவயோகத்தைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். 3 ஆம் தந்திரத்தில் இமயம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை தியானம், சமாதி ஆகியவற்றை அஷ்டாங்க யோகம் என்ற தலைப்பில் பேசுவார். இன்னும் பலப்பல யோகங்களை அவர் குறிப்பிடுகிறார் என்றாலும் அவர் முக்கியத்துவம் கொடுப்பது பிரணவயோகத்துக்குத்தான். பிரணவம் என்றாலும் ஓம் என்றாலும், ஒரு வார்த்தை என்றாலும் ஒன்றுதான். மணிவாசகப்பெருமான்,

" ஓங்கார மாய்நின்ற மெய்யா "

என்பர். மணிவாசகரும், திருமூலரும் ஒரே நெறியில் சென்றவர்கள். திருமூலர் பிரணவ சமாதி என்ற தலைப்பில்,

" ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே "

என்பதனல் ஒரு வார்த்தை, ஒரு மொழி ஆகியவை பிரணவத்தைக் குறிக்கின்றன என்று தெரிந்துகொள்ள முடிகிறது. அது மட்டும் அன்று. ஓங்காரமே உருவமாக, அருவமாக, பல பேதமாக, அதுவே வீடுபேறாகவும் உள்ளது.

இந்தப் பிரணவ யோகத்தை நாம் எவ்வாறு சிந்திப்பது என்று எண்ணும்போது அதற்கும் அவர் ஒரு முறை வகுத்திருக்கிருர். அந்தப் பாடலைப் படித்துக் காட்டுகிறேன்.

“ சிந்தையில் வைத்துக் சிராதியி லேவைத்து
முந்தையில் வைத்துத்தம் மூலத்தி லேவைத்து
நிந்தையில் வையா நினைவதி லேவைத்துச்
சந்தையில் வைத்துச் சமாதிசெய் வீரே ”

உணர்வு என்று சொல்வார்களே, (வைபரேஷன்) அதைச் சிந்தையில் வைத்து, சிரசின்மேல் வைத்து — புருவ நடுவில் வைத்து — மூலாதாரத்திலே வைத்து மீண்டும் சந்திக்கின்ற இடமாகிய ஆஞ்ஞாசக்கரத்தில் வைக்கவேண்டும். இது பயிற்சி முறை. இன்னும் வாய்மை என்ற தலைப்பில்,

“ உய்யும் வகையால் உணர்வினுல் ஏத்துமின்
மெய்யன் அரனெறி மேலுண்டு திண்ணெனப்
பொய்யொன்று மின்றிப் புறம்பொலி வார்நடு
ஐயனும் அங்கே அமர்ந்துநின் ருனே ”

என்பதாகக் குறிப்பிடுகிருர். ஞானேதயம் என்ற தலைப்பில்,

“ நானென்றுந் தானென்றும் நாடிமேன் நாடலும்
நானென்றுந் தானென் றிரண்டில்லை யென்பது
நானென்ற ஞான முதல்வனே நல்கினுன்
நானென்று நானும் நினைப்பொழிந் தேனே ”

நான் வேறு அவன் வேறு என்று நாடினேன். ஆனல் நான் வேறு, அவன் வேறு என்பதில்லை, என்ற உண்மையை அவனே நல்கி நான் என்ற முனைப்பை ஒழியச் செய்தான். “யான் எனது அற்ற இடமே திருவடியாம்” ஆதலின் திருவடிக் காட்சி கிட்டும் என்பது புலனுகிறது.

“ சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையி லுள்ள சிவனும் வெளிப்படுமச்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி லுள்ள சிவனிருந் தானே ”

சிவன் எங்கிருந்தும் வரவில்லை. இந்தச் சிந்தையுள்ளே அவன் இருக்கிருன் என்று குறிப்பிடுகிருர்.

இன்னொரு கருத்தையும் திருமூலர் திருமந்திரத்தால் தெரிந்து கொள்ளவேண்டும். திருவைந்தெழுத்தைப்பற்றிப்-பல நுட்பமான கருத்துக்களை எல்லாம் தெரிவிக்கிருர். சிவாயநம எனச் சிந்தித்தால், நாபிக் கமலத்தில் நமச்சிவாய உதித்து மேலே சிவாய விளங்கும் என்ற நுட்பங்களை எடுத்துக் காட்டுவார். விரிப்பின் பெருகும். திருக்கூத்துத் தரிசனம் என்ற தலைப்பில் நடராச தத்துவத்தை நம் திருமூலர் சிறந்த முறையில் உண்மை விளக்க ஆசிரியருக்கு முன்னோடியாக ஒரு பாடலில் விளக்கி இருக்கிருர்.

"அரன் துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன்அங்கி தன்னில் அறையிற்சங் காரம்
அரனுற்ற ஊனப்பில் அமருந் திரோதாயி
அரனடி யென்றும் அனுக்கிரகம் என்னே."

துடி — உடுக்கை. அரன் — நடராசர். இப்படி இதில் பஞ்ச கிருத்தியங்களைக் குறிப்பிடுகிருர். உண்மைவிளக்கத்தில் ஒரு பாட்டு. (35)

"தோற்றம் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

இப்படிப் பார்க்கிறபோது திருமூலர் வாழ்க்கை நெறியைக் காட்டியிருக்கிருர். இல்வாழ்க்கையில் இருந்தும் மெய்நெறியை அடைய முடியும் என்று சொல்லியிருக்கிருர். மெய்நெறி என்கிற போது பிரணவயோகத்தைக் குறிப்பிடுகிருர் என்று சொல்லி இறுதியாகத் திருவைந்தெழுத்தையும், திருக்கூத்தையும் பற்றி ஆசிரியர் கூறிய முறையில் சொன்னேன்

திருமூலருடைய வாழ்வு, காலம் எல்லாம் இன்று பேசப்பட வில்லை. அவை சர்ச்சைக்குரிய விஷயம். இதுகாறும் ஆராய்ச்சி யாளர்கள் சில நூல்களைக்கொண்டு பார்க்கும்போது திருமூலர் நான்காம் அல்லது ஐந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர் என்று சொல்கிருர்கள். அவர் எந்தக் காலத்தில் வாழ்ந்தாலும் மூவர்

முதலிகளுக்கு முன்னே வாழ்ந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. அவர் செய்தது முழுநூல் — வாழ்க்கை நூல், திருமூலர் காட்டிய நெறியில் உலகத்தில் வாழ்ந்து தெய்வநிலையை அடைவோமாக.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் '' — திருக்குறள்

இத்தகைய சிறந்த வாய்ப்பினை நல்கிய எல்லோருக்கும் என் நன்றியைக் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

' திருமூலர் திருவடி வாழ்க.'



திருமந்திரம் — பொருள்நிலை

★

அ. ச. ஞானசம்பந்தம் M. A.

★

தலைவரவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! உங்களனைவர்க்கும் என் வணக்கம் உரியதாக. இந்த உலகத்தைப் பொறுத்தமட்டில் பல்வேறு சிறப்புக்கிடையே ஒரு தனிச் சிறப்பும் உண்டு. அஃதாவது எந்த ஒரு குறிப்பிட்ட பொருளை நாம் நாடிச் செல்கிறோமோ அது நாம் நாடிச் செல்லும் இடத்தில், செல்லும் நேரத்தில் கிடைக்கும் என்று உறுதி கூறமுடியாது. கடைகளில் உறுதியாக இருக்கும் என்று நம்பிச் சென்று கேட்கையிலும் கேட்பது தவிரப் பிற வேறு பொருள்கள் இருப்பதைக் காட்டுகின்றனர். அதேபோல இம்மாநாட்டில் எனக்கு முன்னர் வேறு திருமுறைகளைப் பற்றிப் பேசியவர்களும் இனி வரப் போகின்ற பேச்சாளர்களும் பலருண்டு. அவர்கள் திருமந்திரத்தை நன்கு பயின்றவர்கள். எனவே அவர்கள் பேச்சைக் கேட்கலாம் என்று வந்துதுள்ள உங்கள் எதிரே யான் நிற்கின்றேன்.

என்னைப் பொறுத்தவரை இந்நூல் மந்திரமாகவே (மறைமொழியாகவே) உள்ளது. அப்படிப்பட்ட என்னை முதலில் பேச வைத்ததன் நோக்கம் புரியவில்லை. திருமந்திரத்தை ஓரிரு முறைகள் படிக்க முயன்றுள்ளேன். அதற்கெழுதப்பெற்ற உரைகளையும் பார்க்க முயன்றேன். என்னுடைய சிற்றறிவுக்கு அவை எட்டவில்லை. அதனால் நான் பெரிதும் வருந்தினதில்லை. உதாரணமாக உயர் விஞ்ஞானம் அல்லது கணிதம் கற்கின்றவர்கள் வைத்திருக்கும் நூல்களை எடுத்துப் புரட்டிப் பார்த்தால் உண்மை விளங்கும். நம் போன்றவர்கட்கு அந்நூல்கள் புரியாத புதிராகவே இருக்கும். அவற்றிலுள்ள எழுத்துக்களும், எண்களும் நாமறிந்தவையே. எனினும் அவை கூறும் கருத்துக்கள் நம் அறிவுக்கு அப்பாற்பட்டவையாக இருக்கும்.

ஆனால் அத்துறைகளில் பயின்றவர்கட்கு அந்நூலில் கூறப் பெற்ற கருத்துக்கள் அங்கை நெல்லிக்கனியாக விளங்கும். அதுபோலத் திருமந்திரத்தின் பெரும் பகுதி என்போன்ற சிற்றறிவினர்க்கு உரியனவல்ல போலும் என்று நினைத்து மன அமைதி அடைவதுண்டு.

இந்நிலையிற்கூட ஓர் உண்மையை மறவாமற் காண்டல் வேண்டும். தொடக்கவுரையாற்றிய நிர்வாக அதிகாரி திருவாளர் அருணசலம் பிள்ளை அவர்கள் விட்ட வினு மிக இன்றியமையாத ஒன்ருகும். 'திருமந்திரம் போன்ற நூல்கட்கு, இன்றை நாளில் கிடைத்துள்ள இடம் யாது ?' என்பதே அவருடைய வினு. எத்துணைதான் பதி, பசு பாச ஆராய்ச்சியில் ஈடுபட்டாலும் அவ்வாராய்ச்சி காலத்தோடு ஒட்டி வாராக்கால் ஒரு சிலருக்கே பயன்படுவதாக முடிந்துவிடும். உண்மையைக் கூறவேண்டுமானல் நம் நாட்டில் இற்றைநாளில் சமயங்கள், அவை பற்றிய பிரச்சாரம் என்பவை எந்நிலையில் உள்ளன? சைவம் என்ருல் என்ன என்பதை அறியாதவர்களிடமன்ரே நம் சமயத்தைச் சென்று பரப்ப வேண்டும்? அதன் எதிராக அதுபற்றி அறிந்தவர்கள், அதை வாழ்க்கையில் கடைப்பிடிப்பவர் இவர்களிடையே சென்று 'சைவத்தின் மேற்சமயம் வேறில்லை' என்று கூறுவதன் நோக்கம் யாது ?

பிற நாட்டாரையும், பிற சமயத்தாரையும் எடுத்துப்பார்த்தால் ஓர் உண்மை விளங்கும். கால, தேச, வர்த்தமானங்களைக் கடந்து கடந்து அவர்கள் தம் நாகரிகம் அறியாத பிற மக்களிடத்தில் சென்று அவர்களோடு தங்கி, அவர்களிடைத் தம் சமயத்தைப் பரப்புகின்றனர். நம்மைப் பொறுத்தவரை நிலை என்ன? முன்னர்க் கூறியது போல ஏற்கனவே சமயத்தை ஓரளவு அறிந்தவர்களிடம் மட்டுமே சென்று நம் சரக்கை வியாபாரம் செய்கிருேம். அது மட்டுமன்று எத்துணை அளவு பதி, பசு, பாசம் பற்றிப் பேசினுலும் இந்நாளைய தேவைக்கு அவை பயன்படக்கூடிய நிலையில் பேசுகிருேமே என்ருல் அதுவும் இல்லை. பிற சமயத்தார்கள் அணுயுகத்திற்கேற்பத் தம் சமயக் கருத்துகளுக்கு வேற்றுருவந் தந்து பரப்புகின்றனர். இதன் பயன் என்ன? சமயப் பற்றும் ஓரளவு அனுபவமும் உடைய பெரியோர்கட்கும் இளஞ் சமுதாயத்திற்கும் இடையே ஒரு பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளது. காலத்தை வென்று நிற்பது சைவ சித்தாந்தம் என்றும் காலாதீதப் பழம் பொருள் இறைவன் என்றும் கூறுகிருேமே தவிர நம் காலத்தில் நம் கண் எதிரில் வாழும் இளைஞர்கட்குக்கூட நாம் அமைதி தேடித்தர முடியவில்லை.

இதனால் நம் சமயம் என்பது வெறும் சடங்குகளாக முடிவதுடன் அதன் தத்துவம் மறக்கப்பட்டுப் பொய்யாய்க் கனவாய்ப் பழங் கதையாய் மெல்லப் போய்க் கொண்டிருக்கிறது.

இந்நாளைய உலகம் அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக் கிறது என்று கூட்டங் கூடிப் பேசுவதால் மட்டும் பயனின்று. இச்சமுதாயம் போகின்ற வேகத்தில் திருமந்திரம் போன்ற சமய நூல்களின் இடம் யாது என்று ஆராய வேண்டியுள்ளது. இது நாள் வரை நாம் நம் சமய நூல்களைப் பற்றிப் பேசிக்கொண்டு வந்த முறையை, அதாவது நமக்குள் நாமே கூட்டம் போட்டு முன்னரே அதுபற்றித் தெரிந்தவர்களிடம் திரும்பத் திரும்ப அதையே பேசுதல் போன்ற முறையை மாற்றிக் கொண்டால் ஒழிய விரைவில் இந்நூல்கள் புதை பொருள்களாக மாறி நூல் நிலையங்களில் கேட்பாரற்றுக் கிடக்கும் நிலை ஏற்பட்டுவிடும். எவ்வளவு உயர்ந்த நூல்களானால் தான் என்ன? அவற்றைப் போற்றிக் கற்பார் இலரே! அவை மறைந்துபோதல் இயல்புதானே!

ஓயாமல் மாணவர்களோடு பழகுகின்ற என் போன்றவர்கள் மனத்தில் தோன்றுகிற அச்சமாகும் இது. இன்றைய மாணவர் சமுதாயம் இந்நூல்களை அறியாமல் வளர்கின்றது. நாளை இவர்கள் பெரியவர்களாகும்பொழுது என்ன ஆகும்? பொது மக்களோடு அவருள்ளும் சிறப்பாக இளைஞர்களோடு பழகி அவர்களை நம் நெறிக்கு இழுக்காவிடின் என்ன நேரும் என்று சிந்தித்ததுண்டா? நாம் எங்கோ ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு இந்த அருள் நூல்களைப் படிப்பதால் நாம் மட்டும் பயனடைவோமே தவிரச் சமுதாயத்திற்கு நம் கடமையை நிறைவேற்றியவர்களாக ஆவோமா?

நம் முன்னோர்கள், அதிலும் குறிப்பாக இவ்வருள் நூல்களை ஆக்கித் தந்த பெரியோர்கள் இவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்பதையாவது சிந்தித்தோமா? திருமந்திரமாகிய பெருநூலை ஆக்கித் தந்த பெருமகன் எங்கோ இருந்து இறைவனில் ஈடுபட்டிருக்க வேண்டியவர் ஏன் இங்கு வந்தார்? இறந்து போதல் என்பது இவ்வுலகின் இயல்பு என்று அவருக்குத் தெரியாதா? ஏன் இறந்தவன் உடம்பில் அவர் புகவேண்டும்? பின்னர் ஏன் இத்துணைப் பாடல்களை ஆக்கவேண்டும். நம்மாட்டுக் கொண்ட கருணையினால்தான் இவற்றைச் செய்தார் என்று கூறத் தேவை இல்லை.

திருமூலர் போன்ற நம் முன்னோர்கள் நம்மாட்டுக் காட்டிய கருணையை அவரின் பின் வந்தோராகிய நாம் கடைப்பிடிக்

கிறோமா? திருமூலர் அளவிற்கு நாம் செல்லாவிடினும் இன்றைய சமுதாயத்திற்கு எது தேவை என்பதை அறிந்து அதையாவது பூர்த்தி செய்ய முயல்கிறோமா? எந்த அளவாவது நாம் நம் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டுமென்று நினைக்கிறோமா சைவர்களாகிய நாம் இம்முறையில் சிந்திக்கத் தொடங்கினாலொழிய நம் சமயம், சமயம் நேரும்போது மெல்ல மறைதல் இயல்பு.

மனித வாழ்வு முழுவதையும் உற்று நோக்கினால் அதனை 'அக வாழ்வு' 'புற வாழ்வு' என இருவகையாகப் பிரிக்கலாம் என்பது விளங்கும். இங்கு யான் அகவாழ்வு புறவாழ்வு என்று கூறுவது தமிழ் இலக்கியத்தில் கண்டபிரிவை அன்று. மனிதன் தன் மனத்திலே ஓர் உலகை உண்டாக்கிக் கொண்டு வாழ்வதையே அகவாழ்வு என்று கூறுகிறேன். மனம், அதனோடு தொடர்புடைய உடல் என்ற இரண்டிற்கும் புறம்பாக உள்ள உலக வாழ்வையையே 'புறவாழ்வு' என்று குறிக்கிறேன். மேலை நாட்டாரைப் பொறுத்தமட்டில் புறவாழ்வில் (இவ்வுலக வாழ்வில்) வெகுவாக முன்னேறிச் சென்றுள்ளனர். சந்திரனில் சென்று இறங்கும் அளவிற்கு முன்னேறிய அவர்கள் இப்பொழுது அந்த விஞ்ஞான முன்னேற்றத்தால் மட்டும் பயனில்லை என்பதையும் மனித மனம் எங்குப் போனாலும் கூடவே வரும் என்பதையும் அம் மனவாழ்வு செம்மைப்பட்டாலொழிய மனித வாழ்வு பூரணத்துவம் அடைவதில்லை என்பதையும் கண்டுகொண்டனர். இன்று அவர்கள் அனுபவமூலம் கண்டுகொண்ட இந்த உண்மையை அவர்கள் சமயத்தை நிறுவிய இயேசுபெருமான் இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்னரே கண்டு 'மனிதன் ரொட்டித் துண்டால் மட்டும் வாழ்வதில்லை' என்று கூறிப்போனார். இந்த நாட்டில் வாழ்ந்த பெரியோர்களும் அதனையே கூறினர். மனிதனுடைய அகவாழ்வு (மன வாழ்வு) செம்மைப்படாத பொழுது புற வாழ்வு (உலக வாழ்வு) எத்துணைச் சிறப்புடன் பொலிந்தாலும் பயனில்லை. இதனை நன்கு மனத்துட் கொண்டு இந்நாட்டில் வாழ்ந்த பேரருளாளர்கள் நமக்கு வழிகாட்டிப் போயினர்.

தம் ஆன்மாவை முன்னேற்ற வேண்டிய தேவை இல்லாத இப்பெருமக்கள் இவ்வுலகிடை வந்து பிறந்து நம்முடன் பழகி நம்முடைய நன்மைக்காகவே சிலபலவற்றைக் கூறிப் போயினர். அவர்கள் தம் நிலையிலிருந்து நம்மாட்டுக் கொண்ட கருணையால் கீழிறங்கி வருகிறார்கள் என்பதை அறிந்ததால்தான் அவர்கள் வருகையை 'அவதாரம்' (கீழிறங்கி வருதல்) என்றும் குறிக்கிறோம். முழுமுதற் பொருளாகிய இறைவன்மட்டும் 'சௌலப்பியம்' (எளிவந்த தன்மை) உடையவனல்லன். அவனருள் பெற்ற

பெரியோர்களும் இவ்வெளிவந்த தன்மையை நிரம்பப் பெற்றவர்கள்.

சீவன் முத்தராகிய திருஞானசம்பந்தர் போன்ற பெரியார்கள் திருவீழிமிழலை போன்ற பகுதிகளிற் பஞ்சம் வந்தபொழுது அவண் மடம்வைத்து அனைவருக்கும் சோறு சமைத்துப்போட்டு அவர்கள் பசிப்பிணியைப் போக்கினர் என்று வரலாறு பேசுகிறது. ஆண்டவனிடம் பக்தி கொள்ளவேண்டும் என்பதை நன்கு அறிவுறுத்திய அவர்கள் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழவும்' வழிகூறினர் — இதனல் அப்பெரியார்கட்குப் பொது மக்கள் தொடர்பு நிரம்ப இருந்தமையை அறிகிறேம். அவர்கள் பேசிய சமயமும் கடவுள் நம்பிக்கையும், மக்கள் அனைவரையும் இறைவனுகவே காணுகிற நிலையும் வெறும் பேச்சளவில் நில்லாமல் அவர்கள் வாழ்வுடன், குருதியுடன் கலந்த ஒன்ருக இருந்தன. ஆனல், நம்மைப் பொறுத்தவரையில் சமயம் என்பது தற்போது சமயத்துக்குப் பயன்படுத்திக்கொள்ளும் கருவியாக அமைந்துவிட்டது. பெரியோர்களாகிய அவர்கள் வாழ்ந்து காட்டியதை மறந்துவிட்டு அவர்கள் கூறியபடி வாழவும் மறந்து விட்டு அவர்கள் பாடல்களை மட்டும் மனனம் செய்து ஒப்பிப்பதால், பாராயணம் செய்வதால் எப்பயன் விளையும்? வெறும் பாராயணம் பயன்தருமெனில் ஒலிப்பதிவு எந்திரங்கள் அனைத்துமே பயன் பெற்றுவிடும்!

சைவர்களாகிய நாம் நம் நெஞ்சில் கைவைத்து நம் முன்னேர் களாகிய நால்வர் சென்ற வழியில் ஓரளவாவது செல்ல முற்படுகிறேம் என்று கூறமுடியுமா? அவர்கள் பாடல்களைப் படிக்கிறேம்; படிப்பிக்கிறேம்; ஆனல் உணர்கிறேமில்லை. கற்றல் கேட்டல் முதலியவற்றின் அப்பாற்பட்டுள்ள உள்ளத்து உணர்வோடு ஒன்றுகிறேமா?

திருமூலர் ஆகிய பெரியார் அகவாழ்க்கையில் எத்துணைத் தூரம் முன்னேறிச் சென்றுள்ளாரோ அதே அளவுக்குப் புற வாழ்க்கையிலும் முன்னேறியுள்ளார். நரம்பு மண்டலங்களைப் பற்றி உடற்கூறு வல்லுநர்கள் இன்று எத்துணைத்தூரம் அறிந்து பேசுகிருர்களோ அத்துணைத்தூரம் மூலரும் அறிந்து வைத்திருக்கிருர். எனவே அகத்துறையில் முன்னேறிவிட்ட ஒரே காரணத்திற்காகப் புறத்துறையில் முன்னேற்றம் இன்றி இருக்க வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை.

இறைபணியில் எத்துணை முன்னேறிச் சென்ருலும் இப் பெருமக்கள் ஏனைய உயிர்களிடத்துக் கொண்டுள்ள அன்புக்கு

18

எல்லையே இல்லை. இதற்கு ஒரு காரணமும் உண்டு. இறைவன் உயிர்களினின்று வேறானவன் என்று இவர்கள் கருதவே இல்லை. அதனால்தான் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று கூறினர். திருமூலர்,

"படமாடுங் கோயில் பரமர்க்கொன்று ஈயின்
நடமாடுங் கோயில் நம்பர்க்கங்கு ஆகா
நடமாடுங் கோயில் நம்பர்க்கொன்று ஈயின்
படமாடுங் கோயில் பரமற்கஃது ஆமே"

என்றும்

"அன்பும் சிவனும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்"

என்று கூறுமுகமாக இதனை வலியுறுத்திப் போனார்.

உலகியலிற்கூட ஒரு தாய்க்கு ஒரு பொருளைத் தருதலினும் அவளுடைய குழந்தைகட்கு அதனைத் தருவதுமூலம் அத்தாயின் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்க முடியும். அதுபோல உயிர்கட்குச் செய்யும் உதவிகண்டு யாவர்க்குந் தாயாகிய இறைவனும் மகிழ்கிறான். குழந்தை மகிழக்கூடிய சிறிய பொருளைத்தரினும் அக்குழந்தையின் மகிழ்ச்சி கண்டு தாய்தானும் மகிழ்கிறாள். ஆனால் அதே பொருளைத் நேரடியாகத் தாய்க்குத் தரின் அவள் அச்சிறிய பொருளை ஏற்று அவ்வளவு மகிழ்ச்சி அடைவாளா என்பது ஐயத்திற்குரியது. அதே போல இறைவன்மாட்டு உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் அர்ப்பணித்து அன்பு செய்ய வேண்டும். அது இத்துணை எளியதுமன்று. ஆனால் உயிர்கட்குத் தொண்டு செய்ய இத்துணைப் பாடுபட வேண்டா. என்றாலும் இறைவன் அதில் மகிழ்கின்றான். இந்த நுணுக்கத்தை நன்கு அறிந்த மூலர் இதனை மேலே கண்ட பாடலில் எடுத்துக் கூறுகிறார்.

இனி யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமை என்பனபற்றியும் அரசன் செங்கோல் என்பவை பற்றியும் பேசியமையாலும் இவ்வுலக வாழ்க்கையாகிய புற வாழ்க்கை நன்கு அமையவேண்டிய சூழ்நிலையைப் பேசியுள்ளார். அவ்வாறு இல்லாவிடின் மந்திர மறைப்பொருள்களைப்பற்றிப் பேசவந்த அவர் நிலையாமை முதலியவற்றைப் பேசுவானேன்? நம்மாட்டுக்கொண்ட கருணையால் நம்மைத் தட்டி எழுப்பவே இவற்றை எல்லாம் பாடினார் என்பதே பொருத்தமாகும். ஒன்றுக்கொன்று முரணாகக் காணக்கூடியவற்றைக்கூட இவர் பேசி

யுள்ளார். ஒரு பாடலில் உடம்பின் இழிவைக் கூறப்புகுந்து 'பானை உடைந்தாலும் ஓடாவது எஞ்சும், உடம்பிலுள்ள உயிர் பிரிந்தால் இறைப்போதும் அதனை வைத்திருக்கமாட்டோம்' என்று பேசும் அவரே,

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"

என்றும் பாடுவது என் கருதி?

நம்மிடத்தில் ஒரு பொருள் கொடுக்கப்பட்டால் அதனைப் பயன்படுத்த வேண்டிய முறையிற் பயன்படுத்த வேண்டும். இன்றேல் அப்பொருள் தோன்றிய நோக்கமும் கெட்டு நம்மிடம் வந்து சேர்ந்ததன் பயனையும் இழக்கிறது. செல்வம் என்பது பிறர் துயரந்துடைக்கப் பயன்படல் வேண்டும். 'செல்வத்துப் பயனே ஈதல்' என்று பேசிச் செல்கிறது பழைய புறநானூறு. ஆனால் அதே செல்வம் தகுதி இல்லாதவன் மாட்டுச் சிக்கிக் கொண்டால் அவனையும் கெடுத்துத் தானும் கெடுகிறதன்றோ? அதேபோல உடம்பெடுத்ததன் பயன் பிறர் பொருட்டுப் பயன் படுதற்காக. ஆனால் அப்பயன் விளையாதபொழுது அந்த உடம்பு பாரமாகி விடுகிறது. உடம்பை வளர்ப்பது எப்போது? திடம்பட மெய்ஞ்ஞானம் சேரும் வழிக்கு உடம்பு உதவியாக இருக்கும்பொழுது.

மைந்தன் நல்லனவற்றைச் செய்யும்பொழுது அவனைப் போற்றும் அதே தந்தை அவன் தவறு செய்தபொழுது இடித்துரைத்தல் போல உடம்பை ஒரு முறை போற்றியும் மற்றொரு முறை தூற்றியும் பாடுகின்றார் பெரியார். உடம்பை வைத்துக்கொண்டு பயன்படுத்தும் வழிபற்றிப் பலர் கொண்டுள்ள தவறான கருத்தையும் சாடுகின்றார். ஒரு சிலர் ஆசனம் இட்டுப் பிராணயாமம் செய்துவிடுவதால் பெரும் பயனை அடைந்து விடலாம் என்று நினைப்பதை எள்ளிநகையாடுமுகமாக ஒரு கருங்கல் எண்ணாயிரம் ஆண்டு நீருள் கிடப்பினும் ஒரு சொட்டு நீரையும் உறிஞ்சாததுபோல இத்தகைய சித்திகளால் எவ்விதப் பயனுமில்லை என்கின்றார். மெய்யுணர்வு வாய்க்கப் பெறுமல் பொறிபுலன்களை அடக்கிப் பழகுவதால் எப்பயனும் விளையாது என்ற பேருண்மையைக் கூறுகிறார். இதே கருத்தை வள்ளுவப் பெருந்தகையும், 'ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர் வில்லா தவர்க்கு' என்று கூறுகிறார்.

விஞ்ஞானத்தின் துணைகொண்டு புறஉலகில் முன்னேறியுள்ள மேலைநாட்டார் இன்று தம் அனுபவமூலம் கண்டுள்ள புதுமை இதுவாகும். எத்துணை வசதி படைத்திருப்பினும் செல்வத்திற் புரண்டாலும் மனவாழ்வு நிரம்பாவிட்டால் எஞ்சுவது வெறுப்பேயாகும், என்பதை அவர்கள் அறியத்தலைப்பட்டு, பின்னர் மனத்தைப்பற்றிய ஆராய்ச்சியிலீடுபட்டு அதன் பின்னரே மனத்துக்கும் உடலுக்குமுள்ள தொடர்பை ஆய்ந்தனர். உடலுக்குத் தலைவனாக மனம் இருத்தலின் மனத்தை அடக்கினாலொழியப் பொறிபுலன் அடக்கம் பயனற்றது என்பதை அவர்களும் அறியத் தொடங்கிவிட்டமையின் அமைதியான வாழ்வு (Relaxed Life) வேண்டும் என்று கூறுகின்றனர்.

பொறிகளை அடக்குவது என்பது இயற்கையை எதிர்த்துச் செய்யும் போராட்டம் என்பதையும், அதனால் எவ்வித நற்பயனும் விளைவதில்லை என்பதையும் திருமூலர் 'அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார், அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை' என்று கூறிப்போனார். இன்று பணம் பெருத்த நாடாகிய அமெரிக்காவில் தோன்றி வளரும் புதிய கூட்டம் எது என்று நினைக்கிறீர்கள்? 'ஹிப்பிகள்' எனப்பெறும் கூட்டத்தார் பலரும் பெருஞ் செல்வர்வீட்டுப் பிள்ளைகள். செல்வத்தால் மட்டும் அமைதி அடையமுடியவில்லை என்பதனைக் கண்ட அவர்கள் பல்வேறு செயற்கை மருந்துகளைப் பயன்படுத்தி மன அமைதியைத் தேட முனைந்தனர். அவ் வழியிலும் அமைதி கிட்டாமற்போகவே 'நியூயார்க்' நகரிலும், 'சிக்காகோ' நகரிலும் தலையை மொட்டை அடித்துக்கொண்டு தெருவில் கிருஷ்ண பஜனை செய்துகொண்டு ஊர்சுற்றி வருகின்றனர்.

இதன் அடிப்படை யாதாக இருக்கும் என்று யாரேனும் சைவர்கள் என்று மார்தட்டிக்கொள்பவர்கள் நின்று சிந்தித்துப் பார்த்ததுண்டா? பொறிகளையும் புலன்களையும் படைத்த இறைவன் பைத்தியக்காரன் அல்லனே! பொறிகளைப் படைத்து இவற்றால் அனுபவிக்கப்படும் பொருள்களாகிய புவன போகங்களையும் படைத்துக்கொடுத்த பிறகு இவற்றால் அவற்றை அனுபவிக்கக்கூடாது என்பது என்ன அறிவுடைமையாகும்? பொறி புலன்களைத் தந்த இறைவன் அவற்றின் துணைகொண்டு எவற்றை அனுபவிக்கவேண்டும் என்று முடிவு செய்தற்குரிய 'பகுத்தறிவை மட்டும்' நம்மிடமே தந்துவிட்டான். எனவே இவற்றைத் தவறான வழியிற் செலுத்திவிட்டுப் பொறிகளையோ, அவற்றைப் படைத்தவனையோ குறைகூறுதல் பெருந்தவறாகும்.

உலகில் எதனையும் காண்பதற்குப் புறநோக்கமோ, புறக் கருவிகளோ இன்றியமையாதவை என்ற கருத்தில்லை. இக் கருத்தைத் திருமூலர் மட்டுங் கூறினாரென்றில்லை; நவீன விஞ் ஞானமும் இதனை அறிவுறுத்துகிறது. 'ஒப்பியல் தத்துவத்தை' உலகுக்கு எடுத்துக்காட்டிய மாபேரறிஞராகிய 'ஐன்ஸ்டீன்' என்ற மேதை தொலைநோக்காடியால் (Telescope) அற்றைநாளில் காணமுடியாத 'ப்ளூட்டோ (PLUTO)' என்ற கோளின் இருப் பையும் இடத்தையும் காகிதம், எழுதுகோல் என்பவற்றின் உதவி கொண்டே நிலைநிறுத்தினார்.

எனவே மனிதன் சிந்தனையை அகமுகமாகச் செலுத்துவதன் மூலம் உண்மைப் பொருளைக் காணமுடியும் என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டாகும். அகமுக நோக்கம் ஆண்டவனை மட்டுமே அறிய உதவும் என்று தவறான எண்ணம் கொள்ள வேண்டா. அறிவை அகமுகமாகச் செலுத்துவதன் மூலமே புறஉலக அறிவைக்கூட வளர்த்துக் கொள்ளலாம் என்பதையும், அவ்வறிவை இன்னும் ஆழமாகச் செலுத்துவதன் மூலம் மெய்ப் பொருளைக் காணவும் கூடும் என்பதையும் அறிதல்வேண்டும்.

சத்தியப் பொருளை, நித்தியப் பொருளை அறிததற்கு அகமுக நோக்கம் பயன்படுகிறது. அவ்வாறு உண்மைப் பொருளை அறிகின்ற முறையில் பல்வேறு உண்மைகளையும் அவ்வகமுகமான நோக்கம் கண்டு வெளியிடுகிறது. மனிதப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆன்மிக முன்னேற்றத்துக்கு அடி கோலுவதும், பொருள்களின் இயல்புகளை உள்ளவாறு அறிய முற்படுவதும் அகமுகநோக்கமேயாகும் எந்தவழியிற் சென்றாலும் இறுதியில் அடையும் பயன் ஒன்றேயாகும். வழிகள்தாம் பல வகையே தவிர முடிவு ஒன்றுதான்.

அகமுகநோக்கம் ஒன்றையே துணையாகக்கொண்டு திருமூலர் எத்தனை எத்தனையோ உலகங்களைப் பற்றிக் கூறிக்கொண்டு செல்கிறார். அவையெல்லாம் நம்மைப் பொறுத்தவரை ஊமையன் கண்ட கனவாகவே உள்ளன. அவர் கூறுகின்ற சக்கரங்கள் என்ன என்பதை இன்று பலர் அறிய முடியுமா? ஒரு பொருளை ஆராய்ந்து அதன் இயல்புகளை அறிவது வேறு; அதனை அனுபவிப்பதென்பது வேறு. சர்க்கரை என்ற பொருளைச் சுவைத்து அனுபவிப்பது ஒன்று; அதே சர்க்கரையைச் சோதனைக் குழாயிலிட்டு அதன் இயல்பு என்ன என்று ஆராய்வது வேறு. திருமூலரைப் பொறுத்தமட்டில் பொருளை ஆராயவும் செய்கிறார், அனுபவிக்கவும் செய்கிறார்.

பக்திமார்க்கத்தில் சென்ற அடியார்கள் இறைவனைப் பற்றி அறிவின் துணைகொண்டு ஆராயாமல் அன்பின் துணை கொண்டு பக்தி செய்தனர். பின்னர்த் தோன்றிய மெய்கண்டார் போன்ற பெரியோர்கள் அறிவின் துணைகொண்டு இறைவனின் இயல்பையும், உலகின் இயல்பையும் ஆராய முற்பட்டனர். ‘ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா, சுடர்விட்டு நின்றுளன் எங்கள் சோதியான்’ என்று எந்தப் பரம்பொருளை அறிவின் துணைகொண்டு ஆராய வேண்டா என்று ஞானசம்பந்தர் கூறினரோ அதே பொருளைப் பற்றி மெய்கண்டார் ‘அவன், அவள் அது எனும் அவை மூநிலையில்’ என்று ஆராயத் தொடங்குகிறார். இதிலிருந்து நம் அறியவேண்டிய உண்மை ஒன்றுண்டு.

நம்முடைய முன்னோர்கள் காலத்துக்கேற்பத் தம்வழி முறைகளை மாற்றிக் கொண்டு உலகிற்கும் பயன்பட அஞ்சிய தில்லை. திருஞானசம்பந்தப் பெருமான் காலத்தில் பரவி இருந்த சைன சமயக் கொள்கைகள் அறிவைப் நம்பி இருந்தன. அறிவின் துணைகொண்டு மட்டும் எல்லாவற்றையும் ஆய்ந்து விட முடியாது; அஃது அனைவருக்கும் ஏற்ற வழியுமன்று; என்பதை வலியுறுத்தற்காக ஞானசம்பந்தர் பக்திமார்க்கத்தை வலியுறுத்தினர். ஆனால் 12ஆம் நூற்றாண்டின் பின்னர் உள்ள தமிழகத்தில் மறுபடியும் சூழ்நிலை மாறிவிடுகிறது. அறிவை வலியுறுத்தி அதன்மூலம் மக்களுடைய பலவாகிய தேவையற்ற நம்பிக்கைகளைப் போக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுதலின் மெய் கண்ட தேவர் போன்றவர்கள் ஏதுக்களையும், எடுத்த மொழி யையும் கொண்டு பொருளின் உண்மையைச் சாதிக்கப் புகுந்தனர்.

சர்க்கரையின் இயல்பை நாவில் இட்டுக் காட்டும் திருஞான சம்பந்தரும், சோதனைக் குழாயில் போட்டு அதன் இயல்பை விளக்கும் மெய்கண்டாரும் இரண்டு வேறுபட்ட வழிகளை மேற் கொண்டார்கள், இவ்வாறு கூறுவதால் ஒருவர் வழி தவறு என்றோ மற்றொருவர் வழி சரியானதென்றோ கூறல் முடியாது. காலத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப நம் பெரியோர்கள் தாம் கூறும் வழிகளை மாற்றிக் கொண்டனர். திருஞானசம்பந்தர் கூறியதற்கு எதிராக மெய்கண்டார் கூறியதனால் நால்வர் வழியை மீறிவிட்டார் என்றோ அவர் சைவத்தை எதிர்த்துப் புதுவழி கண்டார் என்றோ யாரும் குறை கூறத் துணிவதில்லையன்றோ?

தோத்திரவழி (பக்தி வழி), சாத்திர வழி என்ற இரண்டும் மக்கள் முன்னர் வைக்கப்பட்டன. அவரவர் பக்குவத்திற்கேற்ப

அவரவர் தாம் மேற்கொள்ளும் வழியை அறிந்து ஏற்றுக் கொண்டனர். இனிப்புப் பண்டமும் காரப்பண்டமும் பசியைப் போக்க உதவுகின்றனவெனில் ஒன்றிற் கொன்று உயர்வு தாழ்வு கற்பிப்பது எங்ஙனம்? இதை நன்கு புரிந்துகொண்டால் சாத்திரவழிக்காரர்கள் தோத்திரவழிக்காரர்களை மறுத்துரைக்கவோ இவர்கள் அவர்களை மறுத்துரைப்பதற்கோ வழி இல்லாமற் போய்விடும்.

இக்கருத்து நம்முடைய நாட்டைப் பொறுத்தவரைப் புதுமையானதன்று. திருமுருகாற்றுப்படை ஆசிரியர் இதனை வலியுறுத்திக் கூறினர். 'சேவடி படரும் செம்மல் உள்ளம்' ஒன்றுதான் தேவையானது. அது மட்டும் இருந்துவிட்டால் 'இன்னே பெறுதி நீ முன்னிய வினையே' என்று கூறுகிறுர். வேண்டப்படுவன ஒரு குறிக்கோளும் நெஞ்சில் உறுதியுமேயாம். அவை இருக்குமானுல் எந்தவழியை மேற்கொண்டாலும் தவறில்லை. இறுதியில் பயன்பெற முடியும்.

உலகையும் அது இருக்கும் சூழ்நிலையையும் நன்கு எடுத்துக் காட்டுகிறுர் திருமூலர். நிலையற்ற உலகம் என்பதனுல் அதனை அனுபவிக்கக்கூடாது என்ற கருத்தில்லை. ஆனுல் இந்த அனுபவமே எல்லாம் என்று நினைக்கின்ற தவற்றை மனிதன் செய்துவிடக்கூடாது என்பதே அவருடைய நோக்கம். மனிதனுக்கு இருதயம் என்ற ஒன்று இருக்கிறது என்பதையே பிறநாட்டார் அறிந்து கூறுவதற்கு முன்னர் திருமூலர் அது இருப்பதையும் அதுவும் இடபக்கத்தில் இருப்பதையும், அது தாக்கப்பட்டால் இறப்பு வெகு விரைவில் கிட்டும் என்பதையும் இருதய நோய் உடையார் தாக்கப்படும்போது முன் எச்சரிக்கை எதுவும் இராது என்பதையும் எத்துணை அழகாகக் கூறுகிறுர்.

"அடப்பண் ணரி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக் கொடி யாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்க மேசிறிது இறைநொந்தது என்ருர்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே!

என்பது அவர் வாக்கு.

வாழ்க்கை எத்துணை மென்மையானது; எவ்வளவு விரைவில் முடியக்கூடியது; என்பதை இவண் காட்டும் திருமூலர் மனிதன் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழவும் முடியும் என்பதையும் எடுத்துக் கூறியுள்ளார். இவ்வாறு மாறுபட்ட கருத்துக்களைத்

திருமூலர் தேவை இல்லாமல் கூறவில்லை. அதற்கொரு ஆழமான காரணமுண்டு.

ஓர் அறிவுயிராகிய அமீபா (Ameba) விலிருந்து ஆறறிவு படைத்த மனிதன் ஈருக அனைவருக்கும் பொதுவான இயல்பாக ஏதேனும் உண்டா? உண்டு. அதுவே துன்பத்தை வெறுத்தலும் இன்பத்தை நாடலுமாம். இந்த உயிர் இலக்கணத்தை அடிப் படையாகக் கொண்டு திருமூலர் துன்பத்தை எடுத்துக்காட்டுகிருர். இதனை வெறுக்கும் உணர்ச்சியைத் தூண்டிவிட்டு அடுத்து இன்பத்தை அடையும் வழியைக் கூறுகிருர். ஒவ்வொரு துன்ப மாகக் களைந்தாலும் அது வேண்டப்படுவதேயாகும். யாதனின் நீங்கியான் நோதல் அதனின் இலன்' என்பது பொதுமறை. ஆனுல் ஒவ்வொரு துன்பமாகக் கண்டு களைவதென்பது மரத்தின் ஒவ்வொரு கிளையாக முறிப்பது போலாகும். மரத்தை அழிக்க வேண்டுமாயின் வேரைக் களைந்து வெந்நீரை விடவேண்டியது தானே. அதுபோல எல்லாத் துன்பத்திற்கும் காரணமாகவுள்ள பிறவித் துன்பத்தைப் போக்க முயல்வது தானே முறை. இவ்வாறு பிறவியைப் போக்கவேண்டும் என்று கூறும் மூலரே ஒருவன் ஐயாயிரம் ஆண்டுகள் வாழலாம் என்றும் கூறுகிருர். அவ்வாருனுல் அவர் பிறவியை அறுக்கவேண்டும் என்பது வெறும் உடம்பை ஒழிக்கவேண்டும் என்ற பொருளிலன்று என்பது விளங்கும். பிறவியில் ஏற்படும் துன்பத்தைப் போக்க வழியறியார் பிறவியையே போக்க நினைத்தார்.

உடம்பெடுத்ததன் பயனை அடையக் கூடுமானுல் உடம்பையும் அதற்குரிய பிறப்பையும் யாரும் கடிவதில்லை. பின்னர் வந்த பெரியோர் ' மனித்தப் பிறவியும் வேண்டுவதே.' என்றும் ' மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம்' என்றும் கூறிப்போயினர். மூலரும் ' உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்று கூறுகிருர். அவ்வாருனுல் உடம்பின் பயன் என்று இவர்கள் எதனைக் கருதினுர்கள்? ' கூடும் அன்பினில் கும்பிடுவதையே பயன்' என்று கருதினர். இந்தப் பயன் உடம்பெடுத்தவர்கட்குக் கிடைக்கவில்லையெனில் பிறவி வீணுகிவிடுகிறது; துன்பம் நிறைந்ததாகி விடுகிறது.

வாழ்க்கையில் நாம் என்ன செய்கிருேம்? ஒரு பொருள் நமக்குப் பயன்படும் என்று கண்டால் அதனைப் போற்றிப் பாது காக்கின்ருேம். பயன்படாத பொருளைத் தூக்கி எறிந்து விடுகிருேம். அதுபோலப் பிறவி பயன்படுமானுல் அதனைப் பாதுகாக்க வேண்டும்! என்ன பயனை விளைக்கிறது எனில் வணங்குதலாகிய பயனை அளிக்கிறது. யாரை வணங்குவது

என்ற வினவிற்குச் சிவத்தை வணங்குவது என்ற விடை வரும். 'சிவம்' என்றால் என்ன என்ற வினவிற்கு 'அன்பே சிவம்' என்ற விடையை மூலர் தருகிறார். அப்படியானல் சிவனை வணங்குதலும், சிவத்தோடு இரண்டறக் கலக்க விழைவதும் அன்பை வணங்கலும் அன்புடன் இரண்டறக் கலத்தலும் வேண்டப்படுவன என்று கூறுவதால் தவறில்லை.

அன்புடன் கலத்தல் என்பது அன்பே வடிவாக ஆதல் எனப் பொருள்படும். அன்பே வடிவாக ஆகிறவர்கள் பிறர் பொருட்டாக வாழுகின்ற பெரியோர்களேயாவர். எனவே பிற உயிர்கட்குத் தொண்டு செய்வதே அன்புடன் கலத்தல் அல்லது சிவத்துடன் கலத்தல் என்று தருக்கரீதியாகக் கூறிவிடலாம். இவ்வுண்மையை அறியாமலும், அறியமறுத்தும் இறைவனை வழிபட்டு வேறு ஏதோ பயனை அடையப் போவதாக நினைப்பவர்கள் யார் என்ற வினவை எழுப்பிக் கொண்ட மூலர் அவர்கள் சிவ தத்துவத்தை அறியாத அறிவிலிகள் என்ற கருத்தில் 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்' என்றும் கூறிப்போனர்.

சிவ வழிபாடு என்பது உயிர்கள்மாட்டு அன்பு கொண்டு தொண்டு செய்தலே என்பதை இத்துணை அழகாகவும், விளக்கமாகவும், தருக்க முறையிலும், கூறியுள்ளனர் நம் முன்னோர் என்பதை இக்காலத்துக்கேற்ப எடுத்துக்காட்டாத நாம் சைவர்களா? இல்லை; சைபர்கள்.

இத்துணை உயர்ந்த நிலையிலிருந்த சைவம் அடுத்த காலத்தில் வெள்ளியில் இலிங்க வடிவம் வைத்து வழிபட்டால் என்ன பயன்? தங்கத்தில் வைத்து வழிபட்டால் என்ன பயன்? என்றும், வெள்ளை மலரால் அருச்சித்தால் என்ன பயன்கிட்டும்? சிவப்பு மலரால் அருச்சித்தால் என்ன பயன் கிட்டும் என்றும் சாத்திரம் வகுக்கத் தொடங்கிவிட்டது சிவபூசையை ஒரு வியாபாரமாக்கிய பெருமை பிற்காலச் சாத்திரங்கட்கு (அவற்றின் பெயரைக் கூற விரும்பவில்லை) உரியதாகும்.

"நல்லவும் தீயவும் அல்ல குவிமுகிழ்
புல்லிதழ் எருக்கம் ஆயினும் உடையவை
கடவுள் பேணேம் என்ன"

என்று பழைய புறநானூறு கூறவும் 'யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை' என்று மூலர் கூறவும், 'ஐய நின்மாட்டு இரப்பவை, பொன்னும் பொருளும் போகமும் அல்ல, அன்பும் அருளும்

அறமும், மூன்றும்–உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே!' என்று பரிபாடல் கூறவும் மிக உயர்ந்த நிலையில் இருந்த சைவ சமயம், இன்ன பூவுக்கு இன்ன பயன் என்று கூறும் இழிநிலைக்கு வந்தமையாலே இன்று அது கேட்பாரற்றுக் கிடக்கிறது.

மிகப் பழமையான நம்முடைய சமயம் எத்துணைப் பரந்த மனப்பான்மையுடன் யாவரையும் தன்னுள் அணைத்துக்கொண்டு வளர்ந்தது என்பதை நினைக்கையில் உண்மையான பரவசமும் பெருமிதமும் அடையலாம். உயர்ந்தார், தாழ்ந்தார், கற்றார், கல்லாதார், உடையார், இல்லார் என்ற வேறுபாடற்று அர்த்த மற்ற சடங்குகட்கு இடந்தாராமல் எல்லா உயிர்களிடத்தும் இறைவன் உறைகின்றானாகலின் உயிர்கட்குத் தொண்டுசெய்வதே சமயத்தொண்டு என்ற மிக உயர்ந்த குறிக்கோளுடன் இருந்த சமயம் எங்கே? புறச் சமயத்திலிருந்து மீண்ட திருநாவுக்கரசர் 'பிராயச்சித்தம்' செய்துகொண்டா சைவரானார்? எத்தகைய மன நிலை உடையாருக்கும் உய்கதி காட்டுகின்ற முறையில் இருந்த சமயம், மக்கள் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து அவர்கள் இரத்த ஓட்டத்தோடு கலந்திருந்த சமயம் இன்று வெறும் வெளிப் பூச்சாய் ஆரவாரமுடைய சடங்குகளாய் நின்றுவிட்டமையின் உண்மைச் சமயத்தைப்பற்றிக் கவலைப்படுவார் யாரும் இல்லாமற் போய்விட்டனர்.

'அப்பாலும் அடி சார்ந்தார்' அனைவரையும் உளப்படுத்திக் கொண்டு அகில உலகத்திலும் உள்ளார் அனைவருக்கும் பொது வாக இருந்த சமயம் இன்று இருக்கும் நிலை யாது? 'இன்று சைவ சாப்பாடு' என்று கூறுகின்ற முறையில் சாப்பாட்டுச் சைவ மாகி நிற்கும் அவல நிலை ஏன்?

இறைவனுக்குச் செய்யும் தொண்டைவிட உயிர்கட்குச் செய்யும் தொண்டே சிறந்தது என்றும், அதில்தான் இறைவனும் மகிழ்கிறான் என்றும் கூறிய சைவசமயம் உண்மையிலேயே உலகச் சமயங்களுள் மிக உயர்ந்தது என்பதில் ஐயமில்லை. இதனை உலகம் முழுவதற்கும் எடுத்துக்கூறிச் 'சேரவாரும் சகத்தீரே' என்று அழைக்கவேண்டியவர்கள் தமிழர்களாகிய நாம்.

இத்தகைய சமயத்தையும் அதன் உண்மையான தத்துவத்தையும் உள்ளவாறு எடுத்துக்கூற முற்பட்டால் ஓயாத அல்லலிற் சிக்கித் தவிக்கும் இன்றைய உலகம் உடனே செவி சாய்க்கும். மனிதன் சந்திர மண்டலத்துக்குப் போனாலும் அவனுடைய மனம் அவன் கூடத்தான் போகிறது. 'மனம் அடங்கக் கற்காவிட்டால் எந்த மண்டலத்திற்குச் சென்றாலும் அமைதி கிட்டாது. எனவே மனிதன் பெறவேண்டிய அந்த ஒப்பற்ற அமைதியை உள்ளவாறு எடுத்துக்கூறும் 'திருமந்திரம்' போன்ற நூல்களை நம்முடைய பூசைப் பெட்டியை விட்டு வெளிக் கொணர்ந்து காலத்திற்கேற்பப் பரப்புவோமானால் நாமும் உலகமும் உய்வோம். இக்கருத்தை முன்னரே சோழப் பேரரசின் அமைச்சராக இருந்த சேக்கிழார் என்ற பெரியார் தீர்க்க தரிசனம் போலச் 'சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனி வருங் காலத்தின் சிறப்பும் இன்று எழுந்தருளப் பெற்றபேறு இதனால் என்றைக்கும் திருவருள் உடையோம்' என்று கூறிப்போனார். அவர் கூறியாங்கு இன்று நம்மிடையே இந்நல்லெண்ணம் எழுவதாக. வணக்கம்.

உலகியலும் மெய்ந்நெறியும்

★

தருமையாதீனப் புலவர்,

மகாவித்துவான். சி. அருணைவடிவேல் முதலியார்.

★

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பத்தாவதாகிய **திருமந்திரம்**, திருமூல நாயனாரால் அருளிச் செய்யப்பெற்றது என்பது பலரும் அறிந்தது. இதனை இந்நாயனார், "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் கருணையுள்ளத்தோடு அருளிச் செய்தார். உயர்ந்த நூல்களைச் செய்த பெரியோர் அனைவரும் அந்நூல்களை இங்ஙனம் உலகம் உய்தற் பொருட்டே செய்தனர்.

'உலகம் நன்மை அடைய வேண்டும்' என்னும் அருள் உள்ளத்தால் நூல்களைச் செய்த பெரியோர்கள், அந்நூல்களால் உலகிற்கு உணர்த்தும் நெறி இரண்டு. அவை, 'உலகியல், மெய்ந்நெறி' என்பன. உலகியலாவது, 'அறம், பொருள், இன்பம்' என்பவற்றை அடைவிக்கும் நெறி. "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் — அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல' என்ற புறநானூற்றின்படி, பொருளும், இன்பமும் அறத்துள் அடங்குதலால், உலகியலாவது 'அறநெறி' என்றே கூறலாம். இதில் வீடு பற்றிக் குறிப்பால் சிறிது கூறப்படுமே யல்லாது விரிவாக எடுத்துக் கூறப்படாது

இத்தன்மைத்தான அறநெறியில் மக்கள் மெய்ந்நெறிக்கு மாறுகாமல், வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழி பற்றிய ஆராய்ச்சி நிகழுமேயல்லது, பொருளியல்புகள் பற்றிய ஆராய்ச்சி நிகழாது. அதனல், உலகியல் நூல்களில் கருத்து வேறுபாட்டிற்கு மிகுதியாக இடமில்லை. ஆகவே, உலகியல் நூல்களை, 'அனைவர்க்கும் ஒத்த பொது நூல்' என்றே சொல்லலாம். அவற்றுள்ளும் திருவள்ளுவ நாயனர் அருளிச்செய்த திருக்குறள், உயர்ந்தபட்சமாக எந்த அளவுக்குப் பொதுவாகச் செய்ய

இயலுமோ, அந்த அளவிற்குப் பொதுவாகச் செய்யப்பட்டது. ஆகவே, திருக்குறளோடு சிறிது மாறுபடினும், அது பொதுவாக அறத்தோடு மாறுபடுவதேயாய் முடியும்.

இனி மெய்ந் நெறியாவது, பிறப்பற்ற வீடுபேற்றைத் தரும் நெறி இஃது உயிர், தொன்றுதொட்டு விடாது பற்றிவரும் பொய்ப் பொருட் பற்றுக்களை விடுவதும், இதுகாறும் பற்றியறியாத மெய்ப் பொருளைப் பற்றுவதுமாகும். இந்நிலை, பொருளியல்புகளை உள்ளவாறு உணரும் முகத்தால், 'பொய்ப் பொருள் எது? மெய்ப் பொருள் எது?' என்று ஆராய்ந்து உணர்ந்தாலன்றி வாய்க்கமாட்டாது. ஆகவே, மெய்ந்நெறியில் பொருளியல்பு களின் ஆராய்ச்சியே, 'தத்துவ விசாரணை' எனப்படுகின்றது. இவ்வாராய்ச்சியில் கருத்து வேற்றுமை மிகுதியாய் இருத்தல் இயல்பு. அவ்வேற்றுமைகளே மத வேறுபாடு அல்லது சமய வேறுபாடு எனப்படுகின்றன. பல வேறுபட்ட சமயங்களுள், 'உண்மைச் சமயம் இது' எனத்துணிதல், அவரவரது அறிவின் நிலையைப் பொறுத்ததே யன்றி, அதற்கு வேறு ஒருவரும் பொறுப்பாவதற்கில்லை. எனினும், காய்தல், உவத்தல்களை அகற்றி நடுவு நின்று, 'சுருதி, யுக்தி, அனுபவம்' என்னும் மூன்றற்கும் ஒப்பவைத்து நோக்கின், உண்மை ஒருவாறேனும் விளங்காமற் போகாது. அவ்வாறு உற்று நோக்கி உணர்ந்த பெரியோர், 'சைவ சமயமே மெய்ச் சமயம்' எனக் கூறியுள்ளார்கள். எடுத்துக்காட்டாக—தாயுமானவ அடிகள் பற்றும், பற்றின்மையும் காரணமாக, ஒன்றை உயர்த்தியும், ஒன்றைத் தாழ்த்தியும் கூறும் போக்குடையவரல்லர். நடுவுநின்று உண்மை காண்பதில் முனைந்து நிற்பவர் என்பதை அனைவரும் உடன்படுவர். அவர் "சைவ சமயமே சமயம்" என்றும், ராசாங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவம் அழகிது அந்தோ" என்றும் கூறியிருத்தலைக் காண்கின்றோம். ஆகவே, 'உலகியல் நூல்களில் தலையாயது திருக் குறளாய் இருத்தல் போல, மெய்ந்நெறி நூல்களில் தலையாயவை சைவத் திருமுறைகள்' என்று அறுதியிட்டுக் கூறலாம்.

சைவத் திருமுறைகளில் பெரும்பாலன தோத்திரங்களாகவும், திருத்தொண்டர் புராணம் அடியார்களது வரலாறாகவும் ஒரு பக்கம் நிற்க, திருக்குறள்போல நூலாக (சாத்திரமாக) விளங் குவது திருமந்திரம் ஒன்றே. இஃது ஒரு நிறைவுடைய முழு நூலாகும். திருக்குறள் அறம், பொருள், இன்பம் மூன்றையும் கூறி, வீட்டையும் அறத்துப்பாலுள் அடக்கிச் சுருங்கக் கூறு தலால், அது நிறைவுடைய ஓர் உலகியல் நூல். திருமந்திரம், உலகியலாகிய அறம் பொருள் இன்பங்களைச் சுருங்கக் கூறி,

வீட்டு நெறியை விளங்க விரித்துக் கூறுதலால், இஃது ஒரு நிறைவுடைய மெய்ந்நெறிநூல்.

'திருமந்திரம் ஒருவருக்கும் பொருள் விளங்காது;' அதன் பொருளை அதனைச் செய்த திருமூலர் போன்ற யோகிகள் அல்லது சித்தர்களே அறிய முடியும்; மற்றவர்கள் பொருள் கொள்வது எல்லாம் வெறும்பேச்சு என்று சொல்லி, அதன் பொருளை அறியத் தாங்களும் சிறிதும் முயலாமல், முயலுவோரையும் இகழ்ந்து, அதனைச் சிறிதும் அணுகவொட்டாமல் செய்கின்ற திருப்பணியோடு நின்றுவிடுவர் சிலர். திருமந்திரத்தில் சொல்லப்பட்ட பொருள்களின் அனுபவம் கிடைப்பது அரிதாய் இருக்கலாம். 'அந்நூல் இன்ன பொருளைச் சொல்கின்றது என்பதுகூட ஒருவருக்கும் விளங்காது' என்றால், "நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்று செய்யப்பட்ட அந்நூலின் குறிக்கோள் என்னுவது? மற்றைய நூல்கள் போலத் திருமந்திரம் எளிதில் பொருள் விளங்காமல் இருக்கலாம். ஒன்றுமே விளங்காத பகுதியும் சில இருக்கலாம்; ஆயினும், 'நூல் முழுவதுமே ஒன்றும் விளங்காது' என்னும் கூற்று எவ்வாறு பொருந்தும்? ஆகவே பிற நூல்கள் பற்றிய கல்வி, கேள்வி, அனுபவம் முதலியவற்றைக் கொண்டும், அறிவுடையோர் சிலரை அடுத்து நின்றும் திருமந்திரத்திற்கு இயன்ற அளவு பொருள் காண முயலுவதே நன்னெறி நாடும் நன்மக்கட்கு அழகாகும்.

முதலில் கூறியபடி திருமந்திரத்தில் பாயிரத்திற்குப் பின் நூல்தொடக்கத்தில் 'உபதேசம்' என்பது போகப் பின்னர் உலகியல் பகுதிகளே சொல்லப்படுகின்றன, அவற்றுள் முதற்கண் நிலையாமை பலவற்றை நாயனார் கூறுகின்றார். மற்றைய நூல்களில் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை இவைகளே சொல்லப்படுகின்றன. திருமூலர், இவற்றோடு 'உயிர் நிலையாமை' என்ற ஒன்றைக் கூறுகின்றார். யாக்கை நிலையாமைக்கு வேறாக, 'உயிர் நிலையாமை' என்பது யாது என்ற ஐயம் எழுகின்றது. 'உயிர்' என்பது, அதன் அறிவையேயாகும். அஃதாவது ஒன்றை 'நன்று' எனத் துணிந்த அறிவு, பின் அதனையே 'தீது' என எண்ணுகின்றது. இவ்வாறே தீது என நினைத்ததைப் பின் 'நன்று' எனக் கருதுகின்றது. இதுபற்றியே, 'அறம் செய்ய நினைத்தால், அப்பொழுதே செய்துவிடவேண்டும்; காலம் தாழ்த்தலாகாது' என்றும், 'வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியலாகாது' என்றும் கூறுவர். இத்தன்மையான அறிவு நிலையாமையாலும்

உயிர் அல்லற்படுகின்றது. அதனைத் திருமூலர் அறிவுறுத்தருள் கின்றார்.

" ஆம்விதி நாடி அறம்செய்மின் ; அந்நிலம்
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின் ;
நாம்விதி வேண்டும தென்சொலின் மானுட
ராம்விதி பெற்ற அருமைவல் லார்க்கே. "

என்பது அவற்றுள் ஒரு திருமந்திரம்.

மற்றும் கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன் மனை நயவாமை, அந்தணர் ஒழுக்கம், அரசர் ஒழுக்கம், வான் சிறப்பு, அறன் செய்வான் திறம், அறன் செயான் திறம், அன்புடைமை, கல்வி, கல்லாமை, கேள்வி கேட்டமைதல், நடுவு நிலைமை என்று அறங்கள் பலவற்றையும் திருமூலர் கூறியுள்ளார். பின்னர்ப் புராண வரலாறு, மந்திரங்கள், யந்திரங்கள் (சக்கரங்கள்), அட்டாங்கயோகம், அட்டமா சித்தி, சமயங்களின் வகை, சரியை, கிரியை, ஞானம், குரு பத்தி, சிவ பத்தி, அடியார் பத்தி, திருக் கோயில் வழிபாடு முதலிய பலவும் திருமந்திரத்தில் விரிவாகக் கூறப்படுகின்றன. எனவே உலகியலையும், மெய்ந்நெறியையும் ஒருங்கு வைத்து, மெய்ந்நெறியை முதன்மைப்படக் கூறுகின்ற நிறைநூலாகிய திருமந்திரத்தை மக்கள் நன்குணர்ந்து பயன் பெறுதல் தக்கதாகும்.

வாழ்க திருமந்திரம்!

திருமந்திரமும் —
திருத்தொண்டர் புராணமும்

★

சித்தாந்த பண்டிதர்
திரு ப. இராமநாத பிள்ளை.
சென்னை.

★

திருமந்திரம் பத்தாந்திருமுறை. மற்றையது பன்னிரண்டாந் திருமுறை; பெரிய புராணம் என வழங்குவது.

பத்தாந்திருமுறை சிவஞானபோதம் பத்தாம் சூத்திரப் பொருளைக் கருவாக உடையது எனக் கருதுதல் தகும்.

உயிர்களுக்குப் பிறப்பு, வீடு என்னும் இருநிலைகள் உள்ளன. பிறப்பு நிலையில், அவை உலகப் பொருள்களை அறிந்து அணுகி நுகர்ந்து வருவன. இவ்வறிவு, செயல்கள் அவற்றிற்கு முதல்வன் உபகாரத்தால்தான் கிட்டி உள்ளன. முதல்வன் உயிர்க்குயிராய் மறைந்திருந்து அவற்றைச் செலுத்தி, அறிவித்து நுகர்விக்கின்ருன். உயிரும் முதல்வனும் கூடி நிற்கும் கலப்பில் உயிர் தன் அறிவில் மறைந்துள்ள முதல்வனை நோக்குவதும் இல்லை; அறிவதும் இல்லை. முதல்வனும் தன் உண்மையை உயிருக்குக் காட்டாது அதனேடு ஒற்றுமைப்பட்டு மறைந்தே உளன். இனி, குருவருள் பெற்றவர்கள், தம் அறிவில் தெளிவிக்கும் அறிவாய், முதல்வன் உடன் நிற்பதை உணர்வர். உணர்ந்தபின், அது வரை அவன் உயிரேயாகி நின்றது போல, தாம், யான், எனது என்னும் செருக்கின்றி, அவனேடு ஒன்றி (வேறு பிரிந்து நில்லாது) நிற்பர்; நின்று, அவன் அருள் செலுத்தியபடி, நீர் வழிப்படும் புணை போல, இறை பணி நிற்பர். இங்ஙனம் நிற்பார்க்கு மலம், மாயை, வினை என்பவை வாதனையாகவும் தாக்க மாட்டா: இது பத்தாஞ் சூத்திரப் பொருள்.

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே"

என்பது அச்சூத்திரம்

இக்கருத்தைத் திருமந்திர வரலாறு கூறும் பெரிய புராணம் 'ஊனுடம்பிற் பிறவிவிடம் தீர்ந்துலகத் தோருய்ய — ஞானம் முதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை ...... சாத்தி' எனக் குறிப்பிக்கின்றது.

திருமந்திரம் சாத்திரம்; திருத்தொண்டர் புராணம் வரலாறு கூறுவது; ஆயினும், பின்னையது ஆங்காங்கு நல்லொழுக்கம், சாதனம், பயன் என்பவற்றைச் கூறும்போது திருமந்திரத்தைத் தழுவியே செல்கின்றது. சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

திருக்கோயில் இறைவன் விளங்கி நிற்கும் இடம் என்பதும், அதனால் அதன் நாட்பூசை முதலியவை முட்டுப்படாமல் செய்யப் படுதல் வேண்டும் என்பதும் திருமந்திரத்தில் உள்ள கருத்து.

"முன்னவனார் கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள, வாரி வளங்குன்றும்"

என்றாற்போன்ற திருமந்திரப் பகுதிகள் யாரும் அறிந்தவை.

பெரிய புராணம், தடுத்தாட்கொண்ட புராணத்தில், நம்பி ஆரூரருக்கும் விருத்த வேதியருக்கும் உண்டாகிய வழக்கை விரிவாகக் கூறுகிறது. திருவெண்ணெய்நல்லூர்ப் பேரவையில் வழக்கு விசாரிக்கப்பட்டது. முடிவில், "நான்மறை முனிவனார்க்கு, நம்பி ஆரூரர் தோற்றீர்" எனத் தீர்ப்புக் கூறப்பட்டது. ஆயினும், வேதியர் காட்டிய ஆவணம் அவர்க்கு உரியதுதானா, அவரை அடையாளங்காண வேண்டுமே (Idendification) என்னும் சங்கை எழுகின்றது அதனால், அவையினர் வேதியரை வினவுகின்றனர்.

"அருமுனி! நீ முன் காட்டும் ஆவண மதனில், எங்கள் — பெருமைசேர் பதியே யாகப் பேசியது; உமக்கு இவ்வூரில் வருமுறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டுக" என்றனர்.

அப்பொழுது வேதியர், அருட்டுறை எனப்படும் திருக் கோயிலுட் சென்று மறைந்து, அது தமக்கு வருமுறை மனை

என்றும், அங்குத் தான் தாம் நீடுவாழ்வது என்றும் காட்டி மெய்ப்பிக்கின்றார். இவ்வாறு திருக்கோயிலின் உண்மை இரண்டிலும் வலியுறுத்தப்படுகின்றது.

"வேட்டவி உண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் நாமிலம் காலையும் மாலையும்
ஊட்டவி யாவன உள்ளம் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும் பாலவி யாகுமே"

என்பது திருமந்திரத்தில் ஒரு பாட்டு.

அந்தணர் வேட்ட நெய், பால் ஆவியை முதல்வன் ஏற்று அருள் புரிகின்றான்; அவனுக்குப் புகையும் ஒளியும் காட்டவும் வழியின்றி உள்ளேம்; ஆயினும், அவன் உள்ளத்தை மகிழ்விக்கும் நிவேதனமாக யாம் செய்வது பாட்டாகிய அவி ஆகும். அஃது அவனிடத்து அடையும்போது பாலாகிய அவி (அது. பாற்சோறு) போலச் சிறந்ததாக ஆகின்றது — என்பது அதன் பொருள்.

திருவருட்டுறையில் புகுந்து மறைந்த வேதியர், நம்பி ஆரூரருக்கு விடைமேல் தோன்றி அருள்செய்தது, "நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க — அர்ச்சனை பாட்டே ஆகும்; ஆதலால், மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்பது. இங்கும் இருதிருமுறைகளுக்கும் ஒற்றுமை காணப்படுகிறது. இனி,

"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண் டருள்செயா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே"

என்பது திருமந்திரப் பாட்டு.

இறைவன் திருக்கயிலையில் அம்மைக்கு ஆகமங்களை அறிவுறுத்தியபோது, அவற்றின் ஒருதலையாய முடிபைப் பின் வருமாறு கூறியதாகப் பெரிய புராணம் எடுத்தோதுகின்றது.

"எண்ணி லாகமம் இயம்பிய இறைவர் தாம்விரும்பும்
உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள"

இங்ஙனம் புராணத்தில் வலியுறுத்தப்பெறும் கருத்துக்கள் பலவும்

திருமந்திரத்தில் முன்னரே அமைந்திருத்தல் கண்டு மகிழத் தக்கது.

பெரியபுராண அரங்கேற்றத்தில் அங்கமாக எடுத்துக்கோத்து விளக்கப்பெற்ற மறைகளைச் சேக்கிழார் புராணம் பின்வரும் வகை விளக்குகிறது ;-

"சிறப்புடைய மூவர்முத லிகள்திரு வாய்மலர்ந்த
திருநெறிய தமிழ்மூலர் திருமந் திரமாலை
அறப்பயனுங் காரைக்காற் பேயிரட்டை மாலை
அந்தாதி மூத்தபதி கங்கழறிற் றறிவார்
மறப்பரிய பொன்வண்ணத் தந்தாதி திருமும்
மணிக்கோவை தெய்வஉலா ஐயடிகள் வெண்பா
உறுப்பாகத் திருவிருத்தம் உடலாகப் பொருள்கோள்
உயிராக நாலடியால் நடந்ததுல கெல்லாம்".

வணக்கம்.

பார்வையாளர் — முன்னுரை

★

தவத்திரு. சபாபதி சுவாமிகள்

தலைவர், மௌன சுவாமிகள் மடம், சிதம்பரம்.

★

இந்தப் 11-ஆம் திருமுறை பற்றிய கருத்தரங்குக்குப் பார்வையாளனாக இருந்து நடத்துகின்ற பொறுப்பினை — எத்தனையோ அறிஞர் பெருமக்கள் குரவர் பெருமக்கள் நடத்திக் கொடுக்க இருக்கிறார்கள் — என்றாலும் எங்கோ ஒரு மூலையில் இருந்த அடியேனை இந்த அறிஞர் முற்றத்தில் கொண்டுவந்து அறிமுகப்படுத்துகின்ற பெருங் கருணைத் திறத்தினால் ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் அடியேனுக்கும் இப் பணியைக் கொடுத்து உங்கள் முன்னிலையில் அமர்த்தியிருக்கிறார்கள்.

"மூலை இருந்தாரை முற்றத்தி லிட்டார்
சாலப் பெரியரென்று உந்தீ பற
தவத்தில் சரதர் என்று உந்தீபற"

என ஞான நூல் பகர்கிறது.

அந்த நிலையிலே அடியேனையும் இங்கே ஒரு பொருளாக மதித்து இந்த இடத்தில் அந்தப் பணியை நிறைவேற்ற அமைத்த ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் கருணைக்கு எனது நன்றியைச் சாலப் புலப்படுத்துகிறேன்.

அடுத்தபடியாக நேற்று திரு, வெள்ளைவாரணனார் பேசும் போது எம்பெருமானின் திருவருள் திறத்தினை எடுத்துக்காட்ட,

" அருமையில் எளிய அழகே போற்றி
கரு முகில் ஆகிய கண்ணே போற்றி "

என்ற இரண்டு அடிகளை வைத்துக் கொண்டு பல கருத்துக்களை நமக்கு விளக்கினார்கள்.

இறைவனுடைய பேரருள் திறம் நம்முடைய நிலைமைக்கு மிக அருமையாக இருக்கிறது. ஆனாலும்கூட மிக எளியவனாக வந்து நமக்கு அருளுகிறான் என்ற குறிப்பினை நமக்கு புலப்படுத்தினார்கள். அதனைத் தொடர்ந்த பின் மூன்று அடிகள் என்னுடைய அனுபவத்திற்கு உரியவாக இருப்பதால் அவற்றைக் கூறாமல்விட்டால் நான் கைமாறு மறந்தவன் ஆகிறேன். ஆகவே அந்த அடிகளாவன,

" மன்னிய திரு அருள் மலையே போற்றி
என்னையும் ஒருவன் ஆக்கி, இருங் கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி "

என்பதனவாகும். இங்கே அருள் மலையாக விளங்கி உங்கள் அனைவரையும் தன் பெருங் கருணைத் திறத்தால்பாலிக்கின்ற அந்த அளவில் அடியேனையும் அமைத்துக்கொள்ளாது வேறு ஒரு தொண்டினையும் அளித்து அடியேனை இந்தப் பணியிலும் ஈடுபடுத்திய மகாலிங்கப்பெருமானுக்கு நான் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். அந்த அடிகள் இதனை நினைவுக்குக் கொண்டு வருகின்றன.

நீங்கள் நினைக்கலாம். ஏதோ நமக்கெல்லாம் நன்றி சொல்லி, மகா சந்நிதானத்திற்குச் சொல்லி, பின்னே மகாலிங்கப்பெருமானுக்குச் சொல்கிறாரே என்று நினைக்கக்கூடும். நம்முடைய பூஜையிலே கூட முதலில் சூரியனுக்குப் பூஜை, பரிவாரங்களுக்குப் பூஜை, பின்னே பெருமானுக்கு அப்புறம் சண்டிகேசருக்கு என்று முடிக்கின்ற முறையை வைத்துக்கொண்டிருக்கிறோம். அந்த முறையிலே பார்த்தால் இதுவும் ஒழுங்குபெறத்தான் அமைந்து இருக்கிறது என்று நினைவூட்டுகிறேன்.

இந்தக் கருத்தரங்கத்தில் முன்னே பல நிகழ்ச்சிகள் நடந்தன. பின்னேயும் சில நிகழ்ச்சிகள் நடக்க இருக்கின்றன. நான் இடையிலே இருக்கிறது எதுபோல் இருக்கிறதென்றால் " நீங்கள் கரும்பைப் பார்த்திருப்பீர்கள். இனிப்புமிக்க இரண்டு பகுதிகளை இணைக்கிற கணுக்கள் நடுநடுவே இருக்கும். கரும்பை எடுத்துக் கொண்டு கணுவை வெட்டித் தள்ளுவார்கள். வெட்டி எறியப் படுகிற பகுதிதான் கணு என்றாலும் பயனுடைய இரண்டைத் தொடர்பு படுத்துவது கணு. அதைப்போலப் பயனற்ற நான் பயனுடைய இரண்டின் இணைப்பில் உள்ள கணுப்போன்றவனாக இருக்கிறேன். ஆகவே மற்ற மற்ற சாரத்தை எடுத்துக்கொண்டு

இதை ஒதுக்கிவிடுங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கருத்துக் கூட என்னுடையது அன்று. முன்னே உள்ள ஒரு கருத்துத்தான். புலவர் ஒருவர் சொல்கிறார். அப்பாடற்பகுதி,

அல்லிமலர்............
முல்லைஅரும் பில்தோன்றும் புன்முறுவல் நல்லாய்
கரும்பில் சணுநிகர்த்தேன் காண்

என்பது. பயனுடைய பொருள்களோடு பயனில்லாத பொருள் இணைந்து தோற்றுவதுபோல என்னுடைய நிலை — செயல் இருப்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றுப் பேசியபோது திரு அருள் தியாகராஜா அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதனை மீண்டும் சிந்திக்க வேண்டிய நிலை இருப்பதால் சொல்லிவிடுகிறேன். இறைவனது முடிவு இல்லாத ஆற்றலை அவர் சொன்ன இரண்டு அடிகள் தெரிவிக்கின்றன.

“இடைமருது உறையும் எந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி”

என்பன அந்த இரண்டு அடிகள். இடைமருது உறைகின்ற எப்பெருமான் நமக்குத் தந்தையாக இருக்கிறான். அவன் சடையில் கங்கை தரித்தவனாக இருக்கிறான் என்ற கருத்து அவற்றில் புலப்படுகிறது. கங்கையில் கரையற்ற வெள்ளம் புரண்டோடி வருகிறது. அதனுடைய அலைகளிலே ஒரு மயிர் இழை தத்தளிக்கிறது. அப்படி ஆற்றலே இல்லாத மயிர் இழையிலே கங்குகரையின்றி வெள்ளம் பெருக்கெடுத்துவர அதனையே இறைவன் அடக்கிவிடுகிறான். கங்கைப் பிரவாகத்தில் தடுமாறுகிற மயிர் நுனியிலே அந்தக் கங்கையின் பேராற்றலை எல்லாம் இறைவன் அடக்கிவிடுகிறான். தன் சடையிலே கங்கையைத் தரித்துவிடுகிறான் என்றால் அவன் எத்தகைய பேராற்றல் உடையவனாக இருப்பான் என்பதை நினைப்பூட்டிக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட பெருமான் இடைமருதூரிலே நமக்குத் தந்தையாக இருக்கின்றான் என்பதை நினைக்கும்போது அதனிடத்தில் ஒரு மயக்கம் வருகிறது. நாம் அதனைச் சிந்தித்து அதை நம்முடைய அனுபவத்திற்குரியதாக ஆக்கிக் கொள்வது நல்லது என்று உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன்.

நேற்று மாலையில் ஒரு பாடலை எடுத்துக் குறிப்பிட்டார்கள். இடைமருதூர் பற்றிய கருத்துத்தான் அது. இங்கே ஆனந்தத்

தேன்விரியும் கொன்றையானைப் பற்றியது. அதன்கண் வருகிற பொந்து என்பதற்கு அழகான விளக்கம் கொடுத்தார்கள். தேனீக் கூட்டத்தில் பலவகை உண்டு; கொசுத் தேன், கொம்புத் தேன், பொந்துத் தேன் என்பவாக. மற்றவற்றை எல்லாம்விடப் பொந்துத் தேன் என்கிறபோது அந்த ஈக்கள் சேர்க்கச் சேர்க்க நாம் எடுத்துக்கொள்கிற வாய்ப்பு பொந்துத் தேனிடத்தில்தான் இருக்கிறது என்ற விளக்கத்தைத் தந்தார்கள் ஆனல் அதற்கும் மேற்பட்ட கருத்து ஒன்றைச் சொல்ல விருப்புகிறேன். ஆனந்தத் தேன் என்கிறபோது தேனைப்பற்றிச் சொன்னர். அந்த ஆனந்தம் எப்படிப்பட்டது என்று சொல்லவேண்டாவா? மக்களாகிய நாம் எல்லோரும் உயிர் வர்க்கம்தாம். உயிர் வர்க்கம் எல்லாவற்றுக்கும் அறிவாற்றல் இல்லை. ஆயினும் மிகக் கீழ்ப்பட்ட நிலையில் உள்ள சிற்றுயிர்களுக்குக்கூட இன்பம் இருக்கிறது. இன்பம் இல்லாதது ஒன்றுமே இல்லை. இன்பம் இல்லை என்ருல் மாய்ந்துவிடும். அவரவர்களுக்குத் தக்கபடி இறைவன் இன்பத்தைத் தந்துகொண்டிருச்கிருன். மனிதர்கள் என்ருல் நமக்குள்ளேயே எல்லோருக்கும் ஒரேவிதமான இன்பம் கிடைப்பதில்லை. நமக்குள் இருக்கிற பொருமை போன்ற உணர்ச்சிகளில் இருந்தே ஒருவருக்குக் கிடைக்கின்ற இன்பம் போல இன்னொருவருக்குக் கிடைக்கவில்லை என்பதைக் காணலாம். முதலில் விலங்குகள் இன்பம் என்ருல் அதற்கு மேற்பட்ட இன்பம் மனிதர்களுடையது. மனிதர்களுடைய இன்பத்தையும்விட மேம்பட்டது அரசர்களுடையது அதைவிட மேம்பட்டது கந்தர்வர்களுடையது அவர்களுக்குக் கிடைக்கின்ற இன்பத்தையும்விட மேம்பட்டது அமரர்களுடையது. இப்படி மேலே போகப்போகப் படிப்படியாக இன்பம் உயர்ந்துகொண்டே போகிறது. கைவல்யம் என்ற நூலிலே பரமானந்தத்தைச் சொல்கிற இடத்தில் இப்படிச் சொல்கிருர்கள்.

“நரர்கள்......... அயன்.”

இப்படி வருகின்ற இன்பங்கள் ஒன்றுக்கொன்று நூறுநூறு மடங்கு பெருமை உடையன என்று சொல்லி அந்த இன்பங்கள் எல்லாம்

ஒரு திவலை...... .....

இறைவனிடத்தில் இருந்து வருகிற பேரானந்தத்திற்கு ஒரு திவலைகூட ஆகாது என்று சொல்கின்ற ஒரு குறிப்பை அதிலிருந்து காண்கிருேம்.

அப்படிப்பட்ட ஆனந்தப் பெருக்கினை விளைவிக்கிற பெருமானை நமக்கு இடைமருதூரிலே நினைவூட்டியிருக்கிருர்கள்.

ஆற்றுப் பெருக்கு நிறையப்போகலாம். அதை அனுபவிக்கின்ற திறன் நம்மிடத்தில் இருந்தால் தான் அனுபவிக்க முடியும். நேற்று திரு அருணாசலம் நினைப்பூட்டுகின்ற காலத்தில் உமாபதிசிவத்தின் வரலாற்றில் இங்கே பக்குவநிலையில் யார் இருக்கிறார்கள், அருள் செய்யலாம் என்று பார்த்து ஒருவரும் இல்லாததால் முள்ளுச்செடி ஒன்றுக்கு அருளிய தன்மையைச் சொன்னார்கள். இறைவன் அருள் பொங்கிப் பெருகினாலும் அதை அனுபவிக்கின்ற பரிபக்குவம் நமக்கு இல்லாவிட்டால் என்ன பிரயோசனம்? அதைத்தான் அம்மையார் சொல்கின்றார்.

நீ வழங்குகின்றாய். எனக்குப் பக்குவம் இன்மையினால் அதை அனுபவிக்கின்ற நிலை என்னிடத்தில் இல்லையே என்றார்கள். அருளை அனுபவிப்பதற்குரிய தகுதியைப் பெற நாம் முயற்சி செய்யவேண்டும். இடைமருதூர் என்ற இத்தலத்தின் சிறப்பைப் பலரும் சொன்னார்கள். திருவலஞ்சுழி விநாயகர், சுவாமிமலை முருகன், திருச்சேய்ஞலூர் ஆப்பாடி சண்டேசுவரர், தில்லை நடராசர், திருவாரூர் சோமாஸ்கந்தர், திரு ஆலங்குடி தட்சிணாமூர்த்தி, திருவாவடுதுறை நந்திதேவர், சீர்காழி பைரவர், மாந்துறை சூரியன் — இவர்கள் நடுவில் திருவிடைமருதூரில் இருப்பவர் 'மகாலிங்கம்' என்ற தன்மையை எடுத்துச் சொன்னார்கள்.

அதனோடு இத்தலத்திற்கு மத்தியார்ஜுனம் என்று பெயர் அர்ஜுனம் என்றால் மருதமரம். வடக்கே தெலுங்கு நாட்டில் குந்தக்கல்லுக்கு அருகில் ஸ்ரீசைலம் என்ற இடம் இருக்கிறது. அதற்கு மல்லிகார்ஜுனம் என்றுபெயர். வடக்கேயுள்ளது அது. தெற்கே திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் அருகில் குடார்ஜுனம் இருக்கிறது. இரண்டுக்கும் நடுவில் இருப்பதனால் இதற்கு மத்தியார்ஜுனம் என்ற பெயர் வந்தது என்று சொல்லுவார்கள்.

மெய் அன்பர்களே, பார்வையாளருக்கு முன்னுரை அதிகம் தேவையில்லை. பின்னுரை இருந்தால் சுருக்கமாகச் சொல்லலாம் என்று நேற்றே திரு அழகரடிகள் குறிப்பிட்டார்கள். நான் பொருள்பற்றி எதுவும் பேசவில்லை. புறம்பேயும் போக விரும்பவில்லை. ஒரே ஒரு கருத்தை நினைவில் கொள்ளவேண்டும்.

இந்தப் 11 ஆம் திருமுறை. இருக்கிறதே மற்ற திருமுறைகளுக்கு இல்லாத பெருமை இதற்கு உண்டு. எல்லாத் திருமுறைகளும் அடியார்களால் இறைவன்மேல் பாடப்பட்டன. இந்தப் 11 ஆம் திருமுறையில் இருக்கிற திருமுகப்பாசுரம் இறைவன் வாக்கேயாக அமைந்தது. இந்தப் பெருமையை நினைவில் கொள்ளவேண்டும். அடுத்துத் தம் கருத்துரையை வழங்க இருக்கிறவர்கள் பேசுவார்கள்.

பதினோராம் திருமுறை
இலக்கிய நோக்கும்—சாத்திர நோக்கும்

★

திரு. கி. வா. ஜகந்நாதன், எம். ஏ.,
ஆசிரியர், கலைமகள், சென்னை.

★

அவைக்குத் தலைமை தாங்கும் அடிகளார் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைச் சமர்ப்பித்துக் கொள்கிறேன். தாய்மார்களே, பேரன்பர்களே, வணக்கம். இந்தப் பேரவையில் வந்துபேச வாய்ப்பளித்த மதிப்பிற்குரிய குருமகாசந்நிதானம் அவர்களுக்கும் பெரியோர்களுக்கும் நன்றியறிவையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று அவைக்குத் தலைமை தாங்கும் அடிகளார் அவர்கள் பார்வையாளர் என்ற பெயரில் தலைமை தாங்குவது பெயர் அளவுக்கு மிகவும் பொருத்தமாகும். அவர் பெயரே சபாபதி சுவாமி என்பதுதானே. சபாபதி சுவாமி இன்று சபைக்குச் சபா பதியாக எழுந்தருளியிருப்பது எவ்வளவு பொருத்தம்?

இன்று எனக்குப் பேசப் பணித்தது 11 ஆம் திருமுறையில் இலக்கிய நோக்கும், சாத்திர நோக்கும் ஆகிய தன்மை. 11 ஆம் திருமுறை தோத்திர நூல். அருளாளர்கள் பாடிய நூல்; ஆகையால் இறைவனுடைய பெருமையைச் சொல்கிற பாங்கில் உண்மையைச் சொல்கிற அறிவுத் திறமையும், தமிழிலுலே சொன்னதனுலே இலக்கியப் பாங்கும் ஒரு சேர அமைந்திருக்கின்றது.

பதினோராம் திருமுறைக்குச் சில சிறப்பான பண்புகள் உண்டு முதலில் அதன் பெயரே ஏனைய பத்துத் திருமுறை களைக் காப்பாற்றுகிறது. மற்ற மற்ற திருமுறைகளுக்கெல்லாம்

தனித்தனிப் பெயர் உண்டு. பதினோராம் திருமுறைக்குத் தனிப் பெயர் இல்லை. எண்ணினாலே 11 ஆம் திருமுறை என்றே பெயர் அமைந்தது. அதைக்கொண்டே முன்னாலே பத்துத் திருமுறைகள் உண்டென்பது தெரிகிறது.

பன்னிரு திருமுறைகளின் அமைப்பு முறைக்குப் பொருள் பாங்கொன்று எளியேனுக்குத் தோன்றுகிறது. முதல் எட்டுத் திருமுறைகளும் சைவ சமய ஆச்சார்யர்கள் 4 பேரால் யாக்கப் பெற்றவை. அவை அனைத்தும் சிவபெருமானைப் பற்றிச் சொல்வன. தனியாகச் சிவபெருமானையே சொல்வன. 9 ஆம் திருமுறை திருவிசைப்பா சிவபெருமானோடுகூட அவர் குடும்பத்துப் பிள்ளையாகிய முருகப் பெருமானையும் சேர்த்துச் சொல்வது. சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு திருவிசைப் பாவில் அமைந்திருப்பதனால் சிவபெருமானோடு அவனுடைய இளம் பிள்ளையாகிய குமார நாயகனையும் சொல்கிறது. 10ஆம் திருமுறையாகிய திருமந்திரம் விநாயகப் பெருமானையும், யந்திர வகையினாலே அம்பிகையையும் இணைத்துச் சொல்கிறது. எனவே சிவபெருமானின் குடும்பம் பின்னும் விரிந்தது. 11 ஆம் திருமுறையிலே சிவபெருமான் பெற்ற பிள்ளைகளும், சிவபெருமானை அடைந்த பிள்ளைகளும் ஆகிய இரு சாராருடைய நிலைமையும் சொல்லப்பெறுகின்றது. சிவபெருமான் பிள்ளை யாகிய விநாயகப் பெருமானைப் பற்றிய மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலையும், முருகப் பெருமானைப் பற்றிய திருமுருகாற்றுப்படையும் இதில் அமைந்ததோடன்றி நம்பி யாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி இதில் இருக்கிறது. ஞானசம்பந்தப்பெருமானைப்பற்றிப் பாடிய பல பிரபந்தங்கள் இதில் உண்டு. கண்ணப்பநாயனாரைப்பற்றிப் பாடிய திருக்கண்ணப்பதேவர் திருமறம் இதில்தான் அடங்கி யுள்ளது. கடைசியில் திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை இந்தப் 11-ஆம் திருமுறையில் அமைந்திருக்கிறது. ஆகவே சிவபெருமானையே பாடும் நூல்கள் முன்னும், சிவபெருமானையும் – அவன் குடும்பத்தையும் – அடியார்களையும் பாடுகின்ற நூல்கள் பின்னும், அதன் பின்பு அடியார்களையே பாடுகின்ற நூல் 12ஆவது திருமுறையாகிய பெரியபுராணமுமாக அமைந்ததால் ஒரு சிறப்பு இருக்கிறது என்று எளியேனுக்குத் தோற்றுகிறது.

அதோடுகூடத் தலைவர் சொன்னதுபோல 11-ஆம் திரு முறையில் உள்ள முகப்பு நூல் – திருமுகப் பாசுரம் இறைவன் எழுதிய திருமுகம் – சீட்டுக் கவி அங்கே இருக்கிறது. சுந்தர மூர்த்தி நாயனாருடைய 7-ஆவது திருமுறையிலே – திருத்

தொண்டத் தொகையிலே "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்கிற பாசுரத்தில் தில்லைவாழ் அந்தணர் என்கிற பாதி அடி இறைவனே பாடியது என்பார்கள்.

பன்னிரண்டாம் திருமுறையில் "உலகெலாம் உணர்ந் தோதற்கரியவன்" என்ற பாட்டில் 'உலகெலாம்' என்பது ஆண்டவனுடைய திருவாக்கு. ஆனல் 11 ஆம் திருமுறையில் உள்ள முகப்புப் பாசுரம் முழுப்பாட்டாக ஆண்டவனல் பாடப் பட்டது.

அடுத்து ஏகாதசம் என்பது "ருத்திரத்" தோடு சம்பந் தமுடையது. மந்திரத்தின் முடி — அதில் 11 ஆவது தலைசிறந்த பகுதி. எனவேதான் 11 வது திருமுறையில் ஆண்டவன் திருப் பாட்டு முழுவதும் அமைந்திருக்கிறது. அப்பனுடைய பாட் டுக்குப் பின்னலே அமைந்திருப்பது அம்மையின் பாட்டு. அம்மையப்பன் என்பதுபோக அப்பன் அம்மையே என்று வரவேற்றதனல் அப்பன் அம்மையின் பாட்டு முதலாகத் தொடங்கி யிருக்கிறது. 11ஆம் திருமுறையின் கடைசிப் பாட்டாக அமைந் திருப்பது அப்பரைப் பற்றிய பாட்டு. முதல்பாட்டு அப்பன் பாட்டு. கடைசிப் பாட்டு அப்பரைப் பற்றிய பாட்டு. அப்பன் என்பதற்கு மரியாதைச் சொல் அப்பர் என்பது.

அதை நாம் அப்பர் சுவாமிகள் திருநாமத்தில்தான் பார்க்கிறோம். அவரது திருவேகாதசமாலை 11 ஆம் திருமுறையில் கடைசிப்பாட்டாக அமைந்திருக்கிறது. இப்படி அப்பனுடைய பாட்டு முதலிலே — அப்பரைப்பற்றிய பாட்டு முடிவிலே கொண்டு இடையிலே பல பாடல்கள் அமைந்திருப்பது 11 ஆம் திருமுறை. இவற்றில் எல்லாப் பாடல்களையும் எடுத்துக் காட்டுவதற்கு நேரம் எங்கே? ஒரு சிலவற்றை நினைப்பூட்டலாம் என்று எண்ணுகிறேன்.

காரைக்கால் அம்மையார் எல்லோருக்கும் அம்மையாராக இருக்கிறவர்கள். அவர்களைப்பற்றித் தமிழ்விடுதூது உடையார் சொல்வார்: அம்மையார் கயிலைக்குப் போனபோது சிவபெருமான் அம்மையே என்று அழைத்தார். சிவபெருமான் பிறப்பு இல்லாதவன்.

"பிறவா யாக்கைப் பெரியோன்"

என்று சங்கநூல் பேசும். அத்தகைய பெருமான் பிறவாமையினல் பிறந்தவர்கள் சொல்கின்ற அப்பா, அம்மா என்ற சொல் அவன் திருவாக்கிலிருந்து வரவில்லை. அப்பா, அம்மா என்ற சொல்

அப்பனையும், அம்மையையும் உடையவர்கள் பேசுகின்ற சொல்; இறைவனே அப்பனும் அம்மையும் இல்லாதவன். அதைப் பேச முடியாது. ஆனாலும் உலக வழக்கில் தன் பிள்ளையை அப்பா என்றும், தன் பெண்ணை அம்மா என்றும் சொல்கிற வழக்குண்டு. முருகப்பெருமானையும், விநாயகரையும் பெற்றவன் சிவபெருமான் ஆதலாலே அவர்களை அவன் ஒருகால் அப்பா என்று அழைத் திருக்கக்கூடும். ஆகவே அப்பா என்ற சொல் அவன் வாயில் இருந்து வருவதற்காவது சந்தர்ப்பம் இருந்திருக்கிறது. அவ னுக்குப் பெண் குழந்தை இல்லாமையினால் அம்மா என்ற சொல் அவன் திருவாக்கில் வரவேயில்லை. இறைவன் திருவாக்கில் எல்லாச் சொற்களும் வர 'அம்மா' என்ற சொல்மட்டும் வாராமை யினால் அந்தப் பாக்கியம் தனக்குக் கிட்டவில்லையே என்று அந்தச் சொல் அழுததாம். அந்த அம்மா என்ற சொல்லும் அந்தப் பெருமானுடைய திருவாக்கில் வரும்படி செய்துவிட்டார் காரைக்கால் அம்மையார்.

"அம்மைதமக்கு இல்லாது அம்மைதாமே யாய்இருந்தார்...
அம்மையே என்று உரைக்கும் அம்மையாய்"

அந்த அம்மையினுடைய உள்ளம் எப்படி இருக்கிறது? உலகத்து உயிர்க் கூட்டங்களிலே அருள் நிறைந்தது அம்மையின் உள்ளம். தம்முடைய குழந்தைகளின் அழுக்கை தம்முடைய அழுக்காகக் கொள்வது தாயின் நிலை.

நம்முடைய குறைகளை எல்லாம் தம்முடைய குறைகளாக ஏற்றுக்கொள்கிறார்கள். பொதுவாக நம்முடைய அருளாளர் பெருமக்களுடைய திருவாக்கில் மிகவும் ஆராய்ச்சிக்குரிய சில பகுதிகள் உண்டென்று சிலர் சொல்வார்கள். ஆராய்ச்சிக்காரர் களால் அல்லற்படுத்தப்படுகின்ற பகுதிகள் அவை

"வேனில் வேள் கணை கிழித்திட மதி சுடும்
அதுதனை நினையாதே
மான் நிலாவிய நோக்கியர் படிறிடை மத்து
இடு தயிர் ஆகித்
தேன் நிலாவிய திருஅருள் புரிந்த
என் சிவன் நகர் புகப்போகேன்
ஊனில் ஆவியை ஓம்புதல் பொருட்டு
இனும் உண்டு உடுத்து இருந்தேனே.

என்று மணிவாசகப் பெருமான் சொல்கிறார். இந்தப் பாட்டைக்

கொண்டு அவர் காம மயல்பட்டார் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதும்படி இந்தப் பாட்டை அகச் சான்ருகக் காண்கின்ரேம்.

அருணகிரிநாதர் திருவாக்கிலே இதுபோல மலைமலையாகக் காண்கிரேம்.

" சிங்கார மடந்தையர் தீநெறி போய் மங்காமல்
எனக்கு வரம் தருவாயே"

என்பதாக வருகிற பாடல் உண்டு. இவை எல்லாம் அவர் ஆரம்ப காலத்தில் பாடிய பாடல்கள் என்று சொல்லித் தள்ளிவிட முடியுமா என்ருல் முடியாது. அனுபவம் பெற்ற ஞான்று அவர் பாடிய அனுபூதியிலேயே

" வளைபட் டகைமா தொடுமக் களெனும்
தளைப்பட் டழியத் தகுமோ தகுமோ "

என்றிருக்கிறது. இப்படியே மணிவாசகப் பெருமான் திருவாக்கில் பல பகுதிகள் உண்டு. இவைகளை எல்லாம் பார்க்கும்போது அவர்கள் தம்முடைய வாழ்நாளில் பெண் மயல் பட்டு உழன்ருர்கள் என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனுல் அப்படிச் சொல்வதற்கு நம்முடைய நெஞ்சில் துணிவு பிறப்பதில்லை.

நம்முடைய குற்றங்களை அந்தப் பேரருளாளர்கள் தம்முடைய குற்றங்களாக ஏறட்டுக்கொண்டு நமக்காகச் சொல்கிருர்கள்.

நம்மோடு இருப்பதனுலே நம்முடைய குறைபாடுகளை உணர்ந்தவர்கள், பக்குவத்தினுலே உயர்ந்தவர்களாகையால் இறைவன் மொழி உணர்ந்தவர்கள் நம்மிடத்தில் உள்ள குறைகளினுல் தம்முடைய குறைபாடுகளைத் தம்முடைய குறைபாடுகளைப் போலவே இறைவனிடத்தில் விண்ணப்பித்துக் கொள்கிருர்கள்.

பதினேராம் திருமுறைதான். புறம்பே போகிறேன் என்று நினைக்காதீர்கள்.

" நினையா தொழிதிகண் டாய்நெஞ்ச
மேஇங்கோர் தஞ்சமென்று
மனையா ளையும்மக்கள் தம்மையுத்
தேறியோர் ஆறுபுக்கு

நனையாச் சடைமுடி நம்பன் நந்
தாதைநொந் தாதசெந்தீ
அனையான் அமரர் பிரான்அண்ட
வாணன் அடித்தலமே''

(காரைக்கலாம்மையார்—திருவிரட்டை மணிமாலை)

நெஞ்சைப் பார்த்துப் பேசுகின்றார் அம்மையார். " நீ இறைவனை நினைக்காமல் இருக்கிறாயே. உலகத்திலுள்ள மனைவியையும், மக்களையும் பற்றுக்கோடாக நினைத்து இறைவனை நினையாமல் வாழ்கிறாயே! என்று பேசுகின்றார்.

" நனையாச் சடைமுடி நம்பன் ஓர் ஆறுபுக்கு ''

ஒரு பெரிய ஆறு-கங்கை-புகுந்தும் கூட நனையாத சடாபாரத்தை உடைய நம்பன்–நம்பன் என்றால் விருப்பம் உடையவன்.

" நந்தாதைநொந் தாதசெந்தீ அனையான் ''

தூண்டா விளக்குப் போன்றவன், செஞ்சோதிப்பிழம்பாகப் பெருஞ் சோதி சொரூபமாக விளங்குகின்றவன், உலகத்தை எல்லாம் தன் இடமாகக் கொண்டவன் இறைவன். அவனுடைய திருவடியே புகல் என்று நினைக்காமல் வீணே பொழுதைப் போக்குகிறாயே. எதைப் பற்றுக் கோடாகக் கொள்ளவேண்டுமோ அதைப் பற்றுக் கோடாகக் கொள்ளாமல் மனைவியையும், மக்களையும் பற்றுக் கோடாக எண்ணிக் காலத்தை வீணே கழிக்கிறாயே. இறைவனுடைய இரண்டு திருவடிகளைப் பற்றிக்கொள்ள வில்லையே என்று சொல்கிறார்.

இனி இதை ஆராய்ச்சிக்கண்கொண்டு பார்க்கலாம். இதனைப் பாடியவர் யாராய் இருக்க முடியும்? தனக்கென்று ஒரு மனைவியையும், மக்களையும் பெற்று மனைவியால் அல்லல்பட்டு சாக்ரடீஸ் மாதிரி, குழந்தைகளால் துன்புற்றுப் பாடியிருக்க வேண்டும் என்பர் இக்கால ஆராய்ச்சியாளர்.

ஆனால் அந்தப் பெரியவருக்கு மக்கள் உண்டோ என்னவோ தெரியாது. மகாலிங்கப்பெருமான் ஆணையாக அவருக்கு மனையாட்டி கிடையாது என்று நான் சொல்லமுடியும். காரணம் என்ன? இதைப் பாடியவர் காரைக்கால்அம்மையார். அவர்களே பெண்ணாக இருக்கும்போது அவருக்கு எங்கே மனையாள்?

இந்தப்பாட்டு பதினோராம் திருமுறையில் திருவிரட்டை மணிமாலையில் வருகிறது. பாட்டை மறுபடியும் சொல்கிறேன்.

நினையா தொழிதிகண் டாய்நெஞ்சமே
........................அடித்தலமே

இப்படி ஏன் சொல்கிறார்? மனையாள் இல்லாத பிராட்டி, மக்கள் இல்லாத பிராட்டி நம்முடைய குற்றத்தைத் தம்முடையதாக ஏற்றுக்கொண்டு நாமெல்லாம் நம்முடைய நெஞ்சைப் பார்த்துச் சொல்வதாகச் சொல்கிறார். அவர்களுடைய பரம கருணையைக் காட்டுகின்றது.

தான் எத்தனைதான் படித்திருந்தாலும் தன்னுடைய குழந்தையினிடத்தில் உள்ள கருணையால் அதற்குப் புரியும்படியாகச் சொல்லவேண்டுமென்ற எண்ணத்தில் புளியங்கொட்டையை வைத்தே தாய் கணக்குப்போட்டுக் காட்டுகிறாள்.

அப்படிச் சிவபெருமானுக்கே அம்மையாக இருக்கிற காரைக்கால் அம்மையார் நமக்கெல்லாம் அம்மையார்—ஆகவே நம்முடைய குற்றங்களைத் தம்முடையனவாகச் சொல்கிறார்கள். குழந்தையின் அழுக்கைத் தம்முடையதாக்கிக்கொள்வது தாயின் கருணைதானே. நாமெல்லாம் நல்லனவற்றைத்தான் நம்முடைய செயலாகச் சொல்வோம். குற்றங்களைப் பிறர்மீதே சுமத்தப் பார்க்கிறோம். ஆனால் மகாத்மாக்கள் தாம் பிறருடைய குறைகளை எல்லாம் தம்முடையனவாகக் கருதி வாடுவர். அப்படித் தமக்கு மனையாள் இல்லாத பிராட்டி, தமக்கு மக்கள் இல்லாத பிராட்டி மனையாளினாலும், மக்களினாலும் அல்லற்பட்டு உழன்றுகொண்டிருக்கிற நமக்காகப் பாடி வருந்துகிறார்கள். இப்படி அம்மையே சொன்னதனாலே நமக்கு ஒரு கருத்துப் புலனாகிறது. இதுபோலத்தான் மணிவாசகர், அருணகிரியார், ஞானசம்பந்தபெருமான், அப்பர் சுவாமிகள் போன்ற அருளாளர்கள் தம்மை இழித்துப்பேசுகின்ற இடங்களை அவர்களுடைய வரலாற்றோடு இணைத்துப்பார்க்கக் கூடிய சான்றாகக்கொள்ளக்கூடாது. நம்மீதுள்ள கருணையினாலே நம்முடைய குற்றங்களைத் தம்முடையனவாக அவர்கள் ஏறட்டுக்கொண்டு சொல்கிற பகுதியாக அவற்றைக் காணவேண்டும் என்பதற்குச் சரியான, அருமையான சான்றாக இருப்பது காரைக்கால் அம்மையாரின் திருவாக்கு. இனி அதற்குமேலே போகலாம்.

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்ற திருக்குறளை நாம் படிக்கிறோம். இது இரண்டாவது திருக்குறள்.

முதல் திருக்குறள் என்ன ?

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" என்பது.

படிப்பு அகரத்தில் தொடங்குகிறது. இப்படி அகரத்தில் தொடங்கி முறையாகக் கற்றப் பயன் என்ன? கான்வகேஷன் அட்ரஸ் கொடுக்கிறார்களே, அதுபோன்ற கருத்து.

"கற்றதனால் ஆயபய னென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

இரண்டாவது குறள். இதனோடு நின்றுவிட்டதா? இதுவரை படித்தது நாம் எடுத்துக்கொண்ட முயற்சியின் முடிவு அன்று. இதுதான் பின்னொரு முயற்சியின் தொடக்கம் என்ற எண்ணம் வரவேண்டும் அன்றோ?

இதுவரைக்கும் கற்றது வெறும் அறிவுதான். பர ஞானம், அபர ஞானம் என்று சொல்வார்கள் அல்லரோ? இதுவரைக்கும் வெறும் நூலறிவு ஆகிய அபரஞானத்தின் தலை நிலத்தில் நின்றவன் இனித்தான் பரஞானத்தின் முதல் இடத்தில் அடி வைத்தாகவேண்டும். நூலறிவின் எல்லையில்தான் வாலறிவு தொடங்குகிறது.

ஒரு சின்ன உதாரணத்தை வைத்துப் பார்க்கலாம். ஒருவன் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்துவிட்டான். Secondary School Leaving Certificate என்று அதைச் சொல்வர். அதுவே முடிந்த நிலையா? அதுதான் அவனுக்கு Eligibility for College Course என்றுகூடச் சொல்லமுடியும். அதைச் சொல்கிறார். இதுவரைக்கும் நீ கற்றாய்! கற்றதன் பயன் என்ன? வாலறிவன் நற்றாள் தொழப் புகவேண்டும் என்கிறார். இதை நினைவில் வைத்துக்கொண்டால் அம்மையாரின் ஒரு பாட்டு தெள்ளத் தெளிய விளங்கும்.

"நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக"

நூலறிவு என்பது வெறும் புத்தகப் படிப்பு. வாலறிவு அன்று. நூலறிவு மட்டும் உடையவர்கள் என்ன செய்கிறார்கள்? திரிகிறார்கள். ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தாலும் நம் எண்ணம்

எங்கெங்கோ திரிந்துகொண்டே இருக்கிறது. காலயாத்திரை நடந்துகொண்டே இருக்கிறது.

"யாத்திரை பிழைக்கும்"

என்பர் மணிவாசகப்பெருமான். நம் உடம்பு ஓரிடத்தில் படுத் திருந்தாலும் நம் வாழ்நாள் ஓடிக்கொண்டே இருக்கிறது.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாய்"

என்று சொல்வது போல புகுந்து புகுந்து திரிந்துகொண்டிருக் கிறோம். அப்படித் திரியாமல் இருக்கவேண்டுமானால் ஓரிடத்தில் அமையவேண்டும். அமைவதற்குரிய இடத்தை அறிந்து கொள்ளாமையினாலே வாழ்க்கை வெப்பத்தினாலே சாம்பி மீட்டும் மீட்டும் திரிந்துகொண்டே இருக்கிறோம். திரிவதற்குக் காரணம் என்ன? அறிவு இல்லையா? இருக்கிறது — நூலறிவு அமைதிக் குரிய அறிவு இல்லை. அமைதியைக் குலைப்பதற்குரிய அறிவு. ஆகவே தான்

"கற்றாரை யான் வேண்டேன்"

என்றார் மணிவாசகப் பெருமான். கற்பனவும் இனி அமையும் என்றார். அறிவு என்பது பொருளை அறிந்துகொள்வதற்குரியது. அது பர ஞானம். அதுபோதுமா? அதைக்கொண்டு எதை அறிந்துகொள்ள வேண்டுமோ அதை அறிந்துகொள்ள முற்படுவது, அனுபவ உணர்வு தலைப்பட்டால் அந்த அனுபவம் சிறிது வாய்த்தாலும் அமைதி உண்டாகும்.

அருளாலே எதையும் பார் என்றான் அதையறியாமல்
சித்த அறிவாலே பார்த்தேன்
என்னேடி தோழி என்று பேசுவார்.

ஆண்டவன் திருவருள் நாட்டம் ஏற்படுகிறபோதுதான் உண்மையான அறிவு, அனுபவ அறிவு தோன்றத் தலைப்படுகிறது. அதைப் பேசுகின்றார் அம்மையார்.

காலையில் ஒருவர் ஞானசம்பந்தப்பெருமான் பாட்டு ஒன்றைச் சொன்னார்கள்.

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்கவேண்டா சுடர்விட்டுளன் சோதி"

"மிக்குச் சோதிக்க வேண்டா" அந்த மிக்கு என்பதில்தான் நயம் இருக்கிறது. அறிவு உடையான் ஆகையால் சோதிக்க வேண்டும். எந்த வழி சிறந்தது என்று சோதிக்க வேண்டும். புகை இருப்பதனாலே நெருப்பு இருக்கவேண்டும், அடுக்களையைப் போல என்று தெரிந்துகொள்ள வேண்டும். புகை இருப்பதனாலே நெருப்பு இருக்கவேண்டும் என்பது ஏது. அடுக்களையைப்போல என்பது எடுத்துக்காட்டு. அதற்கு மேலே மிக்குச் சோதித்தல் என்ன பயன்? அறிவுக் கூர்மையினால் சொன்னால் அது கொண்டானையே குத்திவிடும்.

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா" சோதிக்காமல் இருக்கக்கூடாது. சோதிக்காமல் இருப்பது விலங்கின் செயல். வழியைச் சோதிக்கவேண்டும். அனுபவ நிலத்தில் புகுந்துவிட வேண்டும். அதற்கு மேலே நூலறிவுக்கு வேலையில்லை. ஆகவேதான் அம்மையார் அவர்கள் சொன்னார்கள்.

"நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக
நீல மணிமிடற்றான் நீர்மையே – மேலுவந்த

நீல மணிமிடற்றான் நீர்மையை நூலறிவினாலே தெரிந்து கொண்டு அவன் திருவருளைப் பெறுவதற்கான முயற்சி நிலத்திலே நுழைவு இல்லாதவர்கள் திரியட்டும்.

இறைவன் பேரருளாளன். குளிர்ந்த நீரைப்போன்ற தண்மையன். தேவர்களெல்லாம் அஞ்சி ஓடும்படியாக வெம்மையைக் கக்கிக்கொண்டெழுந்த ஆலகால விஷத்தை அவன் தன் கழுத்தில் தாங்கிக்கொண்டான். அவன் தன் நெஞ்சிலே ஆலகால விஷத்தைத் தாங்கிக்கொண்டதனால்தான் தேவமகளிர் நெஞ்சிலே மாங்கல்யம் தங்கிற்று. அப்போதைக்குச் சாவாமல் தேவர்கள் தப்பினார்கள். இறைவன் நஞ்சை உண்டும் சாவாமல் இருக்கிறான்.

நஞ்சை உண்டால் நஞ்சு உண்டாரையும் சாகஅடிக்கும், தானும் சாகும். ஆனால் எம்பெருமான் நஞ்சை உண்டான். அவன் சாவாமல் இருப்பது பெரிதன்று; அந்த நஞ்சும் சாவாமல் அவன் கண்டத்திலேயே இருக்கிறது. பக்தர்கள் அந்த நஞ்சுக்கும் ஒரு மலரைப் போடுகிறார்கள்.

"கறைமிடறு அணியலும் அணிந்தன்று அக்கறை
மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே."

என்பதாகப் புறநானூறு பேசுகிறது.

விண்ணோர்கள் அமுதத்தை உண்டும் செத்தார்கள். அவர்கள் உண்டது தேவாம்ருதம் தான். உண்மையான அம்ருதம் இல்லை. உண்மையான அம்ருதம் எது?

" கண்ணார் அமுதக் கடலே போற்றி "

எனப் பேசுவார்கள். அமுதத்தை உண்டும்

" நூறுகோடி பிரமர்கள் நுங்கினார் "

ஆனால் உண்ணத்தகாத நஞ்சை உண்டும் இறைவன் அந்த நஞ்சும் சாகாதவண்ணம் தன் நெஞ்சிலே வைத்திருக்கிறான். அவனைப் புகல் அடைந்தால் தான் நாமும் சாவாத நிலையை அடைய முடியும்.

" அம்ருதம் இகபவதி "

என்று சுருதி சொல்கிறது.

என்றைக்கும் வாழ்கின்றவன் யாரோ, இறப்புக்குரிய கருவிகளை உண்டாலும் சாகாதவன் யாரோ அவனைப் பற்றிக் கொள்ளவேண்டும். அவனைத் தான் மேலாக உவந்தோம் என்று நம்முடைய அம்மையார் சொல்கிறார்.

" நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக
நீல மணிமிடற்றான் நீர்மையே — மேலுவந்த

இங்கே உவந்து என்றால் அனுபவித்தல்.

இறைவன் திருவருளில் ஈடுபடவேண்டும் என்ற நெறியில் புகுந்தால் அந்த அந்த நிலைக்கேற்றபடி படிப்படியாக அனுபவம் உண்டு. இப்போது சமயவாதிகள் இருக்கிறார்களேயொழிய சமயவாணர்கள் அரியராக இருக்கிறார்கள். Religion is experience என்பார்கள். சமயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டே இருப்பதனால் தெளிவு பிறக்காது. சமயத்தை வாழ்வாக்கவேண்டும். அந்த அனுபவம் என்பது எப்போதும் ஒரே மாதிரியானதன்று. பசித்தான் ஒருவன் உள்ளே சென்று உண்டான். உண்டவுடன் 'என் பசி தீர்ந்துவிட்டதா?' என்று வேறொருவரிடம் கேட்டா தெரிந்துகொள்ளவேண்டும்? அவனுக்கே அது தெரியும். அது போல இறைவன் திருவருளில் ஈடுபட்டு எந்த எந்த நிலையில் உயர்ந்து வருகிறோமோ அந்த அந்த நிலைக்கேற்ப இன்ப அனுபவம் கிடைக்கும். முடிந்த அனுபவம் ஆகிய சமாதி நிலை இருக்கிறதே — எல்லாம் கடந்த நிலை அது இப்போது கிடைக்கும்

என்பதில்லை. நம்முடைய பக்குவநிலை படிப்படியாக உயரத் தாமே அந்த இன்பங்கள் எல்லாம் ஒவ்வொன்ருக வந்தடையும்.

கரும்பைப்பற்றிப் பல்லாண்டுகள் ஆராய்ச்சிசெய்த நீரிழிவு நோயாளனிடம் அதனைச் சுவைக்கும் அனுபவம் இல்லாதது போலச் சமயத்தைப் பற்றிய புத்தகங்கள் நிறையப் படித்தும் சிறிதளவுகூடச் செயல்படாமல் இருந்தால் உணர்வு இல்லை. அனுபவம் இல்லை. அப்படியானுல் நாம் எல்லாம் என்ன செய்ய வேண்டும்? தாய் சொல்கிருள் :

" எக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே ஆம் !"

தாய்தான் தன்னுடைய பரந்த கருணையினுலே உண்பொருள் பலவற்றுள் எதை வேண்டுமானுலும் குழந்தை சாப்பிடட்டும், ஏதாவது கொஞ்சம் அதன் வயிற்றில் போனுல் போதும் என்பது போலச் சொல்கிருர் காரைக்கால் அம்மையார்.

" எக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே ஆம் "

சாத்திரம் சொல்லவில்லையா ?

" யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனுர்தாம் வருவர் "

என்பதைப்போல நம்முடைய காரைக்கால் அம்மையார் தம் கருணையினுலே சொல்கிருர்கள். " எப்படியாவது நீங்கள் பிழைத்துப்போங்கள். சும்மா பேசிக்கொண்டு திரியாதீர்கள். சிவன் பெரியவன், திருமால் மட்டம், முருகன்தான் உயர்ந்தவன், விநாயகப்பெருமான் இடைக்காலத்தில் வந்தார் " என்பனபோல அறிவைக்கொண்டு பேசிப் பேசித் திரியவேண்டா. எந்தக் கோலமாக இருந்தாலும், எந்தத் தவமாக இருந்தாலும் முயற்சி செய்ய வேண்டும். தவம் என்பது இறைவனுடைய அருள் வட்டத்திற்குள் நுழைவதற்குச் செய்யும் முயற்சி. இறைவனது அருளீடுபாட்டில் நுழைந்துவிட்டீர்களானுல் இதுவரைக்கும் எதை எதை இன்பம் என்று கொண்டு திரிந்தீர்களோ அதை விட்டுவிடுவீர்கள். அவற்றை நாம் விடுவதுகூட இல்லை. அவை தாமே நழுவி விடும்.

எப்படியாவது நீங்கள் செயல் செய்யப் புறப்படுங்கள். தவம் செய்யப் புறப்படுங்கள். சமய நூல்களைப்பற்றி நிறையத் தெரிந்து பேசிக்கொண்டிருப்பதனுலே பயன் இல்லை. அவனைப் பற்றித்

தெரிந்து உவகை அடையப் புறப்படுங்கள் என்று சொல்கிறார். எந்த நெறியில், எந்தத் தெய்வத்தை எந்த உருவத்தில் வைத்து வழிபட நினைந்தாலும் நீங்கள் செயலில் புகவேண்டும் என்கிறார் அம்மையார்.

இந்தப் 11 ஆம் திருமுறையில் காரைக்கால் அம்மையாரின் பிரபந்தங்கள் 3 இருக்கின்றன. அதற்கு மேலே சேரமான் பெருமாள் நாயனாரின் பிரபந்தங்கள், நக்கீரதேவ நாயனாரின் பிரபந்தங்கள் எல்லாம் இருக்கின்றன. இந்தப் பதினோராம் திருமுறைக்குள்ள மற்றொரு பெரிய சிறப்பு இதன்கண் மிகப் பழைய நூலாகிய திருமுருகாற்றுப் படை இருக்கிறது. இலக்கிய நூல்களோடு எண்ணும்போது திருமுருகாற்றுப்படை பத்துப் பாட்டில் ஒன்று. கடைச்சங்க நூல்களைப் பத்துப்பாட்டு, எட்டு தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்று மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார்கள். மொத்தம் 36 நூல்கள் உண்டு. 36 கடைச் சங்க நூல்களுக்குள்ளே திருமுருகாற்றுப்படை முதல் நூலாக இருக்கிறது. சங்க நூல்கள் ஒளிந்து போய்விட்டன. எங்கே இருக்கின்றன என்று தடுமாறின காலம் உண்டு. ஆனாலும் திருமுருகாற்றுப்படை உயிர் வைத்துக்கொண்டிருந்தது. காரணம் பதினோராவது திருமுறையில் அது சேர்க்கப்பெற்றுப் பாராயண நூலாக அது போற்றப்பட்டு வந்ததனாலேயாம்.

அப்படி இலக்கிய நூல்களுக்குள் ஒன்றாக இருக்கிற திருமுருகாற்றுப்படை 11 ஆம் திருமுறையில் தோத்திர நூலாகவும் அமைந்திருக்கிறது. அதைப்பாடியவர் நக்கீரர். நக்கீரதேவ நாயனார் பாடிய நூல்கள் என்று வேறுசில பிரபந்தங்களும் 11 ஆம் திருமுறையில் கோக்கப்பெற்றிருக்கின்றன. கால ஆராய்ச்சியும், மொழி ஆராய்ச்சியும் செய்கிறவர்கள் இந்தப்பாட்டு வேறு, அந்தப் பாட்டு வேறு என்று காண்கிறார்கள். நாம் எல்லாவற்றையும் ஆண்டவனுடைய பாட்டாகக் காண்பதனாலே திருமுருகாற்றுப் படையோடு ஒன்றாகவே இவற்றைப் பார்க்கிறோம். அவற்றுள் திருவீங்கோய்மலை எழுபது என்ற நூல் ஒன்று இருக்கிறது. திருவெங்கிநாதர் மலை என்று சொல்வார்கள். காவேரிக்கு வடகரை முசிறி தாலுக்காவில் இருக்கிற ஓரிடம். இந்தத்தலத்தைப்பற்றிய பாடல்கள் 70 இருக்கின்றன. இலக்கியச்சுவை சொட்டச்சொட்ட அமைந்திருக்கிற பாடல்கள். ஒரு பாட்டைச் சொல்கிறேன்.

“அந்தஇள மாக்குழவி ஆயம் பிரிந்ததற்குக்
கொந்தவிழ்தேன் தோய்த்துக் குறமகளிர் — சந்தின்
இலைவளைக்கை யாற்கொடுக்கும் ஈங்கோயே மேரு
மலைவளைக்கை வில்லி மலை.

ஈங்கோய் மலையில் ஜீவகாருண்யம் இருக்கிறது. சிவகருணைக்கும் ஜீவகாருண்யத்திற்கும் தொடர்பு உண்டன்றோ ?

ஈங்கோய்மலைக் குறமகளிர்களது தன்மை இங்கே சொல்லப் படுகிறது ?

" அந்தஇள மாக்குழவி ஆயம் பிரிந்ததற்கு "

தன்னுடைய கூட்டத்தைவிட்டுப் பிரிந்துவிட்ட மான்குட்டி ஒன்று தன்னந்தனியாக இவர்கள் இருக்கும் பக்கம் வந்துவிட்டது.

அந்தக் குறப்பெண்கள் என்ன செய்கிறார்கள் ?

" கொந்தவிழ்தேன் தோய்த்துக் குறமகளிர்–சந்தின்
இலைவளைக்கை யாற்கொடுக்கும் ஈங்கையே "

அங்கே இருந்த ஜீவகாருண்யத்தை எப்படி நுட்பமாகக் காட்டு கிறார் பாருங்கள். அந்தக் குறப்பெண்கள் சந்தன மரத்தின் இளந் தளிர்களைக் கொந்தவிழ் தேனிலே தோய்த்து அந்த மான் குட்டிக்குத் தம் கையால் கொடுக்கிறார்கள். வளைக்கை என்று சொன்னதனாலே மிகுதியாக வளைகளை அணிந்துகொள்கிற பெதும்பைப் பருவத்துப் பெண்களைக் குறித்தது ஆயிற்று.

சந்தனத் தழைகளை தேனிலே தோய்த்துத் தோய்த்துக் கொடுக்கும்போது நக்கீரருக்கு ஜல்ஜல் என்ற சத்தம் கேட்கிறது. காரணம் அந்தக் குறப்பெண்கள் நிறைய வளை அணிந்து கொண்டிருப்பதனாலே. சந்தன மணம் மணக்கிறது. தேன் இனிக்கிறது. ஒரு சின்ன மான்குட்டிக்குக் குறப்பெண்கள் சந்தன மரக்கொழுந்தைத் தேனிலே தோய்த்துத் தோய்த்துத் தங்கள் வளைக்கை ஒலிக்கக் கொடுக்கிறார்கள் என்கிற அந்தக் காட்சியை மனத்திலே பாருங்கள் — இந்தப் பாட்டு எத்தனை இனிக்கிறது. மேரு மலையையே வில்லாக வளைத்த பெருமான் மலையன்றோ அது.

" மலை வளைக்கை வில்லி மலை."

மேருவையே வில்லாக வளைத்த பெருமானுடைய மலை அது. அங்கேயுள்ள குறவாணர்கள் மானை உணவாக்குகிறவர்கள் அல்லர். மானுக்கு உணவு ஊட்டுகிறார்கள். அதிலிருந்தே அந்த மலை ஜீவகாருண்யம் நிறைந்த மலை என்கிற இலக்கிய நயம் தோன்றச் சொல்கிறார்.

அதே நக்கீரதேவநாயனுர் பாடிய திருமுருகாற்றுப்படை 317 அடிகளை உடையது. அருணகிரிநாதப் பெருமான் போன்றவர்கள் ஆறுபடைவீடு என்பதாகப் பாடுவதற்குரிய மரபை, கோயில் அமைத்துக் கும்பிடுகிற பாங்கை முதன்முதலாக ஏற்படுத்தியவர் ஆற்றுபடை வீட்டைப்பற்றிப் பாடிய நக்கீரர்.

ஆண்டவனைப் பெரியவர்கள் எல்லாம் நமக்கு அறிமுகப் படுத்தும்போது அவனைச் சோதிப்பொருளாகச் சொல்வார்கள். நக்கீரர் அப்படித்தான் முருகப்பெருமானை நமக்கு அறிமுகப் படுத்துகிருர். மேலே நீலவானம் — கீழே நீலப்பெருங்கடல். இடையே தோன்றும் இளஞ்சூரியனைப் போல அவன் நீலமயில் வாகனத்தின் மீது தோன்றுவது இருக்கிறது.

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு"

"ஓவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி"

இடையிடின்றி விளங்கக் கூடிய ஒளி இது. நெடுந்தூரம் விளங்கக்கூடிய ஒளி இது. கால, இட எல்லைக்கு அகப்பட்டது அன்று. இந்த அடியிலுலே விளங்கவைத்தார். அடுத்து அவனுடைய திருவடியையும், திருக்கரத்தையும் காட்டுகிருர்.

"உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை"

இறைவனுடைய திருவடியைப் பார்த்தால்தான் நம் தலை வளையும். யான் எனது என்ற செருக்கு அறும். யார் எந்தக் கடவுளைக் கும்பிட்டாலும் எல்லோரும் சரணடைவது இறைவனது திருவடிதான். அதனுலே எல்லோருக்கும் அடியார் என்ற பெயர் வந்தது. துன்பப்பட்டுத் தன்னை வந்து அடைந்தார்களைத் தாங்கி அறியாமையை உடைக்கின்ற வலிமை பொருந்திய தாளை உடையவன். அவனுடைய தாள் எல்லோரையும் தாங்குகிறது. அவன் கை செறுநர்த் தேய்க்கிறது, என்கிருர்.

கால் தாங்குகிறது, கை தேய்க்கிறது என்ருல் ஏதோ முரண் பட்டது போலத் தோன்றும். நாம் கையாலே தாங்கிக்கொள்ளவும், காலினுலே தேய்க்கவும்தான் பழகியவர்தன்.

நாம் எல்லாம் பாலனுகி, குமாரனுகி, விருத்தனுகிறவர்கள். ஆனுல், ஆண்டவனே விருத்த குமார பாலனுகிறவன். திருவிளையாடல் புராணத்தைப் பார்த்தால் தெரியும்.

தாங்குகிற அருளுக்கு ஆதாரம் என்று பெயர். தாங்கப்படுகிற பொருளுக்கு ஆதேயம் என்று பெயர். ஆண்டவன் திருவடி எல்லாத் தத்துவங்களையும், சர்வப் பிரபஞ்சத்தையும் தாங்குகிறது. எல்லாவற்றுக்கும் அது ஆதாரமாக இருக்கிறது. எல்லாப் பொருளையும் தனக்கு ஆதேயமாகக்கொண்டு இருக்கிறது.

" பாதாளம் ஏழினுக் கீழ் சொல்கழிவு பாதமலர் "

என்பார் மணிவாசகர்.

முருகன் தேவசேனுபதி. அவனுடைய களவு மணப்பிராட்டி வள்ளி, கற்பு மணப்பிராட்டி தேவசேனை. அதைச் சொல்கிறார்,

" மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன் "

என்பதாக.

திருப்பரங்குன்றத்தை வருணிக்கப் பல அடிகள் இல்லை. மகிழம்பூப்போல இரண்டு மூன்று அடிகளில் மணக்கச்சொல்கிறார். அங்குள்ள மக்களின் வாழ்க்கையைக்கூடச் சொல்லவில்லை. வண்டின் வாழ்க்கையைச் சொல்கிறார்.

அகன்ற வயலிலே நன்றாகக் குழைத்த சேறு நிறைந்த வயலிலே ஓரத்தில் தண்ணீர் நிற்க அங்கே தாமரை வளர்ந்து இருக்கிறது. அந்தத் தாமரை மலர்களிலே மணம் இருக்கிறது. மென்மை இருக்கிறது, அகலம் இருக்கிறது. தேன் இருக்கிறது. வண்டுகள் வந்து அதனை மொண்டு மொண்டு உண்கின்றன. ஆண் வண்டும் பெண் வண்டும் அங்கே உள்ளன.

" இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முட்டாள் தாமரைத் துஞ்சி "

நன்றாக இதழ்கள் அவிழ்ந்த தாமரை. இந்த வண்டுகள் அதன் தேனை உண்கின்றன, மாலை நேரம் ஆனவுடன் கதிரவன் மறைய அந்தத் தாமரை இதழ்கள் தாமே குவிகின்றன. தேனை உண்டு மயங்கி இருக்கும் வண்டுகள் அந்தத் தாமரை மலர்க்குள் பாதுகாப்பாக இருக்கின்றன. மலர்ப் பள்ளியறை. உள்ளே மணத் தன்மைக்கும், மென்மைத் தன்மைக்கும் சொல்லவேண்டுமா? அலை அசைந்தால் பூ அசையத் தொட்டிலுக்குள் இருப்பதுபோல இருக்கின்றன.

" முள்தாள் தாமரைத் துஞ்சி "

என்பதாக முள்தாளை அடுத்துச் சொன்னார். இரவு பாதுகாப்பு வேண்டும் அன்றோ? வாயில் கதவைச் சாத்திவிட்டாலும் கொல்லைக்கதவும் சாத்தப்படுவதுபோல மேலே இதழ்கள் குவிந்து கொண்டுவிட்டன. தண்ணீரிலேயே கிடக்கும் மண்டுகேங்கள் அந்தத் தாள்வழியே மேலேறி துன்பம் அளிக்கலாம் அன்றோ? அவை மேலே ஏறமுடியாதபடி

"முள்தாள் தாமரைத் துஞ்சி"

முள்ளை உடை தாள். ஆகவே இதுவும் அதற்குப் பாதுகாப்பு. மேலே இதழ்கள் குவிந்திருக்கின்றன. கீழே முள்தாள். உள்ளே இனிய மணம்–இன்ப மணம்.

வைகறை ஆனவுடன் இதழ்கள் மெள்ள விரிகின்றன. எழுந்தவுடன் காபி போல Stimulant வேண்டுமே.

"வைகறைக் கள் கமழ் நெய்தல் ஊதி"

கள் என்றால் ஊக்கம் தருவது. காலை நேரத்தில் வெறி வேண்டும் அன்றோ? நெய்தல்தேன் கொஞ்சம் புளிப்பாக இருக்கும். இவை காலையில் நெய்தல் தேனை உறிஞ்சுகின்றன. அப்புறம் நன்றாகப் பொழுது வந்துவிட்டது.

எற்படக்

கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்.

கதிரவன் தோன்றியவுடன் பகல் வந்துவிட்டது. நெய்தல் கள் உண்டதனாலே இவற்றின் உடம்பிலும் ஊக்கம் வந்துவிட்டது. விர்ரென்று மேலே பறக்கின்றன. மலைச்சுனையிலே கண்போல் மிகச் சிறியவாக இருக்கிற மலர்களிலே உள்ள தேனை உண்கின்றன.

"கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந்து உறைதலும் உரியன்."

இப்படி வளவாழ்விலே இன்புறுகிற வண்டுகள் அவனைத் துதிப்பதுபோல இருக்கின்ற இடத்திலே அமர்ந்திருக்கிறான் என்கிறார்.

இப்படி 11 ஆம் திருமுறையை எடுத்துக்கொண்டால் அதிலே உள்ள பிரபந்தங்கள் பல. அவற்றில் சாத்திரம் உண்டு. தோத்திரம் உண்டு. தமிழ் உண்டு. அந்தச் சுவைக்குச் சில துளிகள் சொன்னேன். உங்களுக்கு வணக்கம்.

பதினோராந் திருமுறையும் பெரியபுராணமும்

★

திரு. எச். வேங்கடராமன்
பேராசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு

★

எத்தனை விதங்கடான் கற்கினுங் கேட்கினுமென்
னிதயமு மொடுங்கவில்லை
யானெனு மகந்தைதா னெள்ளளவு மாறவில்லை
யாதினும் மபிமானமென்
சித்தமிசை குடிகொண்ட தீமையோ டிரக்கமென்
சென்மத்து நானறிகிலேன்
சீலமொடு தவவிரத மொருகனவி லாயினுந்
தெரிசனங் கண்டு மறியேன்
பொய்த்தமொழி யல்லான் மருந்துக்கு மெய்ம்மொழி
புகன்றிடேன் பிறர்கேட்கவே
போதிப்ப தல்லாது சும்மா விருந்தருள்
பொருந்திடாப் பேதைநானே
அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
வவனிமிசை யுண்டோ சொலாய்
அண்டபகி ரண்டமுமடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மான பரமே

இக்கருத்தரங்கிலே பங்குபெறும் பேறளித்த ஸ்ரீலஸ்ரீ குருமஹாசன்னிதானத்தின் பொன்னுர் திருவடிகட்கு அடியேன் வணக்கங்களைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன், பதினோராந் திருமுறையில் 40 திவ்வியப் பிரபந்தங்கள் இருக்கின்றன. முதற்கண் காணப்படுவது இறைவனே அருளிய

திருமுகப்பாசுரம். மற்றும் காரைக்காலம்மையார் அருளிய அற்புதத் திருவந்தாதி அதிலே உள்ளது, "பிறந்து மொழி பயின்ற பின்னர் எல்லாம் காதற்பிறந்து நின்சேவடியே சேர்ந்தேன்" என்று அம்மையார் அருளுவது ஈண்டுச் சிந்திக் கத்தக்கது.

சிவம் என்ற சொல்லை நாம் இடைவிடாது எண்ணுதல் வேண்டும், "தொடர நரைத்து அங்கம்முன்பு உளவாயின தொழில்கள் மறுத்து ஒன்றுமொன்றி யிடாதொரு............நடலை நமக்கு என்று வந்தன பேசிட நரக உடற்கன்பு செய்து அறுவேன்" (கோயில் நான் மணிமாலை–39) என்று பட்டி னத்துப் பிள்ளையார் கூறுவார். யான் எனது என்ற தன்முனைப்பு நீங்கவேண்டும். தன்முனைப்பு நீங்கினுல்தான் நம் துன் பங்கள் நீங்கும்.

யானே தவம் உடையேன் என்று காரைக்காலம்மையார் கூறும் போது இறைவனுடைய அருளைப் பெறுவதைக் காட்டிலும் வேறு தவமேதும் இல்லை என்பது புலப்படும்.

பெரிய சோதனைகள் ஏற்பட்ட காலத்திலும் மனவலிமை யுடையராய் இறைவனுடைய திருவடிச் செல்வத்தைப் பெற்றவர் களைப் பற்றி பெரிய புராணம் பேசுகின்றது.

நம்முடைய வாழ்க்கையைப் பட்டினத்துப் பிள்ளையார் சித்தரித்ததைப் போல் வேறு யாரும் சித்தரிக்கவில்லை எனலாம்.

"நஞ்சுமிழ் பகுவாய் வெஞ்சின மாசுணம்
தன்முதல் முருக்க நென் முதற் சூழ்ந்த
நீர்ச்சிறு பாம்புதன் வாய்க்கெதிர் வந்த
தேரையை வவ்வியாங்கு"

—(கோயில் நான்மணிமாலை 8)

இந்த நிலையிலும் மனிதன் தன் பொறி புலன்களை அடக்க முடியவில்லை. புலன் ஒருமைப்பாடு குறித்தே நம் அடியார்கள் பாடியிருக்கின்றனர். ஐம்பொறிகளைக் கொண்டு உலக இன்பத்தில் திளைத்து இளைத்துள்ள மாந்தர்க்கு ஞானமளித்து நம்பிக்கை தருவன சிவனடித் தொண்டர்களின் திருப்பாடல்கள்.

இறைவன் நம்மை ஆட்கொள்ளக்காத்திருக்கும் தன்மையையும் அவன் நம்மை எவ்வாறு காக்கவேண்டுமென்பதையும் கூறும் ஒரு திருப்பாட்டு :

" அறிவில் ஒழுக்கமும் பிறிதுபடு பொய்யும்
கடுப்பிணித் தொகையும் இடும்பை ஈட்டமும்
இனையன பலசரக் கேற்றி வினையெனும்
தொன்மீ காமன் உய்ப்ப அந்நிலைக்
கருவெனும் நெடுநகர் ஒருதுறை நீத்தத்துப்
புலனெனும் கோண்மீன் அலமந்து தொடரப்
பிறப்பெனும் பெருங்கடல் உறப்புகுந் தலைக்கும்
துயர்த்திரை உவட்டில் பெயர்ப்பிடம் அயர்த்துக்
குடும்பம் என்னும் நெடுங்கடல் வீழ்த்து
நிறையெனும் கூம்பு முரிந்து குறையா
உணர்வெனும் நெடும்பாய் கீறிப் புணரும்
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலம்
கலங்குபு கவிழா முன்னம் அலங்கல்
மதியுடன் அணிந்த பொதியவிழ் சடிலத்துப்
பையர வணிந்த தெய்வ நாயக
தொல்லெயில் உடுத்த தில்லை காவல
வம்பலர் தும்பை அம்பல வாணநின்
அருளெனும் நலத்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே.

— கோயில் நான்மணி மாலை 16.

இறைவனது அருட்திறத்தையுணராது நாம் வீணே வாழ்வது யாருடைய குற்றம்?

" மருதிடங் கொண்ட மருத வாண
நின்னது குற்றம் உளதோ நின்னினைந்து
எண்ணருங் கோடி இடர்ப்பகை கடந்து
கண்ணுறு சிற்றத்துக் காலனை வதையா
இறப்பையும் பிறப்பையும் இகந்து சிறப்பொடு
தேவர் ஆவின் கன்றெனத் திரியாப்
பாவிகள் தமதே பாவம் "

(திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 16)

கடவுள் நமக்குத்தந்துள்ளவை ஏராளம். அவற்றை வைத்துக் கொண்டு கவலையின்றி வாழாமல் இருப்பது நமது குற்றமேயாகும்.

" முறியாப் புழுக்கல் முப்பழம் கலந்த
அறுசுவை அடிசில் அட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துதல் "

சோற்றினுடைய குற்றமாகாது.

இன்னும்

" வெயிலின் வைத்து ஆற்றிய தெண்ணீர்
நாற்றமிட்டிருப்ப மடாஅ ஒருவன் விடாஅ
வேட்கை தெண்ணீர்க் குற்றமன்று ".

" வாலுகம் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலிற் புள்ளிவெயர் பொடிப்ப
அடிபெயர்த் திடுவான் ஒருவன்
நெடிது வருந்துதல் நிழல்தீங் கன்றே "

என்று இப்படிப் பட்டினத்தடிகள் பாடுகிருர். ஈங்கோய் மலை எழுபதில் ஒருபாடல் இனிக் கூறுவேன்.

" கடக்களிறு கண்வளரக் கார்நிறவண் டார்ப்பச்
சுடர்க்குழையார் பாட்டெழவுங் கேட்டு — மடக்கிளிகள்
கீதம் தெரிந்துரைக்கும் ஈங்கோயே ஆல்கீழ்நூல்
வேதந் தெரிந்துரைப்பான் வெற்பு. " (பாடல் 22)

இறைவனுடைய நாம கீதங்களை ஈங்கோய் மலையில் உள்ள கிளிகள் எல்லாம் எடுத்துப் பேசுகின்றனவாம். அக்காட்சியை நக்கீர தேவ நாயனர் நம்முன் காட்டும் திறம் இன்புறற்குரியது. உண்மையாகவே பக்தர்களுக்கு யார் எதைப்பேசினலும் இறைவனுடைய திருநாமத்தைக் கூறுவதாகவே இருக்கும்.

" குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் தன்னை ஏத்தின என்று
காசும் பொன்னும் கலந்து தூவியும்"

என்று வரும் பகுதிகள் நினைத்து இன்புறத்தக்கன.

இறுதியாகத் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் ஒரு அருமையான பாடல்;

"வருந்தேன் இறந்தும் பிறந்தும்
மயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேன் நரகிற் புகுகின்றி
லேன்புகழ் மாமருதிற்
பெருந்தேன் முகந்துகொண்டு உண்டு
பிறிதொன்றில் ஆசையின்றி
இருந்தேன் இனிச்சென்று இரவேன்
ஒருவரை யாதொன்றுமே". (பாடல் - 3)

பார்வையாளர் — முன்னுரை

★

தவத்திரு சுந்தரசுவாமிகள்

★

அன்புசான்ற பெரியோர்களே, தாய்மார்களே, செல்வர் செல்வியர்களே, இன்றைய கருத்தரங்கிலே பங்குகொண்டு உரை நிகழ்த்த வந்திருக்கிற அறிஞர் பெருமக்களே,

தன்னடைந்தார்க் கினியனுகிய இடைமருதீசனுடைய சந்நிதியிலே வணக்கத்திற்குரிய ஸ்ரீலஸ்ரீ சந்நிதானங்களுடைய அருளாணையின் வண்ணம் நிகழ்கிற இந்தக் கருத்தரங்கிலே பங்குகொள்ள எம்மையும் கூட்டிவைத்த எல்லாம் வல்ல இடைமருதீசன் கழல் பணிந்து இன்றையதினம் மூன்ருவதாக உள்ள நிகழ்ச்சியைத் தொடங்குகிரேம். இந்தத் திருக்கோயில் கும்பாபிஷேகம் நடந்தது முதல் இங்கே வரவேண்டுமென்ற எண்ணம் இருந்தது. அடியார் திருக்கூட்டத்தோடு வந்து கும்பாபிஷேகம் ஆனபிறகு வழிபட வேண்டுமென்று இருந்தேன். பெருமான் திருவருள் இந்தத் திருமுறை விழாவோடு பங்கு கொள்ளும்படி கூட்டிவைத்தது.

நம்முடைய சைவத் திருமுறைகளைப் பற்றி ஆராய்வதற்கு ஸ்ரீலஸ்ரீ சந்நிதானம் அவர்கள் திருவுள்ளம் கொண்டு தலைசிறந்த அறிஞர் பெருமக்கள் எல்லாரும் கலந்துகொள்ளும்படி இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருக்கிருர்கள். கடந்த இரண்டு நாட்களாகத் திருமுறைகளிலே தோய்ந்து தம் வாழ்நாள் முதலாக அவற்றில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற பெருமக்கள் பலர் தம் கருத்துக்களை வழங்கியிருக்கிருர்கள். இன்றைய 3 ஆவது நாள் முடிவுக் கருத்தரங்கிலும் பன்னிரண்டாம் திருமுறையைப் பற்றி மூன்று நோக்கோடு உரையாற்ற அறிஞர்கள் வந்திருக்கிருர்கள்.

நம்முடைய திருமுறைகள் எல்லாம் எவ்வளவு சிறப்புடையன என்பதைக் கடந்த 3 நாட்களாகத் திருமுறைகளில் தோய்ந்து— திருமுறைக் கோயில் எழுந்தருளியிருக்கிற இந்தத் திருமண்ணில்

அமர்ந்திருக்கிற உங்களுக்கு நெடிதாக உணர்த்த வேண்டா வென்று எண்ணுகிறேன்.

நம்முடைய திருமுறைகள் எல்லாம் எம்பெருமானின் திருவருளையே கண்ணாகக் கொண்ட அருளாளர்களால் பாடப் பட்டவை என்பதாகும். திருஞான சம்பந்தப் பெருமான்

"எனதுரை தனதுரையாக"

என்று சொல்வார். தாம் சொல்வன எல்லாம் இறைவனுடைய கூற்றாக அவர்கள் சொல்கிறார்கள். திருநாவுக்கரசர்பிரானே,

"பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித்தானை"

"பந்தம் அறுத்து ஆளாக்கி அங்கே பன்னிய
செந்தமிழ் மாலை பாடுவித்து"

என்று சொல்வார். சுந்தரர் பாடுவதற்கு ஒரு தடவைக்கு இரு தடவையாக அடி எடுத்துக் கொடுத்திருக்கிறார் இறைவன். தம்மை எடுத்த எடுப்பில் பாடுவதற்கு 'பித்தா' என்று முதலா வதாக அடியெடுத்துக் கொடுத்தார். பின்னர்த் திருத்தொண்டத் தொகை பாடுவதற்கு 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன்' என்று அடியெடுத்துக் கொடுத்தார். மணிவாசகப் பெருமானின் திருவாசகமோ — "வாக்கு உள் மணிவார்த்தைக் காக்கி" என்று சொல்வார். மாசில் மணிதன் மணிவார்த்தை என்று பேசிய பெரிய அருளாளர் அவர்கள். திருமந்திரத்தில் திருமூல நாயனார் அருளுகிறபோது,

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"

என்று சொல்வார். பன்னிரண்டாம் திருமுறைக்கு 'உலகெலாம்' என்று அடி எடுத்துக் கொடுத்தவனே இறைவன் தான். ஆக திருமுறைகள் எல்லாம் இறைவனுடைய அருளைப் பெற்ற அருளாளர்களால் பாடப்பெற்றவை.

பெரிய புராணத்திற்கு ஆதாரமாக இருந்தவை நம்பியாண் டார் நம்பியின் திருத்தொண்டர் அந்தாதியும், சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையுமாகும். ஆக நம்முடைய தெய்வத் திருமுறைகளிலே 12 ஆம் திருமுறை பெரிய புராணம் — பெயரே அதைத் தெரிவிக்கிறது. இது பெரிய புராணம் ஆயிற்றே! இதை,

எத்துணை நோக்கோடும் நோக்கிக் கொண்டிருக்கலாம். வழக்கியல் நோக்கு மட்டுமன்று — இலக்கிய நோக்கு மட்டுமன்று — வரலாற்று நோக்கு மட்டுமன்று — எந்த நோக்கத்தோடு பார்த்தாலும் எல்லா நோக்கத்திற்கும் இடம் தருவது பெரிய புராணம். அந்தப் பெயரைப் பார்க்கிறபோது மற்றவை எல்லாம் சிறிய புராணமாக அமைந்து விடுகின்றன.

"எடுக்கும் மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்,"

இந்தக் கதை நாம் எந்த நிலையில் இருந்தாலும் அந்த நிலையில் இருந்து மேலே எடுக்கிறது. எந்தத் துறையில் இருந்தாலும், எந்த எந்தத் துறையோடு நோக்கினாலும் அந்த அந்தத் துறையிலே இருப்பவர்களை எல்லாம் மேலே எடுக்கின்ற மாக்கதை. பெரிய புராணத்தில் இல்லாதது ஒன்றுமில்லை. அறத்தைச் சொல்லும் நூல், பொருளைச் சொல்லும் நூல், இன்பத்தைச் சொல்லும் நூல், வீட்டைச் சொல்லும் நூல் என்று தனித்தனியே இருக்கலாம். இது எல்லாவற்றையுமே சொல்கிற மாக்கதை, வாழ்வியலைச் சொல்லும் கதையும் இது. ஒருவன் மண்பாண்டம் செய்கிறவனாக இருக்கலாம். சமையல் செய்கிறவனாக, துணி தோய்க்கிறவனாக ஏன் இன்னும் மிக இழிந்ததென்று கருதப்படும் மீன் பிடிக்கிற தொழிலைக் கூடச் செய்கிறவனாக இருக்கலாம். எந்த எந்தத் துறையிலே எந்த எந்தத் தொழிலை நீ செய்துகொண்டிருந்தாலும் அந்த நிலையில் இருந்தே வீடுப்பேற்றை அடைய முடியும் என்பதைக் காட்டுகிற மாக்கதை பெரிய புராணம். வீடுப்பேறடைவது செய்கிற செயலைப் பொறுத்தது அன்று, அவரவருடைய உள்ளத்தைப் பொறுத்தது என்பதை எடுத்துக்காட்டுகிற வாழ்வியல் மாக்கதை; வரலாற்றுக் கதைகளும் கூட, இன்னும் பக்தியைப் பார்த்தாலும் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட எடுத்துச் சொல்வது. ஆக எந்த எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் அதற்கெல்லாம் இடம் தருகிற மாக்கதை இது.

இந்தப் பெரிய புராணத்தை மூன்று நோக்கத்தோடு மூவர் அறிஞர் பெருமக்கள் ஆராய்ந்து கருத்துரை வழங்க இருக்கிறார்கள். முன்னுரையை அதிகமாகச் சொல்லாமல் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

★

பார்வையாளர் – முடிவுரை*

★

தவத்திரு. சுந்தர சுவாமிகள்

★

அன்புமிக்க பெரியோர்களே, தாய்மார்களே, இன்றைய கருத்தரங்கில் 3 அற்புதமான கருத்தரங்கச் சொற்பொழிவைக் கேட்டோம். இரவு இந்த ஒன்பதரை மணிக்கு உங்களுக்கு எதைச் சொல்வது என்று எண்ணி உங்கள் முன்னிலையில் நிற்கிறேன்.

திருநாவுக்கரசர் பெருமான் திருமறைக்காட்டில் பாடியபோது சிவபெருமான் அவரது பண்ணின் பயனைத் துய்த்துக்கொண்டு இருந்துவிட்டாராம். கதவைத் திறக்கவேண்டுமென்றே தோன்ற வில்லை என்று சொல்கிறார் சேக்கிழார் பெருமான்.

"பண்ணினேரு மொழியாள் என்றெடுத்துப்பாடப்
பயன் துய்ப்பான்
தெண்ணீர் அணிந்தார் திருக்காப்பு நீக்கத் தாழ்க்க"

என்கிறார். அதைப்போல இதுவரை அருமையான கருத் துறையில் ஆழ்ந்துவிட்ட நான் இப்போது எதைப்பற்றி என்ன சொல்வது என்றறியாத நிலையில் உங்கள் முன்னிலையில் நிற்கின்றேன்.

ஆயினும் இங்கே பேசினவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த மூன்று தலைப்புகளிலும் ஒன்றிரண்டு கருத்தை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

சேக்கிழார் பெருமான் அவர்கள் அடியார் திருக்கூட்டத்தை,

"பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை"

என்கிறார். இந்தப் புனிதர் பேரவை விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே – என்று வாழ்த்துகிறார்கள். அதேபடி இந்தப்

---

* திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலிய மூவர் பேச்சின் பின்னரும் கொள்க

பேரவை விளங்கி வெல்க; நமக்கு பண்ணப்பணித்து ஆட்கொண்டருளிய திருவாவடுதுறை குருமகாசந்நிதானத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியபுராணம் முழுவதும் நாயன்மார்களின் வாழ்வைச் சொல்வதுபோல நமக்கெல்லாம் வாழும் நெறியைச் சொல்கிற வாழ்வியல் நூலாகவே இருக்கிறது. எந்த எந்த நோக்கத்தில் பார்த்தாலும் அத்துணையும் பெரியபுராணத்திலேயே பார்க்க முடியும். சாதாரணமான உலகியலை வைத்து, உலகியல் வாழ்வையே வைத்து நாம் செய்கிற எல்லாச் செயல்களையும் காட்டிச் சேக்கிழார்பெருமான் பெரியபுராணத்தைப் பாடியிருக்கிறார். சோறு சமைப்பதைக் கூட எடுத்துக் காட்டுகிறார்.

சில வீடுகளில் சோறு சமைக்கிறபோது, காய்கறி பதார்த்தங்களை எல்லாம் செய்துவிட்டுக் கடைசியாக அன்னத்தைச் சமைக்கிறார்கள். ஆனால் சேக்கிழார் பெருமான் அப்படிச் செய்வது மரபு அன்று — என்று நமக்கு உபதேசம் செய்ய வரமாட்டார். முதலிலே அன்னத்தைச் சமைத்துவிட்டுப் பிறகு வேண்டிய பொருள்களை ஆக்கிக்கொள்வதுதான் மரபு என்பாரைப்போலக் காரைக்கால் அம்மையாராகிய புனிதவதியார் இப்படிச் சமைத்தார் என்று காட்டுகிறார். வீட்டுக்கு விருந்தாளி வருகிறார். அவசரமாகப் போகவேண்டும். சோறு மட்டும் இல்லை. மற்றவை எல்லாம், இருக்கின்றன என்றால் எப்படி உபசரிப்பது? அலுவலகம் செல்லவேண்டும். வீட்டிலே எல்லாம் இருக்கிறது. சோறு மட்டும் இல்லை என்று சொன்னால் எப்படி நாம் உண்ண முடியும்? சோறு மட்டும் இருக்கிறது. வேறு ஒன்றும் இல்லாவிட்டாலும் தயிரைவிட்டுச் சாப்பிட்டு விட்டுப் போய்விடலாம். ஓர் ஊறுகாய் வைத்து சாப்பிட்டு விட்டுப் போய்விடலாம். ஆகவே முதலிலே படைப்பதுதான் முதலிலே சமைக்கவேண்டியதாகும், இப்படிச்செய் என்று அவர் சொல்லவில்லை — காரைக்கால் அம்மையார் அப்படிச் செய்தார் என்று காட்டுகிறார்.

இன்னொன்று – அடிக்கடிச் சொல்வதுண்டு. அப்பூதியடிகளாரின் வரலாற்றைக்கொண்டு விருந்தாளிகளுக்கு வாழையிலைபோட்டு உணவு பரிமாறுகிறபோது அந்த இலையை எப்படிப் போடவேண்டும் என்கிற மரபையே காட்டுகிறார். ஆக எந்த வரலாற்றை எடுத்துக்கொண்டாலும் பலபடியாக நமக்கு மரபுகளைக் காட்டுகிறார். ஒரு தண்ணீர்ப் பந்தல் அமைப்பது என்றாலும் கோடைக் காலத்தில் அமைக்க வேண்டும். மக்கள்

செல்கிற இடமாகப் பார்த்து அமைக்க வேண்டும். அது நிரந்தர மாக நடைபெறுவதற்குத் தகுந்த முறையில் அமைக்க வேண்டும் என்பதனை எல்லாம் நமக்கு எடுத்துக் காட்டுகிறார். அப்படி அமைக்கவேண்டுமென்று நமக்குச் சொல்லவில்லை. அப்பூதி யடிகளார் அப்படி அமைத்தார் என்று சொல்வதன் மூலம் நமக்கு உணர்த்துகிறார்.

"அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையில்
அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உருவேனிற் பரிவகற்றி"

என்கிறார். அந்தத் தண்ணீர்ப் பந்தலுக்கு வருகிற வழியில்கூட சோலை இருக்க வேண்டுமாம். ஏன் ஒருவன் வெய்யிலில் வருகிறபோது தண்ணீரைக் குடித்தால் தொண்டைகட்டிக் கொள்ளும். கொஞ்சம் குளிர்ந்து வந்துவிடவேண்டும், பக்கத்தில் வருகிறபோது. அதற்குப் பிறகு அந்தத் தண்ணீரைக் குடிக்கவேண்டும்.

"வள்மருவும் நிழல்தரு தண்ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்"

என்றும் சொல்வார்.

ஒருவரிடம் ஒரு சேதியைக் கேட்கிறோம். அவர் அதற்குப் பதில் தருவதாக இருந்தால் தெளிவாகத் தரவேண்டும். இப்படிப் பேசுகிற மரபைக்கூடச் சேக்கிழார் பெருமான் மிக அற்புதமாகக் காட்டுகிறார்.

அங்கே இருக்கிற தண்ணீர்ப்பந்தரைப் பார்த்து அப்பர் அடிகளார் 'இது யார் வைத்தது' என்று வினவுகிறார். அங்கே இருந்தவர் அதற்குப் பதில் சொல்கிறார்:

"ஆண்டஅரசெனும்பெயரால்
செப்பருஞ்சீர் அப்பூதி அடிகளார் செய்தமைத்தார்
தப்பின்றி எங்குமுள சாலைகுளங் கா" என்றார்.

அப்பூதி அடிகளார் வைத்தது என்று சொல்லிவிட்டுப் போகலாமே. சொல்கிறார். தண்ணீர்ப்பந்தல் மட்டுமன்று என்பாரைப்போல, சாலை செய்தார், சோலை செய்தார், குளங்கள் வெட்டினார் என்று கூறுகிறார். அவர் செய்வன எல்லாம் மிக நன்றாக இருக்கும்.

"தப்பின்றி எங்குமுள சாலைகுளங்கா"

தப்பு இல்லாமல் இருக்கும். அவர் போட்ட சாலை கரடுமுரடாக இருக்காது. அவர் வைக்கிற சோலை குளிர்ந்ததாக இருக்கும். வெட்டப்பட்ட குளம் போதுமானதாக இருக்கும்.

அதற்கு அடுத்து 'அவர் எவ்விடத்தார்?' என்கிற ஒரு கேள்வியைப் போடுகிறார் அப்பர் அடிகள்.

அவர் திங்களூர்க்காரர் என்று அவர் ஒரு சொல்லிலே விடை அளித்திருக்கலாம். அவர் சொல்கிறார்.

" துன்றியநூல் மார்பரும்இத் தொல்பதியார் மனையின்கண்
சென்றனர்இப் பொழுததுவுஞ் சேய்த்தன்று
நணித்தென்றார் "

இந்த ஊரைச் சேர்ந்தவர் தான், என்கிறார். இப்பொழுது வீட்டில் இருப்பாரா என்கிற கேள்விக்கு இடமின்றி மனையின்கண் சென்றனர் என்கிறார். எப்போது வீட்டுக்குப் போனாரோ, இப்பொழுது வீட்டில் இருப்பாரோ என்னவோ என்கிற சந்தேகத்திற்கு இடமின்றி, மனையின்கண் சென்றனர் இப்பொழுது' என்கிறார். சரி, நாம் நேரே போகலாம், அவர் வீடு எங்கே இருக்கிறதோ என்கிற சந்தேகத்திற்கு இடமின்றி,

" சேய்த்தன்று நணித்தென்றார் "

இப்படிச் சேக்கிழார் பெருமான் ஒருவருக்கொருவர் பேசுகிற வழியை மரபைக் கூடக் காட்டுகிறார்.

இன்னும் பாருங்கள். அப்பூதி அடிகளார் தம்முடைய குழந்தைகளில் மூத்த திருநாவுக்கரசை, அப்பர் அடிகளார்க்கு அமுத செய்விப்பதற்காக வாழையிலை பறித்துவரச் சொல்கிறார். தோட்டத்தில் எத்தனையோ பேர் வேலை செய்துகொண்டிருக்க நம்மைப் போய், வேலைக்காரனைப் போல இலை பறித்துவரச் சொல்கிறாரே தந்தையார், என்று அந்தப் பையன் நினைத்தான்?

" நல்லதாய் தந்தை ஏவ நான் இது செய்யப்பெற்றேன் "

நம்மை அல்லரோ நம்முடைய நல்ல தாயும், தந்தையும் இப் பணியைச் செய்ய ஏவினார்கள் என்கிற நினைப்பைக் காட்டுவதில் இருந்தே குழந்தைகள் எத்தகைய மனோபாவம் உடையவர்களாக இருக்கவேண்டும் என்கிற மரபைக் காட்டுகிறார் சேக்கிழார் பெருமான்.

இன்னும் பாருங்கள். வாழையிலையைக் கொண்டுவந்து போடுகிறபோதுகூட ஒரு மரபைக் காட்டுகிறார். அப்பர் அடிகளுக்கு அமுதுபடைக்க நுனி எப்படி இருக்கும்படியாகப் போட்டார்கள்?

"ஈர்வாய் வலம்பெற மரபின் வைத்தார்"

என்றார். தலைவாழையை அறுத்த பக்கம் வலமாக இருக்கும் படியாகப் போட்டாராம். நாம் எல்லாம் நுனி இலை இடப்பக்க மாக இருக்கவேண்டும் என்கிறோம். சேக்கிழார் பெருமான் இடம் என்ற சொல்லைக்கூட உபயோகிக்காது – நறுக்கிய பக்கம் வலமாக இருக்கும்படியாகப் போட்டார் என்கிறார்.

அந்த இலை ஒரு பாதி சுருண்டிருந்தது. ஒரு பாதி விரிந் திருந்தது. முற்றும் விரிந்திருந்தால் அந்த இலை முற்றல் – கைபட்டால் கிழியும். முற்றும் சுருண்டிருந்தால் அந்த இலை குருத்து. விரித்தால் கிழியும். ஆகவே அப்படிக் கொஞ்சம் தண்ணீர் தெளித்து அந்த இலையை விரித்துப்போட்டாராம்.

"குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய் வலம்பெற மரபின் வைத்தார்"

தலைவாழையை நறுக்கிய பக்கம் வலமாக இருக்கும்படி போட்டார் என்பதாக நாமும் அப்படிப்போடுவதே மரபு என்பாரைப்போலக் காட்டுகிறார்.

காலையில் எழுந்தவுடன் நாம் ஸ்நானம் செய்வதற்குமுன் வெளியே போய்விட்டு வருவோம். அது இயற்கை நியதி. அதை எறிபத்த நாயனார் புராணத்தில் எப்படிச் சொல்கிறார் சேக்கிழார் பெருமான் பாருங்கள்.

"வைகறை உணர்ந்து போந்து புனல்மூழ்கி"

போந்து என்ற சொல்லிலே – இயற்கை உணர்ச்சி வந்தால் எழுந்துவிடவேண்டும். யாரும் எழுப்பமாட்டார்கள். வைகறை உணர்ந்து, அப்புறம் வெளியேபோய் – என்பதைப் போந்து என்பதனாலே நேரிடையாகச் சொல்லாது ஆனால் சொல்லியும் இருக்கிற நயம் சாலச்சிறப்புடையது.

இன்னும் அடியார்களுக்குத் துன்பம் வந்தது என்பதைக்கூடச் சேக்கிழார் பெருமான் அப்படியே சொல்லமாட்டார். அதையே மங்கலமாக

"அடியார்க்கு அடாதன அடுத்த போது"

என்பதாகப் பெரியபுராணம் சிவம்பெருக்கும் நூலாதலாலே சொல்கிற அழகை அங்கங்கே காணலாம்.

இன்னும் சாதாரணமாக நடைபெறும் திருமணச்சடங்கை எத்தனை வகையாகக் காட்டுகிறார். எட்டுநாள் நடக்கிற திருமணம் ஒருநாள் நடக்கிற திருமணம், ஒரு மணி நேரத்திலே நடக்கிற திருமணம் என்பவாக ஞானசம்பந்தரின் திருமணம், சுந்தரரது தடைப்பட்ட திருமணம், பிறகு பரவை, சங்கிலியாருடைய திருமணம், இன்னும் ஞானசம்பந்தர் தாமன் மகளுக்கு ஒரு மணி நேரத்தில் பண்ணிவைத்துவிட்டுச் சென்ற திருமணம் – ஆக இன்று நம் சமுதாயத்தில் நடைபெறுகிற தன்மையிலேயே திருமணச்சடங்கைச் சந்தர்ப்பம், அவரவர்களுக்கு இருக்கக்கூடிய நிலைமை இவை கொண்டு வரலாற்றின்மூலம் விளக்குகிறார்.

அதற்குமேலே சேக்கிழார் பெருமான் நாயன்மார்களுக்கு எவ்வளவு சிறப்பு அளிக்கிறாரோ அதே அளவு அவர்களுடைய மனைவியார்களுக்கும் அளிக்கிற பெருமையை நாம் பார்க்கலாம்.

இளையான்குடிமாற நாயனார் சிவனடியாராக வந்தவரை நட்ட நடுநிசியில் அமுதளித்து உபசரித்தார் என்றால் அந்தப் பெருமை அவருடைய மனைவியாருக்கும் உரித்தன்றோ?

"அன்பனே! அன்பர்பூசை அளித்த நீ அணங்கினோடும் என்பெரும் உலகம் எய்துவாயாக" என இறைவன் சொன்னதாக அங்கே அந்த அம்மைக்கும் பேற்றைக் கொடுக்கிறார்.

சேக்கிழார் பெருமானுக்கு இருபொருள் தோன்றும்படியாகப் பாடுகிற ஆற்றல் உண்டு. இளையான்குடிமாறனாரைச் சோதிக்க இராக்காலத்தே சிவனடியாராக அவரது இல்லத்திற்கு எழுந்தருளுகிறார் சிவபெருமான்.

ஏனமும் அன்னமுந் தெரியாத கொள்கைய ராயினார் என்கிறார். மாலும், அயனும் அறியாத கொள்கையர் என்பது பொருள். அந்த இடத்திலே அந்த வீட்டில் அப்போது அவருக்கு ஏனமும், (பாத்திரமும்) அன்னமும் கிடைக்குமா என்பது தெரியாத கொள்கையராக வந்தார் என்பதுபோல ஒரு தோற்றமும் பார்க்கலாம்.

சிவனடியார்க்கு அமுதுபடைக்க வேண்டுமென்ற எண்ணம், உள்ளே ஒன்றுமே இருப்பதாகத் தெரியவில்லை. நாம் சாப்பிட வில்லையாயினும் இவருக்கு அமுது படைக்க நாம் என்ன செய்வது? என்கிறார் மனையாட்டியைப் பார்த்து.

"மாது கூறுவாள் மற்றொன்றுங் காண்கிலேன்
ஏதி லாரும் இனித்தரு வாரில்லை
போதும் வைகிற்றுப் போம்இடம் வேறிலை
தீது செய்வினை யேற்கென் செயல் என்று."

யாரிடமும் முன்பு வாங்கிய கடனைக் கொடுக்கவில்லையாதலால் போய்க்கேட்டாலும் கொடுக்கமாட்டார்களே, நேரமும் ஆகி விட்டது, எல்லோரும் இந்நேரம் படுத்து உறங்கிக்கொண்டு அன்றோ இருப்பார்கள் என்றெல்லாம் சொல்வதற்கு முன்னே,

"மற்றொன்றும் காண்கிலேன்"

என்கிறார் அம்மையார். மற்றொன்று என்றதனால் அந்த அம்மையாருக்கு ஒரு யோசனை தோன்றிவிட்டது என்பது தெரிகிறது. ஒன்றைத்தவிர மற்றொன்றும் தோன்றிடவில்லை என்பதை அழகாகப் புலப்படுத்துகிறார். "நீங்கள் போய்க் காலையிலே விதையிட்டீர்களே, அந்த நெல்லை எல்லாம் நாற்றங்காலில் இருந்து அரித்து வந்துவிடுங்கள்."

"வல்ல வாறமு தாக்கலும் ஆகும்"

என்கிறார்.

நாயனார் சென்று முளை நெல்லை வாரி வருகிறார். அது வரை திரும்ப உள்ளே படுக்கப்போகாது வாய்தலின் நின்று, அவரிடம் இருந்து அதை வாங்கி அதன் சேற்றை நீரில் அலப்பிப் பின்னர்,

"வெந்தழல் அடுப்பின் மூட்ட விறகில்லை"

என்கிறார்.

என்ன ஐயா இது, விறகு இல்லை என்பதை முன்னமேயே சொல்லியிருக்கக் கூடாதா என்று தோன்றும்.

நம் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வருகிறார். மனையாட்டியைக் காப்பி போடச் சொல்கிறோம். காப்பித்தூள் இல்லை, பால் இல்லை,

சர்க்கரை இல்லை, தண்ணீர்கூட இல்லை என்று வரிசையாகச் சொல்லிவிட்டால் 'சரிசரி, பேசியே அனுப்பிவிடுகிறேன்' என்றுதானே நாம் சொல்ல நேரிடும். இங்கே இளையான்குடி மாறநாயனருக்கு எப்படியாவது அடியார்க்கு அமுதளித்துவிட வேண்டும் என்றிருக்கிற பேரார்வத்தை அம்மையார் உணர்கிறார்கள். எப்படியும் அந்தக் காரியம் நடந்தே ஆக வேண்டும். அவர் மனமும் சோர்வடையக் கூடாது. எடுத்த எடுப்பில் அரிசியில்லை, விறகில்லை, பதார்த்தங்கள் ஒன்றுமில்லை என்று சொன்னால் கணவன் மனம் வருந்துமே என்று நினைக்கிறார், அந்த அம்மையார். ஆகவே முதலில் முளை நெல்லை வாரிவரச் சொன்னார். அது வந்தபின் விறகில்லை என்று சொல்லி வீட்டின் கூரை அலக்கினை எடுத்துத்தரச் சொன்னார். அடுத்துக் 'கறிக்கினி என்செய்வோம்' என்று சிந்தித்துக் கீரைகளைப் பறித்துவரச் சொல்லி

..................................கைம்மை
வினையினால் வேறுவேறு கறியமு தாக்கி

என்கிறார். வாழ்வில் மனைவிமார்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று சொல்லாது வரலாற்றிலே வைத்துக் காட்டுகிறார் சேக்கிழார்பெருமான்.

இதேபோலத்தான் சிறுத்தொண்ட நாயனாரின் பெருமையில் செம்பாதி அவர் மனைவியார்க்கும் உண்டு. ஆக, சேக்கிழார் பெண்களையும் பெருமைப்படுத்தி நாம் எப்படிப் பெண்களைப் பெருமைப்படுத்தி வாழவேண்டும் என்பதைக் காட்டுகிறார். இறைவன்

"நின்றதொண்டர் மனைவியார் நீடு மகனார் தாதியார்
என்றும் பிரியா தேஇறைஞ்சி இருக்க உடன்கொண்டேகினார்"

என்றால் சிறுத்தொண்ட நாயனாரின் குடும்பத்திற்கே ஏற்பட்ட பெருமையைப் பார்க்கிறோம். கணவன், மனைவி, மக்கள், பணியாளர்கள் எப்படி இருக்கவேண்டுமென்ற வாழ்வியலைக் காட்டுவதுதான் பெரியபுராணம்.

நாவுக்கரசர்பெருமான் "குறிக்கோள் இல்லாது கெட்டேன்" என்பதில் இருந்து வாழ்வுக்கு ஒரு குறிக்கோள் வேண்டும் என்பதை உணரவைக்கிறார். அதைத்தான் சேக்கிழார் பெருமான் எந்தச் செயலை, எவ்வண்ணமும் செய்யலாம், எந்தத் தொழிலையும் செய்யலாம், ஆனால் ஒரு குறிக்கோள் இருக்கவேண்டும்

என்பதாகப் பெரியபுராண வரலாற்றைக்கொண்டு நமக்கு எடுத்துக்காட்டுகிறார்.

நாவுக்கரசர்பெருமானைக் கல்லோடு சேர்த்துக்கட்டிக் கடலில் போடுகிறார்கள். கல் மிதக்க அவர் தெப்பம்போல அதன்மேல் உட்கார்ந்து வருகிறார்.

கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமசிவாயவே எனப் பதிகம் பாடி அவர் வருகிறார்.

சாதாரணக் கவிஞர்களாக இருந்தால் இந்த ஒரு நிகழ்ச்சிக்கு மட்டும் பத்துப்பாட்டுகளுக்கு மேல் பாடியிருப்பார்கள். ஆனால் சேக்கிழார் பெருமானோ இது என்ன அதிசயமா என்று நம்மையே ஒரு பாட்டில் வினவுவது போலக் கேட்கிறார்.

> "இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
> வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
> அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
> ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ?"

என்கிறார். திருவைந்தெழுத்தின் பெருமை என்ன? பிறவிப் பெருங்கடலையே நீந்துகிற சக்தியை அளிப்பது அன்றோ? இந்தப் பிறவியாகிய பவக்கடலில் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று கற்களோடு அறம், பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டப்பட்டுத் தள்ளப்பட்டிருந்தும் மாக்களை எல்லாம் கரை ஏற்றுகிற பெருமை வாய்ந்தது அன்றோ திருவைந்தெழுத்து. மக்கள் கூட இல்லை — மாக்களை அது கரையேற்றுகிறது. அதுவோ நீந்த முடியாத கடல். சாதாரணக் கடல் நீந்தக் கூடியதுதானே. அதுவும் அரசர் பெருமானை கரையேற்ற அந்தக் கடலில் கல் மிதந்தது என்பது

"உரைக்க வேண்டுமோ"

என்கிறார்.

> "தெருள்நெறி நீர்மையின் சிரத்தில் தாங்கிட
> வருணனும் செய்தனன் முன்பு மாதவம்"

நாவுக்கரசரை அலையின் மேல் தாங்கிக் கொண்டுவர வருணன் தவம் அன்றோ செய்திருக்கிறான் என்கிறார்.

இப்படித் திருவைந்தெழுத்தின் பெருமை, திருவெண்ணீற்றின் பெருமை ஆகியவற்றை வரலாற்றோடு சேர்த்து உணர வைத்திருக்கிறார் சேக்கிழார் பெருமான்.

அதோடு கூடத் திருஞான சம்பந்தப்பெருமான் 7 தடவை தல யாத்திரைக்குச் சென்றார்கள். தினந்தோறும் அவர் தோணியப்பரை வழிபடுவார் என்றாலும் தல யாத்திரைக்குப் புறப்படும் முன் தோணியப்பரைச் சென்று வழிபட்டுக் கிளம்பினார் என்கிறபோது நாமும் அப்படி நம்முடைய ஆன்மார்த்த நாயகனிடத்தில் அவ்வாறு வழிபடவேண்டும் என்கிற மரபை அங்கே செயலில் வைத்துக் காட்டுகிறார். எப்போது எல்லாம் வணங்க வேண்டும், எவ்வாறு வலம் வர வேண்டும் என்கிற அரிய செய்திகள் எல்லாம் அந்த வரலாற்றின் மூலம் நாம் உணர்கிறோம்.

இலக்கிய நயத்தை நோக்கினாலோ சேக்கிழார் பெருமான் இயல்பாக இருக்கின்ற ஒன்றைத் தம்முடைய உள்ளத்தில் தோற்றுகிற ஓவியத்தோடு வைத்து மிக அற்புதமாகச் சொல்வார்கள்.

திருக்குறளை மற்ற நூலாசிரியர்கள் எல்லாம் எடுத்துக் கையாண்டிருக்கும் அளவுக்கு-கம்பர் ஆண்டது போல, கச்சியப்பர் ஆண்டதுபோல-இவர் ஆளவில்லையோ என்று புற நோக்கத்தில் தோன்றும். அவர்கள் எல்லாம் அப்படியே சொற்களை எடுத்தாண்டிருக்கிற தன்மையினால் வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால் இவரோ அப்படியே கருத்துக்களை உள்ளே புதைத்துவைத்து விடுகிறார்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்பது குறள் என்றால் இவர் எறிபத்தநாயனார் புராணத்தில்

"துன்னிய அன்பின் மிக்க தொண்டர்தஞ் சிந்தை நீங்கா
அந்நிலை அரனார் வாழ்வது ஆனிலை என்னும் கோயில்"

என்கிற இடத்தில் அந்நிலை அரனார் - அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் என்கிற பொருள்தொனிக்கச் சொல்கிறார். இன்னும்,

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்கிற குறளை மனுமுறை கண்ட சோழன் வரலாற்றில் - அவன் மகன் கல்வி பயின்ற முறையைச் சொல்கிறபோது,

" சிவமுயன் றடையுந் தெய்வக் கலைபல திருந்த ஓதி "

என்கிறார். கலை என்பது கற்க – கசடற என்பது திருந்த என்பதனால் உணர்த்தப்படுகிற அருமைப்பாட்டினைக் காணலாம்.

திருஞானசப்பந்தப்பெருமான் பனிக்காலத்தில் எங்கள் கொங்கு நாட்டுக்கு எழுந்தருளுகிறார்கள். அதைச் சொல்ல வருகிறார். வைகறைப்போது தாமரைமலர்த் தேனை உண்ண வண்டுகள் வருகின்றன. பனியினால் அவை இன்னும் மலரவில்லை. புலர்ந்துதான் இருக்கின்றன.

" மோப்பக் குழையும் அனிச்சம் "

என்று சொல்வாரே வள்ளுவர். அந்தக் கருத்தை,

" அளிக்குலங்கள் சுளித்தகல அரவிந்த முகம்புலர "

என்கிறார் சேக்கிழார் பெருமான். தாமரைகள் புலர்ந்திருந்தன. மலரவில்லை. ஆகவே வண்டுகளால் தேனை உண்ண முடியவில்லை. முகம் சுளித்து அவை அகன்றனவாம்.

" அளிக்குலங்கள் சுளித்தகல அரவிந்த முகம்புலர "

என்பதாக — குறளையே வெளிப்படையாகச் சொல்லாமல் — வண்டின் வாழ்விலே வைத்தே காட்டிவிடுகிறார்.

அதற்குமேலே பனி துளித்துளியாக இருக்கின்ற வனப்பு மரகதக்கொடியில் பளிங்கைக் கோத்ததுபோல இருக்கின்றது என்கிறார்.

" பளிக்குமணி மரகதவல் லியிற்கோத்த பான்மையென "

மேலும் மலைகளின்மேல் வெள்ளைவெளேர் என்று பனி மூடி இருக்கிறது. அது குளிருக்காக வெள்ளைப்போர்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டிருப்பதுபோல இருக்கிறது என்று பாடுகிறார்,

" சூழ்பனியால்
குளிர்க்குடைந்து வெண்படாம் போர்த்தனைய குன்றுகளும் "

இங்கெல்லாம் இலக்கிய நயங்கள் சொட்டச்சொட்டச் சேக்கிழார் பெருமான் பாடுவதைப் பார்க்கவேண்டும்.

பூரண சந்திரன் வானத்திலே பிரகாசிக்கிறான். மலை – மரங்கள் – மரங்களில் கிளைகள் – இலைகள் – அரும்புகள் – பூமி

தேவி படுத்துக்கொண்டு மரமாகிற கைகளால் சிறுகிளைகளாகிய விரல்களால் நகமாகிற அரும்பினுல் – சந்திரனுகிய கண்ணுடியைப் பிடித்துக்கொண்டு முகம் பார்த்துக்கொள்வதுபோல இருக்கிறது என்கிருர்.

அங்கே 'மெய்யொளி நிழல் காட்டும் ஆடியென' என்கிருர். கண்ணுடிக்கு ஒளியில்லை. பொருளின்மீது படுகிற வெளிச்சத்தின் நிழல்தான் ஆடியில் தெரிகிறது என்கிருர்.

இந்த உலகம் மேடுபள்ளமாக இருப்பதனுல் இதுபோலத் தான் சந்திரனும் மேடுபள்ளமாக இருக்கக்கூடியது. இதனை

"மெய்ப்பொருளின் நிழல்காட்டும் ஆடியென"

என்கிருர். இன்னும் சந்திரனுக்குச் சுய ஒளியில்லை. சூரியனுடைய ஒளியைத்தான் அது பிரதிபலிக்கிறது.

"மெய்யொளி நிழல் காட்டும் ஆடியென"

என்பதாக இந்த இருபதாம் நூற்ருண்டு விஞ்ஞானிகள் எல்லாம் வியக்கும் வண்ணம் பேசுவார் சேக்கிழார் பெருமான்.

சுந்தரர் சிதம்பரம் வந்து 'ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள' என்பதாக இறைவனைத் தரிசனம் செய்திருக்கிருர். அப்போது அவர் இறைவன்மேல் பதிகம் பாடியிருக்கவேண்டும். அந்தப் பதிகம் கிடைக்கவில்லை. உள்ளதை உள்ளபடி சொல்பவர் சேக்கிழார். அங்கே என்ன சொல்கிருர்? பதிகம் இன்னதென்று சொல்லாது,

"அறிவரும் பதிகம் பாடினுர் பரவினுர் பணிந்தார்"

என்கிருர். அவர் பாடியது அருமையாள பதிகமாகத்தான் இருக்கவேண்டும். ஆனுல் நாம் அறியமுடியாத பதிகம் என்பதை மிக நுட்பமாகப் புலப்படுத்துகிருர்.

சேக்கிழார் பெருமான் இல்லையாளுல் நம்முடைய நாயன்மார்களின் பதிகங்கள் எவ்வப்போது எங்கெங்கே பாடப்பட்டன என்கிற செய்தியே பல நமக்குக் கிடைக்காமல் போயிருக்கும்.

வரலாற்று உண்மையைக் கண்டு உள்ளதை உள்ளபடியே சொல்கின்ற திறன் அவருக்குத்தான் உண்டு. புலி கடித்த தழும்பு கண்ணப்பர் உடம்பில் இருந்தது. சேக்கிழாருக்கு முன்னே பாடியவர்கள் சொல்லியிருக்கிருர்கள். புலி எப்போது கடித்திருக்கும்? அதுவும் சிவனடியாரைக் கடித்தது என்று சொல்லலாமா?

சேக்கிழார் பெருமான் என்ன செய்கிறுர்? மூன்று வயதுக் குழந்தையாக இருக்கும்போது காட்டிலே உள்ள குகைகளைப் பார்த்துப்பார்த்துப் பழகிய கண்ணப்பன் ஒரு புலியினுடைய வாயை அதுவும் ஒரு முழை என்று நினைத்து உள்ளே கையை விட்டான்.

"பொருபுலிப் பார்வைப் பேழ்வாய் முழையெனப்
பொற்கை நீட்ட"

என்று சொல்கிறுர். அப்போது அவன் கையில் புலிப்பல் பட்டுத் தழும்பும் ஏற்பட்டிருக்கலாம் அன்ருே? வரலாற்று உண்மையை விடாது சொல்லிப்போகிற நயம் சேக்கிழாரிடமே உண்டு. அருகில் இருந்த அவன் தந்தை 'டேய்! என்ன செய்கிறுய்' எனப் பிள்ளையைக் கடிந்து பசுந்தழையினுல் அடிக்க ஓங்குகிறுனும்.

பரிவுடைத் தந்தைகண்டு பைந்தழை கைக்கொண்டோச்ச– அறுபது ஆண்டுக்காலம் குழந்தைக்காகத் தவம் கிடந்தவன் அல்லனே? அந்தக் குழந்தையிடத்தில் அவனுக்கு எவ்வளவு அன்பு இருக்கும்? ஆக அவன் அடிக்கப்போகும்போது கூட பசுந்தழைகைக்கொண்டு ஓச்ச என்கிறுர். அதுகூடப் பொறுக்க வில்லை. முத்துப்போல கண்ணப்பன் கண்களிலே நீர் அரும்பி விட்டதாம். தாய்வந்து வாய்முத்தம் கொடுத்து எடுத்தணைத்த பின்னர்த்தான் அவன் முகம் மலர்ந்தான் என்கிறுர்.

"இருசுடர்க் குறுகண் தீர்க்கும் எழில்வளர் கண்ணீர் மல்கி
வருதுளி முத்தம் அத்தாய் வாய் முத்தம் கொள்ள மாற்றி"

என்பதாக அவர் சொல்கிற பாடல்களில் உள்ள இலக்கிய நயத்தைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

இந்தக் கண்ணுேட்டம் அன்று – எந்தக் கண்ணுேட்டத்தோடு பார்த்தாலும் சேக்கிழார்பெருமானின் பெரியபுராணச் சிறப்பைக் கண்டுகொள்ள முடியும். எந்தப் புராணத்திற்கும் இல்லை இந்தத் தனிப்பெருமை. எல்லாச் சிறப்பிலும் தலைசிறந்து நிற்கிறது.

"உலகெலாம்"

என்று ஆண்டவனே அடியெடுத்துக் கொடுத்ததாயிற்றே. இது ஈரேழு உலகத்திலும் ஈடுஇணையற்றது என்பாரைப்போல

14 இடங்களில் உலகெலாம் என்கிற சொல்லே வைத்திருக்கிஞர். பதிஞன்கு உலகத்திலும் இதற்கிணையானது இல்லே. உலகெலாம் அறிந்து, உணர்ந்து, ஓதிப் பயன் பெறும் நூல் இது.

இதனைச் சொல்ல, இங்குள்ளோர் கேட்டு இன்புறும்

" பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்க. "

அருள்பாலித்த திருவாவடுதுறை குருமகா சந்நிதானம் அவர்களது பொன்ஞர் திருவடிகளுக்கு நன்றி வாழ்த்தைச் செலுத்தி, முருகப்பெருமான் திருவருளே நினைந்து இங்குள்ளார் அனைவரையும் வாழ்த்தி அமைதி பெறுகிறேன்.



பெரியபுராணம் வாழ்வியல் நோக்கு

★

திருவாவடுதுறை ஆதீன வித்துவான் சித்தாந்தச் சைவமணி

திரு. த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை

★

கயிலாய பரம்பரையிற் சிவஞான
    போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
    மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
    குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
    நீடூழி தழைக மாதோ.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கும், அங்குக் குழுமிய பெரியோருக்கும் வணக்கம் செலுத்தி அவர் உரைத்தவை :

பெரியபுராணத்தில் வாழ்வியல் நோக்கு என்ற தலைப்பில் பேசுமாறு பணிக்கப்பட்ட பணியினை மேற்கொண்டு என் பணியினைத் தொடங்குகிறேன்.

நோக்கு இருவகைத்து, மேம்போக்கான நோக்கு, நுழைந்து உணர்நோக்கு என. பெரியபுராணம் நுழைந்து உணர் நோக்கால் உணரப்படுவதொரு நூல். முன் கூறப்பெற்ற பதினொரு திருமுறைகளின் கருத்துக்களையும் பிழிந்து ஆக்கப் பட்ட நூல் பெரியபுராணம் ஆதலின் அது திருமுறைகளை நிறைவு செய்ய முடிவில் இணைக்கப்பட்டுள்ளது.

பெருமையால் தமக்குத்தாமே இணையாவாராகிய அடியார் களுடைய வரலாறுகள் எல்லாம் நாம் வாழ்க்கையில் பின்பற்றக் கூடிய நல்வழிகளை நமக்குச் சுட்டிக்காட்டி நம்நிலைக்கு ஏற்ப தொன்றைக் கடைப்பிடித்து நாம் உய்வதற்காகவே அருளிச் செய்யப்பட்டுள்ளன. இறைவனுடைய திருவருளைப் பெற அவன்

சேவடி படரும் செம்மல் உள்ளம் இன்றியமையாதது. அஃது இருப்பின் நன்னர் நெஞ்சத்து இன்னிசை தவருது வாய்க்கும்.

பெரியபுராணம், இறைவன் அடியெடுத்துக் கொடுக்கச் சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகையைப் பதிகமாகக் கொண்டெழுந்த நூலாதலின், அத் திருத்தொண்டத்தொகை சுட்டும் நாயன்மார் அறுபத்துமூவரும் தொகையடியார் ஒன்பதின்மருமே பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ளனர். இச்சான்ருேர்கள் ஒரே பிறப்பில் இத்தகைய பக்குவநிலை அடைந்தவரல்லர். மாறி மாறிப் பலபிறப்பும் பிறந்து அடியடைந்து உள்ளம்தேறி இத்தகைய மேல்நிலைக்கு உயர்ந் தவர்கள். இவர்களுடைய பண்பும் செயலும் இவர்களை ஆலயங்களில் வழிபடு தெய்வநிலைக்கு உயர்த்தியுள்ளன. இவர்களை முன்னேடிகளாகக் கொண்டு நாமும் வாழ்க்கையை இறைவழிப் பற்றுச் சிதையாமல் செம்மையாக நிகழ்த்தின் நாமும் பிறப்புக்கள் தோறும் சிறிது சிறிதாக உயர்ந்து இப் பெருமக்கள் நிலையை எய்தலாம் என்பதனை விளக்கியுரைக்க வந்த நூலே பெரியபுராணம்.

இந்நூலுள் சுட்டப்படும் அடியவர்கள் சைவசமயம் என்ற ஒருமைப்பாட்டினுலேயே பிணைக்கப்பட்டுள்ளனர். செல்வத் தாலோ, தொழிலாலோ, சாதியாலோ, பழக்கங்களாலோ இவர்கள் பலதிறத்தவராவர். ஆனல் 'பூதம் ஐந்தும் தம் நிலையில் தவறினும், மாதொர் பாகர் மலர்த்தாள் மறவாது, கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி, வீடும்வேண்டா விறலின் விளங்கியமை இவர்கள் எல்லோரிடமும் காணப்படுவதொன்ரும்.

இவ்வடியவர்களில் பிரமசாரிகள், இல்லறத்தவர், துறவிகள், யோகிகள், ஞானிகள் எல்லோரும் உளர். ஆண்பாலாரும் உளர்; பெண்பாலாரும் உளர்.

அடியார்களை உபசரிப்பதில் இந்நாயன்மார்களோடு அவர் தம் துணைவியரும் மக்களும் ஒன்றிப் பணிபுரிந்தமை இவர் களுக்கு உரிய தனிச் சிறப்பு. திருநீலகண்டர், இளையான்குடி மாறனர், அமர்நீதியார், கலயனர், அப்பூதியடிகளார், சிறுத் தொண்டர் போல்வார் சிறந்தமை மாண்புடைய இல்லறத் துணைவியராலும், தம் அறத்தொண்டுக்கு உதவிய மக்கள்போல் வாராலும் என்பது பெரியபுராணத்தால் பெறப்படும்.

இந்நாயன்மார்களிடையே செல்வத்தில் மேதக்க மன்னர்களாக விளங்கிய மூர்த்தியார், கழறிற்று அறிவார், நரசிங்க முனையரையர், புகழ்ச்சோழனர் போல்வார் தம் செல்வவளம்பற்றிச் சிறிதும் செருக்குருது தம்மினும் அடியவர்களையே உயர்ந்தவர்களாக மதித்துப் பேணிய திறம் பெரியபுராணத்தில் பரக்கப் பேசப்பட்டுள்ளது.

பூசலார் கட்டிய கோயிலைக் காணவந்த பல்லவ மன்னன் திருநின்றவூருக்கு வந்து, பூசலார் இருந்த இடத்தை உசாவி அறிந்தான். அவ்வூர் மக்கள் பூசலாரை அரசனிடம் அழைத்து வரப் புறப்பட்ட அளவில், அம்மன்னன் அவர்கள் செயலைத் தடுத்து,

"ஈசனர் அன்பர் தம்பால் ஏகினுன் வேக வேலான்"

என்று சேக்கிழார் கூறும் திறத்தை நோக்குக. சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கை பணிவேயன்றே?

ஞானசம்பந்தப் பெருமான் திருநீலகண்ட யாழ்ப்பாணரை வேதம் வல்ல அந்தணர்கள் அமரும் வேள்விச்சாலையில் தம்மருங்கு அமர்த்திக் கொண்டதும், அந்தணரின் மேம்பட்ட அப்பூதியடிகளார் நாவுக்கரசர்பெருமானை வழிபட்டு வரவேற்று உபசரித்ததும்—நாயன்மாரிடையே சாதியானுய ஏற்றத்தாழ்வு சிறிதும் தலைக்காட்டவில்லை என்பதனை வெளிப்படுப்பன. பிறை சூடிய பெருமானுக்கே மீளா ஆளாய்ச் செயற்படும் இந்நாயன்மார்களிடையே தருக்குற்றுத் திரிதற்குரிய ஆணவத்திற்கு இடன் ஏது?

அப்பர் சுவாமிகளைப் போன்று நடையுருப் பெருந்துறவில் நின்ற அடியவர்களும் உண்டு.

"சிந்தையிடை யருஅன்பும் திருமேனி தனில் அசைவும்
கந்தை மிகை யாம் கருத்தும் கைஉழவா ரப்படையும்
வந்துஇழி கண் ணீர்மழையும் வடிவில்பொலி திருநீறும்
அந்தமிலாத் தவவேடத்து" நாவுக்கரசர் என்பது

சேக்கிழார் பெருமானுடைய சொல்லோவியம்.

இறைவனுலே ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், கண்ணப்பர் போல்வார் முத்தி பெற்றனர். அப்பூதியடிகள் போல்வார் குருவருளினுலே முத்தி பெற்றவர்கள். அடியவர் பலருடைய அருளினுலே முத்தி பெற்ற நாயன்மார்கள் பலர்.

சிவலிங்கத்தை அடைக்கலமாகக்கொண்டு வீடு எய்தியவரும் உளர். இவர்கள் காட்டிய நெறியில் நம் நிலைக்கு ஏற்றதொரு நெறியினை நாம் பின்பற்றி உய்தல் வேண்டும்.

இறைவனிடம் கொண்ட பற்று மற்ற எப்பற்றினையும் நீக்கித் தானே மேலோங்கி நிற்பதனை நாயன்மார்களிடையே காணலாம்.

இளமை மீதூர இன்பத் துறையினில் எளியராகி, மனையின் வாழ்க்கை ஏனைய எல்லாம் செய்தே உடன் உறைவு இசையாரான அருந்ததிக் கற்பின்மிக்குத் தேனமர் கமலப்போதின் திருவினும் உருவின்மிக்க தம் மனைவியார்பால் மூண்ட அப்புலவிதீர்க்கத் திருநீலகண்டர் வேண்டுவ இரந்து கூறி மெய்யுற அணையும் போதில் ' தீண்டுவி ராயின் எம்மைத் திருநீல கண்டம் ' என்று அவ்வம்மையார் ஆணையிட,

" ஆதியார் நீல கண்டத்து அளவும் தாம் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணை கேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போல நோக்கி எம்மை என் றதனால் மற்றை
மாதரார் தமையும் என்தன் மனத்தினும் தீண்டேன் '

என்று உறுதி கொள்ளச் செய்தது, ' காமம் நீத்த பால் ' என்று வாகைத்துறைகளின் இறுதியில் கூறப்படும் இறைப்பற்றுகிய பெருவெற்றியன்றோ !

அடியார்களைப் பேணும் சிறப்பை ஞானசம்பந்தப்பெருமான்,

" மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய் "

என்ற திருப்பாடலில் அருளிச்செய்கிறுர். அடியார்களை உபசரிக்கும்முறை பெரியபுராணத்தில் ஆங்காங்கே பரக்கக் கூறப்பட்டுள்ளது.

அடியார்கள் நலத்திற்காகக் கடுஞ்செயல்களையும் புரிந்த விறல் மிண்டர், எறிபத்தர்போல்வார்களுடைய சிவப்பற்று நம்மை மெய்சிலிர்க்கச் செய்கிறது. மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் என்று கொண்டு இறுதிவரை கொள்கைவழி வாழ்ந்த மெய்ப்பொருள் நாயனுர், ஏனுதி நாதனுர் வரலாறுகள் அவர்களுடைய கொள்கையில் இறுதிவரை உறுதியாயிருந்த திறத்தை இயம்புவன. இவர்கள் இங்ஙனம் செயற்கரிய செயல்கள் செய்தமைக்கு அடிப்படை,

"செப்பற் கரிய பெருஞ்சீர்த்தி சிவனுர் செய்ய கழல்பற்றி
எப்பற் றினையும் அறஒழிவார்"

என்பதேயாகும்.

பொறி புலன்களினுலே வரும் பற்று, கரணங்களினுலே வரும்பற்று, தற்போதத்தினுல் வரும்பற்று, ஆன்மாவினுல் வரும் பற்று என்ற நால்வகைப் பற்றுக்களையும் துறந்து பற்றற்ருன் பற்றினையே பற்றி அவர்கள் செயற்கரிய செயல்கள் செய்தமை நமக்கெல்லாம் படிப்பினையாகும். அவர்கள் இந்நால்வகைப் பற்றினையும் அறத்துறந்த செயல்களைப் பெரியபுராணம் நாயன்மார் பலருடைய வரலாறுகளில் விரித்துக் கூறுதலைக் காணலாம்.

இறைவனிடம் பற்றுவைக்கக் கல்வியறிவு தேவையின்று. நன்னர் நெஞ்சமே தேவை. அன்பே வடிவமான கண்ணப்பனிடம் கல்வியைக் காணேம்.

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவுஎன்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கு இனிய வாம் என்றும்

ஆண்டவனே அவனைப்பற்றிச் சிவகோசரியார் கனவில் அருளிச் செய்கிருன். காரைக்கால் அம்மையார் இறைவனிடம் 'இறவாத இன்ப அன்பே' வேண்டுகிருர்.

ஆதலின் உயிரினங்கள் எல்லோரிடமும் அன்பாக வாழ்ந்து அவ்வன்பை இறைவனிடம் இடையருது செலுத்தி அவனுக்கு உகப்பான செயல்கள் செய்து உய்தி பெறுதல் வேண்டும் என்பதனை விளக்கவே பெரியபுராணம் தோன்றியது என்பதை உணர்வோமாக.

"தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னுற்சொல வல்லபி ரானெங்கள்
பாக்கி யப்பய னுப்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னி இருத்துவாம்"

அனைவருக்கும் வணக்கம்.

பெரிய புராணம் — இலக்கிய நோக்கு

ஜி. கலியாணம், எம்.ஏ., டிப்.எக்கான்.

*

இலக்கியமே வாழ்க்கை; வாழ்க்கையே இலக்கியம். வாழ்க்கையை விளக்கம் செய்வது இலக்கியம்தான். ஒரு நாட்டின் வரலாறே ஒரு சில பெருமக்களின் வரலாற்றுத் தொகுப்புத்தான் என்று புளூடார்க் என்ற கிரேக்க ஆசிரியர் சொன்னார். அதனால் தானோ பெரியபுராணம் வாழ்வியல் நோக்குக்கும் வரலாற்று நோக்குக்கும் இடையே என் பேச்சாகிய **இலக்கிய நோக்கு** அமைந்ததுபோலும்.

இந்த உலகம் தோன்றிப் பலகோடி ஆண்டுகள் ஆகின்றன, இத்தனை ஆண்டுகளில் எத்தனை எத்தனை கோடி மக்கள் பிறந்து, இருந்து, இறந்தனரோ! அவ்வளவு மக்களிலும் உலகம் முழுவதும் புகழ்பெற்றவர் ஒருசிலர்தான். அவருள்ளும் வெவ்வேறு துறைகளில் புகழ்பெற்றவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். உலகப்புலவர்களில் தலைசிறந்தவர்கள் ஓமர், தாந்தே, வர்ஜில், கெதே, காளிதாசர், கம்பர், இளங்கோவடிகள், தாகூர் முதலியோர். அத்தகையோர் வரிசையில் ஒருங்கே வைத்து எண்ணப்பெறவேண்டியவர் திருத்தொண்டர் புராணம் இயற்றிய நம் சேக்கிழார் பெருமான். அந்தப் பெரியபுராணத்தை இலக்கியக் கண்கொண்டு நோக்குவதே என் பேச்சின் பொருள். அதாவது திறன் ஆய்வு செய்யவேண்டிய பணி.

இந்த திறன் ஆய்வை முன்னே சான்றோர் பலர் செய்து இருக்கின்றனர். முதன்முதலில் அவ்வாறு செய்தவர் சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கில் எட்டு நூல்களை இயற்றியருளிய உமாபதி சிவாசாரிய சுவாமிகள். அடியார்களைப்பற்றிய சிறப்பியல்களை வகுத்தும் தொகுத்தும் தாம் இயற்றிய சேக்கிழார் புராணத்தில் கூறியுள்ளார். பெரிய புராணத்தின் பெருமையை அறிந்து கொள்வதற்கு அடிப்படையான முதல் நூல் அதுவே.

அதன்பிறகு ஏழு நூற்றுண்டுகள் கழித்து எழுந்த சிறந்த திறன் ஆய்வு நூல் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் "சேக்கிழார் பிள்ளைத்தமிழ்." அதில் பிள்ளையவர்கள் எந்தெந்த முறையில் ஆராய்ந்துள்ளார்கள் என்பதைப் பின்னர் காண்போம். சைவ சித்தாந்தத்தின் பெருமையை மேல் நாட்டிற்குத் தெரியவைத்தவர் பேரறிஞர் ஜே. எம். நல்லசாமிப் பிள்ளையவர்கள். அவர்கள் பெரிய புராணத்தை 1923 ல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அதற்கு ஓர் அரிய ஆராய்ச்சி முன்னுரையும் எழுதியுள்ளார்கள். 1924-ஆம் ஆண்டில் சென்னை கிறித்துவக் கல்லூரித் தமிழாசிரியர், சேலையூர் வா. சகாதேவ முதலியார் என்பவர் "பெரிய புராண ஆராய்ச்சி" என்ற நூலை இயற்றியுள்ளார். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அதை அண்மையில் வெளியிட்டிருக்கிறது. அதன் பிறகு 1928-ல் கா. சுப்பிரமணியப் பிள்ளை, எம். ஏ., எம். எல்., அவர்கள் "சேக்கிழார் வரலாறும் ஆராய்ச்சியும்" என்ற விழுமிய நூலை எழுதியுள்ளார்கள். 1929-ல் லால்குடி அ. மு. சரவண முதலியார் அவர்கள் "அறுபான்மும்மை நாயன்மார் சரித்திர உண்மை" என்ற நூலை ஆக்கியுள்ளார்கள் அடுத்து 1930-ல் திருவாரூர் இலக்கண விளக்கப் பரம்பரை சோமசுந்தர தேசிகரவர்கள் "சைவ சிகாமணிகள் இருவர்" என்ற சிறந்தநூலில் சேக்கிழார் நூல் பற்றி ஆராய்ந்திருக்கிருர்கள்.

1948-ல் டாக்டர் இராஜமாணிக்கனுர் அவர்கள் "பெரிய புராண ஆராய்ச்சி" என்ற விரிந்த நூலை இயற்றியிருக்கிருர்கள். பெரியபுராணத்துக்குப் பேருரை வகுத்த கோவை - சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள் 1960-ல் "சேக்கிழாரும் சேயிழையாரும்" என்ற நூலையும் எழுதியுள்ளார்கள். காவிரிப் பூம்பட்டினம் - மேலையூர் மறைத்திரு. மாணிக்கவாசக தேசிக ஸ்வாமிகள் "பெரியபுராணத் திறவு" என்ற நூலை அண்மையில் அருளித் தந்துள்ளார்கள். சைவசித்தாந்தக் கழகப் பொன் விழா வெளியீடாக, "பெரியபுராணச் சொற்பொழிவுகள்" என்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியிடப்பெற்றது அன்பர்கள் அறிந்ததே. இதுகாறும் கூறியவையெல்லாம் பெரிய புராணத் திறன் ஆய்வுத் தனி நூல்களேயன்றி பெரியபுராணப் பதிப்புக்களைப் பற்றியன அல்ல. பெரியபுராண உரை நூல்கள் பல வெளிவந்துள்ளன. அவைகளிலும் சிறந்த ஆராய்ச்சிக் குறிப்புக்கள் நிறைந்துள்ளன. அவைகளைப்பற்றி ஈண்டு கூறத் தேவையில்லை. "Literature, a general term, which in default of precise definition may stand for the best expression of

the best thought reduced to writing". "உயர்ந்த எண்ணங்களை உயர்ந்த முறையில் எழுத்து வடிவில் தருவது இலக்கியம்". அதற்கு முக்கியமான தகுதிகள் நான்கு – திண்மை, மூலத்தன்மை, முழுமைத்தன்மை, தன்னலமின்மை (Solidarity, originality, completeness and disinterestedness). சேக்கிழார் நூலில் திட்ப நுட்பங்கள் செறிந்து கிடக்கின்றன. அவர் கூறியுள்ள அடியார் வரலாறுகளைப் பலவகையாக ஆராய்ந்திருக்கிறார். முதல் நூல் என்று போற்றப்படுவதால் அதன் மூலத்தன்மை விளங்குகிறது. "யான் அறிந்தபடி பகர்ந்தேன்" என்று பல இடங்களில் அறுதியிட்டுக் கூறியிருப்பதால் அதை முழுமைத்தன்மையுடையதாகவே கொள்ளவேண்டும். பலவகைகளில் அது முழுமைத்தன்மையுடையது என்பது நுண்மாண் நுழைபுலமிக்க சான்றோர் கண்டறிந்தது. தன்னலமின்மை என்பதை அவருடைய விரிந்து பரந்த உள்ளத்தால் காண்கிறோம். தொண்டக் குலத்தின் பெருமையைச் சொல்வதுதான் அவர் குறிக்கோள். நடு நிலைமையில் நின்று ஆராய்ந்தே கூறிச்செல்கிறார்.

மேற்சொன்னவையேயன்றி இலக்கியத்துக்கு இன்னும் சில தகுதிகள் இருக்கவேண்டும் என்பர் திறனாய்வர். அமைப்பு, சிறப்பியல், சுவை, நடை, பொருள் தேர்வு, ஒழுங்குமுறை, கற்பனை, உவமை, நீதி என்பன. அவற்றுள் சிறந்தவை (Composition, Charactcristics, Humour, Style, Choice, Arrangement, Imagery, Metaphor and Moral Spirit). இந்த எல்லாத் தகுதிகளையுமே பெரிய புராணத்தில் காணலாம். ஒவ்வொன்றைப்பற்றியும் விரிக்கில் பெருகுமென அஞ்சி விடுக்கின்றேன்.

உள்ளத்தில் எழும் கிளர்ச்சிகளை மற்றொருவன் உள்ளத்தில் எழுமாறு செய்யவேண்டும். கிளர்ச்சிகள் இரு வகைப்படும் – கருத்துக்கள், உணர்ச்சிகள். கருத்துக்களைப் பிறர் அறிய உண்டாக்குவது அறிவு நூல். உணர்ச்சிகளை மற்றவர் உள்ளத்தில் உண்டாக்குமாறு செய்வது இலக்கியம். ஒருவன் ஒன்றை நேராகக் கண்டு, மனத்தில் தேக்கி வைத்திருந்து, பின்னர் நினைந்து அனுபவித்து, அதைப் பிறர் அடையச்செய்வது ஒன்று. இல்லாத, பார்க்காத ஒன்றை, கற்பனைசெய்து வெளியிடுவது மற்றொன்று. சேக்கிழார் அடியார்களை நேராகப் பார்த்து மனத்தில் வைத்திருந்து பின்னர் எழுதவில்லை. இல்லாத ஒன்றையும் கற்பனையாகச் சொல்லவில்லை. நேராகப் பார்க்காததை நன்கு ஆராய்ந்து அறிந்து உண்மையாக, புனைந்துரையில்லாமல் கூறியிருக்கிறார். பல இடங்களில் தாம் தெரிந்து கொண்டபடியே

எழுதுவதாம் என்று சொல்லியிருக்கிருர். இன்னும் இலக்கியத்துக்கு - செய்யுள் நூலுக்கு - வடிவழகும் (Beauty of form) ஒலிநயமும் (Effect of rhythm) இருக்கவேண்டும் என்பர் மேல்நாட்டுத் திறன் ஆய்வர். பெரிய புராணத்தில் இவ்விரண் டிற்கும் நிறையச் சான்றுகள் உள்ளன.

மகாவித்துவான் பிள்ளையவர்களின் "சேக்கிழார் பிள்ளைத் தமிழ்" நூலின் துணைகொண்டு சில சொல்வது பொருத்தமானது. சேக்கிழார் நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், போதக ஆசிரியராகவும், ஞானுசிரியராகவும் விளங்குகிருர் என்று பிள்ளைத் தமிழ்ப்பாடல் ஒன்றில் கூறுகிருர். அவரை, அருள் பெய் கொண்டல் என்று போற்றுகிருர். சேக்கிழார் பாடல்கள் சித்தி தரும், சுத்தி தரும், பக்தி தரும், முக்தி தரும் என்று விதந்து பேசுகிருர். புலவர் கவி, கமகன், வாதி, வாக்கு என நால்வகை யினர். இவை நான்கும் ஒருங்கே அமையப்பெற்றவர் சேக்கிழார் என்கிருர். சேக்கிழார் கவிபாடுவதில் ஈடுஇணையற்றவர். பக்திச் சுவை நனி சொட்டச்சொட்டப் பாடிய கவி வலவர். அரும் பொருள்களைச் செம்பொருள் நடையாக அமைக்கும் கமகம் உடையவர். போதிமங்கையில் பௌத்தருடனும், மதுரையில் சமணருடனும் சம்பந்தர் வாதம் நிகழ்த்தியதைப்பற்றிச் சேக்கிழார் கூறியிருப்பதைப் பார்த்தால் அவர் பெரிய வாதி என்பதை உணரலாம். வாக்கி என்பவன் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் விரித்துரைக்கும் வன்மை உடையவன். அதைச் சேக்கிழார் நூல் முழுவதும் பரக்கக் காணலாம்.

'கலைக்கன்னி ஏவல் கேட்க'ப் பாடியவர் சேக்கிழார் என்கிருர். அவர் பாடும்போது சொற்கள் வரிசையில் வந்து நிற்கின்றனவாம். உதாரணச் செய்யுட்கள் பல காட்டலாம். "சிவனடியே சிந்திக்கும்", "ஐந்து பேரறிவும்", "சென்ற காலத்தின்" என்றத் தொடக்கத்த பாடல்களைக் காண்க.

தெய்வச்சேக்கிழார் என்று அவருக்கு அமைந்த பெயர் மிகச் சிறப்பானது!. "தெய்வச் சைவா" "தெய்வம் மணக்கும் செய்யுளெலாம்" என்றும் பிள்ளையவர்கள் கூறுவார்கள். காதல் காட்சிகளிலும் தெய்வத் தன்மையைக் குழைத்து விடுகிருர். "கற்பகத்தின் பூங்கொம்போ", "முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனே" என்ற பாடல்களில் அதைப் பார்க்கலாம்.

மகா வித்துவான் பிள்ளையவர்கள் ஒரு பாடலில்,

" சொல்லும் பொருளும் நனி சிறப்பச்
சுருங்கச்சொல்லன் முதலாய
தோட்டியமைய அமங்கலமாஞ்
சொற்கள் புணரா தறக்களைந்து "

என்று வரும் பகுதியில் இரண்டு சிறப்பியல்களைக் கூறியிருக்கிறார். சுருங்கச்சொல்லல் என்ற அழகுக்கு எடுத்துக்காட்டாக அவிநாசி நிகழ்ச்சியைக் கூறும் " அந்தணாளர் வணங்கி " என்ற பாடலைச் சொன்னாலே அமையும். அப்பாடலிள்ள சொற்களைக் கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ முடியாதென்பது அறிஞர் கண்ட முடிவு. அமங்கலமாஞ் சொற்கள் புணராது என்ற சிறப்பியலுக்கு எடுத்துக்காட்டுகள் பலவுள. 'நினைந்த அப்பரிசே செய்தான்', 'தன் கருத்தே முற்றுவித்தான்' 'இப்போதிங்கவன் உதவான்' என்பன போன்றவை சில.

சேக்கிழார் பெருமான் மிக்க நன்றியுள்ளம் படைத்தவர். 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்த பெருமான் திருவார்த்தையை முதலிலும் நடுவிலும் கடையிலும் வைத்தும் மற்றும் சில இடங்களிலுமாகப் பதினைந்து இடங்களில் கூறியிருக்கிறார்கள் பெரியபுராணத்திற்கு மூலமான திருத்தொண்டத் தொகையைத் தந்தருளிய நம்பியாரூரரைத் தம் காவியத்தலைவராக்கியதுடன் ஒவ்வொரு சருக்கத்து இறுதியிலும் அவர்பேரில் துதிப்பாடல் அமைத்துள்ளார். பெரியபுராணம் எழுதும்படி வேண்டிய அரசன் அநபாயனை மறக்காமல் பத்து இடங்களில் புகழ்ந்து கூறியுள்ளார். தம் பிறப்புக்கே நன்றி கூறும்வகையில் வணக்கம் கூறுகிறார் என்றால் அவர் நன்றியுள்ளத்தை என்னென்று புகல்வது! "தேசமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன்பணித்த திருவாளன் வாசமலர் மென்கழல் வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்" என்பது அப்பெருமானின் திருவாக்கு.

சேக்கிழார் பெருமான்சேவடி வாழ்க.

பெரியபுராணம்—வரலாற்று நோக்கு

K. M. வேங்கடராமையா M. A., திருப்பனந்தாள்

✶

புராணம் என்றல் எவையோ பழைய செய்திகள்; வரலாற்றுக்கு ஒவ்வாதவை என்று சிலர் கருதலாம். ஆனல் பெரிய புராணமோ வரலாற்றுச் சிறப்புடைய நூலாகும். தென்னக வரலாற்று ஆய்வாளர்கள் யாவரும், தாம்கண்ட வரலாற்று உண்மைகளுக்கு அடிப்படையாகப் பெரியபுராணம் இருத்தலைக் கண்டு தெளிந்துள்ளார்கள்.

பெரியபுராணத்தைப் பக்திச்சுவை சொட்டச் சொட்டச் சேக்கிழார் சுவாமிகள் அருளியுள்ளார்கள்; அதனுடன் வரலாற்றுச் செய்திகளை ஆய்ந்து உண்மை கண்டறிந்தே புராணம் பாடியருளினர். பெரிய புராணத்துக் கண்ட நாயன்மார் செய்திகளுள் இவர் கூருதன சிலவற்றை ஆசிரியர் பிறர் கூறியுள்ளமையால் இது தெரியப்படும்.

கூற்றுவநாயனர், களந்தை என்ற ஊரவர். இவரைக் ''களப்பாளன் ஆகிய கூற்றுவன்'' என்பர் நம்பியாண்டார் நம்பிகள் தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியுள். களப்பாளர் என்பார் களப்பாள் என்ற ஊர்க்குரியவர்; தமிழ் நாட்டவர். சிலர் களப்பாளர் என்பவரை ஏதிலாராகிய களப்பிரர் என்று கொள்வர். சேக்கிழார்க்குக் களப்பிரர் வேறு, களப்பாளர் வேறு என்று எண்ணமும் இருந்திருக்கலாம். கூற்றுவநாயனர் களப்பாளர் குலத்தைச் சேர்ந்தவர்' என்ற நம்பியின் கூற்றை உடன்பட்டவராக இருந்திருப்பின், கூற்றுவநாயனர் புராணத்தில்

அவரைக் களப்பாளர் என்றே சேக்கிழார் கூறியிருப்பர். ஆனால் அங்ஙனம் கூருமல்,

"மல்லல் ஞாலம் புரக்கின்ருர் மணிமவுலி புனைவதற்குத்
தில்லைவா ழந்தணர் தம்மை வேண்ட அவரும்
செம்பியர்தம்
தொல்லை நீடும் குலமுதலோர்க்கு அன்றிச் சூட்டோம்
முடிஎன்று
நல்காராகிச் சேரலன்றன் மலைநாடணைய நண்ணுவார்"

என்ற பாடலில் "சோழர் குலமுதல்வர்க்குச் சூட்டுவோமே யன்றிக் கூற்றுவநாயனுர்க்கு மணிமவுலி சூட்டோம்" என்று தில்லைவாழந்தணர் கூறியதாகச் சேக்கிழார் கூறியுள்ளார். இதனல் தமிழ்நாட்டிலிருந்த குறுநிலமன்னர் பரம்பரைகளை நன்குணர்ந்தவர் சேக்கிழார் என்பது தெளியப்படும்.

களப்பிரரையும் சேக்கிழார் அறிந்தவரே. மூர்த்திநாயனுர் புராணத்தில் **வடுகக்கருநாடர்** என்று களப்பிரரைச் சேக்கிழார் குறிப்பிடுவார். களப்பிரர் தென்னுட்டுப் படையெடுப்பும், தமிழ் நாட்டரசர்கள் வலியழிந்தமையும் மூர்த்திநாயனுர் புராணத் தினின்று அறியவருகின்றன.

"கானக் கடிசூழ் வடுகக் கருநாடர் காவல்
மானப் படைமன்னன் வலிந்துநிலங் கொள்வானய்
யானைக் குதிரைக் கருவிப் படைவீரர் திண்டேர்
சேனைக் கடலும் கொடுதென் றிசைநோக்கி வந்தான்.

வந்துற்ற பெரும்படை மண்புதை யப்பரப்பிச்
சந்தப் பொதியில் தமிழ்நாடுடை மன்னன்வீரம்
சிந்தச் செருவென்று தன்னுணை செலுத்துமாற்ருல்
கந்தப் பொழில்சூழ் மதுராபுரி காவல்கொண்டான்.

—இப்பாடல்களில் களப்பிரர் படையெடுப்பு நன்கு கூறப் பெற்றுள்ளது.

வேள்விக்குடிச் செப்பேடுகள் என்ற பெயரில் பாண்டியர் வரலாறு தெரிவதற்கு ஆதாரமான செப்பேடுகள் உண்டு. இவை கி.பி. 765 முதல் 790 வரை அரசாண்ட நெடுஞ்சடையன் பராந்தகன் காலத்தனவாம். இவை இலண்டன் பொருட்காட்சிச் சாலையில் உள்ளன. இச் செப்பேடுகளுள் நெடுஞ்சடையன் பராந்தகனின் முன்னோர்களைப்பற்றிய குறிப்புக்கள் தரப்பெற்றுள்ளன. கி பி. 575-ல் பாண்டிநாடு களப்பிரர் ஆட்சியினின்று விடுவிக்கப்பெற்றது. களப்பிரர்களை முறியடித்தவன் பாண்டியன் கடுங்கோன் எனப்பெறுவான். இச் செப்பேடுகள், இதனை,

“களப்பிரன் என்னும் கலியரசன்
கைக்கொண்டதனை இறக்கியபின்
படுகடல்முளைத்த பருதிபோல்
பாண்டியாதிராசன் வெளிப்பட்டு

....................தரணிமங்கையைப்
பிறர்பால் உரிமை திறவிதின் நீக்கித்
தன்பால் உரிமை நன்கனம்அமைத்த ....
கடுங்கோன் என்னும் கதிர்வேல் தென்னவன்”

என்று கூறும். இங்ஙனம் செப்பேடுகளிற் கண்ட களப்பிரர் ஆட்சி பெரியபுராணத்தில் உறுதியெய்துதல் காணலாம்.

திருநாவுக்கரசர் சமண சமயத்தைச் சார்ந்தபொழுது பாடலிபுரத்தில் இருந்தார். இது பாடலி எனவும் வழங்கப்பெற்றது. இந்நாளைய திருப்பாதிரிப்புலியூரே அந்நாளைய பாடலிபுரம் ஆகும். கி. பி. 5-ஆம் நூற்றுண்டிலேயே சமணப்பள்ளி அங்கு இருந்தது. லோகவிபாகம் என்ற நூலில் இருந்து இதனை அறியலாம். திருநாவுக்கரசர் சமயங்களானவற்றின் நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினுல், கொல்லாமை மறைந்து உறையும் சமண்சமயம் குறுகினுர். பின் ஈசன் அருளால் சைவரானுர். சமணர்கள் அஞ்சி மன்னனுகிய பல்லவன் நகரில் வந்தணைந்தனர். அரசன் ஆணையால் திருநாவுக்கரசரைத் துன்புறுத்தினர். திருநாவுக்கரசர்க்கு ஊறுபாடில்லை. அரசனும்,

" வீடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்து
காடவனூர் திருவதிகை நகரின்கண் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்தில்அமண் பள்ளியொடு பாழிகளும்
கூடஇடித் துக்கொணர்ந்து குணபரவீச் சரமெடுத்தான்"

குணபரன் என்பது அப்பர் காலத்திய அரசனுகிய மகேந்திர வர்மனது பெயர்களுள் ஒன்று என்பது பின்வரும் வல்லத்துக் குகைக் கோயில் கல்வெட்டினின்றறியலாம்.

" பகாப்பிடுகு லளிதாங்குதரன்
சத்ருமல்லன் குணபரன்
மகேந்திரப் போத்தரசன்... .."

இனித் திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டினுல் மகேந்திரன் வேற்றுச் சமயத்தினின்று சைவ சமயத்தை அடைந்தனன் என்பது போதரும்.

சிறுத்தொண்டநாயனர் முதலாம் நரசிம்மவர்மன் காலத்தவர்; அவனுக்குப் படைத்தலைவராய் இருந்தவர்; பரஞ்சோதியார் என்ற பெயருடையவர். இவர் அரசன் பொருட்டு வாதாபிப் போர் நடத்தியவர் என்று பெரியபுரணம் பகரும்.

" மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரம் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்"

என்று பெரியபுராணம், இவ்வாதாவிப் போர், இரண்டாம் நந்திவர்மனது உதயேந்திரச் செப்பேடுகளில், " நரசிம்மவர்மன் அகத்தியனைப் போன்றவன்; வல்லப அரசனைப் பரியளம் மணிமங்கலம் சூரமாரம் முதலிய இடத்துப் போர்களில் வென்றவன்; வாதாபியை அழித்தவன் " என்று கூறப்பட்டுள்ளது. மூன்ரும் நந்திவர்மனது வேலூர்ப் பாளையச் செப்பேடுகளும், இவ்வாதாபி வெற்றியை, " விஷ்ணுவைப் போன்ற புகழுடைய நரசிம்மவர்மன் தன்பகைவரை அழித்து வாதாபியின் நடுவில்

வெற்றித் துணை நாட்டினுன் " என்று கூறும், இதனுலும் சேக்கிழார் பெருமானின் கூர்த்த வரலாற்று அறிவு புலப்படும்.

நின்றசீர் நெடுமாறநாயனுர் சம்பந்தர்காலப் பாண்டிய அரசர் ஆவர். இவர் நெல்வேலிப்போர் நிகழ்த்தியவர் என்று சுந்தரர் " நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் " என்று கூறுவர். சேக்கிழாரும் நெல்வேலிப் போரை மிகச்சிறப்பாக வருணிப்பர். வேள்விக்குடிச் செப்பேடுகள் " வில்வேலிக் கடல்தானையை நெல்வேலிச் செருவென்றும் " என்று இப்போரைப்பற்றிக் கூறும். " வில்லவனை நெல்வேலியில் ....புறங்கண்ட பராங்குசன் பஞ்சவர் தோன்றல்" என்று மூன்றும் சிம்மவர்மனின் சின்னமனூர்ச் செப்பேடுகள் பகரும். சேக்கிழார் இப்போரை,

" ஆயஅர சளிப்பார்பால் அமர்வேண்டி வந்தேற்ற
சேயபுலத் தெய்வர்எதிர் நெல்வேலிச் செருக்களத்துப்
பாயபடைக் கடல்முடுகும் பரிமாவின் பெருவெள்ளம்
காயுமதக் களிற்றின்நிரை பரப்பிஅமர் கடக்கின்ருர் "

என்று பாடுவர்.

கழற்சிங்கநாயனுரைச் சேக்கிழார் " படிமிசை நிகழ்ந்த தொல்லைப் பல்லவர் குலத்துவந்தார் " என்பர். இதனுல் இரண்டாம் நந்திவர்மனை முதலாகக்கொண்ட (இரணியவர்மன் மரபினர்) பிற்காலப் பல்லவர் காலத்தவர் அல்லர் கழற்சிங்கர் என்பது அறியப்பெறும்.

நாயன்மார் காலத்துச் சோழர் தாழ்ந்த நிலையில் இருந்தனர் என்று சேக்கிழார் கூறியது, வரலாற்று நோக்குடன் பெரிய புராணத்தைக் கற்பாருக்கு மிகுந்த வியப்பைத் தருவதோடு, சேக்கிழார் பெருமானின் வரலாற்றுப் பேரறிவு மாட்சியைத் தெற்றென விளக்கும்.

சேக்கிழார் பெருமான் கழலடி வெல்க !

துறைசை ஆதீனத் தமிழ்த் தொண்டு ஓங்குக !!

———



திருமுறை உலா (12—2—'71)

ஜெமினி அச்சகம்,
28, மடத்துத் தெரு,
கும்பகோணம்.
போன்: 835

KUMBAKONAM